
கங்கை புத்தக நிலையம்



# சத்திய ஆவேசம்

சு. சமுத்திரம்



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சத்திய ஆவேசம்

(நாவல்)

சு. சமுத்திரம்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 17.

முதற் பதிப்பு : டிசம்பர், 2001

விலை ரூ. 70.00

- Title : **SATHIYA AAVESAM**
- Author : Su. Samuthiram
- Language : Tamil
- Subject : Novel
- Edition : First Edition, December, 2001
- Pages : x + 254 = 264
- Published by : **GANGAI PUTHAKA NILAYAM**
  13. Deenadayalu Street,
  Thyagaraya Nagar
  Chennai - 600 017.
- Price : **Rs. 70-00**

*Printed at :* Ragavendra Agencies, Chennai - 5 ✆ 8446166, 8446891

# அணிந்துரை

**கே. முத்தையா**
ஆசிரியர்,

ஒரு நாவல் உருவாகிறது என்றால், தான் வாழும் காலத்தில் சமுதாய வாழ்வை, அதன் சிருஷ்டிகர்த்தா உணர்ச்சி பூர்வமாகவும் உயிர்த்துடிப்புடனும் ஒரு படப்பிடிப்பை நம்முன் வைக்கிறார் என்று பொருள்.

சிலப்பதிகாரம் 1500 ஆண்டுகளுக்கு முந்திய இசை நாடகம்; என்றாலும் அது அந்தக் காலத்திய சமுதாய வாழ்வை தத்ரூபமாக, உணர்ச்சி மயமாக நமக்கு எடுத்துக் கூறுகிறது.

இன்று வரும் நாவல்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். பண்டைய நிகழ்ச்சிகளை சரித்திர நாவல்கள் என்று பெயரில் நம்பமுடியாத நிகழ்ச்சிகளாகத் தொகுப்பது. எதையும் சாதித்திடும் சர்வவல்லமை வாய்ந்தவர்களாக பாத்திரங்களை உருவாக்குவது. எத்தனை விளக்கங்கள் தந்தாலும் இப்படிப்பட்ட நாவல்கள், கருத்து முதல்வாத கோளாறில் சிக்கி அவை மனிதவாழ்வில் நிகழும் உண்மைகளல்ல என்ற நிலைக்குத் தள்ளப்படும்.

இரண்டாவது, வாழ்க்கையில் இருப்பதெல்லாம் தெய்வீக சிருஷ்டி, நம் சமுதாய வாழ்வில் நிகழும் சம்பவங்கள் எல்லாம் தடுக்க முடியாதவை, இந்தச் சமுதாய வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சிகள் அன்று முதல் இன்றுவரை நாளையும் நடக்கத்தான் செய்யும் - இவைகளையும் மனிதன் தவிர்க்க முடியாது என்று வலியுறுத்தும் தலைவிதி தத்துவ நாவல்கள்.

மூன்றாவதாகக் குறிப்பிடவேண்டியவை இன்றைய எதார்த்த வாழ்வும், அதில் நிகழும் நிகழ்ச்சிகளும். இதில் தோன்றும் கதாபாத்திரங்களும் இன்றைய எதார்த்தமான சமுதாய அமைபபின் சிருஷ்டிகளே. இந்த அமைப்பு மாறினால், இந்த நிகழ்ச்சிப் போக்குகளும்

மாறும். இன்றைய அநீதிகள், அதர்மங்கள், ஒரு சிலரின் ஆதிக்கங்கள், அவர்களது சுரண்டல்கள், அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள் அனைத்தும், தனிநபர் கையில் செல்வ ஆதாரங்கள் அனைத்தும் குவிவதின் விளைவுகளே என்ற எண்ணத்தை கருவாகக் கொண்டு எழுதப்படும் நாவல்களும் உண்டு.

நான்காவதாக, இன்றைய சமுதாய வாழ்க்கையை எதார்த்தமாக சித்தரித்து, இதில் வரும் அதர்மமான, மனித நாகரீகத்துக்கு விரோதமான போக்குகளை மறைக்காமல் சித்தரிப்பதுடன், இந்த அதர்மங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் பலியாகும் நபர்களையும் அதற்குக் காரணமானவர்களையும் மனிதாபிமான உணர்வுடன் சித்தரிக்கும் நாவல்களும் வருகின்றன.

இந்த வகை நாவல்களில் ஒன்றுதான் நண்பர் திரு சு.சமுத்திரம் அவர்கள் எழுதிய **"சத்திய ஆவேசம்"** என்னும் நவீனம். இதனை செம்மலரில் இரண்டு ஆண்டுகளாக வெளியிட்டதற்கு ஆசிரியர்குழு பெருமைப்படுகிறது. ஒரு தனியார் கல்லூரியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை சித்தரிக்கிறார் சு. சமுத்திரம். நாம் வாழும் இந்த சமுதாய அமைப்பில் நிகழும் அக்கிரமங்களையும், கொடுமைகளையும், அதன் காரணங்களையும், காரணமானவர்களையும் அற்புதமாகச் சித்தரிப்பதில் வெற்றி அடைகிறார்.

ஒரு டிரஸ்ட்போர்டுக்கு சொந்தமான கல்லூரி முதல்வர் பெருமாள்சாமி அந்த போர்டின் சேர்மானான அப்பாவுவால் வஞ்சிக்கப் படுவதை சித்தரிக்கிறது இந்த நவீனம். கல்லூரி முதல்வரான பெருமாள்சாமி, அந்த கல்லூரியை, தன் சுயநலத்துக்காகப் பயன்படுத்தும் அப்பாவுவால் பழிவாங்கப்படுகிறார். அந்தக் கல்லூரியிலேயே டைப்பிஸ்ட்டாக இருக்கும் ஒரு பெண் ஊழியரை பயன்படுத்தி பெருமாள்சாமியையும் பழிவாங்குகிறார். ஒரு பெண் தனிப்பட்ட நிர்வாகத்திடம் ஊழியம் செய்யும்போது, எத்தனை எத்தனை அக்கிரமங்களுக்கும் அசிங்கத்துக்கும் ஆளாகிறார் என்பதனை, வசந்தியின் பாத்திரத்தின் மூலம் எடுத்துக்காட்டுகிறார் சமுத்திரம்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த போதிலும் மாணவர்களின் தலைவனான முத்தையா நிர்வாகத்தின் கொடுமைகளைப் பொருட்படுத்தாமல், அப்பாவுவை எதிர்த்தால் தனக்கு எதிர்காலமே இருக்காது என்று தெரிந்தபோதிலும் மாணவர்களுக்காகவும், பின்னர் முதல்வருக்காகவும் அந்த தனிப்பட்ட கல்லூரி நிர்வாகத்தின் (அப்பாவு) அடாத செயல்களை எதிர்த்துப் போராடுகிறான்.

V

நம் சமுதாய வாழ்வில் அநீதிகளை எதிர்க்கும் ஒரு புதிய சக்தி தோன்றுவதை சமுத்திரம் நல்லமுறையில் சித்தரிக்கிறார். இதுதான் இந்த நாவலின் சிறப்புத் தன்மை. சமுதாய வாழ்வில் நடக்கும் எதார்த்தங்களைச் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அந்தச் சமுதாய வாழ்வுக்குள்ளேயே தீமைகளை எதிர்க்கும் சக்திகள் தோன்றத்தான் செய்யும் என்னும் உண்மையை எடுத்துக் கூறுவதில் சமுத்திரம் வெற்றி அடைகிறார். இதுபோன்ற கருத்தினை திரு. சமுத்திரம் அவர்கள் இதற்கு முன் எழுதிய நாவல்களின் (ஒரு கோட்டுக்கு வெளியே, ஊருக்குள் ஒரு புரட்சி) எடுத்துக் காட்டியிருக்கிறார்.

தமிழ்நாவல் வரலாற்றில், இது ஒரு புதிய திருப்பமாகும்.

நாவலாசிரியர் என்ற முறையில் சமுத்திரத்தின் நாவல்களின் சிறப்புத்தன்மை இதில்தான் அடங்கியுள்ளது. தனித் தன்மையும் சமுதாய வாழ்வில் நடக்கும் அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராக மனித சக்தி தோன்றத்தான் செய்யும். அது, உலகம்மை என்ற பெண்ணின் தோற்றத்தின் மூலம் 'ஒரு கோட்டுக்கு வெளியே' என்ற நாவலில் கண்டோம்.

இங்கே இந்த நாவலில் கல்வியை வியாபாரமாக்கி கொள்ளையடிக்கும் நபர்களை எதிர்க்கும் சக்தியாக வறுமையில் வாடும் மாணவன் தோன்றத்தான் செய்கிறான். சதிகாரர்களையும், அக்கிரமக்காரர்களையும் எதிர்த்திட முடியும். அது தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, கல்லூரியாக இருந்தாலும் சரி இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தோன்றும். அவைகளை முறியடிக்கமுடியும் என்பதை இந்த நவீனத்தின் மூலம் தெரிந்து கொள்ளமுடியும். அதுவே இதன் வெற்றி. திரு சமுத்திரம் அவர்கள் ஒவ்வொரு வாக்கியத்திலுமே உதாரணங்களைக் கூறி விளக்கும் பாணி அவருக்கே உரித்தான சிறப்பாகும்.

# என்னுரை

இன்றைய சமூக அமைப்பில் -

* எளியவர்களுக்கு, இராக்கனவுகள் கூட எதிரிகளே.
* இன்றையச் செய்திகள் நேற்றைய காக்டைல்-பார்ட்டிகள்.
* ஏழையின் உழைப்பு, அவன் குடும்பத்திற்கு எதிராகவே திருப்பப்படுகிறது.
* நீதிமன்றங்கள் தர்மசபைகள் ஆகா.
* யோக்கியனுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் பொறுப்பு அயோக்கியனிடமே உள்ளது.
* பிரச்சினையை தீர்க்கவேண்டிய கல்வியே ஒரு பிரச்சினையாகி விட்டது.
* அநியாயக்காரர்கள் தங்களின் காரியங்களை நியாயவான்கள் மீது போட்டு, தப்பிக்கிறார்கள்.

ஆனாலும் -

* நியாயம் போராட்டங்களை இழக்கலாம், ஆனால் போரை இழக்காது.

ஏனென்றால் -

* இந்த போக்கிரித்தனமான சமூக அமைப்பே ஜாமீனில்தான் இருக்கிறது."

மேலே குறிப்பிட்டுள்ள வாசகங்களை, நானும், ஏட்டுச் சுரைக்காயாய் படித்ததுண்டு. ஒரு சமயம், ஒதுக்கித் தள்ளியிருக்கவும் கூடும். ஆனால் கடந்த இரண்டாண்டு கால அனுபவத்தின்போது, இந்த வாசகங்களின் ஒவ்வொரு எழுத்தும், என் ஒவ்வொரு உயிர் அணுவிலும் ஊடுருவியது. இவை, ஒட்டுமொத்தமாக வந்தன. சில தாக்கின. சில தாங்கின. பல, தாக்கம் ஏற்படுத்தின. குருதி கொதிபட, ஆன்மாவைச் சாறு பிழிந்தது போல் அவதிப்பட்ட காலத்தில், அனுபவ பிரசவத்தில் உருவான வாதையான முதல் கட்ட வாசகங்கள், இரண்டாவது கட்ட விஞ்ஞானபூர்வமான சிந்தனையில் சென்று, மூன்றாவது கட்டமாக ஒரு ஆறுதலையும், ஒரு சத்திய ஆவேசத்தையும் நித்தியமாகக் கொடுத்து உள்ளன. ஆவேசம், சத்தியமாகாது, ஆனால் சத்தியத்திற்கு ஆவேசம் வந்தால்...?

நாவல் கதையைச் சொல்வதற்கு முன்பாக, நான் பட்ட கதையைக் கேளுங்கள்.

வர்த்தகக் கலாசார சமூக அமைப்பு இயங்கி வரும் இந்தக் காலத்தொடரில், சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில், உதவி செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்த எனக்கு, எத்தனையோ அனுபவங்கள். மாதிரிக்கு, இதோ ஒன் று -

ஒரு ஆசாமி வருகிறார். எனக்கு கும்பிடு போடுகிறார்.

"வணக்கம்... சமுத்திரம் ஸார்... ஒங்க கதைன்னா... எனக்கு உயிரு."

"ஒங்க பேரு..."

"இதோ கார்டு... இதுதான் பேரு..."

"என்ன விஷயமாய்..."

"இலங்கையில... தமிழர்களை... இந்தப் பாழாப்போற சிங்களப் பயலுக... எப்படிக் கொல்றான் பாருங்க... இதை நாம் விடக்கூடாது ஸார்..."

"நிச்சயமாய் விடக் கூடாது."

"சரியாச் சொன்னீங்க சமுத்திரம் ஸார்... நாளைக்கு... இலங்கைத் தமிழர்களுக்காக... கடற்கரையில் உண்ணாவிரதம் இருக்கோம்... டி.வி. வருமான் னு கேட்க வந்தேன்..."

"ஒரு நிமிடம்... மன்னிக்கணும்... நாளைக்கு... இலங்கைத் தமிழர்களை ஆதரித்து... சில அரசியல் கட்சிகளோட ஊர்வலம் இருக்குது... காமிரா அதுக்குப் போகணும். அதனால உங்களுக்குக் கிடைக்கல மன்னிக்கணும்..."

"எப்போ காமிரா கிடைக்குமுன் னு சொல்லுங்க... அப்போ... உண்ணாவிரதத்தை வச்சுக்கிறோம்."

"ஏன் ஸார்... உங்களுக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்குதா?... இலங்கையில்... நம்ம இனத்தையே அழிச்சுட்டு வாராங்க... நம்ம ஆட்கள் அங்கே சாகிறது... ஒங்க முகத்தை டி.வியில காட்டுறதுக்கு ஒரு வாய்ப்பா?

எங்க நிறுவனத்தை அவமானமாய் பேசிட்டீங்க... நான் யாருன் னு காட்டுறேன்...

வந்தவர்களிடம் பேரம் பேசத் தெரியாத - தெரிய விரும்பாத நான், மறுநாள் வழக்கம்போல் பத்திரிகைகளைப் புரட்டினேன். நியாயமாகவே, வந்தவர், சொன்னதை நிரூபிப்பதில் அரிச்சந்திரன்தான். "டி.வி.யில் 'சமுத்திர'த் தவறுகள்..."

இப்படி, பப்ளிஸிட்டி மோகினியிடம் பிடிபட்ட பலர், இந்த மோகினியை வைத்து விபச்சாரம் செய்த, எனது ஒரு சில சகாக்களின் உதவியுடன், பண பலத்தையும், பத்திரிகை பலத்தையும் எனக்கு எதிராகத் திருப்பி விட்டனர். ஆனாலும் இந்த நரிகளின் ஊளைச் சத்தத்தில் என் சொல் எடுபடாமல் போகவில்லை, மடியில்

கனமில்லாததால், வழியில் பயமின்றி நடக்கிறேன். இவ்வளவு பத்திரிகைகள், முதலாளிகள், அரசியல்வாதிகள், உதிரிகள் உட்பட பலர் தாக்கியும், நான் விழுந்து விடாமல் இருந்ததற்குக் காரணங்கள் -

என் மனச்சாட்சி.

நான் தப்புச் செய்யவே மாட்டேன் என்று நிச்சயமாக நம்பி, எனக்கு ஆதரவு காட்டிய **"தீக்கதிர்" - "செம்மலர்."**

அரவணைத்துக் கொண்ட, "தாய்."

நடுநிலை பிறழாது என் கட்சிக்கும் வாய்ப்புத் தந்த **"குங்குமம்", "மாலைமுரசு."**

வஞ்சகக் கூட்டத்திடம் வம்படி பட்டபோதெல்லாம், எனக்கு உற்சாகமும், ஊக்கமும் வழங்கிய என் துணைவி திருமதி கோகிலா சமுத்திரம்.

"நாங்கள் இருக்கிறோம்.. கவலைப்படாதீர்கள்" என்று கடிதங்கள் எழுதிய பாட்டாளி வர்க்கத் தோழர்கள், குறிப்பாக பெரியவர் முத்தையா, வழக்கறிஞர்கள் ச. செந்தில்நாதன், ஜெயராமன், பரமசிவம்.

"அண்ணாச்சி... நம்மை மாதிரி ஆட்கள் இதை தாங்கிக் கொண்டால்தான் தாக்குப் பிடிக்க முடியும்" என்று ஆறுதல் தந்த சிந்தனையாளர் வலம்புரி ஜான்."

என் நேர்மையை சந்தேகிக்காத நிலைய இயக்குநர் திரு. சவ்டேக்கர், துணை இயக்குநர் திரு. குன்னி கிருஷ்ணன், உதவி இயக்குநர் திரு. மகாதேவன் ஆகியோர்.

ஒரு கட்டத்தில் என் விளக்கத்தையும் போட வேண்டியது பத்திரிகை தர்மம் என்பதை உணர்ந்த ஒரு சில 'பின்புத்தி' செய்தி நிறுவனங்கள் - பத்திரிகைகள்.

ஏதோ என்னைப் பற்றிய பிரதாபங்களை நான் சொல்வதாக நினைக்கக்கூடாது. இவற்றிற்கும், இன்றைய சமுக அமைப்பிற்கும் சம்பந்தம் இருப்பதால் இவற்றைச் சொல்ல வேண்டியதாயிற்று. இந்த இரண்டின் கூடலில் பிறந்ததுதான் இந்த நாவல்.

ஆனாலும் -

இந்த நாவலை, தனி மனிதக் கண்ணோட்டத்தோடு நான் எழுதவில்லை. "அனுபவம் என்பது ஒரு சாளரம். அதன் மூலம் தெருவைப் பார்க்கலாம், ஆனால் அதுவே தெருவாகாது" என்ற முக்கால் உண்மையையும், "அனுபவம் முக்கியமல்ல, அவற்றில் இருந்து பாடம் கற்றுக்கொள்வதே முக்கியம்" என்ற லியோ டால்ஸ்டாயின் அறிவுரையையும் மனதில் நிறுத்தி, நான் சந்தித்த மெய்யான

மனிதர்களையும், கற்பனையான கேரக்டர்களாக அனுமானித்து, பெருமளவு விருப்பு வெறுப்பை ஒதுக்கி, இந்த சமூக அமைப்பை, என் அனுபவத்திற்கு ஏற்ப வியாக்கியானம் செய்யாமல், அனுபவத்தை, சமூக அமைப்பில் புடம்போட்டு, நாவலாக்கி உள்ளேன்.

இந்த நாவலின் முதல் நான்கு அத்தியாயங்கள், பிரபல வழக்கறிஞரும், என்னோடு தோளோடு தோளாய் நிற்பவருமான என் கல்லூரி காலத் தோழர், வழக்கறிஞர் ச. செந்தில்நாதனை ஆசிரியராகக் கொண்ட **'சிகரத்தில்'** வெளிவந்தன. நல்ல பத்திரிகைகளுக்கு, காலமில்லாத காலமிது என்பதால் 'சிகரம்' நின்று போனது. நாவலும் நிற்கப் போனது. இந்தச் சமயத்தில், இது மேல் உலாவர, 'செம்மலர்' ஆசிரியரும், முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளருமான திரு.கே. முத்தையா அவர்கள் அச்சு ரதம் கொடுத்தார். சத்திய ஆவேசத்தை பிரசுரிப்பதில் பெருமைப் படுகிறோம் என்று எழுதினார். அவரது பெருந்தன்மையை, எனது மூலதனமாக்கி, பத்திரிகை காகித விலையையும் கருத்திற்கொள்ளாமல், பக்கம் பக்கமாய் எழுதிக் குவித்தேன்.

செம்மலர் தவிர வேறு எந்தப்பத்திரிகையிலும், இந்த அளவிற்கு பெரியதாய், இந்த அளவிற்கு சுதந்திரமாய் எழுதியிருக்க முடியாது, முடியவே முடியாது. அதிலும், தொடர்கதைக்கு எதிர் பார்க்கப்படுகிற சஸ்பென்ஸ் எனப்படும் துக்கிரித்தனங்களை விரும்பாத செம்மலர், என் தொடரை விரும்பிப் போட்டது, என் தகுதிக்கு அதிகமாகக் கிடைத்த அங்கீகாரம். அணிந்துரை கொடுத்த திரு. கே. முத்தையா அவர்களுக்கும், நானே திரும்பப் படிக்கச் சிரமப்படும் என் எழுத்துக்களை பிழையின்றி அச்சுக்கோர்த்த செம்மலர் தோழர்களுக்கும், அவ்வப்போது கடிதங்கள் எழுதிய எண்ணற்ற தோழர்களுக்கும், அத்தியாயம் தோறும் என்னோடு தொடர்பு கொண்டு ஊக்கப்படுத்திய செம்மலர் உதவி ஆசிரியர் திரு. வரதராசனுக்கும் என் நன்றி.

ஒரு அத்தியாயத்திற்குப் பிறகு, அடுத்த அத்தியாயத்தில் என்ன எழுதலாம் என்று நான் மூளையைக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்று பெரியமனது செய்து, என் மீது, மனுக்கள் மூலமும், செய்திகள் மூலமும் தாக்குதல்கள் தொடுத்து, அந்த தாக்குதல்களையே, நான் அத்தியாயங்களாக்க எனக்கு உதவிய பகை நண்பர்களுக்கு என் நன்றி. என்னை வீழ்த்துவதில் வெற்றி பெறாத அந்த நட்புப் பகைவர்கள், இந்த நாவல் உருவாவதில் வெற்றி பெற்றனர்.

## பின் குறிப்பு :

18 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட முழுமையான முன்னுரையை அப்படியே பிரசுரித்துவிட்டு, குறிப்பை மட்டும் இப்போது எழுதுகிறேன். 1983-ஆம் ஆண்டில் **சிகரத்தில்** நான்கு அத்தியாயங்களாகவும், பின்னர்,

**செம்மலரில்** எஞ்சிய அத்தியாயங்களையும் தொடர்கதையாக எழுதினேன். 1962-ஆம் ஆண்டில் வடசென்னைக் கல்லூரியில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை, மையமாக வைத்து, துவக்கப்பட்ட இந்தத் தொடர் செம்மலரில் எழுதப்பட்டபோது, சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் உதவி செய்தி ஆசிரியர் என்ற முறையில், எனக்குக் கிடைத்த அனுபவங்கள், கதையை நகர்த்தின. ஆனாலும், எனக்கு இன்னல் கொடுத்தவர்களை அடையாளம் காட்டி எழுதப்பட்ட அப்போதைய பகுதிகளை, இப்போது நீக்கிவிட்டேன். படைப்பிற்கு அதிக சம்பந்தம் இல்லாத 80 பக்கங்களையும் எடுத்துவிட்டேன். அதே சமயம், செய்தியாளர் கூட்டம், நீதிமன்ற நடவடிக்கைகள் போன்றவை நீளமாக சித்தரிக்கப் பட்டாலும், அவை, வாசகர்களை, விளங்கிக் கொள்ள வைக்க வேண்டும் என்பதற்காக, அப்படியே விட்டுவிட்டேன். இந்த நாவல் வருவதற்கு பிள்ளையார் சுழிபோட்ட தோழர். செந்தில் நாதனையும், என் இலக்கிய ஆசான் கே.முத்தையா அவர்களையும், மீண்டும் நன்றியுடன் நினைவுப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த நாவலில் வரும் கருத்துக்களில் இன்னும் உறுதிபட நிற்கிறேன். ஆனாலும், இந்தப் படைப்பில் இறுதியில் குறிப்பிட்டு இருப்பதுபோல், இப்போதைய அரசியல்-சமூகச் சூழலில், நமது சமூக அமைப்பு ஜாமீனில் இருக்கிறதா... அல்லது இதன் மாற்றத்திற்காக போராடிய இயக்கங்கள், ஜாமீனில் இருக்கிறதா... என்ற கேள்வி என்னுள் எழுந்து, ஒருவித ஏமாற்றத்தைத் தந்துள்ளது. என்றாலும், எந்தத் தீமையும், அதிகரிக்கும் போதுதான், அதற்கு அழிவு நாள் நிச்சயிக்கப்படுகிறது என்றும் ஆறுதல் ஏற்படுகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய இந்தப் படைப்பை நவீனமான நாவலாக வெளியிடும் பெரியவர் வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கும், அவரது புதல்வர் ராமு அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சு. சமுத்திரம்**

சென்னை -41
டிசம்பர், 2001

# சத்திய ஆவேசம்

மாணவர் போராட்டத்தைத் தடுப்பதற்காக - அப்படிச் சொல்வது கூடத் தவறு, தகர்ப்பதற்காக, கல்லூரி நிர்வாகம், கையாண்ட பல 'வேலைகள்' பளிச்சென்று தெரிந்தன. மாணவர் பிரச்சனைக்கு முடிவு காண்பதற்குப் பதிலாக, மாணவர்களையே முடிவு கட்ட நினைத்தது போல், நிர்வாகத்தின் ஏற்பாட்டில், இரும்புத் தொப்பியும், கேடய முறமும் கொண்ட போலீஸ்காரர்கள், ஏதோ எதிரி நாட்டிற்குப் படையெடுக்கப் போதுவது போல், அணிவகுத்து நின்றனர். உதவி போலீஸ் கமிஷனர், காரிலிருந்து இறங்கியதும், அவரையே தாக்கப் போவது போல் ஓடினார்கள். அவர், ஆற அமர இறங்கி, போலீஸ் வியூகத்திற்கு வழி சொல்லிக் கொண்டிருந்தார். இன்னொரு போலீஸ் ஜீப்பில், ஒயர்லஸ் சத்தம் பலத்துக் கொண்டே இருந்தது. கல்லூரி வாசல்களின் இரு கதவுகளும், வாசலுக்கு முக்காடு போட்டு, முக்காட்டில் மோவாயை மட்டும் காட்டும் பெண்போல, ஒன்றிற்கு ஒன்று, இரண்டடி இடைவெளியில், ஒற்றையடிப் பாதை வழியாகி நின்றன. வெளிக் காம்பவுண்டில் இரண்டு கரும்பலகைகள் சாத்தி வைக்கப்பட்டிருந்தன.

ஒன்றில், அன்றைக்கு சஸ்பெண்டாகி இருக்கும் மாணவர்கள் பெயர்ப் பட்டியல் எழுதப்பட்டிருந்தது. இன்னொரு பலகையில், எக்ஸ்பெல் செய்யப்பட்டிருக்கும் மாணவர்கள் பெயர்ப் பட்டியல், ஏதோ பத்மஸ்ரீ பட்டம் கொடுத்தது போல், வண்ண வண்ண சாக்பீஸில் எழுதப்பட்டிருந்தது. தொலைவில் இருந்து பார்ப்பவர்களுக்கு, ஹோட்டல்களில், ஸ்பெஷல் அயிட்டங்கள் எழுதி வைக்கப்பட்டிருப்பது போல் தோன்றும்.

ஒப்பன் யூனிவர்சிட்டி என்கிறார்களே - அதுதான் தொடங்கி விட்டதுபோல், கல்லூரிக்கு வெளியே மாணவர்வெள்ளமும், அதற்கு அணை கட்டியதுபோல் போலீஸாரும் தென்பட்டார்கள். வட்டத்திற்குள் வட்டம் போல், மாணவர்கள், குழு குழுவாகக் கூடியும், பிரிந்தும் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

வட்டதின் மையம் போல், முத்தையாவும், இதர மாணவர் தலைவர்களும், போலீஸ் வியூகத்தையும், மூளியலங்காரி மூதேவி சண்டாளிபோல் தோன்றிய கல்லூரிக் கட்டிடங்களையும் 'மாறி மாறி' கண்களால் வட்டமடித்தபடி நின்றனர். கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களை அனுதாபமாகப் பார்த்துக் கொண்டே உள்ளே போனார்கள் - அதாவது "உள்ளே" போவது போன்ற உணர்வோடேயே போனார்கள். எதையும் வரலாற்று பூர்வமாகப் பார்க்கும் ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்ட் ஆப் ஹிஸ்டரி, கல்லூரிக்குள் போகும் போது, கண்ணாடியைக் கழற்றி, தன்னையறியாமலே கையில் வைத்துக் கொண்டு, அதன் மூலமாக மாணவர்களைப் பார்த்தார். ஒரு காலத்தில், மாணவர் போராட்டத்தை அடக்க வேண்டும் என்று வாதாடிய அவர், மூன்று மாதங்களுக்கு முன்பு தன்னை அடக்கப்போன டிரஸ்டிகளை, மாணவர்களே தாமாக முன்வந்து அடக்கி, தன் பதவியைக் காப்பாற்றியதை நினைத்து, காலப் பரிணாமத்தில் செதுக்கப்பட்டவர் போல் நடந்தார்.

மாணவர்கள், 'கல்லூரி நிர்வாகத்தின் தான் தோன்றித்தனம் ஒழிக' .... 'டிரஸ்டிகளின் கைப்பாவையாகச் செயல்படும் கல்லூரி முதல்வரே! மனம் திருந்துங்கள்' என்பவை போன்ற கோஷங்களை முழக்கிக் கொண்டிருந்தனர். போராட்டத்தில் பத்தாவது நாளான அன்று, போலீஸ் படை பெருகியதாலும், மாண்வர்களின் சஸ்பெண்ட் எண்ணிக்கை அதிகரித்ததாலும், அவர்கள் மத்தியில் ஒரு பரபரப்பு நிலவியது.

சில பெற்றோர்கள், தங்கள் பையன்களின் முதுகைப் பிடித்து, கல்லூரிப் பாதைக்குள் நுழைக்கவும் முயற்சி செய்தார்கள். மாணவர்களின் பெற்றோரிடம் இருக்கும் பாசத்தைக் காட்டுவதற்காக, போலீஸாரும், அவர்களுக்கு ஒத்தாசை செய்வது போல், கல்லூரிக் கதவுகளின் இடைவெளிகளை மூன்றடியாக்கினார்கள். சில பையன்கள், பெற்றோருக்குப் பயந்து உள்ளே போய்விட்டு, பிறகு காம்பவுண்ட் சுவரில் ஏறி, கீழே குதித்து, தங்களை மாணவர் கூட்டத்தில் மறைத்துக் கொண்டார்கள். ஒரு பயலும் இன்னும் சின்னக் கல்லைக் கூட எறியலி யே என்பது போல், கல்லூரிக்குள் டிரஸ்டிகள் ஏங்கித் தவம்கிடந்தனர்.

எந்த நேரத்தில், என்ன நடக்குமோ என்ற பரபரப்பு. மாணவர்கள் கோஷங்கள் வலுத்தன. வண்டி வாகனங்கள் ஸ்தம்பிக்கப் போவது

போன்ற நிலைமை. போலீஸாரின் உடம்பை எறும்பு கடித்தது போல், அங்குமிங்குமாக நடக்கும் அணியலங்கார நடைகள். ஏதோ நடக்கும் என்று எதிர்பார்த்து, பக்கத்து சில்லறைக் கடைகளும், எதிர்ப்புரத்து சிற்றுண்டி விடுதிகளும் கதவுகளை மூடி மூடி, மாரடிக்கும் ஒத்திகைகள்.

மாணவர்கள் முழக்கம் வலுத்தது. அவர்கள் கையை ஆட்டுவதும், ஆவேசமாக நடமாடுவதும் அதிகரித்தது. இதனால் போலீஸார் பரபரக்க, போலீஸ் பரபரப்பால், மாணவர் பரபரக்க, ஒன்று இன்னொன்றை அதிகப்படுத்திக் கொண்டிருந்த நேரம்; கல்லூரி டிரஸ்டிகளின் கனவு, நனவாகப் போவது போன்ற சமயம்.

முத்தையா, நிலைமையைப் புரிந்து கொண்டான். ஒரு மாணவத் தோழனின் தோளை, ஆதரவாகப் பற்றியபடி, கல்லூரிக் காம்பவுண்ட் சுவரில் ஏறி நின்றபடி, 'என் மாணவ நண்பர்களே' என்று பேசப்போனான். 'என்' என்ற வார்த்தை உச்சரிப்பில், தன்னை இழந்த தொனி ஒலித்தது. பிரபஞ்சத்தில், அங்குமிங்குமாக இருக்கும் அத்தனை பாச வெளிப்பாடுகளும், எழுகடல் புகுத்திய கடுகுபோல், அவன் குரலில் ஒலித்தது. மாணவர்களை கையமர்த்திய படியே, கூட்டத்தை ஒட்டுமொத்தமாகப் பார்த்தான். அவன் கண்கள் மாணவ எல்லையைத் தொட்டு, போலீஸ் தடுப்புச் சுவரைத் தாண்டி, இன்னொரு இடத்தைப் பார்த்தது. அங்கே கிழிந்த துண்டோடு, கரியப்பிய வேட்டியோடு ஒரு வயதான உருவமும், அதனை ஒட்டினாற்போல், உருவத்தைக் கிழிசல்களாகவும், அதை ஒமூடிமறைக்கும் புடவையைச் சந்து பொந்துகளாகவும் கொண்ட இன்னொரு உருவத்தையும் பார்த்தான். அவன் கண் விழுந்ததை உணர்ந்த அந்த இரு உருவங்களும், தலைக்கு மேல் தத்தம் கரங்களைத் தூக்கிக் கும்பிட்டன. முத்தையாவால், பெற்றோரை, அதற்கு மேல் பார்க்க முடியவில்லை. படுகளத்தில் ஒப்பாரி கூடாது என்ற பழமொழியை மனதில் சொல்லிக் கொண்டே பேசப் போனான்.

பேச்சு வரவில்லை. தெற்கே அச்சரப்பாக்கம், வடக்கே பழவேற்காடு, மேற்கே நெல்லூர் ஆகிய மூன்று இடங்களை வியாபார எல்லையாக வைத்தபடி, கடை கடையாகச் சென்று கந்தல் கோணிகளை வாங்கி, பஸ்காரர்கள் கையில் காலில் விழுந்து, எப்படியோ அவற்றை ஏற்றி, பிராட்வேயிலோ அல்லது தங்கச்சாலையிலோ, தானே ஏற்றியதை, தானே இறக்கி, தானே சுமந்து, வண்ணையம்பதி என்று எழுத்தாலும், வண்ணாரப் பேட்டை என்று பேச்சாலும் கூறப்படும் பகுதியில் உள்ள கோணிக் கடைகளில் விற்று அன்றாடப் பிழைப்பு நடத்தும் தன் தந்தையின் உருவம், அவனைப் பேசவிடாது, வாயை அடைத்தது.

கோணிக் கடையில், அப்போதுதான் கோணிகளை போட்டு விட்டு வந்திருப்பதை மெய்ப்பிப்பதுபோல், தந்தையின் தோளில்

தொங்கிய சணல் கயிறுகள், அவன் முன்னால் தூக்குக் கயிராய் தோன்றியது. நோஞ்சான் உடம்போடு, அவனிடம் பிச்சைக் கேட்பது போல் அகலக் வைவிரித்த தாயின் உருவம், அவன் கண்களில் பிம்பமாக விழுந்தது.

முத்தையா, தானே ஒரு தலைகீழ் பிம்பாமாய் மாறியதுபோல் தடுமாறினான். நெஞ்சுக்குள் கல்லூரி நிகழ்ச்சிகள் சிந்தனைக் கடலாய் பெருக்கெடுத்தாலும், அதனால் பேச்சு அலைகளை, வாய்க் கரைக்கு வெளியே அனுப்ப முடியவில்லை. மாணவர்கள் திகைத்தபோது, முத்தையா சுதாரித்துக் கொண்டு, 'என்' என்றான், மீண்டும் அப்போதும் பெற்றோர் உருவங்கள் எங்களைப் பார் என்பதுபோல் பட்டது. 'என்'னைவிட, 'எங்கள்' பெரிதாகத் தோன்றியது. பேச்சே வரவில்லை. திடீரென்று, ஒரு பத்து நிமிஷம் அவகாசம் கொடுங்கள் என்று சொல்லி யபடியே, காம்பவுண்ட் சுவரில் இருந்து கீழே குதித்து, மாணவர் கூட்டத்தை விலக்கி, தானாக வழியமைத்தபடி, தொலைவில் நின்ற பெற்றோரைப் பார்த்து நடந்தான். பின்பற்றி நடந்து வந்த ஒருசில மாணவர்களை கையமர்த்தி நிறுத்திவிட்டு, வேகமாக நடந்தான்.

அவன், தாய் தந்தையரை நெருங்கியதும், அவனைப் பெற்றவர் 'நீ செய்யுறது நல்லா—இருக்காடா... இதுக்காடா... ஒன்னை..." என்று கத்தினார். பிறகு, மற்ற மாணவர்களுக்கு தன் பேச்சுக் கேட்டு, அது மகனின் தன்மானத்தை குந்தகப் படுத்தலாகாது என்று நினைத்தவராய் வாயடைத்து நின்றார். அழுது கொண்டெ, ஏதோ பேசப்போன மனைவியின் தோளைக் குலுக்கி, ஆள்காட்டி விரலை, தன் வாயில்வைத்து அழுத்தி, அவளுக்கு மௌன உபதேசம் செய்தார். பெற்றோர், பிள்ளையை பெற்ற போது பார்த்ததுபோல் பார்த்துக் கொண்டே நின்ற போது, முத்தையா 'சரி... அந்தப் பக்கமாய் போவோம்' என்று சொல்லிக் கொண்டே, முன்னால் நடந்தான்.

மூவரும், ஒரு முட்டுச் சந்துக்கு வந்தார்கள்.

வழிமறிப்பதுபோல் நின்றபடி, தன்னையே வெறித்துப் பார்த்த பெற்றோரை, முத்தையா, பேச முடியாமல் பார்த்தான். எத்தனையோ கல்லூரிப் பேச்சுப் போட்டிகளில், எடுத்த எடுப்பிலேயே இவனுக்குத்தான் முதல் பரிசு என்று எல்லோரும் பேசும்படி, மூக்கு மூலம் பேசாமலும், மொழியடுக்கில் விளையாடாமலும், நேய உணர்வு ஒன்றை மட்டுமே நெறியாகக் கொண்டு பேசும் அவன், தந்தையையும் தாயையும் பார்க்க முடியாமல் பார்த்தான்.

பின்னர், தந்தையின் கண்கள் வீசிய அனல் வீச்சையும், தாயின் கண்கள் வீசிய புனல் வீச்சையும் தாங்கமாட்டாது, தான் செய்ததும் தவறாக இருக்குமோ என்ற அய்ய உணர்வோடு, அவல முகத்தோடு,

தலைகுனிந்தான். அப்போது, காடு மேடுகளே காலில் ஏறியதுபோல், தடித்த செருப்பைப் போல, காய்ப்புக்கள் கொண்ட தந்தையின் பாதங்கள் கண்ணில் பட்டன. இரண்டு வாரத்திற்கு முன்பு, கோணிக்கட்டில் பதிந்திருந்த இரும்புத் தகடு குத்தி, இன்னும் காயம் ஆறாமல் துருத்திக் கொண்டிருக்கும் வீங்கிய பாதத்தைப் பார்த்தான். அந்தப் பாதத்தைப் பார்க்க முடியாமல், நீர் கோர்த்த விழிகளோடு. தன் தந்தையின் முகத்தை ஏறிட்டு நோக்கினான்.

அந்த முகத்தில், அப்படி ஒரு விசித்திரமான வெளிப்பாட்டை அவன், இதுவரை பார்த்ததில்லை. அந்த முகம் பாசத்தாலோ அல்லது கோபத்தாலோ, அவனை விழுங்கப்போவது போல் உப்பியது. உதடுகள் துடித்தன. மீசைமுடி குத்திட்டு நிற்பதுபோல் தோன்றியது. கண்கள், ரத்தக் கொப்புளங்களாயின. கோணிக் கடை முதலாளிகள் ஐந்து ரூபாய் பெறும் 'லைட்பீஸ்' கோணியை, இரண்டு ரூபாய்க்குரிய உப்புக் கோணியாகக் கழிக்கும்போது, காட்ட முடியாத கோபமும், 'எங்கடா... கோணி வாங்குனே' என்று அரை ரூபாய்க்காக, போலீஸ்காரர்கள் அதட்டும் போது பதில் பேசமுடியாத கோபமும், 'ஏய் கோணிக்காரா...' என்று சில பெண்கள் விளிக்கும் போது, சீற முடியாமல் சிரித்து மழுப்பும் கோபமும் - அத்தனை செல்லாக் கோபமும், இப்போது செலவிடக் கூடிய கோபமாக, அவர் முகத்தின் பல்வேறு தசைகளில் ரூபமெடுத்தது. அதேசமயத்தில், கிராமத்தில் நிலத்தை செழிக்க வைக்க கடன் வாங்கி, பிறகு அந்தக் கடனுக்கான வட்டியை அடைக்க நிலத்தையே விற்று சென்னைக்கு வந்தபோது ஏற்பட்ட சோகம், மனைவி அன்னம்மாவுக்கு, மகிழ்ச்சியோடு கட்டிய தாலியை, ஒரு சமயம், மார்வாடிக்காக, வெறும் மஞ்சள் பூசிய கயிற்றைக் கட்டிவிட்டு, பறித்த போது ஏற்பட்ட சோகம், இரண்டு பெண்களும் வயதுக்கு வந்த போது ஏற்பட்ட சோகம் - அத்தனை சோகமும் இப்போது அழப்போகிற சோகமாய் கண்களில் நீராகி நின்றன.

மூவரும் பேசிக் கொள்ளவில்லை. முத்தையா, தாய் தந்தையரைப் பார்ப்பதும், பிறகு தன்னைத்தானே பார்த்துக் கொள்வதுமாக இருந்தான். தாய்க்காரி, திடீரென்று, தன் மகனின் தலையைக் கோதிவிட்டாள். அதுவே கணவனின் கோப வெடிக்குத் தீயிட்ட.து போலாயிற்று. உஷ்ணத்தோடு வெடித்தார்.

'எருது நோவு காக்கைக்கு தெரியாது எங்கிற மாதிரி அவன் நடக்கான். நீ தலயா கோதிவிடுறே? விடு.... நல்லா விடு. நாமளும், நம்ம மகள்வளும் நினைக்கது மாதிரி.... பி.ஏ. முடிச்சுட்டு, அப்புறம் ஆபீஸராய் மாறி, இப்போ ஒன்கிட்டே அம்மான்னு சொல்லி ஆயிரம் ரூபாய் நீட்டுறான் பாரு... நல்லா தலையக் கோதி விடு. தலய மட்டும் கோதி விடப்படாதுடி. இந்த பிள்ளய... இடுப்புல வச்சுக்

கொஞ்சணும்... நான் வேணுமுன்னா... அவன ஒன் இடுப்புல தூக்கி வைக்கட்டுமா... மூதேவியைப் பெத்த மூதேவி..."

"ஏன் இப்படி பிள்ளைய கரிச்சுக் கொட்டுறீங்க? சம்பளப் பணத்தை கொடுத்தால்தான், அப்பனுக்கு பிள்ள... ஆனால் தாய்க்கு எப்பவுமே பிள்ள.. நல்லா தெரிஞ்சுக்குங்க..."

"இவன் சம்பளத்தை தூக்கி நாய்க்குப் போடட்டும்... இவன் எனக்குத் தரவேண்டாம்... எனக்கு இவன்தான் தேவையே தவிர... இவன் சம்பளமில்லை. அதுக்காகவும் இவனை படிக்க வைக்கல... நான்தான் கரிக்கோணி சுமக்கேன்...... இவனும் என்னை மாதிரி கரியாயிடப் படாதுன்னு தானம்மா படிக்க வைக்கேன். இப்போ, கரியாவுறதை விட, இன்னும் கீழே போவேன்னு சாம்பலாய் நிக்கானடி... போன வாரம் ஒன்கிட்டே என்ன சொன்னேன்... ஞாபகம் இருக்கா? கோணிய எண்ணுனதுல தப்பு வந்துட்டு... ரெண்டு கோணி அதிகமாயிட்டு... வித்தவன் என்னைப்பாத்து 'கிழட்டுப் பயலே.... வேற தொழில் பண்ணேன்டா'ன்னான். சொன்னவனைப் பாத்து தூக்குன கையை கீழே போட்டுட்டேன். யாருக்காவடி? நான் அவனை அடிச்சு... போலீஸ்ல மாட்டி... ஒரு மாசம் ஜெயிலுக்குப் போனா... இவன் காலேஜுக்குப் போவ முடியாதுன்னு தானே? இவனுக்காவ, கூனிக் குறுகி வந்தேன்... இவன் என்னடான்னா... என்னை தரையிலே தூக்கிப் போட்டு மிதிச்சுட்டானே... என்னை மிதிச்சாக் கூடப் பரவாயில்ல... தன்னோட வாழ்வையே தரைக்குக் கீழே குழி தோண்டிப் புதைச்சுட்டாளே... இப்போ... இவனையும் காலேஜ்ல இருந்து விலக்கிட்டாங்களாம்... இனும... ஒன் மவன, வீட்ல வச்சு அழகு பாரு... நான் மருந்த குடிச்சிட்டு சாகுறேன்..."

முத்தையாவின் தந்தை, கோபத்தால் துடித்து, சோகத்தால் துவண்டு, ஆவேசமாக நடக்கப் போனார். கையைப் பிடித்துத் தடுக்கப்போன மனைவியை உதறினார். கீழே விழபோனவள் அவர் தோளையே ஆதரவாகப் பிடித்துக் கொண்டாள். அவள் பிடியிலி ருந்து, அவர் மீண்டும் திமிறப் போனபோது, முததையா, 'அப்பா' என்றான். தன்னை நிமிர்ந்து பார்த்த தந்தையை தயங்கியபடியோ பார்த்தான். பிறகு, அவர் தோளில் தொங்கிய சணல் கயிறுகளை எடுத்துக் கீழேபோட்டுவிட்டு, தன்னை ஒரு காலத்தில் தூக்கியெடுத்த கையிரண்டையும், தன் கரங்களுள் சங்கமமாக்கிக் கொண்டு, தழுதழுத்தக் குரலில் பேசினான்.

"இப்போகூட.... நீங்க என்ன சொன்னாலும் கட்டுப்படறேன்... நான் சொல்றதக் கேளுங்க.... அப்புறம் நீங்க என்ன சொன்னாலும் கேக்குறேன். காலேஜ் பிரின்ஸ்பாலிடம் ஒரு மன்னிப்பு லட்டர்

கொடுத்திட்டா, இப்போகூட என்னை சேர்த்துக்குவாங்க... எதுவும், இதுவரை தலைக்குமேல் போகல...”

தந்தை, ஆவேசத்தை உள்வாங்கியபடியே, அவன் முகத்தைப் பார்க்காமலேயே பதிலளித்தார்.

“நீ என்ன சொன்னாலும் நான் கேக்குறேன். ஆனால் அதுக்கு முன்னால, நீ எழுதிக் கொடுக்க வேண்டியத... எழுதிக் கொடுத்துட்டு, மொதல்ல காலேஜ்ல சேரு. நாம குடிக்க கஞ்சில்லாம கிடக்குறோம்... எந்தப் பய எப்டிப் போனால் நமக்கென்ன? ராமன் ஆண்டா என்ன... ராவணன் ஆண்டா என்ன? ஆத்தில தண்ணி வெள்ளமாப் போனாலும்... நாயி நக்கித்தான் குடிச்சாகணும்... காலேஜ்ல சேரு... போனவாரம்... ஒரு சிலாக் சட்டை கேட்டே பாரு... அத இன்னைக்கே வாங்கித் தாறேன்...”

பெற்றெடுத்த மகனுக்கும், பிறப்பித்த தந்தைக்கும் இடையே, தாய்க்காரி அல்லாடினாள். அந்த ஐம்பது வயதுப் பெண்ணை, தாயும் மனைவியுமாய் இரண்டு பாச வினைகள் மாறி மாறி விழுங்கிக் கொண்டிருந்தன. ‘என் மகன் கலெக்டரா வரப்போறான் பாரு’ என்று முத்தையா, மூன்று மாதக் குழந்தையாக இருந்தபோது, அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளிய கணவனைப் பார்க்கப் பார்க்க, அவளுக்கு மகன்மீது கோபங்கோபமாக வந்தது. அவள் ஏதோ சொல்லப் போனபோது, மகனின் முகம் போன போக்கைப் பார்த்துவிட்டு, தன்னை மறந்த நிலையில் ஸ்தம்பித்து நின்றாள். கடந்த காலத்தை, நிகழ்காலத்திற்குக் கொண்டு வந்தவள்போல், கால்களைப் பின்னிக் கொண்டாள்.

“ஆளுக்கொரு நியாயமன்னு ஆகிட்ட காலம்... அப்பா படுறபாடு தெரிஞ்சும் இப்டி நடக்கலாமாடா? ஆயிரம் பேருக்கு நீ வழி காட்டுறதைவிட... ஆறு பேரு இருக்கிற நம்ம வீட்டுக்கு வழி காட்டுறது தான் நியாயம்... நீ செய்யுறது நியாயமில்லப்பா...”

முத்தையா குச்சிக் கால்களோடு, குச்சிக் கரங்களோடு உச்சி முதல் உள்ளங்கால்வரை ஏழை வீட்டு சிலுவைபோல் தோன்றிய அம்மாவைப் பார்த்தான். உடனே அன்னம்மா, மனைவி என்பவளை உதறிவிட்டு, முழுக்க முழுக்க தாயானாள்.

“ஒங்களத்தான்... அவன் ஏதாவது செய்தால்... அதுல ஒரு அர்த்தம் இருக்குமுன்னு நீங்க அடிக்கடி சொல்லுவீங்களே மொதல்ல, அவன் என்ன சொல்றான்னு கேளுங்க... அவன்தான், நீங்க என்ன சொன்னாலும் கட்டுப்படுறேன்னு சொல்லிட்டானே...”

முத்தையாவின் தந்தை, மனைவியை முறைத்தார். பிறகு, அவளுக்கு மட்டுமே கட்டுப்பட்டு நிற்பதுபோல், மகனைப் பார்க்காமல்,

மின்சார விளக்குக் கம்பத்தில், முகத்தை ஒட்டிக் கொண்டு, அதன் சிமெண்ட் மொழுக்கில், ஒரு காலை தூக்கி வைத்தபடி நின்றார். முத்தையா தன்பாட்டுக்குப் பேசுபவன் போல் பேசினான்.

"நீங்க பட்ட கஷ்டத்தையோ.... படுற கஷ்டத்தையோ.... நான் மறக்கலப்பா. தயவு செய்து... அதையும், இதையும் முடிச்சுப் போடாதீங்க. ஒங்களுக்கே தெரியும்... ஒங்க கோணிக்கடை முதலாளி மகன் பிரபுவும், இன்னும் ரெண்டு பணக்காரப் பையன்களும், எனக்குப் போட்டியாய் மாணவர் தலைவர் தேர்தலுலே நின்னாங்க. தங்களோட படத்தை... விதவிதமான போஸ்டர்ல போட்டாங்க... ஒருத்தன் நாட்டோட விலை வாசியைக் குறைப்பேன்னு கூட வாக்குறுதி அளிச்சான்... தார தப்பட்ட மேளம் போட்டு, ஆட வச்சாங்க... பாட வச்சாங்க... தேர்தலுக்கு, ஆனால் நானும், என்னை மாதிரி அன்னக் காவடிகளும் வெறும் சாக்பீசால எழுதிப் போட்டோம். அவங்க அப்பாக்களும், அந்த அப்பாக்களுக்கு அப்பன்களான அரசியல் கட்சிகளும் கொடுத்த பணத்துல.... பாதியை சுருட்டிட்டு, மீதியை வச்சே... அவங்களால இப்டி பண்ண முடிஞ்சது... ஆனாலும், ஏழப்பசங்க இந்த காலேஜ்ல இருக்கதுனாலே... இந்த வேட்டி கட்டுன முத்தையாவால ஜெயிக்க முடிஞ்சது. நான் மாணவர் தலைவனாய் தேர்ந்தெடுக்கப்பட்டதும், நீங்க சிரிச்ச சிரிப்பு... இப்பவும் என் மனசில நிக்குது..."

"ஏய்... ஏதாவது பேசி, என் மனசை மாற்றப் பாத்தே... ஒன்னையும் உதப்பேன்... ஒம்மாவையும் உதப்பேன்... இப்போ நடுத்தெருவுக்கு வந்ததைச் சொல்லுன்னால்.... சிம்மாசனம் ஏறுனதைச் சொல்லுறான்.."

தந்தை, மீண்டும் விறைப்பானார். இடைமறிக்கப்பட்ட முத்தையா, மேலும் தொடர்ந்தான்:

"இந்தக் காலேஜை நடத்துற டிரஸ்ட் போர்ட்ல, ஒங்க கோணிக்கடை முதலாளியை மாதிரி பல மடங்கு பணக்காரங்க இருக்காங்க. இதுல இருக்கிற அரசியல்வாதி ரேட் பேசுறவர். ஒருத்தியை ரேட்டிலேயே கல்யாணம் செய்தவர். இதனால.... எல்லாமே குளறுபடி. காலேஜை இஷ்டத்துக்கு ஆட்டிப் படைச்சாங்க... வாத்தியாருங்க புரோமஷன்லயும் கையை வச்சாங்க.... இருபது வருஷமா நால்லா பாடம் நடத்துற ஆசிரியருக்குக் கிடைக்க வேண்டிய புரபஸர் பதவியை, டிரஸ்ட்போர்ட் சேர்மன் மருமகனுக்குக் கொடுக்கப் போனாங்க. இதை எதிர்த்து, மாணவர்களும், ஆசிரியர்களும் போராட்டம் நடத்துனோம். கடைசியில்... எங்க ஆசிரியருக்கே புரபஸர் பதவி கிடச்சுது. இதை அவங்க மனசுல கருவிக்கிட்டு இருந்திருக்காங்க..."

"நீங்க நெல்லூருக்குப் போனீங்களே... அதுக்கு மறுநாள், என்னை மாதிரி... வீட்ல படிக்க முடியாதபடி... ஒண்டி ரூம்ல... குடித்தன வீட்ல இருக்குற நாலைஞ்சு பசங்க... லீவ் நாள்ல... காலேஜ்ல மைதானத்துல படிக்கிறதுக்காக வந்திருக்காங்க. காலேஜ் ஹெட் கிளார்க்கும், காலேஜிற்கு சம்பந்தப்படாத நாலைஞ்சு பேரும் போதையோடேயே சீட்டு விளையாடிக்கிட்டு இருந்திருக்காங்க. 'பசங்களப் பார்த்து எதுக்குடா' வந்திங்கன்'னு; அதட்டி இருக்காங்க. 'டா' போட்ட கோபத்துல பசங்களும் 'நீங்க சீட்டு விளையாடும்போது, நாங்க படிக்க வரப்படாதா'ன்னு கேட்டிருக்காங்க. உடனே பசங்கள அடி அடின்னு அடிச்சி... பசங்க வாயில வயித்துல ரத்தம். அது போதாதுன்னு, பசங்க அடிச்சுப்புட்டாங்கன்னு போலீஸ்ல வேற கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக்காங்க. பசங்க லாக்கப்புக்குப் போயிட்டாங்க. இது போதாதுன்னு, மறுநாள் காலேஜ் பிரின்ஸ்பால்... அடிபட்ட பசங்களையே சஸ்பெண்ட் பண்ணிட்டாரு. நான் மாணவர் தலைவன் என்கிற முறையில், வாதாடினேன். சஸ்பெண்டுன்னு வந்தால், ஹெட்கிளார்க்கையும் சஸ்பெண்டு பண்ணனுமுன்னேன். பிரின்ஸ்பால் பயந்து விட்டார். ஏன்னா, இந்த ஹெட்கிளார்க்... டிரஸ்போர்ட் சேர்மனோட பேத்தி புருஷன். 'ஒரு குழு போட்டு விசாரிப்போம். பசங்க தப்பு செய்திருந்தால், அவங்கள, நானே பகிரங்கமாய் மன்னிப்புக் கேக்க வைக்கிறேன்'னு சொன்னேன். மொதல்ல பிரின்பால் சரின்னார். அப்புறம்... யார் கிட்டயோ டெலிபோன் பேசிட்டு முடியாதுன்னார்."

"டிரஸ்ட் போர்ட் சேர்மன் தூண்டிலில்... பிரின்ஸ்பாலே... மாணவர்களை மீன் மாதிரி போட்டாரு. வேற வழியில்லாம, வேலை நிறுத்தத்துல இறங்கினோம். உடனே, என்னை மாதிரி நாலுபேரை... எக்ஸ்பெல் அதாவது காலேஜ்ல இருந்து கழுத்தைப் பிடிச்சுத் தள்ளுறது மாதிரி வெளியேற்றி உத்திரவு போட்டிருக்காங்க... இருபது பசங்கள சஸ்பெண்ட் செய்திருக்கு.... நாங்க மன்னிப்புக் கேட்டால் சேர்த்துக்குவாங்களாம்... ஆனால் போலீஸ் லாக்கப்பில் இன்னும் இருக்கிற பசங்கள போலீஸ் விட்டாலும்... இவங்க விடமாட்டாங்களாம்."

"இப்போ சொல்லுங்க.... இந்தப் பசங்க... குறிப்பாய் லாக்கப்புல துடிச்சிட்டு இருக்கிற ஏழைப் பசங்க... நான் ஏதாவது செய்து அவங்களுக்கு உதவுவேன்னு நினைக்காங்க... என்மேல் அவ்வளவு நம்பிக்கை... எனக்கு இந்த மாணவ சக்திமேல நம்பிக்கை. நீங்கதான் இப்போ சொல்லணும். நான் படிச்சால் இவங்களோட படிக்கணும்... ஒழிஞ்சா இவங்களோட சேர்ந்து ஒழியணும்... போராடட்டுமா... இல்லேன்னா மன்னிப்பு லட்டர கொடுத்துட்டு, காலேஜ்ல சேர்ந்து, நம்பிக்கைத் துரோகம் செய்யட்டுமா? நீங்க எது சொன்னாலும் கட்டுப்படறேன்."

தந்தை, மகனையே பார்த்தார். சிறிது நேரம் வாயாடவில்லை. பேச்சாடவில்லை. பின்னர், அவர் அழுத்தந்திருத்தமாகப் பேசினார்.

"பெத்தவனுக்குப் பிள்ள துரோகம் பண்ணுனாலும் பண்ணலாம்... ஆனால் பிள்ளைக்கு, பெத்தவன் துரோகம் பண்ணப்படாது. ஒன்னைப் போராடாதேன்னு நான் சொல்றது, ஒனக்கு நான் துரோகம் செய்யுறது மாதிரி... ஏழைப் பசங்களை அடிக்கவன் முன்னால இன்னும் அடின்னு பிடிச்சுக் கொடுக்கது மாதிரி... நீ என்ன செய்யணுமோ, பசங்க... என்ன செய்யணுமுன்னு எதிர் பார்க்காங்களோ... அதைச் செய். எந்தப் பயலாவது பசங்கள அடிக்க வந்தால் ஆள் அனுப்பு, நான் கத்தியோட வாரேன்."

முத்தையா, தன் தந்தையின் கரங்களை எடுத்து, கண்களில் ஒற்றிக் கொண்டு, பிறகு அம்மாவைப் பார்த்தபோது, திடீரென்று கல்லூரிப்பக்கம் சத்தம், கத்தலாகக் கேட்டது. உடனே, பின் தலையில் கால்கள் தொடுவதுபோல் ஓடினான்.

## 2

கல்லூரி மாணவர்கள், அங்குமிங்குமாக நடமாடினார்கள். சிலர் போலீஸாரோடு வாதாடிக் கொண்டிருந்தார்கள். போலீஸோ, குதிகாலைத் தூக்கியபடி, லத்திக் கம்பை உயர்த்தியபடி, நின்றது. வாசல் பக்கம், ஒரு இளம் பெண்ணும், மாணவன் ஒருவனும், ஒருவரையொருவர் அடிக்கப்போவதுபோல், கைகளை வீசியபடியே, வார்த்தைகளே வராமல், வெறுமனே கத்திக் கொண்டிருந்தார்கள்.

முத்தையா ஓடிப்போய், அந்த இளம் பெண்ணிற்கும், இளைஞனுக்கும் இடையே நின்று கொண்டான். அவனைப் பார்த்ததும், மாணவர்கள் அந்தப் பக்கமாக, கும்பல் கும்பலாகக் குவிந்தார்கள். போலீஸார், அந்தப் பெண்ணைச் சுற்றி, வட்டமாக வியூகமாக நிற்கப் போனார்கள்.

கம்பீரத்திற்கு முக்கியத்தும் கொடுத்து, அழுகையை உள்வாங்கிக் கொண்டவள்போல் காணப்பட்ட அந்தப் பெண்ணை, முத்தையா நேராகப் பார்த்தான். கல்லூரி முதல்வரின் மகள். பலதடவை அனைத்துக் கல்லூரி பேச்சுப் போட்டிகளில் பார்த்திருக் கிறான். பெண்கள் கல்லூரி ஒன்றில் படிக்கிறவள். அப்பாவை போல், கெஞ்சாமலும் அஞ்சாமலும் எதையும் மிஞ்சிப் பார்க்கும் கண்கள். ஈரப்பட்டது போல் தோன்றும் குளுமையான உடம்பு. சுட்ட செங்கல் நிறம். ஹைகீல்ஸ் தேவையில்லாத உயரம். மொத்தத்தில், நல்ல

தோற்றம் மட்டுமல்ல, நல்லவள் என்று நம்ப வைக்குபடியான தோரணைக்காரி.

அந்தத் தோற்றமும், தோரணையும் மனதில் படியாமல், ஒருவேளை அவற்றை மீறி, முத்தையா, அவள்மீது வீசிய தன் பார்வையைக் கோபமாக்கிக் கொண்டிருந்தான். இதற்குள் ஒரு மாணவன் "இந்த மிஸ், நம்ம பிரபுவை இடியட்ன்னு திட்டுது" என்றான். இந்தப் பட்டத்தை பெரும்பாடுப்பட்டுச் சுமப்பவன் போல் தலையை அடிக்கடி தூக்கித் தூக்கிக் காட்டிய பிரபு, 'எல்லோரும் அவங்க அப்பா மாதிரி இருப்பாங்கன்னு நினைப்பு' என்றான்.

முத்தையா, வெடித்தான்:

"எதுக்காக மேடம் இப்டிக் கேட்டீங்க? அப்பா பிரின்ஸ்பால் என்கிற அகம்பாவத்துல, போலீஸ் பாதுகாப்பு இருக்கிற தைரியத்துல எது வேணுமுன்னாலும் பேசலாமுன்னு எண்ணம் வரப்படாது. டெல் மீ... எதுக்காக இப்டிக் கேட்டீங்க..."

அவள், முத்தையாவை ஆச்சரியமாகப் பார்த்தாள். சரியான நாட்டுப்புறம், என்று, தானே சில சமயம் சென்னை மாடல் இலக்கணப்படி நினைத்த இந்த ஆசாமி - ஆட்டுக்குட்டிபோல எதையும் நோக்காமல், தன் போக்கிலேயே நோக்கும் 'இது' - இப்போது பேசுகிற வேகத்தையும், அந்த வேகத்தைச் செம்மைப் படுத்தும் நிதானத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டவளாய், கண்களை அகலமாக்கினாள். தன்னை, எப்போதுமே அழுத்தமாக நோக்காத - தன்னால் 'அய்யோ - பாவம் - கேஸ்' என்று நினைக்கப் பட்டவனை, ஊடுருவிப் பார்த்தாள். பிறகு, அவன் கண்கள் காட்டிய கோபத்தில், ஒரு பங்கை வாங்கிக் கொண்டவள் போல், எதிர்க்கேள்வி போட்டாள்.

"இதே கேள்வியைத்தான் நானும் கேட்க விரும்புறேன்... பக்கத்துல கும்பல் இருக்கு என்கிற தைரியத்துல... ஒருத்தரை எப்படி வேணுமுன்னாலும் அவமானப் படுத்தலாமா? சுயமரியாதை என்கிறது பிறர் மரியாதையையும் பேணுறது என்பதை மறக்கலாமா..."

முத்தையாவுக்குக் குழப்பமாக இருந்தது. இந்தச் சமயத்துல, இதுவா பிரச்சனை? இவளா பிரச்சனை? மிஞ்சுவது போலவும், கெஞ்சுவது போலவும் பேசினான்.

"ரொம்பப் புண்ணியம் மேடம் ஒங்களுக்கு.... தயவு செய்து எங்களை விட்டுடுங்க... நீங்க எந்த வேலைக்கு வந்திங்களோ, அந்த வேலையைப் பார்த்துப் போங்க... ப்ளீஸ்..."

பிரபு, இடைமறித்தான்.

“இவன் ஒருத்தன்... இப்படிச் சொன்னால், இவங்க இங்கேயே நிற்பாங்க. ஏன்னா, இவங்க வந்ததே வம்பிழுக்கத்தான்..... இப்போதான் வம்ப துவக்கி இருக்காங்க... முடியுறது வரைக்கும் நிற்பாங்க...”

அந்தப் பெண்ணின் முகம் வெளுத்து, கண்களும் வெளுக்கப் போவது போல் தோன்றியது. சூடாகக் கேட்டாள்:

“ஒரு நியாயத்துக்குப் போராடும்போது, இன்னொரு அநியாயம் அந்தப் போராட்டத்துல முளைக்காமல் பார்த்துக்கணும். இல்லன்னா, போராட்டத்தோட வெற்றியே, தோல்வில முடியும். நீங்க என்னைத்தான் கோபமாய் கேட்கிறீங்களே தவிர, இந்த அமளிக்கு என்ன காரணமுன்னு விசாரிச்சிங்களா? காரணத்தைப் பார்க்காமல், காரியத்தை மட்டும் பார்த்தால், அந்தக் காரியமே, பல அநீதிகளுக்குக் காரணமாய் மாறிவிடும்...”

“போச்சுடா... இங்கேயுமா லாஜிக் கிளாஸ்?”

எங்கிருந்தோ ஒருத்தன் கமெண்ட் அடிக்க, அதில் எல்லோரும் சிரிக்க, அந்தச் சிரிப்பு, முத்தையாவின் முகத்தில் புன்னகையாகத் தொற்றிக் கொண்டது. அதை அடக்கிக் கொண்டே ‘சரி... நீங்களே சொல்லுங்களேன்’ என்றான்.

‘என் பாதரை, ஸ்டூடன்ஸ் அடி அடின்னு அடிச்சு... கையை முறிச்சுட்டதா வீட்டுக்கு போன் வந்தது. அப்போகூட, அப்பாவுக்கு நல்லா வேணும், ஸ்டூடன்ஸை அநியாயமாய் எக்ஸ்பெல் பண்ணினால், இப்படித்தான் நடக்குமுன்னு போன் செய்தவர்கிட்டயே திருப்பிக் கத்தினேன். ஆனாலும், என்னால் மகளாய்த்தான் இருக்க முடியுதே தவிர... மாணவியாய் இருக்க முடியல. அலறி அடிச்சு, இங்கே வந்தேன். அப்பாவுக்கு எப்படி இருக்குன்னு போலீஸார் கிட்ட கேட்டேன். அவரு, ஒண்ணும் ஆகலன்னு சொன்ன பிறகுதான் உயிர் வந்தது.எதுக்கும், அப்பாவைப் பார்த்துட்டுப் போகலாமுன்னு வாசலுக்குள் நுழையப் போனபோது, இவரு... என்ன வார்த்தை சொன்னார்னு கேளுங்க... நீங்களே கேளுங்க...’

அவளால், மேற்கொண்டு பேச முடியவில்லையோ, பேச விரும்பவில்லையோ... வார்த்தைகள் வராமல் நின்றாள்.

மாணவர்கள் மத்தியில் நெடிய மௌனம்.

“சரி... நானே சொல்றேன்.... இந்த பிரின்ஸ்பால், கடைசில.... டிரஸ்ட்போர்ட் சேர்மனுக்கு, தன் மகளையே.... கேளுங்க மிஸ்டர்... அவரையே கேளுங்க....”

அந்தப் பெண், வாயடைத்து, கண்ணடைத்து, கல்லூரிக் கதவின் முனையைப் பிடித்தபடி, வேறு புறமாகத் திரும்பி, தன் முகத்தை மறைத்துக் கொண்டாள். அழுகையை அடக்கியவள், இப்போது அழுகையால் அடக்கப்பட்டவள் போல், உடல் குலுங்கக் கேவினாள். மாணவர்கள் மத்தியில் கசாமுசா.

முத்தையா இடைமறித்தான்.

"பிரபு இப்படிப் பேசுனது தெரியாது.... ரகளை வந்த பிறகுதான் இங்கே வந்தோம்... என்னப்பா.... இது..."

பிரபு, குத்துக்கல்லாய் நின்றான்.

முத்தையா, சுற்றுமுற்றும் பார்த்தான். மாணவர்கள், மௌனிகளாய் நின்றார்கள். யார் மீதோ உள்ள கோபம், எதன் மீதோ காட்டப்பட வேண்டிய வேகம், குறி தவறிப் போனது போன்ற உணர்வு. முத்தையா, இன்னும் அழுகையை விக்கலாக்கிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணிடம் நேர்முகமாய்ப் பேசினான்.

"ஐ அம் ஸாரி மேடம்.... பிரபு சார்பில் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். பெரிய மனசு வைத்துப் பொறுத்துக்கணும். பிரது அப்படி பேசுனது மிருகத்தாமானது... எனது வீட்டு பெண்களையும், இவன் அப்படிக் கேட்டது மாதிரியே உணர்கிறேன்... இது சொல்லத் தகாத வார்த்தை.... இப்படிச் சொல்லிட்டான்னு கூட திருப்பிக் கூற முடியாத வார்த்தை.... தயவு செய்து எங்களோட மன்னிப்பை நீங்க ஏற்றுக்கணும்."

அவள், தான் கேட்டதை நம்பாதவள் போல் காதுகளை கரங்களால் தடவிக்கொண்டே, திரும்பினாள், பிறகு, சங்கடமாகச் சிரித்த படியே, 'ஐ அம் ஆல்ஸோ ஸாரி.... நானே ஒரு பிரச்சனையாயிட்டேன்' என்று சொல்லிக் கொண்டே, கல்லூரிக்குள் நுழையாமல் திரும்பி நடக்கப் போனாள்.

முத்தையா, அவளைத் தடுப்பதுபோல், வலதுகரத்தை தோளுக்குக் கீழே இறக்கி, குறுக்காக நீட்டிக் கொண்டே 'ஒங்க அப்பாவை பார்த்துட்டுப் போங்க... ஒருவேளை... டிரஸ்ட்போர்ட்காரர்கள், ஒங்கப்பா கையை முறிச்சிட்டு.... எங்கமேல பழி போடலாமில்லையா? போய்ப் பாருங்க.... அதோட, போலீஸ் லாக்கப்புல எங்க பையன்கள் அடி உதையை தின்னுக்கிட்டு, சுகமாய் இருக்கிறதாய் அப்பாகிட்ட சொல்லுங்க...' என்றான்.

அவள், சிறிது தயங்கினாள். கைகளைப் பிசைந்து கொண்டாள். பின்னர், எல்லோரையும், தர்ம சங்கடமாய் பார்த்தபடியே, கல்லூரி வாசலுக்குள் தத்தி தத்தி சென்று, பின்னர் தாவுவது போல் நடந்தாள்.

அவள் போவது வரைக்கும் பல்லைக் கடித்த பிரபு, இப்போது கத்தினான்.

“முத்து! என்னை அவள் முன்னால் நீ அப்படி இன்ஸல்ட் பண்ணியிருக்கக் கூடாது...”

“ஒன்னை இன்ஸல்ட் பண்ணப்படாதுன்னுதான், நானே மன்னிப்புக் கேட்டு என்னையே இன்ஸல்ட் பண்ணிக்கிட்டேன். நீ ஒருத்தன் பேசுன பேச்சுக்காக, இவங்க சார்பிலயும் மன்னிப்புக் கேட்டு, இவங்களையும் இன்ஸல்ட் பண்ணிட்டேன். நமக்கும் அக்கா தங்கை இருக்காங்க...”

“ஒனக்கும் எனக்கும் தேர்தலுல போட்டி இருந்திருக்கலாம். ஆயிரம் ஆயிரம் தகராறு நடந்திருக்கலாம். அதுக்காக, இப்படி நீ சமயம் பார்த்து கழுத்தை அறுக்கப்படாது. திஸ் இஸ் வெரி பேட்....”

“என்ன பிரபு... குழந்தை மாதிரி பேசுறே? ஏதோ பெரிய பார்லிமெண்ட் தேர்தலுல நாம் மோதினது மாதிரி பேசுறியே..... நான் அப்டில்லாம் நினைக்கல.... நீ பேசுனது கிரிமினல் குற்றம்.... இந்த மாதிரி ஆபாசப் பேச்சை அனுமதிக்க முடியாது...”

“ஒன் லீடர்ஷிப்பை நான் பறிச்சிடுவேனோன்னு பயப்படுறே...”

“பயப்படல.... நீ பறிச்சாலும், இன்னொரு வகையில் எனக்கு நிம்மதி....”

“எப்படியோ பேசக் கத்துக்கிட்டே.... இங்கே நடக்கிறதைப் பார்த்தால் போராட்டம் மாதிரித் தெரியல... ஏதோ சினிமா ஷூட்டிங் நடக்கிறது மாதிரி தெரியுது... டிரஸ்ட் போர்ட் மெம்பர்களை சரிக்கட்டி இருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது.... போலீஸையும் சரிக்கட்டியிருந்தால் விவகாரம் விபரீதமாய் போயிருக்காது. வருமுன் காப்பதுதான் தலைமைக்குரிய லட்சணம்.... வந்தபின் போராடுறது அவலட்சணம்...”

“எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் சரிபடுத்துறது தானே தவிர... சரிக்கட்டுறது அல்ல.... பத்து நாளா நடக்கிற போராட்டத்துல இப்போதான் தலையைக் காட்டுறே... கல்லூரி முதல்வரே... சுயமாக செயல் படுவீர்னு எழுதியிருந்த கோஷத்தைக் கூட அழிச்சிட்டு ‘தஞ்சாவூர் பொம்மையே, ஒனக்கு பதவி ஒரு கேடா’ன்னு இதோ எழுதியிருக்கே... போராட்டத்தை அசிங்கப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது பிரபு. இது உயிர்ப் பிரச்சனை... நம்மோட டேலன்டை காட்டுற நாடக மேடையல்ல...”

'என் ரத்தம் கொதிக்கறதால அப்டி எழுதினேன்... நம்ம தோழர்கள் பதினோரு நாளாய் லாக்கப்புல துடிக்கையில், எவனுக்கும் இலக்கண சுத்தமான கோஷம் வராது. அப்படி வந்தால் அவன்...'

"சரி... நான் அயோக்கியன்னே வச்சுக்கலாம்... ஒன் ரத்தம் கொதித்திருக்கலாம். நம்ம மாணவர்களை போலீஸ் நிலையத்துல போய், இந்த பதினோரு நாளையில் ஒரு நாளாவது பார்த்தியா.... ஆறுதல் சொன்னியா...."

முத்தையாவுக்கும் பிரபுவுக்கும் இடையே நடந்த வாக்குவாதத்தை, மாணவர்கள் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தபோது, உருவத்தைக் காட்டாத - ஒரு குரல் ஒலித்தது.

"பிரபு ஏன் லாக்கப் பசங்கள பார்க்கலன்னா... அவங்களப் பார்த்து.... அதனால.... ஏற்கனவே கொதித்த ரத்தம் மேலும் கொதித்து ஆவியாகிட்டால் என்னாகும்? அதான் போகல... இன்னைக்கு அங்கே போறானோ என்னவோ... அந்தப் பக்கமாய் போவான்.... அங்கே ஒரு தியேட்டர்ல, ஒரு ஏ படம் ரிலீஸ்...."

மாணவர்கள் சிரித்தார்கள். அந்த ஜோக்கை ரசித்ததுபோல், முதலில் பிரபுவும் சிரித்தான். பிறகு அந்தச் சிரிப்புபோல் எங்கேயோ மறைந்து விட்டான்.

முத்தையா, மாணவர்களை உஷார் படுத்தினான்.

"நாம் வெறும் மாணவர்கள். யாராவது நம்மைக் காலால் உதைச்சு, கையால் அணைத்தால், காலை மறந்துட்டு, கைகளை மட்டுமே பார்க்கிற சாதி.... இரண்டு நாளையில் நம்மோட போராட்டம் பிசுபிசுத்துப் போயிடுமுன்னு எதிர்பார்த்து ஏமாந்த கல்லூரி நிர்வாகம், ஏதோ சூழ்ச்சி செய்திருக்கு... இல்லையானால், பிரின்ஸ்பால் மகளிடம் இப்படி பொய்ச் செய்தி கொடுத்திருக்க வேண்டாம். அந்தப் பெண் இங்கே வந்தால் ரகளை நடக்குமுன்னு எதிர்பார்த்திருப்பாங்க..... இப்போ அது நடக்காததினால், வேற பிளான் போடுவாங்க..."

மாணவர்கள், முத்தையா மேலும் பேசுவதற்குக் காத்திருக்க வில்லை. தங்களை அறியாமலேயே தானாக முழங்கினார்கள். கையமர்த்தி அமைதிப்படுத்தப் போன முத்தையாவும், முதலில் அந்த முழக்கங்களுக்குக் கட்டுப்பட்டு, அப்புறம் அவனும் சேர்ந்து முழங்கினான். கோஷங்களால் கல்லூரிக் கதவு அதிர்வது போலிருந்தது. லத்திக் கம்புகள் சுழலப் போவதுபோல் தோன்றின.

"ஆசிரியர் நியமனத்தில் லஞ்சம் வாங்கும் டிரஸ்ட் போர்ட்"

"ஒழிக! ஒழிக!"

"மாணவர்களை சித்ரவதை செய்யும் போலீஸ்"

"ஒழிக..."

"அடிமைப் பிரின்ஸ்பால்"

"ஒழிக..."

"தமிழக அரசே! கல்லூரி நிர்வாகத்தை ஏற்றுக் கொள்."

ஒழிக! ஒழிக!

போலீஸ் அடக்குமுறை ஒழிக!

ஒழிக! ஒழிக!

கலைமகளை விலைமகளாக்கும் -

கல்லூரி டிரஸ்ட்

ஒழிக! ஒழிக!

எதிர்ப்புறச் சாலையில், கும்பலோடு கும்பலாக நின்ற அன்னம்மாள், தானும் கோஷம் போடலாமா என்பது போல் ஆவேசப்பட்டு நின்ற கணவனின் இடுப்பைப் பிராண்டியபடி 'ஏங்க... ஏன் இந்தப் பசங்க 'வாழ்க'ன்னு சொல்ல மாட்டேன்கறாங்க...' என்றாள். உடனே அவர், 'இவங்க சொல்றவங்கெல்லாம் ஒழிஞ்சால், அவங்க வாழ்வாங்கன்'னு அர்த்தம்' என்று வியாக்கியானம் செய்தார். 'இந்தப் பசங்களை எல்லாம் குருவியைச் சுடுறது மாதிரி சுட்டுத் தள்ளணும். நாட்ல வரவர...' என்று சொல்லிக் கொண்டு போன ஒரு வேடிக்கை வாசியை 'எதுக்காகத் தகராறு பண்றாங்கன்னு ஒனக்குத் தெரியுமாய்யா.... விஷயம் தெரியாமல் பேசுறது விஷம் மாதிரிப்பா' என்று அதட்டினார்.

இதற்குள், மாணவ முழக்கங்கள் வலுத்தன. 'காப்போம்... காப்போம்.... போலீஸ் லாக்கப்பில் வாடும் எங்கள் சகோதரர்களைக் காப்போம்' என்று மாணவர்கள் முழங்கியபோது, பல மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்டு, போலீஸ் நிலையம் இருந்த திசையை நோக்கிப் புறப்படப் போனார்கள். போலீஸார் அவர்களை வழிமறிப்பதுபோல், லத்திக் கம்புகளை குறுக்காக நீட்டினார்கள். அப்போது -

"லீவ் தெம்.... ஐ வில் டாக் டு மை பாய்ஸ்..."

திடீரென்று தங்கள் முன்னால் தோன்றிய உருவத்தைப் பார்த்து, மாணவர்கள் திகைத்தார்கள்.

வந்தவர், கல்லூரி முதல்வர், பேராசிரியர் பெருமாள் சாமி.

பேராசிரியர். பெருமாள்சாமி, சரியான உயரந்தான் என்றாலும், வயிறு விம்மிப் புடைத்து, வெளியே வெடிக்காமலே அப்படியே விழப் போவது போல், துருத்திக் கொண்டு இருக்காமல், தொங்கிக் கொண்டிருந்ததால், அவரைப் பார்ப்பதற்கு குட்டை மாதிரியே தெரியும். டை கட்டாமலேயே, கோட் போட்டிருந்தார். அதன் பாக்கெட்டுகளில், விதவிதமான காகிதக் குவியல்கள். இடுப்பில் பட்டும் படாமலும் சுற்றியிருந்த பேண்டின் விளிம்பிற்கு மேலே, அன்டிராயரின் மேல்முனை எட்டிப் பார்த்தது, ஏதோ, அவர் டபுள் நெட் பேண்ட் அணிந்திருப்பதாய்க் காட்டியது. தலையில் சுழித்த முடிபோல, முகமும் பல்வேறு ரூபங்களாகச் சுழித்துக் காட்டியது. சிவப்பு முகத்தில் பூத்த பலாச்சுளைக் கண்கள்.

கல்லூரி முதல்வரின் முகத்தை மட்டுமே பார்த்த மாணவர்கள், பிறகு தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பத்து வினாடிகளுக்கு அப்புறம், முத்தையாவைப் பார்த்தார்கள். அவனோ, கல்லூரி முதல்வர் மேல் போட்ட கண்களை எடுக்காமலேயே நின்றான். அவர், என்ன சொல்லப் போகிறார் என்பதை அறியும் முக அறிகுறியோடு, சாய்வாகப் பார்த்தான்.

பேராசிரியர். பெருமாள்சாமி, அங்குமிங்குமாக நின்ற போலீஸ், கல்லூரி அறிவிப்புப் பலகை, பூதாகரமாய் நின்ற மாணவர்கள் முதலிய இத்யாதிகளை நோட்டமாகப் பார்த்தார். பின்னர் 'தஞ்சாவூர் பொம்மையே ஒனக்கு பதவி ஒரு கேடா' என்ற வாசக கோஷத்தை,, அசல் பொம்மை மாதிரியே தலையை ஆட்டியபடி பார்த்தார். பின்னர், லேசாகச் சிரித்தபடி, 'எனக்கு தஞ்சாவூர் இல்லே... திருச்சி' என்றார்.

மாணவர்கள், சங்கடத்தோடு நெளிந்தார்கள். அதே சமயம், முன்புபோல் முகத்தைக் காட்டாமல் பின்னணி பாடும் அதே குரல், இப்போதும் 'தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் அதிக தூரமில்லே....' என்றது. மாணவர்கள், குரல் வந்த திக்கையே கோபமாகப் பார்த்த போது, அந்தப் பகுதியில் எல்லோரும் பால் குடிக்காத பூனைகள் மாதிரியே தெரிந்தார்கள். இக்கட்டான சமயத்தில் எக்காளமாகப் பேசியவனை தேடுவதுபோல் ஒரு சில மாணவர்கள், குரலுக்குரியோனை அங்குமிங்குமாகத் தேடியபோது, பேராசிரியர், வயிறு குலுங்கச் சிரித்தார். 'கீப் குயட் மை பாய்ஸ்... இன்டலிஜெண்ட் ரோக்ஸ் ஆர் பெட்டர் தென் இன்னோஸெண்ட் பூல்ஸ்' என்றார். பிறகு, இந்தக் காலத்து

மாணவர்களுக்கு, ஆங்கிலத்தில் ஒரு வரி பேசவோ அல்லது ஏசவோ தெரியாது என்ற தமது நீண்ட நாள் கருத்தை நினைவுபடுத்தி, 'சும்மா இருங்க.... பேசுனவன் மேலே எனக்குக் கோபம் இல்ல. ஏன்னா புத்திசாலித்தனமான போக்கிரி, அப்பாவித்தனமான முட்டாள்களைவிட பெட்டர்....' என்று மொழி பெயர்த்து விட்டு 'போக்கிரின்னு சும்மா கலாட்டாக்காரன் என்கிற அர்த்தத்துலதாம்பா சொன்னேன். தப்பா நினைச்சுக்காதிங்கோ.... எனக்கும் தெரியும்... ஒங்க ஏச்செல்லாம் வெறும் பேப்பர் புல்லட்ஸ்..." என்றார்.

என்றாலும், கல்லூரி முதல்வர், தஞ்சாவூர் கோஷத்தையே, தன்னை மறந்த அல்லது நினைத்த லயத்தில் பார்த்துக் கொண்டே நின்றபோது, ஒரு மாணவன், அந்த கோஷம் தாங்கிய கரும்பலகையை அழிக்க, பைக்குள் கைவிட்டு கைக்குட்டையை தேடினான். அவசர அவசரமாகத் தேடியும், ஒரு வேளை அப்படி அவசர அவசரமாக தேடியதாலோ என்னவோ, அது கிடைக்க நேரமாகும் என்றும், அந்த நேரம் வரைக்கும் கூட அந்த கோஷம் தங்கியிருப்பதைப் பொறுக்காதவன்போல், சற்றுக் குனிந்து பளபளப்பான தன் டெர்லின் சட்டை முனையால், கோஷத்தைக் கொலை செய்தான். திடீரென்று முத்தையாவும் 'ஒங்க மேல எங்களுக்குத் தனிப்பட்ட கோபம் கிடையாது ஸார்.... பிரின்ஸ்பால் பெருமாள்சாமியை பிடிக்கலதான்.... ஆனால் எகனாமிக்ஸ் புரொபஸர் பெருமாள்சாமியை நாங்க நினைத்தாலும் வெறுக்க முடியாது....' என்றான்.

பேராசிரியருக்கு, அழுகை வரும் போலிருந்தது. அவருக்கே அதன் காரணம் புரியவில்லை. ஏதோ பேசப் போனார். அதற்குள் நெஞ்செல்லாம் அன்பென்னும் நீர் சுரந்து, குளம் போல் வியாபித்து, அது கண்ணீராய் கண் மதகுகளை ஊடுருவி, கசியத் துவங்கயது. முகத்தை வேறுபுறமாய் திருப்பிக்கொண்டு, கைக்குட்டையை எடுத்தார். பிறகு, ஈரக் கைக்குட்டையுடன் மீண்டும் திரும்பி, மாணவர்களையே பார்த்தபடி, "ஐ அம் ஸாரி... பார் ஆல் தீஸ். நானும் எகனாமிக்ஸ்ல மட்டுந்தான் மாஸ்டராய் இருந்துட்டேன். ஒங்க பிரச்சினைகளை மாஸ்டர் செய்து தீர்க்க மறந்துட்டேன். ஆல் ரைட்... முத்தையா... நீயும் இன்னும் இரண்டு மூன்று பிரதிநிதிகளும் என் ரூமுக்கு வாங்க... பிரச்சினையைப் பேசித் தீர்த்துடலாம். லுக் போலீஸ்மேன்...! சும்மாவே நில்லுங்க" என்று கண்களை உருட்டியபடியே சொல்லிவிட்டு, கல்லூரிக்குள் நுழைந்தார்.

போலீஸ்காரர்கள், அவர் அடிக்கச் சொல்கிறாரா அல்லது பிடிக்கச் சொல்கிறாரா என்பது புரியாமல் விழித்தபோது, அதே அசரீரிக் குரல் அருபன், இப்போதும் தலையைக் காட்டாமல் "போலீஸ்காரங்க ஜாக்கிரதைங்கோ... பசங்க அடிச்சாலும், திருப்பி

அடிக்கக்கூடாதுங்கோ... நின்ன இடத்துலே நிக்கணுங்கோ... ஒங்களாலே அட்டி நிக்க முடியாதுங்கோ... பாவங்கோ... அதனால, ரோட்ல போய் வழக்கம்போல கார்க்கரனை விட்டுட்டு, 'மாமூலாய்' சைக்கிள்கரானை பிடியுங்கோ... அய்யய்யயோ... தோ பாருங்கோ கெய்வி... தெரு ஓரத்தையே வீடாக்கி.... ஆப்பம் சுட்டுக்கினு தேசத் துரோகம் பண்றாள்... உடனே வாரிக்கினு போங்கோ... இல்லன்னா, நாட்டோட சுதந்திரம் பறிபோயிடுங்கோ...." என்று ஒலித்தான்.

மாணவர்களில் ஒரு கூட்டம் சிரித்தது. இன்னொரு கூட்டம் உதடுகளைக் கடித்தது. முத்தையா, சிறிது கோபப்பட்டு "டோன்ட் பி ஸில்லி. அவங்க டீட்டிய அவங்க செய்யுறாங்க... இதில் என்ன இளக்காரம்...?" என்றான். சொன்னவனைத் தேடுபவன்போல், கூட்டத்தைத் துழாவினான். பிறகு, மூன்று மாணவப் பிரதி நிதிகளைக் கூட்டிக்கெண்டு, கல்லூரிக்குள் நுழைந்தவன், மாணவர்களைப் பார்த்துத் திரும்பி, "நாம் எல்லோரும் போக முடியாது என்பதால், நாங்க நாலு பேரும் போறோம். நம்மில் ஒருவன்மீது ஒரு துரும்பு விழுந்திருந்தாலும், அது எடுக்கப் படுவதற்கு முன்பு, நாங்க எந்த சமாதானத்திற்கும் இணங்க மாட்டோம். என்றான். உடனே, மாணவர்கள் கைதட்டினார்கள். ஒரு பையன் வாய் தவறி, 'அடிமைப் பிரின்ஸ்பால்' என்று உரக்கக் கத்தி, மறுபாதி கோஷத்தை மற்றவர்கள் சொல்லக் காத்திருப்பவன்போல், வாயை மூடாமல் நின்றான். மாணவ கூட்டமும் 'வாழ்க' என்றது.

முத்தையாவும், அவன் தோழர்களும், கல்லூரி 'கேம்பஸ்ஸிற்குள்' பாதி வழி வந்தபோது, எதிர்த்திசையில் இருந்து, கல்லூரி முதல்வரின் மகள் மேகலா, திரும்பிக் கொண்டிருந்தாள். அவர்களைப் பார்த்ததும், வேகமாக நடந்து, அவர்களை வழி மறிப்பதுபோல் நின்றுகொண்டு, முதல்வரின் அறையை மாறி மாறிப் பார்த்தபடியே, "அப்பா ஒங்ககிட்டே காம்ப்ரமைஸுக்கு வந்தது டிரஸ்ட் போர்ட் சேர்மனுக்குத் தெரியாது. 'நீங்க எப்படி பேசலாமுன்னு... இப்போ அவரும், இரண்டும் மெம்பர்களும் அப்பாகிட்டே, ஸாரி... பிரின்ஸ்பால்கிட்டே, சண்டை போடுறாங்க. பயங்கரமான ஆர்குமெண்ட் நடக்குது. அந்தப் பக்கமாய் ஒட்டுக் கேட்ட நான், ஆத்திரத்துல உள்ளே போய் எதுவும் பேசிடப் படாதேன்னு, வெளியே போறேன். பக்குவமாய் பார்த்து டேக்கிள் பண்ணுங்க..." என்றாள்.

முத்தையா, அவளை நன்றியோடு பார்த்தான். திடீரென்று புருவத்தைச் சுழித்துபின் 'பிரச்சினை தீர்ந்து போச்சுன்னு நினைச்சால்,

டிரஸ்ட் பூசாரிகள் குறுக்கே நிற்காங்களா.... பார்த்துடலாம்.' என்று மாணவர்களுக்கு சொல்வதுபோல், அவளுக்குச் சொன்னார்.

மேகலா, மாணவப் பிரதிநிதிகளைப் பார்த்தபடியே 'பராக்காக' நடந்தாள். அப்பாவை விட்டு விட்டுப்போக மனமில்லாதவளாய், கல்லூரிக்குள் ஒரு மரத்தின் வேரில் உட்கார்ந்து கொண்டாள்.

## 3

கல்லூரி முதல்வரின் அறைக்குள் முத்தையா குழுவினர் நுழையும் முன்னதாலேயே, குத்து வெட்டுபோல் உள்ளே வாக்குவாதம் பலத்துக் கேட்டது. வெளியறையில் கல்லூரி ஊழியர்கள், அதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மாணவத் தலைவர்கள் உள்ளே செல்லத் தயங்கியபடி, வெளியே நிதானித்தார்கள். டிரஸ்ட் போர்ட் சேர்மன் அப்பாவுவின் குரல், குரல்வளையே தெறிப்பதுபோல் ஒலித்தது. இதர உறுப்பினர்களின் குரல், விட்டு விட்டுக் கேட்டது. கல்லூரி முதல்வரின் குரலே கேட்கவில்லை. அப்பாவு, எகிறினார்.

"நீங்க ஆக்டிங் பிரின்ஸ்பால் என்கிறதை மறந்துட்டிங்க..... நாளைக்கே போர்டை கூட்டி, ஒங்களை ரிவர்ட் பண்ண அதிக நேரம் ஆகாது. எங்களைக் கேட்காமல் எப்படி ஸார் அந்தப் பசங்ககிட்ட போகலாம்? நாங்க எதுக்கு இருக்கோம்?"

இன்னொரு குரல்:

"நாங்க பொது வாழ்க்கையில இருக்கிறவங்க..... யார் யாரை எப்படி பழிவாங்கணுமுன்னு தெரிஞ்சவங்க... மாணவப் பயல்க, நம்ம காலுல விழப்போற சமயத்துல, நீங்க போய் அவங்க காலுல விழுந்திட்டிங்க... எங்க முகத்துல கரி பூசிட்டிங்க ஸார்... கடைசில, பசங்ககிட்டே தோத்துட்டிங்களேன்'னு, எங்க கட்சிக்காரங்க கேட்பாங்க... 'அண்ணன்' கேட்பாரு. அவ ங்கள லாக்கப்புல போடுறதுக்கு, நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா...?"

"இப்போ, நான் டிரஸ்ட் போர்ட் சேர்மன் என்கிற முறையிலே சொல்றதை கவனமாய்க் கேளுங்க. நீங்க பிரின்ஸ்பால். இன்னைக்கு இருப்பிங்க, நாளைக்கு போவீங்க... இப்போ இந்தத் துள்ளு துள்ளுற பசங்களும், இன்னும் ஒரு வருஷத்துலயோ அல்லது ரெண்டு வருஷத்துலயோ எங்கேயோ மறையப் போறவங்க. அதனால, நீங்க வரச்சொன்ன பசங்கள அப்படியே அனுப்பிடணும். முதல்ல, மன்னிப்பு

லெட்டர் எழுதிக் கொடுக்கு முன்னால, பேசுறதுக்கு எதுவும் இல்லன்னு சொல்லிடணும். மன்னிப்பு எழுதிக் கொடுத்தால், எக்ஸ்பெல்ஷனுக்குப் பதிலாய் டீஸியைக் கொடுத்துடலாம். ஆனால், எக்காரணத்தைக் கொண்டும் அவங்கள காலேஜ்ல சேத்துக்க முடியாது. என்ன ஆனாலும் சரி... எத்தனை பேர் செத்தாலும் சரி..."

உள்ளே நடப்பதை உன்னிப்பாகக் கேட்ட மாணவ தலைவர்கள், கடைசி வார்த்தையைக் கேட்க முடியாத ஆத்திரத்தில், திடுதிப்பென்று உள்ளே நுழைந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும், முதல்வருக்கு எதிராகப் போடப்பட்டிருந்த நாற்காலியில், இரண்டு கால்களையும் தூக்கி வைத்து, அவற்றை முதல்வரின் முன்னாலுள்ள மேஜைக்கு மேலே முக்காலடி உயரம் நீட்டி வைத்துக் கொண்டிருந்த டிரஸ்ட் போர்ட் சேர்மன் அப்பாவு, அவர்களை குதறப் போகிறவர்போல் பார்த்தார். அவருக்கு அறுபது வயது தேறும். வெடவெடத்த கால்கள். சைடு நாற்காலியில் இருந்த ஒரு 'அங்கிக்காரர்', தன் சுருட்டைத் தலையைத் தடவியபடியே சினிமா பாணியில் பார்த்தார். அவருக்கு அருகே இன்னொருவர். அவருக்கும் அறுபது ஆண்டுகள் வீணாகி இருக்கலாம். தலைக்கு மட்டும் 'டை' போட்டுவிட்டு, மீசைக்குப் பெயிண்ட் அடிக்க மறந்திருப்பினும், டிப்டாப்பாக ஆடை அணிந்திருந்தார். ஏதோ ஒரு ஆங்கில 'சேஸ்' புத்தகத்தின் பக்கங்களை 'சேஸ்' செய்து கொண்டிருந்தார்.

மாணவத் தலைவர்கள், இந்த மூவரையும் பார்த்துவிட்டு, கல்லூரி முதல்வரைப் பார்த்தார்கள். அவரோ, மேஜையை முட்டிக் கொண்டிருந்த சுழற் நாற்காலியில், மேலே ஓடும் மின்விசிறியைப் பார்த்தபடி, மல்லாந்து கிடந்தார். கல்லூரி முதல்வர், மாணவர் வந்திருப்பது தெரியாமலே இருக்கையில் புரண்டார். முத்தையா, நிதானமாகக் கேட்டான்.

"ஸார்... வரச்சொன்னீங்க.... வந்துட்டோம்."

முதல்வர், திடுக்கிட்டுப் பார்த்தார். பிறகு, நிதானமாக, மெல்ல மெல்ல நிமிராமல் ஒரேயடியாய் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர்களைப் பார்த்தபடி, "ஸாரி... நான் உங்களைக் கவனிக்கல... ப்ளீஸ்... பஸ்ட் டேக் யுவர் சீட்ஸ்" என்றார்.

எந்தப் பக்கம் உட்காருவது என்று மாணவர்கள் யோசித்தபோது, அப்பாவு, ஏற்கனவே தூக்கி வைத்திருந்த, தன் கால்களை, மேலும் தூக்கினார். இதனால் சம உயரத்தில் தரிசனம் தந்த அவர் கால்முட்டிக்கும் முதல்வரின் தலைக்கும் வித்தியாசம் தெரியவில்லை.. முத்தையா, 'சைடு' நாற்காலியில் உட்கார்ந்தான். மற்ற மாணவர்கள், அப்பாவுவிற்கு இருபுறமும் உட்கார்ந்தார்கள்.

ஒரு நிமிடம் யாரும் பேசவில்லை. ஒவ்வொருவரும் தத்தம் பின்னணிக்கு ஏற்ப, அந்த அறையில் உள்ள பொருட்களில் எதாவது ஒன்றின்மீது, தேர்ந்த பார்வையை வீசினார்கள். அங்கிக்காரர் 'கொடி தினத்திற்காக' வைத்திருந்த நன்கொடைப் பெட்டியைப் பார்த்தார். டிரஸ்ட் சேர்மன், தன் முட்டியையே பார்த்தார். டை அடித்தவர், மேஜை மீதிருந்த 'கிளாஸைப்' பார்த்தார். முத்தையா, முதல்வரையும், முதல்வர் முத்தையாவையும் பார்த்துக் கொண்டார்கள்.

மௌனம் கரைந்து, நிசப்தமாக ஓடிக் கொண்டிருந்த சமயம்.. முதல்வர், தலையை ஒரு தடவை ஆட்டியபடியே, முத்தையாவைப் பார்த்துக் கேட்டார்.

"பத்து நாளாய் போராடுறீங்க.... இதனால, ஒங்களுக்குப் படிப்பும், எங்களுக்கு நிம்மதியும் கெட்டுப் போயிட்டு. திஸ் இஸ் பேட். வெரி வெரி பேட். இப்போ என்ன செய்யணுமுன்னு நினைக்கிறீங்க....?"

முத்தையா, உறுதியோடு பதிலளித்தான்.

"என்ன நடந்தது, எப்படி நடந்ததுன்னு எல்லோருக்கும் தெரியும். மனச்சாட்சி உள்ளவர்களுக்குப் புரியும். மாணவர்களை ரத்தம் வரும்படி அடித்தது மட்டுமல்ல, இப்போ அந்த ரத்தத்தை, லாக்கப்புல போலீஸ் குடிக்குது... தாக்கினவங்க.... வெளியே குதிக்காங்க... தாக்கப்பட்டவங்க, உள்ளே தவிக்காங்க...."

"ஆல் ரைட்! பழைய கதை வேண்டாம். ஒங்க கோரிக்கைகளைச் சொல்லுங்க..."

இன்னொரு மாணவன் பேசினான்:

"சொல்லித் தெரியுற அளவுக்கு, சிக்கலான கோரிக்கை இல்ல... முதலில் லாக்கப்புல இருக்கிற எங்க சகோதரர்கள் விடுதலை ஆகணும். அவங்களைத் தாக்கியவங்க மேல், நீங்களே போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுக்கணும். எக்ஸ்பெல்ஷன் ஆர்டர்களை ரத்து செய்யணும். எல்லாவற்றிற்கும் மேல், இனிமேல் இந்த மாதிரி அநியாயமான நிகழ்ச்சிகள் நடக்காமல் பார்த்துக்கணும். இது நிஜமான குற்றவாளிகள் மேல நடவடிக்கை எடுத்தால் மட்டுமே முடியும்."

முதல்வர், அமைதியாகக் கேட்டார்.

"எக்ஸ்பெல்ஷன் ஆர்டர்களை ரத்து செய்துடுறேன். மாணவர்களை விடுதலை செய்ய ஏற்பாடு செய்யுறேன். நீங்க வகுப்புக்குத் திரும்பணும். மேற்கொண்டு இந்த விவகாரத்தை இப்படியே விட்டுடணும். என்ன சொல்றீங்க...?"

முத்தையா, ஏதோ சொல்லப் போனான். அதற்குள் சேர்மன் அப்பாவு, முதல்வரின் கண்களுக்கு எதிராக தன் விரல்களை ஆட்டியபடி எதிர் வழக்காடினார்.

"பிரின்ஸ்பால் ஸார்...! நிலைமை விபரீதமாய் போயிடும். நான் டிரஸ்ட் சேர்மனாய் இருக்கிற வரைக்கும், படிக்கதுக்குன்னு வராத பசங்களை, நீங்க திரும்பச் சேர்க்க முடியாது. கல்லூரி ஊழியரை அடித்த மாணவ ரௌடிகள் மேல் போலீஸ்தான் வழக்குப் போட்டிருக்கு.... அவங்க எடுக்கிற சட்டப்படியான நடவடிக்கையில் குறுக்கிட எனக்கோ, ஒங்களுக்கோ அதிகாரம் கிடையாது."

முத்தையா, அப்பாவுவைப் பார்க்காமல், முதல்வரைப் பார்த்தபடியே கேட்டான்.

"ஸார்.... சட்டம் பேசுற சேர்மனுக்குச் சொல்லுங்க.... இது, கல்லூரியின் அன்றாட நிர்வாகம் சம்பந்தமான விவகாரம். இதுல பேசவோ.. இப்போ.. இந்த அறையில இருக்கவோ, அவருக்கு சட்டப்படி உரிமை கிடையாது. நாங்க பேச வந்தது உங்களிடம்தான்...."

இன்னொரு மாணவப் பிரதிநிதியால், தன் குரலில் காரத்தை ஏற்றிப் பேசாமல் இருக்க முடியவில்லை.

"எங்களுக்கு இப்போ ஒன்று தெரியணும் ஸார்... நீங்க பிரின்ஸ்பாலா...? இவர் பிரின்ஸ்பாலா...? இவர் யார் ஸார் குறுக்கே பேச...?"

அப்பாவு, இடைமறித்தார்.

"என்னைப் பார்த்தா, யாருன்னு கேட்கிறே....? இது எங்க தாத்தாவோட காலேஜ். இவர் டெம்பரவரி பிரின்ஸ்பால்... நான் பெர்மனன்ட் பிரின்ஸ்பால்-மேக்கர். ஞாபகம் வச்சுக்கோ... யாரைப் பார்த்து யாருன்னு கேட்கிறே...?"

"தாத்தா காலத்துப் பேச்சு எதுக்கு ஸார்...?"

முத்தையா, தன் தோழனை அடக்கிவிட்டுப் பேசினான்.

"நீ சும்மா இருப்பா... இவர் வெண்ணெய் திரளும்போது தாழியை உடைக்கணுமுன்னே வந்திருக்கார். நாமும், அவர் மாதிரி நடக்கப்படாது. பிரின்ஸ்பால் ஸார்! இவரு, ஒங்களுக்குப் பெரியவராய் இருக்கலாம். ஆனால், எங்களுக்குப் பெரியவர் நீங்க ஒருத்தர்தான். இவருக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்ல. தயவுசெய்து முதலில் இவரையும், இவங்களையும் வெளியே போகச் சொல்லுங்க..."

அப்பாவு, திடீரென்று தான் உட்கார்ந்திருந்த நாற்காலியைக் கீழே தள்ளிப் போட்டுவிட்டு, எழுந்தார். வாயில் இருந்து வார்த்தைகள்

வராமல், வார்த்தைகளில் இருந்து வாயே வெளியேறுவதுபோல் பேசினார்.

"டேய் பொறுக்கிப் பசங்களா...! சோதாப் பசங்களா... யாரைப் பார்த்துடா வெளியேறச் சொல்றே...? இது எங்க தாத்தா கட்டுன காலேஜ்... ஒப்பன்க கட்டுன காலேஜ் இல்ல. முதல்ல... நீங்க வெளியே போங்கடா... சோதாப் பசங்களா..."

முத்தையாவை மீறி, இன்னொரு மாணவன் பேசினான்

"நாங்க பொறுக்கியாவே இருந்துட்டுப் போறோம். ஆனால், ஒங்களை மாதிரி, காலேஜ் பணத்தை பொறுக்கித் தின்னல. ஒரு கல்லூரி நிர்வாகி மாதிரி பேசாமல், அசல் சோமாறி மாதிரியா ஸார் பேசுறது...?"

அங்கிக்காரர், அப்பாவுவை தன் கைக்குள் அடக்கிப் பிடித்துக் கொண்டே, சவால் விட்டார்.

"இப்போ என்னடா பண்ணணுமுன்னு நினைக்கீங்க...? ஒங்க பசங்கள, இன்னும் போலீஸ்ல செமத்தையா உதைக்க வச்சு, ஒவ்வொருவனுக்கும் ரெண்டு வருஷமாவது வாங்கிக் கொடுக்கலன்னா பாரு... இல்லன்னா... அரசியலுல இருந்து விலகுறேன் பாரு...

முத்தையா, அமைதியாகக் கேட்டான்:

"அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், நாங்க சாகும் வரைக்கும் உண்ணாவிரதம் இருப்போம்..."

அப்பாவு, மகிழ்ச்சியோடு கூவினார்.

"பேஷாப் போச்சு.... அதைச் செய்யுங்கடா மொதல்லே.... இந்த காம்பவுண்டுக்குள்ளேயே, உண்ணாவிரதத்துல சாகிறவங்களை எரிச்சுடலாம்."

"எரிக்கிறதுக்கு முன்னால, நீயே எரிந்து போயிடுவே."

"இப்போ என்னடா செய்யணும்? காலேஜுன்னு நினைச்சிங்களா...? இல்ல ஒப்பனோட வீடுன்னு நினைச்சிங்களா...? பிரின்ஸ்பால் நினைக்கிறதை, அவரால முடிக்க முடியுமா? அப்புறம் இவருதான் உயிரோட இருக்க முடியுமா? எங்க அப்பன்க பிறக்குமுன்னாலேயே பிறந்த காலேஜ்டா இது. சீச்சீ... பொறுக்கிப் பசங்களைச் சேர்த்து, காலேஜே பொறுக்கித்தனமா மாறிட்டு."

முத்தையா, எழுந்து நிதானமாகக் கேட்டான்.

"மிஸ்டர். அப்பாவு! நாங்க சின்ன வயசு. பெரியவங்களை, மற்ற எதுக்கும் மதிக்காட்டாலும், வயதுக்காகவாவது மதிக்கிறவங்க.

வயதுக்கு மரியாதை கொடுக்கப்படாதுன்னு நாங்க நினைக்கும் படியாய் பேசாதிங்க..."

அப்பாவு, தன் மிரட்டலால், மாணவர்களின் சுருதி குறைவதாக நினைத்து, அந்த சுருதியையே இல்லாமல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் மேலும் அதட்டினார்.

"போடா பொறுக்கி... நீ மரியாதை கொடுத்தால்தான், எனக்கு அவமரியாதை.... ஒன் அப்பன், என்ன வேலை செய்யுறான்... நீ எப்படிப்பட்டவன்னு எனக்கு நல்லாவே தெரியும். கார்ப்பரேஷன் குப்பையை அள்ள வேண்டியவன், காலேஜுக்கு வந்தால், இப்படித்தான் ஆகும். ஒன்னை மாதிரி பசங்கள உயிரோட எரிச்சால்தான் காலேஜ் உருப்படும்."

முத்தையா, சட்டையை மடித்து விட்டபடியே-

"இந்தா பாருய்யா பெரிய மனுஷா.... நீ எங்களை எரிக்கிறது அப்புறம். இப்போ நீ உயிரோட திரும்ப முடியாது. நான், தெருவுல டிரக் வண்டில உட்கார்ந்து, கார்ப்பரேஷன் விளக்குல படிக்கிறவன். இவங்க மண்ணெண்ணெய் விளக்குல படிக்கிறவங்க... எங்களை உயிரோட எரித்துட்டு, நீ உயிரோட இருக்க முடியாது. நான் சொல்றதை நல்லா கேளு! என் தோழர்கள், லாக்கப்புல இருந்து, இதோ இந்த அறைக்குள் வருமுன்னாலே, ஒங்க மூன்று பேரையும் நாங்க வெளியே விடப்போறதில்ல... தைரியமிருந்தால் நடந்து பாரு பார்க்கலாம். அட்மிஷனுக்கும் அப்பாய்மென்டுக்கும் லஞ்சம் வாங்குற நீயா மிரட்டுறே...? ஊழல்காரன் மிரட்டும் போதுதான், சரித்திரம் அவனை மிரட்டும். ஒன்கிட்டே என்ன பேச்சு.... எங்கள் சகோதரர்கள், இந்த இடத்துக்கு வருமுன்னால, நீ எந்த இடத்துக்கும் போகமுடியாது. தைரியமிருந்தால் நட பார்க்கலாம்."

அப்பாவுக்கு மீசைதான் துடித்தது. வார்த்தைகள் வரவில்லை. எதிர்பாராத அதிர்ச்சி. அவரைப் போலவே, அதிர்ச்சியடைந்த மற்ற இரண்டு பேரும், தங்கள் அதிர்ச்சியை மறைக்கும் சார்பில், பெரிய மனித் தோரணையில், அப்பாவு மாணவர்களை அடித்து விடக் கூடாது என்ற பாவலாவில் அவரைப் பிடித்துக் கொண்டார்கள். ஆஜானுபாகுகளாய், மார்புகள் விம்மிப்புடைத்து நின்ற மாணவர்களைப் பார்த்ததும், பேசப்போன அங்கிக்காரர் வாய்க்குள்ளே, ஒரு டயலாக்கை முணுமுணுத்தார்.

கல்லூரி முதல்வர், ஒருவித ரசனையோடு எழுந்தார். அதற்குள் டெலிபோன் ஒலித்தது. அதை காதுகொடுத்துக் கேட்டுவிட்டு, 'தேங்க்யூ... தேங்க்யூ....' என்று சொல்லி வைத்துவிட்டு நிமிர்ந்தார். எல்லோரையும் பார்த்து, கையெடுத்துக் கும்பிட்டபடியே, "தயவு

செய்து எல்லோரும் உட்காருங்க.... நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில தொடர்பு உள்ளவங்க... இது காலேஜ்... கார்ப்பரேஷன் மைதானம் இல்ல.... மொதல்ல உட்காருங்க..." என்றார்.

எவரும் உட்காரவில்லை. முதல்வர், இப்போது, தன் பாட்டுக்குப் பேசினார்.

"ஆல் ரைட்... பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இருப்பது கல்வி. அந்தக் கல்வியே, ஒரு பிரச்சினையாகிடப்படாது. முத்தையா! மாணவர்களை விடுதலை செய்யும்படி, ஏற்கெனவே டெப்டி கமிஷனர்கிட்டே பேசிட்டேன். இப்போ போன் வந்துதே... அதுல... மாணவர்களை விடுதலை செய்திட்டதாய் இன்ஸ்பெக்டர் பேசினார். நான், எக்ஸ்பெல்ஷன் ஆர்டர்களையும் ரத்து செய்துடறேன். ஆனால், நீ மாணவர்களைத் தாக்குனவங்கமேல் நடவடிக்கை எடுக்கணுமுன்னு வற்புறுத்தப்படாது... இது ஒரு காம்ப்ரமைஸ்... தாக்குனவர், நம்ம சேர்மனோட சொந்தக்காரர். மிஸ்டர் அப்பாவுக்கு மதிப்பளித்து, தாக்குனவனை மன்னிச்சிடணும். ஓகே. இந்தாப்பா... ராஜதுரை... இப்படி வா..."

"முத்தையாவும் இதர மாணவர்களும் யோசித்துக் கொண்டிருந்த போது, ராஜதுரை என்ற கல்லூரி ஊழியர் வந்து, முதல்வரின் முகத்தைப் பார்த்தார். முதல்வர், "நான் சொல்றதை எடு... தி எக்ஸ்பெல்ஷன் ஆர்டர்ஸ்..."

ராஜதுரை, பயபக்தியோடு எழுதப்போனபோது, அப்பாவு அதட்டினார்.

"டேய் ராஜதுரை..... பிரின்ஸ்பால் சொல்றதை எடுக்காதடா.... அவரு என்ன செய்துடுவார்னு பார்த்துடலாம்..."

பயந்தாங்கொள்ளி ராஜதுரை, படு பயந்தாங்கொள்ளியாகி, நடுங்கினான். முதல்வரும் அதட்டினார்.

"சொல்றதை எடுப்பா... எடுக்கிறியா...? இல்ல எடுத்த எடுப்பிலேயே சஸ்பெண்ட் செய்யணுமா?"

அப்பாவு, குதித்தார்.

"எடுக்காதடா... அப்படி எடுத்தே..... நீ நிச்சயம் டிஸ்மிஸ் ஆவே..... ஒன்னை வேலையில் வைத்தவன் நானா? இவரா? இவர் இன்னைக்கு இருப்பார், நாளைக்கே போவார். என்ன சொன்னாலும் எடுக்கப் படாது. இது என்னோட உத்தரவு..."

சாதுவான பேராசிரியர் பெருமாள்சாமி, இப்போது காடு தாங்காத சினத்தோடு கத்தினார்.

"மிஸ்டர் அப்பாவு...! இப்போ நீங்க பார்க்கிறது வேற மாதிரியான பிரின்ஸ்பால். ஆமாம் ஸார்... எந்த ஒரு டேலண்டட் மனிதனும், தன் துறையில் உச்சிக்கு வரணுமுன்னு நினைப்பான். ஒரு வக்கீலுக்கு, தான் மிகப்பெரிய கிரிமினல் லாயராய் பெயர் வாங்கணுமுன்னு ஒரு லட்சியம் ஏற்படுவது இயற்கை. இந்த லட்சியத்தை எட்டுறதுக்காக, அவர் அப்பாவியை கிரிமினலாயும், கிரிமினலை அப்பாவியாவும் நிரூபிக்கலாம். ஒரு இன்ஸ்பெக்டர், தான் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் சமர்த்தர் என்று பெயர் வாங்க நினைக்கலாம். இந்த இயற்கையான நினைப்பில, பல செயற்கையான சித்ரவதைகள் நடக்கலாம். நல்லதோ கெட்டதோ ஏதோ ஒரு குறிக்கோளைக் கொண்டவர்கள், அதுக்குக் குறுக்கே நிற்கும் நல்லதையும் கெட்டதாய் மாற்றுவதுதான், நாம் இப்போ பார்க்கிற சமாச்சாரங்கள். இவர்களைப் போல எனக்கும், கல்வித்துறையில் - குறைந்த பட்சம் பிரின்ஸ்பாலாய் வரணுமுன்னு ஆசைப்பட்டேன். அதுக்காக, ஒங்க தயவை நாடி, அப்பாவி மாணவப் பூக்களை போலீஸ் காலுல அர்ச்சனை பண்ணிட்டேன். ஐ ஆம் ஸாரி... அப்புறம் நீங்க என்னை வேணுமுன்னாலும் பண்ணுங்கோ... ஆனால், இப்போ, நான் பிரின்ஸ்பால்.... நானே பிரின்ஸ்பால்.... சட்டத்துக்கு உட்பட்டு, நான் போட்ட ஆர்டரை, ரத்து செய்ய உனக்கு உரிமை உண்டு... நீங்க ரகளை செய்தால், போலீஸிற்கும் புகார் செய்ய கடமை உண்டு. டேய் துரை... டிக்டேஷனை எடுக்கிறியா...? இல்ல ஒன்னை எடுக்கணுமா...?"

ராஜதுரை, அப்பாவுவை ஒடுங்கியபடியே பார்த்தான். சேர்மன், நாளைக்குத்தான் டிஸ்மிஸ் செய்வார். இவர் இப்பவே செய்யலாம். ஆகையால், நாளை.... நாளை என்னாதே....

பேராசிரியர் பெருமாள்சாமி சொல்வதையெல்லாம், ராஜதுரை குறித்துக் கொண்டிருந்தபோது, அப்பாவு, அங்கிக்காரரையும், டை அடித்தவரையும் பார்த்து, "வாங்க... இவரு இங்கே இருக்கது வரைக்கும், நமக்கு இங்கே வேலையில்ல. வாரோம் மிஸ்டர் ஆக்டிங் பிரின்ஸ்பால்..." என்று கேவுவதுபோல் கூவினார். பிறகு, டிரஸ்ட் சகாக்களோடு வெளியேறினார்.

எக்ஸ்பெல்ஷனை ரத்து செய்யும் புதிய ஆர்டர்கள் டைப் அடிக்கப்பட்டு கையெழுத்தானதும், முதல்வர் ஒரு பிரதியை, முத்தையாவிடம் நீட்டியபடி, "மாணவங்கள வகுப்புக்குத் திரும்பச் சொல். இனிமேல் ஒழுங்காய் நடக்காட்டால் ஒங்களையும்..." என்று கோபமாகச் சொல்லிவிட்டு, பிறகு, அது அப்பாவு அண்ட கோவிடம் காட்ட முடியாத கோபம், இப்படி தன்னையறியாமலே தன்னை இயக்குவதைப் புரிந்து கொண்டவர்போல் மாணவர் களைத் தாபமாகப் பார்த்தார்.

மாணவத் தலைவர்கள் நால்வரின் கரங்களும், தோள்களும் தாமாகத் துடித்தன. தங்கள் தரப்பிலும் ஒரு தவறு நேர்ந்து,

அதனால்தான் முதல்வர், இப்போது பதவியையே பணயமாக வைத்து, டிரஸ்ட் போர்ட் சேர்மனிடம் சிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமோ என்பது மாதிரி, குற்றவுணர்வில் தவித்தார்கள். முத்தையா, மெய்யாட குரலாடப் பேசினான்.

"விய் ஆர் ஸாரி ஸார்...! ஒங்களை எப்போதும் மறக்க மாட்டோம் ஸார். ஒங்களுக்கோ அல்லது ஒங்க பதவிக்கோ ஆபத்து வந்தால், நாங்க உயிரைக் கொடுத்தாவது காப்போம். இது சத்தியம் ஸார்..."

பேராசிரியர் பெருமாள்சாமி, அசல் ஆசிரியராக மாறி, யதார்த்தமாகப் பேசினார்.

"கவலப்படாதிங்க, மை பாய்ஸ். அப்பாவு என்னை ஆக்டிங் பிரின்ஸ்பால்னு அழைச்சதுல இருந்து, நிச்சயமாய் என்னை ரிவர்ட் பண்ணுவாங்க. அவங்க சொல்றபடி ஆக்ட் செய்து, பெர்மனன்ட் பிரின்ஸ்பாலாய் மாறுவதைவிட, ரிவர்ஷன்ல வெறும் பேராசிரியராய்ப் போறதுல... ஐ அம் நாட் அன்ஹேப்பி. ஏன்னா, ஒங்களுக்கு பப்ளிக் பைனான்ஸ் நடத்த வேண்டிய நான், இப்போ காலேஜிக்கு எவ்வளவு கலர் சாக்பீஸ் தேவை.... எத்தனை இங்க் பாட்டல் தேவைன்னு கணக்குப் போடுறேன். வரிவிதிப்பு, பேங்கிங் பற்றி பாடம் நடத்த வேண்டிய நான், இந்தப் பசங்க ஏப்பம் விடுற கட்டிட நிதி வசூல் புத்தகத்துல கையெழுத்துப் போட்டபடி இருக்கேன். இந்தக் காலத்துல, காலேஜ்ல... அதுவும் தனியார் காலேஜ்ல பிரின்ஸ்பாலாய் இருக்கிறதைவிட, தெருவுல போண்டா சுட்டு விற்கலாம். ஓ.கே. மை பாய்ஸ்."

முத்தையாவும், அவன் சகாக்களும் முதல்வரின் முகத்தையே, மெய்மறந்து பார்த்தார்கள். பிறகு நடக்க மனமில்லாமல் நடக்கத் துவங்கியபோது, முதல்வர் குறுக்கிட்டு, 'ஒன் மினிட். பைனல் அட்வைஸ்... அப்பாவு பழி வாங்குறதுல நிஜமான மனுஷன். பார்த்து நடந்துக்கங்கோ... என்னாலும் பாதுகாப்புத் தரமுடியாது. ஏன்னா, இன்னும் இந்த சீட்ல நான் இருக்கப்போவது... டோண்ட் ஒர்ரி பாய்ஸ். விய் வில் மீட் இன் கிளாஸஸ்" என்றார்.

முத்தையா, தன்னையறியாமலே தாவி, முதல்வரின் கரங்களை எடுத்து, தன் முகத்தில் ஒற்றிக் கொண்டான். பிறகு தன்னைக் கட்டுப்படுத்துவதில் தோல்வி காண விரும்பாமல், வேகமாக வெளியேறினான். அவனை சகாக்கள் பின் தொடர்ந்தார்கள்.

இவர்களைப் பார்த்ததுமே, விஷயத்தைக் கேள்விப்பட்டிருந்த மாணவர்கள், ஆர்ப்பரித்தார்கள். ஆனந்தப் பள்ளுப் பாடினார்கள். அந்த மாணவக் கூட்டத்தின் தோள்களில் போலீஸ் லாக்கப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்கள்... சுகக் கேடான மேனியில்

சோகமான புன்முறுவல் பூக்க... அவர்களும் கரங்களை ஆட்டுவது போலிருந்தது. வாழ்க கோஷங்கள் வான்போல் முழங்கின.

பாதி வழியில், மரத்தின் வேரிலேயே இன்னமும் உட்கார்ந்திருந்த மேகலா, முத்தையா கோஷ்டியைப் பார்த்து, கையைத் தட்டி, அதிலிருந்த மண்ணை உதறிவிட்டு, புடவையை இழுத்துவிட்டு, அவர்களை எதிர்கொண்டு அழைப்பதுபோல நடந்து, பின்னர் அவர்களோடு சேர்ந்து நடந்தாள். முத்தையாவும், அவன் தோழர்களும், அவளிடம் ஒருவர் மாறி ஒருவராக, நடந்த விவரங்களை ஒப்பித்தார்கள்.

எல்லா மாணவர்களும் வகுப்புகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். நாளைக்குப் போகலாம் என்பதுபோல், சிலர் வீடுகளுக்குப் பிய்த்துக் கொள்ளப் போனபோது, முத்தையாவும் 'மற்றும் பலரும்' அவர்களை வழிமறித்து, வழிப்படுத்தினார்கள். விசில் சத்தம், அணில் போல் முழங்க, தெம்மாங்குப் பாட்டோடு, டிவிஸ்ட் ஆட்டத்தோடு, மாணவர்கள் கும்பல் கும்பலாகப் போனார்கள்.

## 4

ஒரு மாத காலம் உருண்டோடியது.

கல்லூரி உருப்படியாக நடந்தது. பேராசிரியர் பெருமாள்சாமி, ரிவர்ஷனை எதிர்பார்த்து எதிர்பார்த்து, அப்புறம் அதை மறந்துவிட்ட சமயம். கல்லூரி அமைதியின் உருவகமாய் மாறியதில், அனைவருக்கும் மகிழ்ச்சி...

அன்று வெள்ளிக்கிழமை.

முத்தையா, வழக்கம்போல் கல்லூரிக்குள் நுழைந்தவன், திடுக்கிட்டான். மாணவர்களும், ஆசிரியர்களும் கும்பல் கும்பலாகக் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். லைப்ரேரியன், நூலகத்தைத் திறக்காமல் வெளியே நின்றார். கல்லூரி பியூன்களில் சிலர், யார் யார், யார் யாருடன் பேசுகிறார்கள் என்பதை நோட்டம் பார்ப்பதுபோல், காக்கா மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருசிலர் கடுவன் பூனைபோல், கண்களை விட்டு விட்டு விழித்தார்கள்.

முத்தையாவைப் பார்த்ததும், ஒரு கும்பல் அவனருகே ஓடி வந்தது.

"நம்மோட பிரின்ஸ்பாலை, டிரஸ்ட் போர்ட் சஸ்பெண்ட் செய்திருக்காம்...."

கல்லூரி நிர்வாகச் சக்கரத்தில் காலூன்றியபடி அந்தச் சக்கரம் இயல்பாகச் சுழலப் போகும்போது ஒதுங்கிக் கொள்ளாமல், சக்கரத்தையே வக்கரமாக்கி ஆடிய அப்பாவுக் குழுவினர், 'ஆடி அடங்கி' விட்டதாக நினைத்தபோது, முதல்வர் பெருமாள்சாமி சஸ்பென்டானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சில நிமிடம் பேச முடியாத பேரதிர்ச்சியாக இருந்தது. நடந்ததை நம்ப முடியாதது போல், முத்தையா, தன் மோவாயை அழுத்திக் கொண்டிருந்தபோது, 'அடங்கி ஆடும்' அப்பாவு, தன் அங்கிக்கார அரசியல்வாதியுடன் கல்லூரிக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

அப்போது, யாருக்கோ இழவெடுப்பதுபோல் அல்லது அவரை வரவேற்பதுபோல், கல்லூரியின் மின்சார மணி ஒப்பாரியிட்டது. மாணவர்கள், வகுப்புகளுக்குப் போவதா வேண்டாமா என்பதுபோல் முத்தையாவைப் பார்த்தார்கள். பல ஆசிரியர்கள், மாணவர்களோடு சங்கமமாகி, மாணவரெது ஆசிரியரெது என்று கண்டுபிடிக்க முடியாதபடி நின்றார்கள். வகுப்பறைகளின் விளிம்புகளில் நின்ற ஒரு சில ஆசிரியர்கள், அப்பாவுவைப் பார்த்ததும் வகுப்புகளுக்குள் கிடந்த நாற்காலிகளுக்கு சொல்லிக் கொடுக்க ஓடினார்கள். லைப்ரேரியன், நூலகப் பூட்டை, அவசரத்தில் வேறு சாவியைப் போட்டுக் குடைந்தார். சிறுபான்மை எண்ணிக்கையுள்ள ஆசிரியர்கள் மாணவர்களை நோக்கி, "பெல் அடித்தாச்சுல்ல.... ஒய் நாட் யூ கோ டு கிளாஸஸ்" என்றார்கள். அப்பாவு புன்னகைக்கிறார். அதுபோதும், அதுக்காக எதுவும் செய்யலாம்.

அரசியல்வாதி உறுப்பினரின் அங்கி, வேறு புறத்தில் இருந்த தன் இடுப்பில் உரச, ஏதோ சேலை முந்தானை தொங்கிக் கொண்டிருப்பதுபோல் தோற்றம் காட்டிய அப்பாவு, அட்டகாசமான நடையுடன், கண்களைச் சுற்றவிட்டார். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தில் தீவிரப் பங்கெடுத்து, பல சிறைச் சாலைகளைப் பார்த்த ஆசிரியர்கள், அங்கே நிற்பதைப் பார்த்தார். மாணவர் சங்கத்தின் தலைவர்களைப் பார்த்தார். 'கோணிக்காரன் மகன்' முத்தையாவைப் பார்த்தார். மௌனமாக இருப்பது என்ற மயான வைராக்கியத்தை உடைத்தபடியே, ஏதோ பேசப் போனார். அப்போது அவரைப் பார்த்து பல்லிளித்த 'கோ டு கிளாஸஸ்' ஆசிரியர்களால் உற்சாகப்பட்டு, சொல் விரிக்கத் துவங்கினார்.

"எந்த ஆசிரியராவது இன்னும் ரெண்டு நிமிடத்துல கிளாஸுக்குப் போகாட்டால், அப்புறம் என்மேல வருத்தப்படக் கூடாது. நான், ரவுடிக்கு ரவுடி... கேடிக்குக் கேடி... பொறுக்கிக்குப் பொறுக்கி."

'படித்தவனுக்குப் படித்தவன்' என்று சொல்ல முடியாத அப்பாவு, கல்லூரி அலுவலகத்தை நோக்கி விரைந்தபடியே, தன் சொல்லுக்கு

மதிப்பிருக்கிறதா என்பதை அறிய, பல தடவைத் திரும்பிப் பார்த்தார். ஒரு ஆசிரியரும், ஒரு அடி கூட நகரவில்லை. அதே சமயம், 'நீ யாருய்யா எங்களைக் கேட்க?' என்று கேட்கும் துணிச்சலும் இல்லாமல், முத்தையாவையும், அப்பாவுவையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.'

பாம்பு, தலையை பின்னால் வைத்துக்கொண்டு, பொந்துக்குள் முதலில் வாலை நுழைப்பதுபோல், அப்பாவுவும்அங்கியும், மாணவர்களைப் பார்த்தபடியே, முதல்வர் அறைக்குள், பின்நோக்கி நடந்தார்கள்.

முத்தையாவிற்குள் ஒரு முடிவு ஏற்பட்டது. அந்த முடிவு, ஆட்டோரிக்ஷா காலில் ஏறி வீட்டில் காலொடிந்து கிடக்கும் தந்தையை மறக்க வைத்தது. அரைப்படி அரிசிக்கு அல்லாடும் அம்மாவை, அடிமன சமாதிக்குள் வைத்தது. முழுக்க முழுக்க அவனுள்ளே ஒரு ஆவேசம். அப்பாவு, தனக்குத் தகுதியில்லாத ஒரு அறைக்குள், 'ஆனந்தக் கூத்தாடிம செல்வதைப் பார்த்ததும், அவனுக்கு 'ஊழி நடனம்' ஆடப்போவது போன்ற கோபாவேசம். கரங்கள் முஷ்டிகளாகும் போதே, வார்த்தைகள் கர்ஜனைகளாயின.

“நமக்காகப் போராடி... நம்மாலேயே சஸ்பென்டாகி இருக்கும் நம் முதல்வருக்காக நாம் போராடித்தான் ஆகவேண்டும். கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும். முதல்வர் மீது விழுகிற அடி, நம்மீது விழப்போகும் பேரிடி. வாருங்கள்... உள்ளே போன அப்பாவு, வெளியே போக முடியாதபடி முற்றுகை செய்வோம். வாருங்கள், சோதரர்களே வாருங்கள். அடாவடிக்கு, பதில் பதிலடிதான்.”

“ஒழிக... ஒழிக...!”

“அடாவடி அப்பாவு ஒழிக.....!”

மாணவர்கள், கோஷக் கூச்சலோடு, கல்லூரி முதல்வர் அறையை நோக்கி நகர்ந்தபடியே, மூன்று மூன்று பேராய் அணிவகுக்கப் போனார்கள். அந்த வரிசை அணிக்கு கருட வியூகம் கொடுப்பதுபோல், ஆசிரியர்கள் அந்தப் பறவையின் சிறகுபோல் இருபக்கமும் தங்களை அறியாமலே நின்றார்கள்.

கூட்டம் முன்னேறப்போன வேளை... முகங்கள் ரத்தக் கட்டிகளான நேரம். லைப்ரேரியனும், நிலைமையின் உணர்ச்சிக்கு வயப்பட்டு, நூலகக் கட்டிடத்தை மூடப்போன சமயம்; ஒரு சில கல்லூரி ஊழியர்கள், நிலைமையை அப்பாவு முன்னால் பணிவன்புடன் சமர்ப்பிப்பதற்காக ஓடிக் கொண்டிருந்த கட்டம். மாணவர்களை அடித்துவிட்டு, அதற்கான நற்பலனை அனுபவிக்கும் ஹெட் கிளார்க், சில லோகல் ரௌடிகளோடு, ஆடிட்டோரியத்திற்குள் சோடா பாட்டில்களைப் புரட்டிக் கொண்டிருந்த வேளை-

நான்கைந்து முடிநீண்ட மாணவப் பேர்வழிகளோடு கூட்டத்தை வழிமறிப்பதுபோல், பிரபு முன்னால் வந்து நின்றான். எங்கிருந்து வந்தான் என்பது, அந்த அமளியில் எவருக்கும் தெரியாது. முத்தையாவைப் பார்த்து வேதம் ஓதினான்.

"முத்தையா, நாம் இந்தச் சந்தர்ப்பத்துல போராட்டத்தை துவக்குறது எனக்கு நல்லதாப் படல. பிரின்ஸ்பால் சஸ்பெண்ட் ஆகியிருக்கார். சஸ்பென்ஷன் ஒரு தண்டனை இல்லே. இனிமேல்தான், அவர்மேல் 'சார்ஜஸ்' பிரேம் பண்ணுவாங்க. இந்தக் கட்டத்துல நாம் போராடினால், பேராசிரியர். பெருமாள்சாமி, மாணவர்களைத் தூண்டிவிட்டு, ரகளை செய்தார்னு இன்னொரு குற்றச்சாட்டையும் அபாண்டமாய் சுமத்துவாங்க. நம் பிரின்ஸ்பாலை நாமே காட்டிக் கொடுப்பதாய் ஆகிடும். அதோட, நம்மோட போராட்டத்தால், பிரின்ஸ்பாலுக்கு 'சிம்பதெட்டிக்காய்' இருக்கக்கூடிய யூனிவர்சிட்டி சிண்டிகேட்டும், கவர்மென்டும் அவர்மேல கோபப்படலாம். யாருக்காக நாம் போராடுறோமோ, அவரோட நன்மையையும் நாம் கவனிக்கணும். நல்லா யோசித்துப் போராடணும்."

பிரபு, சொல்வதில் நியாயம் இருக்குமோ என்பதுபோல், ஒரு சில மாணவத் தலைவர்கள் நிதானித்தார்கள். அணிவகுப்பின் அடியில் இருந்த மாணவர்களுக்கு பிரபு பேசியது காதில் விழவில்லை. 'எவண்டா இவன்.... பூனை மாதிரி குறுக்கே...' என்று கத்தினார்கள். அந்தக் கத்தலில் சக்தியெடுத்தவன்போல், முத்தையா, ஆணித்தரமாகப் பேசினான்.

"எந்தப் போராட்டத்தையும் யோசித்து நடத்த வேண்டியதுதான். ஆனால், யோசனையே ஒரு போராட்டமாகி விடக்கூடாது. கண்முன்னால் நடந்த அக்கிரமத்தைக் கண்டிக்காமல், கண்ணை மூடிக்கொண்டு யோசிப்பது கண்மூடித்தனம். நாம் போராடப் போவது, நம் சக்தி மீதும், நீதியின் மீதும் நம்பிக்கை வைத்துத்தான். சிண்டிகேட்டின் இன்டிமேஷனைப் பற்றியோ, அரசாங்கத்தின் தயவைப் பற்றியோ கவலைப்படக்கூடாது. சரி நீயும் இந்தப் பக்கம் வா. நியாயம் வெளிப்படும் வரை, அப்பாவு வெளிப்பட முடியாமல் செய்வோம்."

கூட்டம் லேசாக நகரப்போனது. பிரபுவும் நகர்ந்து கொண்டே பேசினான்.

"இந்த முடிவுக்கு முடிவு கட்டவேண்டியது என்னோட கடமை. இதே இந்தப் பேராசிரியர். பெருமாள்சாமி, மாணவர்களைப் போலீஸில் பிடித்துக் கொடுத்தவர். அவங்க போலீஸ்ல அடிபடும்போது, சுழல் நாற்காலியில் இருந்து தாளலயத்தோடு சுற்றியவர். பல மாணவர்களை எக்ஸ்பெல் செய்து டென்ஷன் கொடுத்தவர். டிரஸ்ட் போர்ட் அக்கிரமங்களுக்கு எல்லாம் ஐடியா கொடுத்தவர்."

முத்தையா, பதிலளித்தான்.

"அவர் கடைசியாய் செய்த காரியத்தையும் சொல்லு. அதைச் சொல்ல ஏன் மனசு வரல?"

"அவர் கடைசியாய் செய்தது, கல்லூரிப் பணத்தை மோசடி செய்ததுதான்."

"பிரபு... ஒன் வாய் அழுகிடும். பேராசிரியர். பெருமாள்சாமி, பணத்தை மோசடி செய்தார்னு சொல்ற எவனும் உருப்பட மாட்டான்."

முத்தையா, சிரமப்பட்டு வாய்க்கு வந்த சில வன்முறை வார்த்தைகளை, நெஞ்சுக்குள் திருப்பி விட்டான். இந்தச் சமயத்தில் மாணவ அணிவகுப்புக் கலைந்து, மாணவர்கள், விவாதம் நடந்த இடத்தருகே, முட்டை வடிவமாய் நின்றார்கள். இதற்குள் அப்பாவு, தமது அரசியல் தோழருடன், முதல்வரின் அறைக்கு வெளியே வந்து, வராண்டாவில் உள்ள சிமெண்ட் தூணில் சாய்ந்து, கையிரண்டையும் கட்டியபடி சாய்ந்து பார்த்தார். அவர் தொலைவுப் பார்வை, படிப் படியாகக் குறுகிக் கொண்டிருந்தது. அந்தப் பார்வையே சத்தம் போட்டதுபோல் திடீரென்று, போலீஸ்காரர்கள் 'வேனில்' இருந்து குதித்தார்கள். லத்திக் கம்புகளோடு, மாணவர் கூட்டத்திற்கு முன்னால் வந்து நின்றார்கள்.

பிரபுவிற்கு வீரம் வந்தது. அப்பாவுக்கு நிமிர்வு வந்தது. பிரபு இப்போது பௌவியத்தை விட்டுவிட்டு, பயங்கரமாகக் கத்தினான்.

"டேய் முத்தையா...! நீ மாணவர்களைப் பகடைக் காய்களாய் யூஸ் பண்ண முடியாது. இந்த அப்பாவிகளோட படிப்பைப் கெடுக்கிறதைப் பார்த்துக்கொண்டு, நான் சும்மா நிற்கமுடியாது."

கூட்டத்தில் உருவமில்லா ஒரு குரல், ஒரு மாதத்திற்கு முன்பு பேசிய அதே குரல் ஒலித்தது.

"அப்படின்னா... உங்கார்ந்து தூங்கு. இல்லன்னா போயிடு ராசா..."

"டோண்ட் பீ ஸ்டுப்பிட்... முத்தையா! நீ மாணவர்களோட எதிர்காலத்துல விளையாடுறதை, விளையாட்டுத்தனமாய் எடுத்துக்க முடியாது."

அதே உருவமில்லா குரல் பேசியது.

"அய்யய்யோ... அப்பாவு கார்ல இறங்குன இந்த ஓநாயோட கண்ணீரைத் துடையுங்கோ. இல்லன்னா, அதோட கண்ணீர் வெள்ளமாகி, நம்மள முழுங்கிடும்."

முத்தையா, திட்டவட்டமானான்.

"மன்னிக்கணும் பிரபு. உன் தனிப்பட்ட விருப்பம் முக்கியம் இல்ல. இந்த மாணவப் பட்டாளத்தோட ஒட்டு மொத்தமான விருப்பமே முக்கியம்."

"நானும் எலெக்ஷன்ல, நானூறு ஓட்டு வாங்கினவன்."

அதே அசரீரிக் குரல்:

"அதுல கூட, இருநூறு கள்ள ஓட்டுடா...."

முத்தையா, இடைமறித்தான்.

"தயவுசெய்து விவகாரத்திற்கு வெளியே யாரும் போகக்கூடாது. மாணவத் தோழர்களே! சொல்லுங்கள். வகுப்புக்குத் திரும்பணுமா? போலீஸ்காரர்களுக்கும் டிரஸ்ட் போர்டுக்கும் பயந்து, வகுப்புப் பெட்டிகளுக்குள் பெட்டிப் பாம்பாய் பதுங்கணுமா? அல்லது சீறும் நாகங்களாய் மாறணுமா? சொல்லுங்கள் தோழர்களே...."

மாணவர்கள், தனித்தும் சேர்ந்தும் பதிலளித்தார்கள்.

"பேராசிரியர். பெருமாள்சாமி, மீண்டும் பதவிக்கு வரும்வரை, நமக்கு வகுப்புகள் சிறைச்சாலைகள். அக்கிரமத்திற்கு முடிவு கட்டுவோம். அக்கிரமக்காரனை முதலாவதும், அக்கிரமத்தை இரண்டாவதும் கவனிப்போம்."

பிரபு, கொடிக்கம்பம் இருக்கிற சுழல் மேடையில் ஏறிக் கத்தினான்.

"முடியாது... முடியவே முடியாது. இது டிரஸ்ட் போர்டுக்கும் பெருமாள்சாமிக்கும் உள்ள ஒரு விவகாரம். காலேஸ் பணத்தை, அவர் கையாடி இருக்கார். இவங்க ஆக்ஷன் எடுத்திருக்காங்க. ஊழலுக்கு ஒத்துப் போகமுடியாது. கல்லூரிப் பணத்துல மகளுக்கு நகை செய்து போட்டிருக்கார்."

முத்தையாவால், கத்தாமல் இருக்க முடியவில்லை.

"ரொம்ப நன்றி பிரபு. டிரஸ்ட்போர்டே இன்னும் என்னென்ன குற்றச் சாட்டுகளை சுமத்தலாமுன்னு தீர்மானிக்கும் முன்னால, நீ அவங்களுக்கு ஐடியா கொடுத்து, ஒன்னோட துரோகப் புத்தியைக் காட்டிக் கொடுத்ததற்கு நன்றி. இப்போ நீ எங்களுக்கு விலகி, வழி விடப் போறியா? விலக்கணுமா? இரண்டு நிமிடம் அவகாசம்..."

வயதான தமிழாசிரியர் ராமய்யா, பிரபுவின் முன்னால் வந்து "அடே மாணவப் பதரே! சரியான குடிலன்டா நீ...." என்றார். போலீஸ்காரர்கள் அவரை முறைத்தார்கள். யூ.ஜி.ஸி. சம்பளப் போராட்டத்திலும், எஸ்.ஐ.டி. கல்லூரிப் போராட்டத்துக்காகவும்,

வேலூருக்கும் சென்ட்ரலுக்கும் போயிருந்த அந்த வயதான ஆசானும், அவர்களைத் திருப்பி முறைத்தார். இரு தரப்பிலும் கண்ணை யார் முதலில் விலக்குவது என்ற 'கண்' பரீட்சை. இதற்குள் மாணவர்கள் முழக்கங்களாய் பேசினார்கள்.

"அடக்குவோம்! அடக்குவோம்!

அப்பாவுவை அடக்குவோம்!"

"அஞ்சோம் அஞ்சோம் - போலீஸ்

அடக்குமுறைக்கு அஞ்சோம்."

முத்தையா, கூட்டத்தை கண்ணீர் மல்கப் பார்த்தான். எந்த மாணவர்கள் போலீஸ் லாக்கப்பில் அடிபட்டு, இன்னும் காயம் ஆறாமல் தவிக்கிறார்களோ, அவர்களே, இப்போது வாய் வலிக்க, காது வலிக்கக் கத்தினார்கள். உணர்ச்சிகள் கண்ணீராய் கொட்டப் போனபோது, விரலால், கண்ணீரைச் சுண்டிவிட்டான்.

மாணவர் கூட்டமும், ஆசிரியர் கூட்டமும், நான்கு பக்கமும் கரையுடைத்து, நீர் அலைகளாய் ததும்பியபோது, அப்பாவு நிமிர்ந்து நின்று, போலீஸ்காரர்களைப் பார்த்தார். போலீஸ் நண்பர்கள், கம்புகளை குறுக்காக வைத்தக்கொண்டு கூட்டத்தைத் தள்ளப் போனார்கள். பிரபு, இளக்காரக் குரலில் எச்சரித்தான்.

"மிஸ்டர். முத்தையா...! கடைசியாய் சொல்றேன். நீ மாணவர்களுக்கு அடிவாங்கிக் கொடுக்க நினைப்பது அயோக்கியத் தனம். பேராசிரியர் பெருமாள்சாமிக்கு, நீ மருமகனாய் போவது சொந்த விவகாரம். அதுக்காக, ஒரு பொது விவகாரத்தை உருவாக்குவது விகாரம்."

பிரபு, தன் 'மொழியழகை' போலீஸ்காரர்கள் ரசிக்கிறார்களா என்று பார்த்தான். அவர்களோ லத்திக் கழிகளின் இருபக்கத்து 'மொழிகளையே' பார்த்தார்கள். பிரபுவோ, யாரைப் பார்த்துச் சொல்ல வந்தானோ, அவளைப் பார்த்தான். அவளோ, உதடுகளைக் கடித்தாள். பிரபுவை சேர்த்துத் தின்னப் போகிறவள்போல் பார்த்தாள்.

அப்போதுதான் முத்தையாவும் பார்த்தான். மேகலா எப்போது வந்தாள் என்பது தெரியவில்லை. எதையோ சொல்ல வந்தவள் போல், அதே சமயம், அந்த அமளிக்கு ஓரளவு பயந்தவள் போல, முத்தையாவை நோக்கி இரண்டடி முன் வாங்கி, மூன்றடி பின்வாங்கி உழன்று கொண்டிருந்தாள்.

இப்போது பிரபுவின் பேச்சால், மேகலா இயல்பாக வந்த இயலாமையும், கூச்சமும் அற்றுப்போனவளாய், கூட்டத்தின் முகப்பிற்கு

வந்தாள். இடுப்பில் சொருகியிருந்த ஒரு காகிதத்தை எடுத்தாள். முத்தையாவைத் தனியாகக் கூப்பிட்டு, அப்பாவின் கடிதத்தைக் கொடுத்துவிட்டு, அதற்குரிய வியாக்கியானங்களைச் சொல்ல நினைத்தவள், பிரபுவின் பேச்சை நிருபிப்பதுபோல் அப்படிச் செய்யக்கூடாது என்று எண்ணியபடியே, காகிதத்தை முத்தையாவிற்கு அருகே நின்ற ஒரு மாணவனிடம் நீட்டினாள். அதை வாங்குவதற்காக கையை நீட்டிய முத்தையாவும், நீட்டிய கரத்தை மடக்கிக் கொண்டான். மேகலா, பொதுப்படையாகப் பேசினாள்.

"இது அப்பாவோட மெஸேஜ். எல்லாருக்கும் இதைப் படித்துக் காட்டணும் என்பது அவரோட விருப்பம்."

மேகலா, சிறிது தள்ளிப்போய் நின்று கொண்டாள். போலீஸார், அவளை 'அரெஸ்ட்' செய்யலாமா என்பதுபோல் பார்த்தார்கள். கடிதத்தை வாங்கிய மாணவன், அதை கண்ணால் நோட்டம் போட்டுவிட்டு, முத்தையாவிடம் கொடுத்தான். முத்தையா அந்தக் கடிதத்தைப் படிக்கப் படிக்க திடுக்கிட்டவன் போல், முகம் வெளுக்க, கண் சிவக்கத் தோன்றினான். கடிதத்தை கையிலேந்தி சிறிது நேரம் யோசித்தவன், பிறகு உரக்கப் படித்தான்.

"அன்புள்ள மாணவர்களுக்கு,

என்னை டிரஸ்ட்போர்ட் சஸ்பெண்ட் செய்திருப்பது, என்று சொந்த விவகாரம் - மாணவர்களுக்குச் சம்பந்தப்படாத விவாகரம். இன்னும் சொல்லப்போனால், இதில் தலையிட மாணவர்களுக்கு உரிமை கிடையாது. ஆகையால், எந்த மாணவரும், எனக்காக எந்த வகையிலும் ஆதரவு தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை."

"என் தன்மானத்தை நிலைநாட்டிக் கொள்ளும் ஆற்றலும் உறுதியும் எனக்கு உண்டு. என்மீது பழி போட்டு போராட்டம் நடத்த வேண்டாம்."

"எப்படி இருந்தாலும், எல்லா மாணவச் செல்வங்களும், தகுதியில்லாத எனக்கு, அளவுக்கு மீறிய அன்பைக் காட்டியதற்கு நன்றி. அந்த அன்பே, எனக்கு இப்போதைய ஒரே ஆறுதல். அந்த ஆறுதலைக் கெடுக்கும்படியோ, அன்பு பொய்யானது என்பதைக் காட்டும்படியோ, எனக்காக எந்த நடவடிக்கையும் மாணவர்கள் செய்யக் கூடாது.

இப்படிக்கு,

பேராசிரியர் எல். பெருமாள்சாமி,

முத்தையா ஓங்கிய குரலில் வாசிக்க வாசிக்க மாணவக் கூட்டம் ஒடுங்கிக் கொண்டிருந்தது. பலருக்கு, போலீஸ் கெடுபிடியில்

இருந்தும், டிரஸ்ட்போர்டின் கொடுமையில் இருந்தும் தப்பித்த ஆறுதல். இன்னொரு தரப்பினர் துடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு மாணவன், "இது நம் பேராசிரியரோட தனிப்பட்ட விவகாரம் இல்ல. ஒரு முதல்வர் பழிவாங்கப்பட்ட பொது விவகாரம். இப்போதே நாம் ஏதாவது செய்யாவிட்டால், நமக்கு நாமே சமாதி கட்டுவதாகிவிடும்..." என்று பின்னால் இருந்து சொல்லியபடியே கூட்டத்திற்கு முன்னால் வந்தான். 'ஐ அக்ரி வித் ஹிம்' என்றார், தமிழாசிரியர் ராமய்யா.

மேகலா, மீண்டும் கூட்டத்தின் முகப்பிற்கு வந்து, "நீங்க போராடுங்க, வேண்டாங்கல்ல. ஆனால், அதுக்கு அவர் தலையை உருட்டக் கூடாதுன்னு மிஸ்டர். பெருமாள்சாமி சொல்லச் சொன்னார். இதைக் கடிதத்தில் எழுத அவருக்கு மனசு வர்ல. நிலைமை மோசமானால் என்னை இப்படிச் சொல்லச் சொன்னார்."

முத்தையாவும், இதர மாணவர்களும் திடுக்கிட்டார்கள். மாணவர் போராட்டத்தை பேராசிரியர் தப்பாகப் புரிந்திருக்கிறாரா? அவர் தலையை உருட்ட வேண்டாம் என்றால், என்ன அர்த்தம்? வேலை கெட்டுப்போய் போராட்டம் செய்கிறோம் என்றுதானே பொருள்? அவரை சாக்காகப் பயன்படுத்துவதாகத் தானே அர்த்தம்.

கூட்டம் நிசப்தமாக நின்றது. இரண்டு மூன்று நிமிடங்கள் யாருக்கும் பேச்சோடவில்லை. இறுதியில் ஒரு மாணவன், "சரி.... என்ன செய்யலாமுன்னு முடிவு எடுக்க வேண்டாமா?" என்றான்.

முத்தையா, பேசாதபடியே கூட்டத்தைப் பார்த்தான். கூட்டத்தில் ஆளுக்கொரு குரல்களாக வலுத்துக் கொண்டிருந்தது. எல்லோரும் அவன் முடிவை எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான். என்ன செய்யலாம்?

'நல்லது நண்பர்களே. முதல்வரே விரும்பாதபோது, முதல்வருக்காகப் போராட்டம் நடத்த அவசியமில்லை. பேராசிரியர்.பெருமாள்சாமி நம் போராட்டத்தின் உள்நோக்கத்தையே சந்தேகப்பட்டுவிட்டார். என்றாலும், அவர் கல்லூரிப் பணத்தைக் கையாடினார் என்ற கேவலமான குற்றச்சாட்டை மாணவர்கள் நம்பவில்லை. அவர் அப்பழுக் கற்ற மாமனிதர். இப்படிச் சொல்வதற்கும் பேராசிரியர் உள்ளத்தம் காணக்கூடாது என்ற நமது ஒருமித்த கருத்தை, அவரது மகள் செல்வி. மேகலாவை, தன் தந்தையிடம் தெரிவிக்கும்படி உங்கள் சார்பில், பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்."

மாணவர்கள், தனித்தனியாகவும் குழுக்குழுவாகவும் கலைந்தார்கள். அதுவரை ஒன்றியிருந்த ஆசிரியர்கள், தத்தம் வகுப்புகளுக்கு, தலைகளைத் தொங்கப் போட்டபடியே நடந்தார்கள். பிரபு, அப்பாவு ஒருவித ஏமாற்றத்துடன், தன் கையில் இருந்த ஒரு

புண்ணைப் பிசுக்கி, அதன் ரத்தத்தைச் சுவரில் தேய்த்தார். அங்கிக்காரர் போலீஸ்காரர்களிடம், சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

முத்தையா, தன்னந்தனியாக, நடந்து கொண்டிருந்தான். ஆயிரம் சிந்தனைகள் அவனை அலைக்கழித்தன. திடீரென்று, ஒரு பியூன் வந்து, ஆக்டிங் பிரின்ஸ்பால் கூப்பிடுவதாகச் சொன்னான். முத்தையா வேண்டா வெறுப்பாகப் போனான்.

பேராசிரியர்.பெருமாள்சாமியின் சுழற் நாற்காலியில், வைஸ் பிரின்ஸ்பாலாக இருந்த தமிழ்ப் பேராசிரியர். மாணிக்கம் முத்தையாவைப் பார்த்ததும் எழுந்தார். பின்னர், அவன் முகத்தில் படர்ந்திருந்த சோகத்தைப் புரிந்தவர்போல், "உட்காருப்பா..." என்று சொல்லிவிட்டு, தானும் உட்கார்ந்தார். முத்தையா, தலைகவிழ்ந்து அமர்ந்தான். தற்காலிக முதல்வர் மன்றாடுவதுபோல் பேசினார்.

"மிஸ்டர். அப்பாவு! ஒன்னை எச்சரிக்கச் சொன்னார்...."

முத்தையா, அவரை நிமிர்ந்து பார்த்தான்.

"ஸார்.... அவர் எச்சரிக்காமல் இருந்தாலும், நீங்க எச்சரியுங்க. அதுக்கு உங்களுக்கு உரிமை உண்டு. இந்த காலேஜில, என் தந்தை உங்கள் மூலந்தான் என்னைச் சேர்த்தார். ஆனால் அதுக்காக, குறைந்தபட்ச மனிதனுக்குக்கூட இருக்கிற தகுதியில்லாத ஒருவரை மேற்கோள் காட்டி எச்சரிக்க வேண்டாம்."

"தப்பா நினைக்கிறப்பா... நான், உன்னை எச்சரிக்கக் கூப்பிடல. நீயும், நீ சொல்றதுக்குக் கட்டுப்படும் மாணவர்களும், என்னைத் தப்பாக நினைக்கக்கூடாது என்பதுக்குத்தான் கூப்பிட்டேன். என்னை பிரின்ஸ்பால் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி, அப்பாவு சொல்லும்போது, 'என்னை விட்டுடுங்கன்னு' இரண்டு கையாலயும் அவரக் கும்பிட்டேன். அவரோ, 'அப்படின்னா நீங்க பெருமாள்சாமி ஆளா...' என்று கேட்டார். அதுக்குமேல என்னால பேச முடியல. ஏன்னா, என்னோட நிலைமை அப்படி. ஐந்து பெண்களை நான் கரையேற்றணும். பாரி மகளிர்க்கு வந்த நிலைமை என் குழந்தைகளுக்கு வரப்படாது. சொத்து பத்து இல்லாதவன். இந்த அப்பாவுவை என்னால விரும்பவும் முடியல. மீறவும் முடியல. அவர் தெருவிலேயே குடியிருக்கேன். போன வாரம் நாலைந்து ரவுடிப் பசங்க என் ரெண்டாவது பெண்ணைப் பின் தொடர்ந்த போது, அப்பாவுகிட்டேதான் முறையிட்டேன். அவர்தான் அவங்களை அடக்கினார்"

தாற்காலிக முதல்வர் மாணிக்கனார் எழுந்து நின்றே பேசினார்.

"இந்துப் பதவியை வேண்டாமுன்னு சொல்லியிருந்தால், அவரே அந்துப் பசங்களை, என் பெண் மேல ஏவி விடுவார். இதுல 'ரிஸ்க்'

எடுக்க முடியாது. அதனால நான் போட்டிருக்கிறது முட்கிரீடம். ஆனானப்பட்ட எக்னாமிக்ஸ் தெரிந்த பெருமாள்சாமி மேலேயே, பணத்தைக் கையாடினதாய் வழக்கை உற்பத்தி செய்திட்டாங்க... என்னை என்ன செய்யப் போறாங்களோ? அதனால, நான் யார் வம்புக்கும் போகப் போவதில்ல. பதவியே ஒரு தண்டனை என்பதை இப்போதான் புரிஞ்சுக்கிட்டேன். நீயும் ஏழைப் பையன். ஒன் தந்தைக்கும் எனக்கும், நீ பிறக்கு முன்னாலேயே நட்புண்டு. அதனால, நான் ஒனக்குச் சொல்லும் அறிவுரை, திருக்குறளில் தெய்வப் புலவன் சொன்னது போல..."

முத்தையா, சலிப்போடு எழுந்தான். பேராசிரியர் மாணிக்கம் அவனைப் பரிதாபமாகப் பார்க்கப் பார்க்க, அவனும் அவரைப் பரிதாபமாகப் பார்த்தான். கலிங்கத்துப் பரணியை வீராவேசமாகச் சொல்லிக்கொடுத்த இந்த ஆசிரியர், கனகவிசயன் மேல் கல் கொண்டு வந்ததாகக் கூறப்படும் சேரன் செங்குட்டுவனைப் பற்றி, சிலப்பதிகாரத்தில் பாடம் எடுத்திடும்போது, அசல் செங்குட்டுவன் இருந்தானோ இல்லையோ... நான் இருக்கேன் என்பது போல் சீறும் புலியாய் துடிப்பவர். இப்போது ஒரு களப்பிறன் அப்பாவுக்காக அஞ்சுகிறார். சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தம் இல்லை என்பது தப்பு... சம்பந்தம் உண்டு. மனதில் குடிகொண்ட கோழைத்தனத்திற்கு தேடும் நஷ்ட ஈடே வாய்ஜால வார்த்தைகள். வாய் வீரம் பேசுபவர்கள், செயலற்ற கோழைகள்...

முத்தையா, வெளியேறப் போனான். 'நீ என்னைத் தப்பா நினைக்கப்படாதுப்பா...' என்று மீண்டும் தன்னை 'எச்சரித்த' பேராசிரியரைப் பார்த்தான். அவர் சுழற் நாற்காலியில், உடம்பில் ஒரு பகுதிகூடப் படாமல், அச்சத்தால் அகல வாய் திறந்து பார்த்தார். அவனுக்கு, அவர் மீதே பாவம் ஏற்பட்டது. அவர் சொல்வதும் அவர் வரையில் நியாயமாகவே தோன்றியது. கேவலம், நான்கைந்து பொறுக்கிகள், தன் மகளை மானபங்கப்படுத்தி விடலாம் என்று அவர் நினைப்பது நியாயமே. சமூகத்தில் ஒருவருக்கு அல்லது ஒருத்திக்கு தனிப்பட்ட முறையில் ஏற்படக்கூடிய சமூகக் கொடுமை, சமூக காதுகளுக்கும், கண்களுக்கும் எட்டாமல் போனாலும், அது, பொது வாழ்க்கையை பாதிக்கும். இந்தச் சமூகத்தில், நல்லவர்களுக்கு, பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பும் அயோக்கியர்களிடமே இருப்பதால், அவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் இவர்கள் கட்டுப்பட்டே ஆகவேண்டிய நிலைமை. அம்மாவைக் கொன்றவன் சத்திரம் கட்டிய கதைதான்...

வகுப்புக்குப் போகலாமா, வீட்டுக்குப் போகலமா என்று யோசித்தபடி நடந்த முத்தையா 'உங்களைத்தான்' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். அவனுக்காகக் காத்திருந்தவள்போல், கல்லூரி முனையில் இருந்து மேகலா முன்னேறி வந்தாள்.

"அப்பா.... ஓங்களைச் சாயங்காலம் வீட்டுக்கு வரச்சொன்னார். கண்டிப்பாய் வரச் சொன்னார்."

முத்தையா, அவளை ஏறிட்டு நோக்கினான். எடுத்தெறிந்து பேச நினைத்தான். முடியவில்லை. அவள் நீட்டிய முகவரிக் காகிதத்தை வாங்கிக் கொண்டான். அதே சமயம், தனது வீட்டுக்கு எப்படி வரவேண்டும் என்று அவள் விளக்கம் அளித்த முற்பட்டபோது, அதை கேளாதவன்போல் போய்விட்டான்.

பேராசிரியர் பெருமாள்சாமியின் வீட்டுக்குப் போகலாகாது என்ற நினைவுடனேயே, வகுப்புக்குள் நுழைந்தவன், மனதை படிப்படியாக மாற்றிக் கொண்டான். பேராசிரியர், எப்படி இருக்கிறார் என்பதைப் பார்த்துவிட்டு வரலாம. 'மாணவர்களைத் தப்பாக நினைத்து விட்டார்களே' என்று இரண்டு 'சென்டன்ஸ்' சூடாகவே கேட்கலாம். இருந்தாலும், அவருக்கு இவ்வளவு நெஞ்சமுத்தம் ஆகாது.

## 5

பேராசிரியர் பெருமாள்சாமி, சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்தார். நாற்காலியின் இரு சட்டங்களிலும் இரு புத்தகங்கள். இரண்டையும் மாறி மாறி எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தவர், சத்தங் கேட்டு.... "வாப்பா... மேகலா நீ வரமாட்டே என்றாள். நீ வருவது நிச்சயமுன்னு நான் சொன்னேன். உட்காரு. மேகலா! நாற்காலி கொண்டு வா. இனிமேல், என் கிட்டே விசிட்டர்ஸ் வரமாட்டங்க பாரு. அதனால நாற்காலிகள எடுத்துட்டேன்."

கல்லூரியில் கம்பீரப்பட்டு நின்ற முதல்வர் பெருமாள்சாமியாக முத்தையாவுக்கு அவர் காட்சிக்காட்ட வில்லை. வெறும் பெருமாள்சாமியாகவே நிராயுதபாணியாக தோன்றினார். முகத்தில் பல்வேறு கலக்க குறிக்கள். உடலைவிட்டு, உயிர் பிரியப்போவது போன்ற விரக்தி... வேலையற்ற பழைய பட்டாதாரியாய் ஆறுதல் தேடும் பாவனையோடு காணப்பட்டார்.

மேகலா, அமைதியாக ஒரு நாற்காலியைப் போட்டுவிட்டு, ஒரு ஓரமாக நின்றாள். முத்தையா அதிர்ந்து விட்டான். அரக்கத்தனமான முர்க்கத்துடன், பற்களைக் கடித்துக்கொண்டு பெரிய இடத்து ஆட்களுக்கெல்லாம் டெலிபோன் செய்து 'விட்டேனா பார்' என்பது போல் விறுவிறுப்பாக இருப்பார் என்று நினைத்த பேராசிரியர், துவண்டு போன புடலங்காய்போல் எதையும் யோசிக்கும் திராணி

அற்றவராய் முடங்கிக் கிடப்பதைக் கண்டு துணுக்குற்றான். வீட்டையும் நோட்டம் விட்டான். 'பிரிஜ்' இருப்பதாகத் தெரியவில்லை. மிக்ஸி இருந்தால், அந்த ஆட்டுக்கல் இருந்திருக்காது. ஸ்டவ் இருக்கு. ஒருவேளை, கேஸ் அடுப்பு இருக்கோ இல்லையோ... இதுவும் வாடகை வீடோ... சொந்த வீடோ...

முத்தையாவால், பேராசிரியரையோ மேகலாவையோ நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. சாய்வு நாற்காலியின் சட்டங்களில் கிடந்த புத்தகங்களைப் பார்த்தான். உடனே பேராசிரியர் பெருமாள்சாமி "என்ன புத்தகமுன்னு பார்க்கிறியா? ஒண்ணு தேவாரம்... இன்னொன்று டாஸ் கேபிட்டலோட சுருக்கம். வாழ்க்கையில் அடிபட்டு அடிபட்டே வயசாகிப் போறவங்க, கடைசியில் தேவாரத்துக்கும் பைபிளுக்கும் போயிடுவாங்க. இந்த சமூகத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வரணும் என்பது என் எண்ணம். 'எக்னாமிக்ஸ் இஸ் தி ஸ்டடி ஆப் தி ஸோஷியல் பிகேவியர் ஆப் மேன். ஒரு மனிதனின் சமூகப் பழக்கத்தை அறிவதே பொருளாதாரம்' என்று ஆரம்பத்தில் படித்த இந்த எக்னாமிக்ஸ் புரபஸருக்கே, கார்ல் மார்க்ஸோட மூலதனத்தை முழுசா படிக்கணுமுன்னு இப்போதான், உதயமாகியிருக்கு. சரி... போகட்டும். என் மேல மாணவர்களுக்கு கோபமா?"

பேராசிரியர். பெருமாள்சாமி, பெருமிதத்துடன் சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். இரண்டு நிமிட நேரத்தை, நிசப்தம் விழுங்கியது. முத்தையா, மேல்லப் பேச்சுக் கொடுத்தான்.

"எங்களையும் போராடவேண்டாமுன்னு தடுத்திட்டீங்க..."

முத்தையா, அழுங்குரலில் தெரிவித்தான்.

"சார், எங்களாலதான் உங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமுன்னு ஒரு குற்றவாளி மாதிரி துடிக்கேன் சார்."

"எல்லா ஆறுதல்களுலயும், அனுதாப ஆறுதல் மோசமானதுப்பா... கழிவிறக்குமுன் - சொல்லுவாங்களே அது கூடாது. இப்போவும் சொல்றேன். என்னோட பிரச்னையில், ஒங்க போராட்டம் மயிலிறகு மாதிரிதான். எனக்காக நீங்க போராடினால், நீங்களும் என்னை மாதிரி இப்படி கிடக்க வேண்டியது வரும். ஆனால், நான் வாழ்க்கையின் கடைசி வாசலில் நிற்கிறவன், நீங்களோ நுழை வாசலில் நிற்கிறவங்க... அதோட, எந்தப் போராட்டத்திற்கும் முன்னால, நம்ம நாமே ஆயுத்தப்படுத்திக்கணும்... அம்பேத்கார்கூட பள்ளிக்கூடத்திலயும், காலேஜ்லயும் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை தாங்கிக்கிட்டு, தன்னை ஆயுத்தமாக்கிக் கொண்டார். கல்விக் காலத்துலயே, முழு எதிர்ப்பையும், அவர் காட்டியிருந்தால், அவர் முழுப் போராளியாய் ஆகியிருக்க முடியாது. அதனால,

எதிர்காலப் போராட்டத்திற்கு உங்கள மாதிரி மாணவங்க, ஆயத்தம் ஆகிறது என்கிறது, ஒழுங்க படிக்கிறதுதான். அதுல எந்த விவகாரமும் வில்லங்கமும் வராம பார்த்துக்கிறதுதான்."

முத்தையா, பேராசிரியரை பிரமிப்பாக பார்த்துவிட்டு, அவருக்கு பரிந்துரை கூறும் தகுதி தனக்கு இல்லை என்பதுபோல் இழுத்து இழுத்துக் கேட்டான்.

"அப்போ சார், நீங்க என்ன செய்யுறதா முடிவு எடுத்தீங்க."

"நான் இன்னும் முடிவுக்கு வரல. கோர்ட்ல ரிட் போடலாமுன்னு ஒரு யோசனை. நாட்ல குழப்பம் இருக்கதுனால, நான் நியாத்துக்குப் போராடுறதுலயும் குழப்பமாய் இருக்கு. எந்த வகையிலயும் ஒரு முடிவுக்கு வரமுடியல. கலைமகளை விலைமகள் நிர்வகிக்கிற காலம். இது பழத்தை காலத்தே பயன்படுத்தா விட்டால், அது அழுகிப் போறது மாதிரி, அறிவாளிகளும், தங்கள் அறிவு பயன்படாததாய் நினைத்து அழுகி 'பர்வெட்டாய்' ஆகிட்டாங்க. ஸோ... காலேஜ், படிக்காதவன் கிட்டே இருந்தாலும் ஒன்றுதான்; இந்தப் படித்தவங்ககிட்டே இருந்தாலும் ஒன்றுதான். மொத்தத்துல தர்மத்தை நிலைநாட்டக்கூட அதர்மக்காரன் காலுலதான் விழ வேண்டியதிருக்கு. அதனால ஒரு முடிவுக்கும் வரல. இவளுக்காகப் பார்க்கேன். இல்லன்னா சாகும்வரை உண்ணாவிரதமுன்னு உட்கார்ந்திடுவேன். எப்படியும், இன்னும் இரண்டு நாள்ல ஒரு முடிவுக்கு வரணும்."

மேகலா, முத்தையாவைச் சோகமாகப் பார்த்தாள். அவனால் முதல்வரையோ, அவர் மகளையோ நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. யாரோ காபித் தட்டை நீட்டினார்கள். மூவரும் சுவை தெரியாமலே அருந்தினார்கள்.

முத்தையா, விடைபெற்றுக் கொண்டான். மேகலா, வாசல் வரை வந்தாள். துடுக்கோடு தோன்றிய அவள், இப்போது கிட்டத்தட்ட அழாத குறையாக, துவண்டு போனதைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பார்வையே தேவையில்லை என்பது போலிருந்தது.

நாள்வேகத்தில் வருகிற கொடூரமான நிகழ்ச்சிகள், கம்பீரமான மனிதர்களையும், எப்படி வருடக் கணக்கான முதுமைக்கு தள்ளிவிடுகின்றன!

முத்தையா, தன்பாட்டுக்கு யோசித்தபடி, பேராசிரியர் வீட்டை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு, முதலில் தள்ளாடித் தள்ளாடி நகர்ந்து, பின்னர், முகம் திருப்பாமல் முழு வேகத்தோடு பேய் நடையாய் நடந்தான்.

# 6

முத்தையா வீட்டுக்கு வந்ததும், அம்மா, இன்னொரு போர்ஷனில் அரிசிக்காக பை தூக்கி நடப்பது போலிருந்தது. சகோதரிகள், அண்ணனைப் பார்த்துக்கூட தங்கள் கிழிந்த துணிகளை மூடினார்கள். அந்த அளவுக்கு கிழிசல். அப்பா, வலியால் வாதைப்பட்டுக் கொண்டிருந்தார்.

முத்தையாவுக்கு ஒரு சிந்தனை.

இத்தனைபேர் கஷ்டத்தில் என்ன கல்லூரிப் படிப்பு? பேசாமல் ஒரு வேலைக்குப் போனால் என்ன? எந்த வேலையாக இருந்தாலும் அது, அம்மாவின் பழைய அரிசிக் கடனைத் தீர்க்காது போனாலும், நிறுத்த வேண்டும்.

முத்தையா வழக்கம்போல், தெருவில் இருந்த-வழக்கமான டிரக் வண்டியில் இரவில் தூங்கிவிட்டு, காலையில் புறப்பட்டான். கல்லூரிக்கு அல்ல...

பி.யூ.சி. சர்டிபிக்கேட்டை வைத்து, எம்ப்ளாய்மெண்ட் அலுவலகத்தில் பதிந்து இரண்டு வருடம் ஆகிறது. அடிக்கடி 'ரினிவலும்' செய்திருக்கான். 'எப்போ வேலை கிடைக்கும்' என்று விசாரித்து விட்டு வரலாம்.

முத்தையா பேருந்தைப் பிடித்துக் கொண்டான்.

அந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுகலகத்தில், கல்லாய்ச் சமைந்து நின்ற இளைஞர்கள், ஏதோ சுடுகாட்டுச் சின்னங்கள் போல் தோன்றினார்கள். நடுவில் கருப்பும், இதழ்களில் மஞ்சள் பிரகாசமும் கொண்ட சூரியகாந்திப் பூக்கள்போல் எதிர்கால இருட்டை இருவிழிகளில் சுமக்க முடியாமல் சுமப்பவர்களாய், இளம்பெண்கள் சோர்ந்து, பிடிதாரமாய் காம்பவுண்ட் சுவரையும், தூண்களையும் பிடித்தபடி நின்றார்கள். சிலர் வாழ்க்கையில் பீடுநடை போடுவதற்காக, அந்த அலுவலகத்திற்கு படையெடுத்த முயற்சிகளே, தங்களை நொண்டியாக்கி விட்டதுபோல், இடுப்பை வளைத்தபடி தங்களைச் சுருக்கிக் கொண்டார்கள். ஐந்தாண்டுத் திட்டம் என்றால் என்ன என்பதை அனுபவ பூர்வமாய் அறிந்து, ஐந்தாண்டுகளாக, வெறுமனே 'ரினிவல்' செய்பவர்கள்; வேலை வாங்கித் தருகிறேன் என்று சொன்னவர்களை நம்பி வந்து, இப்போது, அவர்கள் என்ன செய்வார்களோ-ஏது செய்வார்களோ என்று மோசம் போகாமல் இருக்க முயற்சி செய்யும் இளம் மகளிர்-

முத்தையா ஒரு கிளார்கிடம், தனது கார்ட்டைக் காட்டி விசாரித்தான். வேலைக்கு புதிதான அந்த கிளார்க், ஒரு ரிஜிஸ்டரைப் பார்த்துவிட்டு பதிலளித்தார்.

"முத்தையாவா....? பதினெட்டு, ஆண்டித் தெருவா? நீங்க ஹைகோர்ட்ல கிளார்க்காய் சேர்ந்து மூணு மாதமாச்சே."

ஒருவேளை வேலையில் சேரும்படி தனக்கு அனுப்பப்பட்ட ஆர்டர், தபாலில் தவறியிருக்கலாமோ என்ற ஆனந்த சந்தேகத்துடன், முத்தையா நிதானமாகக் கேட்டான். 'எனக்கும் ஒன்றும் ஆர்டர் வரலிங்களே' என்று வினவியபோது, அந்த ஊழியர், 'அதெப்படி... நீங்க ஜாயின் பண்ணிட்டதாய் ரிப்போர்ட் வந்துட்டே....' என்றார். பிறகு அவனை மேலும் கீழுமாகப் பார்த்து, முகத்தில் பைத்தியக்களை, வேர் விட்டிருக்கிறதா என்று மேலோட்டமாகப் பார்த்தார். 'நச்சரிப்பதாய் நினைக்காதீங்க. நான்தான் அந்த முத்தையா. எனக்கு இன்னும் வேலை கிடைக்கல்ல. ரிஜிஸ்டர கொஞ்சம் நல்லா...' என்று முத்தையா புன்முறுவலோடு வற்புறுத்தியபோது, அந்த ஊழியர், 'என்ன ஸார் விளையாடுறீங்க....?' என்று சொன்னபடியே, மீண்டும் ரிஜிஸ்டரைப் புரட்டப் போனபோது-

அதே அறைக்குள், மேடையில் தானைத் தலைவர்களுக்காகப் போடப்படும் பெரிய நாற்காலிபோல் இருந்த ஒரு ஆசனத்தில் இருந்தபடி, கருடப்பார்வை காட்டிய ஒருவர் - அநேகமாய் சூப்ரின் டென்டாக இருக்ககலாம், ஓடி வந்தார். ஓடியதால், அவர் மூச்சிழுத்ததை வைத்து, நாற்பத்தைந்து வயதென்று கணிக்கலாம். அவர் ஓடிவரும் போது, வழியில் கிடந்த நாற்காலிகளும் மேஜைகளும் அலறியடித்தன. வந்தவர், சின்ன ஊழியர் திறந்து வைத்த ரிஜிஸ்டரை, தினத்தந்தி பாணியில் (அதாவது, லபக்கென்று) மூடினார். ரிஜிஸ்டருக்கு உள்ளும், புறமும் ஒட்டிக் கிடந்த தூசி துக்கடாக்கள், இதனால் வேலை தேடும் இளைஞர்கள்போல் காற்றில் சிக்கின.

சின்ன ஊழியர், அவரை ஆச்சரியப் பயத்தோடு பார்த்தபோது, பெரிய அலுவலர், "ஒனக்கு சென்ஸ் ஆப் ரெஸ்பான்ஸிபிலிட்டி இருக்குதா?' எந்த கேண்டிடேட் கிட்டேயும், எதையும் காட்டப்படாது, பேசப்படாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருந்தேன்! மூளை இருக்கிறவன் செய்ற காரியமா...?" என்று கத்தினார். பிறகு, முத்தையாவைப் பார்த்து "என்ன விஷயம்...?" என்றார் அதட்டலாக.

முத்தையா, வினயத்துடன் விளக்கினான்:

"நான் வண்ணாரப்பேட்டையில், ஆண்டித்தெரு, பதினெட்டாம் நம்பர்ல இருக்கிற ஒரே ஒரு முத்தையா. பி.யூ.சி. குவலாலிபிகேஷன்படி மூன்று வருஷத்துக்கு முன்னாடியே ரிஜிஸ்டர் செய்திருக்கேன். எனக்கு,

ஹைகோர்ட்ல வேலை கிடைத்துட்டதாய்ச் சொல்றார். அதனாலதான்... இதோ பாருங்க கார்டு..."

பெரிய அலுவலர், சின்ன ஊழியரை முறைப்பாகப் பார்த்துவிட்டு, அதே மாற்றுக்குறையாத முறைப்பு முகத்தோடு, முத்தையாவைப் பார்த்தார். பிறகு, "அவன் கிறுக்கன். எதையோ பார்த்து எதையோ சொல்றான்" என்றபடியே அலட்சியமாக நடந்தார். முத்தையா, அவரைப் பேச்சால் திரும்ப வைத்தான்.

"இந்தா பாருங்க ஸார்! எனக்குப் பதில் சொல்ல வேண்டியது ஒங்களோட கடமை. அவர் கிறுக்கன் இல்ல, என்னைத்தான் கிறுக்கனாய் நீங்க ஆக்கப் பார்க்கிறீங்க. எனக்கு, இப்பவே இரண்டுல ஒன்று தெரியணும். நான் வேலையில் சேர்ந்திட்டேனா, இல்லியா....?"

நடந்தவர், திரும்பி நடந்தார். வித்தியாசமானவனைப் பார்ப்பதை உணர்ந்தவர்போல், ஒரு வினாடி திகைத்தார். பிறகு, பழைய அனுபவங்களை பலமாகவும் பாலமாகவும் வைத்துக் கொண்டு நக்கலோடு பதிலளித்தார்.

"முதல்ல கியூவில நின்னு வாங்க."

"கியூவில நின்னுதான் வாரேன். நீங்க கொடுக்கிற உருப்படியில்லாத பதிலுக்கு ஒவ்வொரு தடவையும் விளக்கம் கேட்க கியூவுல நிற்கணுமுன்னால், ஒண்ணு மார்க்கண்டேயனாக, 'ஏஜ்பார் ஆகாமல்' இருக்கணும். இல்லன்னால், தசாவதாரம் எடுக்கணும்."

"என்ன மிஸ்டர்! ஒங்களுக்குத்தான் பேசத் தெரியுமா? இந்த மெட்ராபாலிட்டன் சிட்டில எத்தனையோ ஆண்டித் தெருக்கள் இருக்கலாம். அங்கெல்லாம் எத்னையோ முத்தையாக்கள் இருக்கலாம்... எல்லா இடங்கள்லேயும் ஒரே சமயத்துல குடியிருக்கதுக்கு, நீங்க என்ன கண்ண பரமாத்மாவா என்ன...?"

"நான் கண்ண பரமாத்மா இல்லை. வேலை தேடுற வெறும் ஆத்மா. உங்களை வேலை கொடுங்கன்னு கேட்கல... அவரு சொன்னதைத்தான் சரி பார்க்கச் சொல்றேன். இதோ, என் கார்டு. பல ஆண்டித் தெரு இருக்கலாம். ஆனால், கார்டோட சீரியல் நம்பர் ஒரே மாதிரி இருக்க முடியாது. இந்தாங்க சார் கார்டு... கொஞ்சம் செக் பண்ணுங்கோ, பிளீஸ்...."

"நீங்க எது வேணுமின்னாலும் ஆபீஸர்கிட்டே பேசுங்க. எனக்கு வெட்டிப் பேச்சு பேச நேரமில்ல."

"அப்படீன்னா, ஒங்க ஆபீசருக்கு வெட்டிப் பேச்சு பேச நேரமிருக்குன்னு சொல்றீங்களா...?"

"ஒனக்கெல்லாம் மரியாதை கொடுக்கிறது தப்பு."

"கரெக்ட். மரியாதை பேச்சுல தேவையில்ல. என்னை திட்டிக்கிட்டே செக்கப் செய்து சொன்னால்கூட போதும். அதுதான் பெரிய மரியாதை. மரியாதையாய் பேசு, பூசி மெழுகுறது தேவடியாத்தனம்...."

"யாரப் பார்த்துடா தேவடியாய் பிள்ளன்னு சொல்ற...?"

"உங்களை அப்படிக் கூப்பிடணுமுன்னு நீங்க ஆசப்பட்டாலும், நான் அப்படி அழைக்கமாட்டேன். ஏன்னால், தேவடியாப் பிள்ளையாய் இருக்கதுல தப்பில்ல. ஆனால், தேவடியாத்தனந்தான் பண்ணப்படாது...."

"டேய்... வாங்கடா எல்லாரும்.... நாமெல்லாம் தேவடியா பிள்ளியகளாம். போலீஸுக்கு போன் பண்ணுங்கடா. உம்... வாங்கடா... வாங்கம்மா...."

அலுவலக சிஷ்யகோடி ஊழியர்களும், ஊழியைகளும், பெரிய ஊழியரை மொய்த்தார்கள். பலர், பல்லைக் கடித்தார்கள். சிலர், இவனுக்கு இன்னும் வேணும் என்பதுபோல் தங்களுக்குள் நகைத்தார்கள். வாயை அதிகமாய்த் திறக்காமலே பேசவேண்டியதைப் பேசிவிடும் ஒரு ஊழியர், தன் அபிலாஷையை, முத்தையாவின் வாய்க்குள், வார்த்தைக் கட்டிகளாகப் போடப் போனார்.

"அவரு இருபது வருஷத்து எக்ஸ்பிரியன்ஸ். அவரோட அனுபவமும் ஒன்னோட வயசும் ஒண்ணு. அவரைப் பார்த்தா இப்படிக் கேட்டே? அவரு என்ன கூட்டிக் கொடுக்கிறவரா?"

"நான் அந்த அர்த்தத்துல அப்போ சொல்லல. ஆனால், இப்போ சொல்றேன். ஒருவனுக்குக் கிடைக்க வேண்டிய வேலையை, இன்னொருவனுக்கு கூட்டிக் கொடுப்பது, அதே மாதிரி காரியம்தான்."

"இப்போ என்னய்யா பண்ணணுங்றே...?"

"எனக்கு வேலை கிடைக்கலன்னு எழுதிக் கொடுங்கன்னு கேட்கிறேன்."

"இவரு பெரிய கவர்னரு... கேட்டதை எல்லாம் எழுதிக் கொடுத்திடணும்."

"நான் கவர்னர் இல்ல. மனசில இருக்கதை தைரியமாய்ச் சொல்லக்கூடிய குடிமகன். ஆபீஸர்களுக்காக ஆபீஸா, இல்ல உல்டாவான்னு நிருபிக்கப் போறவன். போலீஸ் நிலையத்திற்குப் போகப் போகிறவன்."

பெரிய அலுவலர், தன் சிஷ்ய ஊழியர்களைப் பார்த்தார். அத்தனை பேரும் எகிறாமல், மூக்குகளை மட்டும் சுண்டினார்கள்.

ஒருவர், பெரிய ஊழியரை, தரதரவென்று இழுத்து, "வாங்க சார். பப்ளிக் பேசுறத பேசட்டும். காய்த்த மரத்துலதானே கல்லடி விழும்" என்று அவரை சமாதானப்படுத்துவதுபோல் சற்று தொலைவான இடத்திற்குக் கொண்டு போய், "ஒங்களுக்கு அறிவிருக்கா அண்ணே...? சண்டை போட வேண்டிய விவகாரமா... இது? அவனை தாஜா பண்றத விட்டுப்புட்டு..." என்று கிசுகிசுத்தார்.

முத்தையா, பொறுமையின் சகல லட்சணங்களையும் கைவிட்டு விட்டுக் கத்தப் போனான். இதற்குள், 'கியூ' கலைந்து, முத்தையாவை, சுற்றி நின்றது. அங்குமிங்குமாகச் சிதறி நின்ற இளைஞர் கூட்டம், திமிறி வந்தது. முத்தையாவிற்கு ஆதரவாக லேசான முனங்கல்கள், நீதிப் பிரசவத்தின் வாதைகள். முத்தையா, அந்த அனுதாபக் கூட்டத்தை ஆதரவுக் கூட்டமாக மாற்றுவதற்காக விவகாரத்தை விளக்கப் போனபோது-

எவரோ ஒருவருடைய காரில் வந்து இறங்கிய மாவட்ட அதிகாரி, விரைந்து வந்தார். முகமெல்லாம் மணிப்பர்ஸ் போல் சதை மடிப்புக்கள் கொண்டவர். 'கைநீட்டி'ப் பேசும் பழக்கம் கொண்டவர். ஐம்பது வயது இருக்கலாம். பல கொம்பன்களைப் பார்த்தது போன்ற தோரணையோடு கேட்டார்.

"என்ன கலாட்டா? ஏன் கியூவுல நிற்காமல் இப்படி நிற்கிங்க? யூ ஆர் ஆல் எஜுகேட்டட். பிளிஸ் பீ இன் கியூ...."

முத்தையா, ஆவேசம் குறையாமல் பதிலளித்தான்.

"இது கியூவில நின்று தனித்தனியாய் பேசுற விவகாரம் இல்ல சார். இங்க நடக்கிற மோசடிக்கு, நாங்க எல்லோரும் விக்டிம்ஸ். அதனாலதான் இந்த ஆபீஸோட வேஷம்போல, கியூவும் கலைஞ்சிட்டு...."

"ஒட் யூ மீன்...."

"மை நேம் இஸ் முத்தையா, ஆப் எய்டின் ஆண்டித்தெரு, மெட்ராஸ் டொண்டிஒன். எனக்கு ஒங்க ஆபீஸ் மூலம் வேலை கிடைத்திட்டதாய் சொன்னாரு ஒருவரு. ஒங்க கிளார்க்தான் உண்மையைச் சொல்லிட்டார். உண்மை துவங்கிட்டா நிற்காது பாருங்க. அதனாலே முழு உண்மையும் தெரியணுமுன்னு கேட்கிறேன். ஏன்னா, அரைகுறை உண்மை முழுப்பொய்யை விட ஆபத்து பாருங்க...."

அதிகாரி, ஊழியர்களை ஒட்டு மொத்தமாகப் பார்த்தார். நல்லதைப் புரிந்துகொள்ள நேரமானாலும், கெட்டதைப் புரிந்து கொள்ள நேரம் தேவையில்லாதவர். விவகாரத்தைப் புரிந்து விஷமமாகப் பார்த்தார். முத்தையாவே, இவர், ஊழியர்கள் மீது

நடவடிக்கை எடுத்து, அவர்கள் குடும்பம் பாதிக்கப்பட்டு விடக்கூடாதே என்பதுபோல், லேசாக வருத்தப்பட்டான். எதுவும் பேசாமல், அவர் சொல்லுக்கும் கட்டுப்படப் போகிறவன்போல், பொறுப்பாகப் பார்த்தான். அதிகாரி, ஒய்யாரமாகப் பேசினார்.

“எங் மேன்! எதை இழந்தாலும் நிதானத்தை இழக்கக்கூடாது. தானங்களில் சிறந்தது அன்னதானம். அதைவிடச் சிறந்தது நிதானம். சட்டுன்னு ஒரு முடிவுக்கு வரப்படாது. மெட்ராஸ்ல எத்தனையோ ஆண்டித் தெருக்கள் இருக்கு. அவ்வளவு ஏன்? வண்ணாரப் பேட்டையே பழசு புதுசுன்னு இருக்கு. வேற முத்தையா இருக்கலாமில்லையா?”

முத்தையா புரிந்து கொண்டான். புரியப் புரிய புதுக்குழப்பம். இவர், அடிப்படையில் வித்தியாசப்படாத ஒரு அப்பாவு. எம்ளாய்மென்ட் ஆபீஸ் என்ற டிரஸ்டிற்கு எழுதப் படிக்கத் தெரிந்த சேர்மன். குத்தலாகக் கேட்டான்:

“அதைத்தான் செக்கப் பண்ணுங்கோன்னு ஒபீடியன்டாய்க் கேட்கிறேன்.”

“சூர். கண்டிப்பாய். ஐ வில் டு யுட். எவரையும் விடப் போறதில்ல. பட்... அதுக்கும் ஒரு முறை இருக்கு. ஊழியர்களிடம் பேசப்படாதுன்னு இதோ போர்ட் இருக்கே. கவனிக்கலியா? கவனிச்சுட்டுப் பேசியிருந்தால், இன்டிஸ்ஸிபிளின்... கவனிக்காமல் பேசியிருந்தால் இன்டிபரென்ட்.... ரெண்டுமே தப்பு....”

“சார்.... இப்போதைய பிரச்சினை, இந்த முத்தையாவுக்கு வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறீங்களா என்பதுதான்... இந்தாங்க ரிஜிஸ்டிரேசன் கார்டு. நீங்களே பாத்துச் சொல்லுங்க....”

“ஐ வில் டு யுட். பட், அதுக்கும் ஒரு சிஸ்டம் இருக்கு. கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுங்க. விசாரிக்கிறேன். அதை விட்டுவிட்டு, ரகளை செய்யுறது தப்பு. கிளார்க்குகளை விரட்டுறது கிரிமினல் அபன்ஸ். ஓ.கே.. ரிட்டனாய் கம்ப்ளெயிண்ட் கொடுங்க. இப்பவே கொடுக்கணுமுன்னு அவசியமில்ல. நாளைக்குக் கொடுங்க. இல்லன்னா, அடுத்த வாரம் கொடுங்க.”

“என்ன சார் இது...? வாயால சொல்றது கம்ப்ளெயிண்ட் ஆகாதா?”

“இது கவர்மெண்ட் மிஸ்டர். கசாப்புக் கடை இல்ல. கவர்மெண்ட்ல ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன்ஸ் முக்கியம். டிஸ்ஸிபிளின் இஸ் பார்ட் ஆப் அவர் டெமாக்ரஸி. டெமாக்ரஸி இஸ் தி ஸோல் ஆப் கவர்மெண்ட்....”

"எது... ஒரு நிமிட வேலைக்கு ஒன்பது மாசம் இழுத்தடிக்கிறதா?"

"யு ஆர் டாக்கிங் டு மச். ஒன்னை போலீஸ்ல ஹேண்ட் ஓவர் செய்ய அதிக நேரம் ஆகாது. டோன்ட் ஸ்பாயில் யுவர் எதிர்காலம்."

"நிகழ்காலமே இல்லாதவங்களுக்கு, ஏது சார் எதிர்காலம்?"

"ஐ கான்ட் வேஸ்ட் மை டய்ம் வித் யூ. இஷ்டம் இருந்தால், கம்ப்ளெயின்ட் கொடு. கலாட்டா பண்ணாதே... அதர்வைஸ்.... சட்டம் தன்னோட வேலையைச் செய்யும்."

மாவட்ட அதிகாரி, முத்தையாவின் பதிலுக்குக் காத்திராமல், மடமடவென்று, தனக்காக மேலே ஒதுக்கப்பட்ட 'காலி அறைக்குள்' மாடிப் படிகளில் ஏறிக் குதித்துத் தாவினார். முத்தையா, யோசித்தான். போகிற அதிகாரிக்குக் குறுக்கே போய் நின்று, வழி மறிக்கலாமா என்று பார்த்தான். உடனே, வீட்டில் முடங்கிக் கிடக்கும் தந்தையின் நினைவு வந்தது. அழுது அழுதே, கண்களைக் கரைப்பது என்று தீர்மானிக்கும் அம்மாவின் நினைவு வந்தது. ஒருவேளை விவகாரம் போலீஸ் கைக்குள் அகப்பட்டு, தன் வீட்டைப்போல் கொசு மொய்க்கும் லாக்கப்பிற்குள் அகப்பட்டு விடக்கூடாதே என்றும் யோசித்தான். இளைஞர் கூட்டத்தைப் பார்த்தான். அத்தனை பேரும், உயிர்த்துடிப்பாய் நிற்காமல், உயிர் துண்டித்தவர்களாய் நின்றார்கள். அனுதாபப் படுகிறார்கள். ஆதரவு முகங்களைக் காட்டுகிறார்கள். ஆனால், அதற்கு மேல் போக விரும்பவில்லை. இவ்வளவுக்கும் சம வயதுக்காரர்கள். அசட்டையா? அனுபவம் கொடுத்த சாட்டையா? குடும்பச் சுமையோ? ஆத்திரப்பட்டு ஆத்திரப்பட்டு அதுவே பட்டுப்போன நிலையோ? நாமே யோசிக்கும்போது, இவர்கள் ஏன் யோசிக்கக்கூடாது?

முத்தையா, குழப்பமாகப் பார்த்தான். இவனை விட இரண்டு வயது மூத்த ஒரு வாலிபன் வேதாந்தம் பேசினான்.

"இவங்க டைம்மையும், ஸ்பேஸையும் மாற்றிக் காட்டுற அரசாங்க சித்தர்கள். மூவாயிரம் ரூபாய்ல மூன்று மாத ரிஜிஸ்டிரேஷனை, மூன்று வருடமாய் காட்டுவாங்க.... மூன்று வருடத்தை, மூன்று மாதமாய் மாற்றுவாங்க.... அந்தக் காலத்து சித்தர்கள், தங்க உயிரைத்தான், இன்னொருவர் உடம்புக்குள்ள விடுவாங்களாம். ஆனால், இவங்க உங்க உருவத்துள்ளேயே, இன்னொருத்தனை பாயவிடுற அட்வான்ஸ்ட் சித்தர்கள்... அதாவது, அட்வான்சாய் பணம் கரக்கத் தெரிந்த சித்தர்கள்."

இன்னொரு வாலிபன் கோபாவேசியானான்:

"இவங்களை நிற்க வச்சுச் சுடணும்; நார் நாராய் பிய்க்கணும். போலிக்கார்டு தயாரிக்கிறாங்க. ஏதாவது ஒரு ஏரியாவுல வேகன்சி வந்தால், தங்களுக்கு வேண்டப்பட்டவங்களை, அந்த இடத்துக்கு இருப்பிடத்தை மாற்றிக்கிட்டதாய் எழுதச் சொல்லிடுறாங்க. அப்புறம் உருப்படியில்லாத நாலைந்து பேரோட, இன்டர்வியூ பட்டியலுல வேண்டப்பட்ட ஆசாமிகளையும் நுழைச்சுடுறாங்க. இவனுகள நிற்க வச்சுச் சுடணும்."

ஒருவர், மீண்டும் வியாக்கியானத்துடன் பேசினான்:

"நீங்க ஒண்ணு, இவரு ரிப்போர்ட் எழுதினால் ஒரு தாள் வேஸ்ட்.... இவங்கள ஒண்ணும் பண்ண முடியாது. வேணுமுன்னால் பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதலாம். அவன்கூட பிரசுரிக்கமாட்டான். ஏன்னா, அவன் பிள்ளிகளும் இவன்கிட்டதான் வரணும். பேசாமல், வீட்டுக்குப் போய் மூவாயிரம் ரூபாய் புரட்டப் பாருங்க. கொடுக்க வேண்டிய இடத்துல, கொடுக்க வேண்டிய விதமாய் கொடுங்க. இண்டர்வியூ கார்ட், எம்ளாய்மென்ட் கேரண்டியோட வரும்...."

"இருந்தாலும் ஒவ்வொருவரும் தன்னளவுல...."

"என்ன தன்னளவு... உன்னளவு... ஒரு அளவும் இல்ல. எனக்கு பின்னால வந்தவன் முன்னால வேலை வாங்கிட்டான். இது மாதிரிதான் எல்லா அலுவலகங்களிலும் நடக்குது. உதாரணமா, சொல்றேன் கேளுங்க... என் தம்பி ஒரு விபத்துல மாட்டிக்கிட்டான். அவன ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டு போனோம். டாக்டர் முதல் வார்டு பாய் வரை, அலட்சியமா நின்னாங்க. நான் பலமா கத்துனேன், பலத்த வாய் சண்டை இதனாலயே என்னமோ என் தம்பிக்கு ஒத்த கால எடுத்துட்டாங்க. வேணுமுன்னு செய்தாங்களோ, தெரியாம செய்தாங்களோ, ஆனா, என் தம்பி இப்போ நொண்டி. 'நீ, வளைந்து கொடுத்துப் பேசியிருந்தால், நான் இப்போ வளைஞ்சு வளைஞ்சு நடப்பேனா? ஒன்னாலதான் நான் நொண்டியாயிட்டேன்னு' தம்பி கேட்டுட்டான். ஏழைகளுக்கு ஆஸ்பத்திரியே சுடுகாடு ஆயிடுது.

முத்தையா, வளைஞ்து கொடுக்கவா, நிமிர்ந்து நிற்கவா என்று புரியாமல், ஒன்றை மட்டும் புரிந்து கொண்டான். மேலே அங்கே நின்றால், நிச்சயம் ஒரு கொலையாவது செய்ய வேண்டியது வரும். வரலாம். அவன் மௌனமாக வெளியேறினான்.

# 7

இருபது போர்ஷன்களைக் கொண்ட, பாழடைந்த மண்டபம் போன்ற வீட்டில், ஒரு போர்ஷனில், முத்தையாவின் தந்தை மல்லாந்து கிடந்தார். நார் நாராய் விட்டுப்போன நார்க்கட்டில். சுவரில் ஏறிய மூட்டைப் பூச்சிகள் வழுக்கி, அவர் தலையிலும், தோளிலும் விழுந்து கொண்டிருந்தன. அவரோ, வாதை கொடுத்த வலது காலை மடக்கினார். மடக்கியதை நீட்டினார். நீட்டியதை அம்புக்குறிபோல் ஆக்கினார். தலையை, மேலும் கீழுமாக ஆட்டினார். பக்கவாட்டில் சாய்ந்தார். அப்படியும் வலியை வலிமை கொள்ள முடியவில்லை. 'அய்யா.... அம்மா...' என்று அவர் கத்தியதும், அன்னம்மா ஓடி வந்தாள். அவளைப் பார்த்ததும், அவரால் கண்ணீரை அடக்க முடியவில்லை. அடக்க முடியாததை மறைப்பதற்காக, அவர் குப்புறப் படுக்கப்போனபோது, கட்டிலில் நான்கு சதுர அங்குலம் வியாபித்திருந்த ஒரு ஓட்டையில் முட்டி சிக்கி, வலி முன்னிலும் அதிகமாகியது. அந்தச் சமயத்தில் முத்தையாவும் உள்ளே வந்தான். மகனைப் பார்த்ததாலோ என்னவோ, வாய்விட்டு அரற்றினார்.

"நான் யாருக்கும் எந்தப் பாவமும் செய்யலியே.... ஓரமாய் நடந்த என்மேல, ஏத்திட்டுப் போன ஆட்டோ ரிக்ஷாவை துரத்தப்போன போலீஸ்காரனைக்கூட, வேண்டாமுன்னு கையெடுத்துக் கும்பிட்டேனே. கடவுளே! ஒன்னை நம்புன எனக்கே இந்த கதின்னா, ஒனக்கு எந்த கதியோ...?"

வலி தாளாது, அவர் சுரணையற்றுக் கிடந்தார். மூச்சு மட்டும் பெரிதாக வந்தது. நடையில் கூட துள்ளிக் குதித்துத் தாவும் தன் கணவன் பேச்சற்றுக் கிடப்பதைக் கண்டு, அன்னம்மா, தன் தலையிலேயே அடித்துக்கொண்டு, "என்னை விட்டுட்டுப் போயிடாதீங்க என் தெய்வமே.... என் தெய்வமே.... நீ போகாதே.... போயிடப்படாது" என்று ஓலமிட்டபோது, வெளியே நின்ற அவள் மகள்களும், குடித்தனக்காரர்களும், வீட்டுக்குள் வந்து பொங்கி வழிந்தார்கள். ஒருவர் உரிமையான கோபத்தோடு பேசினார்.

"நான் அப்போ காட்டியே சொல்றேன். ஆஸ்பத்திரிக்கு இட்டுன்னுப் போங்கோன்னு.... மயிலெண்ணெய் தடவுனால் எப்படிக் கேட்கும்? இப்போ உயிருக்கே... சரி... சரி... முத்து! சட்டுன்னு ஒரு சைக்கிள் ரிக்ஷாவை இட்டுக்கினுவா. ஆஸ்பத்திரியை விட புத்தூர் பூட்டா சரியாயிடும்.... உம்... ஜல்தி."

முத்தையா, அம்மாவைப் பார்க்க, அவள் மகனைப் பார்க்க, அந்த இருவரையும் எல்லோரும் பார்த்தார்கள். புத்தூர் போக

முடியாது. கையில் தேறாது. ஆஸ்பத்திரிக்கு எப்படியும் பத்து ரூபாயாவது வேண்டுமே! அன்னம்மா, தன் தாலியைத் தடவினாள். முத்தையா, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றதற்காக கிடைத்த ஐந்தாறு வெள்ளி முலாம் பூசிய கோப்பைகளையும், காய்லான் கடைக்காரனையும் இணைத்துப் பார்த்தான். இதற்குள் விஷயத்தை யூகித்துக்கொண்ட இரண்டு பேர், ஆளுக்கு இரண்டு நோட்டுக்களை நீட்டினார்கள்.

ஆஸ்பத்திரிக்கு அவர் கொண்டு போகப்பட்டபோது, வேளை கெட்ட வேளை என்றார்கள். வேளை கெட்டதாக இருந்தாலும், ஆஸ்பத்திரியில் வேலை கெடலாகாது என்று நினைத்துப் பார்க்காத அவர்களை, அன்னம்மா கையெடுத்துக் கும்பிட்டாள். அதை அங்கீகரிப்பவன்போல், முத்தையா உதட்டைக் கடித்தான். டாக்டர்கள், நர்ஸ்களோடு சாகவாசமாகப் பேசிக்கொண்டே, "நாளைக்கு கொண்டு வாங்க, அட்மிட் பண்ணணுமான்னு பார்க்கிறோம்" என்றார்கள். முத்தையா, பொங்கி வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, அங்கேயே நின்றான்.

முத்தையாவின் தந்தை, கண்விழித்து மீண்டும் அரற்றினார். மருத்துவர்களோ, சொன்னது சொன்னதுதான் என்பதுபோல் பேசிக் கொண்டிருந்தார்கள். இதற்குள் தெரிந்த டாக்டர் ஒருவர் போய்க் கொண்டிருந்தார். அப்பாவுவின் மகன்! உதவி கேட்கலாமா.... அப்பாவு இளக்காரமாய் நினைப்பாரே... இன்னும் ஏதாவது ஒரு கல்லூரித் தகராறு வந்தால், 'கோணிக்காரன் மகன், என் மகன்கிட்டே தான் வந்தான்' என்பாரே... என்ன வேண்டுமானாலும் பேசட்டும். இப்போ கால் முக்கியம்... கௌரவமல்ல...

முத்தையா, தட்டுத் தடுமாறி, அப்பாவுவின் மகனை நோக்கி விரையப் போனான். இதற்குள், ஒரு பேச்சுப் போட்டியில் அறிமுகமான மருத்துவக் கல்லூரி மாணவன், புன்னகையோடு 'ஹலோ' என்றான். முத்தையா, நிலைமையை விளக்கினான். அந்தப் பையன், டாக்டர்கள் அறைக்குள் போய் அலட்சியமாக எதையோ கேட்டான். டாக்டர்கள், திடீரென்று அலறியடித்தபடியே வெளியே வந்தார்கள். முத்தையாவின் தந்தை திடீர் 'விஐபி' ஆனார். அந்த மாணவன், முத்தையாவைப் பார்த்துச் சிரித்தபடியே "நான் மெடிக்கல் ஸ்டூடண்டுன்னு இவங்க அட்டண்ட் பண்ணல. ஒரு எம்.எல்.ஏ.வோட மகன்னு செய்றாங்க." என்றான் கண்களைச் சிமிட்டிபடியே. "என் பாதர் பதவி, முதல் முதல்ல, இப்போதான் ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படுது" என்றான்.

பதினைந்து நாட்கள் நகர்ந்தன.

அப்பாவின் கால்வலி குறைந்திருந்தது. ஆனால் கட்டுப் போடவில்லை. முதலில் எடுத்த 'எக்ஸ்ரே' தொலைந்துவிட்டதாம். இன்னொன்று எடுக்கணுமாம். இதையும் முத்தையா கேட்ட பிறகுதான், சொன்னார்கள். அட்மிஷன் சமயத்தில் 'விஐபி'யான தந்தை, அறிமுகம் இல்லாத வார்டில், மீண்டும் புழுவானார். காலுக்கு சுளுக்கு ஏற்பட்டதற்காக, பல பெரிய மனிதர்கள், தனி அறைகளில் இருந்தபோது, பல ஏழைகள், மண்புழுக்கள் மாதிரி, பாதி கிழிந்த பாயில் கிடந்தார்கள். ஏழை நோயாளி ஒருவர், "வந்து நாலு மாதமாகுது, என்ன நோயின்னு சொல்ல மாட்டேங்கறாங்க. எப்போ சார் வீட்டுக்கு போகலாமுன்னு கேட்டால், 'ஜாதகம் பாரு' என்கிறாங்க. நீ வாறதுக்கு ஒரு மாதத்துக்கு முன்னாடியே வந்தவன் நான். வயித்துல கட்டியா, கேன்சரான்னு இன்னும் கண்டுபிடிக்கல. மனசிருந்தால் முடியாதா?" என்று, இன்னொரு சக நோயாளியிடம் பெருமூச்சு கலக்கப் பேசுவதை, யதேச்சையாகக் கேட்ட முத்தையா, தன் தந்தையை மட்டுமே மையமாக வைத்து, ஆஸ்பத்திரியை வட்டமடித்ததை தவறாக நினைத்தான். 'இது ஒரு நோயாளியின் துயரம் அல்ல, நாட்டின் துயரம். இங்கே கேட்பாரற்றுக் கிடக்கும் பெரும்பான்மையான ஏழை நோயாளிகள், வெறும் நோயாளிகள் மட்டுமல்ல; இந்த நாட்டோட நோயின் அறிகுறிகள். என் அப்பாவைப் போல், எல்லோரும் தவிக்கிறாங்க. என் அம்மாவைப் போல், இந்த தாய்மார்களும் அரிசிக்குப் போராடுறாங்க.... அம்மா அரிசிக்குத் தவிக்கையில்... நான்.... நான்...'

ஒருநாள், அப்பா தூங்கிக் கொண்டிருந்த சமயம், எம்ப்ளாய்மெண்ட் டைரக்டரேட்டிற்குச் சென்றான். இயக்குநர் அறைக்கு, எடுத்த எடுப்பிலேயே நடந்தான். அவர் 'கான்பரன்ஸில் இருக்காராம், எப்போ வருவார் என்று சொல்ல முடியாதாம்... ஜாயிண்ட் டைரக்டரைப் பார்க்கப் போனால், அவரும் கான்பரன்ஸ்.... அஸிஸ்டெண்ட் டைரக்டர் அறையை நோக்கி நடந்தான். ஸ்பாட் இன்ஸ்பெக்ஷனுக்குப் போயிருக்காராம்.

அங்குமிங்குமாய் மேலதிகாரிகளைத் தேடிவிட்டு, கடைசியாக, சம்பந்தப்பட்ட கிளார்க்கைக் கண்டு பிடித்தான். விவகாரத்தைச் சொன்னான். புகார் கடிதம் அனுப்பியதை எடுத்துரைத்தான். அவரோ, அப்படி ஒரு கடிதம் வரவில்லை என்றார். முத்தையா, சர்டிபிகேட் ஆப் போஸ்டிங் தாளை ஆதாரமாகக் காட்டி, அழுத்திக் கேட்டபோது, அவர் இரண்டு மூன்று காகிதக் குப்பைகளை, வேண்டா வெறுப்பாகக் கிளறிவிட்டு, வெளியேறி விட்டார். அரைமணி நேரத்திற்குப் பிறகு, தேநீர் சுவையில், புகையை நனையவிட்டபடி வந்த அந்த ஊழியர், இன்னும் முத்தையா போகாமல் இருப்பதைப் பார்த்து விட்டு, "நான்தான் லட்டர் வர்லன்னு சொன்னேனே.... எங்கேயாவது மாட்டியிருக்கும்.... நாலு நாள் கழித்து வாங்க..." என்றார்.

"இந்த பைல்ஸ்ல இருக்குதான்னு பார்க்கிறீங்களா...?"

"இது முக்கியமான லட்டர்ஸ் இருக்கிற பைல்ஸ்... ஒங்க லட்டர் இதுல வராது. ஒருவேளை 'என்டிஸ்ல' போயிருக்கலாம்."

"என்டிஸ்னா.... என்ன ஸார்...?"

"என்னப்பா நீ, ஏதோ வேலைக்காரனை விரட்டுறது மாதிரி விரட்டுறே. போனால் போகிறதேன்னு சொன்னால், மறுநாள் கழித்து வா. ஏய் ராமா... மிட்லண்டில என்ன ஓடுது...."

முத்தையா, வன்முறை வார்த்தைகளை வாய்க்குள்ளேயே சிறையிட்டுக் கொண்டான். ஆவேசத்தை உள்வாங்கிக் கொண்டான். இயக்குநர் அறையை நோக்கி, கோபாவேசமாக நடந்தான். பியூன் தடுத்தார். டைரக்டரை, அதுவும் ஒரு ஐ.ஏ.எ. ஸை கண்டவங் கெல்லாம் பார்க்க முடியுமா? ஒரு அரசாங்கத் தாளைக் கொடுத்து எதற்காகப் பார்க்கணும், ஏன் பார்க்கணும் என்று எழுதிக் கொடுக்கச் சொன்னார். முத்தையா, சொன்னதைச் செய்தான். நடந்த மோசடியை அறிவித்ததும், இயக்குநரே வெளியே ஓடிவந்து, தன்னைக் கூப்பிடுவார் என்றுகூட நினைத்தான்.

இரண்டு மணி நேரம் வரை, யார் யாரெல்லாமோ இயக்குநர் அறைக்குள் போக்குவரத்து செய்தார்கள். அவன்தான் கூப்பிடப் படவில்லை. இறுதியாக, மணியடித்ததும் உள்ளே போய், முத்தையா கைப்பட எழுதிய 'ஸ்லிப்போடு' பியூன் வந்தார்.

"இன்னைக்கு ஐயா பிஸி... நீயே அனுப்பாமல், என்கிட்ட ஏய்யா அனுப்புனேன்னு திட்டிட்டார். ஒரு நாளும் திட்டாதவர்கிட்ட, உங்களால் திட்டு வாங்கிட்டேன். ஹி....ஹி....ஹி.... பரவாயில்ல..."

"ஏன் பார்க்க மாட்டாராம்....?"

"எது வேணுமுன்னாலும் எழுதி, தபாலுல அனுப்பணுமாம்."

"அதையெல்லாம் சுருக்கமாகவும், தெளிவாயும் ஸ்லிப்ல எழுதியிருந்தேனே.... உங்க அய்யா படிக்கலியா?"

"அவர் என்ன பரீட்சை பேப்பரை திருத்துற வாத்தியாரா? ஐ.ஏ.எஸ். அதிகாரி சாமி.. முதல்வரியை மட்டுந்தான் படிப்பார். அதுலேயே முழுசையும் தெரிஞ்சுக்குவார்."

"நாளைக்காவது பார்க்க முடியுமா?"

"அய்யாதான் தெளிவாச் சொல்லிட்டாரே. எழுதி அனுப்புங்க..... அய்யாவுக்கு நேரமில்ல... எம்ப்ளாய்மென்ட் ஆபீஸ் குறைபாடு களைப் போக்குறதுக்கு ஒரு கமிட்டி போட்டிருக்கு. அதுக்கும்

அய்யாதான் கன்வீனர்... ரொம்ப பிஸி. நம்மள கொஞ்சம் கவனிக்கப்படாதா....?"

"ஒய்யா பிஸி..... நீ பசி... ஒங்க எல்லாரையும் புசிக்கு முன்னால நாடு உருப்பட முடியாது...."

முத்தையா, ஆவேசமாக நடந்தான். உயர்நீதிமன்ற அலுவலகத்தை நோக்கி நடந்தான். 'டூப்ளிகேட் முத்தையாவை கண்டுபிடிக்க வேண்டும். அவன் தலைமை அதிகாரியிடம் முறையிட வேண்டும். முறையிடுவது என்ன முறையிடுவது..... ஆஸ்பத்திரிக்கு வரும் நேரமும், அரிசிக்காக ஆயத்தம் செய்யும் நேரமும் ஒரே சமயத்தில் வருவதால், எதையும் செய்ய முடியாமல் அம்மா தவிக்கும்போது, தங்கைகள் என்னை அர்த்தபுஷ்டியோடு பார்க்கும் போது, நான் வாழாவெட்டியாய் இருப்பதில் அர்த்தமில்லை. எனக்கான வேலையைப் பெற்றாக வேண்டும்.

முத்தையா, வேக வேகமாக நடந்தான்.

# 8

சென்னையில் பாரிமுனையில் படர்ந்திருந்த உயர்நீதிமன்றக் கட்டிடத் தொகுப்பை, முத்தையா, பொருமியபடியே பார்த்தான். வழக்கறிஞர்களும், அவர்களை முன்னாலும் பின்னாலும் சூழ்ந்த கட்சிக்காரர்களுமாய் கழுகுகளோ அல்லது காகங்களோ ஊர்வதுபோல் ஊர்ந்து கொண்டிருந்தார்கள். நீதி என்பது வேறு வேறு வியாக்கியானங் களுக்கு உட்பட்டது என்பதைக் காட்டுவதுபோல், பல்வேறு வகையான நீதிக் கட்டிடங்களை சமமின்றிக் காட்சியளித்தன.

எப்படியோ, டூப்ளிகேட் முத்தையா கிடைத்துவிட்டான். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில், எந்த கோர்ட், எந்த செக்ஷன் என்ற விவரத்தை அறிய முடியாமல் போனாலும் ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில் ஆளைப் பிடித்துவிடலாம் என்று நம்பியவன், நம்பியபடியே, 'எஸ்டாபிளிஷ்மெண்டில்' இருக்கும் பள்ளித் தோழர் கோபால்ராஜ் மூலம் ஆசாமியைப் பிடித்து விட்டதில் ஆனந்தப் பட்டான்.

என்றாலும், இவன் எதிர்பார்த்ததுபோல், டூப்ளிகேட் முத்தையா, பெல்பாட்டம் கீழேயும், பொம்மை சட்டை மேலேயுமாய் இதழோர குறும்போடு இல்லை. சரியான சோடா பாட்டல் கண்ணாடி பிடரிக்குள் ஒளியப் போவது போலிருந்த கண்கள். எதையோ

தொலைத்துவிட்டுத் தேடுவது போன்ற தோரணை. செக்ஷனில் இருந்து வெளிப்பட்ட டூப்ளிகேட் முத்தையா, கோபால்ராஜையும், ஒரிஜினல் முத்தையாவையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு "என்ன சார் விஷயம்" என்றான்- அதட்டாதவன் போலவும், அடங்காதவன் போலவும்.

கோபால்ராஜ், முத்தையாவைப் பேசவிடவில்லை. டூப்ளிகேட்டை அதட்டினான். "இவர் ஆண்டியப்பன் தெரு, பதினெட்டாம் நம்பர் நிசமான முத்தையா. உங்களைப் பார்க்கதுக்காக வந்திருக்கார். அப்படியே இதோ பக்கத்தில் இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்கும் போகப் போகிறார். அதுக்குமுன்னால உங்களை குசலம் விசாரிச்சிட்டுப் போகலாமுன்னு வந்தார். ஆள் மாறாட்டத்துக்கு ஐந்து வருஷம்; போர்ஜரிக்கு ஏழு வருஷம்."

டூப்ளிகேட் முத்தையா, பிரமித்தான். ஆனால், அதிர்ச்சியடைய வில்லை. வாழ்க்கையில் இப்படி, எத்தனையோ அதிர்ச்சிகளைச் சந்தித்தவன்போல், தலையை மேலும் கீழுமாக, பல தடவை ஆட்டிக் கொண்டான். பிறகு 'வெளில போய் பேசிக்கலாம்' என்றான், பிரச்சினையை அதன் போக்கில் விட விரும்பியவன்போல்.

மூன்றுபேரும், கேண்டீன் பக்கம் வந்தார்கள். கோபால்ராஜுக்கு டூப்ளிகேட்காரனின் நிதானம் விசித்திரமாகவும், ரசனைக்குரியதாகவும் இருந்தது. முத்தையா, அவன் பதிலளிப்பது வரைக்கும் காத்திருக்க முடியாத வேகத்தில், கைகளை முறுக்கிக் கொண்டான். டூப்ளிகேட், சிறிது நேரம் தலை கவிழ்ந்து தரையை நோக்கினான். பிறகு, சட்டென்று திரும்பி, முத்தையாவை நேருக்கு நேராகப் பார்த்தான்.

"இந்தா பாருங்க மிஸ்டர். முத்தையா! கணக்குல, கூட்டுக் கணக்குன்னு ஒண்ணு இருக்கது ஒங்களுக்குத் தெரியுமா?"

முத்தையாவும், கோபால்ராஜும் விழித்தார்கள். டூப்ளிகேட், பற்றறுத்தவன் போல் விளக்கினான்:

"காலேஜ்ல படிச்சுட்டு, வேல வெட்டியில்லாம கிராமத்துல திரிஞ்சேன். ஒங்களுக்கு தெரியுமுன்னு நினைக்கேன். ஒரு ஏழைக் குடும்பத்துல முதன் முதலா படிக்கிறவன் நிலைமை, படியாதவன் பாட்டைவிட மோசமானது. ஏன்னா, கலாச்சாரா ரீதியா ஒருவன் மாறும்போது, தன் குடும்பத்தையும் மாற்ற நினைக்கிறான். அது முடியுமா முடியாதான்னு தெரியுமுன்னாலயே, அந்த சாதியிலேயே, ஒரு பணக்காரன் அவன விலை கொடுத்து வாங்கிக்கிறான். இவனும், சௌகரியமாய் ஒட்டிக்கிறான். கடைசில எந்தக் குடும்பம் அவனைப் படிக்க வச்சுதோ, அது நிக்கிற இடத்துலயே நிக்குது. இந்த நிலைமை எனக்கு இனிமேல் வருதோ என்னமோ, இது வரைக்குவர்ல."

"மெட்ராஸ்ல இருக்கிற ஒரு அரசியல்வாதி சொந்த கிராமத்திற்கு வந்திருந்தார். 'ஐயாயிரம் ரூபாய்கொடு, வேல வாங்கித் தாரேன்'ன்னார். நான் யோசிச்சேன். வீட்ல சொன்னப்போ, என் தங்கச்சி கழுத்துச் செயின கழற்றிக் கொடுத்தாள். அம்மா காதுல இருக்கதை எடுத்துத் தந்தாள். அப்படியும் ஆயிரம் குறைஞ்சுது.... எப்படியோ அந்த ஆள்கிட்ட சொல்லி, அவர் பேர்லயும், என் பேர்லயும் பேங்க்ல ஜாயிண்ட் அக்கௌண்ட்ல நாலாயிரத்தைப் போட்டோம். இரண்டு மாதத்துல, சொன்னபடி இந்த வேலய வாங்கித் தந்துட்டார். கிருஷ்ணன் என்கிற பெயரை, முத்தையான்னு மாத்திக்க கஷ்டமாத்தான் இருந்தது. ஆனாலும், என் குடும்பத்தை வாழ வைக்கிற ஆசையில, அது பெரிசாத் தெரியல. இப்படி எனக்கு வேலை கிடைச்சதுல, என்னை மாதிரி ஒரு ஏழை பாதிக்கப் படுவார்னு அப்போ இவ்வளவு நிதர்சனமாய் புரிலய... ஒன்றை மட்டும் தெளிவாக்கணும். நான் முத்தையாவை ஏமாத்துறதாய் நினைச்சு இந்த வேலையில சேரல... கூட்டுக்கணக்கில் போட்ட நாலாயிரம் ரூபாய் போயிடக் கூடாதுன்னும், அந்த நாலாயிரத்துக்கு தன்னோட நகையை தந்த தங்கையின் எதிர்காலம் நல்லா இருக்கணுமுன்னு நெனச்சும், இந்தக் காரியத்தைப் பண்ணிட்டேன்."

கிருஷ்ணன், பேசிக் களைத்தவன்போல், அவர்களை மூச்சு முட்டப் பார்த்தான். மூவரும் சிறிது நேரம் பேசவில்லை. சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு, கோபால்ராஜ், விவகாரத்திற்கு வந்தான்:

"ஒங்களுக்கு ஆயிரம் இருக்குதுன்னால், இவருக்கு ஐயாயிரம் இருககு.... இவருக்கும் ஏழைத் தங்கச்சிங்க இருக்கு...."

கிருஷ்ணன், கோபால்ராஜை மேற்கொண்டு பேசவிடாமல், இடைமறித்தான்:

"இப்போ, நீங்க என்ன சொன்னாலும் கட்டுப்படுறேன் ஸார். அதுக்கு முன்னால ஒரு வார்த்தை நீங்க மேலதிகாரிங்ககிட்ட சொன்னால், எனக்கு வேலை போயிடுமே தவிர, ஒங்களுக்குக் கிடைக்காது. பிராக்டிக்கலாய் பேசுவோம். எனக்கு வேலையும் போய், ஜெயிலும் கிடைக்கிறதுனால, ஒங்களுக்கு எதுவும் லாபம் கிடைக்கப் போறதில்ல. அதனால ஒன்று நான் வேலையை ராஜினாமா செய்யணும்; இல்லன்னா வாங்குற சம்பளத்துல பாதியை நிஜமான முத்தையாவுக்குக் கொடுக்கணும்... எனக்கு இரண்டாவதுல இஷ்டம். இல்ல, மேலதிகாரிங்ககிட்ட ரிப்போர்ட் பண்ணணுமின்னாலும் பண்ணுங்க. இதை சவாலாய்ச் சொல்லல. சாகாமல் இருக்கோமே என்கிற தவிப்புல சொல்றேன். சே... என்ன வாழ்க்கை? படிக்க வச்ச குடும்பத்துக்கு நல்லது செய்ய நினைச்சா, அது சமூகத்துக்கு துரோகமாய் போகுது; சட்டத்துக்கு விரோதமாய் மாறுது... இப்போ என்ன ஸார் செய்யணும்...?"

வாழ வேண்டிய வயதில் - வாழ்க்கையின் சகல பரிமாணங் களையும் கண்டறிந்து களிக்க வேண்டிய வயதில் புராண கால கிருஷ்ணன் போல் வியூகம் வைத்தும், அதேசமயம் சூதுவாது என்ற சூட்சும புத்தி இல்லாமலும் பேசிய அவனைப் பார்த்தபோது, முத்தையாவுக்கு தானே உணர்ச்சிக் கண்ணாடியின் முன்னால் நிற்பது போலிருந்தது. அவனைப் பார்க்க பார்க்க, தனது குடும்ப நிலையை மட்டுமே உலகில் நிலவும் ஒரே பிரச்சினையாக நினைத்ததற்காக லேசாக வருத்தப்பட்டான். கோபால்ராஜ் அவசரப்பட்டான்.

"எனக்கு நேரமாகுது. ஏதாவது ஒரு முடிவுக்கு வாங்க. ஆயிரம் சொன்னாலும் நீங்க செய்தது தப்பு மிஸ்டர். கிருஷ்ணன்."

"அதைத்தான் நானே ஒத்துக்கிட்டேனே ஸார். முதல் கோணல், முற்றும் கோணல். வேலைக்காக ஒரு சோமாறிகிட்ட பேரம் பேசினேன். கடைசில எல்லாமே கோணலா போயிட்டு. மிஸ்டர். முத்தையாவுக்கு நான் வாங்குற சம்பளத்தில் மாசா மாசம் பாதியைக் கொடுத்துடுறேன். அவருககுக கடமையாற்றாமல் சம்பளம்; எனக்கு உரிமை இல்லாமல் சம்பளம். இதுல எனக்குச் சம்மதம்."

கிருஷ்ணன், தான் போட்டிருந்த கண்ணாடிக்குள் அழுதானோ, சிரித்தானோ... ஆனால், வெறுமையாகச் சிரித்தான். வாழ்க்கையின் வெம்மையில் வறுத்தெடுக்கப் படுபவன்போல், தழுதழுத்த குரலில் சிரித்தான்.

முத்தையா, அந்த பிஞ்சுப் பழத்தையே பார்த்தான். அவன் பிஞ்சாக இல்லாமலே, பழமாக வற்றி - வாடிப்போன பழமாக, அவனுக்குத் தோன்றியது. குடும்பப் பாசத்தை, தலையில் தூக்கிப் போட்டுக்கொண்டு, தானாகச் சிரித்த அவனைப் பார்த்தபோது, தன் குடும்பமும், அவன் குடும்பமும் வேறல்ல என்று தோன்றியது.

முத்தையா, புறப்படப்போகும் அவரசத்தில் பேசுபவன் போல் பேசினான்:

"நீங்களாவது நல்லா இருந்தால் போதும் மிஸ்டர். கிருஷ்ணன். ஆனால், பாதிச் சம்பளம் கொடுக்கிறதாய் சொன்னால், நான் திருப்தியடைஞ்சுடுவேன்னு நினைச்சிங்க பாருங்க, அங்கதான் தப்புப் பண்ணிட்டிங்க. ஒங்களை சமூக விரோதியாய் நினைச்சு, ரகளை செய்ய வந்தேன். ஆனால், நீங்க வாழ்க்கையோட ரகளை தாங்க முடியாமல் தவிப்பவர்னு புரிஞ்சுக்கிட்டேன். சரி, நான் வாரேன். போறதுக்கு முன்னால ஒரே ஒரு வார்த்தை. எம்ப்ளாய்மெண்ட் டைரக்டருக்கு அவசரத்துல எல்லா விபரத்தையும் எழுதிப் போட்டுட்டேன். அநேகமாய் அது குப்பைத் தொட்டிக்குள்ளே போயிருக்கும். ஒருவேளை, அது போகாட்டால், பார்க்க வேண்டியவங்களைப் பார்த்து,

குப்பைத் தொட்டில போடவைங்க. வாறேன் கிருஷ்ணன். ஒங்களப் பார்த்தது, என்னை நானே பார்த்துக்கிட்டது மாதிரி இருக்குது"

கிருஷ்ணன், பிரமித்து நின்றான். அவனால் பேசக்கூட முடியவில்லை. முத்தையாவைப் பார்த்துக்கொண்டு நின்ற கண்களில் பனி படர்கிறது. பேசப்போன நாக்கே, வாய்க்கு தாழ்ப்பாளாகியது. அவன் மலைத்து நின்று, மறுபடி தலையை ஆட்டியபோது, முத்தையா அங்கே இல்லை.

கோபால்ராஜ், முத்தையாவை ஆச்சரியமாகப் பார்த்தான். முத்தையா சொல்வதை அவனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதேசமயம், அவனை மறுத்துப் பேசவும் அவனுக்கு மனம் வரவில்லை. தன்னால் நியாயம் என்று நினைத்து அதை செயல்படுத்த முடியாமல்போய், அதை இன்னொருத்தன் செய்து காட்டினால் என்னென்ன உணர்வுகள் வருமோ, அந்த உணர்வுகளில் அவன் அல்லாடினான். பொறுமை, சுயபரிசீலனை, குற்றவுணர்வு, மலைப்பு, மரியாதை....

கோபால்ராஜிடம் சொல்லிவிட்டு, முத்தையா வெறுமையோடு நடந்து கொண்டிருந்தான். பலப்பல வழக்கறிஞர்கள் கும்பல் கும்பலாகக் கூடியிருந்த அறைகளை நோக்கியபடியே, தன்பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தான். தற்செயலாக வழக்கறிஞர்களின் அறை ஒன்றை, அவன் நோக்கியபோது-

பேராசிரியர். பெருமாள்சாமி, கரங்களை மார்புக்குக் குறுக்காக கிராஸாக வைத்துக்கொண்டு, ஒரு நாற்காலியின் நுனியில். கீழே விழப்போகிறவர்போல் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகேயுள்ள 'ஸ்டூலில்' மேகலா, விக்கித்துப்போய் இருந்தாள். இரண்டு அறைகளைக் கொண்ட அந்த ஹாலில், சீனியர்களும், ஜூனியர்களும், கறுப்புக் கோட்டுக்களைக் கழற்றிக் கொண்டும், போட்டுக் கொண்டும், ஒருவருக்கொருவர் கோர்ட் விவகாரங்களை 'கமென்ட்' அடித்துக் கொண்டும் தென்பட்டார்கள். மொத்தத்தில் அந்த அறையில், கட்சிக்காரர்கள் தவிர, மற்ற எல்லாருமே ஆனந்தக் களியாட்டத்துடனேயே இருந்தார்கள்.

பேராசிரியர். பெருமாள்சாமியை எதிர்நோக்கிய நாற்காலியில் யாரும் இல்லாததில் இருந்து, அவர் வக்கீலுக்காகக் காத்திருக்க வேண்டும் என்று, முத்தையா அனுமானித்துக் கொண்டான்.

"ஸார்....!" என்று சொல்லிக்கொண்டே, முத்தையா உள்ளே ஓடினான். மேகலா, அவனைப் பார்த்துவிட்டு, பரபரப்பாக எழுந்தாள். வேறொரு சமயமாக இருந்திருந்தால், முத்தையா, அவளைப் பார்த்து, 'நீங்க உட்காருங்க...' என்று சொல்லியிருப்பான். இப்போது, தனது

ஆசிரியரிடம் பேசவேண்டும் என்ற அவாவில், அவள், தன்னைப் பார்த்து எழுந்தது நியாயமே என்பது மாதிரி, அவள் கொடுத்த இடத்தில் அமர்ந்தான். ஒருவார காலமாக பேராசிரியரைப் பார்க்க முடியாமல் போனதற்கான காரணத்தை, அவருக்குப் பாதியும், மேகலாவுக்கு மீதியுமாகச் சொல்லி முடித்தான். கடைசியில்-

"நான் ஒரு இடியட் ஸார். என்னைப் பற்றியே பேசிட்டு இருக்கேன். நீங்க"

பேராசிரியர். பெருமாள்சாமி, தன் மகள் மேகலாவை வெறுமையோடு பார்த்தார். பிறகு, முத்தையாவைப் பார்த்து விரக்தியோடு சிரித்தார். 'அமுல்பேபி' மாதிரி உப்பிய கன்னங் களோடு-கூடில்லாத வெள்ளை வேளேர் 'பிளாங்' கண்களோடு காட்சி தந்த பேராசிரியர் முகத்தில், அவரது பிரச்சினைகளின் அளவுக்கு சுருக்கங்கள்; ஈரமில்லாத சிரிப்பு; எங்கேயோ துழாவும் கண்கள்.

முத்தையாவால், அந்த முன்னாள் கல்லூரி முதல்வரை நேரடியாகப் பார்க்க முடியவில்லை. அவர் பார்வையை தவிர்க்கும் விதத்தில், மேகலாவைப் பார்த்தான். மொட்டையான கழுத்தோடும், கலங்கிய கண்களோடும், சுவரோடு சுவராகச் சாய்ந்து நின்ற அவளின், பார்வை தாளமாட்டாது-அதைத் தவிர்க்கும் வகையில் பேராசிரியரையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு, "நீங்க..."

பேராசிரியர். பெருமாள்சாமிக்கு யாராவது ஒருவரிடம் புலம்பியாக வேண்டும் போலிருந்தது. இது முத்தையாவாக இருந்ததில் திருப்தி. யாராவது ஒரு தப்பு செய்தால், அது நிஜமாகவே தப்புத்தானா அல்லது தான் தப்புக் கணக்குப் போடுகிறோமா என்று நினைத்துப் பார்ப்பவர் பேராசிரியர். இப்போது தான்படுவது பெரிய கஷ்டமா என்பதில் அவருக்கு லேசான சந்தேகம். முத்தையாவின் தோளில் கைபோட்டபடியே, புலம்பாக் குறையாக, புழுக்கம் தாளாதவர் போல், சொல்ல முடியாதவர்போல் சொல்லிக்கொண்டே போனார்:

"என்னை கல்லூரியில் இருந்து சஸ்பெண்ட் செய்த காலேஜ் டிரஸ்ட் போர்ட் உத்தரவை நிறுத்தி வைக்கிறதுக்காக வக்கீல் மூலம் ஹைகோர்ட்ல 'ரிட்' போட்டேன். ரிட்பெட்டிஷன் அட்டாச்சுது. ஆபரேஷன்ஸ் ஆப் தி சஸ்பென்டின் ஆர்டர் ஸ்டேயட்' என்று கோர்ட் ஆர்டர் போட்டது. ஒரு நகல் எடுத்து டிரஸ்ட் போர்டுக்கும் அனுப்பி வச்சாங்க. நானும் கோர்ட் ஆர்டரை எடுத்துட்டு டிரஸ்ட் போர்ட் சேர்மன்கிட்டே போனேன். நான் கொடுத்ததை வாங்க மறுத்துட்டார். அதுமட்டுமில்ல, "கோர்ட்டில் 'ரிட்' போட்டுட்டா, உலகமே நின்னுடுமா என்ன"ன்னு இளக்காரமாய் சிரித்தார். எனக்கே ஆச்சரியம். கோர்ட்

ஆர்டரை அவமதிச்சு, மனுஷன் ஆபத்துல சிக்கிக்கக்கூடாதேன்னு அவருக்காகக்கூட நான் லேசாய் 'பீல்' பண்ணுனேன். இலைமறைவு காய்மறைவாய் ஆர்டரோட இம்ப்ளிகேஷன்ஸ் எப்படின்னு விளக்கினேன். உடனே அவரு, 'ஒங்க கோர்ட் ஆர்டர்ட நாக்கு வழிக்கக்கூட ஆகாது. ஹைகோர்ட் நீதிபதிகள் அத்தனை பேரும் இங்கே வந்து, ஒங்களச் சேர்க்கச் சொன்னாலும் முடியாது. உங்களால இன்னும் என்னலாம் ஆகுமோ, என்ன செய்ய முடியுமா அதைச் செய்து பாருங்கன்'னு சொல்லிட்டார்.

மூச்சை பிடித்துப் பேசிவிட்டு, இப்போது பேச்சைப் பிடித்து மூச்சைவிட்ட பேராசிரியரை நோக்கி முத்தையா கேட்டான்.

"அப்புறம்..."

"நான் என் வக்கீல்கிட்ட போனேன். அவர், டிரஸ்ட் சேர்மன், உங்கள சேர்த்துக்கமாட்டேன்னு சொன்னதுக்கு 'எவிடென்ஸ்' இல்ல. நாளைக்கு, அவரே 'பெருமாள்சாமி ஒட்டில சேர்ல'ன்னு தெரிவிக்கலாம். அதனால, நானும் உங்களோட வரேன். டிரஸ்ட் போர்ட் சேர்மனைப் பார்ப்போம், என்றார். வக்கீலை கூட்டிக்கிட்டுப் போறது சும்மாவா? போனால், டிரஸ்ட் போர்ட் அப்பாவு, 'பேச வேண்டியதை கோர்ட்ல பேசுங்க. இங்க ஒங்க பருப்பு வேகாது'ன்னுட்டார். பெருமாள்சாமியை சேர்க்க முடியாதுன்னு எழுதிக் கொடுங்கன்னு வக்கீல் கேட்டதுக்கு, 'நான் எதுக்குய்யா எழுதிக் கொடுக்கணும்? இதுவரைக்குந்தான் மரியாதை. இனிமேல் நின்றால், என்ன நடக்குமின்னு எனக்கே தெரியாது'ன்னார். வக்கீல் பயந்துட்டார். என்னை பலவந்தமாய் இழுத்துட்டு, காலேஜ் காம்பவுண்டுக்கு வெளியே வந்துதான் மூச்சு விட்டார்."

பேராசிரியர். பெருமாள்சாமி, மீண்டும் மூச்சு வாங்கினார். மேகலா, தந்தைக்குப் பின்புறமாக வந்து, அவர் நாற்காலி விளிம்பைப் பற்றிக்கொண்டு நின்றாள். முத்தையாவுக்கு, ஏதோ ஒரு சஸ்பென்ஸ் கதையை யாரோ ஒருவர் வாசிக்கக் கேட்பது போலிருந்தது. அதில் அல்லாடுவது தனது பேராசிரியர் என்ற நினைவு ஏற்பட்டதும், அவன் படபடத்தான். முன்னாள் கல்லூரி முதல்வரை மௌனமாகப் பார்த்தான். அவர் தொடர்ந்தார்:

"வக்கீல் மூலம் கோர்ட்ல இன்னொரு பெட்டிஷன் போட்டேன். கோர்ட் ஆர்டர்படி என்னைச் சேர்த்துக்கல; சேர்க்கும்படி, டிரஸ்ட் போர்டுக்கு 'டைரக்ஷன்' கொடுக்கும்படி கேட்டேன். நான் எங்கே கேட்டேன்? வக்கீல் சொன்ன இடத்துல கையெழுத்துப் போட்டுக் கேட்டேன். டிரஸ்ட் போர்ட் தன்னோட உத்திரவை மதிக்காததுல நீதிபதிக்கே கோபம். அவரோட சேம்பர்ல, தனிப்பட்ட முறையில,

டிரஸ்ட் போர்ட கண்படி திட்டினார். தனியார் கல்லூரி, தனி மனிதன் இப்படி, தனி என்கிற வார்த்தை இருக்கது வரைக்கும் நாடே உருப்படாதுன்'னு கத்தினார்!

"ஆனால், கோர்ட்டுக்கு வந்ததும், அவராலயும் ஒண்ணும் செய்ய முடியல. நான் தாக்கல் பண்ணுன பெட்டிஷன்ல, 'என்னைப் பத்து நாளைக்குள் சேர்க்கணு'முன்னு டைரக்ஷன் கொடுத்தார். அதனோட நகல கோர்ட் மூலமும், என் மூலமும் டிரஸ்ட் போர்டுக்கு அனுப்பியாச்சு. பத்து நாளும் போய், பதினைந்து நாளும் வந்துட்டு. டிரஸ்ட் போர்ட், ஹைகோர்ட் ஆர்டரை மதித்ததாய் தெரியல. என்ன செய்யலாமுன்னு வக்கீலைக் கேட்க வந்தேன். 'கோர்ட்ல, கண்டம்ப் ஆப் கோர்ட் போடலாம்; டிரஸ்ட் போர்ட், நல்லா மாட்டிக்கிட்டு' என்றார். மாட்டிக்கிட்டது நான்தான். ஹைகோர்ட்டே தன்னோட உத்திரவை ஒரு 'பார்ட்டி' மதிக்கலன்னா, அதுதானே ஆக்ஷன் எடுக்கணும். அதுக்கும் நானே பெட்டிஷன் போடணுமாம். கோர்ட், டிரஸ்ட் போர்டுக்கு நோட்டீஸ் அனுப்புமாம். அப்புறம் விசாரணையாம். அப்புறம் ஆக்ஷனாம். அப்புறம் அப்பீல். 'ரிட்' வாங்கி ஒரு மாசம் ஆகுது. இன்னும் அது அமலாகல. அதுக்குக் காரணமானவனைத் தண்டிக்க முடியல. மேலும் மேலும், நான்தான் பெட்டிஷன் போடணுமாம். என்னப்பா கோர்ட் இது?"

முத்தையா, பேராசிரியரைப் பார்க்க முடியாமல், மேகலாவைப் பார்த்தான். அவளோ, அவன் அங்கிருப்பதை அறியாதவள்போல் மேல்கூரையைப் பார்த்தாள். உதட்டை, காரணமில்லாமல் கடிப்பது போலிருந்தது. காரணமும் இருக்கலாம். ஒருவேளை கண்களில் தேங்கிய நீர், கீழே விழாமல் இருப்பதற்கு அது ஒத்துழைப்புக் கொடுக்கிறதோ என்னவோ...

முத்தையா, பேராசிரியரிடம் பக்குவமாகப் பேசினான்:

"ஸார்...! எடுத்த காரியத்தை இடையில் விடுறது தப்புன்னு நீங்களே சொல்விங்க...."

"அது முன்னால..."

"அதைத்தான் நான் இப்போ சொல்றேன். பொறுத்ததே பொறுத்திங்க, இன்னும் கொஞ்சம்..."

"விஷயம் நீ நினைப்பது மாதிரி இல்ல. கோர்ட் அவமதிப்பு வழக்குன்னு வந்துட்டா, அது எத்தன மாசம், வருஷம் இழுக்குமோ... கோர்ட் என பக்கம்.... நியாயம் என் பக்கம்... ரிட் கிடைத்து ஒரு மாதம் ஆகுது. ஆனாலும், அமலாகல. என்ன நாடுப்பா இது? என்ன கோர்ட்டுப்பா? என்ன சட்டதிட்டம்?"

"எப்படியோ இறங்கிட்டிங்க..."

"இப்போ கோர்ட் என்கிற குளத்துல, படிக்கட்டுலதான் நிக்கேன். வெளியேறணுமுன்னால், இப்போ வெளியேறினால்தான் உண்டு. அப்புறம் கரைசேர நான் நினைச்சாலும் முடியாது. இந்த விஷயத்தை விடுறதுக்கு வக்கீலைப் பார்க்கலாமான்னு யோசிக்கிறேன்."

மேகலா, தோள் துடிக்கப் பேசிய தந்தையின் தோளை செல்லமாகவும், ஆதரவாகவும் தட்டிக்கொண்டே, அவர் கண்ணில் படும்படி முன்னால் வந்தாள். பிறகு முத்தையாவைப் பார்த்துப் பேசினாள்:

"போராட்டமுன்னு வந்துட்டால், எதுக்கும் தயாராய்த்தான் இருக்கணும். இந்த நாட்ல கோர்ட்ல ஜெயிக்கிறவங்க கூட, பணக்காரக் கும்பல்கிட்ட தோற்கவேண்டிய நிலமை இருக்கத்தான் செய்யுது. அதையும் மீறி நாம் நின்னு காட்டணும். அப்பாவுக்கு நான் சொன்னால் புரியமாட்டக்கு. நீங்களாவது சொல்லுங்க...."

பேராசிரியர். பெருமாள்சாமி, துடிதுடித்துப் பதிலளித்தார்:

"மேகலா! நீ சொல்றதாய் இருந்தால் முழுசாய்ச் சொல்லணும். ரிட் மனு போட ஆயிரத்து ஐநூறு ரூபாய். ரிட் ஆர்டரை கலெக்ட் பண்ண, கோர்ட் குமாஸ்தாக்களுக்கு இருநூறு ரூபாய். வக்கீலை, டிரஸ்ட் போர்ட் சேர்மன்கிட்ட கூட்டிப் போனதுக்கு முந்நூறு ரூபாய். பெட்டிஷன் மேலே, கோர்ட் போட்ட டைரக்ஷன் ஆர்டரை கலெக்ட் பண்ண, கோர்ட் ஊழியர்களுக்கு கொடுத்தது நூறு ரூபாய். இப்போ கோர்ட் அவமதிப்பு பெட்டிஷன் போட ஆயிரம் ரூபாய். ஏற்கனவே இவளோட தங்கச் செயின் ரிட்டுக்கு அடகாச்சுது. பெட்டிஷனுக்கு விற்பனையாச்சுது. வெள்ளிக் கொலுசு, ஆர்டரை கலெக்ட் பண்ண போயிட்டு. இனிமேல் பாத்திரங்களும், மானமுந்தான் மிச்சமாய் இருக்கு. இதை ஏன் முத்தையாகிட்டே சொல்ல மாட்டக்கே...?"

மேகலா, தந்தையை அதட்டினாள்:

"என்னப்பா நீங்க, மூணாவது மனிதர்கிட்ட எதை எதைப் பேசணுமுன்னு ஒரு லிமிட் வேண்டாமா?"

முத்தையா, மேகலாவை திடுதிப்பென்று பார்த்தான். அவளோ, அவன் பார்வையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"மேடம்! என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்க. ஏன்னா, ஒங்களோட இப்போதைய நிலைக்கு நானும் ஒரு காரணம். அதுக்காக, என்னை மூணாவது மனிதன்னு மட்டும் சொல்லாதிங்க, எங்கப்பா காலொடிந்து கிடக்கிறாரு... அவர ஆஸ்பத்திரில சேர்க்கதுலயும்... அதுக்காக அலையுறதுலயும் ஒங்களப் பொறுத்த

அளவுல மூணாவது மனுஷனாஆனது உண்மைதான். ஆமாம் இனிமே அப்படி ஆகமாட்டேன் மேடம்."

மேகலா, முத்தையாவையே பார்த்தாள். 'கல்லூரியில் கம்பீரமாகப் பேசிய இவர் முகம், இப்போது எவ்வளவு குழந்தைத் தனமாக, அழாக்குறை தோரணையில் இருக்கு!

'அவள் நெஞ்சம் நெகிழ்ந்தது. தங்களுக்காக ஒருவர் உதவுகிறாரோ இல்லியோ, உள்ளத்தால் உருகுகிறார் என்பதை அறிய அறிய, அவள் கண்கள் பனித்தன. அவனிடம் பேசினால் எங்கே அழுகை வந்துவிடுமோ என்று அஞ்சியவள்போல், முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக்கொண்டு, சிறிது நேரம் பேசாது இருந்தாள். பிறகு, "ஐ அம் ஸாரி மிஸ்டர். முத்தையா. இன்னும் எவ்வளவோ பட வேண்டியதிருக்கு. அப்பா இதுக்குள்ள ஆதரவு தேடப் பார்க்கிறாரேன்னு சொல்ல வந்தேன். சொன்னது தப்புத்தான். நீங்க அதை சீரியஸாய் எடுத்துக்கப்படாது."

முத்தையாவால் எதுவுமே பேச முடியவில்லை. ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு அறிவொளி பாய்ச்சிய பேராசிரியர் பெருமாள்சாமி, ஏதோ ஒரு வக்கீலின் வருகைக்காகக் காத்திருப்பதும், பயணத்தின் முடிவு தெரியாது பதை பதைப்பதும், அவனின் சொந்தப் பிரச்சினைகளை சிறிதாக்கியது. பதவியும் பறியோய், நீதியும் பறிபோய்-நிர்க்கதியாய் நிற்கும் அவரையும், மேகலாவையும் பார்த்துவிட்டு, கறுப்பு கௌன் போட்ட வழக்கறிஞர்களைப் பார்த்தான். நீதிக்குத் துக்கம் விசாரிக்கிறார்கள் போலும்...

மேகலா, அவன் அந்நியன் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில், "வாங்களேன், கொஞ்சம் வெளியே போய்ட்டு வரலாம்..." என்றாள்.

முத்தையாவும், மேகலாவும், உயர்நீதிமன்ற கட்டிட காம்பவுண்டுக்கு வெளியே வந்தார்கள். பல்லவ பஸ்களும், பயணிகளும், சந்து பொந்துகளில் வாழ்பவர்களும், இவர்களைப் பற்றிய எந்த பிரக்ஞையும் இல்லாமல் போகிறவர்களுமாக, சைனா பஜார் அல்லோகலப்பட்டது. இருவரும் ஒரு கிளிஜோஸ்யர் அருகே தற்செயலாக வந்தார்கள்.

கூண்டுக்குள் அகப்பட்ட கிளி, சிறகில்லாத சிறுமையோடு வெளிவந்து, யாரோ ஒருவருக்கு ஒரு கார்டை எடுத்துக் கொடுத்தது.

மேகலா, அந்தக் கிளியை பார்த்துக்கொண்டே பேசினாள்:

"அதோ அந்த உயர்நீதிமன்றக் கட்டிடமும், இந்த கிளிக்கூண்டு மாதிரிதான். அந்தக் கட்டிடத்திற்குள் சிறையிருக்கும் கிளியும் உண்மை

என்ற சிறகுகள் வெட்டப்பட்டு, பல்வேறு வித ஜோடிப்புக்களுக்கு ஏற்ப வெளிப்பட்டு வெளிப்பட்டு, மீண்டும் சிறையாகிறது. எனக்கென்னமோ, இந்த கிளிக் கூண்டிற்கும், கோர்ட்டிற்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. இன்னொரு ஒற்றுமை. கோர்ட்டுக்கு அலைகிற ஒவ்வொருவரும் கடைசியில் இந்த கிளி ஜோஸ்யரிடம் வந்து ஆறுதல் கார்டை படிக்க வருகிறார்கள். இப்போ எனக்கே அப்படிப்பட்ட ஆறுதல் தேவைப்படுகிறது."

மேகலா, இடுப்பில் இருந்த மணிப்பர்ஸை எடுத்து, பத்துப் பைசாவை எடுத்து, கிளிக்காரரிடம் கொடுக்கப் போனாள். முத்தையா, தன்னையறியாமலே, அவள் கையைப் பிடித்து, வேறு இடத்திற்கு இழுத்துக்கொண்டு போனான். சிறிது தூரம் சென்றபின், "ஐ அம் ஸாரி..." என்று அவள் கையை விடுவித்தான். அவளோ, ஒரு ஆண்மகன் கரம்பட்ட பாதிப்பு ஏதும் இல்லாதவள் போல், "பலர், மூட நம்பிக்கையால் நாம் பின்தங்கி இருக்கோமுன்னு சொல்றாங்க. எனக்கோ, நாம் பின்தங்கி இருக்கதால்தான், மூட நம்பிக்கையோட இருக்கோமுன்னு தோணுது. இப்போ எங்கள் பிரச்சினைக்கு நீங்கள்தான் பைனல். டிரஸ்ட் போர்ட் மேல் கோர்ட் அவமதிப்பு வழக்குன்னு வந்தால், கோர்ட் ஆர்டரை அமல்படுத்தக் கூட நாங்கதான் பணம் செலுத்தணும். இப்போ எங்க கையில இருக்கது நூறுக்கு மேல் தேறாது. அதேசமயம், அப்பாவை ஒரு நிமிஷமாவது பிரின்ஸ்பால் நாற்காலியில் உட்கார வைக்கா விட்டால், நான் வாழ்றதுல அர்த்தமில்லன்னும் நினைக்கேன்... சிந்திச்சு சிந்திச்சு, சிந்தனையே இல்லாமப் போயிட்டு. எப்படி இருந்த அப்பா, எப்படி ஆயிட்டார்னு சொல்ல வேண்டியதில்ல. நீங்கதான் ஒரு முடிவு சொல்லணும். நீங்க என்ன சொன்னாலும் கட்டுப் படுவோம். நீங்க அந்நியர் இல்லை. சொல்லுங்க..."

முத்தையா, பொறுப்பை உணர்ந்தவன்போல், அவளைப் பார்த்தான். எப்படிப் பதில் சொல்வது? அவளோ அவன் ஒவ்வொரு உதட்டசைவையும் நீதிமன்றம் நோக்கிய பயணப் படகை ஒட்டும் துடுப்பாக நினைக்கிறாள். கோர்ட்டில் தொடர்ந்து போராட முடியுமா? முடியுமோ, முடியாதோ.... பேராசிரியர். பெருமாள்சாமியை மீண்டும் முதல்வராகப் பார்க்கவேண்டும். இந்த மேகலாவின் முகத்தில் மீண்டும் பழுதடையாத கம்பீரத்தைப் பார்க்கவேண்டும். முத்தையா, மனதுக்குள் ஒரு கணக்குப் போட்டுக்கொண்டான். பிறகு, தெளிவாகச் சொன்னான்:

"கோர்ட்டில் போராடுவோம். ஒங்களுக்கு இனிமேல் பணக் கஷ்டம் வந்தாலும், மனக் கஷ்டம் வராது."

# 9

முத்தையா, ஏதோ ஒரு பெரிய காரியத்திற்கு உறுதுணையாக நிற்கப்போகிற பெருமிதத்தில், கல்லூரிக்குள் நுழைந்தான். நடந்து கொண்டிருப்பது அளவுக்கு மிஞ்சிய அநியாயம் என்று அறியும் போது, அதை வெல்லும் வழி தெரியவில்லையானாலும், வென்றாக வேண்டும் என்ற உறுதி பிறக்குமே, அப்படிப்பட்ட நிராயுத பாணியான உறுதியுடன், பேராசிரியர். பெருமாள்சாமிக்கு, நிதி திரட்டப் போகிறோம் என்பதைவிட, அவருக்கு தோளோடு தோளாக, மாணவர் படை நிற்கிறது என்பதை, நீதிமன்றத்திற்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் உணர்த்தப் போகிறோம் என்ற உணர்ச்சி வேகம்.

முட்டிகளுக்குக் கீழே விலகிய வேட்டியை, ஒரு கையால் இழுத்து மூடியபடி, மண்குத்துக்கூட தாங்காத மிதமான செருப்புடன் பலமாக நடந்தான். மாணவ சகாக்களிடம், தங்கள் முன்னாள் முதல்வர் படும் வேதனையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அவசரத் தாகம். மாணவர்களை ஒன்று திரட்டி, மனோவேகத்தில் ஓடி, அத்தனை கொடுமைகளையும் மின்சார வேகத்தில் சாடவேண்டும் என்ற துடிப்பு. முத்தையா, தன் கண்ணில் பட்ட ஒரு மாணவக் கும்பலை நோக்கி நடந்தபோது, அந்த இளங்கும்பல், அவனைப் பார்த்து நகர்ந்து, அவன் பேச்சைத் துவக்குவதற்கு முன்பாக, நான்கைந்து கரங்கள், அவன் கைக்குள் ஒரு வாரப் பத்திரிகையைத் திணித்தது. அவர்களை, மாணவ நீரோக்களாக நினைத்து முத்தையா சாடப் போனபோது, அவன் கை சுமந்த பத்திரிகையை, ஒருவன் பிரித்துக் காட்டினான். அந்த வியாபாரப் பத்திரிகையில் பிரிக்கப்பட்ட பக்கத்தில் -

"கல்லூரி முதல்வரா? காம முதல்வரா?"

என்று கறுப்பு பிளாக்கில், வெள்ளையெழுத்தில் தோன்றிய தலைப்பு. 'பாக்ஸ் அயிட்டம்'. மாணவர்கள், அவன் விலாவில் மௌனமாக இடித்து, அவனைப் படித்துப் பார்க்கும்படி மோவாய்களை முன்னும் பின்னுமாக ஆட்டினார்கள்.

முத்தையா, தனக்குள்ளேயே படிக்கப் போனான். முதல் வரியைப் படித்துவிட்டு, சகாக்களைப் பார்த்தான். பிறகு ஒரே மூச்சில் படித்து, படித்த சுமை தாங்க மாட்டாமல், அந்தப் பத்திரிகைக்குள் மிதந்து, நீச்சலடிக்க முடியாமல் மூழ்கிப் போனவன் போல், அதையே வெறித்துப் பார்த்தான். அதில், இப்போது எழுத்துக்கள் தெரியவில்லை. பேராசிரியர். பெருமாள்சாமியும், மேகலாவும் தோன்றினார்கள். அவர்கள் இருவர்

மேனிகளையும் 'பிளாக்குகளாக்கி' அவர்கள் உயிர்களையே வெள்ளையெழுத்துக்களாக விட்டிருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. அந்த அரைப்பக்க 'பெட்டிச்' செய்தி இதுதான்:

"வடசென்னை கல்லூரி ஒன்றில் சாமி என்ற பெயரில் முடியும் முன்னாள் முதல்வரை, கல்லூரி பணத்தைக் கையாடிய குற்றத்திற்காக, நிர்வாகம் சஸ்பென்ட் செய்தது. அந்த முன்னாள் முதல்வரும், மாணவர்களைத் தூண்டிவிட்டு, பறிபோன பதவியைக் கைப்பற்று வதற்காக, என்னவெல்லாமோ செய்வதாக, எமது புலனாய்வுத் துறைக்கு செய்திகள் வந்தன. அவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் கண்ணால் கண்டதைக் கேட்டு, தீர விசாரித்து, தெளிந்து, இந்த திடுக்கிடும் தகவலை, இதோ உங்களுக்குப் படைக்கிறார்கள்:"

"அந்தக் கல்லூரி முதல்வர், ஊழலுக்காக மட்டும் சஸ்பென்டாகவில்லையாம். வெளியில் சொல்லமுடியாத ஒரு காரணம் உண்டு. அந்த முதல்வர் 'தண்ணி' போடாமல் கல்லூரிக்குள் நுழைய மாட்டாராம். ஒருநாள் இப்படி 'லோடோடு' இருக்கும்போது, ஒரு இளம் டைப்பிஸ்ட் பெண், ஏதோ ஒரு ரிஜிஸ்டரில் கையெழுத்து வாங்குவதற்காக, அவரது அறைக்குள் போயிருக்கிறாள். ஆனால், அந்த முதல்வரோ, அவளை 'பெருமாள் மாடு' மாதிரி பார்த்துவிட்டு ரிஜிஸ்டரை வாங்காமல், ரிஜிஸ்டர் பிடித்த அழகான கரத்தை பலவந்தமாகப் பிடித்திருக்கிறார். அந்தப் பெண், தன் கற்பைக் காப்பாற்றுவதற்காக, குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டு வெளியே ஓடியிருக்கிறாள். இதை வெளியே சொன்னால் கல்லூரிக்குக் கெட்ட பெயர் என்று நினைத்த நிர்வாகம், நியாயமானபடி பயந்து, ஏற்கெனவே ஊழல் மன்னரான அவரை, அந்தக் காரணத்திற்காக 'சஸ்பென்ட்' செய்திருக்கிறது. முதல்வர், 'தண்ணி' போட்டதைக்கூட மன்னிக்கலாம். ஆனால், ஒரு கன்னிக்கு 'கண்ணி' போட்டதை மன்னிக்க முடியுமா? இது தெரியாமல், 'யா' என்ற பெயரில் முடியும் அந்தக் கல்லூரியின் மாணவர் தலைவர், 'லா' என்ற பெயரில் முடியும் முதல்வர் மகளை மகிழ்விப்பதற்காக, கல்லூரி நிர்வாகத்திற்கு தொல்லை கொடுக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிகிறது."

முத்தையா, படித்த அவஸ்தையில் அல்லாடினான். பின்னர், அந்தப் பத்திரிகையைச் சுருட்டி, கசக்கி தூர வீசப் போனான். ஒரு மாணவன், அவன் கையைப் பிடித்து, தடுத்தபடியே பேசினான்:

"இந்த ஒண்ணை நீ எறிஞ்சிடலாம். இது ஒரு கொழுத்த பணக்காரரோட பத்திரிகை. விற்கிறதோ இல்லையோ, ஐம்பதாயிரம் காபியாவது பிரிண்ட் செய்திருப்பார். அதையெல்லாம் என்ன பண்ணுவே?"

இன்னொரு பையன் இடைமறித்தான்:

"வாங்கடா. நாம் எல்லோரும் வெளில போய், கடைகள்ல தொங்குகிற இந்த பத்திரிகையை கொளுத்துவோம். நாட்ல என்ன வேணுமுன்னாலும் எழுதலாமுன்னு ஆயிட்டுது பாரு. வெத்தில் பாக்குக்கூடப் போடாத மனுஷனைப் பார்த்து, எப்படி எழுதியிருக்கான் பாரு. வாங்கடா, அவன் பத்திரிகை ஆபீஸ் முன்னால மறியல் பண்ணுவோம். கண்ணாடி ஜன்னல்கள தூள் தூளாக்குவோம்."

"என்னப்பா நீ? அவன் போலீஸ்ல சொல்லுவான். போலீஸ் லாக்கப்புல போடும். டிரஸ்ட் போர்ட் நம்மையும், நல்ல சமயமுன்னு எக்ஸ்பல் பண்ணும்."

"என்னடா நீ? பிரின்ஸ்பிலுக்காகக் போராடுன எவரும் பின்விளைவுகளைப் பற்றி யோசிச்சது கிடையாது."

"நாம் எதுக்காகப் போராடுறோமோ அதுக்கு எதிராய் நம்ம போராட்டத்தை திருப்பி விடப்படாது பாரு. அதோட பேராசிரியர், முத்தையா, நமக்குத்தான் தெரிஞ்ச மனிதர். ஊரு உலகம் குடிகாரன்னு எழுதுறதை நம்புமோ... இல்லியோ..... ஒருத்தன் ஒரு பொண்ணைப் பிடிச்சு இழுத்தான்னு பேசினாலோ, எழுதினாலோ, அதை நம்பும். நம்புறது மட்டும் இல்ல... நம்பணுமுன்னு நினைக்கும் மனோவியாதி இப்போ அதிகம். நம்ம பிரின்ஸ்பாலுக்கும் பழி அதிகமாகத்தான் வந்து சேரும்."

"என்னடா நீ.... நம்ம பிரின்ஸ்பாலுக்கு தெரிஞ்சவங்க எங்கேயாவது ஒரு மூலையில் இருப்பாங்க. கல்வி வட்டாரத்துல நல்லா தெரிஞ்சவரு. அவரைப் பற்றி என்ன நினைப்பாங்க? நாட்ல நடக்கிற விஷயங்கள் மக்களுக்குத் தெரியாமல் இருக்கதுல எவ்வளவு ஆபத்து இருக்கோ, அவ்வளவு ஆபத்து நடக்காததை நம்புறதுலயும் இருக்கு."

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரபு, அவர்களைப் பார்த்து குறுநகை போட்டபடி, கல்லூரி அலுவலகத்தைப் பார்த்துப் போய்க் கொண்டிருந்தான். அவன் போன விதம், தன்னால்தான் அந்தச் செய்தி வந்தது என்று சொல்வதுபோல் ஒரு சில மாணவர்களுக்குத் தோன்றியது. இண்டு பேர் அவனைப் பார்த்துப் பாயக்கூடப் போனார்கள். மற்றவர்கள், அவர்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

முத்தையா, பேச்சற்று நின்றான். மூச்சற்றவன் போல், மௌடீகமாகப் பார்த்தான். பிறகு "எதுக்கும் பேராசிரியரைப் போய் பார்க்கிறேன். அவர் என்ன சொல்றார்னு கேட்டுட்டு யோசிக்கலாம்" என்று சொன்னபோது, அவன் சொற்களில் நம்பிக்கை நலிந்தது.

நீதிக்கு எதிராக ஏதோ ஒரு அடிப்படைக் கோளாறு இருப்பது அவனுக்குப் புரிகிறதே தவிர, அதன் தாத்பரியம் அவனுக்குப் புரியவில்லை.

கல்லூரி மணியடித்தது. வகுப்பறைகள், கல்லறைகள் போல் கண்சிமிட்டின. மாணவர்கள், நடைபிணங்களாய் நுழைந்தார்கள்.

## 10

அதே இற்றுப்போன சாய்வு நாற்காலியில் அற்றுப்போன மனிதராய் பேராசிரியர். பெருமாள்சாமி ஒடிந்து கிடந்தார். மேகலா, அவர் கால்மாட்டில் உட்கார்ந்தபடியே, கூரை மேட்டையே குற்றுயிரும், குலையுயிருமாய் பார்ப்பவள்போல் பார்த்தாள்.

முத்தையா அவர்கள் முன்னால் வந்து நின்று ஐந்து நிமிடம் ஆகியிருக்கும். தந்தையும் மகளும் அவனைப் பார்த்ததுபோல் தோன்றியது. ஆனால், அவனிடம் பேசாவிட்டால் கூடப் பரவாயில்லை, அவன் வருகையை அங்கீகரித்தது போல் கூட பார்வை படவில்லை. முத்தையா, வீட்டின் வெளித்தூணையே பிடித்தபடி நின்றான். பிறகு, கௌரவத்தைப் பார்க்காமல் 'ஸார்' என்றான்.

பேராசிரியரும், மேகலாவும் அப்போதுதான் அவனைப் பார்ப்பதுபோல் பார்த்தார்கள். பெருமாள்சாமி, அவனை 'வா' என்பதுபோல், தன் வலது கையைத் தூக்கினார். மேகலா, ஆடைகளை சரி செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ண மற்றவளாய், அவனைப் பார்த்தாள். கண்கள், பொல பொலவென்று நீரைக்கொட்டி, அவள் புறங்கையை நனைத்தது. பிறகு, தன்னையறியாமலே, தன் தந்தையின் மடியில் குப்புறச் சாய்கிறாள். அவர் மகளின் தலையை ஆதரவாகத் தட்டியபடியே “என்னம்மா இது.... சின்னப்பிள்ளை மாதிரி...” என்று சொல்லிவிட்டு அவரும் அழுதார். குலங்கிக் குலுங்கி அழுதார். மனதுக்குள் தேக்கிய துக்கம், பிரின்டில் வந்த அவமானம், அதற்குப் பிராயச்சித்தம் தோன்றாத இயலாமை அத்தனையும் முத்தையாவைப் பார்த்ததும் மடையுடைத்து, வெளியேறியது.

பேராசிரியர் சிரித்துப் பார்த்ததை மட்டுமே அறிந்திருந்த முத்தையா, தன் உடம்புக்குள் ஏதோ ஒரு வெப்பத் தீ பற்றிப் படர்வதை உணர்ந்தான். அவர்களின் அழுகையை, கண்கள் உள்வாங்கி, மனதில் கோபசக்தியாக மாற்றினான். ஒரு குடும்பம் என்ன பாடுபடும் என்பதை அறியாமல், என்ன வேண்டுமானாலும் எழுதலாம் என்று நினைக்கும், இந்தப் பேனாப் பொறுக்கிகளை என்ன செய்தால் தீரும்?

முத்தையா, ராணுவவீரன் நடப்பதுபோல் நடந்து, அவர்களை நெருங்கினான்.

"நீங்க ஏன் சார் கவலப்படுறீங்க? ஒரே ஒரு வியாபாரப் பத்திரிகை. கிசுகிசுப்பிலேயே காலத்தை ஓட்டுற பத்திரிகை. இது ஒங்க பிரச்சினை இல்ல, என் பிரச்சினை. என் மாணவர் சகோதரர்களோட பிரச்சினை. நாளைக்கே அந்த பத்திரிகை ஆபீசை தவிடு பொடியாக்குறோம் பாருங்க...."

பேராசிரியர். பெருமாள்சாமி, சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தபோது, அந்த சாய்வுத் துணியே நிமிர்ந்தது போலிருந்தது. மேகலா கண்களைத் துடைத்தபடி, அவனைப் பார்த்து சோகத்துடனும், கூச்சத்துடனும் புன்னகைத்தாள். கிட்டத்தட்ட அனாதையாகி, கோர்ட்டிற்கும், டிரஸ்ட் போர்டிற்கும் இடையே உதை பந்தாய் போன பேராசிரியர், தங்களுக்கும் ஆதரவு இருக்கிறது என்பதை முத்தையா மூலம் உணர்ந்தவராய், அதை உணர்த்தியவன் கைகளிரண்டையும் பற்றியபடி, மேகலாவைப் பார்த்தார். அவள், எழுந்துபோய், ஒரு நாற்காலி யைக் கொண்டுவந்து போட்டாள்.

சிறிது மௌனம். சிறிது நெருடல். சிறிது நேர ஆதரவுப் பார்வைகள். பேராசிரியர், இப்போது புதுமனிதர்போல் பேசினார்:

"ஏம்பா... அன்னிக்கி ரிட் வாங்கியிருக்கேன்னு சொன்னேன் பாரு... அது ரிட் இல்லியாம். பிரைவேட் இன்ஸ்ட்டுஷன்ஸ் மேல ரிட் வாங்க முடியாதாம். பட், அதேமாதிரி எபக்ட் உள்ள ஸ்டேய் உண்டாம். நான் வாங்குனது ஸ்டேய்; ரிட் இல்ல."

மேகலா, தந்தைக் குழந்தையைச் செல்லமாகக் கண்டித்தாள்:

"என்னப்பா இது.... நீங்க வாங்குனது ரிட்டோ, ஸ்டேயோ; மொத்தத்துல ஏட்டுச் சுரைக்காய்.... இப்போ அதுவா முக்கியம்? இந்த பத்திரிகைக்காரன் நல்லவனுக்கும் கெட்டவனுக்கும் வித்தியாசம் தெரியாமல் அவமானமாய் எழுதியிருக்கான். இந்தச் சமயத்துல, நீங்க, ரிட்டுக்கும் ஸ்டேய்க்கும் வித்தியாசம் சொல்லி கிளாஸ் நடத்துறீங்களாக்கும்."

பேராசிரியர். பெருமாள்சாமி, முத்தையாவைப் பார்த்து ஏலாச்சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். அவன் பேச்சை மாற்றினான்.

"அந்த வாடிக்கை பத்திரிகைக்காரனுக்கே போன் செய்து கேட்க வேண்டியதுதானே ஸார்?"

"கேட்டேன். எடிட்டருக்கே போன் போட்டேன். 'மொதல்ல, நீங்கதான் அந்த பிரின்ஸ்பால்னு ஏன் எடுத்துக்கிறீங்கன்'னு

கேட்டான். 'அது நான்தான்னு ஒரு மடையனுக்குக்கூடத் தெரியும். ஒனக்குத் தெரியாதா'ன்னேன். உடனே, 'தீர விசாரிச்சுதான் எழுதுறோமுன்னு' திமுராப் பதில் சொன்னான். உடனே, நான் 'அடேய் பாவி! நான் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால், பொண்ண தப்பாக்கூட நினைக்கிற மனுஷன் இல்லடா'ன்னேன். அவன்கிட்டேயே ஆறுதல் கேட்குறது மாதிரி புலம்பினேன். டக்குன்னு போனை வச்சுட்டான். அப்புறம், இவளோட நச்சரிப்புத் தாங்காமலே, என்னோட 'ஸ்டேய் ஆர்டர்' வக்கீல் மூலமாயே நோட்டீஸ் அனுப்பியிருக்கேன். அவன் பகிரங்கமாய் மன்னிப்புக் கேட்காட்டால், கேஸ் போடுவேன்னு எழுதியிருக்கு."

"அவன் எங்கே ஸார் மன்னிப்புக் கேட்பான்? இந்த மாதிரி கேஸுக்குன்னே ஒவ்வொரு அக்கப்போர் பத்திரிகையும் ஒரு லீகல் ஸெல் வச்சிருக்குதாம். இந்தப் பத்திரிகைக்கும் ஆயிரம் பிரச்சனைகளில் இதுவும் ஒன்று. நமக்குத்தான் லட்சியப் பிரச்சினை."

"நீ சொல்றதும் உண்மைதான். பொதுவா பாதிக்கப் பட்டவனுக்கு, பாதிப்புக் கொடுத்தவன்தான் அபராதம் கட்டணும். ஆனால், நான் அபவாதத்துக்கு ஆளானதோட அபராதமும் கட்டியாச்சு. ஆமாம்பா, அவனுக்கு டெலிபோன் செய்ய ஒரு ரூபாய்.... அவன் பத்திரிகையை வாங்க ஒரு ரூபாய்.... இது என்னோட அபராதத்துக்கான வட்டி... அபராதம் என்கிறது வக்கீல் பீஸ்ஸான ஒவ்வொரு வாய்தாவுக்கும் ஒவ்வொரு நூறு ரூபாய்... அசல் என்கிறது அவரோட சீனியருக்கு முன்கூட்டியே கொடுத்த அய்யாயிர ரூபாய் தவணைப் பணம்."

"அந்தப் பத்திரிகைய சும்மா விடப்படாது ஸார்."

"நீ வேற... அந்த பத்திரிகை பணத்தை என்ன பண்றதுன்னு பிரச்சினையில இருக்கவன். நான் பணப் பிரச்சினையில் இருக்கவன். வக்கீல், இந்தக் காலத்து சட்டங்களை விளக்குனாரு. டேமேஜ் கேட்டு வழக்குப் போடலாம். அதுக்கு, ஆயிரக்கணக்கான ரூபாய்ல ஸ்டாம்ப் வாங்கணுமாம். இங்க வீட்ல என்னடான்னா, நூறு ரூபாய்க்கே...."

"அப்பா....!"

"சும்மா இரும்மா.... இவன் ஒனக்கு அந்நியனாய் இருக்கலாம். ஆனால், எனக்கு அந்நியோன்யன். எனக்கு ஒண்ணுமே புரியமாட்டக்கு முத்தையா..."

"ஒரு ஐடியா சார்.... ஒங்க ஸ்டூடண்ட் ஏகாம்பரம் 'கைவை' பத்திரிகைக்கு எட்டிடருல்ல? அதுவும் இந்த 'வாடிக்கை' பத்திரிகை மாதிரி அசல் காலிப் பத்திரிகை. அவங்கவிட்ட நடந்த விஷயத்தைச் சொல்லுங்க, பிரசுரிப்பாரு. கோர்ட்டை விட, முள்ளை முள்ளால எடுக்கது பெட்டர். இதுல, டிரஸ்ட்போர்ட் அக்கிரமமும் அம்பலமாயிடும்."

“சபாஷ் முத்தையா. இது எனக்குத் தோணல பாரு. நீயும் என்னோட வா. பொம்பிள கையைப் பிடிக்கலன்'னு... நானே சொல்றது நல்லா இருக்காது பாரு.”

“ஓ.கே. ஸார். நாளைக்குக் காலையில, ஒன்பது மணிக்கு வாரேன்.”

முத்தையா போவது வரைக்கும், அவனைப் பார்க்காததுபோல் காட்டிக் கொண்ட மேகலா, அவன் போனபிறகு, போன இடத்தையே திரும்பித் திரும்பிப் பார்த்தாள். ஒருவேளை திரும்பி வரலாம்.... எதையாவது விட்டுவிட்டுப் போயிருக்காரா? சுற்றும் முற்றும் பார்த்தாள். பிறகு, திடீரென்று அந்த இளந்தென்றல் புகுந்த இதயத்துள், குடும்பப் புயல் புகுந்து, அந்த தென்றலையும் புயலாக்கியது.

## 11

‘கைவை’ பத்திரிகை அலுவலகத்தில் காம்பவுண்ட் வாசலில் நின்ற கூர்க்காவைத் தாண்டி, சுழல்வடிவில் அமைந்த ரிஸப்ஷன் அறைக்குள், பேராசிரியரும் முத்தையாவும் போனபோது, டெலிபோன் ஆபரேட்டர், அவர்களை பப்ளிஸிட்டி பிரியர்களாக நினைத்து, அனாவசியமாகப் பார்த்தார். பெருமாள்சாமி, ‘ஏகாம்பரம் இருக்கானா?’ என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டார். அசந்து போன ஆபரேட்டர், டெலிபோன் எண்களைச் சுழற்றிய பிறகு ‘ஓங்க பேரு?’ என்றார் படபடப்புடன். ஒருவேளை எழுத்தாளர் சாண்டில்யன் வந்திருப்பாரோ என்று ஒரு சந்தேகம். டெலிபோனில் பேசிவிட்டு, ‘வாங்க ஸார், நானே கூட்டிக்கிட்டுப் போறேன்’ என்று சொல்லி ஆபரேட்டர் முன் நடந்தார்.

‘கைவை’வின் எடிட்டோரியல் அறைக்குள் நான்கைந்து பேர், வாயும் புகையுமாக, கையும் பேனாவுமாக தீவிரமாகச் சிந்தித்தபடி எழுதுவதைப் பார்த்தால், அநேகமாக அவர்கள் ‘கிசுகிசுக்களை’ எழுதிக் கொண்டிருக்கவேண்டும். நாட்டின் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிப்பது போன்ற தோரணை ‘பாவத்தை’ முகங்கள் காட்டின. இதற்குள் ‘எடிட்டர்’ ஏகாம்பரமே வெளியே வந்தார். “வாங்க ஸார்.... வாங்க. கூப்பிட்டிருந்தால், நானே வந்திருப்பேனே” என்று சொன்னபடியே, பேராசிரியர் கைகளைப் பிடித்தபடி, தனது அறைக்குள் அவரை இழுத்துக்கொண்டு போனார். சிறிது யோசித்த முத்தையாவை, தன்னோடு வரும்படி பேராசிரியர் கண்ணடித்தார்.

'எடிட்டர்' தன் முன்னாள் ஆசிரியரைப் பார்த்தபோது, பேராசிரியர், விசித்திரமான பௌவியத்தோடு பேசினார்:

"முன்னால ஒனக்கு நான் ஆசிரியர்.... இப்போ நீதான் எனக்கு ஆசிரியர்...."

ஒரு கையில் ஒரு அரை நிர்வாணப் பெண்ணின் புகைப்பட 'புருப்'போடு, நெற்றி முழுதும் விபூதியோடு தோன்றிய நடுத்தரவயது மனிதரான ஏகாம்பரம், பேராசிரியரைப் பார்த்துவிட்டு, முத்தையாவையும் பார்த்தார். உடனே பெருமாள்சாமி, "இவன் என்னோட ஸ்டுடண்ட்.... ஒன்னை மாதிரியே பிரில்லியன்ட்...." என்றார். எடிட்டர் மகிழ்ச்சி மயக்கத்தில் மூழ்கினார்.

"என்ன ஸார் சாப்புடுறீங்க...?"

"ஒண்ணும் வேண்டாம்பா..."

"அப்படிச் சொன்னால் எப்படி? இந்தாப்பா! மூணு டிரிங்... என்ன ஸார் திடுதிப்புன்னு?"

"இந்தப் பத்திரிகையை படித்தியா?"

"ஆமாம். என்ன ஸார் அக்கிரமம். ஒங்களப் போய் இப்படி எழுதி இருக்கான்? நான் படிச்சுட்டு, எப்படித் துடிச்சேன் தெரியுமா? அப்படி எழுதுனதால ஒண்ணும் ஆயிடாது. கவலப்படாதீங்க ஸார்...."

"நீ இருக்கும்போது நான் எதுக்குப்பா கவலப்படணும்? இந்தா வக்கீல் நோட்டீஸ்.... இதையும் ஒன் பேப்பரில் போட்டுட்டு, என்னைப் பற்றி நீ என்ன நினைக்கியோ, அதையும் எழுது. டிரஸ்ட் போர்ட் சேர்மன் அப்பாவு சொல்லித்தான், இதை எழுதியிருக்கான். அதையும் ஒரு வரி எழுது...."

"வந்து.... வந்து...."

"என்னப்பா இழுக்கிறே? நான் பொண்ணப் பிடிச்சு இழுத்திருப்பேன்னு நீயும் நினைக்கிறியா? வேணுமுன்னால் விசாரிச்சுட்டு எழுதுப்பா. நான் ஒனக்குப் பாடம் நடத்தும்போது எப்படி இருந்தோனா, அப்படித்தான் இருக்கேன், என்னை நம்புப்பா..."

"அப்டில்லாம் இல்ல ஸார்... எழுதுறக்கு கை துடிக்குது. ஆனால், பத்திரிகை தர்மமுன்னு ஒண்ணு இருக்கே...."

"அப்படின்னா?"

"ஒரு பத்திரிகை, இன்னொரு பத்திரிகைக்கு ஜென்ம விரோதியாய் இருக்கலாம். ஆனால், ஒரு பத்திரிகைமேல ஒருவர் போடுற வழக்கு விவரத்தையோ, இல்ல ஒரு பத்திரிகை ஆபீஸ்ல

நடக்குற வேல நிறுத்தத்தையோ, வேற பத்திரிகை போடாது. நான் சொல்றதுக்கு மாறாய் எந்தப் பத்திரிகையிலாவது இப்படிப்பட்ட செய்திகளைப் பார்த்திருக்கிங்களா? வேணுமுன்னால் இந்த கம்யூனிஸ்ட்காரங்க பத்திரிகையில போடுவாங்க... இது, இப்போதைய நிலைமையில், ஒங்க கேஸை வலுப்படுத்துறதுக்கு பதில பலவீனமாக்கும்...."

"என்ன ஏகாம்பரம்! என்கிட்ட நியாயம் இருக்குதுன்னு சொல்றே.... பத்திரிகை மோட்டோவாய் 'வாய்மையே கைவையின் கவச'முன்னு போட்டிருக்கு..... ஆனாலும்...."

"எங்களுக்கு நியாய அநியாயமோ, வாய்மையோ முக்கியமல்ல. எங்களுக்கு முக்கியம் பத்திரிகை தர்மம். எந்த தர்மத்தை விட்டாலும், இந்த தர்மத்தை விடமாட்டோம். அதோட, நான் ஒரு ஸ்தாபனத்தின் வேலைக்காரன். எங்க முதலாளியைக் கேட்காமல், இதுமாதிரி சங்கதிகளைப் போடமுடியாது. எடிட்டர் என்கிறவன் பத்திரிகை முதலாளிக்கு பெரிய வேலைக்காரன்தான். அவர்கிட்டே கேட்டால் ஒருவேளை அதை எடுத்து நம்ம பத்திரிகையிலயும் 'லிப்ட்' பண்ணுடான்னு சொன்னாலும் சொல்லலாம்."

பேராசிரியர் முகம் வெளுத்தது. எதிர்பார்ப்பே, எதிர்தரப்பிற்குப் போய், அவரைப் பார்த்துச் சிரித்தது. முத்தையா, வெகுண்டு பேசினான்:

"ஸார்..... எங்க பிரின்ஸ்பால்.... ஸாரி... நம்ம பிரின்ஸ்பால், ஒழுக்கத்தையும், உயிரையும் ஒன்றாய் நினைக்கிறவர். சின்ன வயசுலேயே மனைவியை இழந்தாலும், மறுமணம் செய்யாதவர்."

"சத்தம் போட்டுப் பேசாதப்பா. அதனாலதான், அவருக்கு சபலம் வந்திருக்குமுன்னு சைகலாஜிக்கல் ஆராய்ச்சில இறங்கிடுவாங்க."

"ஸார்... நாங்க-மாணவர்கள் எல்லாரும் சேர்ந்து வாடிக்கை பத்திரிகை ஆபீஸ் முன்னால ஆர்ப்பாட்டம் பண்ணப் போறோம். ஒங்க முதலாளி நடத்துற தினப் பத்திரிகையிலயாவது ஒரு செய்தி போடுவீங்களா...?"

"நீ வேற. ஒரு பத்திரிகைக்கு எதிரானது எதுவும், எல்லாப் பத்திரிகைகளுக்கும் எதிரானதாய் முதலாளிங்க நினைக்காங்க. அப்புறம், ஸார்.... மேகலா, எப்படி இருக்காள்? பன்னிரண்டு வயசுல பார்த்தது"

பேராசிரியர். பெருமாள்சாமி, தன் முன்னாள் மாணவன் போகச் சொல்வதைப் புரிந்துகொண்டு எழப் போனார். இதற்குள், உதவி

ஆசிரியர் உள்ளே வந்தார். எடிட்டர் கேட்டார்: "சிலுக்கோட புதுப் போட்டே கிடைச்சுதா? அவள் ஜட்டியோட நடப்பேன்னு சொன்னதை பாக்ஸ் அயிட்டமா போட்டாச்சா? அப்புறம், அவள் நடிகை நளினா, கால்மேல் கால் போட்டு போட்டோ அனுப்புறேன்னுட்டு, பாவாடையோட அனுப்பி இருக்காள். கிழிச்சுப் போடுய்யா."

பேராசிரியர். கோபத்தோடு எழுந்தார். "என்னை மன்னிச்சிடு ஏகாம்பரம். சிலுக்கைப் பற்றி எழுதுற ஒன் புனிதமான பேனா என்னைப் பற்றி எழுதி மாசுபடக்கூடாது. இனிமேல் நீயாய் கேட்டால்கூட, எனக்குத் தேவையில்ல. நான் வாரேன்."

எடிட்டரால், தன் ஆசிரியரை நேருக்கு நேராகப் பார்க்க முடியவில்லை. பழைய மாணவப் பருவத்திற்குப்போய் குமைந்தார். பிறகு பருவம் தவறிய மழைபோல், அவர் பார்வை சிதறியது.

பேராசிரியரும், முத்தையாவும் வெளியே வந்தார்கள். ஒரு கடைக்குள் மௌனமாக நுழைந்து ஒரு ஓரமாகக் கிடந்த நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். சிறிது நேரத்தில், பழுப்புச் சட்டை மனிதர் ஒருவர், அவர்கள் எதிரில் உட்கார்ந்தார். சிறிது நேரம் அவர்களையே பார்த்துவிட்டு, மடமடவென்று பேசினார்.

"நான் ஒங்க பிரில்லியண்ட் ஸ்டூடண்ட் எடிட்டராய் இருக்கிற பத்திரிகையில, புரூப் ரீடர் கண்ணன். நீங்க இங்க வந்திருக்கவே கூடாது. ஏன்னா, இப்போ இருப்பது பத்திரிகைகள் அல்ல... குரங்கு கை பூமாலைகள். எடிட்டர்கள் வெறும் வியாபாரிகள். கொழுத்த பணப் பெருச்சாளிங்களோட எண்ணந்தான் இவங்க மை. ஏழை எளியவங்களோட உயிர்கள், இவங்க எழுதுற தாள். ஏழை மக்களுக்கு எதிராக-திசை திருப்பி விடுகிற விசித்திர செய்திகளை, ஏழையான என்னை மாதிரி ஆட்களே சரி பார்க்கிறோம். அதாவது, எனக்கு எதிராகவே நான் செயல்படுறது இந்த சமுதாயத்தோட நோய்...."

கண்ணன் தொடர்ந்தார்.

"இப்போ செய்திகள் எப்படி வருது தெரியுமா? பெரிய பணக்காரன் ஹோட்டல் சோழாவிலேயோ, கன்னிமேராவுலேயோ பிரஸ் கான்பரன்ஸ் வைப்பான். அதுவும் நைட்ல. ரிப்போர்ட்டர்களுக்கு 'காக்டெய்ல்' கொடுப்பான். ஒரு கையில் ஒரு கிப்டையும் இன்னொரு கையில் தன்னோட ஸ்டேட்மெண்டையும் கொடுப்பான். மறுநாள் 'கிப்டுக்கு' தக்கபடி பத்திரிகையில செய்தி வரும். 'காக்டைல்'. அதாவது, மது மட்டும் பரிமாறப்பட்டால், வெறும் செய்தி; கிப்ட்டையும் சேர்த்துக் கொடுத்தால், போட்டோவோட செய்தி. நம்ம ரிப்போர்ட்டர்கள் 'கிப்ட்'டட் ஆசாமிகள்தான். இப்படி பணக்காரன் கொடுக்கிறதை வாங்கி செய்தி போடுறவங்க, ஏழைகளைப் பார்த்தால் அவங்க சம்பந்தமாய் எதாவது

மோசமான செய்தி கிடைத்தால், அதை சரி பாராமலே அவங்கள உயிரோட பிணமாக்கி இவங்களும உருவம் மாறாமலே கழுகாய் மாறிடுவாங்க. அதனால, இவங்க எழுதுறதை பெரிசா எடுக்காதிங்க. இப்போ பத்திரிகைகள் என்பவை முதலாளிகளோட எடுபிடி சைத்தான்கள்."

முத்தையா, வெடித்தான்.

"அப்படின்னா, இதை சகித்துக்கிட்டு இருக்கணுமா? இதுக்கு வழியே இல்லியா?"

புருப் ரீடர் சிரித்தார். பொறுமைச் சிரிப்பா? வெறுமைச் சிரிப்பா? பூபாளச் சிரிப்பா?

அவர்களுக்குப் புரியவில்லை.

## 12

சூரியனே, அந்தக் குடித்தன வீடுகளில் நிலவும் மண்ணெண்ணெய்ப் பற்றாக்குறையை நீக்குவதற்காக, அடுப்பாக வந்தது போன்ற மத்தியான வேளை. ஆனால், ஒரே ஒரு வித்தியாசம். அங்கே, அரிசிக்குப் பதிலாக ஆட்கள் கொதித்துக்கொண்டு இருந்தார்கள்.

முத்தையாவின் இளைய தங்கை சுகந்தி, அந்தக் காம்பவுண்ட் வீட்டின் இருபதுக் குடித்தன இருப்பிடங்களுக்குச் சொந்தமான குழாயடியில், காலையிலேயே அரைகுறையாகப் பிடித்து வைத்திருந்த ஒரு 'டப்புக்குள்' உள்ளடங்கிய நீரை, மொண்டு, குளிக்கப் போனாள். கிணறு வெட்ட வேண்டிய இடத்தில், இன்னொரு குடித்தன அறையைக்கட்டி, வாடகைக்கு விடலாம் என்று அந்தக் காலத்திலேயே, அதே வீட்டின் பழைய சொந்தக் காரருக்கு ஒரு எண்ணம் உதித்து, அதில் ஒரு குடித்தன வீடு, இப்போது பாழடைந்த கிணறுபோல் வாசலைக் காட்டிக் கொண்டிருந்தது. தமிழக அரசின் ஆணைப்படி, அன்றைக்கு முந்தினநாள் குழாயில் தண்ணீர் வரவில்லை. அன்று மாலையில், ஏதோ வந்தேன் என்ற பேருக்கு வந்தது. 'வீட்டுக்காரி' எட்டு தெசவாக்களைப் பிடித்த பிறகு, குடித்தனக்காரர்களில், ஆளுக்குப் பத்துபேர் ஒரு குடம் வீதம், நீர் பிடித்ததும், குழாய் நீர், ஏழையின் கண்ணீர்போல் சொட்டுச் சொட்டாகி, பின்னர் உண்டு கொழுத்தவன் வயிறுபோல் உருமலோடு நின்றது. ஆனால், சுகந்தி, நான்கைந்து நாட்களாக நீர்படாத உடம்பை

எப்படியாவது குளிப்பாட்டி விடுவது என்று தீர்மானித்து, அன்று சாமர்த்தியமாக, கோட்டாவுக்கு மீறி ஒரு 'டப்பில்' பாதியளவு தண்ணீரைப் பிடித்து வைத்துவிட்டாள்.

சுகந்தி, புடவையைக் களைந்து, குழாய்ச் சுவரில் வைத்துவிட்டு, பாவாடையை மார்புவரை விசாலப்படுத்தியபடி, ஒரு ஈயப்போணியை எடுத்து, 'டப்புக்குள்' விடப்போனவள், 'ஏய் சுகந்தி...' என்ற சத்தம் கேட்டு திரும்பினாள். அவள் அக்காள் கமலசுந்தரி..... "நான் குளிச்சுடுறேன்.... நீ நாளைக்குக் குளி...." என்று சொல்லிக் கொண்டே வந்தாள். சுகந்தி, அவள் பேச்சைக் காதில் வாங்காதது போல, ஈயப்போணியை 'டப்புக்குள்' விட்டபோது, கமலசுந்தரி, தங்கையின் கையை, அந்தப் போணியோடு சேர்த்துப் பிடித்தாள்.

சுகந்திக்குத் தாங்கமுடியாத ஆத்திரம். பதினொட்டு வயதில், அம்மாவின் அழகையும், அப்பாவின் கம்பீரத்தையும் 'இரண்டரக்' கொண்ட அவள், அக்காவின் கரத்தில் இருந்து, தன் கையை விலக்கப் போனாள். இரவிலும், பகலிலும் காற்று புகாத பகுதியில் படுத்து, புழுக்கத்தில் புழுத்ததுபோல் மாறி, கொசுக்களாலும், மூட்டைப் பூச்சிக்களாலும் மாறி மாறி கடிபட்ட தன் தேகத்தில் நீராடும்போது மட்டுமே, அவள் சுகம் காண்பவள். நேற்று இரவிலிருந்தே, 'நாளைக்குக் குளிக்கப்போறனே். நாளைக்குக் குளிக்கப்போறேன்...' என்று கற்பனையில் லயித்தவள். அவள், அரசின் தடுமாற்றத்தால் தயவால், கடந்த ஒரு மாதமாகக் குளிக்க முடியாமல் கஷ்டப்படுவது அவளுக்குத்தான் தெரியும். இந்தச் சமயத்தில், குளிப்புச் சுகத்தைத் தடுப்பவள், அவளுக்கு அக்காவாகத் தெரியவில்லை. அசல் வறட்சி பூதமாகவே கண்ணில் பட்டாள். தமக்கையின் கரத்தைத் தட்ட முடியாததால், சுகந்தி அவள் கரத்தையும், ஈயப்போணியையும் சேர்த்துப் பிடித்து, நீர் மொண்டு, தலைக்கருகே கொண்டு போனாள். கமலசுந்தரி, கொதித்துப் போனாள்:

"என்னடி, ஒனக்கு அவ்வளவு திமுரா? இன்னிக்கு நான்தான் குளிப்பேன்."

"இது நான் பிடிச்சு வச்ச தண்ணீர்..."

"நான் சமைச்ச சோறை நீ சாப்பிடும்போது, நீ பிடிச்ச தண்ணில நான் ஏன் குளிக்கப்படாது? எழுந்திருடி...."

"எது நடந்தாலும், அது மட்டும் நடக்காது."

"ஏய் சொல்றதக் கேளுடி. இன்னிக்கி நான் குளிச்சாகணும்."

"சாயங்காலமா தண்ணி வந்தால் பிடி. பிடிச்சுவச்சு குளி.... இப்போ, நான்தான்.... நானேதான்...."

கமலசுந்தரி, தங்கையின் முன்னால் இருந்த டப்பை, வேறு பக்கம் திருப்பி விட்டாள். அதை மீண்டும் தன் பக்கம் திருப்பி விட்டுக்கொண்டே, சுகந்தி, "அம்மா... பாரும்மா.... பாரும்மா" என்றாள்.

அன்னம்மா ஓடிவந்தாள். 'டப்பை' அங்குமிங்குமாக உருட்டியவர்கள் அம்மாவைப் பார்த்ததும், தொட்ட கைகளை விட்டார்கள். அப்போது குப்புற விழப்போன டப்பை, அம்மாக்காரி குனிந்து பிடித்துக்கொண்டாள். மகள்களை அனல் வீச பார்த்த அன்னம்மா, பிறகு புனல் வீசப் பேசினாள்:

"அவரு கெதியா இருந்தால், இப்படி குதிப்பீங்களாடி? ஒரு மாசமா காலோட தலைவச்சு முடங்கிக் கிடக்காரு. நாம வருத்தப் படக்கூடாதுன்னுட்டு, துடிக்கிற வலியையும் பல்லால் கடிக்காரு. கொஞ்சமாவது வீட்டு நிலமை தெரிஞ்சால் இப்படிக் குதி போடுவீங்களா?"

"நானு குருவி சேர்த்தது மாதிரி, குளிக்கதுக்கு தண்ணீர் சேர்த்தால், இவள் இப்போ வந்து கலாட்டா பண்றாம்மா...."

"நீங்களே சொல்லுங்கம்மா.... எத்தனை நாளிக்கி நானு குளிக்காமலே இருக்கது? முந்தாநாள் பிடிச்ச தண்ணீர்ல அண்ணன் குளிச்சிட்டு. அதுக்கு ரெண்டு நாளைக்கி முன்னாடி நீங்க குளிச்சிட்டிங்க. வயசுப்படி பார்த்தாலும், இன்னிக்கு நானுதான் குளிக்கணும்."

அன்னம்மா, மகள்களை மாறி மாறிப் பார்த்தாள். அம்மா தீர்ப்பளிப்பது வரைக்கும் காத்திருந்து சலுகை காட்டுபவள் போல், சுகந்தி, ஈயப்போணியை, 'டப்பில்' போட்டு உருட்டிக் கொண்டிருந்தாள். கமலசுந்தரி, அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தாள். அந்தத் தாயோ, தன் கவலையை, சுமந்து பெற்ற 'செல்வங்களிடம்' சுமக்கக் கொடுப்பவள்போல் பேசினாள்:

"ஒருத்திக்கு ஒருத்தி, ஏண்டி ஒங்களுக்கு விட்டுக் கொடுக்க மனசு வரமாட்டக்கு? அப்பா படுக்கையில கிடக்கார்; இன்னிக்கி மத்தியானம் சாப்புடல. ராத்திரி சோறு பொங்க அரிசி இல்ல. ஒங்க அண்ணன் என்னடான்னா வீட்டு நெலமை தெரியாமல், போராட்டம் போராட்டமுன்னு, பழைய பிரின்ஸ்பால் பின்னால சுத்துறான். இந்த நெலமையில, ஒங்களுக்கு குளிப்பு கேட்குதாக்கும்? ராத்திரிக்கு நாமெல்லாம் பட்டினின்னு நெனச்சுப் பாத்திங்களா? கையில ஒரு பைசா இல்ல."

சுகந்தி, ஈயப்போணியையும், டப்பையும் இன்னும் விடாமலே, சலிப்போடு பதிலளித்தாள்:

"பைசா இல்லாதது ஒரு வழில நல்லதுதான். காசு இருந்தால் கிருஷ்ணாயில் வாங்க, காலையில இருந்து சாயங்காலம் வரைக்கும் கியூவில தவம் கிடக்கணும். அதுவும் நாம் நின்னு, காத்திருந்து வாங்கப்போற சமயத்துலதான், சோம்பேறி பொறுக்கிங்க, ஸ்டாக் தீர்ந்து போச்சுன்னு சொல்லுவாங்க. இதைவிட பட்டினி மேலு."

அன்னம்மா, சதையடங்கிய, எலும்புடம்பு துடிக்கப் பேசினாள்:

"நன்றி கெட்டத்தனமாய் பேசாதடி. ஒண்ணனுக்கும் புத்தி இருந்தால்தானே ஒங்களுக்கு இருக்கும்? நாம் பட்டினி கிடக்கலாம். ஆனால், நம்மை பட்டினி போடாமல் காப்பாத்துன ஒங்கப்பா பட்டினி கிடக்கலாமா? டாக்டருங்க, அவருக்கு முட்டையாய் கொடுக்கணுமுன்னு சொன்னாங்க. எனக்கோ, எதுலயாவது முட்டிக்கலாமான்னு தோணுது."

சிறிது நேரம் மௌனம் பேயாட்சி போட்டது. கமலசுந்தரி, பெருவிரலால் தரையில் வட்டம் போட்டாள். சுகந்தி, உதட்டைக் கடித்தாள். அன்னம்மா, பிள்ளைகள் முன்னால் அழ விரும்பாமல், வாசல்வரை போய், கண்ணீருக்கு வழியனுப்பி விட்டு, வீட்டுக்குள் போனாள்.

கமலசுந்தரி, தங்கையிடம் மீண்டும் அழாக்குறையாக மன்றாடினாள்.

"டீ..... எல்லா பொண்ணுக்கும் வார பேஜாரு, எனக்கும் வந்து அவஸ்தப்படுறேன். பெரிய மனசு பண்ணுடி."

சுகந்தி, சட்டென்று எழுந்தாள். குழாய்ச் சுவரில் கிடந்த புடவையை எடுத்தபடி, "மொதல்லயே அந்த 'பேஜார' சொல்லி இருக்கலாமில்ல? நானு என்ன, வீட்டுக்காரி மாதிரி ராட்சசியா?" என்று, புடவையை உடம்பில் சுற்றப் போனாள். பிறகு, "சீக்கிரமா குளி. தோ... வீட்டுக்காரி ஆந்த மாதிரி முழிக்கிறாள். அந்தண்ட போய்க்குளி. இல்லாட்டி, அவள் இங்க வந்து, "குடிக்க தண்ணியில்லாத போது குளிக்கவா செய்றேன்'னு கத்துவாள். அதோட அவளோட மகனுக்கு இன்னிக்கி பிறந்தநாளாம். பெரிய பெரிய ஆளுங்க் வருதாம். காத்தாலேயே, தண்ணிப் பிடிக்கிறவங்கெல்லாம் இப்பவே பிடிச்சுக்கங்கோ, சாயங்காலம் குழாய மரியாதியா விட்டுடணுமுன்னு குதிச்சாள்" என்றாள்.

அக்கா, தங்கையிடம் மன்றாடினாள்.

"அய்யய்யோ.... டீ..... வூட்டுக்காரிகிட்டே ஏதாவது போக்குக் காட்டி, இந்தண்ட வராமல் பேசும்மே. இல்லாட்டி தூக்குப்போட்டு சாகிறது மாதிரி கேட்பாள்...."

சுகந்தி, அக்காவைப் பார்த்தபடியே, பின்புறமாக நகர்ந்து, பின்னர் திரும்பி, வீட்டுக்காரி வாசம் செய்யும் மாடியை நோக்கி நடந்தாள். 'எப்டி அவளை மடக்கலாம்? எனக்கா தெரியாது. அந்த அம்மாகிட்ட சினிமா நடிகருங்களப் பற்றி பேசினால், உலகத்துல நடக்கிற எதுவுமே பெரிசா அவளுக்குத் தெரியாது. அக்கா குளிக்கிறது வரைக்கும், கமலஹாசனைப் பற்றிக் கேட்போம். அப்புறம் சாயங்காலமாய், நம்ம ஜன்ங்க தண்ணிப் பிடிக்கும்போது, ரஜினிகாந்தைப் பற்றிக் கேட்போம்.

சுகந்தி, மாடிப்படியில் கால் வைத்தாள்.

கமலசுந்தரி, ஒரு குவளை நீரையெடுத்து தலையில் ஊற்றினாள். உலகத்து மகிழ்ச்சிகளை, அந்த நீரில் உணர்ந்தவள்போல், தன்னை மறந்து தனிப்பெரும் சுகத்தில் களித்தாள். ஏழைகளுக்கு, கஷ்டங்கள் நிவர்த்தியாவது அல்லது குறைவதுதான் ஒரே ஒரு மகிழ்ச்சி என்பது போல் மகிழ்ந்தாள். புறத்தில் விழுந்த நீர் அகத்தில் கரியப்பியது போன்ற கவலைகளைக் கழுவிக் கொண்டிருப்பது போன்ற சுகம். சீக்கிரமாகக் குளித்து, அந்த ஒரே ஒரு உருப்படியான சுகத்தையும் உடனடியாய் முடித்து விடக்கூடாது என்பதுபோல், சன்னஞ் சன்னமாக நீரைக் கொட்டிக் கொண்டிருந்தாள். சுகக்கேடான மாடிவீட்டு வீட்டுக்காரியைப் பார்ப்பதற்காக, தலை நிமிர்ந்தவள், இரண்டு இளைஞர்கள், உள்ளே நுழைவதைப் பார்த்தாள். ஒருவன் உடம்பில் எடுப்பான ஆடை, உடம்பிலே தைத்து வைத்தது போலிருந்தது. இன்னொருவன் சோடாபுட்டி கண்ணாடியுடன், ஆடைக்குள் தொள தொளத்துக் கொண்டிருந்தான்.

அந்த இளைஞர்கள், அவள் கோலத்தைப் பார்த்துவிட்டு, சட்டென்று பின்வாங்கினார்கள். கமலசுந்தரிக்கு, வெட்கம் விரைந்தது. ஆடவர்கள் இல்லாத வேளையென்று மத்தியானமாகக் குளிக்க வந்தால், இந்த குரங்குகள் எப்படி வந்தன? பொதுவாக அங்கே குடியிருக்கும் ஆண்கள், இந்த மாதிரி வரும்போது, அவர்களும் அலட்டிக்க மாட்டார்கள். குளிக்கும் பெண்களும் கண்டுக்க மாட்டார்கள். ஆனால், இப்போது என்னமோ, மானம் அவமானமாகியது. ஒருவேளை, அந்த இளைஞர்கள், யதேச்சையாக வராமல், திடுக்கிட்டுப் பின்வாங்கியதும் ஒரு காரணமாய் இருக்கலாம். கமலசுந்தரி, குளிப்பை பாதியிலேயே விட்டுவிட்டு, புடவையைக் கட்டினால், அதற்குள், அவர்கள் மீண்டும் தலையை நீட்டலாம் என்று நினைத்து, ஆடையை உடம்போடு போர்த்தி, வீட்டுக்குள் ஓடப் போனாள். அதற்குள் அவர்கள் வாசலிலேயே கால் பதித்து நின்றதால், தன்னை மறைத்துக் கொள்ள எங்கெல்லாமோ ஓடினாள். குடித்தன வீடுகள் அனைத்தும் சரியாகப் படவில்லை. இறுதியில், அவள், குழாய்க்குள் போய் தன்னைத் தாழ்த்திக் கொண்டாள்.

திருதிருவென்று விழித்தபடி, மீண்டும் உள்ளே நுழைந்த அந்த இளைஞர்கள் யாரையும் காணாமல் திகைத்தார்கள். பிறகு இவர்களில் ஒருவன், "முத்தையா.... முத்தையா...." என்று ஏலம் போட்டான். சத்தம்கேட்டு வெளியே வந்த அன்னம்மா, அவனை வினாவோடு பார்த்தாள்.

"முத்தையா வீடு எது?"

"நான்தான் அவனோட அம்மா. அவன் இல்ல. என்ன வேணும்?"

"சும்மா பார்த்துட்டுப் போகலாமுன்னு வந்தோம்."

அந்த இருவரும், அன்னம்மா கூப்பிடுவதற்கு முன்னதாவே வீட்டுக்குள் நுழைந்தார்கள். உள்ளே நார்க் கட்டிலில், ஒரு காலில் முட்டி லேசாக வீங்கியிருக்க, லேசாய் முனங்கிக் கொண்டிருந்த முத்தையாவின் தந்தை அருணாசலத்தைப் பார்த்ததும், அவர்கள் கண்களில் பரிதாபம் தானாகக் குடிகொண்டது. கட்டிலில், ஒரு பழைய புடவை 'பெட்டாக' மடிக்கப்பட்டிருக்க, தலையணையில் தலையை அங்குமிங்கும் உருட்டி, அருணாசலம் அவர்களைப் பார்த்தார். இதற்குள் அன்னம்மா, அத்துப்போன முக்காலி ஒன்றையும், இற்றுப்போன முக்காலி ஒன்றையும், முந்தாணிச் சேலையால் துடைத்து, இழுத்துப் போட்டாள். அதேசமயம், அவர்களை சுட்டெரிப்பதுபோல் பார்த்தாள்.

'எல்லாம் ஸ்டிரைக்குக்கு, முத்தையாவ இழுக்க வந்திருப்பாங்க. தலவிதி... மேயுற மாட்ட கெடுக்குமாம் நக்குற மாடு. இவனுகளும் கெட்டு என் மகனையும் கெடுக்காங்க...'

அன்னம்மா, தனக்குள்ளேயே அவர்களைத் திட்டியபோது, உள்ளே ஈரத்தலையோடு வந்த கமலசுந்தரி, வாசலைக் கடந்து வெளியே நின்றாள். 'சீக்கிரமா வெளில போங்க. அப்போதான் நான் உள்ளே போகமுடியும்' என்பதுபோல், அவர்களைப் பார்த்தாள்.

இளைஞர்களில் ஒருவன் தன்னை அருணாசலத்திடம் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"என் பேர் கோபால்ராஜ். முத்தையாவோட பிரண்ட். இவரு பெயர் கிருஷ்ணன். ரெண்டு பேருமே ஹைகோர்ட்ல கிளார்க்காய் இருக்கோம்."

அன்னம்மாவுக்கு மகிழ்ச்சி. இவர்கள், காலேஜ் பையன்கள் அல்ல. அவர்களை, சிநேகித பாவத்துடன் பார்த்தாள். கோபால்ராஜ், எடுத்த எடுப்பிலேயே சகஜமாகப் பேசினான்:

"முத்தையாவுக்கு, நான் ரொம்ப வேண்டியவங்க. ஒங்க குடும்ப நிலமை முழுசும் எனக்குத் தெரியும். இப்போ முத்தையாவ மட்டும்

பார்க்க விரும்பல; ஒங்களையும் பார்த்துட்டுப் போகவந்தோம். கால் எப்டிங்க இருக்கு?"

அருணாசலம், அவர்களை அன்பு கனியப் பார்த்தார். ஏதோ பேசப் போனார். அவர் பேசி, அவரிடம் எஞ்சி நிற்கிற சக்தியும் இளைத்துவிடக்கூடாது என்பதுபோல், அன்னம்மா ஒப்பித்தாள்:

"ஆஸ்பத்திரியில கட்டுப் போட்டாங்க. அப்படியும் வலி போகல. யார் யாருல்லாமோ சொன்ன பிறகு, போட்டோ எடுத்தாங்க. முட்டில இருக்கிற சிப்பி எலும்பு மேல வந்துட்டுன்னு சொன்னாங்க. அப்புறம் ஆபரேஷன் பண்ணுனாங்க. அதுக்குப் பிறகும் வலி போகல. ஆனாலும், வீட்டுக்குப் போகச் சொன்னாங்க. முத்தையா, யார் கிட்டல்லாமோ கெஞ்சி, கூத்தாடிப் பார்த்தான். அதனால இன்னொரு போட்டோ எடுத்தாங்க. அப்போதான் சிப்பி எலும்புல லேசா கீறல் விழுந்திருக்கது தெரிஞ்சுது. ஆபரேஷன் பண்ணுன கால, பழையபடியும் அறுத்து, பிரித்து எலும்ப தைச்சாங்க. இப்போ தேவல. ஆனால், நடக்கதுக்கு இன்னும் ஒரு மாசம் ஆகுமாம். இப்போதான் காலையும் லேசாய் நீட்டிமுடியுது."

கிருஷ்ணன், தன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டான். அந்த ஒண்டிக் குடித்தன அறையை ஒட்டு மொத்தமாக நோட்டம் விட்டான். நான்கைந்து கிழிந்த புடவைகள், பழைய பாயோடு சுற்றி வைக்கப்பட்டிருந்தது. ஸ்டவ் அடுப்பு, மண்ணெண்ணெய் கறை அதிகமாகப் படாமல் மின்னியது. பழைய டிரங்க் பெட்டி ஒன்றும் கட்டிலுக்குக் கீழே இருப்பதைப் பார்த்தான். சிறிது நேரம், அந்தக் குடும்பத்தின் சோகத்தை, துக்கித்த மௌனத்தில் கரைந்த கோபால்ராஜ், "முத்தையா எப்போ வருவான்... வருவார்...?" என்றான்.

அன்னம்மா, அவர்களிடம் ஒப்பிக்க வேண்டும் போலிருந்தது:

"காலையில போனான். எப்போ வருவானோ சொல்ல முடியாது. திடீர்னு வருவான். திடுதிப்புன்னு போவான். இவ்வளவுக்கும் இன்னிக்கி ஞாயிற்றுக்கிழமை. ஆயிரம் வீட்டுக் கவலை இருக்கையில ஊர்க்கவலை எதுக்குப்பா? பிரின்ஸ்பால காலேஜ்ல நீக்கிட்டாங்களாம். தப்புத்தான். ஆனால், இவனால என்ன பண்ண முடியும்...? நம்ம சக்திக்கு மீறுன விவகாரம். அதுவும் அப்பா இந்த நிலைமையில் இருக்கையில், அவனுக்கு எதுக்கு ஊர் வேல? கொஞ்சம் புத்தி சொல்லுங்கப்பா..."

அருணாசலத்திற்கு, மனைவியின் பேச்சு பிடிக்கவில்லை என்பதை முகச்சுழிப்பாய்க் காட்டினார். பிறகு, "என்ன பேசிக்கிட்டே இருக்கே? வந்தவங்களுக்கு ஒரு டீ போட்டுக்கொடு...." என்றார். அன்னம்மா, கைகளைப் பிசைந்தபோது, அவரும் புரிந்தவர்போல் தலையைத் தாழ்த்தினார்.

'பெஞ்சு' கிளார்க்காகப் பணியாற்றும் இந்த குறுகிய காலத்தில், எல்லோரையும்-குறிப்பாய் சாட்சிகளை, அவர்களது பார்வையையே எடையாக வைத்து அறிந்துவிடும் கிருஷ்ணனுக்கு, நிலமை புரிந்துவிட்டது. கோபால்ராஜின் காதைக் கடித்துவிட்டு., அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

தனியே விடப்பட்ட கோபால்ராஜ், அருணாசலத்தை ஆற்றுப் படுத்தினான்:

"கவலப் படாதிங்கய்யா. நல்லவங்க கெட்டதில்ல. முத்தையா காலேஜ்ல வேலை நிறுத்தம் செய்யும்போது, மொதல்ல நீங்க தடுத்திங்களாம். அப்புறம், அவன் காரணத்தைச் சொன்னதும், நீங்களே ஸ்டிரைக்குல கலந்துக்கப் போனீங்களாம். முத்தையா என்கிட்டே சொன்னான்.... சொன்னார். இந்த மனசு யாருக்கும் வராதுங்கய்யா....."

அருணாசலம், பெருமிதமாக மீசையை முறுக்குவதுபோல், உடைந்த காலை ஓரிரு தடவை ஆட்டிக்கொண்டார். பிறகு, "கிறுக்குப் பயல்.... என்னைப் பத்தியும் பேசுவானா?" என்றார்.

"ஒங்களப் பற்றி அவன் சொல்லாத நாளே கிடையாது. ஒங்க மேல மோதுன ஆட்டோ ரிக்ஷா டிரைவரைக் கூட போலீஸ் கேட்டாலும், நீங்க சொல்லலன்னு சொன்னான். ஒங்க நல்ல மனசுக்குத்தான் இப்படி ஒரு நல்லபிள்ளை கிடைச்சிருக்கான். ஒங்க மகனும் ஒங்கள மாதிரிதான்."

"இல்லப்பா.... என் மகன் என்னைவிட ஒருபடி உசத்தி."

பேச்சு, எங்கெல்லாமோ போய்க் கொண்டிருந்தது. கோபால்ராஜ், முத்தையாவைக் கண்டிக்கிறேன் என்று தனக்கு ஆறுதல் கூறாமல், 'கட்சிமாறி' பேசுவதில், அன்னம்மாவுக்கு கொஞ்சம் வருத்தந்தான். ஆகையால், பேசாமல் அவர்கள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தாள். இதற்குள் வெளியே நின்று சலித்துப்போன கமலசுந்தரி, உள்ளே வந்தாள். வீட்டுக்காரம்மாவை, அவளது சொந்த மாடிவீட்டிலேயே 'சினிமாக் காவலில்' வைத்திருந்த சுகந்தி, அவளை விடுதலை செய்துவிட்டு, வீட்டிற்குள் வந்தாள். அங்கே இருந்த கோபால்ராஜைப் பார்த்துவிட்டு, சிறிது திடுக்கிட்டு, பிறகு, அக்காவுடன் ஒட்டிக்கொண்டே, 'யாரும்மே' என்று கிசுகிசுத்தாள்.

இதற்குள் வெளியேபோன கிருஷ்ணன், நான்கைந்து காகிதக் கூடைகளைச் சுமந்து வந்தான். கோபால்ராஜ், அவற்றை வாங்கி, தரையில் வைத்தான். ஐந்தாறு ஆப்பிள் பழங்கள்; ஏழெட்டு ஆரஞ்சுப் பழங்கள்; ஒரு கிலோ திராட்சை; இரண்டு 'சீப்பு' வாழைப் பழங்கள்... கிருஷ்ணனுக்கு, இரண்டு கிலோ அரிசி வாங்கிக்கொண்டு

வரவும் ஆசைதான். தப்பாக நினைத்துவிடக்கூடாதே என்று பயம். மெள்ள அடியெடுத்து நடந்து, இருபது பத்து ரூபாய் நோட்டுக்களை, நார்க்கட்டிலில் போட்டுவிட்டு, பயத்தோடு பார்த்தான்.

அதை உறுதிப்படுத்துவதுபோல், அருணாசலம் படபடத்தார். "என்ன இதெல்லாம்?" என்று சிலிர்ப்போடு சொன்னார். அன்னம்மா, விழித்தாள். தினமும் ஓசிப் பத்திரிகைள் படிக்கும் கமலசுந்தரியும், சுகந்தியும், ஒருவரையொருவர் பார்த்தபடி, 'இந்த அயோக்கியங்க ஏதோ திட்டம் போட்டு வந்திருக்காங்க. போலீஸ்ல சொல்லணும்' என்பதுபோல் வெளியே பார்த்தார்கள். கிருஷ்ணன், கெஞ்சாக் குறையாகப் பேசினான்:

"அய்யா.... தப்பாய் நினைக்கப்படாது. என்னை வாழ வைத்திருப்பவர் முத்தையா. ஒரு தடவ, இருநூறு ரூபாய் கடனாய்க் கொடுத்தாரு. அதை திருப்பிக் கொடுக்கதுக்காக வந்தேன். அசலுக்கு வட்டி வாங்க மாட்டாரு. அதுக்குப் பிரதியாய்த்தான் இந்தப் பழங்கள் வாங்குனேன். கொடுத்த கடன கொடுக்கதுக்குத்தான் கோபால்ராஜை கூட்டிக்கொண்டு வந்தேன்."

அருணாசலம், சந்தேகத்தோடு கேட்டார்:

"என்னப்பா இது? அவன்கிட்ட ஒனக்கு கடனாய் கொடுக்க பணம் ஏது?" என்றார். இளம்பெண்கள் இருவரும், தந்தையை பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடச் சொல்வதுபோல் முகத்தை நொடித்தார்கள். பெஞ்சு கிளார்க் கிருஷ்ணன் சமயோசியானான்:

"முத்தையாகிட்ட கேட்கப்படாது. ஒரு சமயம், அவருக்கு ஸ்காலர்ஷிப்பாய் முந்நூறு ரூபாய் காலேஜில வந்தது. அதுல இருநூறு ரூபாய் தந்தாரு."

அன்னம்மா, 'மீதி நூறுரூபாயை என்ன பண்ணுனான்' என்று கேட்கப்போனாள். பிறகு கணவர் முகத்தில் இன்னும் மாறாமல் இருந்த கடுமையைப் பார்த்துவிட்டு, பேச்சில் பின்வாங்கினாள். கோபால்ராஜ் 'சாட்சி' சொன்னான்:

"என்னை நம்புங்க ஸார். இவருக்குக் கடன் கொடுத்ததுக்கு நான்தான் சாட்சி. கொடுத்த கடனை எவனாவது திருப்பிக் கொடுக்க வருவானான்னு நீங்க அதிர்ச்சியடையுறது நியாயந்தான். ஆனாலும், இது நிஜம். சரி.... நாங்க வாறோம். முத்தையாவ நாளைக்கு என்னைப் பாக்கச் சொல்லுங்க."

இருவரும் புறப் பட்டார்கள். போகிற போக்கில், கிருஷ்ணன், "ஒங்க பையன்கிட்ட கிருஷ்ணன்னு சொன்னால் புரியாது. டூப்ளிகேட் முத்தையான்னு சொல்லுங்க. அந்த அளவுக்கு நாங்க ரொம்ப நெருக்கம்" என்று சொல்லிக்கொண்டே போனான்.

“பாவம்.... வாங்கிட்டு வந்தவங்களுக்கு ஒரு பழம்கூட கொடுக்க மறந்துட்டேன்” என்றாள் அன்னம்மா. பிறகு, ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து, உரித்து, கணவரின் வாயில் வைக்கப் போனாள். அவர், அதை சுவைக்காமல், துப்பி, சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டார்.

எல்லோரும், இந்த விவகாரத்தின் துப்பை, முத்தையாதான் துலக்கவேண்டும் என்பதுபோல், அவன் வருவது வரைக்கும், எதையும் தொடுவதில்லை என்று, ஒருவரிடம் ஒருவர் விவாதிக்காமலே ஏகமனதாகத் தீர்மானித்தார்கள்.

சிறிது நேரத்தில், முத்தையா வந்தான். தரையில் படர்ந்து கிடந்த பழங்களையும், ரூபாய் நோட்டுக்களையும் பார்த்துவிட்டு, அங்கிருந்த எல்லோரையும் மாறி மாறிப் பார்த்தான். கமலசுந்தரியும், சுகந்தியும் அண்ணனிடம் நடந்ததை மாறி மாறி விளக்கினார்கள். முத்தையா புரிந்து கொண்டான். டூப்ளிகேட் முத்தையா, தனது தியாகத்தைப் புரிந்து கொள்ளவில்லை. மாறாக விலைபேச வந்திருக்கிறான்! நினைக்க நினைக்க, அவனுக்குப் பற்றி எரிந்தது. பலமாகத்தான் கத்தினான்:

“யாராவது எதையாவது கொடுத்தால், உடனே வாங்கிடுறதா? நம்மகிட்ட இருக்கிற சொத்து மானம் ஒண்ணுதான். அதையும் விட்டுடுறதா?”

முத்தையா, இப்படிக் கத்திப் பார்த்ததை அறியாத தந்தை, மகனை மௌனமாகப் பார்த்தார். அவர் உதடுகள் துடித்தன. வாய்க்கு மீறும் வார்த்தைகளை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தார். அன்னம்மா, வழக்கம்போல் கைகளைப் பிசைந்தாள். அப்பாவின் மௌனம் கோபத்தையும், அவர் உள்ளூறத் துடிப்பதையும் பார்த்த சுகந்தியால் தாளமுடியவில்லை. இதுவரை, அண்ணனிடம் நேருக்கு நேராய் அதிகம் பேசியறியாத அவள், எதிர் கத்தல் போட்டாள்:

“ஒனக்குத்தான் மானம் இருக்கது மாதிரி குதிக்காதண்ணா. ஒன்னோட பழகுனவங்க மாதிரி பேசுனாங்க. நாங்க ரெண்டு பேரும் சந்தேகப்பட்டுக்கிட்டுத்தான் இருந்தோம். இந்தப் பழத்துல ஒரு சுளையைக்கூட அப்பா தின்னல. இந்தா இந்தப் பழத்தையும், அந்த இருநூறு ரூபாயையும் எடுத்து அவங்க மூஞ்சில எறிஞ்சிட்டு வா. எங்களுக்கு பணத்தப் பார்த்துப் பழக்கமில்ல; ஆனால், பட்டினி கிடந்து பழக்கம் இருக்கு. விவரம் தெரியாம ரொம்பத்தான் பேசுறே. நீ மட்டும் குடும்ப நெலம தெரிஞ்சிருந்தால், அந்த பிரின்ஸ்பால் பின்னால இப்டி சுத்துவியா? அவர்பாடு... காலேஜ்பாடு. நீ அவருக்காக சுத்தும்போது, அம்மா... எங்க வயித்துக்காக எங்கெல்லாம் சுத்துறாங்கன்னு ஒனக்குத் தெரியுமா?”

சுகந்தி, சொல்லி முடித்துவிட்டு விம்மினாள். கமலசுந்தரி, அவளை அணைத்துக் கொண்டாள். தந்தை, எதுவுமே பேசாமல், கூரையைப் பார்த்தார். முத்தையா, அதிர்ந்து போனான். அந்த அதிர்ச்சியை, இன்னொரு அதிர்ச்சி லேசாக்குவதுபோல், வாசல் முனையில் மேகலா நின்று கொண்டிருந்தாள்.

தங்கை பேசியது அவள் காதில் விழுந்திருக்குமோ? அதனால்தான் இப்படிக் கலக்கமாக நிற்கிறாளோ?

முத்தையா, தங்கை சுகந்தியை மருட்சியோடும், அனுதாபத்திற் குரியவள்போல் வாசலுக்கு வெளியே நின்ற மேகலாவை அதிர்ச்சியோடும், மாறி மாறிப் பார்த்தான். நடந்ததை மாற்றமுடியாத இயலாமைத் தவிப்போடும், கொதிப்போடும் பார்த்தான். மேகலாவுக்கு, தங்கை பேசியது கேட்டிருக்கும் என்று அவன் நினைக்க நினைக்க, அவன் காதுகள் பஞ்சராகிக் கொண்டிருக்கும் சைக்கிள் டியூப்கள்போல் இரைந்தன. அவளுக்கும், தனக்கும் தொடர்பு அற்றுப்போகப் போகிறது என்ற அச்ச உணர்வுடன், அவன் அல்லாடியபோது, வீட்டிற்குள் நிசப்தம் நிலவியது.

வேறொரு சமயமாக இருந்திருந்தால், சுகந்தி பேசிய பேச்சுக்கு-மகனின் மனதை நோகடித்த செயலுக்கு அன்னம்மா, மகளை அடித்திருப்பாள். தந்தையும், ஒரு அக்னிப் பார்வையை வீசியிருப்பார். குறைந்த பட்சம், கமலசுந்தரியாவது ஒரு அதட்டுப் போட்டிருப்பாள். ஆனால், அப்போது எல்லோரும் மௌன சோகங்களாய், முகம் காட்டினார்கள். சுகந்தி, அண்ணனைச் சாடியதை அங்கீகரிப்பதுபோன்ற மௌனம்.

முத்தையா, மேகலாவை 'வாங்க' என்றுதான் கூப்பிடப் போனான். அப்படிப் பேசி விட்டதாகக்கூட நினைத்தான். மேகலாவிற்கு, அது கேட்டதோ இல்லையோ, அளவெடுத்து நடப்பவள்போல் அடியெடுத்தாள். சோகத்தில் தேய்ந்து, அது ஒன்றையே சரணையாகக் கொண்டவள்போல், உள்ளே வந்து, வீட்டுக்குரியவர்களை 'என்னை வாம்மான்னு கேளுங்களேன்' என்பது மாதிரிப் பார்த்தாள். இதற்குள், அவர்களும் சுதாரித்து விட்டார்கள். கண்ணைக் கசக்கிய சுகந்தி, கைகளைக் கசக்கினாள். மகன் மாறிவிட்டான் என்பதுபோல், தலையைக் கவிழ்த்து, கோபத்தை குப்புறப்படுத்திக் கொண்டிருந்த அருணாசலம், சட்டென்று நிமிர்ந்து தன் உணர்வை மாற்றிக் கொண்டவர்போல் அவளை கண்ணகலப் பார்த்தார். அவர் உதடுகளில் கீறல் விழுந்தது.

முத்தையாவுக்கும், லேசாக உற்சாகம். தங்கை சொன்னது அவளுக்குக் கேட்டிருக்காது என்ற 'நெகட்டிவ்' மகிழ்ச்சி. சமாளித்துப் பேசினான்:

"அப்பா.... நான் ஒங்ககிட்ட அடிக்கடி சொல்வேன் பாருங்க, அது இவங்கதான். அம்மா..... முந்தாநாள்கூட ஒங்ககிட்ட சொன்னேன் பாருங்க... இவங்க தான் அது..."

"எவங்க.... எதுப்பா?"

"அதான் எங்க பழைய பிரின்ஸ்பால் மகள் மேகலா."

மேகலா, நார்க்கட்டிலில் நலிந்து கிடந்த அருணாசலத்தையே பார்த்தாள். பிறகு, அந்தக் கட்டிலை நெருங்கி, துடிப்படங்கிக் கிடந்த அந்த மனிதரை - துடித்த அந்த காலையே பார்த்தாள். அருணாசலமும், முத்தையாவின் அறிமுகத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல், தன் கால்களையே பொருட்படுத்திக் கொண்டிருந்த மேகலாவை, வைத்த கண் வைத்தபடி பார்த்தார் கரிமண்டாத செந்தீ போன்ற அந்த முகத்தை - மேனியெல்லாம் ஒளிப்பிழம்பாகி முகமென்ற ஜோதியின் அன்பு வீச்சில் அகப்பட்டார், அருணாசலம், அப்பா பேசாமல் இருக்கிறாரே என்று நினைத்து, 'இவங்க மேகலா..... எங்க பிரின்ஸ்பால் பொண்ணுப்பா..' என்று தன்னை உசுப்பிய மகனை அலட்சியமாகப் பார்த்துப் பேசினார்:

"நீ சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா என்ன? ஒங்க காலேஜ் கலாட்டாவுல, அத்தனை பசங்க மத்தியலயும் தைரியமாய், தன்னந்தனியாய் நின்ன பொண்ணாச்சே இது. இதோட முகம் எப்பவும் என் கண் முன்னால நிக்குது. ஏன்னால்.... அவ்வளவு துணிச்சலான படிச்ச பொம்மனாட்டிங்கள, இந்தக் காலத்துல பார்க்க முடியாது...."

தந்தையின் பேச்சால், முத்தையா சகஜமானான். இதற்குள் மேகலா, தன் வருகையின் நோக்கத்திற்கு தலைப்புச் செய்தி போட்டாள்:

"நாலு நாளாய் முத்தையா வர்ல. ஒருவேள, அவங்க பாதருக்கு கால் எப்டி இருக்கோ, போய்ப் பார்த்துட்டு வா'ன்னு அப்பாதான் அனுப்பி வச்சார். ஒங்களுக்கு இப்போ கால் எப்டி ஸார் இருக்கு?"

"பரவாயில்லாம்மா. ஒடி ஆடுன கட்டை இது. காலு துண்டாய் ஒடிஞ்சு, தனியாய் விழுந்தாலொழிய ஒண்ணும் நடக்காது. இன்னும் நடக்கிறதுக்கு ஒரு மாசம் ஆகும் போலத் தோணுது. இருந்த இடத்துலயே இருந்து பழக்கமில்லாத நான், இப்போ படுத்த இடத்துலயே படுக்க வேண்டியதாய் போச்சு. என்னமோ, தலைக்கு வந்தது, தலைப் பாகையோட போச்சுது...."

மேகலா, அந்த மனிதரின் பெருமிதமான தன்னம்பிக்கையில் ஆட்கொள்ளப்பட்டு, அவரை மலைப்பாகவும், புதிராகவும்

நோக்கியபோது, முத்தையா, குற்றவுணர்வுக் குரலில் தொனிக்க, அவள் கவனத்தை ஈர்த்துப் பேசினான்:

"ஸாரி மேகலா! நாலு நாளாய் ஒங்க வீட்டுக்கு வர முடியல. அப்பாவால நடமாடுறதுக்கே ஒரு மாசம் ஆகும். இனிமேல் அவரை வியாபாரத்துக்கு அனுப்புறது தப்பு. வீட்ல பொருளாதார நிலமையும் சரியாய் இல்ல. அதனால.... சாயங்காலத்துல பார்ட் டைம் வேலை ஏதாவது கிடைக்குமான்னு, இந்த நாலு நாளாய் ஒரே அலைச்சல். எந்தக் கம்பெனியும், நான் என்ன சொல்லப் போறேன்னு கேட்கக்கூடத் தயாராய் இல்ல. 'ஒரு ஒயின் ஷாப்லதான் பார்க்கலாமுன்'னு சொல்லி இருக்காங்க. மகாத்மா காந்திக்கு ஜே போட்டுட்டு சேரலாமான்னு நினைக்கேன். எப்படியோ.... எங்கப்பா நொண்டிக்காலோட வியாபாரத்திற்குப் போறதைவிட, நான் நொண்டிப் படிப்போட வேலைக்குப் போகத் தயாராய் இருக்கேன்."

"அப்போ படிப்பை டிஸ்கன்டினு பண்ணுறதுன்னு தீர்மானம் செய்திருக்கிங்களா?"

"தீர்மானமில்ல. வருமானமும் தன்மானமும் நிர்ப்பந்திக்கிற வழி. ஒங்க அப்பாவை, சதிகாரங்க சஸ்பென்ட் செய்தாங்க. என் படிப்பை, சந்தர்ப்பம் சஸ்பென்ட் செய்யப் போகுது."

மனக்கணக்கில், மகன் மைனஸாகப் போய்விட்டான் என்று தனக்குள்ளேயே நொந்து கொண்டிருந்த முத்தையாவின் தந்தை, அவனை நிமிர்ந்து பார்த்தார். குடும்பப் பொறுப்பை யாரும் கொடுக்காமலே ஏற்றுக் கொள்ள முன்வரும் தான்பெற்ற பிள்ளையை, ஏன் பெற்றேன் என்பதுபோல் ஏக்கமாக பார்த்தார். அவரால் எவ்வளவு படிக்க வைக்க முடியுமோ அவ்வளவு படிக்க வைப்பது என்று மனப்பால் குடித்த அந்த முதியவர், மகனிடம் 'படிடா.... படிடா.... வேலைக்குப் போகக்கூடாது' என்று சொல்லத்தான் நினைத்தார். வாயைத் திறப்பதற்கு முன்பு, கால் வலித்தது. குடும்ப நிலைமை, அவரை குலைய வைத்தது. மௌனியாகி, மயங்கியவர்போல் கண்களைச் செருகிக் கொண்டார்.

அப்பாவின் 'ரியாக்ஷனை' கவனித்த முத்தையா, உலகில் தங்களைப்போல் பரிதாபத்திற்குரியவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை தந்தைக்கு எடுத்துரைப்பவன்போல், "அப்பா எப்படி இருக்கார் மேடம்? கேஸ் எப்படி இருக்கு? நான் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன் பாருங்க. மொதல்ல உட்காருங்க. ஒரே ஒரு சின்ன இன்பர்மேஷன். எங்க வீட்டு நாற்காலியைவிட, இந்த தரை கெட்டி. அது கீழே விழாது. எதுல உட்காருறது என்பது ஒங்க இஷ்டம்...." என்றான்.

அந்தக் குறுகிய வீட்டிற்குள் ஒரு கூட்டமே வட்டமடிக்கும் நிலைமையை, முதன் முதலாய் நேருக்கு நேராய் பார்த்த மேகலா, அனைவரையும் அனுதாபத்துடன் பார்த்தாள். பிறகு நார்க் கட்டிலையே ஆதாரமாகப் பிடித்து, தரையில் உட்கார்ந்தாள்.

தரையில் உட்கார்ந்த மேகலா சிதறிக் கிடந்த பழவகைகளையும், நார்க் கட்டிலில் கிடந்த பத்துருபாய் நோட்டுக்களையும் வினோதமாகப் பார்த்துவிட்டு, முத்தையாவைப் பார்த்தாள். உடனே அவன், "நான் இன்னும் வேலையில் சேரல. இந்தப் பழங்களும், அந்தப் பணமும்தான், ஒங்ககிட்ட சொன்னேனே கிருஷ்ணன் - அதுதான் டுப்ளிகேட் முத்தையா, அவன் கொண்டு வந்து கொடுத்திட்டுப் போன கூலி" என்றான் சலிப்போடு.

மேகலாவிடம் எப்படியாவது பேசிவிடவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த அன்னம்மா, அவளிடம் முறையிட்டாள்:

"நீ படிச்ச பொண்ணு. நீயே சொல்லும்மா.... இவன் சிநேகிதங்கன்னு ரெண்டு பேர் வந்தாங்க. இவன்கிட்ட வாங்குன கடனைத் தாறோமுன்னு அந்த ரூபாயைத் தந்தாங்க. கொண்டு வந்த பழத்தை நாங்க திருப்பிக் கொடுத்தால், இவனைப் பற்றி மொதல்ல அவங்க என்ன நினைப்பாங்க? இது தெரியாமல் குதிகுதின்னு குதிக்கிறான்."

மேகலா, முத்தையாவைப் புதிராகப் பார்த்தபோது, அவன் 'தன்னிலை விளக்கம்' சொன்னான்:

"என் வாயை அடக்குறதுக்காக அவன் கொடுத்துட்டுப் போன லஞ்சப்பணம்."

மேகலா, அவர்கள் விவகாரத்தில் எப்படித் தலையிடுவது என்பது போல் கீழுதட்டை, மேலுதட்டால் விழுங்கினாள். இதற்குள் வெளியே ஓடிப்போன சுகந்தி, ஒரு கலர் நாற்காலியோடு வந்தாள். 'வீட்டுக்காரியிடம்' போய் சினிமா வசனத்தைக் கொடுத்து விட்டு, அதற்குப் பதிலாய் இந்த நாற்காலியை வாங்கி வந்திருக்கிறாள். தரையில் இருந்த மேகலாவை, நாற்காலியில் அமரும்படி சுகந்தி, அவள் கையைப் பிடித்துத் தூக்கினாள். ஐந்து நிமிட நேரத்திற்குள் அன்னியமானவளாய் இருந்த தன்னை அந்தரங்கமானவளாய் ஆக்கிய அந்த குடும்பத்தினரைப் பார்க்கப் பார்க்க, மேகலா பரவசமானாள். முத்தையாவை, செல்லமாக அதட்டியபடியே கேட்டாள்:

"எல்லாரையும் நல்லவங்கன்னு நினைக்கது எவ்வளவு தப்போ, அவ்வளவு தப்பு உலகத்துல எல்லாரும் கெட்டவங்கன்னு நினைக்கது. ஒரு பணக்காரன், இன்னொரு பணக்காரனுக்கு உதவும்போது, ஒரு ஏழை இன்னொரு ஏழைக்கு ஏன் உதவப்படாது?

டூப்ளிகேட் முத்தையா, மனச்சாட்சி உறுத்தலுல வந்திருக்கலாம். நீங்க பணத்தை வாங்குங்கன்னு சொல்லல. வாங்குனவங்களை மனம் நோகப் பேசாதிங்கன்னு தான் சொல்றேன். மனமொத்து செய்யுற உதவியை உதாசீனப்படுத்துகிறது மனிதாபிமானமல்ல. அப்பாவுக்கு நேற்று சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் வந்தது. முத்தையா, கஷ்டப்படுறவன், இந்த நூறு ரூபாயை கொடுத்துட்டுவான்னு தந்தார். இப்போ எனக்கு ஒங்ககிட்ட அந்த ரூபாயை கொடுக்கவே பயமாய் இருக்கு., நீங்க செய்த உதவிக்கு நான் கூலி கொடுக்க வந்ததாய் நினைச்சு, நீங்க என்னை கெட்டவுட்டுன்னு சொல்லிடுவீங்களோன்னு பயம்...."

முத்தையா, எதுவும் பேசாமல், தீவிரமாய்ச் சிந்திப்பவன்போல், தன் தலைமுடியை, கைகளால் கிளறியபோது, சுகந்தி அண்ணனை இளக்காரமாய்ப் பார்த்தபடியே பேசினாள்.

"கெட் அவுட்டுன்னு அண்ணனை சொல்ல விட்டுடுவோமா? அப்படிப் பேசினால், அவன்தான் அவுட்டாகணும்; இல்லியாம்மா?"

அன்னம்மா, சிரித்தாள். முத்தையா, மேகலா தனக்காகவும் சேர்த்து யோசிப்பாள் என்ற முடிவுக்கு வந்தவன்போல், உள்ளத்தை சலனமின்றி வைத்திருந்தான். அதே சமயம், தன் பேச்சு, தந்தையின் மனதைப் புண்படுத்தியிருக்கும் என்று உணர்ந்தவனாய், பழக்குவியலில் இருந்து தனியாகக் கிடந்த அதே அந்த ஆரஞ்சுப் பழத்தை தோலுரித்து, சுளையெடுத்து தந்தையின் வாயில் வைத்தான். எதிர்பாராத இனிப்பில் திக்குமுக்காடிய அருணாசலம், அதை உட்கொள்ளலாமா வேண்டாமா என்பதுபோல் வாயிலேயே சுளையை வைத்திருந்தபோது, மேகலா ஒரு ஆப்பிள் பழத்தை நறுக்கி, அவர் கையில் வைத்தாள். பிறகு, தன்னையறியாமலே, ஒரு துண்டையெடுத்து, அவர் வாயில் வைத்தாள். மகளின் அன்பைவிட, அந்த அந்நியப் பெண்ணின் பாசம் அவரை உலுக்கியிருக்க வேண்டும். மேகலாவின் கையைப் பிடித்தபடி அரற்றினார்:

"எப்படி இருந்த பொண்ணு எப்படி ஆயிட்டே? கவலப்படாதம்மா! ஒன் குணத்துக்கு நீ நல்லா இருப்பம்மா. இடையில் வந்தது, இடையிலேயே போயிடும்மா. ஒன் அப்பாவுக்கு போன வேலை கிடைக்கும்மா. என் மகனும் உங்களோட இந்த நிலைக்குக் காரணமுன்னு நினைக்கும்போது, எனக்கு.... எனக்கு..."

மேகலா, இரக்கத்தில் ஏழ்மையாகாத அந்த முதியவரையே உற்று நோக்கினாள். இப்போதுதான் அவளுக்கும் புரிந்தது. 'முத்தையா எப்படி வித்தியாசமானவராய் இருக்க முடியுது' என்று அடிக்கடி சிந்திக்கும் அவளுக்கும் இப்போதுதான் அர்த்தம் புரிகிறது. முத்தையா, தன் இயல்புக்கு, தானே பொறுப்பென்று, பெருமிதப்பட முடியாது என்பதும் தெரிந்தது. அந்த மனிதரிடம் ஆறுதலாகப் பேசப்

போனாள். ஆனால், வார்த்தைகளைவிட்டால், அவை விம்மல் சத்தத்துடன் வெளிக்கிளம்பும் என்பதை அறிந்ததும், சிறிதுநேரம் மௌனியாகிப் பிறகு நிதானமாகப் பேசினாள்.

“ஒங்க கஷ்டத்துக்கு, எங்க கஷ்டம் தூசு சார். இந்தக் காலத்துல நல்லதுக்குப் போராடுறது என்கிறது கெட்டதை அழிக்கிறது. இதனால் நாமே அழியலாம். இது தெரிஞ்சுதான், அப்பா இறங்கியிருக்கார். தைரியமாய்த்தான் இருக்கோம். ஆனாலும், இப்போ வரவர, எங்களுக்கு ஒரு சந்தேகம் வருது. நல்லவங்களாய் வாழ்ந்தால், ஒன்று... எதிரிகளே அவங்களை அழிக்கிறாங்க; அல்லது இயற்கையே அழிக்க வருது. இல்லன்னால், ஒங்களுக்கு ஏன் கால் ஒடியணும்?”

அருணாசலம், மேகலாவை உதடுகள் துடிக்கப் பார்த்தார். ஏதோ பேசப்போனார். கண்களை நீரும், வாயை கனமான ஏதோ ஒன்றும் அடைத்துக் கொண்டன. இதற்குள் அன்னம்மா, பழங்களை நறுக்கி, ஒரு ஈயத்தட்டில் வைத்து மேகலாவிடம் நீட்டினாள். மேகலா, இரண்டு துண்டுகளை, சுகந்தியிடமும், கமலசுந்தரியிடமும் கொடுத்துவிட்டு, கையேந்திய தட்டை முத்தையாவிடம் நீட்டினாள். பிறகு திடீரென்று நினைத்துக் கொண்டவள்போல், “சரி... நான் புறப்படுகிறேன். அப்பா கோர்ட்டுக்கு வருவார். இன்னைக்கு மெட்ராபாலிட்டன் கோர்ட்ல, அந்தப் பத்திரிகைக்கு எதிராய் வழக்குப் போடுகிறோம். கோர்ட்ல அவரை சந்திக்கிறதாய் சொல்லியிருக்கேன்” என்று முத்தையாவைப் பார்த்துச் சொன்னபடியே எழுந்தாள். பிறகு, கமலசுந்தரியையும், சுகந்தியையும் பார்த்து, “நீங்க வீட்டுக்கு வரணும். ஒரு வாரத்துல, நானே வந்து அழைச்சிட்டுப் போறேன்.” என்று சொல்லிவிட்டு, அருணாசலப் பெரியவரை, பாதாதிகேசம் வரைப் பார்த்தாள்.

அருணாசலம் தயங்கியபடியே எழுந்த மகன் முத்தையாவைப் பார்த்து, “நீயும் மேகலாவோட கோர்ட்டுக்குப் போப்பா. இந்தா இந்தப் பணத்தையும் எடுத்துக்கோ. அவங்கள கண்டுபிடிச்சு பணத்தைக் கொடுத்திடு. வச்சுக்கணுமுன்னு வற்புறுத்திட்டாங்கன்னு வரப்படாது. வரும்போது வெறும் கையோடுதான் வரணும்...” என்றார், ஆணைக்குரலில். மேகலா, தான் கொண்டு வந்திருக்கும் ரூபாயை, அங்கேயே கொடுக்கலாமா என்று நினைத்தாள். பிறகு, அந்தச் சந்தர்ப்பம் அவளுக்கு உகந்ததாகத் தெரியவில்லை. இடுப்பைத் தொட்ட கரத்தை எடுத்துக் கொண்டாள்.

மேகலாவை, அன்னம்மாவும், அவள் தோழிகளும் வாசல் வரை வந்து வழியனுப்பினார்கள். சுகந்திக்கு, மேகலாவைப் பிரிய மனமில்லை. அவளோடு இருப்பதற்காக, தானும் கோர்ட்டிற்குப் போகலாமா என்றுகூட நினைத்தாள். பிறகு அண்ணனைப் பார்த்தாள். அவர்களுக்குள் ஆயிரம் இருக்கும்! கமலசுந்தரி பிரிவாற்றாமையை கண்களிலேயே காட்டினாள்.

# 13

முத்தையாவும், மேகலாவும் எழும்பூரில் உள்ள மெட்ரோபாலிட்டன் கோர்ட்டுக்களை விழுங்கிக் கொண்டிருந்த 'அந்தக்' காலத்து கட்டிட காம்பவுண்டிற்குள் வந்து சேர்ந்தார்கள்.

எப்போதாவது பஸ்ஸில் போகும்போது, அந்தக் கட்டிடங்கள் தொகுப்பை, சம்பந்தம் இல்லாதபடி வெளிப்புறமாய் பார்த்தவர்கள், இப்போது முதன் முதலாய் உள்முகமாய் பார்த்தார்கள். மேகலா, அப்பாவைத் தேடினாள். வந்திருக்கமாட்டார். இப்போ, மணி பிற்பகல் ஒன்று. ஒன்றரை மணியளவில்தான் வக்கீலுடன் வருவதாகச் சொன்னார்.

திறந்தவெளி சிறைச்சாலைபோல் தோன்றிய அந்தக் கட்டிடக் குவியலுக்குள், மனிதர்கள், சிதறிப் போனவர்களாய் சிந்திக் கிடந்தார்கள். ஒருசில இடங்களில், குப்பத்துப் பெண்கள் நான்கைந்து பேராய், தலையில் கை வைத்து, துக்கம் தொண்டையைத் தாண்டக்கூடாது என்பதுபோல் வாயில் விரல்வைத்து எங்கேயோ வெறித்து நோக்கினார்கள். இதே ரகத்தைச் சேர்ந்த இளைஞர்கள், தத்தம் 'ஏரியா' போலீஸ்காரர்களின் பேச்சை வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கு கருப்பு அங்கி வக்கீல்கள், கும்பல் கும்பலாய் அந்தத் தரையில் முளைத்த புதிய பீடபூமிகள் போல் திட்டுத்திட்டாய் நின்றார்கள். 'ஒயிட்காலர்கள்' எனப்படும் கலர்ச் சட்டைகள், ஆடை கசிந்த ஆசாமிகளை உருட்டிக் கொண்டிருக்க, ஒவ்வொரு மெட்ரோபாலிட்டன் கோர்ட் வாசலிலும் கூன்போட்ட கிழவிகள், சைக்கிள் ரிக்ஷாக்களை ஓட்டி ஓட்டி உள்ளங் கைகளையே புறங்கைகளாக்கிய தொழிலாளர்கள், வறுமைக்கு ஈடுகட்டுவதுபோல் - ஆடைக்கு முரண்காட்டுவதுபோல் மேனியில் வளம் கொஞ்சும் இளம் பெண்கள் - இப்படி மனிதக் கும்பல்கள், நீதி கேட்டோ, நீதியால் கேட்கப்பட்டோ அல்லது கெட்டோ, அங்கே கண்களே கர்மமாய் ஆனதுபோல் தவம் கிடந்தார்கள்.

அப்படியும், இப்படியுமாய் ஒன்றே முக்கால் மணிக்குப் பேராசிரியர். பெருமாள்சாமி, ஓர் இளம் வக்கீலுடன் ஆட்டோ ரிக்ஷாவில் வந்து இறங்கினார். பேராசிரியர் மகளை நோக்கியும், மகள் தந்தையை நோக்கியும் நடந்தபோது, அந்த வக்கீல், கையில் பல கேஸ்கட்டுக் களுடன், ஒரு கோர்ட் கட்டிடத்திற்குள் ஓடினார். பேராசிரியர், மகளையும், மாணவனையும் வறட்சியாகப் பார்த்தார். அவரிடம் ஏதாவது பேசவேண்டும் என்பதற்காகப் பேசப்போன முத்தையா, பேராசிரியரின்

முகம் சரிந்து, கண் பிதுங்கி இருப்பதைப் பார்த்துவிட்டு, பேசுவதற்கு வார்த்தைகளைத் தேடி, தன்னுள்ளே அலைந்தான். பேராசிரியர், ஆங்காங்கே மரங்களுக்கு வேர்களாகி, மண்ணுக்கு போகப்போகிறவர் கள்போல், கைகளால் மண்தரையைக் குடைந்த மனிதர்களைப் பார்த்தார். அவர்களைப் பார்க்கப் பார்க்க, அவர்களில் தானும் ஒருவன், இனிமேல் அப்படி தவம் இருக்கப்போகிறவன் என்பதை உணர்ந்தார்.

இதற்குள் வக்கீல் இளைஞர் அங்கே வந்தார். பெருமாள் சாமியின் கையை, பலவந்தமாகப் பிடித்துக் குலுக்கியபடியே, "குட் நியூஸ் ஸார்... ஒங்க மனுவை இப்பவே 'புட்டப்' பண்ண பெஞ்ச் கிளார்க் சம்மதிச்சுட்டார். அப்புறம் 'பாக்ஸ்ல' நின்னு எப்படிப் பேசணுமுன்னு நான் சொல்லிக் கொடுத்தது ஞாபகம் இருக்குதா ஸார்...?" என்றார்.

"இருக்குப்பா இருக்கு. என்னத்த பெரிசாச் சொல்லப் போறேன். எதையும் ஜோடிச்சுப் பேசப் போறதுல்ல. என்னைப் பற்றி நான் தெரிஞ்சு வச்சிருக்கிறதை சொல்லப்போறேன். இதுல யோசிக்கதுக்கு எதுவுமே இல்லை. இதுல ஒரே ஒரு டிரபிள் என்னன்னால், டிரஸ்ட் போர்ட் எத்தனாம் தேதி என்னை சஸ்பெண்ட் செய்தது, எத்தனாம் தேதி பத்திரிகையில அந்தச் செய்தி வந்தது, எத்தனாம் தேதி காலேஜ்ல நுழைந்தேன், எத்தனாம் தேதி மாணவர்களை வெளியேற்றினேன், எப்போ அவங்கள சேர்த்தேன்னு தேதிகளை ஞாபகம் வச்சுக்க வேண்டியதிருக்கு. எனக்கு காலேஜ்ல படிக்கிறதுல இருந்து, இந்தத் தேதி என்றாலே அலர்ஜி. அதனாலதான் ஹிஸ்டரிக்குப் பதிலாய் எகனாமிக்ஸ் எடுத்தேன். இப்போ வாழ்க்கையே அலர்ஜியாய் போனதால, அலர்ஜி சமாசாரத்தை எல்லாம் மனப்பாடம் செய்ய வேண்டியதிருக்கு. சீ... என்ன லைப்டா இது..."

"அதுக்குச் சொல்லல ஸார். பேசும்போது பிடிகொடுத்துப் பேசப்படாது என்று சொல்ல வந்தேன்."

"என்னை எல்லோரும் ஒரே பிடியாய் பிடிச்சாச்சு. இனிமேல் பிடியோட பேசினால் என்ன, பேசாட்டால் என்ன? மாஜிஸ்டிரேட் மனசுல பிட்டி வந்தால் போதும்....."

"இன்னொரு தடவை சொல்லித் தரட்டுமா ஸார்....?"

"எத்தனையோ மாணவர்கள்கிட்டே ஆசிரியராய் கேள்வி கேட்டேன். இப்போ நானே மாணவனாய் நிற்கிறேன். ஆனால், ஒரே ஒரு வித்தியாசம். அவங்க பரீட்சையில் தேறணுமுன்னு கேள்விமேல் கேள்வியாய் கேட்டேன். இப்போ நானே பிறத்தியார் எழுதுற பரீட்சையாய் போயிட்டேன். பார்த்தியா முத்தையா! ஒன்னோட பேராசிரியரோட நிலைமையை? 'பாக்ஸ்ல' எப்படிப் பேசப் போறேன்னு ஒன்கிட்டே ஒப்பிக்கிறேன். நீயும் கொஞ்சம் சரிபார்த்துச் சொல்றியா?"

முத்தையா, கண்களைக் கசித்துக் கொண்டான். கையை, முகத்தில் துடைத்து ஈரமாக்கிக் கொண்டான். மேகலா, தந்தையை ஆறுதலாகப் பார்த்து, தனக்கு ஆறுதலாக முத்தையாவையும் பார்த்தாள்.

பிற்பகல் இரண்டு மணிக்கு, மெட்ரோபாலிட்டனின் குறிப்பிட்ட அந்த கோர்ட் கூடியது. நீதிக்கு இடம் கொடுத்த அந்த அறையைப் பார்த்தாலே எரிச்சல், பீதி முதலிய உணர்வுகள் கலவையாக வரும். அப்படிப்பட்ட அறை. இந்தக் காலத்தில் உருப்படியில்லாத ஒரு ஊர்ப் பஞ்சாயத்து அதிகாரிக்குக் கூட 'புஷ்டோர்' கொண்ட வாசலும், டிஸ்டெம்பர் சுவர்களும், கார்பெட் தரையும், சன்மைக்கா மேஜையும் கொண்ட அலுவலக அறை உண்டு. ஆனால், ஆயிரக்கணக்கான மக்களிடையே நீதித்தராசை நிமிர்த்திக் காட்டுவதற்குக் களம்கொண்ட அந்தத் தளம் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் வகுப்பறையில் பாதியளவு பரப்போடும், அதைவிட இரண்டு பங்கு சேதத்தோடும் இருந்தது. நீதிபதி அமர்வதற்காக ஒரு சின்ன மேடை. அதன்மேல் பெரிய - அதேசமயம் பழைய மேஜை. அதற்குப் பின்னால் திரைச்சீலை... நீளவாக்கிலான மேடைக்குக் கீழே, இரண்டு பெஞ்சுகள். மத்தியில் மேஜைகள்.

பெஞ்சு முனைகளை ஒட்டி குறுக்காகப் போடப்பட்ட இன்னொரு மேஜை. அதற்குப் பின்னால் பெஞ்சு கிளார்க்கின் நாற்காலி. இன்னொரு முனையில் 'கூண்டு'. இதுதான் அந்த கோர்ட்டு.

வக்கீல் இளைஞர், பேராசிரியர் பெருமாள்சாமியை முதலில் வழக்கறிஞர்கள் அமரும் நாற்காலியில் உட்காரும்படி சைகை செய்தார். அவரும் தயங்கித் தயங்கி, மயங்கி மயங்கி உட்கார்ந்தார். வெளியே வராண்டாவில் திரண்டு நின்ற 'குற்றவாளிகளுடன்' மேகலாவும் முத்தையாவும் நின்றார்கள். ஒருவரை ஒருவர் பார்க்காமல், பார்வையை அகற்றிக் கொண்டார்கள். இதற்குள் வெளியே இருந்து வழக்கறிஞர்கள் வந்து, உட்கார இடம் இல்லாமல் நின்றபோது, வக்கீல் இளைஞர், பேராசிரியரைப் பார்த்து முகத்தை ஆட்டினார். அதைப் புரிந்து கொண்டவர்போல், அவரும் மெள்ள எழுந்து, வேகமாய் நடந்து, 'வராண்டா' ஏழை பாளைகள் பக்கம் நின்று கொண்டார். அந்தக் காலத்தில் வகுப்புக்கு 'லேட்டாக' வரும் மாணவர்களை, தாம் வெளியே நிறுத்தி வைத்திருந்தது அவருக்கு நினைவுக்கு வந்தது. இப்போது, தன்னைத்தானே வெளியேற்றிக்கொண்ட வெறுமையில், துடித்துப் போனார்.

மாஜிஸ்திரேட் வந்துவிட்டார். வழக்கறிஞர்கள் எழுந்தார்கள். அவர்களின் கட்சிக்காரர்கள் முண்டியடித்தார்கள். சலனமற்ற முகத்தோடு, எவரையும் நோக்காத பார்வையோடு நாற்காலியில்

அமர்ந்த நீதிபதி, மேஜையை அங்குமிங்குமாய் பார்த்தபோது, பெஞ்சு கிளார்க் கேஸ் கட்டுக்களை நீட்டினார். பிறகு, மாஜிஸ்டிரேட்டிடம் பணிவன்பாய் பேசிவிட்டு, 'முனுசாமி... முனுசாமி...' என்றார். உடனே, டவாலி போட்டவர், வராண்டா பக்கம் வந்து பெஞ்சு கிளார்க்கின் ஒலி பெருக்கியானார். முனுசாமி வந்தான். அங்கே நின்ற சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்தபடியே வந்தான். குற்றத்தை உடனடியாக ஒப்புக் கொண்டான். இருபத்தைந்து ரூபாய் அபராதம். அபராதத் தொகையை எப்படிக் கட்டவேண்டும் என்பதை அறிவதற்காக, அதை அறிந்து வைத்திருந்த போலீஸாரிடம் போனான். முத்தம்மா, முனியாண்டி, ரங்கன், சீனன்-இப்படிப் பலர், தனித்தனியாகவும், கோஷ்டி கோஷ்டியாகவும் கோர்ட்டிற்குள் நுழைந்து நுழைந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

பேராசிரியர், கூனிக்குறுகி கோர்ட்டிற்குள் போனார். சிறிது நேரத்தில் அவர் பெயர் வழக்கு எண்ணோடும், பிரதிவாதியின் பெயரோடும் ஏலம் போடப்பட்டபோது, வக்கீல் இளைஞர் சுட்டிகாட்டிய மரக்கூண்டில் ஏறினார். நிற்பதற்கும், மயங்கி விழுவதற்கும் வசதியான கூண்டு. பேராசிரியரிடம், ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டு, சத்தியப் பிரமாணம் வாங்கப்பட்டது. மாஜிஸ்டிரேட், அவர், தனது புகாரை எடுத்துரைக்கலாம் என்பது போல நிமிர்ந்து உட்கார்ந்தார்.

பேராசிரியர், தொண்டைக்கு வாய்மூலம் ஈரம் பாய்ச்சிக் கொண்டார். மனதைப் போல், சட்டையை இழுத்து விட்டுக் கொண்டார். கண்களை மூடி வாயைத் திறந்தார்:

"எனக்குச் சொந்த ஊர் திருச்சில ஒரு கிராமம். திருச்சில பி.ஏ. படிச்சுட்டு, சென்னையில பிரஸிடென்ஸி காலேஜ்ல எம்.ஏ. படிச்சேன்."

வக்கீல் குறுக்கிட்டார்.

"நிதானமாய் ஸ்லோவாய் பேசுங்க. அய்யாவே எழுதணும் பாருங்க...."

புகார் மனுவில், தான் சொல்வதை எழுதிக் கொண்டிருந்த மாஜிஸ்டிரேட்டைப் பார்த்துவிட்டு, பேராசிரியர் தொடர்ந்தார்:

"எம்.ஏ.வுல எகனாமிக்ஸ் எடுத்தேன். யுனிவர்ஸிட்டியில கோல்ட் மெடல் வாங்கினேன். பிரஸிடென்ஸி காலேஜ்ல இப்போகூட என் பெயர் இருக்கு. என்ன போதாத காலமோ, செகரட்டேரியட்ல வேலையில சேர்ந்தேன். ஒரு வருஷத்துக்கு மேல தாக்குப்பிடிக்க முடியல. அப்புறம் ஐ.ஏ.எஸ். எழுதுனேன். இன்டர்வியூவுல பெயிலாட்டேன். எந்த வேலையும் கிடைக்கா விட்டால், ஒருவன் எந்த வேலையில் சேருவானோ, அந்த வேலையில சேர்ந்தேன். அதாவது

வாத்தியார் வேலை. இதே இந்த காலேஜ்ல, டியூட்டராய் சேர்ந்தேன். ஐந்து வருஷத்துல லெக்ஸராய் மாறினேன். அப்புறம் பத்து வருஷத்துல புரபஸர். அப்புறம் ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்ட். அப்புறம் வைஸ் பிரின்ஸ்பால். பேருதான் வைஸ் பிரின்ஸ்பால்; அது சம்பந்தமாய் எந்தப் பொறுப்பும் எனக்குக் கொடுக்கல.... நானும் கேட்கல.... அதனாலதானோ என்னவோ, பழைய பிரின்ஸ்பால் ரிட்டயர் ஆனதும் என்னை ஆக்டிங் பிரின்ஸ்பாலாய் போட்டாங்க."

மாஜிஸ்ரிரேட், எழுதிய கையை வாயருகே கொண்டுவந்து இருமினார். பிறகு நிதானமாக அவர் பேனாவை தொட்டபோது -

"அப்போ, டிரஸ்ட்போர்ட் சேர்மன் தூண்டுதலில் என் மாணவச் செல்வங்களை, நானே கல்லூரியில் இருந்து வெளியேற்றி, அப்புறம் மனம் திருந்தி மீண்டும் சேர்த்துக்கிட்டேன். பொதுவாய் பாடம் நடத்துறதில எபிஷியன்டுன்னு எனக்குப் பேரு. பல்கலைக்கழக வட்டாரத்துல, நல்ல பேரு வாங்குனவன். 'வாடிக்கை'யில் இந்தக் கேவலமான செய்தி வந்தபிறகு எனக்கு நிம்மதி போயிட்டு. என் ஒரே மகளும் துக்கத்தை வாங்கி தூக்கத்தை விட்டுட்டாள். நேர்மையை உயிராய் நேசிக்கிற எனக்கு இப்போ உயிர் வாழ்வதே அவசியமின்றித் தெரியுது. ஆனாலும், இந்த எழுத்து முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுறதுன்னு தீர்மானிச்சுடன். அதோட.... என் வேலையும் குந்தகப்பட்டு, என் மானமும் குந்தகப்பட்டு, நிர்க்கதியாய், நிராயுதபாணியாய் நிற்கிறேன். மாண்புமிகு மாஜிஸ்டிரேட் அய்யா அவர்கள் தான் எனக்குப் பரிகாரம் தேடித் தரணும்...."

பேராசிரியர். பெருமாள்சாமி கூண்டிலிருந்து விடுபட்டார். மாஜிஸ்டிரேட் தான் எழுதியதை, பெஞ்சு கிளார்க்கிடம் கொடுக்க, அவர் பேராசிரியடமிருந்து, அதில் கையெழுத்து வாங்கிக் கொண்டார். எதுவும் புரியாமல் பேராசிரியர் வெளியே வந்தபோது, வக்கீல் இளைஞர் ஓடிவந்து, "கன்கிராஜுலேஷன்... அடுத்த மாசம் 15-ஆம் தேதி வாய்தா என்று சொன்னபடியே ஆனந்த வேகத்தில் ஓடினார்.

முத்தையா-மேகலா சகிதமாக, பேராசிரியர் வெளியே வந்து, ஒரு புளிய மரத்தருகே அக்கினிப் பிரவேசம் செய்து வெந்து போனவர்போல், வாயால் ஊதிக் கொண்டிருந்தார். கால்மணி நேரத்தில் வக்கீல், இன்னொருவருடன் ஓடிவந்தார்.

"ஸார்.... இவர்தான் குயிக்கா நம்பா போட்டார். ஒரு பத்து ரூபாய் கொடுங்க...."

"கோர்ட் பீஸா...?"

"அதெல்லம் கேட்கப்படாது. சொன்னதைத் செய்யுங்க...."

"என்கிட்ட சில்லறையாய் இல்லியே...."

பேராசிரியர், பையில் இருந்து ஒரு முழு இருபது ரூபாய் நோட்டை மெல்லிதாய் பிடித்தபடி அதை மேலும் கீழுமாய் பார்த்தபோது, நம்பர் கிளார்க், அதை, வன்முறையாகப் பறித்துக் கொண்டு, 'எனக்குப் பத்து, அவருக்கு பத்து. அப்புறம்.... அடுத்த வாரம் வாங்க. நோட்டீஸ் இஷ்ஷூ பண்ணுவோம்...." என்று வக்கீலிடம் சொல்லிவிட்டு ஓடிவிட்டார்.

பேராசிரியர். தனது நிராயுதபாணி சட்டைப் பையையே பார்த்தார். வைத்திருந்ததே முப்பது ரூபாய். ஆட்டோவுக்கு பத்து போயிட்டு. இப்போ இருந்த இருபதையும் எடுத்துட்டுப் போயிட்டான். திரும்பிப் போறது எப்படி? யோசிக்க யோசிக்க.... அவருக்குக் கோபம் வந்தது. கத்தினார் என்பது லேசான மதிப்பீடு.

"என்னப்பா இது... அநியாயமாய் இருக்கே? அவனுக்கு எதுக்குப்பா அழணும்...?"

"ஸார்.... நம்மோட லட்சியம் கேஸ்ல ஜெயிக்கணும் என்கிறது, அதுக்காக சில்லறை விஷயங்களை கவனிக்கப்படாது."

"அது ஒங்களோட லட்சியமாய் இருக்கலாம். என்னோட லட்சியம், சில்லறைத்தனமான லட்சியம் இல்ல. நேர்மை என்கிறது பணம் வாங்குறதுல மட்டும் இல்ல, கொடுக்கிறதுலயும் இருக்கு. அதோட அவன் இருபது ரூபாயை எடுத்துக்கிட்டு போற விதமே அடாவடியாய் இருக்கு. எங்க டிரஸ்ட் போர்ட் சேர்மன் அப்பாவு பார்ப்பானே ஒரு பார்வை, அப்படி என்னை கூலிக்காரன் மாதிரி பார்த்துட்டுப் போறான். இவன் செய்திருக்கிற காரியம், அந்தப் பத்திரிகைக்காரன் செய்த காரியத்தை விட மோசம். நீதியை நிலைநாட்ட எதுக்குய்யா அநீதி? எனக்கு வழக்கும் வேண்டாம், உழக்கும் வேண்டாம். இப்பவே மாஜிஸ்டிரேட் அய்யாகிட்ட நடந்ததைத் சொல்லப்போறேன். விடுங்கய்யா என்னை. காலேஜ்ல அட்மிஷனுக்குப் பணம் வாங்காதவன் நான். ஒரு சுண்டைக்காய் பயல், நம்பர் போட்டதுக்காக.... விடுய்யா, என்னை."

பேராசிரியர், முண்டியடிக்கப் போனார். முத்தையாவும் மேகலாவும், குற்றவாளியை இரண்டு பக்கமும் நின்று போலீஸ் காரர்கள் பிடிப்பதுபோல், அவரைப் பிடித்துக் கொண்டார்கள். வக்கீல் இளைஞர், அவரை மறிப்பதுபோல் நின்றுகொண்டு, பேராசிரியரை இப்போதுதான், ஆச்சரியமாகப் பார்த்தார். அவருள், சத்ய தரிசனத்தைக் கண்டது போன்ற ஒரு திருப்தி அல்லது அதிப்ருதி.

வக்கீல் இளைஞர், தனது கட்சிக்காரர் பெருமாள்சாமியை, நீதியின் கட்சிக்காரராய் நினைத்து பழுதடைந்த குரலில், பாழடைந்த லட்சியப் பாதையின் சூட்சுமங்களை ஒப்பித்தார்:

"நானும் காலேஜ்ல சில்வர் மெடலிஸ்ட் ஸார். சமுகத்தோட துயரங்களை என்னளவுல போக்கணும் என்கிற லட்சியத்துலதான் 'லா' காலேஜ்ல சேர்ந்தேன் ஸார். கேர்ல்ஸ பார்த்து, மத்தவங்க மாதிரி விசிலடிக்காமலே படிச்சவன் ஸார். கோர்ட்ல ஏழைபாளைகளுக்கு உதவப் போகிறோம் என்கிற மனிதாபினமான பெருமிதத்தோட, நான் பிராக்டீஸை துவக்குனேன். ஆனால், இங்கே வந்த பிறகுதான் புரிஞ்சுக்கிட்டேன் ஸார். பெஞ்ச் கிளார்க்கில இருந்து பெஞ்சைத் தூக்கிப் போடுற பியூன் வரைக்கும் பணத்தைத் தள்ளாமல் பேப்பரைத் தள்ளமுடியாது. மாஜிஸ்டிரேட்டைக்கூட ஒரு வக்கீல் பகைச்சுக்கலாம்; ஹைகோர்ட்ல அவரை எதிர்த்து ரிவிஷன் பெட்டிஷன் போடலம். ஆனால், பெஞ்சு கிளார்க்குகளையோ, நம்பர் கிளார்க்குகளையோ, வக்கீல்களால் பகைக்கா முடியாது. எங்களுக்கு எஜமான்களே இவங்கதான் ஸார். இப்போ நீங்க மாஜிஸ்டிரேட் கிட்ட சொல்லி அவர் ஆக்ஷன் எடுக்கிறார்னு வைப்போம். அப்புறம் நான் ஆக்ஷன்ல இருக்க முடியாது. ஆமாம் ஸார். அப்புறம், எல்லா பெஞ்சு கிளார்க்கலும், பகையாயிடுவாங்க. தாக்கல் செய்யுற மனுவுக்கு, உடனே நம்பர் கிடைக்காது, உடனே புரஸிடிங்ஸ் போகாது. மொத்தத்துல, என் கட்சிக்காரன் என் மேலேயே கேஸ் போடுற நிலைமை வந்துடும். ஆனால், ஒண்ணு ஸார்.... இந்த நாட்டை அடியோடு மாற்றி, புது சொஸைட்டி, புதுச்சட்டம் வந்தாலொழிய யாரும் எதுவும் பண்ணமுடியாது. 'பேயாட்சி செய்தால் பிணந்தின்னும் சாஸ்திரங்கள்'னு பாரதி சொன்னான். ஏன் ஸார் அப்படிப் பார்க்கிறீங்க? நான் காலேஜ்ல பேச்சுப் போட்டிகள்ல பரிசுகள் வாங்கிட்டு, இப்போ நம்பர் கிளார்க்கிட்டே நாய் படாதபாடு படுறவன. ஸாரி.... எங்க பாஸ்களை அதிகமாய்த் திட்டுனக்கு மன்னிச்சுடுங்கோ...."

பேராசிரியர். பெருமாள்சாமி, மேகலாவையும் முத்தையா வையும், பாருங்கள் என்பதுமாதிரி பார்த்துவிட்டு, அந்த இளம் வக்கீலையே பார்த்தார். உயிர்போன லட்சியத்தின் உயிர்ப்பான சமாதிபோலத் தோன்றிய அந்த வாலிபர், கல்லூரி சஸ்பெஸ்டின் வழக்கில், ஏட்டு சுரைக்காயான ஸ்டேய் ஆர்டரை வாங்கிக் கொடுத்த பெரிய வக்கீலின் சின்ன ஜூனியர்.

இவர் மனதிலும் இவ்வளவு பெரிய பிரளயமா? இப்படி எல்லோர் மனதிலும், நெருப்புத் துண்டுகள் கிடக்குமோ? கோல்ட் மெடல் வாங்குன என்னை, கோலி விளையாடுறவன் படாதபாடு படுத்துறான். 'லா' படிச்ச இவன், 'லோ' பயல்கிட்ட தொங்குறான். இப்படித்தான் நியாயம், அநியாயத்துக்கிட்ட எல்லா கட்டத்துலயும் தொங்குதோ?

# 14

அதை பழைய கல்லூரியின் முதல்வரின் அறைக்குள், மனிதர்கள் பேசுவது போலவோ அல்லது கத்துவது போலவோ கேட்கவில்லை. அந்த் அறையே அவதாரமாகி, வாசலென்னும் வாய் திறந்து, அசுரத்தனமாய் கத்துவது போலிருந்தது. அந்தச் சத்தம். டிரஸ்ட் போர்ட் சேர்மன் அப்பாவு போட்ட சந்தந்தான். வெளியே, அவரைப் பார்ப்பதற்காக, அங்குமிங்குமாய் சிதறியபடி நின்று கொண்டிருந்த அவரது ஆதரவாளர்களுக்கே, அந்த உசத்தியான சத்தம் பிடிக்கவும் இல்லை. பிடிபடவும் இல்லை. காதுகளைப் பொத்திக் கொண்டார்கள்.

ஆனால் -

அறைக்குள், தனது சுழல் நாற்காலியை, அப்பாவுவிடம் கொடுத்துவிட்டு, அவர் முன்னால், அந்தக் காலத்து எலிமெண்டரி மாணவன்போல், தரையில் இருந்து கால்கள் அறுபது டிகிரியும், முதுகு முப்பது டிகிரியுமாய் நிற்க, டிரஸ்ட் போர்ட் சேர்மன் சுழன்ற சுழப்பிற்கேற்றபடி தனது முகத்தைச் சுற்றிய தற்காலிக முதல்வர் பேராசிரியர் மாணிக்கம், அப்போது காதுகளை கையால் அடைத்தால், தன் வயிற்றிலும், தான் பெற்ற ஐந்து பெண்கள் கழுத்துக்களிலும் அடிவிழும் என்பதை அறிந்தவராய், அப்பாவு கத்தக் கத்த, இவர் தன் வாயை மட்டும் அகலமாக்கி அகலமாக்கி, குரல் செத்த மனிதராய் அடியற்ற மரம்போல் சாயப் போனார்.

அப்பாவு, எகிறிக்கொண்டே போனார்:

"ஒங்க மனசுல என்னய்யா நெனச்சுக்கிட்டீங்க? அந்தப் பயல் குருநாதன், டீச்சர் அஸோஸியேஷன் செயலாளர் என்கிற தெனாவட்டுல மிதக்கான். கிளாஸ்ல உட்கார்ந்து பாடம் நடத்துனால் நடத்துறான், நடத்தாட்டால் போறான். ஆனால், என்னைப் பார்த்தால், ஒரு மரியாதைக்காவது எழுந்திருக்கல? ஏதாவது ஒரு சாக்குல, அவனுக்கு ஒரு மெமோ கொடுங்க. மீதியை நான் கவனிச்சுக்கிறேன்னு ஒங்ககிட்டப் படிச்சுப் படிச்சு சொல்லிட்டேன். நீங்க செய்திங்களா? கேவலம் ஒரு லெக்ஸ்ரர் பயலுக்கு ஒரு மெமோ கொடுக்க முடியல. நீங்கெல்லாம் பிரின்ஸ்பாலா? ஒங்களை, அப்படிக் கூப்பிட எனக்கே வெட்கமாய் இருக்கு ஸார்... மனுஷன்னா நன்றி இருக்கணும்."

தற்காலிக முதல்வர், வெட்கத்தை வெளிநடப்பு செய்யவிட்டு, நன்றியுடன் பதிலளித்தார்.

"நீங்க ஆயிரம் சொல்லுங்க, தாங்கிக்கிறேன். ஏன்னால், குட்டுப்பட்டாலும், மோதிரக் கையாலதான் குட்டுப்படுறேன். ஆனால், நன்றிக் கெட்டவன்னு மட்டும் நினைக்காதிங்க. என் பொண்ணுங்களுக்கு, நீங்க அந்த ரவுடிப் பசங்ககிட்டே இருந்து பாதுகாப்புக் கொடுத்ததையோ, உலகமே அறியாத எனக்கு இந்த பொறுப்பான போஸ்டை தந்ததையோ நான் மறக்கல... மறக்க மாட்டேன்..."

"ஆனால்.... அந்த குருநாதனுக்கு மெமோ கொடுக்கச் சொன்னதை மட்டும் மறந்திட்டிங்களாக்கும்."

"அந்த வாலிபர், ஆசிரியர் கூட்டணிச் செயலாளர். மெமோ கொடுத்தால், தர்ணா செய்வார். அதோட காலேஜ் கவுன்ஸில் எதிர்க்கும். அகடாமிக் கவுன்ஸில் வரைக்கும் விவகாரமாயிடும். இதனால எனக்கு மட்டுமில்ல, ஒங்களுக்கும் ஆபத்து..."

"ஏன் சுத்தி வளைச்சுப் பேசுறீங் ஸார்..? என்னால, அவனை சமாளிக்க முடியாதுன்னு நினைக்கிறீங்க.... அப்படித்தானே?"

தமிழ்ப் பேராசிரியரும் தற்காலிக முதல்வருமான மாணிக்கனார், அப்பாவுவை, அடிபட்ட பூனைபோல் பதுங்கிப் பார்த்தார். எப்படி இந்த மனிதருக்கு உண்மையை நான் சொல்லாமலே கண்டுபிடிக்க முடியுது? பண்டைக்காலத்தில், பெண் கொலை செய்த ஒரு மன்னன் போல் தோன்றும் இந்தக் கிராதகனிடமிருந்து, எப்படித் தப்பிப்பது? இவனை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்காக ஏதாவது செய்தால், என் மகிழ்ச்சி என்னாவது?

திருதிருவென்று விழித்த முதல்வரை, அப்பாவு முறைத்தார். அந்த முறைப்பின் முனைச்சூடு தாங்க முடியாமல், முதல்வர், நாக்கு வாய்க்குள் தப்புத் தாளங்களுடன் நர்த்தனமாட, உளறி உளறிப் பேசினார்.

"குருநாதனுக்கு மெமோ கொடுக்கேன். அதுல 'கல்லூரி நிர்வாகம் கேட்டுக்கொண்ட படி'ன்னு - அதாவது, அஸ் டைரக்டட் பை டிரஸ்ட் போர்ட்னு ஒரு வரி சோத்துக்கிறேன். அப்பவும், இப்போ மெமோ கொடுக்க முடியாது. தப்பு செய்யாத ஆசிரியர் அவர். கிளாஸ் கட் பண்ணல. கண்ணுல விளக்கெண்ணெய் போட்டு ஏதாவது கண்டு பிடிச்சால்தான் உண்டு."

"நீங்க விளக்கெண்ணெய் போடுங்க; அதுக்குள்ள பழைய பிரின்ஸ்பால் பெருமாள்சாமி நாம ரெண்டு பேரையும் நல்லெண்ணெய் போட்டு தாளிக்கப் போறான் பாருங்க. ஒங்களைச் சொல்லிக் குற்றமில்ல ஸார்; தப்பு என் மேலதான் ஸார். டிரஸ்ட் போர்ட் யாரை வேண்டுமானாலும் பிரின்ஸ்பாலாய் போடலாம். அதுக்கு சீனியாரிட்டி தேவையில்லன்னு ஒங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். இல்லாவிட்டால், நான் இந்த போஸ்டுக்கு வந்திருக்க முடியாது என்கிறதும் தெரியும்...."

"இன்னும் எவ்வளவோ தெரியப் போகுது பாருங்க. எங்க தாத்தா கட்டுன இந்த காலேஜிலேயே படிச்சுட்டு அந்த கோணிக்காரன் மகன் முத்தையா, பெருமாள்சாமியோடு, கோர்ட் கோர்ட்டாய் சுத்துறான். காலேஜ்லயும் ஐஞ்சாறு வாத்தியாருங்களும், பசங்களும் அவன் இழுத்த இழுப்புக்குப் போறாங்க. இவங்க மேல எதையாவது காரணம் காட்டி, ஆக்ஷன் எடுங்கன்னு எத்தனையோ தடவ சொல்லியாச்சுது. நீங்க தலையை ஆட்டித்தான் ஆக்ஷன் காட்டுறிங்க. ஆமாம்... தெரியாமல்தான் கேட்கேன். நிசமாவே ஒங்களுக்கு ஒண்ணும் தெரியலியா...? இல்ல.... என்னை கிண்டல் செய்யுறிங்களா? ஏன்னா, இந்தக் காலத்துல, சொல்றதுக்கெல்லாம் தலையை ஆட்டுறதும் ஒருவித கிண்டல்தான்."

"அய்யோ.... அய்யகோ... நான் போய் ஒங்களை எள்ளி நகையாடுவேனோ? என் வாய்தான் தாங்குமா? சிக்கலை ஒங்ககிட்டே சொல்லிட்டேன். ஒங்களுக்கா அதை முறியடிக்கத் தெரியாது?"

"தெரியும், தெரியும். ஒங்களுக்குப் பதிலாய் இன்னொரு புரபஸரைப் பிரின்ஸ்பாலாய் போட்டால், எந்தச் சிக்கலும் வராது. பெருமாள்சாமி, கோர்ட் மூலம் நெருங்குறான். நீங்க பழையபடியும், ஒங்க தமிழ் டிபார்ட்மெண்ட் இருக்கிற குதிரை லாய கட்டிடத்துக்குள்ளே, பழையபடியும் போகப் போறீங்க...."

"அப்படி ஒரு நிலமை ஏற்பட்டால், காட்டுக்குப் போகவேண்டும் என்று 'மாகயத்தி' கைகேயி சொன்னதும், பாரவண்டியில் இருந்து விடுபட்ட காளை மாடு மாதிரி மகிழ்ந்த ராமபிரான் போல, நானும் மகிழ்வேன்."

அப்பாவு திடுக்கிட்டார். காளை மாடு போன்ற உடற்கட்டோடும், பசு போன்ற தோரணையுடனும், நெற்றியை விபூதி மறைக்க, சைவப் பழமாகத் தோன்றிய அந்த அப்பாவி மனிதரை, ஆழமாகப் பார்த்தார். முப்பதாண்டு காலமாக வேலை பார்த்தாலும், மூன்று வருட அனுபவம்கூட இல்லாதவர் இவர். மலையாளத்தில் 'சுத்தன்.... துஷ்டனோட பலன் தரும்' என்று ஒரு பழமொழி இருக்காமே.... அதன் தமிழ் டிரான்ஸ்லேஷன் இவர். இவரைப் பகடையாகப் பயன்படுத்துறவன், பன்னாடையாபோ யிடுவான்.

அப்பாவுவால், தன் முன்னால் கூனிக்குறுகி, குற்றவேல்காரராய் நிற்கும் பேராசிரியர் மாணிக்கத்தை, விரும்பவும் முடியவில்லை. வெறுக்கவும் முடியவில்லை. ஆனால், ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். இவருக்குப் பதிலாக வேறொருவரை முதல்வராகப் போட்டாக வேண்டும்.

யாரைப் போடலாம்? புரபஸர் ராஜ்கண்ணு... சாதிக்காரன் வேண்டாம். சாதியிலயும் பாகம் பிரிப்பான். பாட்டனி புரபஸார்... எட்வர்ட்... கெட்டிக்காரன். ஆனால், அவனை வச்சு நாம் சம்பாதிக்கிறதைவிட, அவன் நம்மை வச்சு சம்பாதிக்கிறது அதிகமாய் இருக்கும். ஜுவாலஜி புரபஸர் கோபால்ராவ்? வேண்டாம். தவளை வாங்குறதுலகூட கமிஷன் வாங்குகிறவன். புரபஸர் நடராஜன்? பாடம் நடத்துறதுல சமர்த்தன். மாணவர்கள் கலாட்டா செய்யாத ஒரே ஒரு வாத்தி. அப்படிப் பட்டவனைப் போடுறது, கொள்ளிக்கட்டையை எடுத்து தலையில் சொருகிறது மாதிரி. அப்படியானால்... இந்த கிராக்குகளுக்குப் பதிலாய் யாருமே இல்லையா? ஏன் இல்ல? என் அக்கா மகன் அஸிஸ்டெண்ட் புரபஸர் மனோகர் இருக்கானே. எனக்கும் ஒரு மகள் இருக்காளே...

ஒரு பொருளை உற்று நோக்கியபடியே, பிறிதொரு பொருளைப் பற்றிச் சிந்திக்கும் ஒருவித யோக நிலையை அனுசரிப்பவர்போல், அப்பாவு, மாணிக்கத்தைப் பார்த்தபடியே, மேலே குறிப்பிட்டவர்களைப் பார்த்தார். இதற்கிடையே, முதல்வர், "எனக்கு கிளாஸ் இருக்கு. போய் அட்டென்டென்ஸாவது எடுத்திட்டு வரட்டுமா?" என்றார். அப்பாவு, அவர் போகலாம் என்பதுபோல் கையாட்டியபோது, பேராசிரியர் மாணிக்கம், தட்டுத்தடுமாறி, ஒரு விவகாரத்தை எடுத்துரைத்தார்:

"சேர்மன் எது சொன்னாலும் கேட்டுக்கங்க. ஆனால், என்கிட்ட கேளாமல் எதுவும் செய்யாதிங்கன்னு' செகரட்டரி இன்ஸ்டிரக்ட் செய்திருக்கார். இப்போ என் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பு மாதிரி ஆயிட்டுதே அய்யா."

"இன்னும் என்னவெல்லாமோ ஆகும். அதுக்கு முன்னால வகுப்புக்குப் போங்க ஸார். மணியடிச்ச பிறகு வந்தால் போதும். என்னை கொஞ்ச நேரம் தனியாய் விடுங்க சார்."

தற்காலிக முதல்வர் பேராசிரியர் மாணிக்கம், அப்பாவுவை மகிழ்ச்சியாகப் பார்த்து விட்டு, விழாத குறையாக ஓடினார். பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களுக்கு, 'புறநானூறில் வீரம்' என்பது பற்றிப் பாடம் நடத்த வேண்டும்! அதற்காக நேற்றே குறிப்பெடுத்துவிட்டார்.

பேராசிரியர். மாணிக்கனார், வாசலைத் தாண்டியபோது, அதற்காகக் காத்துநின்ற சில கல்லூரி ஊழியர்கள் உள்ளே போகப் போனார்கள். வராண்டாக்கள் பக்கமும் கேன்டீன் பக்கமும், தற்செயலாய் போவதுபோல் போய், அங்கே மாணவர்களும் ஆசிரியர்களும், மற்றும் பலரும் எப்படி எப்படிப் பேசிக் கொள்கிறார்கள் என்பதை கண்ணால் பார்த்துவிட்டு, காதால் கேட்டு தீர விசாரிக்காமலலேயே தினமும் சேர்மனிடம் ஒப்பிப்பவர்கள் இவர்கள்! கோள்முட்டையின் கனம்

தாங்க முடியாமல் நின்ற இவர்கள், இப்போது மூட்டையை இறக்கி வைக்க, உள்ளே ஓடினார்கள். ஆனால், அப்பாவு, அவர்களைப் பாதியிலேயே வாயால் வழி மறித்தார்.

“ஏய்யா... வாறிங்க..... போங்கய்யா. என்கிட்ட ஒரு பேச்சு; செக்ரட்டரிக்கிட்ட ஒரு பேச்சு. என்னய்யா பேச்சு, இது? மனுஷன்னால் ஒரே பேச்சுல நிற்கணும். ஒரே பேச்சத்தான் கேட்கணும். நீங்க மனுஷங்களா? ஒங்களால இந்த காலேஜ் குட்டிச்சுவராப் போச்சு. போங்கப்பா. என் மூஞ்சில விழிக்காதிங்க.”

கல்லூரியின் கோள்சொல்லி டிபார்ட்மெண்ட் உறுப்பினர்கள், சிறிது தயங்கி, சிறிது மயங்கி, பின்னர் சிறிது சிறிதாய் பின்நோக்கி நகர்ந்து மாயமாய் மறைந்தனர்.

தனித்து விடப்பட்ட அப்பாவு, அனிச்சையாகச் சுழல் நாற்காலியை ஆட்டினார். அந்த நாற்காலி மாதிரியே, அவர் தலையும் சுற்றியது. முன்பெல்லாம், தான் இப்படிக் கத்தும்போது, இதே இந்த ஊழியக்கும்பல், தலையை சொறிந்துகொண்டு, இங்கேயே நிற்கும். அவர் முகத்தில் சினம் மறைந்து சிரிப்பு வந்த பிறகுதான் போகும். ஆனால், இப்போதோ ‘அட போய்யா’ என்பது மாதிரி போய்விட்டார்கள்! எல்லாம் இந்த செகரட்டரி பயலால் வந்த வினை. இந்த செகரட்டரி பயல், இந்த பிரின்ஸ்பால் பயல்கிட்ட எப்படி உத்தரவு போட்டிருக்கான்? இதுக்கா அவனை பிள்ளையாய் பெற்றேன்? இதுக்கா அவனைப் படிக்க வச்சேன்? இதுக்கா, அவனுக்கு இன்டஸ்டிரி வச்சுக் கொடுத்தேன்? இதுக்கா அவனை டிரஸ்ட் போர்ட் செயலாளனாய் நியமிச்சேன்? வீட்ல என் பழைய பெண்டாட்டிக்கும், அவன் புதுப்பெண்டாட்டிக்கும் ஆயிரம் இருக்கலாம். அதை காலேஜ் நிர்வாகத்துலயா காட்டுறது? பிரகலாதன் கதையை என்கிட்டேயே நடத்திக் காட்டுறான். மாமியார்-மருமகள் மல்யுத்தத்தை, அப்பன்-பிள்ளை அறக்கட்டளைப் போராய் மாற்ற நினைக்கான். இருக்கட்டும்... இருக்கட்டும்...

அப்பாவு, சிறிது வாய்விட்டே புலம்பினார். உலகத்திலேயே முக்கியமான தேர்தல், அடுத்த மாதம் வரப்போகிறது. அந்த டிரஸ்ட் போர்ட் தேர்தலில், இப்போ செயலாளராய் இருக்கும் பெற்ற மகனே, “என் அப்பா வீட்டுக்குள்ள முடங்குனால்தான், காலேஜ் முடங்காது”ன்னு வெளிப்படையாய் ‘வாக்காளர்கள்’கிட்ட பேசுறானாம். புதுப்பெண்டாட்டி சொல்லிக் கொடுத்ததை, அவளுக்கு அவள் அப்பன் அந்த சகுனிப் பயல் சொல்லிக் கொடுத்தை, இந்த திரியோதனன் அப்படியே ஒப்பிக்கிறான்! ‘ஒங்கப்பா அவரு கோட்டாவுல, அட்மிஷனுக்குப் பணம் வாங்கட்டும். தப்பில்ல. ஆனால், ஒங்க கோட்டாவுல எதுக்கு வாங்கணும்? எங்கப்பான்னால் அவரோட

கோட்டாவையும் ஒங்களுக்குக் கொடுப்பாராக்கும்' என்று பெண்டாட்டி 'முத்தம்' போட்டு, சொன்னதால, மாமனாரையே டிரஸ்ட்போர்ட் சேர்மனாய் ஆக்கப்போறானாம். இந்த டிரஸ்ட் போர்ட் பசங்களும், 'ஒங்கப்பாவுக்கு வயசாயிட்டு; அதனாலதான் பெர்ஸனலாய் முடிக்க வேண்டிய விஷயத்தை, கோர்ட்டுக்கு இழுத்துட்டார். இதுக்கெல்லாம் டிரஸ்ட்போர்ட் செலவளிச்சால், கட்டுபடியாகுமா?' என்று கேட்கிறான்களாம். என்னடா நினைச்சிங்க? யானைப் படுத்தாலும் குதிரை மட்டமுன்னு ஒங்களுக்குக் காட்டுறேண்டா. பெருமாள்சாமி என்னை சேத்துல சிக்குன யானையாய் ஆக்கிட்டான் என்கிறதால, நீங்க... தவளைப்பசங்க... கிண்டலாய் பண்றீங்க? பார்த்துப்புடலாண்டா...

பேராசிரியர். பெருமாள்சாமியின் பெயர், நெஞ்சில் அடிபட்டதும் அப்பாவுவிற்கு, நேற்று, தன் வக்கீல் டெலிபோனில் பேசியது நினைவுக்கு வந்தது. "ஐ அம் ஸாரி சேர்மன். நீங்க... பெருமாள் சாமியை சேர்த்துக்காமல் போக்குக் காட்டுறது, ஜட்ஜுக்கு கோபத்தை உண்டு பண்ணிட்டு. 'என்ன ஸார்.... ஒங்க கிளயன்ட்... ஸ்டேய் கொடுத்தேன்; சேர்த்துக்கல. டைரக்ஷன் கொடுத்தேன். ஏத்துக்கல. இப்போ கண்டம்ப்ட் ஆப் கோர்ட் வந்திருக்கு. ஒங்க ஆள் கோர்ட்டுக்கு இன்னும் வரல. எத்தனை நாளைக்கு மிஸ்டர் வாய்தா? ஒங்க சேர்மன் என்ன நெனச்சிக்கிட்டார்? கோர்ட்ல வந்து, பப்ளிக்கா மன்னிப்புக் கேட்டு, மிஸ்டர் பெருமாள்சாமியை பிரின்ஸ்பாலாய் சேர்த்துக்காட்டால், உள்ளே போக வேண்டிய திருக்குமுன்னு சொல்லுங்க மிஸ்டர், அட்வகேட். இது, ஹைகோர்ட். அவரு விளையாடுறதுக்கு டிரஸ்ட் போர்ட் இல்லன்னு சொல்லுங்க" என்று ஜட்ஜ் சொல்லிட்டார். 'இதுக்குமேல, என்னால தாக்குப் பிடிக்க முடியாது. ஒன்று பெருமாள்சாமியை சேர்த்துக்கங்க; இல்லன்னா, என்னை ஒங்க நாஸ்டி கேஸ்ல இருந்து நீக்கிருங்க. ஏன்னா, நீங்க ஒங்களுக்கு குழி வெட்டிக்கலாம். ஆனால், எனக்கும் சேர்த்து வெட்டப்படாது பாருங்க' என்று பேசுறான்.' யாரு? 'ஹைகோர்ட் ஆயிரம் சொல்லட்டும். அந்த பெருமாள்சாமி, காலேஜ் காம்பவுண்டுக்குள்ளே கூட வரமுடியாதுன்னு சொன்ன அதே அந்த வக்கீல்!

அப்பாவுவால், பேராசிரியர் பெருமாள்சாமியை, மீண்டும் முதல்வராக நினைத்துப் பார்க்க முடியவில்லை. அப்படி ஒரு நிலமை ஏற்பட்டால், காலேஜையே ராத்திரியோடு ராத்திரியாக தீ வைத்துக் கொளுத்திடவேண்டும் என்ற அளவிற்கு - அப்படி அந்தக் கல்லூரி தீப்பற்றி எரிவதை கற்பனைக் கண்களால் பார்க்கும் அளவிற்கு, அவருக்கு 'கொழுத்த' கோபம் ஏற்பட்டது. பெருமாள்சாமி, மீண்டும் பதவிக்கு வந்தாலும், அவரை மீண்டும் வேறொரு காரணத்தை வைத்து, 'சஸ்பென்ட்' செய்யமுடியும் என்பது அவருக்குத் தெரிந்ததுதான்.

என்றாலும், ஒரு நாள்ல்ல ஒரு நிமிடம்கூட, பெருமாள்சாமி இந்த சுழல் நாற்காலியில் உட்கார்ந்தால், அவருக்கு தலை கழன்றுவிடும் போலிருந்தது. அதனால்தான் முன்னெச்சரிக்கையாக, கல்லூரியில் உள்ள அலுவலகப் பெண்ணான வசந்தியிடம், பெருமாள்சாமி, 'தகாது' நடந்ததாக, 'வாடிக்கை' பத்திரிகையில் கரடி விட்டாகி விட்டது. 'மாரல் டர்பிடூட்' குற்றச்சாட்டில், பெருமாள்சாமியை வந்த வழியில், அனுப்பிடலாம். இந்த முப்பதாண்டு காலத்தில் எத்தனையோ பேரைப் பார்த்தாச்சு. இவன் எம்மாத்திரம்? ஆனால், அப்போ மகன் பிறக்கவே இல்லை. வாத்திப் பசங்களுக்கும் சங்கம் கிடையாது. கோணிக்காரன் மகன்கள் படிக்காத காலம். அதுக்கென்ன.... காலம் மாறலாம், நான் மாறமாட்டேன். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே. கெடுத்தாலும் மேன்மக்கள் மேன்மக்களே!

மேன்மகனான அப்பாவுக் கிழவர், சட்டைப் பித்தான்களைக் கழற்றிவிட்டு, மார்பின் நிர்வாணப் பகுதியை அகலமாக்கி, சுழல் நாற்காலியில் பின்புறமாய் சாய்ந்தபோது, அவர் முன்புறம், கல்லூரி 'கடைநிலை' ஊழியர் ஒருவர் வந்து நின்றார். அப்பாவு 'என்னடா' என்று கேட்கும் முன்பாக, சொல்ல வந்த விவகாரம் தலைபோகிற சமாச்சாரமாக இருந்தாலும், அதைச் சொல்லாமலேயே, தலையை சொறிந்து கொண்டு நிற்கவேண்டும் என்பதை தொழில் லட்சியமாகக் கொண்ட ஊழியர் அவர். ஆகையால், அப்பாவு மல்லாந்து படுத்து, அவரைச் சொல்லச் சொல்வதுபோல், தன் கண்களை சொருகிச் சொருகிவிட்டாலும், அந்த ஆசாமி அசையவில்லை. கடைசியில் அப்பாவுதான், "சொல்லித் தொலையேண்டா...." என்றார். "யாரோ ஒருவர் ஒங்களைப் பார்க்க வந்திருக்கார். 'வாடிக்கை வாடிக்கை' என்கிறார்." என்று சொல்லிவிட்டு, சேர்மனின் பார்வையில் இருந்து தொலைவதற்காக, ஊழியர், நான்கடி பின்னால் நகர்ந்தபோது, அப்பாவு, "வந்து தொலையச் சொல்லு...." என்றார்.

கீழே டைட் பேண்டும், மேலே வெள்ளை 'டி' சட்டையும், காதுகளை மறைக்கும் சைட்பர்னும், பிடரியை பிடாரிபோல் மறைக்கும் முடியும், உதட்டை மறைக்கும் மீசையும், மோவாயை மறைக்கும் குறுந்தாடியும் கொண்ட இளைஞன், வாயை மறைக்கும் சிகரெட்டோடும், மூக்கை மறைக்கும் புகையோடும் வந்து, "ஹாய்.... அப்பாவு?" என்று சொல்லிக்கொண்டே, எதிர் நாற்காலியில் உட்கார்ந்தான். 'இது சரஸ்வதி வாழ்றா இடண்டா. சிகரெட்டை வெளில போட்டுட்டு வாடா' என்றுகூடச் சொல்லப் போனார். ஆனால், அவன் செய்த உபகாரமான ஒரு அபகாரம் நினைவுக்கு வந்ததால், முட்டி வரை சுருண்டிருந்த வேட்டியை கால்வரை இழுத்துப் பரப்பி விட்டபடியே "எப்படி தம்பி இருக்கீங்க..? ஒங்கள

ஆபீஸ்ல பார்த்ததைவிட, ரொம்ப மெலிவாயிட்டிங்களே? என்ன சாப்பிடுறீங்க...?" என்றார்.

"பீர்."

"என்ன தம்பி சொன்னீங்க?"

"பீர்."

"இது காலேஜ் தம்பி."

"அதனாலதான் பீர். வீடுன்னால், விஸ்கி."

அந்த இளைஞன் கக்கிய புகையை, தன் வாய்க்குள் தேக்கி விட்டுக்கொண்ட அப்பாவு, அவன் அப்படிச் சொன்னது வெறும் நகைச்சுவைக்குத்தான் என்று அவனே நினைக்கும்படி ஒரு சிரிப்பை வெளியிட்டார். அப்படியும், அவன் முகம் திருப்தியில்லாமல் முறைப்பதைப் பார்த்துவிட்டு, 'சரி ஒங்க ஆசையை நிறைவேற்றுரேன். ஒங்களோட, பிரபுவை அனுப்பி கவனிக்கச் சொல்றேன். என்ன விஷயமாய் வந்திங்க தம்பி.... என்றார்.

"இந்த ஆளு பெருமாள்சாமி, எங்க பத்திரிகை மேல டிபர்மேஷன் வழக்கு போட்டிருக்கார்."

"ஆமாம். கேள்விப்பட்டேன். சாப்பாட்டுக்கே அல்லாடுறான். போயும் போயும் ஒங்க பத்திரிகையோட மோதப் பார்க்குறான் பாருங்க. நீங்கதான் விடுவிங்களா?"

"நாங்க விடுறதும் விடாததும் ஒங்களைப் பொறுத்திருக்கு."

"அடேய் இவனே! பிரபுவை கூட்டிட்டு வா..... என்ன தம்பி சொன்னீங்க....?"

"ஜாயிண்ட் எடிட்டர் சொல்லச் சொன்னதைத்தான், நான் சொல்றேன். எங்க பத்திரிகை ஒரு பெரிய நிறுவனம். அதுக்கு இப்போ பேர் இருக்கோ, இல்லியோ - அதனோட பழைய பேரைக் காப்பாற்ற வேண்டியது எங்க பொறுப்பு. எழுதுனது தப்போ, சரியோ, மன்னிப்புக் கேட்கமுடியாது."

"எதுக்குத் தம்பி கேட்கணும்? நடந்தது நிஜமாச்சே."

"ஆனால், ஒங்ககிட்ட நிஜமும், எங்களிடம் நிழலும் இருக்கு. அதனால நிஜத்த வாங்கிட்டுப் போகலாமுன்னு வந்தேன்."

"நான் அந்தக் காலத்து மனுஷன். புரியும்படியாச் சொல்லுங்க...."

"ஹா.... ஹா.... இது கூடவா புரியல? ஒங்க காலேஜ் டைப்பிஸ்ட் வசந்தி, பெருமாள்சாமி மேல் கொடுத்த ஒரிஜினல் புகார் லெட்டர்

வேணும். போட்டோஸ்டேட் காபி லீகல் டாகுமென்ட் ஆகாது. ஒரிஜினலை பார்க்கணுமுன்னு எங்க லாயர் சொல்றார்."

"கோர்ட்ல என்னை சாட்சியாய் போடுங்க. இல்லன்னா, கோர்ட்ல இருந்து சம்மன் வரட்டும், ஒரிஜனல் புகாரரைக் கொண்டு வாரேன்."

"இப்போ தாறதுல என்ன சிரமம்? தாங்கோ. செக்கப் பண்ணிட்டு, ரெண்டு நாளையில திருப்பித் தாறோம்...."

"தேடிப் பார்க்கணும். ஒண்ணு செய்யுங்க; இப்போ நீங்க போங்க. நான் ரெண்டு நாளையில கொடுத்தனுப்புறேன்."

"லுக் மிஸ்டர். அப்பாவு! நீங்களும் பிரபுவும், டைப்பிஸ்ட் பெண் எழுதிக்கொடுத்த புகாரோட போட்டோஸ்டேட் காபியுடன் என்கிட்ட தொங்கோ தொங்குன்னு தொங்குனதை மறந்திடாதிங்க. எடிட்டர்கிட்ட ஒங்களைக் கூட்டிப்போனவன் நான். நீங்க போனதும், எடிட்டர், 'ஒரிஜினலைக் கேளு' என்றார். 'தேவையில்ல ஸார். நம்பிக்கையான கேஸ்' என்று ஒங்களை நம்பிச் சொன்னவன் நான். இப்போ நான் ஒரிஜினல் லட்டரை எடிட்டர்கிட்ட காட்ட வேண்டிய நிலமை வந்திருக்கு. ஒரிஜினலோட நான் அங்கே போகாட்டால், எடிட்டர் என்னையும் ஒரு பெருமாள்சாமியாக்குவார். ஒரு எடிட்டர் ரிப்போர்ட்டரை சஸ்பென்ட் செய்யுறது, ஒரு ஹஸ்பெண்ட் ஒய்பை சஸ்பென்ட் செய்யுறதை விட சிவியர்."

"என்ன படிச்சிருக்கிங்க....?"

"எம்.ஏ. எதுக்குக் கேட்டீங்க...?"

"அப்படி ஒங்க எடிட்டர் ஒங்களை நீக்கிட்டால், நேராய் என்கிட்ட வாங்க. இந்தக் காலேஜ்லயே ஒங்களை லெக்சரராய் போடுறேன்."

"டோண்ட் பிளாப்... மிஸ்டர். அப்பாவு. ஒங்ககிட்டே சேர்ந்து பெருமாள்சாமிக்கு வந்த நிலைமை எனக்கு வரணுமா? நோ நான்சென்ஸ். ஐ அம் நாட் கட் அவுட் பார் டீச்சிங். எனக்குக் பாடம் நடத்துறதைவிட, பிடிக்காதவங்களுக்குப் பாடம் கற்பிக்கிறதுலதான் இன்ட்ரஸ்ட். காலேஜ்ல கிளாஸ் எடுத்து, மாணவங்க கிட்ட கிக் வாங்குற வேலை, தாஜ் கொரமென்டலிலேயோ, அடையார் கேட்லயோ கிளாஸ் பிடிச்சு 'கிக்காய்' இருக்கிற வேலைக்கு ஈடாகுமா? விஷயத்துக்கு வருவோம். எடிட்டர்கிட்டே நீங்களே வந்து சொல்லிட்டுப் போங்க."

"எடிட்டரை வெறுங்கையோட பார்க்க விரும்பல. இன்னும் இரண்டு நாளையில, டைப்பிஸ்ட் ஒரிஜினல் புகார் லெட்டரோடயும், பெருமாள்சாமி சம்பந்தப்பட்ட வேறு சில ரிக்கார்ட்களோடயும், நானே எடிட்டரை வந்து பார்க்கிறேன்."

"மற்ற ரிக்கார்டுங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் மிஸ்டர். அப்பாவு. ஒங்க கிளார்க்குங்களே பெருமாள்சாமி சம்பந்தப்பட்ட சில ரிக்கார்டுகளை 'காபி' எடுத்துக் கொடுத்திருக்காங்க. பத்து வருஷத்துக்கு முன்னால, அவரோட புரபஸர் எழுதுன கம்ப்ளெயின்ட் உட்பட பல கிடைச்சிருக்கு. இதுக்காக ஒங்க பசங்களுக்கு ஆயிரம் ரூபாய் அழுதிருக்கோம். அவங்கதான் டைப்பிஸ்ட் பெண், அப்படி ஒரு புகார் லெட்டரைக் கொடுக்கலன்னு சொன்னாங்க. அதனாலதான் எடிட்டருக்கு பயம் வந்துட்டு. இப்படி நம்பிக்கை மோசம் பண்ணலாமா மிஸ்டர் அப்பாவு?"

"நீங்க மட்டும் காலேஜ் ரிக்கார்டுகளை திருடலாமா?"

"மிஸ்டர். அப்பாவு! நீங்க அயோக்கியன் மாதிரி பேசுறீங்க. எனக்கு இப்பவே ஒரிஜினல் லெட்டர் வேணும்."

"யாருடா நீ.... கம்மனாட்டி....! அயோக்கியன் கியோக்கியன்னு பேசுனே... பல்லு கழண்டுடும். மரியாதையில்லாம சிகரெட் பிடிச்சே, மரியாதை இல்லாம பீர் கேட்டே, பொறுத்துக்கிட்டேன். இப்போ, என்னையே மரியாதை இல்லாமப் பேசுறே. ஒரிஜினல் லெட்டரை பற்றி, ஒன் எடிட்டர்கிட்ட டெலிபோனில பேசிக்கிறேன். போலீஸ்ல இப்போ ஒப்படைக்கிறதுக்கு முன்னால போயிடு."

ரிப்போர்டர் இளைஞன், அசந்து விட்டான். இவன் இப்படி அசத்தியது எடிட்டருக்கு தெரியப்படுத்தப்பட்டால், அவர் ஒரேயடியாய் அசத்திவிடுவார் என்பதும் இதனால் பழையபடியும் தெருவுக்கு வரவேண்டியது இருக்கும் என்பதும் அவனுக்கு ஒலி ஒளி காட்சியாய் தோன்றியது. ஆனாலும், அப்பாவுவை நோக்கி ஒரு பாவலா முறைப்போடு வெளியேறினான்.

அப்பாவு சுழல் நாற்காலியை, முன்னும் பின்னுமாய் நகர்த்தியபடியே முன்யோசனை இல்லாமல் செய்த ஒரு காரியத்திற்காக பின்யோசனை செய்தார். பேராசிரியர் பெருமாள்சாமியை அவமானப்படுத்த வேண்டும் என்ற ஆத்திரப் புத்தியுடனும், அவர், தப்பித் தவறி நீதிமன்றம் மூலம் பதவிக்கு வந்தாலும், அவராகவே அவமானப்பட்டு அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற அவசரப் புத்தியுடனும், மாணவன் பிரபுவோடு, 'வாடிக்கை' பத்திரிகை அலுவலகம் போய், பெருமாள்சாமியைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகப் பேசினார். பிரபு, அப்பாவுவே எதிர்பாராத வகையில், பேராசிரியர் பெருமாள்சாமி, டைப்பிஸ்ட் பெண்ணிடம் முறைகேடாக நடந்ததாகக் குறிப்பிட்டான். அவளே எழுத்துமூலம் புகார் தெரிவித்திருப்பதாகவும் ஒரு போடு போட்டான். அவர்கள் சொல்வதை, அதுவரை, உப்புச்சப்பில்லாமல் கேட்டுக் கொண்டிருந்த எடிட்டர், உடனே, அப்பாவுவின் மெளனச் சம்மதத்திற்கிடையே

'விவரமாய் சொல்லுங்க' என்று பேச்சில் 'இன்ட்ரஸ்ட்' காட்டினார். அந்தப் புகார் மனுவோ அல்லது நகலோ கிடைத்தால், உடனடியாகப் பிரசுரிப்பதாக வாக்களித்தார்.

ஆனாலும், அப்பாவுவின் கலக்கம் கவலையாக மாறிவிட்டது. அந்த ரிப்போட்டரை எடிட்டரால் என்ன வேண்டுமென்றாலும் செய்ய முடியும் என்பது நிச்சயமாகி விட்டதால், இனிமேல் இவனை பிடிப்பதற்கு பதிலாக எடிட்டரை பிடித்து விடலாம் என்று தனக்கு தானே ஆறுதல் சொல்லிக் கொண்டான். கல்லூரி அட்மிஷன்கள் இதுமாதிரி சமாச்சாரங்களுக்குத்தானே இருக்கு.

அப்போது, அந்தக் கல்லூரியின் அப்பாவுவின் தூரத்துச் சொந்தமான டைப்பிஸ்ட் வசந்தி, ஒரு மாத கால விடுமுறையில், சென்னைக்கு வெளியே போயிருந்தாள். அவள் வருவதுவரைக்கும் பொறுக்க முடியாத அப்பாவு, பிரபுவின் தூண்டுதலின் பேரில், 'நம்ம வசந்தா தானே' என்ற நினைப்பில், தமிழில் ஒரு புகார் மனுவை டைப் அடித்து, அதோடு வசந்தா, விடுமுறை விண்ணப்பத்தில் போட்ட கையெழுத்தை போட்டோ ஸ்டேட் காபி எடுத்து, இவர்கள் தயாரித்த 'புகார் மனுவில்' அந்த கையெழுத்தை பதியச் செய்து, 'வாடிக்கை'யிடம் கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் செய்தி வந்ததும், ஆனந்தப் பள்ளு பாடினார்கள். அப்புறம் வசந்தியையும் அவளிடம், வாங்க வேண்டிய கையெழுத்தையும் மறந்து விட்டார்கள். பெருமாள்சாமி, மான நஷ்டக் காரணம் காட்டி, நீதிமன்றம் போவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. அவரோ எதிர்பாராததை செய்துவிட்டதால், அப்பாவுவிற்கு, நடக்காத ஒன்றை ரிக்கார்டாக்க வேண்டும் என்பது, இப்போதுதான் உதயமாகிறது. விவகாரம், கோர்ட்டில் அம்பலமானால், 'போர்ஜரி' குற்றத்திற்கும் ஆளாக வேண்டியதிருக்குமே...

வெளியே கல்லூரி ஊழியர்கள் போட்ட சத்தம் காதில் விழுகிறது. அதனால், அப்பாவுவிற்கு, காது சிவந்ததோ இல்லையோ, கண் சிவந்தது. அவர், தனக்கு விசுவாசமானவர்களையே வேலைக்கு வைத்தார். ஆனால், அந்த விசுவாசிகளோ, தனக்குத் தெரியாமலே ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு சில ரிக்கார்டுகளை நகல் எடுத்துக் கொடுத்திருக்கிறாங்க ஒருவேளை, ரிக்கார்டுகளையே கொடுத்துட்டாங்களோ, என்னவோ... பெருமாள்சாமிமேல, அவரோட புரபஸர் ஒரே ஒரு புகார்தான் எழுதுனார். அதுவும், பெருமாள்சாமி, தன்னோட 'காதல் களியாட்டங்களுக்கு' இந்த ஆசாமி நிரந்தமா பிரேக் போட்டதாலதான்... மத்தபடி இந்த பெருமாள்சாமிமேல எந்த புகாரும் கிடையாதே... அவனை பாராட்டிதானே பல ரிக்காட்டுகள் இருக்கு... ஒருவேளை இந்தப் பயல்களே... போலிப் புகார் ரிக்கார்டுகளை தயாரித்து கொடுத்து இருப்பாங்களோ, என்னவோ... தேவடியா மவனுவ... எனக்கும் சேர்த்து

நாளைக்கு என்ன செய்வானுவளோ? என்கிட்ட வரும்போது மட்டும் எப்படிக் குழையுறானுங்க... தத்தேறிப் பசங்க...

அப்போதுதான், அறைக்குள் நுழையப்போன முதல்வரைப் பார்த்து, "வசந்தியை நான் கூப்பிட்டேன்னு சொல்லுங்க... கொஞ்சநேரம் வேற எங்கேயாவது உட்காருங்க" என்றார். இயல்பிலேயே, சூடு, சுரணை இல்லாத மாணிக்கனாருக்குக்கூட, அப்பாவு தன்னை வேலையாளாய் நடத்துவது கண்டு ரத்தம் கொதித்தது- ஆனாலும் அது தன்மானத்திற்குக் கீழேதான் கொதித்தது. நடந்துவந்த வழியாக திரும்பி நடந்தார்.

ஐந்து நிமிடத்திற்குள், பிரபுப் பயல் வந்தான்.

"என்னைத் தேடினீங்களாமே"

"ஆமாம், தெரியாத்தனமாய் ஒன்னை காலேஜிற்குள்ளே தேடச் சொல்லிட்டேன். போகட்டும். வசந்தியா! கொஞ்சம் வெளியே நில்லு. உள்ளே ஆள் இருக்கும்போது வரப்படாதுன்னு உள்கிட்ட எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? மூளை இருக்கா? அப்புறம் ஒன்கிட்ட இருக்குதா?"

"என்ன ஸார், என்னையும் சேர்த்து"

"நான் மூளையை கேட்கலப்பா. அதைவிட முக்கியமான வசந்தி எழுதுனது மாதிரி எழுதுன-போட்டோ ஸ்டேட் காபியைக் கேட்கிறேன். நான் வீட்ல எங்கேயோ வச்சுட்டேன்..."

பிரபு, ஒரு நமுட்டுச் சிரிப்பை நமுட்டியபடியே, கையில் இருந்த குட்டி லெதர் பேக்கைத் திறந்தான். (அதற்குள் பல குட்டிகள் புகைபடங்களும் உள்ளதாம்) பிறகு, அப்பாவு கேட்ட நகலை எடுத்து, அவரது இரண்டு கண்களுக்கும் இடையே வைத்து ஆட்டியபடியே, "எப்போவாவது தேவைப்படுமுன்னு, நீங்க எங்கே கேட்டாலும், எப்போ கேட்டாலும் எடுத்த எடுப்பிலேயே கொடுக்கிறதுக்காக, வைத்திருக்கேன்" என்றான். அப்பாவு நகலை வாங்கிக் கொண்டார். பிறகு "சரி, நீ இப்போ போ... தேவைப்படடால் நானே ஒன்னைக் கூப்பிட்டு அனுப்பறன்" என்றார். "நீயாக வரவேண்டாம்" என்று சொல்லாமல் சொன்ன அப்பாவுவை அதிர்ச்சியோடு பார்த்தபடியே பிரபு, இடத்தைக் காலி செய்தான்.

பிரபு போனதும், வசந்தி வர முயற்சித்தாள். அப்பாவுவிற்குப் பயந்து, அவளால் படிதாண்ட முடியவில்லை. "ஒன்னை ஸ்பெஷலாய் வெத்தில பாக்கு வச்சுக் கூப்பிடணுமா? சட்டுப்புட்டுன்னு வா" என்று அப்பாவு கத்துவது, தன்னைத்தானா, வேறு யாரையுமா என்று தயங்கினாள். பிறகு தயங்கியபடியே உள்ளே போனாள்.

வசந்திக்கு, அப்பாவுவை பார்த்ததும் கைகால்கள் ஆடின. அவர் மீது அவ்வளவு பயபக்தி. அப்பாவு, அவளை எடை போட்டுப் பார்த்தார்.

சிறிது மெலிந்த தோற்றம். அதையே அழகாகக் காட்டும் நளினம். செம்பருத்திப் பூப்போன்ற நிறம். சிவப்பும், வெளுப்பும் கலந்த கண்கள். அளவான உயரம். அளவற்ற சோகம் கப்பிய முகம். அந்த அப்பாவு மனதிலேயே, ஒருவித இரக்கம் தோன்றும்படி, கையாட, காலாட, வாயாட நின்றாள். அப்பாவு அன்பாகக் கேட்டார்:

"ஒன் அம்மாவுக்கு இப்போ உடம்பு எப்டி இருக்கு?"

வசந்தி, அப்பாவுவின் அன்புக் கேள்வியில் பக்திப் பரவசமானாள்- இவ்வளவு பெரிய மனிதர், எவ்வளவு சின்ன விஷயத்தைக்கூட ஞாபகம் வச்சிருக்கார்! வசந்தி, வார்த்தைக்கு வார்த்தை திக்காமல், வார்த்தைகளுக்குள்ளேயே திக்கிப் பேசினாள்:

"தே...வ...ல.. அ...ய்...யா..."

"நல்லா கவனிச்சிக்கோ.... கடன் வேணுமுன்னால், தாத்தா கிட்டே கேளு, தாறேன். அப்புறம் சம்பளத்துல பிடிச்சுக்கலாம். ஆமாம், ஏன் இப்படி அழுகிறே?"

"இப்போ நாங்க மூணு வேளை சாப்பிட முடியாட்டாலும், ஒருவேளையாவது நல்லா சாப்பிடுறோமுன்னால், அது அய்யாவால தான். எனக்கு மட்டும் நீங்க வேலை போட்டுக் கொடுக்காட்டால், அம்மா 'கஞ்சித் தொட்டி' ஆஸ்பத்திக்குள்ளேயே போயிருப்பாள். 'சாமி கும்புடுறதுக்கு முன்னால அப்பாவு தாத்தாவை நினைச்சுக்கடி'ன்னு அம்மா தினமும் சொல்லுவாள்..."

"எப்படியோ... ஒனக்காவது நன்றியிருக்கே... அதுல சந்தோஷம். அப்புறம் அந்த 'வாடிக்கை' பேப்பர படிச்சியா?"

"ஆமாங்கய்யா... நானே ஒங்ககிட்ட சொல்லணுமுன்னு நினைச்சேன். பெருமாள்சாமி ஸார், பெண்கள... அம்மா என்கிற வார்த்தைக்கு அடுத்த வார்த்தை பேசாத மனுஷர். ஒங்களை மாதிரியே பெண்கள பெத்த மகளாக நினைக்கவரு, அவரைப் போய் இப்படி எழுதுனவனுக்கு, கை அழுகும், சொன்னவனுக்கு வாய் அழுகும். கடவுள் அவங்களுக்குக் கூலி கொடுக்காமல் போகமாட்டாரு..."

அப்பாவு, தன் வாயை, ஒரு தடவை கையால், தடவி விட்டுக் கொண்டார். பிறகு பிரபு கொடுத்த நகலை, அவளிடம் கொடுத்தார். "படிச்சுப்பார்" என்றார். அதைப் படித்த வசந்தி, சில விளம்பரப் பலகைகளில், ஒரு கையைத் தூக்கி, வாயைத் திறந்தபடி பெண்கள் போஸ் கொடுப்பார்களே, அதே 'போஸில்' ஒரு நிமிடம் நின்றாள். தானே

'தகாத' வரிகளை எழுதியது போல் தன் கையெழுத்து இருப்பதைக் கண்டு, அவள் தடுமாறினாள்.

"இது என் கையெழுத்துத் தான், ஆனால் சத்தியமாய் நான் எழுதல... எப்படி இப்படில்லாம்..."

அப்பாவு சிரித்தார். கடகடவென்று சிரித்தார். அவளை, அல்வாத் துண்டாய் வாய்க்குள் போடப்போகிறவர்போல் சிரித்தார். பிறகு, எங்கேயோ பார்த்தபடி, தன்னையே பார்த்த வசந்திக்கு ஆணையிட்டார்:

"அந்த ஆராய்ச்சி ஒனக்கு எதுக்கு? நீ... தூரத்து பேத்தியால் இருந்தாலும், பேத்திதான். இதே மாதிரி, ஒரு லட்டரை டைப் அடிச்சு, கையெழுத்துப் போட்டு தாத்தா கிட்டே கொடு. எல்லாப் பயலும் போன பிறகு டைப் அடி, சாயங்காலமாய் வீட்டுக்குக் கொண்டுவா, ஒனக்கு ஒரு நல்ல இடத்துல கல்யாணம் செய்து வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு, சரி... போ... ஏன் நிற்கிறே..."

"உங்களை மாதிரி பெருமாள்சாமி ஸார் தங்கமான மனுஷர். அவரைப் பற்றி நான் எழுதுறது, உங்களைப் பற்றி எழுதுறது மாதிரி..."

"பிலாக்கணம் வேண்டாம். சொன்னதைச் செய்யும்மா... தாத்தா கிட்ட நன்றி காட்ட, ஒனக்கு சந்தர்ப்பம் வந்திருக்கேன்னு சந்தோஷப்படு..."

"உயிரைக் கூட நன்றியாய் கொடுக்கலாம். மானத்தைப் எப்டிய்யா...."

"ஒஹோ... அம்மா மயிர் போனால் வாழாத கவரிமானோ? அடச்சீ! மொதல்ல சொல்றதைச் செய். சாயங்காலமாய் என் வீட்டுக்கு நீ வாரே, லட்டரோட வாரே. என்னாலே ஆக்கவும் முடியும், ஆக்கியதை அழிக்கவும் முடியும் என்கிற நினைப்போடு இப்போ போரே... ஒன்னைச் சாகவா சொல்றேன்? யாருக்கும் தெரியாமல், ஒரு லட்டரை தரச் சொல்றேன், தரப்படாதா?"

வசந்தி, அப்பாவுவை புதிதாய்ப் பார்த்தாள். புயலாய் நோக்கினாள். வீட்டில் ஒளியேற்றி வைத்ததாக நினைத்தவள், தன்னை வீட்டுக்குள்ளேயே தீயிடப் போகிறவர்போல் பார்ப்பதைப் பார்த்தாள். இவரைப் பகைக்க முடியுமா? அப்படிப் பகைத்தால், வேலையில் இருந்து மட்டுமா நீக்குவார்.... பெருமாள்சாமி ஸாருக்கே இந்தக் கதியென்றால், எனக்கு எந்தக் கதியோ?

வசந்திக்கு, இருக்கை முள்ளாகியது முகம், வேர்வைக் கொப்பளங்களாக ஆனது. அவள், உட்கார்ந்திருந்தாலும், கைகால்கள் தானாய் நடக்கப் போவதுபோல், அந்தரத்தில் தொங்கப் போவது

போல், ஆட்டம் போட்டன. விடுமுறையில் இருந்து வந்த முதல் நாளில், முதல் மணி நேரத்திலேயே இப்படி ஒரு சோதனையா...

வசந்தி, மற்றவர்கள் தன்னை கவனிப்பார்கள் என்ற உணர்வு இல்லாமலே, மக்கள் தொகை பிரச்சனை அதிகமான, அந்த அலுவலக அறைக்குள், குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். அமைதியோடு, ஆர்ப்பாட்டம் ஏதும் இல்லாமல், தான் உண்டு, தன் தாயின் நோயுண்டு என பணிபுரியும் அவள் அப்படி அல்லாடுவதற்கு அவளை, அப்பாவு அதட்டியது தான் காரணம் என்பதை, கண்ணுக்குப் புலப்படாத 'ஒற்றர்கள்' மூலம் தெரிந்து கொண்ட அலுவலக வாசிகள், அவளை அரைக்கண் போட்டுப் பார்த்தார்கள். 'முழுக்கண்' போட்டுப் பார்த்தால், தாங்களும் இந்தப் பிரச்சனையில் 'கமிட்' செய்துவிட்டதாய் ஆகிவிடுமோ என்ற பயம். என்றாலும் சில கண்களில் பச்சாதாபம். சிலவற்றில் ரசனை. பலவற்றில் விரசம். காலேஜ் பழைய பிரின்ஸ்பாலுக்கும், இவளுக்கும் ஏதாவது 'இது' இருந்து, அப்புறம் கசாமுசா ஆயிருக்குமோ?

வசந்தியால் இருக்க முடியவில்லை. பாதி நாள் விடுமுறை கேட்டு எழுதினாள். ஆனாலும், நெடிய விடுமுறையில் இருந்து சேர்ந்த நாளில் ஒரு குட்டி விடுமுறை போட முடியாது என்று நிர்வாக அதிகாரி சொல்லிவிட்டார். ஆனாலும், அவள் வாய்மொழி அனுமதி பெற்றுப் போவதாக அனுமானித்துக் கொள்ளப்படும் என்று பச்சைக் கொடி காட்டினார்.

வசந்தி, விறுவிறுப்பாய் நடந்தாள். முதலில் வீட்டிற்குப் போய் அம்மாவிடம் ஒருபாடு அழவேண்டும். அப்பாவுக்கு சேதி சொல்ல வேண்டும். அல்லது வீட்டிற்குப் போகாமலே, அம்மாவைப் பார்க்காமலே எங்கேயாவது ஓடிப் போகலாமா? அப்பாவுவின் கண் பார்வை படாத இடத்திற்கு, காலடி பட முடியாத தூரத்திற்கு ஓடியாக வேண்டும்...

கனத்த டிபன் காரியரைச் சுமந்த தூக்குப்பையை தோளில் மாட்ட வேண்டும் என்ற சுரணையற்று, அதை மார்போடு சேர்த்து அணைத்தபடியே, வசந்தா கல்லூரி வீதிக்குள் காலடியைத் தொடர்ந்தபோது.....

வகுப்புகள் நடந்து கொண்டிருந்ததாலோ, என்னவோ வெளியே, கும்பல் கும்பலாய் சிகரெட்டும், புகையுமாய், பாட்டும், பரதமுமாய் நின்ற மாணவக் கூட்டத்தை ஊடுருவிப் போய் கொண்டிருந்தாள். ஒருசிலரின் 'வழி விடுங்கப்பா! கண்ணகி மதுரையை எரிக்கப் போயிட்டு இருக்காங்க' என்ற காமென்ட். இதற்கு நான்கைந்து சீட்டிகள். "அப்பாவு காரு போகும் முன்னே... அக்கா காலு நடக்கும் பின்னே' என்று இன்னொரு கும்பலின் ஏளனக் குரல்கள்...

வசந்தி, தொங்கிய தலையோடு, கண்களில் பொங்கிய நீரோடு நடந்து கொண்டிருந்தாள். கேட் பக்கம் வந்ததும், லேசாக தலையைத் தூக்கினாள். உடனே ஒருசில மாணவர்கள் அவளைப் பார்த்து ஆடிக் காட்டினார்கள். சிலர், பாடிக் காட்டினார்கள். ஒருவன் "கோர்ட்டுக்கு வரத்தாம்மே போறே! ஒன்னை நார் நாராய் கீச்சுப் பிடுறோம் கீச்சு" என்று சொல்லி, அபிநயம் வேறு செய்து காட்டினான். உடனே, ஒரே கைதட்டல்கள்.

வசந்தி மெல்ல திரும்பினாள். எங்கிருந்தோ ஓடிவந்த முத்தையா, அவர்களை திட்டுகிற வார்த்தைகள் லேசாக கேட்டன.

என்றாலும், வசந்தி முரண்பட்ட பல்வேறு உணர்வுகளின் வடிவங்களாக நடந்து கொண்டிருந்தாள். மரணத்தின் நெருங்கங்களாக வந்த 'பல்லவன்களையும்' ஆட்டோ சிக்ஷாக்களையும், அவைகளே ஒதுங்கட்டும் என்பதுபோல் ஒதுங்காமல் நடந்து கொண்டிருந்தாள்.

## 15

நான்கு போர்ஷன்கள் கொண்ட வசிப்பிடம். அதில் முதல் போர்ஷனில் வசந்தியின் குடும்பம். அம்மா, இரண்டு மூன்று போர்ஷன்காரர்களோடு சிரித்துச் சிரித்து எதையோ பேசிக் கொண்டிருந்தாள். அவள் தோளை கட்டிக் கொண்டு விம்மப்போன வசந்தி, தன்னை அடக்கிக் கொண்டு, அம்மாவையும் இதர பெண்களையும் மௌனமாகக் கடந்தபடி, வீட்டிற்குள் போய் தூக்குப் பையை வீசியடித்துவிட்டு செருப்புக்களை சிதறி எறிந்துவிட்டு, ஆடைகளை மாற்றாமல், அப்படியே கட்டிலில் குப்புறப் படுத்தாள்.

மகள், அகாலத்தில் வருவதைப் பார்த்துவிட்டு, கோவிந்தம்மா உள்ளே ஓடிவந்தாள். மகளின் தோளைப் பிடித்து உலுக்கியபடியே, "என்னம்மா? சீக்கிரமாய் வந்துட்டே? உடம்புக்கு என்ன பண்ணுது...?" என்று சொல்லிவிட்டு, மகளின் நெற்றிப் பொட்டில் கைவைத்து 'டெம்பரேச்சர்' பார்த்தாள். வைத்த கை, ஈரம் பட்டதைப் பார்த்ததும், மகளைத் தூக்கியபடியே, "என்னம்மா.... எதுக்கும்மா அழுவுறே? சொல்லும்மா சொல்லுடி" என்று அரற்றினாள்.

தலையணையில், கண்களைத் தேய்த்தபடி அங்குமிங்குமாய்ப் புரண்ட வசந்தி, திடீரென்று எழுந்தாள். அம்மாவின் கழுத்தை அப்படியே கட்டிப் பிடித்தபடியே "என்னை எதுக்கும்மா பெத்தே? எதுக்குப் பெத்தே?" என்று புலம்பியபடியே கேவினாள், வெடிபட்ட

மானத்தின் சிதறல்களாய் விம்மல்கள் வெடிக்க, அம்மாவின் தோளில், தலையைப் புரட்டியபடியே "நான் வாழப்படாதும்மா.... வாழப்படாதும்மா..." என்று ஒரே வார்த்தையைப் பல தடவை சொல்லிக்கொண்டே இருந்தாள். கோவிந்தம்மாவும் பதறிவிட்டாள். அதே சமயம், மகளின் அழுகை அவளுள் ஒரு ஆவேசத்தையும் எழுப்பியது. "அழாதம்மா... அழுகைதான் ஏழைகளோட சத்துரு. எது நடந்தாலும் நம்மை ஒண்ணும் பண்ண முடியாது என்கிற நம்பிக்கையோட இருக்கணும். என்னம்மா நடந்தது? அழாமல் சொல்லும்மா...." என்றாள்.

வசந்தி, விக்கி விக்கிச் சொன்னாள்.

"அப்பாவு தாத்தா என்னை ஏலத்துல எடுத்தவர்மாதிரி நடக்காத ஒரு விஷயத்தை நடந்ததாய் சொல்லச் சொல்றார். நான்... அப்பா மாதிரி நினைக்கிற பழைய பிரின்ஸ்பாலுக்கு எதிராய் மானங்கெட்ட விதமாய் கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடுக்கச் சொல்றார். காலேஜ் பசங்க என்னடான்னா கண்டபடி கலாட்டா பண்ணுறாங்க. நாக்கைப் பிடுங்கிட்டுச் சாகலாம் போல இருக்கும்மா. தூக்குல தொங்கலாம் போல இருக்கும்மா. முன்னால எங்க பழைய பிரின்ஸ்பாலை பற்றி பொத்தாம்பொதுவா அபாண்டமா ஒரு செய்தி வந்ததுக்கே, நான் மூணு நாள் தூங்கல. இப்போ, அந்த செய்தியையே ஒரு புகார் மனுவாக்கி அதுல அப்பாவு தாத்தா என்னை கையெழுத்து போடச் சொல்றாரு.. ஒரு அப்பாவி மனுசன மேல நான் எப்படிம்மா அபாண்டமா எழுதுனதுல கையெழுத்து போட முடியும்? எம்மா... நான் கேட்கிற கேள்விக்கு... ஒரே ஒரு கேள்விதான்.... பதில் சொல்லும்மா. என் சம்பளம் இல்லாமம் அப்பா சம்பளத்துல இப்போ மாதிரியே ஒன்னால் குடும்பத்தைக் கொண்டுபோக முடியுமாம்மா? முடியுமுன்னால் அப்படிச் சொல்லிட்டியானால், நான்... என் உயிரை.... ஒரு கயித்துலயோ, மருந்துலயோ முடிச்சுக்கிறேன்.... அம்மா.... அம்மா... என்னால... கோர்ட்ல போய் பொய்சாட்சி சொல்ல முடியாது..."

கோவிந்தம்மா, மகளைக் கட்டியணைத்தபடி விம்மினாள். பிறகு "ஒன் சம்பளம் இல்லாம என்னால குடும்பத்த நடத்த முடியும். ஆனால் நீ இல்லாம, ஒன்னைப் பெற்ற இந்த பாவியால இருக்க முடியுமாடி? என்ன வார்த்தம்மா சொல்லிட்டே? இன்னொரு தடவ அப்படிச் சொன்னால், ஒனக்கு முன்னால் நான் போயிடுவேன். வாயைப் பொத்துடி, மிஞ்சிப் போனால் வேலையை விட்டுடலாம். இந்த அப்பாவு, ஒன்னோட தாத்தாவால முன்னுக்கு வந்தவரு. அவர் ஒன் மானத்தைப் பற்றி கவலைப் படமாட்டார். அவரு மானத்தைப் பற்றி எவரும் கவலைப் படாத காலம் வரும். இதுக்குப் போயா அழுகிறே? அப்பாவு வேலை தந்தது வாஸ்தவம்தான். அவருக்கு

நன்றியோட இருக்க வேண்டியதும் நியாயம்தான். ஆனால் ஒருவருக்கு காட்டும் நன்றி, இன்னொருவருக்குத் துரோகமாய் ஆயிடப் படாது. நமக்கு அப்பாவும் பெரிசில்ல; பிரின்ஸ்பாலும் பெரிசில்ல; நாமும் பெரிசில்ல; நியாயம்தான் பெரிது. பைத்தியம், இதுக்கா அழுவுறே? கொஞ்ச நேரம் தூங்கு, எல்லாம் சரியாயிடும்...."

வசந்தி, அம்மாவைப் பார்த்து சோகமாகப் புன்னகைத்தாள். உடனே, அந்தத் தாய், தன்மடியில் மகளை சாய்த்தாள். அவள் தலையைக் கோதி விட்டாள். அப்போதுதான் அவளைப் பெற்றதுபோல் பேதலித்தாள். கட்டிலில் கால்களை அகலமாய் பரப்பி, தன் மடியில் அழுத்தமாய் தலை வைத்துக் கிடந்த மகளையே பார்த்தாள். என்னதான் மகளுக்கு ஆறுதல் சொன்னாலும், இயல்பிலேயே தைரியக்காரியானாலும், அந்த தாயின் மனம் அல்லோகல்லப்பட்டது.

மகள் வேலைக்கு போகவில்லை என்றால் ஒரு நேரத்து அடுப்பு எரியாதுதான். அவள் கணவர் கன்னையாவும், பல கம்பெனிகளுல வேலைப் பார்க்கிறதும், விடுவதுமா இருந்து சொந்தமாய் தொழில் துவக்கி அதுலயும் நஷ்டப்பட்டு, இரண்டு வருடத்திற்கு முன்னாலதான் ஒரு பெரிய கம்பெனியில டர்னரா வேலையில சேர்ந்திருக்கார். கம்பெனிதான் பெரிசு. சம்பளமோ சிறிசு. ஆனாலும், அதுக்காக அநியாயத்திற்கு உடன்பட முடியுமா... காக்கா, பல்லிக்கு செய்யலாம். பல்லி, கரப்பாண் பூச்சிக்கு செய்யலாம். ஆனா, மனுசனுக்கு மனுசன் செய்யலாமா?

கோவிந்தம்மா, லேசாக திடப்பட்டு, மகளை, தன் மடியிலிருந்து நீக்கி, தலையணையில், அவள் தலையை மெதுவாய் போட்டு விட்டு, எழுந்தாள். மகளையே பார்த்தாள். எதுக்குமே அஞ்சாதவள் வசந்தி. பேச்சைக் கூட பெரும்பாலும் சைகைகளில் வைத்திருப்பவள். இவள் அழுதாள் என்றால், அப்பாவு மாமா எப்படி மிரட்டுனாரோ? காலேஜ் பசங்க எப்படில்லாம் நடந்துகிட்டாங்களோ? தூங்கி எழுந்ததும் விபரமாய் கேட்கணும்....

வசந்தி, துக்கத்திற்கு துகிலாடை கட்டி, மயங்கிக் கிடப்பவள்போல் கிடந்தாள். உலகைப் பார்க்க விரும்பாதவள்போல் குப்புறக் கிடந்தாள். ஏழைகள் தூக்கத்தில்தான் துக்கத்தை மறக்க முடியும் என்று சொல்லாமல் சொல்வது போல், யாருடனாவது பேசுவதுபோல் வாய் தோற்றம் காட்ட, அவள் அயர்ந்து கிடந்தாள்.

மாலை ஆறுமணி தாண்டிவிட்டாலும், அவள் தூக்கத்தைத் தாண்டவில்லை. கோவிந்தம்மா, மகளை ஒரிரு தடவை எழுப்பப் போனாள். பிறகு இந்த ஒரே சமயத்தில்தான், மகள் மனநிம்மதி இழக்காமல் இருக்க முடியும் என்று எண்ணி, சமையல் காரியங்களைக்

கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் உலையை கொதிக்க வைத்தபோது, காலேஜ் பியூன் ஆரோக்கியசாமி வந்தார். தூரத்து உறவு- தொங்கு மீசை. ஐம்பதுக்கு உட்பட்ட வயது- ஆட்களை ஒரு கண்ணை மேலேயும், இன்னொரு கண்ணை கீழேயும் வைத்துப் பார்ப்பவர்.

"வசந்தியை எங்கம்மா?"

"உட்காருண்ணா."

"வசந்தியை எங்கேக்கா? அப்பாவு, அவள கையோடு கூட்டிட்டு வரச் சொன்னார்."

"எதுக்காம்?"

"காலையிலே எதுலையோ ஒண்ணுல கையெழுத்துப் போடச் சொன்னாராம். ஒன் பொண்ணு தயங்குனாளாம். சாயங்காலம் வரைக்கும் டயம் கொடுத்தாராம். இது, அவரா சொல்லல, நானா தெரிஞ்சுக்கிட்டது. 'வசந்தியை கூட்டுட்டு வா. யோசிச்சாள்னா, வர முடியுமா, வர முடியாதான்னு மட்டும் கேட்டுட்டு வா'ன்னு மட்டும் என்கிட்டே சொன்னார். வசந்திய எங்க?"

"தூங்குறாள்."

"இதென்ன நேரங்கெட்ட வேளையில?"

"திக்கற்றவங்களுக்கு துக்கம்தான் தூக்க மாத்திரை. நம்மள மாதிரி ஏழைகளுக்கு இதுதான் இயற்கை தார தானம்."

ஆரோக்கியசாமி, வந்த வேகத்தில், பாதி வேகத்தை விட்டு விட்டார். கோவிந்தம்மா, தன்னையும் ஏழைகள் லிஸ்டில் சேர்த்துக் கொண்டத்தில், அவருக்கு, அட்மிஷன் பெற்றோர்களைப் பார்த்தது போன்ற மகிழ்ச்சி. இது தெரியாமல், ஆபிஸ் பயல்கள் என்னடாவென்னா, அவரும அட்மிஷன்ல பிள்ளையார்சுழியாய் வாங்கி, இப்போ பணக்கார பெருச்சாளியாக மாறிட்டதாய் பேசிக்கிறாங்களாம். 'இவன்-ஆரோக்கியம்-அப்பாவு மேல உள்ள 'ஒட்டுண்ணி'ன்னு ஜுவாலஜி டிபார்ட்மெண்ட் அட்டெண்டர் பேசுறானாம்.'

ஆரோக்கியசாமி, சிந்திப்பதை விட்டுவிட்டு, அந்த வீட்டின் வறுமைத் தடயங்களை நோட்டம் விட்டபடியே, "வசந்திய எழுப்பும்மா...." என்றார். இதற்குள், கோவிந்தம்மா, அவருக்கு ஒரு 'டீ' போட்டுக் கொடுத்துவிட்டு, அவர் குடிப்பது வரைக்கும் காத்திருந்தாள். கோவிந்தம்மா, மன்றாடும் குரலில் பேசினாள்:

"இந்தா பாருண்ணா! இதோ தூக்கத்துலே தொலைஞ்சு போனவளை, என் மவளாய்ப் பார்க்காமல், ஒன் பொண்ணா பாரு, இவளால நடக்காததை சொல்லவும் முடியாது. எழுதவும் முடியாது..."

"சொல்லவும் வேண்டாம், எழுதவும் வேண்டாம். சொல்ற இடத்துல ஒரு சின்ன கையெழுத்தத்தான் போடணும்."

"'என்ன பண்றதுன்னா? என் புத்தியும், என் வீட்டுக்காரர் புத்தியும் உருப்படாத புத்தி. சின்ன வயசுலேயே, இவளை உண்மையை பேசும்படியாய் பழக்கிட்டோம். இப்போ காலேஜ் சகவாச தோசத்துல, உண்மையை பேசாமல் இருக்கப் பழகிட்டாள். ஆனால் அதுக்கு எதிர்மாறாய் பேசுறதுக்கு இன்னும் பழகல. பழகுவாள்னும் தோணல. கோர்ட்டுக்கு இவள் வந்தால், அப்பாவு மாமாதான் தோத்துடுவார். இது கூடவா அவருக்கு தெரியல.."

"அவருக்கு எது தெரியும் என்கிறது முக்கியமில்ல. அவரு சொன்னபடி செய்யாவிட்டால், ஒன் மவளுக்கு என்ன நடக்குமுன்னு ஒனக்குத் தெரியுறதுதான் முக்கியம்."

"இந்தா பாருண்ணா! இப்போ, இவளை ஒன்கூட அனுப்பினால், இவள், என்கிட்ட திரும்பி வருவாளான்னு சந்தேகம் வரது. அப்பாவு மாமா, எடுத்த எடுப்பிலேயே ஏதாவது செய்திடுவார்னு சொல்லல. இவள் வழியிலயே உயிரை மாய்ச்சுக்குவாள். ஒனக்கும் பிள்ளைகுட்டி இருக்கு."

ஆரோக்கியசாமி, முகத்தைப் பின்வாங்கினார். அப்பாவுவிடம் பொய் சொல்றதா? அப்படிச் சொல்லிட்டு தப்பிக்க முடியுமா? ஆனாலும், இந்த கோவிந்தம்மா முகத்தைப் பார்த்தால்... எனக்கும் பிள்ளைகுட்டி இருக்குன்னுவேற சொல்றாளே...

"இன்னைக்கு எப்படியோ சொல்லிடுறேன்.... நாளைக்கு..... நாளை மறுநாளைக்கு...."

"நாளைய காரியத்த நாளைக்குப் பார்த்துக்கலாம். நான் இப்போ, ஒவ்வொரு நாளாய் வாழப் பழகிட்டேன். இன்னைக்கு ஒன் புண்ணியத்துல நாங்க தப்பிச்சதாய் இருக்கட்டும். போண்ணா... அவரு காரை எடுத்துட்டு இங்கே வருமுன்னால போயிடு..."

ஆரோக்கியசாமி, எதுவும் பேசாமல் நின்றார். ஒரு வேளை, மனிதாபிமானத்தில் ஈடுபட்டு அப்பாவுவிடம் சொல்லக்கூடிய பொய் அம்பலமானால், தன்பலம் என்ன என்பதை கணக்குப் போட்டுப் பார்த்தாரோ என்னவோ... சிறிது நேரம் பேசாமல் நின்றுவிட்டு, யோசித்து யோசித்து நடந்தார்..

கோவிந்தம்மாவால், சமையல் வேலையைக் கவனிக்க முடியவில்லை. வாசலில் வந்து உட்கார்ந்தபடி, முட்டிக்கால் முனைகளில் முகத்தைப் போட்டுக் கொண்டாள். மூச்சு, வேக வேகமாக இயங்கியது. நுரையீரல், தொண்டைக்குள் வந்து

அடைத்துக் கொள்வதுபோல் தோன்றியது. இவளுக்கு, விவகாரம் வேலை பறிப்போடு போனால், அதுவே புண்ணியம். அப்பாவு மாமா பழிவாங்குவதில் ஓநாய். வேலையைத்தான் விட்டுட்டாளேன்னு நினைக்க மாட்டார். ரவுடிப் பயல்களை ஏவி விடவும் தயங்க மாட்டார். இந்தப் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது?

சிந்தனையே சிலந்தி வலையாக, பல்வேறு உணர்ச்சிகளால் சுழற்றப்பட்ட கோவிந்தம்மா, சத்தம் கேட்டு நிமிர்ந்தாள். கன்னையா, சாம்பல் நிற யூனிபாரத்தோடு வந்தார். மனைவி ஒரு மாதிரி இருப்பதை பாத்துவிட்டு, அவளை ஒரு மாதிரி பார்த்தார். சற்று குள்ளமானவர். பூஞ்சை உடம்பு. 'ஆஜானுபாகுவான' கோவிந்தம்மாவுக்கு, அவர் சரியா 'மேட்ச்' இல்லை என்று அந்தக் காலத்தில் பலர் நினைத்ததுண்டு. அவ்வளவு ஏன்? இப்படி கோவிந்தம்மாவே நினைத்திருக்கிறாள். ஆனால் இயல்பிலேயே பயந்த் சுபாவம் கொண்ட அந்த மனிதர், தன்னிடம் வம்புதும்பு செய்து பிறந்தவீட்டுக்கு அனுப்பாததில் அவள் பெருமைப்பட்டாள்.

கணவரிடம், விஷயத்தைச் சொல்லி ஆறுதல் தேட நினைத்த கோவிந்தம்மா, அவரிடம் வந்ததும் வராததுமாக சுமையைக் கொடுக்க விரும்பவில்லை. காலையில் ஏழு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு, இப்போதுதான் வீட்டுக்கு வருகிறார். அது என்ன கம்பெனியோ, அவர் பார்ப்பது எட்டு மணிநேர வேலையில்லை. எட்டு மணியில் இருந்து வேலை.

வசந்தியும் படுக்கையில் புரண்டு புரண்டு, கண்களை விழித்து விழித்து, பிறகு திடுதிப்பென்று எழுந்தாள். நான்கைந்து வினாடிகள் சலனமற்று இருந்த மனதிற்குள், துயரவெள்ளம் பாய்கிறது. தூக்கத்தில் கரைந்த துக்கம், வெள்ளத்தில் மிதந்தது. வசந்தி, அப்பாவையே, பார்த்தாள். டீ போடுவதற்காக மீண்டும் 'ஸ்டவ்வை' பற்றப் போன கோவிந்தம்மா, மகளிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று கண்களால் சைகை செய்தாள். எத்தனையோ நாட்களுக்கோ, மாதங்களுக்கோ.... அல்லது ஆயுள் முடிவது வரைக்குமோ, தாங்கப் போகிற பிரச்சனையை, கொஞ்சநேரம் காக்க வைத்தால்தான் என்ன?

கோவிந்தம்மா, கணவனிடம் ஒரு டம்ளரையும், வசந்தியிடம் ஒர டம்ளரையும் நிட்டிவிட்டு, காலி டம்ளர்களை பார்த்த பயல்களுக்கு, எஞ்சியதைப் பங்கிடப் போனாள். கன்னையா, காபி குடித்து முடித்துவிட்டதால், அவரிடம் அன்றைய நிகழ்ச்சிகளை ஒப்பிக்கப் போவதற்கு முன்னுரையாக இருமியபடியே தற்செயலாய் வீதியைப் பார்த்த அவள் கண்கள் அந்தப் பக்கமே பார்த்தன.

வாசலில், பளபளப்பான கார் ஒன்று நின்றது. டிரைவர் இருக்கையில் இருந்த ஒருவர், அவள் கவனத்தைக் கவரும்படி

'ஹார்ன்' அடித்தார். பின்னிருக்கையில் இருந்த ஒருவன், அவளை வரும்படி சைகை செய்தான். கோவிந்தம்மா, அவர்களையை உற்றுப் பார்த்தாள். இதற்குள் காரின் பின்னிருக்கையில் இருந்து இருவர் இறங்கினார்கள். ஒருவன் கையில் டேப்ரிக்கார்டர்: இன்னொருத்தன் கையில் ஸ்டெனோகிராபர்கள் குறிப்பெடுக்க வைத்திருப்பது போன்ற நோட் புத்தகம். டேப் ரிக்கார்டர். தடித்த தோல் கொண்ட பொட்டலத்தில், இருந்தது... நோட் புக் வைத்திருப்பவன் அப்பாவுவிடம் போனானே, அதே நிருபன்...

இருவரும் அட்டகாசமாக உள்ளே வந்தார்கள். நிருபர், தடியனைக் கண்காட்ட, அவன் டேப் ரிக்கார்டரை முடுக்கி விட்டான். சத்தம் கேட்டு, வசந்தி உட்பட, எல்லோரும் வாசலுக்கு வந்தார்கள். கோவிந்தம்மா எழுந்து நின்றாள். நிருபர், கேள்வியைத் துவக்கினார்.

"நீங்கதானே டர்னர் கன்னையா? இவங்கதானே ஒங்க பொண்ணு வசந்தி?"

கோவிந்தம்மா பதிலளித்தாள்.

"மொதல்ல நீங்க யாரு? அதைச் சொல்லுங்க...."

"நாங்களா.... நாங்க வாடிக்கை பத்திரிகையில இருந்து வந்திருக்கோம். ஒங்க டாட்டரை இன்டர்வியூ பண்ணப்போறோம். அவங்க போட்டோவும், ஒங்க குடும்பப் போட்டோவும் வேணும். எங்க பத்திரிகையில பெரிசா போடப் போறோம்."

கோவிந்தம்மா, நிதானமான படபடப்போடு கேட்டாள்:

"பெரிசா போடுறதும், சிறிசா போடுறதும் அப்புறம். என்மகள் ஐ.ஏ.எஸ் அதிகாரியும் இல்லை. சினிமாக்காரியும் இல்லை. அவளை எதுக்காக போட்டோ எடுக்க வந்தீங்க?"

"என்னம்மா பயந்து பயந்து பேசுறிங்க? ஒங்க டாட்டர் கிட்ட பழைய பிரின்ஸ்பால் பெருமாள்சாமி தகாத விதத்துல நடந்திருக்கார். அப்படியும் திமிர்ல கோட்டுக்குப் போயிருக்கார். நீங்க சும்மா இருந்தாலும், நாங்க சும்மா இருக்க முடியுமா? அந்தக் கிழவனை ஒழிச்சிக்கட்ட வேண்டாமா? எங்கெல்லாம் அநியாயம் நடக்குதோ, அதை அம்பலப்படுத்தறதுதான் எங்க பத்திரிகையோட வேலை. ஒங்களுக்கு பணம் வேணுமா, தர்றோம். வேலை வேணுமா, வாங்கித் தர்றோம். ஒங்க ஹஸ்பெண்டுக்கு ஒர்க்ஷாப் வச்சுக் கொடுக்கணுமா, கொடுக்கிறோம். எங்க எம்.டி. எந்த வகையிலும் உதவத் தயார். அவருக்கு, பணம் தூசு. மிஸ். வசந்தி! பழைய கர்நாடகமாய் இருக்கப்படாது. கொஞ்சம் இப்படி வந்து டேப் ரிக்கார்டர்ல பெருமாள்சாமி எப்படி மிஸ்பிஹேவ் செய்தார்னு சொல்றிங்களா! டேப்

ரிக்கார்டை அட்ஜெஸ்ட் பண்ணுப்பா. ஒன்னை மாதிரியே கராபுரா சத்தம் போடுது பார்....!

கோவிந்தம்மா, நிதானம் குலையாமல் கேட்டாள்.

"இவ்வளவு எழுதினிங்களே, என் பொண்ணைப் பற்றி எழுது முன்னால, ஒரு வார்த்தை அவள்கிட்டே கேட்டு எழுதினிங்களா? 'உங்களைப் பற்றி இப்படிச் சொல்றாங்களே என்ன விஷயமுன்'னு ஒரு வார்த்தை கேட்டிங்களாய்யா"

"அது வந்து, அப்போ அவசரம். அட்ரஸ் சரியா தெரியல."

"இப்போ மட்டும் வீடு எப்படிய்யா தெரியுது?"

"பழையதை விட்டுடுங்கம்மா. ஒங்களுக்கு என்ன வேணும்? பிரிஜ் வேணுமா? போன் வேணுமா? உதவத் தயாராய் இருக்கிறவங்கிட்டே பகையாளி மாதிரி பேசுறிங்களே..."

"நீங்க பகையாளியைவிட மோசமானவங்கய்யா. ஒங்களுக் கென்ன, எழுதிட்டிங்க. அந்த செய்தி பொத்தாம் பொதுவாய் வந்தாலும், என் கண்மணி படுறபாடு உங்களுக்கு தெரியுமாய்யா? கட்டுப் பாட்டுல இருந்த என்னோட நோயோட நான் படுறபாடு தெரியுமாய்யா? இதே மாதிரி அந்தப் பெரிய மனுஷன் பழைய பிரின்ஸ்பால் மனம் என்ன பாடுபடுமுன்னு கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்திங்களாய்யா?

"இவ்வளவு நடந்த பிறகும் எங்ககிட்ட வந்து பணத்தையும் பதவியையும் காட்டுறீங்களே, எங்களைப் பற்றி ஒங்க மனசுல என்னய்யா நெனைக்கிறீங்க? பணத்தைக் காட்டினால், ஒரு ஏழைக் குடும்பம் மயங்கிடுமுன்னு ஒங்களுக்கு எந்தப் பயல்யா சொல்லிக் கொடுத்தது? ஏழைப் பொண்ணுன்னால் அவ்வளவு இளக்காரமாய்யா? ஒங்க கதையில் கதை வரணுமுன்னும், படம் வரணுமுன்னும் பல்லைக் காட்டுறவள்களைப் பார்த்துப் பார்த்து அதே மாதிரி, எல்லாரையம் நினைக்காதிங்க. கண்ணாடிக்குள்ளே தெரியறதாலே, அந்தக் கண்ணாடிக்குள்ளேயே எல்லாம் இருக்குதுன்னு நினைக்காதிங்க. மரியாதையாய் போங்கய்யா. தொடப்பத்தை எடுக்குமுன்னால போங்கய்யா..."

கன்னையாவுக்கு, கண்கள் சிவந்தன. பையன்கள் பெற்றெடுத்த அம்மாவின் அருகே போய் நின்று கொண்டார்கள். வசந்தி, பின்பக்கமாய் நின்றபடியே "பொறுக்கிப் பசங்ககிட்ட என்னம்மா பேச்சு, சொன்னதைச் செய்து காட்டாமல்?" என்றாள்.

பத்திரிகைப் பையன்கள், தங்களுக்குத் தெரியாமலும், தங்களை மீறியும் பப்ளிஸிட்டிக்கும் பணத்திற்கும் மயங்காத பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை அப்போதுதான்

தெரிந்தவர்கள்போல் பேந்தப் பேந்த விழித்தார்கள். பிறகு "ஏதோ நடந்திருக்கு, சொல்ல மாட்டேங்கிறீங்க. பார்த்துடலாம்" என்று வீறாப்பாய் எகிறியபடியே பின்வாங்கிக் காருக்குள் ஏறினார்கள்.

கார் போனவுடனேயே, கோவிந்தம்மாவின் வாய் அகலமாகியது. ஆத்மா மூச்சு ஆவேசப்புயலாய் கூக்குரலிட்டது. 'ஆங்... ஆங்' என்ற சத்தம். கோவிந்தம்மாவின் கைகள் உயர்ந்து, அந்தரத்தில் ஆதரவைத் தேடின. 'அம்மா.... அம்மா' என்றபடியே வசந்தி, அம்மாவைப் போய்ப் பிடித்துக் கொண்டாள். பயல்கள் சத்தம் போட்டு அழத் துவங்கினார்கள். கன்னையா, மனைவியின் கழுத்தை நீவிவிட்டார். எல்லோருமாயச் சேர்ந்து, அவளைக் கட்டிலில் போட்டார்கள். நல்ல வேளையாக, ஒன்றுமில்லை. அதிர்ச்சியில் புயலாய் வந்த மூச்சு, சன்னஞ் சன்னமாய் சிறிதாகியது. எதுவும் நடக்காதது போல் "வசந்தி, அம்மாவல முடியாதுன்னு நினைக்கேன் இன்னைக்கு ஒன் சமையல்தான்...." என்றார் கன்னையா இழுப்போடு.

வசந்தி, அவசர அவசரமாக அடுப்பைப் பற்ற வைத்தாள் சமையல் வேலைகளைப் பார்த்தபடியே, அப்பாவிடம் டிரஸ்ட் சேர்மன் மிரட்டியதை திக்கித் திணறி, தீயில் கண்ணீரிட்டபடி சொல்லிக் கொண்டிருந்தாள். சொல்லி முடிக்கவும், சாதம் கொதிக்கவும் சரியாக இருந்தது, மகள் முடித்ததும், கன்னையா, தரையில் அப்படியே சாய்ந்தார். எந்த அப்பாவு சித்தப்பாவின் ஆதரவில், வசந்திக்கு ஒரு நல்ல இடமாய் பார்க்க நினைத்தாரோ... அந்த சித்தப்பா, கெட்ட இடமாய் போயிட்டாரே...

திடீரென்று, காரின் ஹாரன் சத்தம் கேட்டது. வெளியே எட்டிப் பார்த்த வசந்தி "அப்பா.... போலீஸ்.... போலீஸ்" என்று சொன்னபடியே பதறி எழுந்தாள். கன்னையா வெளியே பார்த்தார். படுத்துக் கிடந்த கோவிந்தம்மா கையூன்றி பார்த்தாள்.

அப்போது வந்த அதே காரில், டிரைவர் இருக்கைக்கு அருகே இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், கால்மேல் கால் போட்டபடி, கன்னையாவை, கைதட்டிக் கூப்பிட்டார். சின்ன வயதில் கிராமத்தில் போலீஸ் பூச்சாண்டி பயம், அடி மனத்திற்குப் போனதாலும், பல தொழிலாளர்களை தடியடிப் பிரயோகங்களை மறைந்து நின்று பார்த்த அனுபவத்தாலும், போலீஸை பார்த்தாலும், கேட்டாலும், பேசினாலும் பயத்தைத் தவிர வேறு எதையும் பார்க்காத கன்னையா, இன்ஸ்பெக்டரைக் கையெடுத்துக் கும்பிட்டபடியே 'டபுளப்பில்' ஓடினார். காரின் பின்னிருக்கையில் இருந்த நிருபர்கள் சிரித்துக் கொண்டார்கள். இன்ஸ்பெக்டர், அதட்டினார்:

"ஒன் பேருதான் கன்னையாவா"

"ஆமாங்க ஸார்"

"ஒன் பொண்ணு பெயர்தான் வசந்தியா?"

"ஆமாங்க ஸார்".

"என்னய்யா இது? ஒன் பொண்ணு ஒருத்தன்மேல... மொலஸ்டேஷன் கம்ப்ளெயின்ட் கொடுத்துவிட்டு, இப்போ மறைக்கிறாளாம். தவறா கம்ப்ளெயின்ட் கொடுத்தாலும் தப்பு. எழுதுனதை மறைச்சாலும் தப்பு. ரெண்டும் கிரிமினல் குற்றம். தெரியுமா ஒனக்கு?"

"தெரியுமுங்க!"

"தெரிஞ்சுமா ஒன் சம்சாரம் இவங்களை துடைப்பக் கட்டையால அடிப்பேன்னு சொல்லிச்சு? துடப்பத்தால அடித்ததைவிட, அடிக்கிறேன்னு மிரட்டுறது பெரிய குற்றம். தெரியுமா?"

"தெரியுமுங்க..."

"இந்த வார்த்தைக்குமேல, ஒனக்குப் பேச வராதா? உன்னைப் பார்த்தால், பாவமாய் இருக்கு. ஆனா, ஒன் பொண்ணு செய்திருக்கிற காரியத்தைப் பார்த்தால்..."

"அதுக்கும் என் பொண்ணுக்கும் சம்பந்தம் கிடையாதுங்க..."

"எதுக்கும்..."

"இவங்க பேப்பர்ல வந்த விஷயத்துக்கும், என் மகளுக்கும்..."

"என்னய்யா பேசுறே? ஒன் மகளைப் பற்றி சும்மா எழுதுறதுக்கு இவங்களுக்கு என்ன தலவிதியா? நெருப்பில்லாமல் புகையுமாய்யா? போலீஸ்காரன் நான்... என்னையே டபாய்க்கிறே..."

வாடிக்கை நிருபரும், கன்னையாவை இன்ஸ்பெக்டர் மாதிரியே அதட்டினான்.

"ஒன் பொண்ணுதான் ரிட்டன் கம்ப்ளெயின்ட் கொடுத்தது. இப்போ அவள் கம்ப்ளெயிண்டை விட்டுவிட்டால், அவளை நாங்க விடமாட்டோம்..."

"என்னய்யா செய்விங்க? செய்யுறதை இப்பவே செய்யுங்க. தயாராய் இருக்கிறோம். தைரியம் இருந்தால் வாங்கய்யா..."

இன்ஸ்பெக்டர், இருக்கையில் இருந்தபடியே தலையை நிமிர்த்தினார். கணவனுக்குப் பின்னால், மகளுக்கு முன்னால், அப்பாவி ஆட்டுக்குட்டி மாதிரி நின்ற இந்த 'பொம்மனாட்டியா' இப்படிப் பேசுறது? இன்ஸ்பெக்டர் காரிலிருந்து இறங்கி,

வாசல்கட்டில் ஏறி நின்றார். வசந்தி, அம்மாவுக்குப் பின்னால், தன்னை மறைத்துக் கொண்டு, அவ்வப்போது தலையை நீட்டினாள். கோவிந்தம்மாவின் சத்தம் கேட்டு போர்ஷன்காரர்களும் கூடினார்கள்.

“இன்ஸ்பெக்டர் ஸார், இனிமேல் ஒங்களுக்கும் எங்களுக்குந்தான் பேச்சு. என் பொண்ணு அப்படி ஒரு கம்ளெயிண்ட் கொடுத்திருந்தால், அதை கோர்ட் மூலம் வாங்க வேண்டியது தானே? இவள் பெயரை வேணுமுன்னே வம்புக்கு இழுத்திருங்காங்க, இந்தப் பாவிப்பயலுக. இதைப் பற்றி போலீஸ்ல கம்ப்ளெயிண்ட் செய்ய எங்களுக்கு ஆள் பலம் இல்ல. கோர்ட்டுக்குப் போக பணபலம் இல்ல. ஆனால் ஒருபலம் உண்டு அதுதான் மானம். ஏய்... வசந்தி... நீ... மொதல்ல உள்ளே போடி. ஒங்க முன்னாலயே, என் பெண்ணை விடமாட்டேன்னு சொல்றான். நீங்களும் கேட்டுட்டு இருக்கிங்க...”

இன்ஸ்பெக்டர், மோவாயைத் தடவினார். பெண்டாட்டியை ‘அடக்க’ முடியாத கன்னையாவைச் சினத்தோடும், கோவிந்தம்மாவை சிறிது பயத்தோடும் பார்த்தார். வாடிக்கை நிருபன். இப்போது அடக்கமாய் பேசினான்.

“அந்தப் பொண்ணு காலேஜ்ல கம்ப்ளெயின்ட் கொடுத்தது உண்மைதான் ஸார்...”

கோவிந்தம்மா சூடானாள்.

“அப்படியே கொடுத்தாலும், அதைக் கேட்க நீ யாருய்யா?”

“நானா? நான் பத்திரிகை நிருபர். எங்கெல்லாம் அக்கிரமம் நடக்கோ, அதை அம்பலப்படுத்தி நியாயம் கேட்கிறவன்.”

“அப்படியா? ரொம்ப சந்தோஷம். இதே தெருவுல டியூஸிஎஸ் கடையில நயம் அரிசி மூட்டை மூட்டையாய் ஹோட்டலுக்குப் போகுது. சாயங்காலமாய் வந்து எழுதுறியா? நானே எழுதிக் கொடுக்கேன். ஒன்னால பிரசுரம் செய்ய முடியுமா? இன்னும் ரெண்டு மூணு பணக்காரங்களும், ஒரு அரசியல்வாதியும் போடுற அக்கிரமங்களை, நானே எழுதித்தாரேன். அப்படி எழுதினால், உன்னால பேப்பர்ல போட முடியுமா? இன்ஸ்பெக்டர் ஸார்! ஒங்களால என் உயிருக்கு உத்ரவாதம் தர முடியுமா? வசந்தி பேப்பரைக் கொண்டுவாடி! என்னய்யா சொல்றே... என்ன ஸார் சொல்றிங்க...”

வசந்தி, பேசாமல் நின்றபோது - விவரம் தெரியாத தம்பிப் பயல், தன் நோட்டுப் புத்தகத்தில் ஒரு தாளைக் கிழித்து அம்மாவிடம் நீட்டிவிட்டு, பென்ஸிலையும் கொடுத்தான்.

இன்ஸ்பெக்டர் மோவாயில் இருந்து கையை எடுக்கு முன்னாலேயே, நிருபன், திணறியபடியே, தான் கிரைம் ரிப்போர்ட்டராக இருக்கும்போது கமிஷனர் ஆபீஸில் சப்-இன்ஸ்பெக்டராக இருந்து, இப்போது இன்ஸ்பெக்டரான, தன் நண்பரையே பார்த்தான். பிறகு, "அந்த அம்மா சொல்றதும் ஒரு வகையில் நியாயந்தான், ஒரே ஒரு ரிக்வஸ்ட். எங்க எம்.டி. 'உன்கிட்ட முடியாதுன்னால் என்கிட்டே கூட்டிட்டு வா'ன்னு சொன்னார். மிஸ்.வசந்திகூட வரவேண்டாம், மிஸ்டர் கன்னையா வந்து, எங்க எம்டிகிட்ட, இப்போ இந்தம்மா என்ன சொன்னாங்களோ, அதையே சொல்லிட்டும். அப்புறம் இந்தப் பக்கமே நாங்க வரமாட்டோம். ஸார்..." என்றான்.

இன்ஸ்பெக்டர், தன் தொப்பியைக் கழற்றி கையில் வைத்தபடியே "இப்போ நான் போலீஸ்காரனாய் பேசல. எல்லோருக்கும் பிரதராய் பேசுறேன், கன்னையா! இதே கார்ல போய், எம்.டி கிட்ட போய், நீ என்ன சொல்லணுமுன்னு நினைக்கிறியோ, அதையே சொல்லிட்டு வந்திடு. ஏன் யோசிக்கிறே? ஏறுய்யா... ஒன் பாதுகாப்புக்கு நான் ஜவாப்புய்யா..."

கன்னையா, தயங்கினார். பின்வாங்கினார். இன்ஸ்பெக்டர், இப்போது தொப்பியை மீண்டும் தலையில் கிரீடமாக்கியபடியே "நான் எல்லோருக்கும் பொதுவாய் பேசுறேன். ஒரு பெரிய மனுஷனைப் பார்த்து, விஷயத்தை நேரில் சொல்லிட்டு வராதுல தப்பில்ல. எதுக்கு சொல்றேன்னா, ஒரு தடவை எம்டிகிட்டே, விஷயத்தை நேர்ல சொல்லிட்டால், அப்புறம் விவகாரம் இல்ல. எனக்கும் வேலை மிச்சம். கன்னையா! கார்ல ஏறுய்யா. இந்தா பாருய்யா, நீ கார்ல ஏறாட்டால், ஒன்னை சட்டப்படி என்னால ஒண்ணும் பண்ண முடியாதுதான். அதே சமயம், என்னைப் பகைச்சிட்டு, ஒன்னால இந்த ஏரியாவுல இருக்க முடியுமான்னு நினைச்சுப்பாரு. அப்புறம் ஒன் இஷ்டம். பின்னால வருத்தப்படக்கூடாது. நான் ஒண்ணு சொல்றேன்னா அதுல ஆயிரம் அர்த்தம் இருக்கு..."

கன்னையாவிற்கு, 'டயம்' கொடுப்பவர் போல, நாற்பதை வயதாலும், ஐந்தேமுக்கால் அடியை உடம்பாலும் தாண்டிய இன்ஸ்பெக்டர், கடிகாரத்தைப் பார்த்தபடி நின்றார். கன்னையா, மனைவியைப் பார்த்தார். கோவிந்தம்மா "என்னய்யா நெனைச்சிக்கிட்டே.... எங்க அப்பாவு மாமாகிட்டச் சொல்லி ஒன்னை..." என்று அனிச்சையாகச் சொல்லப் போனாள். அப்புறம்தான் தெரிந்தது, அப்பாவும் இதைத்தான் செய்யச் சொல்வார் என்பது. இனிமேல் அப்பாவுவின் பகை நிச்சயம். அந்தப் பகையை சமாளிக்க வேண்டுமானால், குறைந்தது இன்ஸ்பெக்டரின் நட்பு இல்லையானாலும், பகை கூடாது. அட கடவுளே...

கோவிந்தம்மா, யதார்த்தச் சூட்டில் அறிவு பூர்வமாய் தெளிந்து, உணர்ச்சி பூர்வமாய் தொதித்து, இறுதியில் அமைதியாக ஆணையிட்டாள்.

"பரவாயில்லை.... கார்ல ஏறுங்க.... எங்கப் பெண்ணைப் பற்றி, ஏதோ சலுகை காட்டுறது மாதிரி எழுதுறதுக்கு முன்னால, 'எங்ககிட்ட ஒரு வார்த்தை கேட்டிங்களா? ஒருத்தியைப் பத்தி பொய்யா எழுதினால், எழுதுன கை அழுகிடுமுன்'னு சொல்லுங்க. ஒங்களுக்கும் துச்சாதனனுக்கும் என்ன வித்தியாசமுன்னு கேளுங்க. சும்மா போங்க. இன்ஸ்பெக்டர் சொல்லிட்டார். தட்டக்கூடாது.... தட்டமுடியாது.... இல்லியா ஸார்..."

இன்ஸ்பெக்டரால், கம்பீரமாகத் தலையை ஆட்ட முடியவில்லை. மழுப்பலாகச் சிரித்தார். நிருபன், அவர் கையை குலுக்கியதால் வழி கிடைக்காமல் நின்ற கன்னையா, குலுக்கல் முடிந்ததும், காருக்குள் ஏறினார். மனைவியையும் மகளையும் மருட்சியோடு பார்த்தார். இன்ஸ்பெக்டரும், காரில் ஏறிக் கொண்டார். பேப்பர்காரர்களுக்கு நடுவே உட்கார்ந்த கன்னையா, இன்னும் மனவைியைப் பார்ப்பதை விடவில்லை.

கார் பறந்தது.

கோவிந்தம்மா 'என்ன நடக்குமோ ஏது நடக்குமோ' என்று உள்ளூரப் பயந்தவளாய், கைகளை நெறித்தாள். இதுவரை எதுவும் பேசாமல் நின்ற ஊமை ஜனங்கள்- அதாவது இதர போர்ஷன்காரர்கள் "நீங்க ஒங்க புருசனை அனுப்பியிருக்கப் படாது. இன்ஸ்பெக்டர்னா என்ன கொம்பா" என்று வாய்ச் சொல்லில் வீரம் காட்டினார்கள்.

'கடவுளே... என் அப்பாவிப் புருஷனை நல்லபடியா வீட்டுக்குக் கொண்டுவந்து சேரு' என்று மனதுள் பிராத்தித்து, கோவிந்தம்மா, ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட்டாள். திடீரென்று, அவளுக்கு மூச்சிரைத்தது. அப்போது வந்த அதே புயல்மூச்சு. வசந்தி, அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு விம்மினாள். வெடித்தாள். வேரற்ற மரம் போல அம்மா மீது சாய்ந்தாள்.

# 16

கன்னையா, அந்த மாதிரி காரை வெளியே நின்றுதான் பார்த்திருக்கிறாரே தவிர, இப்படி உள்ளே இருந்து கண்டதில்லை. வெளியே வெயில் கொட்டிக் கொண்டிருந்த அதே நேரத்திலும், காருக்குள் 'சுகமோ சுகம்' என்ற பாடல் ஒலிப்புடன் கிளுகிளுப்பான குளிர்மை, குளுகுளுப்பாகக் குலாவியது. வெளியே நிற்பவர்கள் உள்ளே பார்க்க முடியாத பைபர் கிளாஸ்கள் கொண்ட அந்தரங்கமான கார். காரின் முன்பகுதியில், டிரைவர் இருக்கையின் இடது பக்க மேட்டில், தங்கநிற பிரேமிற்குள் அடைபட்டு மின்னிய, வெண்தகடு போலவும், வெளுத்த பால் போலவும் தோன்றிய அதை ஆச்சரியமாகப் பார்த்தார். அது 'வீடியோ' ஸ்கிரீன் என்பது, வீட்டிலுள்ள ஜன்னல்களுக்குக் கூட ஸ்கீரின் போட்டு பழக்கமில்லாத கன்னையாவிற்குத் தெரியவில்லை. காரில் அட்டகாசமாய் பேசிக்கொண்டு இருந்தவர்களை அடக்கமாகப் பார்த்தார். அவர் முகம், உள்ளத்து உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வீடியோ ஸ்கிரீன் போல் பல்வேறு தோற்றங்களைக் காட்டியது. இந்தக் காலத்திலேயும், சம்பந்தா சம்பந்தம் இல்லாத ஒரு இன்ஸ்பெக்டர் வந்து, ஒரு ஏழையை மிரட்டி, கௌரவமாகக் கடத்தப்படுவதற்கு உடந்தையாக இருக்க முடியும் என்பதை நினைக்க நினைக்க, அவருக்கு முதலில் ஏற்பட்ட ஆச்சரியம், அதிர்ச்சியாகியது. கன்னத்தில் கை வைத்து, அப்பாவி ஆட்டுக்குட்டி மாதிரி அவர்களையே பார்த்தார்.

'வாடிக்கை' நிருபன், இன்ஸ்பெக்டருடன் கொஞ்சி குலாவினான்.

"ஸார்... ஒங்களுக்கு கவிதை, கதை எழுத வருமா?"

"எதுக்கு கேட்கிறீங்க?"

"இல்ல... எங்க பத்திரிகையில, பிளாஷ் பண்ணலாமேன்னு கேட்டேன். ஏதாவது எழுதுங்க...."

"டிரை பண்றேன். எப்.ஐ.ஆர். எழுதுறதே ஒரு அனுபவம்தான். அதுக்கு கற்பனை வேணும்.... கதையம்சங்கள் புரியணும்.... ஜோடனை ஜொலிக்கணும்...."

"பரவாயில்லையே! இதுதான் ஸார் ரியலிசம். இப்ப சொல்றது மாதிரியே எழுதுங்க ஸார்;அட்டைப்படக் கதையாய் போட்டுறோம்...."

"என் மிஸ்ஸஸ் எழுதுவாள். பட்... பத்திரிகையில போடற அளவுக்கு எழுதவருமா என்கிறது தெரியல...."

"அந்தக் கவலைய எங்ககிட்ட விடுங்க. எப்படி எழுதினாலும் நாங்க இருக்கோம். ஒரு நாளைக்கு அவங்களை கதையோட அனுப்பி

வைங்க. டச் பண்றோம். இந்த சினிமா நடிகர், நடிகைகளோட கதைகளையும், கட்டுரைகளையும், ஏச்சுகளையும், பேச்சுகளையும் எழுதுவதே எங்களை மாதிரி கோஷ்டிங்கதானே...."

"தேங்யூ! எங்க அஸிஸ்டெண்ட் கமிஷனரை கொஞ்சம் ஹைலட் பண்ணணும்..."

"இந்தப் பத்திரிகைக்கு... நீங்கதான் கௌரவ ஆசிரியர் மாதிரி. எங்கிட்ட நீங்க கேட்க வேண்டியதே இல்ல. ஒரு போன் போட்டால், எழுதுனதை பொறுக்கிறதுக்கு ஓடி வருவோம்..."

"அப்போ நாளைக்கே எங்க ஏஸிய பேட்டி காண்றிங்களா?"

"பேட்டியா? இன்னும் ஒரு மாசம் போகட்டும். எங்க பாஸ் ஒரே கவலையா இருக்கார். அவர் செட்டில் ஆகட்டும்."

"என்ன கவல?"

"எல்லாம் இந்த பெருமாள்சாமி விவகாரந்தான். கோர்ட்டுக்குப் போயிருக்கான். போன வாரம்... 'தி.க' வீரமணி அவதூறு வழக்குல, ஒரு பத்திரிகாசிரியருக்கு ஒரு வருட ஜெயில் தண்டனை தீர்ப்பாச்சு பாருங்க... அதைப் படிச்சதுல இருந்து எங்க எம்.டி. ஒரு மாதிரி ஆயிட்டார். அதனால்தான் சொல்றேன். இந்த விவகாரம் முடியட்டும். அப்புறம் நீங்க எழுதுவதுதான் எழுத்து..."

இன்ஸ்பெக்டர், வாடிக்கையாளர்களைப் பார்த்து முகமாட்டினார். ஏஸியோட பேட்டி இப்போ வராதோ? மிஸ்ஸோட கதையை இப்போ வெளியிட முடியாதோ? ஏற்கெனவே அவள் நச்சரிக்காள். கோபமாய் இருக்கிற ஏ.ஸி.யை எதிர்பாராமல் கிடைத்த இந்த பத்திரிகையில் போட்டு குளிப்பாட்டலாமுன்னு நினைச்சேன்...

இன்ஸ்பெக்டர், கன்னையாவை பார்த்து முறைத்தார். பிறகு, அவர் சட்டைக் காலரை பிடித்திழுத்து, தன் பக்கம் திருப்பினார்.

"யோவ்! உன்னத்தான், ஒன் பேரு என்ன?"

"கன்னையாங்க..."

"கன்னையாவோ... பொன்னையாவோ... நான் சொல்றதை நல்லா கேளு. என்கிட்ட டபாய்க்கலாமுன்னு மட்டும் நினைக்காதே. இவங்க என்ன செய்யச் சொல்றாங்களோ, அதை மரியாதையாய் செய்திடு. அப்போதான் ஒனக்கும் நல்லது, ஒன் பொண்ணுக்கும் நல்லது."

"மிஸ்டர்... ஒங்களத்தான், ஒங்க எம்.டி.யை... இவனுக்கும், ஏதாவது கொடுக்கச் சொல்லுங்க... எம்டியாய் விடாதீங்க..."

இன்ஸ்பெக்டரின் வார்த்தை விளையாட்டை பார்த்துவிட்டு வேடிக்கையண்கள் சிரித்தார்கள். பிறகு, மூத்தவன் வழிமொழிந்தான்.

"அது இல்லாமலா? செக்கும், பேனாவும் தயாராய் இருக்கு ஸார்."

கன்னையா, மயங்கி மயங்கி மருவினார். 'அடேய்! அறிவு கெட்டவனே! சின்ன வயசுலயே செத்துப் போன என் மகன் மட்டும் இப்போ உயிரோட இருந்தால், இந்நேரம், உன்னைவிட வயசுலயும், மூளையிலயும், உத்தியோகத்துலயும் பெரியவனாய் இருப்பான். ஒன் அப்பன் வயசான என்னைப் பார்த்தடா, இவன் அவன்னு பேசுறே? ஒனக்குப் பணம் வேணுமுன்னால், நேரடியாய் இந்தப் பசங்ககிட்டே கேளேண்டா... என்னை ஏண்டா இழுக்கிறே...'

கன்னையாவால், இன்ஸ்பெக்டரை மனதுக்குள்தான் திட்ட முடிந்தது...

கன்னையா, காருக்குள் இருந்தவர்களைப் பார்க்க விரும்பாதது மாதிரி, கண்களை மூடினார். அவர்கள் பேசுவதைக் கேட்க விரும்பாதவர்போல், கரங்களிரண்டையும் மடித்து, அவற்றை காதோரம் கொண்டு போனர். கார் ஓடுவது தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தது. அலுங்காமல், குலுங்காமல், ஆகாயக் கப்பலாய் மிதப்பில் சென்றது. ஏதோ ஓர் இடத்தில் நின்றபோதுதான், கன்னையா கண்களைத் திறந்தார். இன்ஸ்பெக்டர் காரில் இருந்து இறங்கினார்.

"தேங்க்யூ... இன்ஸ்பெக்டர் ஸார்! இந்த ஆளுக்கு இன்னும் கொஞ்சம் அட்வைஸ் கொடுங்கோ..."

"இந்த ஆள் வம்பு பண்ண மாட்டான். யோவ் கன்னையா.... சொன்னது ஞாபகம் இருக்கட்டும். அப்புறம்... அந்தப் பெருமாள் சாமியோட அட்ரஸை கொடுங்க. ஏரியா போலீஸ்ல சொல்லி ஒரு வழிபண்ணச் சொல்றேன்..."

"நோ... தேங்க்யூ ஸார். இப்போதைக்கு ஏதாவது செய்தால் கோர்ட்ல அவன் வக்கீல் வம்பு பண்ணுவான்..."

"நாங்க நேரடியாய் மோதமாட்டோமே..."

"இப்போ வேண்டாம். அந்த ஆளுக்கு வேறவழி வச்சிருக்கோம்..."

'வாடிக்கை'யின் சீனியர் நிருபன், பேசி முடித்துவிட்டு சிரித்தான். தலைகவிழ்ந்து போன கன்னையாவை மோவாயால் சுட்டிக் காட்டினான். இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். பிறகு விருந்தோம்பல் வார்த்தைகளை விட்டார்.

"ஸ்டேஷனுக்கு வாங்களேன், டீ சாப்பிட்டுப் போகலாம்..."

"ஸாரி ஸார்... டைம் இல்ல. எம்.டி. காத்திருப்பார்"

"யோவ் கன்னையா! சொன்னது ஜாக்கிரதை! நாளைக்கு காலையில் கண்டிப்பாய் என்னை வந்து நீ பார்க்கணும். மறந்துடாதே, நான் ரவுண்டுக்குப் போயிருந்தால் ஸ்டேஷன்லயே காத்திரு... புரியுதா? ஓ.கே. மிஸ்டர். பை... பை... இவனுக்கும் ஏதாவது தள்ளுங்க..."

கார் பறந்தது. கன்னையாவும், பறக்கப் போகிறவர் போல், இருக்கையின் நுனிக்கு வந்தார். இவ்வளவு மோசமான நிலைமையா நாட்ல நிலவுது? இது ஏன், எனக்கு இதுவரைக்கும் தெரியமால் போயிட்டு? இப்படி எத்தனை பேர் மிரட்டப் படுறாங்களோ? நான் என்ன ஆகப் போகிறேனோ? என் மகளை என்ன ஆக்கப் போறாங்களோ? யாரிடம் சொல்வது? காது கொடுக்க ஆள் இல்லாத காலத்தில், கை கொடுக்க யார் வருவார்...? இந்த பேப்பர் முதலாளிகிட்டே கெஞ்சி கூத்தாடிப் பார்க்கலாமே..."

கன்னையாவின் மனப் போராட்டத்தைப் புரியாமல், அவரை ஒரு பொருட்டாகக் கருதாமல், வாடிக்கையன்கள் இருவரும், தங்கள்பாட்டுக்கு பேசியபடி வந்தார்கள். "இவனுக்கும் கொடுங்கன்னு இன்ஸ்பெக்டர் சொன்னாரே, அந்த 'உம்முக்கு' என்னடா அர்த்தம்" என்றான் ஒருத்தன். "இது கூடவா தெரியாது. எனக்கும்... எனக்குமுன்னு அர்த்தம்" என்று சொல்லிவிட்டு, பிறகு கன்னையா இருப்பதை அப்போதுதான் அங்கீகரித்தவன்போல், கன்னத்தில் தப்பணம் போட்டுக் கொண்டான். பின்னர் நடிகைகளின் நடமாட்டங்களைப் பற்றியும், நடிகர்களின் தடுமாற்றங்களையும் பறிமாறிக் கொண்டு, அவற்றை எப்படிப்பட்ட 'கெட்டப்பில்' போடலாம் என்று தீவிர ஆலோசனை செய்தார்கள். 'டபுள் மீனிங்' வார்த்தைகளைத் தேடித் தேடிப் பார்த்தார்கள். கிசுகிசுவுக்கு அது இல்லையானால் எடுபடாதே.....

கடத்தப்பட்ட கன்னையாவுடன், கார், பலமாடி கட்டிடத் தொகுப்பைக் கொண்ட காம்பவுண்டிற்குள் வந்தது. இடுப்பில் உறைகத்தி போட்ட நேபாள கூர்க்கா, சுங்கச்சாவடியில் இருப்பது போன்ற நீண்ட இரும்புக் கிராதியைத் தூக்கிவிட்டார். கன்னையா, பக்கவாட்டில் பார்வையை செலுத்தியபோது, கார் பிரதான கட்டிடத்திற்கு முன்னால் வந்து நின்றது. வாடிக்கைக்காரர்கள் முதலில் இறங்கிவிட்டு, அப்புறம் இறங்காத கன்னையாவை உக்கிரமாகப் பார்த்தார்கள். அதற்குள் சல்வார் கமீஸுடன் போன ஒருத்தியைப் பார்த்து சீனியர் வேடிக்கையன் 'ஹாய்' என்றான். ஜூனியர் வேடிக்கையன், நான்கைந்து கதைக் கட்டுக்களோடு வந்த ஒரு வயோதிக எழுத்தாளரைப் பார்த்தும், பாராதவன் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

கன்னையா இறங்கினார். திமிரெடுத்து நின்ற அந்த மூன்று மாடிக் கட்டிடத்தையும் பக்கவாட்டில் குமிழ் குமிழாய் நின்ற கட்டிடங்களையும், ஏற்ற இறக்கமாகப் பார்த்தார். காம்பவுண்டிற்குள் காகித பாரங்களோடு நான்கைந்து டெம்போக்கள் நின்றன. ஏழெட்டு நபர்கள், பத்துப் பதினைந்து ஸ்கூட்டர்கள், அங்குமிங்குமாய் காகிதங்களை இறக்கிக் கொண்டும் பத்திரிகை பிரதிகளை ஏற்றிக் கொண்டும் செயல்பட்ட தொழிலாளர்கள். அந்த பத்திரிகைக்கு அங்கேதான் பிரஸ் இருக்கிறது என்பதைக் காட்டும் வகையில், யந்திரங்கள் அலறின.

கன்னையாவை, இருவரும் ஒரு கண்ணாடி அறைக்குள் கொண்டு வந்தார்கள். சுழல் நாற்காலியில் சுற்றிய ஒரு அம்மைத் தழும்பு மனிதரைப் பார்த்து, கன்னையா கும்பிட்டார். ஜூனியர் நிருபன் சுட்டிக் காட்டிய இருக்கையில் அமர்ந்து, கண்களைத் தாவவிட்டார். நான்கைந்து நவநாகரிகப் பெண்களும், முப்பது வயசுள்ள ஒரு 'சாதாரணப்' பெண்ணும், நாற்காலிகளில் அமர்ந்திருக்க, மூன்று இளைஞர்கள், சுவரோடு போடப்பட்ட பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்திருக்க, அங்கே 'தவக்களை' கோலோச்சியது. சிலர் பையில் போட்டோக்கள்... சிலர் கையில் கத்தை கத்தையாய் காகிதக் குவியல்கள். அவர்கள் கண்களில் ஒரு ஆவேசம். காற்றில் ஏறி விண்ணையும் சாடுவோம் என்று பாரதி சொன்னது போல், அந்தப் பத்திரிகையில் ஏறி, நாலரைக் கோடி தமிழர்களையும் செக்ஸால் அடிக்கப் போவது போன்ற ஆவேச ஆவல். இதற்குள் சீனியர் நிருபன், இண்டர்காமில் பேசினான். பிறகு வெளியேறினான்.

கன்னையா, அம்மைத்தழும்பு மனிதரையே பார்த்தார். பத்திரிகை முதலாளி, தன்னிடம் ஏன் பாராமுகமாய் இருக்கிறார் என்று யோசிப்பவர் போல் , பலவீனப் பட்டார். அவர், சிந்தனை கலையும் முன்பே, வெளியே போன சீனியர், உள்ளே தலையை மட்டும் காட்டி 'உம்' என்றான். உடனே ஜூனியர் நிருபன், கன்னையாவைப் பார்த்து, எழும்படி சைகை செய்தான். அவ்வரை மாட்டைப் பற்றுவது போல பற்றப் போனான், அம்மைத் தழும்பு மனிதர் "எம்.டி... ஒங்களுக்காகத்தான் காத்திருக்கார் என்றார். பெண்களில் 'சாதாரணப் பெண்' நான் அப்பவே வந்து காத்திருக்கேன் ஸார்" என்றாள். உடனே அம்மைத் தழும்புக்காரர் "இது என்ன, எம்ப்ளாய் மெண்ட் ஆபிஸா? அங்கே கூட கியூ என்கிறது ஒப்புக்குத்தானே" என்றார். அந்த நந்தி தேவனின் நகைச்சுவையில் பரவசப் பட்டவர்கள் போல், மூன்று பெண்களும், ஜூனியர் நிருபனும், சிரிப்போ சிரிப்பென்று சிரித்தார்கள். கதவிடுக்கில் 'சீனியன்' தலையை மட்டும் காட்டி சிரித்தான். அது அந்த கதவே சிரிப்பது போலிருந்தது.

கொடுத்து வைத்த கன்னையா, நிருபர்கள் புடைசூழ, இரண்டாவது மாடிக்கு வந்தார். நிருபர்கள் காவலாளியிடம் கண் காட்டியதும், கதவு விரிந்தது. கன்னையர், அந்த அறைக்குள் கால் வைக்கவே அஞ்சினார். துப்பறியும் கதைகளில் வர்ணிக்கப்படும் ரத்தம்போல், செக்கச் சிவந்த கம்பள விரிப்பு; இடதுபக்கம் சங்கராச்சாரியாரின் மிகப்பெரிய புகைப்படம். அதற்கு எதிர்ப்பக்கம், எழிலோங்கிய பெண்களின் திரையோவியங்கள்.

எம்டியும், எடிட்டருமான அந்த ஒற்றை மனிதர், கன்னையாவைப் பார்த்ததும், தன் நாற்காலியில் இருந்து, அது ஒரு பொருட்டல்ல என்பது போல் உதறிப் போட்டு விட்டு எழுந்தார். "வாங்கோ கன்னையா ஸார் வாங்கே... உழைப்பாளியான ஒங்க பாதம்பட்டு, எங்க பத்திரிகையே புனிதமாவுது. வாங்கே, வாங்கோ" என்றார். கன்யையாவுக்கு, ஆனந்தமான ஆச்சரியம். எவ்வளவு பெரிய மனுஷன், இவ்வளவு பெரிய வார்த்தைகளைப் பேசுறார்!

கன்னையா, தான் உட்காரும் முன்னால், அந்த மனிதர் உட்கார மாட்டார் என்பதைப் புரிந்து, அவ்வளவு பெரிய மனிதரை, எவ்வளவு சீக்கிரம் உட்கார வைக்க வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் அமர்த்திப் பார்க்க வேண்டும் என்று எண்ணி, எடிட்டரையே பார்த்தபடி, கால்களை விசைப்படுத்தினார். அவர் எதிரே போய் நின்றார். உடனே, எம்.டி. மேஜைக்கு அப்பாலும் உடம்பை வளைத்து, 'உட்காருங்கே' என்றார். கன்னையாவிற்காக, நாற்காலியைக் கூட நகர்த்தப் போனார். அதைப் பார்த்துவிட்டு வேடிக்கை நிருபர்களில் ஜூனியர், கன்யையாவிற்காக, சரியாக இருந்த நாற்காலியை, தப்பும் தவறுமாக இழுத்துப் போட்டான். அவரை உட்காரும்படி, கண்களால் கெஞ்சினான். கன்னையா, திகைத்து, திக்குமுக்காடி உட்கார்ந்திருந்தார்.

வாடிக்கைப் பையன்கள், பயபக்தியோடு நிற்பதுபோல் பாவலா செய்தபோது, எம்.டி. அவர்களையும் உடகாரச் சொல்வது போல் தலையை ஆட்டினார்.

நிர்வாக இயக்குநர் வேலையையும், பத்திரிகாசிரியர் வேலையையும், அவ்வவ்போது சில திரைப்பட வேலைகளையும், பாவம் தன்னந்தனியாய் கஷ்டப்பட்டுக் கவனிக்கும் அந்த ஒற்றை மனிதரையே, கன்னையா உற்றுப் பார்த்தார். கிராமத்தில், தனது பால்ய நண்பனின் முகம் தெரிந்தது. அவனுக்கும், உருண்டை உருண்டையாக உருட்டுகிற கண்கள்.

எம்.டி., கன்னையாவை, கருணை ததும்பப் பார்த்தார்.

"சரி... கூலாய் சாப்புடுறிங்களா ஹாட்டாய் குடிக்கிறங்களா? ஏன் யோசிக்கிறங்க? நான் ஒங்களோட நண்பன். நீங்க என் விருந்தினர். மற்ற சமாச்சாரம் அப்புறம். அது ஒன்றும் பெரிசில்ல. உம்... சொல்லுங்க."

"சிங்கிள் டீ போதுங்க... முடியுமுன்னால் ஒரு ஆஸ்ப்ரோ மாத்திரையும் வேணும்."

கன்னையா, தன்னை கிண்டல் செய்கிறாரோ என்று எம்.டி. மேஜையின் பக்கவாட்டில் ஆளுக்கு ஒருவராய் இருந்த வாடிக்கையர்களைப் பார்த்தார். அதற்குள், கன்னையா விகற்பம் இல்லாமல், சுற்றுமுற்றும் குழந்தைத்தனமாய் பார்ப்பதைக் கவனித்த எம்.டி., அவருக்காக, சுதாரிக்க வேண்டிய அவசியமில்லை என்று முடிவுக்கு வந்தார். பிறகு வாடிக்கையன் ஒருவனைப் பார்த்து கண்ணடித்தார். உடனே அவன் பைக்குள் இருநத டேப் ரிக்கார்டரை எடுத்து, யதேச்சையாகப் பார்ப்பவன்போல் அதை இயக்கினான். எம்.டி. பெரிய பீடிகையோடு பேச்சைத் துவக்கினார்.

"ஒங்களைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும், கன்னையா ஸார்! பத்துப் பதினைந்து வருஷமாய் ஒரு ஸ்கூட்டர் மெக்கானிக் ஷாப்ல, பாட்னராய் இருந்திங்க. பங்காளி பந்தாடிட்டான். அப்புறம் அம்பத்தூர்ல் இரண்டு வருஷத்துக்கு முன்னால, அந்தக் கம்பெனில பிட்டராய் ஜாயின் பண்ணுனிங்க. பேக்டரில ஒங்களுக்கு நல்லபேரு. நேர்மையைத் தவிர, வேறு எதுவுமே தெரியாத மனுஷர். ஒங்க டாட்டர் வசந்தியும், பத்தரை மாற்றுத் தங்மின்னால் தங்கம். எப்படிடா இவருக்கு இவ்வளவும் தெரிஞ்சுதுன்னு நினைக்கிங்களா? எங்கெல்லாம் யோக்கியங்க இருக்காங்களோ அவங்களைப் பற்றி தெரிஞ்சுக்கிறதுக்குன்னே, ஆபீஸ்ல ஒரு செல் வச்சிருக்கேன். இப்படிப்பட்ட ஒரு உத்தமரோட மகள் உத்தமியை ஒரு உன்மத்தன் தவறாய் பார்த்தான். கையைக் காலை பிடிச்சான்னு கேள்விப்பட்டு நான் எப்டி துடிச்சுட்டேன் தெரியுமா? இந்த விஷயத்தை விடக்கூடாது கன்னையா ஸார். நீங்க விட்டாலும், நான் விடப் போறதாய் இல்ல ஸார். என்னென்ன உதவி வேணுமோ கேளுங்க, செய்யக் கடமைப் பட்டிருக்கேன்...."

கன்னையா, எம்.டி.யை பாசத்தோடு பார்த்தார். பாவம்... எவனோ ஒரு காலிப்பயல் சொன்னதை நிசமுன்னு நம்பி துடிக்கிறார். இவரோட படபடப்பைப் போக்க வேண்டியது என்னோட கடமை. மெல்ல மெல்ல, கன்னையா வாய் திறந்தார்.

"அப்படி ஒன்று நடந்திருந்தால், பெருமாள்சாமியை, நானே கத்தியால் குத்திக் குதறியிருப்பேங்க. என் மகள் கிட்டே கேட்டேன். அந்த மனுஷர் இவளை பெற்ற மகளை நடத்துனது மாதிரி நடத்துனாராம்...."

எம்.டி. நிமிர்ந்து உட்கார்ந்தார். கன்னையாவை இஷ்டப்படி ஆட்டிப் படைக்க ஏற்பாடு செய்ததாய் சற்று நேரத்திற்கு முன்பு, தன் காதில் ஓதிய வாடிக்கையனை, உதிய மரத்தைப் பார்ப்பதுபோல பார்த்தார். ஆனாலும், ஏமாற்றத்தை வெளிக்குக் காட்டாமல், இனிப்பு இனிப்பாய்க் கேட்டார்.

"ஒரு வேளை... ஒங்க மகள், நீங்க மானஸ்தர்... உண்மை தெரிஞ்சால் விபரீதமாய் போயிடுமுன்னு விவகாரத்தை மூடி மறைச்சிருக்கலாம் இல்லியா?"

"என் பொண்ணு அப்படிப்பட்டவள் இல்லங்க. பேசாமல்தான் இருப்பாள். ஆனால் விவகாரமுன்னு வந்துட்டால், நீங்கன்னாக் கூட விடமாட்டாள். வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுதாங்க....."

"நீங்க பொய் சொல்றிங்களா? ஒங்க பொண்ணு பொய் சொல்லுதான்னு தெரியல."

"எனக்கும் அப்படித்தாங்க. நீங்க பொய் சொல்றிங்களா... இதோ இவங்க ஒங்களை அப்படி நம்ப வச்சுட்டாங்களான்னு தெரியல."

எம்.டி., எக்கச்சக்கமாகத் தவித்தார். ஆனாலும் நிதானத்தை இழக்கவில்லை.

"பிறகு, எதுக்காக ஒங்க பொண்ணு, பெருமாள்சாமி, தன்கிட்ட தகாது நடந்ததாய் கம்ப்ளெயின்ட் செய்தாள்?"

"அப்படி ஒண்ணும் அவள் கொடுக்கலிங்க."

"இதோ போட்டோ ஸ்டேட் காபி. நல்லா பாருங்க. இதோ அதோட கையெழுத்து."

"ஆகாயத்துல மனுஷன் நடக்கிற காலத்துல, இந்த ஜோடனை பெரிசா..."

"சொன்னதையே நீங்க சொல்லப்படாது. நெருப்பில்லாமல் புகையாது."

"ஒத்துக்கிறேன். ஆனால், நெருப்பு வச்சவனை கண்டு பிடிக்கிறதுக்குப் பதிலாய், என் பொண்ண நெருப்புல தள்ளிடாதிங்க."

எம்.டி.யின் கண்கள், யாசித்தன. குரல் குழைந்தது.

"இந்தா பாருங்க கன்னையா ஸார்! பெருமாள் சாமிக்கும், ஒங்க பொண்ணுக்கும் இடையே ஏதோ நடந்திருக்கு. ஒங்க பொண்ணும் ஒழுக்கத்தை உயிராய் நினைச்சதால, எடுத்த எடுப்பிலேயே புகார் பண்ணிட்டு... இப்போ கோர்ட் விவகாரமுன்னு வந்துட்டதால, அவளோட எதிர்காலம் பாதிக்கப்படுமேன்னு பயப்படுறீங்க..."

"எங்களை மாதிரி ஏழைங்களுக்கு எல்லாக் காலமும் ஒரே காலந்தான். எதிர்காலமுன்னு தனியாய் எதுவும் கிடையாது. அவளுக்குன்னு இனிமேலா ஒருவன் பிறக்கப் போறான்? சினிமாவுலயும் நாடகத்துலயும் பொண்ணுங்க அவிழ்த்துப் போட்டுட்டு ஆடுற இந்தக் காலத்துல, ஒரு பொண்ணு கோர்ட்டுக்கு போறதில் தப்பில்ல. ஆனால் நடக்காததை நடந்ததாய் எப்படிங்க சொல்றது?"

இடையே, தேநீர் கோப்பை வந்தது அதை ஒருபுறமாய் தள்ளி வைத்துவிட்டு, கன்னையா தொடர்ந்தார்.

"எழுதறுதுக்கு முன்னால என்கிட்டயோ, என் பெண்ணுகிட்டயோ ஒரு வார்த்தை கேட்டீங்களா? ஒங்களுக்கு ஏழைப் பொண்ணான. என் மகள்தானா கிடைச்சாள்? எத்தனைப் பொம்புளைங்க உடம்பைக் காட்டி, மூளையில மேதைத்தனம் இருக்கதாய் நடிக்கிறாள். அதெல்லாம் ஒங்க பார்வைக்குப் பட்டுதா? ஒங்களால என் வீட்டுக்காரியோட ஆஸ்த்மா அதிகமாயிட்டு. பெண்ணு அரைப் பைத்தியமாயிட்டாள். இது போதாதுன்னு, ஒங்க பசங்க போலீஸை வச்சு மிரட்டி, என்னைக் இங்கே கொண்டு வந்திருக்காங்க. இவ்வளவுக்கும் நான் வம்புதும்புக்குப் போகதவன். கம்பெனியில் வேலை நிறுத்தம் நடக்கும்போதுகூட, நமக்கெதுக்கு பொல்லாப்புன்னு வேலைக்குப் போய் கருங்காலின்னுபேர் வாங்குனவன். எந்தத் தொழிற்சங்கத்துலயும் மெம்பராய் இல்லாதவ்ன. எனக்கு, என் குடும்பத்தைத் தவிர, வேறு உலகம் கிடையாது. தயவு செய்து எங்களை வாழ விடுங்க சாமி. ஒங்க பொண்ணாய் இருந்தால் இப்படி பேசுவிங்களா?"

எம்.டி.க்கு, கன்னையாவின் பேச்சைக் கேட்க, ஒரு பக்கம் எரிச்சல். இன்னொரு பக்கம் இதம். ஒரு தொழிலாளியை மிரட்டப்போய், அதனால் எல்லாத் தொழிலாளிகளும், ஒன்று திரண்டு எக்கச்சக்கமாய் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று முதலில் பயந்த அவருக்கு, கன்னையா சொன்ன சுய தகவல்கள் சுதந்திரத்தைக் கொடுத்தன. இவன், தனித்த தொழிலாளி. வீட்டையே உலகமாய் கொண்டவன். ரெண்டுல ஒன்றைப் பார்த்திடலாம்.

எம்.டி., டேப்பனை அர்த்தத்தோட பார்க்க, அவன் ரிக்கார்டரை, 'ஆப்' செய்தான். உடனே அவர் எழுந்து, கன்னையாவின் தோளில் கைபோட்டு, அவரை உட்கார வைத்தபடியே, ஆப்படிப்பது போல், பேசினார்.

"ஒட்காருங்க கன்னையா ஸார். நேரமாகுதுன்னு யோசிக்கத் தேவையில்லை. ஒங்களை வீட்ல கார்லயே விடச் சொல்றேன். இப்போ பிராக்டிக்கலாய் பேசுவோம் பெருமாள்சாமி, வழக்குப் போட்டிருக்கான். நாங்க எழுதுனது மாதிரி நடந்துதோ நடக்கலியோ,

எழுதிட்டோம். இப்போ இந்த இன்ஸ்டிடுசன் பேரைக் காப்பாற்றியாகணும். அதனால்தான் சொல்றேன்; ஒங்க ஜெனரல் மானேஜர் என்னோட பெஸ்ட் பிரண்ட். அவர்கிட்ட சொல்லி ஒங்களுக்கு அந்தக் கம்பெனில பொறுப்பான வேலையை வாங்கித் தாறேன். ஒங்க பொண்ணு அந்த உருப்படாத காலேஜ்ல வேலை பார்த்து கஷ்டப்பட்டது போதும். நானே, என் கம்பெனில நல்ல வேலையாய் கொடுக்கேன். ஒங்க மனைவியை நர்ஸிங்ஹோமுல சேர்க்கேன். ஒங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் தாரேன். நீங்க ஒரே ஒரு சின்ன உதவி செய்தால் போதும். ஒங்க மகள் இந்த போட்டோ ஸ்டேட்ல இருக்கது மாதிரி ஒரு லட்டரை எழுதித் தந்தால் போதும். கோர்ட்டுக்கு, அவள வரவேண்டாம். நாங்க ஒரு அப்பிடவிட் பைல் செய்தால் போதும். என்ன சொல்றீங்க? இதோ செக்புக். இதோ ஒங்க ஜி.எம். மோட பேசுறதுக்கு டெலிபோன். என் பிரச்சனை புரியுதா?"

"புரியுதுங்க. ஒங்களுக்கு இது பொழுதுபோக்குப் பிரச்சனை: எங்களுக்கு உயிரே போகிற பிரச்சனை. நான் வரட்டுமா?"

"இருப்பதாயிரம் ரூபாய் தாரேன் ஸார்."

"மன்னிச்சிருங்க."

"முப்பதாயிரம் ரூபாய் தாரேன் கன்னையா ஸார்."

"என்கிட்ட பணம் இருந்திருந்தால், நானும் உங்க பெண்டு பிள்ளைகளை ஒரு வேளை இதைவிட மோசமான பேரத்துக்குக் கேட்டாலும் கேட்டிருப்பேன். ஆண்டவன் புண்ணியத்துல, எங்கிட்ட பணம் இல்ல. இருந்தாலும், அப்படிக் கேட்கமாட்டேனே நினைக்கேன். ஏன்னா, நீங்க என் பெண்ண ஒங்க பெண்ணு மாதிரி நினைக்காட்டியும், நான் ஒங்க பொண்ணுகளையும், என் மகள்களா நினைக்கிற டைப்... 'எருதுக்கு நோவாம், காக்கைக்கு கொண்டாட்டமாம்' எங்களை ஏற்கெனவே கொத்திக் குதறிட்டிங்க. அக்கம் பக்கம் தலைகாட்ட முடியல. ஒங்களுக்கு கோடிப் புண்ணியம். எங்களை புண்ணோடயாவது விட்டுங்க அய்யா..."

எம்.டி., ஏதோ பேசப்போனபோது, அறைக் கதவு, திறந்து திறந்து மூடப்பட்டது. கன்னையாவைத் தவிர, எல்லோரும் கதவையே பார்த்தபோது செயலாளர் அறையில் இருந்த அதே அந்த சாதாரணப் பெண் உள்ளே பாய்ந்தாள். முப்பது வயதிருக்கலாம். கருவாடு உடம்பு; வட்டமுகம்; சுருட்டைத்தலை; வெள்ளைநிறம்; மார்பகம் தெரியாத நெஞ்சு. ஒரு பல் ஓட்டை.. அவளைப் பார்த்த ஜூனியர் நிருபன், கோபமாகக் கையாட்டினான். எம்.டி., அவனைக் கையமர்த்திவிட்டு, தாவிய கோபத்திற்கு தடைபோட்டபடி,

"வாங்கோம்மா, வாங்கோ" என்றார். அவள் பொம்மை மாதிரி வந்து நின்றாள். எம்.டி. அவளைச் சுட்டிக் காட்டியபடியே, கன்னையாவிடம் பேசினார்.

"இவங்களும்... ஒங்களை மாதிரி பாதிக்கப்பட்ட ஒரு அப்பாவி சார். போன வருஷம், தம்பியை காலேஜில சேர்க்கிறதுக்காக, இந்தம்மா காலேஜ்ல போய் பெருமாள் சாமியைப் பார்திருக்காங்க. அந்த அயோக்கியன், ஒங்க பொண்ணு கிட்ட வம்பு செய்தது மாதிரி, இந்த அம்மா கிட்டேயும் வாலாட்டி இருக்கிறான். இவங்க அலறியடிச்சு வெளில ஓடி வந்துட்டாங்க. தம்பியோட படிப்புப் போனாலும் பரவாயில்ல, தன்னோட மானம் போயிடப்படாதுன்னு பயந்துட்டாங்க... அப்புறம் அந்த காலேஜ் பக்கமே போகல. நம்ம பத்திரிகையில அந்த செய்தி வந்தபிறகு தான், இவங்க என்னைப் பார்த்து நடந்ததைச் சொன்னாங்க. இப்போ கோர்ட்டுக்கும் சாட்சியா வாராங்க. இந்தத் துணிச்சலை நான் பாராட்டுறேன். பெண்கள் பெட்டிப் பாம்பாய் அடங்கியிருந்த காலம் மாறிட்டுன்னு நிரூபிக்கப் போற இந்த அம்மாவுக்கு, தலை வணங்குகிறேன். இது தேவை ஸார். ஒரு அயோக்கியனையாவது இப்படி எக்ஸ்போஸ் செய்தால், எல்லா அயோக்கியங்களுக்கும் அது, பாடமாய் இருக்கும். இந்தத் துணிச்சல் ஒங்களுக்கு இல்லையே. தேங்க்யூ மேடம்! நீங்க, நாளைக்கு வந்து என்னைப் பாருங்க."

"ஒங்களை பார்க்க விடமாட்டேன் எங்கிறாங்க சார்."

"எவன் சொன்னான்? வேலையைக் காலி பண்ணிடுவேன் காலி... அப்போ போயிட்டு நாளைக்கு வாறிங்களா?"

அந்தப் பெண், மயங்கியபடியே நின்று, தயங்கிய படியே போய்விட்டாள். எம்.டி. கன்னையா மேல் கண் வைத்து, வாய் மேல் சொல் வைத்தார்.

"அப்புறம் ஒங்க முடிவுதான் என்ன?"

"உண்மையை ஒரு தடவை சொன்னால் போதும் சார்."

"ஒங்க பொண்ணு பெருமாள்சாமியோட கள்ள நட்பு வச்சிருந்தாள். ஒருநாள் சல்லாபம் நடந்ததை ஒருத்தன் பார்த்துட்டான். அதனால் பயந்து கம்ப்ளெயிண்ட் கொடுத்தாள். இப்போ பெருசாம்சாமி கிட்ட, அவள் எழுதுன காதல் கடிதங்கள் இருக்கதால பயப்படுறாள்'னு எங்க துப்பறியும் படை மூலம் ஒரு கட்டுரை எழுத எனக்கு அதிக நேரம் ஆகாது சார். என்னால ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். இப்போ என் பேச்சைக் கேட்காட்டால், அப்புறம் நீங்கதான் வருத்தப்படுவீங்க..."

கன்னையா, எம்.டி.யை எரித்துப் பார்த்தார். அவர் பற்கள் நறநறத்தன. எப்படியோ, கைகளை கட்டுப் படுத்தியபடி காறித் துப்பினார். மேஜைமேல் விழுந்த எச்சில், எம்.டி.மேலும், நிருபன்கள் மேலும் தெறித்தன. துப்பிய வாயைத் துடைக்காமலே, அவர் திரும்பினார். திரும்பிப் பாராமல் நடந்தார்.

எம்.டி. பேயறைந்தது போலானார். பார்த்தால் பசு மாதிரி தோன்றி, புலி மாதிரி பாய்ந்துவிட்டுப் போகும் அந்தத் தொழிலாளியையே, துவண்டு பார்த்தார். அவருக்கு, தனது இளைய சகாக்கள் மீது கோபம் கோபமாக வந்தது. எடிட்டரிடம் கேட்க வேண்டும் என்றுகூட தோன்றாமல், இவருக்கு தெரியாமலே பெருமாள்சாமியை பற்றி எழுதி கிழித்துவிட்டார்கள். இப்போது, இவர்தான் கிழிபடுகிறார். இந்த பயலுக என்னடான்னா ஜாலியா திரிகிறார்கள்.

எம்.டிக்கு, பெருமாள்சாமி மீதும், அதோ போகிற கன்னையா மீதும் கழிவிறக்கம் ஏற்பட்டது. ஆனாலும், மனத்தை தேற்றிக் கொண்டார். படுகளத்தில் ஒப்பாரி கூடாது... பிஸினசும், இன்வெஸ்டிக்கேடிவ் ஜர்னலிஸமும் ஒன்றாகும்போது, இதெல்லாம் சகஜம்.

எம்.டி., சகஜ நிலைக்கு வந்தார். ஆனாலும், நிருபர்கள், எம்.டி.யை பயந்து பார்த்தார்கள்...

## 17

இதுவரை இவ்வளவு வீறாப்பாகப் பேசியறியாத தன்னால், எப்படி, இவ்வாறாக பேச முடிந்தது என்பதை வியந்தபடியே, கன்னையா பஸ் நிலையத்தை நோக்கி நடந்தார். பின்னால் 'ஸார்...ஸார்' என்ற பெண்குரல் கேட்டது. நாம் எப்படி ஸாராக முடியும் என்று நினைத்தவர்போல், திரும்பிப் பாராமல் நடந்தார். ஆனால் குரல் கொடுத்தவள், அவர் முன்னால் வந்தாள். எம்.டி.கிட்டே வந்தாளே, அதே அவள், வந்ததும் வராததுமாய் படபடப்பாய் பேசினாள்.

"ஒங்ககிட்டே கொஞ்சம் பேசணுங்கோ. கோபால் பார்த்துடப் போறான். அடுத்த பஸ் ஸ்டாண்ட்ல போய் பேசலாம்."

கன்னையா, கத்தப்போனார். ஆனாலும், அவளைப் பார்க்க பாவமாகத் தோன்றியது. அவள் பின்னால் மௌனமாக நடந்தார். அவள் அவருடன் இணையாக நடந்தபோது, முன்னாலும், பின்னாலும் நகர்ந்து, தனியாய் நடந்தார். சாலையின் இடதுபக்கக் கிளைக்கு வந்து,

பஸ் நிலையம் வந்தார்கள். அவள், உடனே பரபரத்து, வந்த வழியைப் திரும்பத் திரும்பப் பார்த்தபடியே பேசினாள்.

"அய்யய்யோ! கோபால் வந்துடுவானோன்னு எனக்குப் பயமாய் இருக்குதுங்கே..."

"கோபால்னா யாரும்மா?"

"கோபால் ஒங்களுக்குத் தெரியாதாங்கோ? அவரு... நடிப்பு தவிர எல்லாம் தெரிஞ்ச நாடக நடிகருங்கோ. அவரு பையன்... கொஞ்ச நாளா வாடிக்கை பத்திரிகையில வேலை பார்க்காங்கோ..."

"நீ யாரும்மா?"

"நாளா... நான் நாடக நடிகைங்கோ. அப்போ கோடம்பாக்கத்துல குடியிருந்தேன். இந்த கோபால்... அதான் என்னை மாதிரி எக்ஸ்டரா நடிகைகள பலதுக்கும், 'பலா'வானதுக்கும் காண்டிராக்ட் எடுக்கிறவன். கொஞ்ச நாளைக்கும் முன்னாடி இந்த ஆபீசிஸ்க்கு என்ன கூட்டி வந்தான். இங்க இருக்கிறவங்க சொன்னபடி, நான் கோர்ட்ல சாட்சி சொல்லணுமுன்னா பெருமாள்சாமின்னு யாரோ ஒருத்தனாம். அவன், என்ன கைய பிடிச்சான், கால பிடிச்சான்னு கோர்ட்ல சாட்சி சொல்லமுன்னு கூட்டி வந்தான். இதனால, எனக்கு இனிமேல் கஷ்ட, நஷ்டம் வராததுன்னு வாக்களிச்சான். நீங்க பார்த்துட்டு வந்த முதலாளிகிட்டே கூட்டிப் போனான். அவரு, ஆயிரம் ரூபாய் கொடுத்திட்டு இப்படி இப்படி கோர்ட்ல பேசணுமுன்னார். அதாவது, இந்த பெருமாள்சாமி பிரின்ஸ்பாலா இருக்கிற கலேஜ்ல, நான் என் தம்பிக்கு அட்மிஷன் வாங்க போனதாயும், அப்போ அந்த ஆசாமி, எங்கிட்ட தவறா நடந்துகிட்டதாயும், கோர்ட்ல சொல்லணுமுன்னாரு. நானும் தலையாட்டுனேன்... வெளியில வந்தா இந்த கோபாலு, பாதி பணத்தை புடுங்கிட்டான். தட்டி கேட்டால் வேற எக்ஸ்ட்ராவ செட்அப் செய்வானாம். இத சொல்லதான் முதலாளிகிட்டே வந்தேன். முதலாளி தங்கமான மனுஷன் ஸார். அதனால, எதுன்னாலும் முதலாளி கிட்டேயே நேரடியாய் வச்சுக்குங்க. நீங்க எவ்வளவுங்கோ வாங்குனிங்கோ?"

கன்னையாவுக்கு, எல்லாம் புரிந்தது. அவளை, நேருக்கு நேராய் பார்த்தார். அவளோ, வெகுளித்தனமாய் ஒட்டைப்பல் தெரியும்படி அமங்கலமாய் சிரித்தாள். அனுதாபத்துடன் கேட்டார்:

"ஒன் தம்பியை காலேஜ்ல சேர்க்கப் போனீயா?"

"எனக்கு அம்மாவே யாருன்னு தெரியாது; அப்புறம் தம்பி எப்படி இருப்பான்?"

“பிறகு எதுக்கு பெருமாள்சாமி மேல அபாண்டமாய் பழிபோட சம்மதிச்சே?”

“அதெல்லாம் பார்த்தால் முடியுமா? வெட்டுறது வரைக்கும் கிணறுங்கோ. திரிக்கது வரைக்கும் கயிறுங்கோ.”

“இப்டி ஏமாத்தலாமா?”

“சொம்மா இருங்கங்கோ.... என்னை எத்தனை பயலுவ ஏமாத்தியிருக்கான்... நானும் பதிலுக்கு நூறு பேரையாவது ஏமாத்தாண்டாமா?”

பிழைப்பும், உழைப்பும் தவிர, வேறு சிந்தனை வயப்படாத கன்னையாவுக்குள்ளும், ஒரு சிந்தனை உதயமாகியது.

ஏசுநாதர், பிறருடைய பாவங்களுக்காக, சிலுவை சுமந்தாரோ இல்லையோ, இந்தக் காலத்துல, அயோக்கியங்களோட பாவத்துக்கும், அவங்களால பாவமாக்கப் பட்டவங்களோட பாவங்களுக்கும், அப்பாவி நல்லவங்கதான் சிலுவை சுமக்க வேண்டியதிருக்கு. என் சிலுவையே இவ்வளவு கனமென்றால், பெருமாள் சாமியின் சிலுவை எவ்வளவு கனமோ?

கன்னையாவிற்கு, அவளோடு மேற்கொண்டு பேசப் பிடிக்கவில்லை. நல்லவேளையாக, அப்போது தங்கச்சாலை பஸ் வந்தது. அவளிடம், முகம் கொடுத்துப் பேசாமலே, பஸ்ஸிற்குள் ஏறி, தன்னை அவளிடமிருந்து மறைத்துக் கொண்டார்.

வீட்டுக்குத் திரும்பிய கன்னையாவிற்காக, அவர் மனைவி விழித்தபடி இருந்தாள். கட்டிலில் குப்புறக் கிடந்த வசந்தி, பக்கவாட்டின் தலையைச் சாய்த்தபடி பார்த்தாள். ஆனால், அவர் எதுவும் பேசவில்லை. “சாப்பாடு போடு” என்றார். இறுதியில் அவர் மனைவிதான் “போன விஷயம் எப்படி” என்றாள். கன்னையா யோசிப்பதற்கு கண்களை மூடினார். அந்த ராத்திரியில், அதுவும், வேளை கெட்ட வேளையில், அவர்களை வேதனைப்படுத்த விரும்பவில்லை. சாவகாசமாய் பேசுவது போல் “பத்திரிகை முதலாளிகிட்டே நமக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லன்னுட்டேன். அந்த ஆள் நல்ல மனுஷன். சரின்னுட்டான்” என்றார். அவர் மனைவிக்கு நிம்மதி, மகளுக்கு துயரக் குறைவு. விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காக, வெளியே வட்டமடித்த பெண்களிடம், அந்த நல்ல சமாச்சாரத்தைச் சொல்வதற்காக, வசந்தியின் அம்மா ஓடினாள்.

# 18

கன்னையா, அந்த தொழிற்சாலையில் தன்னை மறந்து வேலையில் அதி மும்முரமாக ஈடுபட்டார். சுற்றிலும் ராட்சத யந்திரங்கள் அசுரத்தனமாகச் சுழல, தொழிலாளர்கள் அவலத்தனமாக சுழன்று கொண்டிருந்தார்கள். டிராப்ட்ஸ்மேன் போட்டிருந்த செவ்வக வடிவத்திற்கு ஏற்ப, கன்னையா, சூடுபட்ட ஒரு இரும்புத் துண்டை குடைந்து கொண்டிருந்தார். திடீரென்று ஓர்க்ஸ் மானேஜரே அங்கு வந்தார்.

"யோவ் கன்னையா?"

"சொல்லுங்க ஸார்."

"ஜி.எம். உடனே ஒன்னைப் பார்க்கச் சொன்னார்."

"எதுக்காம் ஸார்?"

"எனக்கு எப்படிய்யா தெரியும்? என்னாலயே அவரைப் பார்க்க முடியாது. ஒன்னைக் கூப்புடுறது எதுக்குன்னு புரியல... நம்ம செக்ஷன் விவகாரத்தைக் கேட்டால், நல்லா சொல்லு. என்னைப் பற்றித்தான் ஒனக்குத் தெரியுமே."

ஓர்க்ஸ் மானேஜர், கன்னையாவை, வி.ஐ.பி. மாதிரி பார்த்தார். கன்னையாவிற்கோ, ஒரே குழப்பம். எப்படியோ, ஸ்பேனர்களை பத்திரமாக வைத்துவிட்டு, உடம்பிலும், உடையிலும் படிந்த தூள்களை கைக்குட்டையால் ஒட்டடை அடிப்பதுபோல் சுத்தி செய்துவிட்டு, ஓடினார். அவர், கைகள் தொங்கின... கால்கள் நடுங்கின. ஜி.எம். முன்னால் எப்படித்தான் பேசப் போறேனோ?

கம்பெனி செகரட்டரி, கன்னையாவைப் பார்த்து புன்னகை செய்துவிட்டு, 'இண்டர்காமில்' பேசினார். பிறகு, ஜி.எம். இருந்த அறைக்கதவை, அவரே திறந்து விட்டார். கன்னையா, கசங்கிய ஆடைகளை இழுத்து விட்டு, சிதறிய முடியைக் கோதிவிட்டு, முகத்தைத் துடைத்தபடி, உள்ளே போனார். பெரிய அறை. எலெக்டிரானிக் சுவர்க் கடிகாரம். கலர் கலரான நான்கைந்து டெலிபோன்கள். இண்டர்காம். தேசிய உற்பத்திசபை கொடுத்த சான்றிதழ் கொண்ட கண்ணாடிப் பேழை ஒரு பக்கம். தொழிற்சாலையின் மாடலைக் கொண்ட ஒரு வரைபடம் இன்னொரு பக்கம். அவ்வளவு பெரிய அறையில், அவ்வளவு பெரிய நாற்காலியில் ஜி.எம். பௌவியமாக உட்கார்ந்திருந்தார். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது மாதிரியான கீச்சுக்குரல். மென்மையான தோற்றம்.

முன்னால் இருந்தவர்களை கவனித்த கன்னையா திடுக்கிட்டார். அவர்களோ, கன்னையா வருவது தெரியாமல் சிரிப்பும் கும்மாளமுமாய் பேசிக் கொண்டிருந்தார்கள். அவரைக் காரில் கடத்திச் சென்ற அதே அந்த வாடிக்கையன்கள். ஜி.எம். எனப்படும் ஜெனரல் மேனேஜர் அவர்களிடம் குழைவாகக் கேட்டார்:

"என் டாட்டரோட நடன அரங்கேற்றம் அடுத்த மாசம் நடக்கும். இன்னும் ஆடிட்டோரியம் பிக்ஸ பண்ணல."

வாடிக்கை சீனியர் விவரித்தான்:

"எந்த ஆடிட்டோரியம் வேணும்? சொல்லுங்க. சபாக்காரங்கல்லொம் எங்களுக்காகத் தவம் இருக்காங்க. நாங்க பிக்ஸ் பண்ணித் தாறோம். ஒங்க டாட்டர் அரங்கேற்றத்தை கவர் ஸ்டோரியாவே செய்திடுறோம். எத்தனையோ கழுதைங்களுக்கு, எவ்வளவோ பப்ளிசிட்டி கொடுத்திருக்கோம். ஒங்க டாட்டருக்கு கொடுக்க மாட்டோமா?"

"தேங்க் யூ... அப்புறம் எங்க எம்.டி.யை கொஞ்சம் ஹைலட் செய்யணும். இந்த பேக்டரிக்கே அவர்தான் மூவிங் ஸ்பிரிட்."

"எங்க பத்திரிகையோட பக்கங்கள், ஒங்களுக்காக கம்போஸ் ஆகாமலே இருக்கும். பட், இன்னும் ஒரு மாசம் ஆகட்டும். எங்க எம்.டி., இந்த பெருமாள்சாமி விவகாரத்தால டிஸ்டர்ப்டாய் இருக்கார்."

ஏமாற்றத்தாலும், அதே சமயம் எதிர்கால எதிர்பார்ப்பாலும் தலைநிமிர்ந்த ஜி.எம்., தன்னையே பார்த்தபடி, யாசகம் கேட்பதுபோல் கரங்களை குலுக்கியபடி நின்ற கன்னையாவைப் பார்த்துவிட்டு 'யெஸ்' என்று இழுத்தார்.

"அய்யா... என்னை பார்க்கச் சொன்னதாய்..."

"ஒங்க பேரு?"

"கன்னையாங்க. பேக்டரில ஸ்டிரைக் நடக்கிறப்போ, நான் வேலைக்கு வந்ததுக்காக அய்யா என் முதுகில தட்டிக்கூட கொடுத்திங்க."

"அது கிடக்கட்டும். ஒங்க டாட்டர் ஏதோ கம்ப்ளெயிண்ட் கொடுத்துதாம். அப்புறம் வாபஸ் வாங்கிட்டுதாம். என்ன இதெல்லாம்?"

"நேத்தே இவங்ககிட்டே..."

"எனக்கு ராமாயணம் கேட்க இப்போ நேரமில்ல. இவங்க சொல்றது மாதிரி ஒங்க டாட்டரை எழுதிக் கொடுக்கச் சொல்லுங்க. வேலை நிறுத்த போராட்டம் சமயத்துல ஒங்க முதுகிலதான் தட்டிக்

கொடுத்தேன். இனிமேல், ஒங்க தலையில கிரீடம் வைக்கிறது மாதிரி பொறுப்புக் கொடுப்பேன். நாளைக்கே எழுதிக் கொடுத்திடுங்க. ஒ... கே... நீங்க போகலாம்."

கன்னையா, தன்னிடம் மேற்கொண்டு பேசுவதற்கு எதுவும் இல்லை என்பதுபோல், வேடிக்கையர்களிடம் பேசிக்கொண்டிருந்த, ஜி.எம்.மின் பார்வையில் படுவதற்காக கன்னையா, யாசகாய் நின்றார். கால்மணி நேரம் கழித்து, பார்வையில் பட்ட ஜி.எம். "இன்னுமா நிற்கிறீங்க? நாளைக்கு எழுதிக் கொடுத்தாகணும். நான் செகரட்டரிகிட்டே கேட்பேன். நீங்க அவர்கிட்ட சொல்லிடணும். ஒ...கே...யூ....கேன்...கோ.... அப்புறம் என் ஒய்ப் ஒரு கார்டுனிஸ்ட்...?" என்று வாடிக்கையண்களோடு பேசிக் கொண்டே போனார்.

கன்னையா, வெறுமையோடு வெளியேறினார். ஜி.எம். எப்படி சொந்த விவகாரத்தில் சொந்தம் கொண்டாடலாம்? நான் சொல்வதைக் கேட்காமலே, ஆணையிட்டால் என்ன அர்த்தம்? அப்படியானால், இதே தொழிற்சாலையில், மிகப்பெரிய வேலை நிறுத்தம் நடந்தபோது என்வரையில் அது தவறானது என்று தோன்றியதால், என் சோதரர்களை மதிக்காமல் வேலைக்கு வந்தேனே... அந்த வேலை நிறுத்தத்தை சமாளித்ததாய் அடிக்கடி இந்த ஜி.எம். மார் தட்டுகிறார். யாரால்? யாரால்? என்னைப் போன்ற கருங்காலிகளால்தானே? அன்று முதுகில் தட்டியவர்... இன்று அதே முதுகில் குத்தப் பார்க்கிறாரே.

கன்னையா, வெற்று மனிதராய், வீண்மனிதராய் உழைப்பிடம் வந்தார். ஸ்பேனர்களை எடுக்கப் போனர். மனம் முரண்டு பிடித்தது. இந்த ஜி.எம். சொல்வதைக் கேட்காமல், இங்கே வேலை பார்க்க முடியுமா? தொழிலாளர் தலைவர்களையே, போலீஸாரை வைத்து அடி அடியென்று அடித்தவர். ஏதோ ஒரு சாக்கில் சஸ்பெண்ட் செய்யப்படலாம். இதோ... வேலை நிறுத்தத்தின்போது டிஸ்மிஸ் செய்யப்பட்டு, போலீஸாரால் அடிபட்டு, அப்புறம் தொழிலாளர் பலத்தால் வேலைக்குச் சேர்ந்த யூனியன் லீடர் கந்தன் போகிறார். இவரிடம் நடந்ததைச் சொல்லலாமா? இங்கே சுற்றி நிற்கிற தொழிலாளர் கூட்டத்திடம் அழுது புலம்பலாமா? எப்படி முடியும்? இவர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்து, வயிறு காய்ந்து கிடந்தபோது, அவர்களின் வயிற்றெரிச்சலை கொட்டியவன் நான். அவர்கள் போலீஸாரால் அடிபடும்போது போலீஸ் பாதுகாப்பில் வேலைக்கு வந்தவன் நான். இப்போ எனக்கு யார் பாதுகாப்பு? எது பாதுகாப்பு?

கன்னையாவிற்கு வேலை ஓடவில்லை. எப்படியோ சமாளித்துவிட்டு, ஷிப்டு முடிந்ததும் தொழிற்சாலையை விட்டுப் புறப்பட்டார். கேட் காவலாளி வழக்கம்போல், அவர் பையையும், மெய்யையும் சோதனையிட்டார். 'உடம்புக்கு மேல தேடினால்...

ஒண்ணும் கிடைக்காது. இந்த பேக்டரில கிடைச்சதை, உடம்புக்குள்ளே எடுத்துட்டுப் போறேன். 'நெஞ்சிலே சோதனைப் போட்டால் எவ்வளவோ கிடைக்கும்பா...' என்று முணுமுணுத்தார்.

கன்னையா, வீட்டுக்குள் நுழையும் முன்பே, அவர் மனைவி அவர் கையைப் பிடித்தபடி விம்மினாள். கதவின்மேல் தலையை சாய்த்தபடி, வசந்தி கண்கலங்க நின்றாள். கன்னையா, மனைவியை வினாக்குறியோடு பார்த்தபோது அந்த அம்மா, அழுதழுது சொன்னாள்.

"அப்பாவு, இவளுக்கு, மூணுநாள் டயம் கொடுத்திருக்கிறாராம். சொன்னபடி எழுதிக் கொடுக்காட்டால், இவளோட கற்புக்கு அவர் பொறுப்பில்லையாம். இது பேதாதுன்னு, காலையிலேயே, ஒரு போலீஸ்காரன் வந்து மிரட்டுறான். கன்னையா, இன்னைக்கு வந்து, இன்ஸ்பெக்டரைப் பார்க்காவிட்டால், அப்புறம் எப்பவுமே பார்க்க வேண்டியது இருக்காதுன்னு திட்டிட்டுப் போறான். என் தலையே வெடிச்சிடும்போல இருக்கு. ஒரே சமயத்தில் எத்தனை பேரோட பகை? எனக்கென்னமோ பேசாமல், அந்த அப்பாவுப் பாவி சொல்றது மாதிரி இவளை எழுதிக் கொடுத்துடச் சொல்லிடலாமுன்னு தோணுது. வேற வழி இல்ல."

கோவிந்தம்மாள், நாதியற்றவள்போல் புலம்பினாள்.

## 19

கோர்ட்டிற்குப் போக நேரமாகிவிட்டது.

பேராசிரியர். பெருமாள்சாமி, பின்னறையில் குறுக்காகக் கட்டப்பட்டிருந்த கயிற்றுக் கொடியை கீழ்நோக்கி இழுத்த பேண்டை, மேல்நோக்கி இழுத்தார். இரட்டைக் குழல் துப்பாக்கி போல், இருந்த அந்த உடைக்குள், கால்களை விட்டு, அதை இடுப்பில் பூட்டினார். சிறிது நேரம் எதையோ யோசிப்பவர்போல், பரபரத்துப் பார்த்தார். பின்னர் கட்டில் விளிம்பில் கிடந்த சட்டையை எடுப்பதற்காக, வேகவேகமாய் நடந்தார். நடந்தவரின் கால்கள், பின்னின. பேராசிரியர், இடுப்புக்குக் கீழே போய், வயிற்றை விட்டு நழுவப்போன பேண்டின் மேல் விளிம்பை ஒரு கையால் தூக்கிப் பிடித்தார். அந்த ஊதா நிற பேண்டை ஆச்சரியமாகப் பார்த்தார். முன்பு இதே இந்த ஆடையை, அவர் போடும்போது, அது முட்டிகளில் சிக்கி தொடைகளை உராய்ந்து வயிற்றுக்கு வரும்போது, பிரசவ வலிபோல், வாதை கொடுக்கும். அப்படிப்பட்ட துணி, இப்போ எப்படிப் போய்விட்டது! 'பெல்ட்'

போடணும் போலிருக்கே... பேராசிரியர், மகளுக்கு குரல் கொடுத்தார். தப்ப முடியாத ஆபத்தில் இருப்பது போல் தவிப்போடு கத்தினார்.

"மேகலா.... மேகலா.... இங்கே வாயேன்..."

'கேஸ்' சிலிண்டர் தீர்ந்து விட்டதாலும், அதை உடனடியாக மாற்றிக் கொள்வதற்கு வைட்டமின்-ப, இல்லாததாலும், ஸ்டவ் அடுப்போடா அல்லது விறகு அடுப்போடோ, போரடிக் கொண்டிருந்த மேகலா, நெற்றியில் மேகநோய்போல் படிந்த கரியை கையால் துடைத்தபடியே, என்னமோ, ஏதோவென்று, பதைபதைத்து ஓடோடி வந்தாள். அப்பாவைப் பார்த்தவுடன் அப்படி ஒன்றும் ஆபத்தில்லை என்பதைப் புரிந்து கொண்டு, தந்தையை நோக்கி, முகத்தை கேள்விக் குறியாய் வைத்துக் கொண்டாள். பேராசிரியர், பேய்க் கத்தலாய் கூச்சல் போட்டார்.

"இது மட்டத்துலயும் மகா மட்டமான பேண்டாய் போயிட்டும்மா. டைட்டாய் இருந்த பேண்ட், இவ்வளவு நாளைக்குள்ள எப்படி லூஸாப் போயிட்டுப் பாரு! இப்போ, எதுலயுமே குவாலிட்டி சரியாயில்ல. பெல்டை எடுத்துட்டு வா. எங்கே கிடக்குதோ... நேரம் வேற ஆகுது..."

"அய்யோ... அப்பா... சரியான புரபஸர்தான் நீங்க! பேன்ட் என்னவோ முன்னால இருந்தது மாதிரிதான் இருக்கு. நீங்கதான் மெலிஞ்சு, பாதி ஆளாய் போயிட்டிங்க. கோர்ட்லயும் இப்படி உல்டாவாய் உளறித் தொலைக்காதிங்க...."

"அடடே... அப்படியா? இளைக்கது தெரியாமலே இளைச்சிட்டேன், பாரு!"

மேகலா, தந்தையை, உதடுகள் துடிக்கப் பார்த்தாள். கண் நோகப் பார்த்து, கலங்கினாள். நெடிய உயரத்தையே குள்ளமாகத் தோன்றச் செய்யும் வண்ணம், உடல் பெருத்து இருந்தவர், சிங்கத்தின் பிடரிபோல் கழுத்து நரம்புகள், இதோ இப்படித் தெரியாமல், சதைக்கட்டியாய் இருந்தவர், யானையின் பாதங்கள்போல், அழுத்தமாய், அகலமாய் நடப்பவர். இப்போ எப்டி ஆயிட்டார்? துருத்திக் கொண்டிருந்த கண்கள் தொலைதூரத்திற்கு உள்ளோடி விட்டன. நோயில் படுப்பவர்கள் கூட இப்படி ஆகமாட்டார்கள். தெரியாத்தனமாய் ஒப்பிடுகிறேன். ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு சாப்பிடுறதுக்கு ஏதாவது கொடுப்பார்கள். ஆனால், இவர் காலையில் சாப்பிடுவதோடு சரி. ராத்திரிதான் வருவார். சாப்பாடு ரெடியாய் இருந்தால், வேண்டாம் என்பார். அவர் வேண்டும் என்று கேட்கும்போது சாப்பாடு ரெடியாகாது.

மேகலா, கண்ணோரம் படிந்த கரித்தூளைத் துடைப்பதுபோல், கண்ணீரை, தந்தைக்குத் தெரியாமலே துடைத்தபடி, அவரையே

சோகமாய்ப் பார்த்தாள். அப்போதுதான், அவரை, ஆய்வாகப் பார்ப்பதுபோல் பார்த்தாள். பேராசிரியர், மகளின் பார்வைக்கு, மறுபார்வை கொடுக்க முடியாமல், மழுப்பலாகச் சிரித்தார். திடீரென்று அவருக்குள் ஒரு சிந்தனை. ஆமாம், நானே இப்படி ஆயிட்டால் இவள் எப்படி ஆகி இருக்கணும்?

ஏதோ 'பி.எச.டி.'க்கு ஆராய்ச்சி செய்பவர் போல், மேகலாவை முன்னும் பின்னுமாய், ஏற்ற இறக்கமாய் பார்த்தார். அப்போதுதான் அவருக்கே உறைத்தது.

இவள் முன்பு சிரித்தால் கன்னத்தில் குழி விழுமே? இப்போ, கன்னமே குழியாயிட்டே! தலைக்குக் கீழே, நெற்றிப் பள்ளத்தில், மூக்குத் தண்டின் இருமுனைகளிலும், இரண்டு தீபங்கள் ஏற்றி வைத்ததுபோல் இருக்குமே? அது, இப்போது 'கேஸ்' தீர்ந்துபோன, சிலிண்டர் அடுப்பின் பள்ளம்போல், பாழாய் கிடக்குதே! வட்ட முகம், இப்போ நீண்ட முகமாய் தெரியுதே! ஆனால் இவள் முடி மட்டும் இளைக்கல... அந்த வரைக்கும்... அந்த வரைக்கு மட்டும் திருப்தி...

பேராசிரியர், மகளை நேரடியாகப் பார்க்க முடியாமல், நிலம் நோக்கி தாழ்ந்தார். வெறுமையாகக் கூடச் சிரித்துக் கொண்டார். பிறகு, தரையிடம் பேசுவது போல் "கோர்ட்டுக்கு நேரமாயிட்டு பெல்ட் வேணும்" என்றார். மேகலா போவது வரைக்கும், 'தரைமட்டமாய்' பார்த்த பேராசிரியர், அவள் போயிருப்பாள் என்ற ஒரு நிமிட இடைவேளை அனுமானத்துடன், அவள் நின்ற இடத்தை நோக்கி, ஓரக்கண் போட்டார். பிறகு குறுக்கும் நெடுக்குமாய் நடந்தார்.

வாடிக்கை பத்திரிகைக்காரன் மேல், அவதூறு வழக்குப்போட்டு, ஆறுமாதமாகுது. இவ்வளவு நாளும் வாய்தாதான். காலையிலேயே பாரிமுனைக்குப் போய் ஜூனியர் வக்கிலை, ஆட்டோவில் தூக்கிப் போட்டுக் கொண்டு, எழும்பூர் மெட்ரோபாலிட்டன் கோர்ட்டுக்குப் போகணும். மணிக்கணக்கில், வெளியே காத்து நிற்கணும். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகரக் கூடாதுன்னு வக்கீல் பையன் ஆணை. அப்படி நகர்ந்துட்டால், ஆள்வரவில்ல என்று அனுமானித்து, எக்ஸ்பார்டேதீர்ப்பு வழங்கிடுவாங்களாம். வழக்கை, டிஸ்மிஸ் செய்திடுவாங்களாம். நான் கூடத்தான் வகுப்புல பாடம் நடத்துனேன், பசங்க வரலன்னு எப்போதாவது டிஸ்மிஸ் செய்திருக்கேனா? ஒ... அது காலேஜ்; நான் ஆசிரியர். இது கோர்ட். கண்டிப்பை, அட்டென்டென்ஸில் மட்டுமே காட்டவேண்டிய கோர்ட். தெரியாத்தனமாய் வழக்குப் போட்டுத் தொலைச்சாச்சு. இன்னும் என்னெல்லாம் தொலைக்க வேண்டியதிருக்கோ? வீட்டில் இருக்க வேண்டியவையெல்லாம், அடகுக் கடையில இருக்கு. அந்த காசுல

ஆட்டோ ரிக்ஷா பிடிச்சு, வக்கீலோட, தலைவிரி கோலமாய் கோர்ட்டுக்குப் போகணும். எதுக்கு? அடுத்த வாய்தா, எப்போன்னு தெரிஞ்சுக்கதுக்கு. ஆறுமாதமாய் வாய்தா. அதுக்கு வாயிருந்தால், இந்நேரம் அழுதிருக்கும். சீ... எவன்... என்னை... கோர்ட்டுக்குப் போகச் சொன்னது? முத்தையா? மேகலாவா? அந்த செனேட் மெம்பர் சொக்கா... நாதனா... எவனோ சொன்னான். நான் இளிச்சவாயன். கேட்டுட்டேன். சொல்றவன் சொன்னால், கேட்கிறவனுக்கு புத்தி எங்கே போயிட்டு?

பேராசிரியர், பின்னறையில் இருந்து முன்னறைக்கு வந்து விட்டார். பேண்டைப் பிடித்த பிடியை விடாமலே அங்கேயும் இங்கேயுமாய் குறுக்காய், நெடுக்காய் நடந்தார். திடீரென்று தலையை ஆட்டிக் கொண்டார். வக்கீல் சொன்னது நினைவுக்கு வந்தது. இன்றைக்கு, அநேகமாய், விசாரணை துவங்கிடுமாம். 'அக்கூஸ்டை' கூண்டில் ஏற்றி, 'நீங்கள் குற்றவாளியா' என்று மாஜிஸ்டிரேட் கேட்பாராம். எடிட்டர், இலலன்னுதான் சொல்வாராம். ஆமாம், ரெண்டு பெரிய கிரிமினல் வக்கில்களை வச்சிருக்கானே! அவங்க என்னைப் பார்க்கிற பார்வையைப் பார்த்தால், நான் ஏதோ தப்பு செய்தாலும் செய்திருப்பேன்னு எனக்கே பயமெடுக்கே. வக்கீல்கூட 'ஒங்களுக்கு எதிராய் நிறைய எவிடென்ஸ் இருக்குதாமேன்'னு என்னை நோட்டம் போடுறதுமாதிரி பார்த்துக் கேட்டாரே. என்ன எவிடென்ஸ், எனக்குத் தெரியாமல்? என்னையா இழவு எவிடென்ஸ்? ஒருவேளை, ஒரு இங்கிலிஷ் படத்துல காட்டுனது மாதிரி, தூக்கத்துல ஏதும் தப்பு செய்திருப்பேனா? இன்னைக்கு விசாரணை துவங்கிவிட்டால், இன்னும் ஆறு மாதத்திற்குள் எல்லாம் முடிஞ்சுடுமாம். மானமுள்ளவன் கோர்ட்டுக்குப் போவானாய்யா? காலேஜ்ல இருந்து, சப்ஸிஸ்டென்ஸ் அலவன்ஸ் இந்த மாதத்துக்கு இன்னும் வர்ல. சஸ்பெண்டாகி இவ்வளவு நாளாகியும், இன்னும் குற்றச்சாட்டுப் பட்டியலையே கொடுக்கல. அப்படி இருக்கும்போது கோர்ட் இவ்வளவு காலம் எடுக்கிறதுல என்ன தப்பு? என்ன... இந்த மேகலா.... ஒரு பெல்டை எடுக்க இவ்வளவு நேரமா.

"மேகலா.... மேகலா..."

மேகலா வந்தாள். தோளில் ஒரு துணியைத் தொங்கப் போட்டபடியே வந்தாள்.

"பெல்ட் எங்கம்மா?"

"அதுவும் நீதி மாதிரி எங்கேயோ மறைஞ்சுட்டு... அதைத் தேடினால், ஒங்களுக்கு சோறுபோட முடியாது."

"சோறு இல்லாமல், கோர்ட்டுக்குப் போகலாம். பெல்ட் இல்லால் எப்படிம்மா போறது?"

“என் தோள்ல கிடக்குற பேன்ட் ஏன் ஒங்க கண்ணுக்கு தெரியல? இந்தாங்க, இதைப் போட்டுக்கங்கோ. இந்த புளூ கலர், ஒங்களுக்கு மேட்சாய் இருக்கும். அதைவிட நல்ல பேன்ட் இது. காலேஜ் புரபஸராய் இருந்தும், என்னோட காலேஜ் அட்மிஷனுக்காக அலையாய் அலைஞ்சிங்க பாருங்க, அப்போ தைச்சது. சரியாவும் இருக்கும், அழகாயும் இருக்கும்.”

“நீ ஒருத்தி... நான்... என்ன... யுனிவர்ஸிட்டி செமினார்ல பேசவா போறேன்? மானத்தைக் காப்பத்துறதுக்கு கோர்ட்டுக்குப் போனேன். போனபிறகுதான், அது இருக்கிறவன், அங்கே போகப்படாதுன்னு புத்தி வந்தது. உள்ளம் உடைஞ்சு கிடக்கும்போது, உடம்புல எந்தத் துணி இருந்தால் என்ன? எது போட்டாலும் அங்கே துணியே இல்லாதவன் மாதிரிதான் நான் துடிக்கேன்...”

“எப்பா... எனக்குக் கெட்ட கோபம் வரும்....”

“கோபமே கெட்டது.... அதுல வேற கெட்ட கோபமா? எல்லாருமாய் சேர்ந்து, என்னை அம்போன்னு கோர்ட்ல தள்ளிட்டிங்க. இதனால... சேர்த்து வச்ச பணமும் போய், கடன் கடனாய் சேர்த்து வச்சாச்சு. பேசாமல்... அந்த அப்பாவுப் பயல்... சஸ்பென்ட் செய்தவுடனேயே, வேலையை ராஜினாமா செய்துட்டு டியூட்டோரியல் காலேஜ்லயாவது சேர்ந்திருக்கலாம். என்னால் பொறுப்புள்ள தந்தையாயும் நடக்கதுக்கு முடியல; ஆசிரியராயும் நடக்கதுக்கு முடியல.....”

“பேசுனால்... கதை கதையாய்ப் பேசுவிங்க...”

பேராசிரியருக்கு, விவகாரம் நாயர் பிடித்த புலிவால்போல் தோன்றியது. அதை வெளிப்படுத்திப் பேசினார்.

கோர்ட்டுக்குப் போகாமல் இருந்து, அப்படியாவது வழக்கு டிஸ்மிஸ் ஆகட்டுமுன்னு நினைக்கேன். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், எதிர்பர்ட்டி என்மேல, மெலிஷியஸ் பிராஸிகியூஷன் என்கிற குற்றச்சாட்டுலு, வழக்குப் போடலாமாம். விடவும் முடியல, தொடவும் முடியல. பத்திரிகைக்காரன் கோர்ட்டுக்கு கார்ல வாறான். அதுவும் ஒவ்வொரு வாய்தாவுக்கும், ஒவ்வொரு விதமான கார்ல வாரான். நான்... என்னடான்னா, பஸ்ல பாரிமுனைக்குப் போய், அப்புறம் ஆட்டோவுல வக்கீலை ஏத்திட்டுப் போறேன். ஆட்டோ மீட்டர் ஏறும்போது, என் இருதயமும் தொண்டைக்குள் ஏறுறது மாதிரி தெரியுது. நான் இன்னைக்கு, கோர்ட்டுக்குப் போகலம்மா. வேட்டியை எடுத்துட்டுவா. பேண்டை மாற்றிட்டு, கட்டிலுல ஒரேயடியாய் படுக்கப் போறேன். நான்சென்ஸ்! இடியாட்டிக்! அட்ரோஷியஸ். ஹைக்கோர்ட் அனுபவமே எனக்குப் புத்தி

கொடுத்திருக்கணும். என் சஸ்பென்ஷனுக்குக் கோர்ட் கொடுத்த ஸ்டேயை இழுத்தடிச்சு, கடைசில, டிரஸ்ட் போர்ட் அந்த ஸ்டேய்க்கே ஹைகோர்ட் பெஞ்சில ஸ்டேய் வாங்கிட்டாங்க. இந்த வழக்குல நான் ஜெயிச்சாலும், வாடிக்கைக்காரன், செஷன்போர்ட் ஹைகோர்ட்னு மேல மேல போவான். நான் கீழே கீழே போவேன். பேசாமல் இப்பவே குப்புறப் படுக்கிறது பெட்டர்."

மேகலா, தவிப்பாய் தவித்து, கொதிப்பாய் கொதித்து தப்பிக்க வழிதெரியாது தடுமாறி தந்தையை, அவரைப் போலவே பார்த்தாள். பார்க்கப் பார்க்க கண்கள் எரிந்தன. தந்தையின் பிரச்சனையை, ஒரு சமூக விகாரமாகப் பார்த்தாள். அந்த விகாரத்தின் கோரப் பற்களை எண்ணிப் பார்ப்பவள்போல், அசைவற்று நின்றாள். பிறகு, நையாண்டியால் பேசுவதுபோல் பதிலளித்தாள்.

'புலி வாலைப் பிடிச்ச நாயரே! அந்த புலிமேல ஏறினால்தான், அதோட வாய்மேல நாம் விழாம இருக்கலாம். புரியுதா...'

பேராசிரியர், மேகலாவை புரிவதுபோல்ப் பார்த்தபடியே விடைபெறப் போனார். இந்தக் காலத்து இளைய தலைமுறையில் ஒரு பகுதி. காலத்தை மீறி, அதற்கு அப்பாலும் சிந்திக்கத்தான் செய்கிறது. மகளின் உபதேசம், அவருக்கு நாடி நரம்பெங்கும், 'ஷாக்' அடிக்காத மின்சாரத்தைப் பாய்ச்சியது.

'நீ காலேஜிக்கு போகலியா'

'இப்போ அதுதான் குறைச்சல்'. போம்மா... நாளைக்கு போறேன்...'

"வாறேம்மா".

"சாப்பாடு?"

"வேண்டாம், இப்பவே மணி பத்து. ஒரு மணிக்குத்தான் கூப்பிடுவாங்க. ஆனாலும், கோர்ட்ல பதினொரு மணிக்கு, கரெக்டாய் இருக்கணும். கவலைப்படாதே காம்பவுண்டுக்குள்ளே சுக்குக் காபியும், மசால் வடையும் போடுறாங்க?"

"பணம் எவ்வளவு தேறுது?"

"இருபது ரூபாய்க்கு, ஒரு ரூபாய் பதினெட்டுப் பைசா குறைச்சல். போன வாய்தா உன்னோட மோதிர உபயம். இந்த வாய்தாவுக்கு, பீரோவைக் குடைஞ்சேன். டப்பாக்களை உருட்டினேன். ஒனக்கு ஏதும் செலவுக்கு வேணமா?"

"உம்...உம்.. வேண்டாம். ஒங்களுக்கே பாவம் போதாது. எதுக்கும் மூன்று ரூபாய் மிச்சம் பிடிக்க முடியுமான்னு பாருங்க. அரைக்கிலோ

அரிசிக்கு இரண்டு ரூபாய். வெஜிடேபிள் ஒரு ரூபாய். நீங்க இப்போ சாப்பிடாமல் போறதால இந்தக் கணக்கு."

பேராசிரியர், தப்புக் கணக்குப் போட்டவர் போல் மகளைப் பார்த்தார். கணக்கின் விடையைச் சரியாக கண்டுபிடிக்க முடிந்தாலும், அதன் 'வகை தொகை'களை எழுதத் தெரியாத கிராமத்து மாணவன்போல் விழித்தார். பிறகு, மேகலாவின் முதுகைச் செல்லமாகத் தட்டி கொடுத்துவிட்டு, வாசலுக்குப் போய் கதவைத் திறந்தவர், வாசலின் இன்னொரு கதவுபோல் அங்கேயே நின்றார். அவர் நிற்பதைப் பார்த்துவிட்டு மேகலாவும், தந்தையின் முதுகிற்குப் பின்னால் உடல் மறைத்து, அவர் தோளுக்கு மேலே தலையை நீட்டி, எட்டிப் பார்த்தாள்.

அசோக சிங்கங்கள் பொறிக்கப்பட்ட 'முத்திரை'க் காரிலிருந்து, எட்டுப்பேர் இறங்கினார்கள். அறுவர் ஆண்கள்; இருவர் பெண்கள். நான்கு ஆண்கள் டிப்டாப் டிரஸ்காரர்கள். இரண்டு பேரில் ஒருவர் வெள்ளை ஜிப்பா. இன்னொருவர் வேட்டி கட்டிய சிலாக்கர். பெண்களில் ஒருத்தி சிவப்புச் சேலையில், மஞ்சள் நிறம். கையில் குறிப்பெடுக்கும் நோட்டையும், அதன் இடையில் செருகப்பட்ட பென்சிலோடும் காணப்பட்டாள். இன்னொருத்தியின் உடலும் உயரம், பார்வையும் உயரம். 'பாரின்' புடவை. உள்நாட்டு ஜாக்கெட்; இரண்டு பக்கமும் சேராத கொண்டைக்காரி.

பேராசிரியரை வழிமறிப்பதுபோல், எட்டுப் பேரும், வாசலுக்கு வெளியே நின்றார்கள். ஒருவேளை, நன்றி மறக்காமல், 'ஏணியை' பார்வையிட வந்த, ஏற்றமிகு பழைய மாணவர்களா என்ற சந்தேகத்தோடு, பெருமாள்சாமி, அவர்களை 'ஆசிரியத்தனமாய்' பார்த்தார். தலைவர்போல் தோன்றிய சந்தனச்சபாரி, பேராசிரியரை, அதிகாரத்தனமாய் பார்த்த சகாக்களை, படைக்கலன்களை பார்வையிடும் ராணுவ தளபதிபோல பார்த்துவிட்டு, பேராசிரியருக்கு, கடுகடுப்பான புன்முறுவலை காணிக்கையாக்கி விட்டு, வாசலக்குள் நுழையாமலே பேசினார்.

"விய் ஆர் புறம் இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட். என் பேர் சிதம்பரம். அஸிஸ்டெண்ட் டைரக்டர். இவர்கள் மூன்று பேரும் இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர்கள். இந்தம்மாவும், இன்ஸ்பெக்டர். அந்தம்மா ஸ்டெனோ. இவங்க ரெண்டுபேரும் சாட்சிகள்."

"நீங்க யாரைப் பார்க்க வந்தீங்க? இது இரண்டாவது அவென்யூவில் நாலாவது கிராஸ் தெரு..."

"நீங்கதானே, பேராசிரியர் பெருமாள்சாமி?"

"ஆமாம், நானே தான்! என்ன வேணும்? கொஞ்சம் அவசரமாய் வெளியே..."

"ஸாரி... புரபஸர்! ஒங்க வீட்ல கணக்கில் வராத கள்ளப் பணமும், தங்க நகைகளும், முதலீட்டுப் பத்திரங்களும் இருப்பதாய் எங்களுக்கு நம்பகமான கம்ப்ளெயின்ட் வந்திருக்கு."

"என் வீட்லயா? என் ஹவுஸ்லயா? அடடே! எனக்குத் தெரியாமலா?"

"லிஸ்ஸன் பிளீஸ் புரபஸர்! பொதுவாய் இந்த மாதிரி பணமோ, நகையோ, ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேலே போனால்தான் நாங்க வருவோம். நீங்களே இப்ப புரிஞ்சுக்கலாம். இந்தாங்க. இதுதான் சர்ச் வாராண்ட். ஒங்க வீட்டை சோதனை போட வந்திருக்கோம்."

பேராசிரியர், அதை வாங்கிப் பார்த்தார். வெள்ளை வெள்ளையாய் பிரசுரிக்கப்பட்ட 'காலம்'களுக்கு இடையேயும் எதிரேயும் பச்சை பச்சையாய், மையில் எழுதப்பட்ட வாசகங்கள். அசோக முத்திரை காகிதம்...

மேகலா தந்தையிடமிருந்து அதனைக் கைப்பற்றப் போனாள். அவரோ, வேறுபக்கமாக நடந்து வேகவேகமாய் படித்தார். அவர் வீட்டில் கணக்கில் வராத கள்ளப் பணமும், நகைகளும், தெரிவிக்கப்படாத முதலீட்டுப் பத்திரங்களும் இருப்பதாய் நம்பத் தகுந்த வட்டாரங்கள் எழுத்து மூலமாய் தெரிவிதத புகார்களையடுத்து, அவரது வீட்டைசோதனையிட, தமக்கு அரசியல் சாஸனம் வழங்கிய அதிகாரத்தின்படி, உத்தரவிடப்பட்டிருப்பதாக, வருமானவரி ஆணையாளர் எழுதி கையெழுத்திட்டிருந்தார்..

பேராசிரியருக்கு, ஒன்றும் ஓடவில்லை. அப்படிச் சொல்வதுகூட தவறு. அவரின் அங்கங்கள், ஒவ்வொன்றாய் ஓடப் பார்த்தன. மேகலாவும், நெருங்கி வந்து தந்தை நீட்டிய வாரண்டைப் படித்தாள். பிறகு தனது உடலாட்டத்தை மறைப்பதற்காக, தந்தைமேல் சாய்ந்து கொண்டாள். தந்தையின் மேனியும், மகளின் மேனியும் ஒன்றுடன் ஒன்றாய் ஆடியதால், பார்வைக்கு அவர்கள் அசைவற்றவர்களாய்த் தோன்றினார்கள்.

"என்ன ஸார் அக்கிரமம்? ஒரு டெம்பரரி பிரின்ஸ்பால் வீட்ல எப்படி சார் லட்சம் லட்சமாய் இருக்க முடியும்? ஒங்களுக்குத் தோண வேண்டாம்?"

உதவி இயக்குநர் வினயமாய் புன்னகைத்து, விஷமமாய் சொன்னார்:

"அட்மிஷனுக்கு மூவாயிரம் ரூபாய் விதம் வாங்கியிருந்தால்...? கல்லூரிப் பொருட்கள், லைப்ரரி புத்தகங்கள், பரீட்சை பேப்பர்களத் திருத்துறதுல அட்ஜெஸ்ட்மென்ட்கள்... இதையெல்லாம் கணக்குப் போட்டால் தேறும். அதோட...."

"இதுவே போதும் சார். இன்னும் விவரம் சொன்னால், என்னால பதில் சொல்ல முடியாது. பிணம் பேசாது பாருங்கோ..."

இன்ஸ்பெக்டர் பெண், அவர்களை ஆற்றுப்படுத்தினாள்.

"டோண்ட் ஒர்ரி ஸார்... நீங்க எப்படிப் பணம் சம்பாதிச்சாலும், எங்களுக்கு அக்கறையில்லை. நாங்க ஊழல் ஸ்கோட் இல்ல. வருமானவரி கட்டாமல், எவ்வளவு பணம் வச்சிருக்கிங்கன்னு மட்டுமே கண்டுபிடிக்கப் போறோம்."

"என்னம்மா நீ? நான் ஏதோ தப்புத் தண்டாவாய் பணம் சேர்த்துவிட்டு.... இப்போ ஒர்ரி பண்றது மாதிரி பேசுறீங்க? நீங்க.... பணக்கணக்கோடதான் பார்க்கிறீங்க. ஒரு பிரஜையை-ஒரு பேராசிரியரை-அவமானப்படுத்துறோமேன்னு நினைச்சுப் பார்க்கிற மனசு வரமாட்டேங்கே."

இன்ஸ்பெக்டர் பெண், பதிலளிக்க முடியாமல் திண்டாடினாள். அந்தத் திண்டாட்டத்தை கொண்டாட்டமாக எடுத்துக்கொண்ட ஸ்டெனோ பெண், இன்னொரு ஆண் இன்ஸ்பெக்டரிடம் காதில் கிசுகிசுத்தாள். 'மக்கு... மக்கு' என்று மட்டும் அவர் காதில் வாயால் உரசினாள். அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் இன்கம்டாக்ஸ், இன்னும் வினயத்திற்கு விடையளிக்காமலே பேசினார்; கேட்டார்.

"டேக் இட் ஈஸி புரபஸர்... மேய்.. வி.... கம் இன்."

அப்போதுதான், அவர்கள் படிதாண்டாமல் நிற்பதைக் கவனித்த பேராசிரியர், "என்ன ஸார் கேள்வி இது? நான் வரக்கூடாதுன்னாலும் நீங்க வராமல் இருப்பிங்களா?" என்றார். உதவி பதிலளித்தது உடனடியாக.

"அப்படி ஒரு நிலைமை வந்தால், போலீஸ் நிலையம் வழியாய் வருவோம்."

"இன்னும் அங்க மட்டுந்தான் போகலே.... சரி... உள்ளே வாங்க..."

உள்ளே வந்தார்கள். வீட்டை, ஒட்டு மொத்தமாய் நோட்டம் விட்டபடியே நின்றார்கள். வீட்டு வசதி வாரிய வீடு. லோ இன்கம் ஆட்களுக்காகக் கட்டப்பட்ட வீடு. ஒரு படுக்கையறை; ஒரு சின்ன பின்னறை; வரவேற்பறை. முன்னறையான வரவேற்பறையில், ஒரே ஒரு சாய்வு நாற்காலி மட்டும் கிடந்தது. ஒரு சோபாசெட்கூட இல்லை.

என்னய்யா பிரின்ஸ்பால் இவன்? எல்லாத்தையும் பணமாகவோ நகையாகவோ வச்சிருக்கான். பேராசிரியர் அசல் கஞ்சனோ...

மேகலா, தன்னைச் சுதாரித்தபடி, சின்ன அறைக்குள் கிடந்த இரண்டு நாற்காலிகளையும், சமையலறையில் சாத்தி வைக்கப்பட்ட மடக்கு நாற்காலி ஒன்றையும் கொண்டு வந்து போட்டாள்.. நின்றவர்களில் சீனியர்கள், சீனியாரிட்டிபடி உட்காரப் போனார்கள். ஸ்டெனோ பெண்தான் இன்ஸ்பெக்டரம்மா குறிவைத்த நாற்காலியில் 'கும்' என்று உட்கார்ந்தாள். இன்ஸ்பெக்டர்களில் இரண்டு பேர் 'டைரக்ட் ரெக்ருட்'; இரண்டுபேர் 'புரமோட்டிவ்ஸ்'. இவர்களது சீனியார்ட்டி விவகாரம் கோர்ட்டில் நிற்கிறது. ஆகையால், நாற்காலி யில் உட்காருபவர்கள்தான், சீனியர்கள் என்று அனுமானிப்பது போல், எல்லோருமே உட்காரப் போனார்கள். அதற்குள் சாட்சிகள் அமர்ந்தார்கள். வந்ததே பெரிசு.... நிற்கிறதாய் இருந்தால் சம்பளம் வாங்குறவங்கதான் நிற்கணும்...

பேராசிரியர் சங்கோஜத்தோடு பேசினார்.

“ஐ அம் ஸாரி... நாற்காலி இல்லாமல் போயிட்டு... மேகலா! அந்தக் கட்டிலைத் தூக்கிட்டு வாரியா?”

“நோ, தேங்க்ஸ் புரபஸர். லெட் தெம் ஸ்டாண்ட்”

உதவி டைரக்டர் பீடிகை போட்டார்.

“ஒன் திங் ஸார், டெலிபோன் இருக்குதா?”

“இல்லை. தேவையும் இல்லை.”

“நல்லதாய் போச்சு... அப்புறம் ஒரு விஷயம்... நீங்களோ, ஒங்க டாட்டரோ ரெய்டு முடியறது வரைக்கும் வெளில போகப்படாது. யாராவது வெளியில இருந்து வந்தாலும் நீங்களாய் பேசப்படாது. நாங்கதான் அவங்களை வரவேற்போம். அண்டர்ஸ்டாண்ட்?”

பேராசிரியருக்கு எப்படியோ; மேகலாவுக்கு 'அண்டர்ஸ்டாண்ட்' ஆகியது. தந்தையின் காதில் கிசுகிசுத்தாள். உடனே அவர் துள்ளிக் குதித்தார். இன்ஸ்பெக்டரம்மா, நின்றபடியே அதட்டினாள்.

“இந்தா பாருங்க ஸார், பாருங்கம்மா, நீங்க... ஒருத்தரோடு ஒருத்தர் பேசப்படாது. ரகசிய சமிக்ஞை எதுவும் செய்யப்படாது. ஜன்னலுக்கு வெளியேயும் எட்டிப் பார்க்கப்படாது. அண்டர்ஸ்டாண்ட்?”

மேகலா, ஒரு சந்தேகத்தைக் கிளப்பினாள்:

“அப்படின்னா நாங்க ஹவுஸ் அரஸ்டா?”

எவரும் அல்லது எவளும், அவளுக்கு பதிலளிக்காமல், பார்வையை மட்டும் அழுத்தமாக்கியபோது, பேராசிரியர் பெருமாள்சாமி எழுந்து, உதவி டைரக்டரிடம் மன்றாடினார்.

"ஸார்... ஸார்... நாளைக்கு ரெய்ட் வச்சுக்கங்க ஸார். இப்போ நான், அவசரமாய் வெளியே போகணும்."

இன்ஸ்பெக்டர்களை, சாட்சி மனிதர்கள், கண்ணடித்துப் பார்த்தார்கள். அஸிஸ்டெண்ட் டைரக்டர் பேராசிரியருக்குப் பதிலளித்தார்.

"ரெய்டோட எலிமென்டே சர்பிரைஸ்தான்."

"எனக்கு ஸர்பிரைஸ் இல்லை, ஷாக் ஸார்... பட், அதுக்கு நான் கவலைப்படல. இப்பவே மணி பத்தரை. நான், வாடிக்கை பத்திரிகை மேலே கேஸ் போட்டிருக்கேன். பதினொரு மணிக்கு கோர்ட்ல இருக்கணும் ஸார்."

அஸிஸ்டெண்ட் டைரக்டர், அந்த விவகாரம் தனக்குத் தெரியும் என்பதுபோல், பேராசிரியரைப் பார்த்து தலையாட்டிவிட்டு, அந்த விவகாரம் தன் சகாக்களுக்கும் தெரியும் என்பதுபோல், அவர்களையும் பார்வையால் வட்டமடித்து விட்டு, சாவகாசமாய் கேட்டார்:

"வக்கீல் பார்த்துக்குவார் ஸார்."

"வக்கீலுக்கு ஆயிரம் கேஸ் ஸார். நான் பாரிமுனைக்குப் போய்த்தான், அவரைக் கூட்டிக் போகணும். எனக்காகக் காத்திருப்பார் ஸார். வருவன் வருவேன்னு காலத்தை வீணடிப்பார் ஸார். அதனால கோர்ட்ல கேஸ் டிஸ்மிஸ் ஆயிடும் ஸார்."

"டோண்ட் ஒர்ரி... ஒரு ஹியரிங்குக்கு கம்ப்ளெயின்டென்ட் போகல என்பதாலேயே, கேஸை டிஸ்மிஸ் செய்ய மாட்டாங்க. இன்னொரு சான்ஸ் கொடுப்பாங்க."

"மாஜிஸ்டிரேட் கொடுத்துட்டார் சார். அந்த சான்ஸ் போய், இது அடுத்த சான்ஸ் சார். போன வாய்தாவுல, இலங்கைப் படுகொலையைக் கண்டித்து, மெட்ரோபாலிட்டன் வக்கீல்கள் மறியல் செய்தாங்க. நானும் வக்கீலும் கோர்ட் இருக்காதுன்னு திரும்பி வந்துட்டோம். அன்றைக்கே பெஞ்ச் கிளார்க், நான் ஆப்ஸெண்டுன்னு எழுதி வச்சிட்டாராம். இன்றைக்கு இப்போ கோர்ட்டுக்கு போகாட்டால் அப்புறம் நான் வெளியே தலைகாட்ட முடியாது சார்."

"ஐ அம் ஸாரி; நீங்க போக முடியாது."

"அப்படின்னா, என் டாட்டரை அனுப்பி வைக்கேன் சார்."

"ஸாரி சார். அலோ பண்ண முடியாது."

"அடுத்த வீட்ல் போய், வக்கீலுக்கு டெலிபோனாவது செய்யணும் சார்."

"ஸாரி சார்!"

"வேணுமுன்னால் நீங்களும் கூட வாங்கோ சார்."

"ஸாரி"

'ஏன் சார்?"

"எங்களுக்கு ரெய்டுதான் முக்கியமே தவிர, ஒங்களோட பெர்ஸனல் சமாச்சாரம் அல்ல. அதோட... வக்கீல்கூட டெலிபோன்ல பேசுறதாய் சொல்லி, வேற நம்பருக்கு டெலிபோன் போட்டு, கோட் வோர்ட்ல' பேச மாட்டிங்கன்னு என்ன நிச்சயம்? சயன்டிபிக்காய் கேட்கிறேன்"

"சயன்டிபிக் இல்ல, சயன்ஸ் பிக்ஷன்... இது அக்கிரமம் சார். அநியாயம் சார். அட்டுழியம் சார். நானும் அந்தக் காலத்துல இன்கம்டாக்ஸ் டிபார்ட்மென்ட்ல வந்த ஒரு நல்ல வேலையை விட்டுட்டு, காலேஜ்ல பெரிசாய் கிழிக்கலாமுன்னு லெக்சரராய் சேர்ந்தவன் நான். ஸாரி ஸாரின்னு சாரி சாரியாய் சொல்றிங்க. அது ஒங்களுக்கு ஒரு வார்த்தைதானே தவிர, உணர்வில்ல சார்."

"லுக் மிஸ்டர்! நீங்க இப்போ என் கண்ட்ரோலில் இருக்கீங்க."

மேகலாவால், ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. சார் போட்டவர், மிடுக்காய் மிஸ்டர் போட்டதை கேட்டாள். அப்பாவிடம் கத்தினாள்:

"தலைக்கு மேலே வெள்ளம் போயிட்டு. இனிமேல எப்படிப் போனால் என்ன? அவரு நம்மை கொத்தடிமையாய் எடுத்தவர் மாதிரி பேசுறார். நீங்க ஏன் பிச்சை எடுக்கிறீங்க? மிஸ்டர் அஸிஸ்டெண்ட் டைரக்டர்! ஒங்க சோதனையை சீக்கிரமாய் துவக்குறீங்களா? டயத்தை வேஸ்ட் செய்ய வேண்டாம்."

அதிகாரிகள், அவளை ஒரு மாதிரி பார்த்தார்கள். அஸிஸ்டெண்ட் டைரக்டர் அவளைக் கண்டுக்காமலே பேசினார்:

"தேங்க் யூ. டயத்தை வேஸ்ட் செய்யுறது நாங்க இல்லை. ஒ...கே.. மொதல்ல, ஒரு ஸ்டேட்மென்டை ரிக்கார்ட் செய்யணும். அப்படிறம்தான் சர்ச். மிஸ்டர் பெருமாள்சாமி, யூ ஆர் அண்டர் உறுதிமொழி. பொய்த் தகவல் கொடுத்தால் கிரிமினல் அபன்ஸ். அண்டர்ஸ்டாண்ட்..?"

"நோ அண்டர்ஸ்டாண்ட். நான் எப்போ உறுதிமொழி எடுத்தேன்?"

"எடுக்காட்டிலும், எடுத்ததாய் அனுமானித்திட்டேன்."

"நோ, இப்படித்தான் பல சமாச்சாரங்களை அனுமானிப்பிங்க. அதனாலதான் டாட்டா, பிர்லா, சுதர்சனம் எல்லாம் தப்பிக்கிறாங்க. டேக் மை ஒத் பஸ்ட்...."

அஸிஸ்டெண்ட் டைரக்டர் அசந்து போனார். இந்த ஆள் கோமாளி அல்ல. லேசுப்பட்டவனும் இல்ல. ஒரு புத்தகத்தை பேராசிரியரிடம் நீட்டி, பிரமாணம் வாங்கிக் கொண்டார். பென்சிலும், நோட்டுமாய், தன்னைப் பார்த்த ஸ்டெனோ பெண்ணிடம் தலையாட்டினார். விசாரணையைத் துவக்கினார்.

"கிராமத்துல நிலம் இருக்குதா?

"ஒரு ஏக்கர் இருந்துது. நான் குடும்பத்து பொதுச் சொத்துல படிச்சதால, தம்பிக்குக் கொடுத்திட்டேன். நீங்க கேட்கிறதுக்கு முன்னாலேயே சொல்லிடுறேன். வேற சொத்து எதுவும் கிடையவே கிடையாது."

"பேங்க் பேலன்ஸ் எவ்வளவு இருக்கு?"

"ஒரு அக்கௌண்டை மெயின்டெயின் செய்யுறதுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு இருக்கு..."

"பிளீஸ், பீ பிராங்க."

"பத்து ரூபாய் இருக்குது. அதுக்குக் கீழே எடுக்கக் கூடாதாம்!"

"அப்புறம் லாக்கர்ல, நகை எவ்வளவு இருக்குது?"

"எனக்கு இருக்கிற லாக்கர் இந்த வீட்டோட லாக்கர்தான்."

"லுக் ஸார்! தப்பான விவகாரம் கொடுத்தால், சட்டப்படி குற்றம்."

மேகலா துடிப்போடு கேட்டாள்:

"ஒருவரை விசாரணைக்கு முன்னாலேயே, குற்றவாளியாய் நினைக்கிறது சட்டவிரோதமுன்னு சொல்லுங்கப்பா."

அஸிஸ்டெண்ட் டைரக்டர் அவளை அதிர்ந்து பார்த்துவிட்டு, விசாரணையைத் தொடர்ந்தார்:

"இந்த வீட்டை எப்போ, எவ்வளவு ரூபாய்க்கு வாங்குனீங்க?"

"இது வாங்காத வீடு." வாடகை வீடு. நானூறு ரூபாய் மாத வாடகை. இரண்டு மாதமாக வாடகை பாக்கி நிக்குது. வீட்டுக்காரர்

ஒரு அரசியல்வாதி. சாமான்களையும், என்னையும் வெளில தூக்கிப் போடப் போறதாய் மிரட்டுறார். வாடகையே வேண்டாம், காலி பண்ணுங்கன்னு சொல்லிட்டார். பை தி பை, எங்கேயாவது இருநூறு ரூபாய்க்குள்ளே, வாடகை வீடு இருந்தால் சொல்லுங்க ஸார்."

"லெட் அஸ் நாட் டாக் பெர்ஸனல் மேட்டர். முதலீட்டுப் பத்திரங்கள் எவ்வளவு இருக்கு?"

"ஜெனரல் ஷேர்ஸ், பிரிபரன்ஷியல் ஷேர்ஸ், ஈகுட்டி ஷேர்ஸ், டிவிடண்டுன்னு, காலேஜ்லு பாடம் நடத்தியிருக்கேன். இந்த விஷயத்துல நான் ஏட்டுச் சுரைக்காய்."

அஸிஸ்டெண்ட் டைரக்டரின் நெற்றி சுருங்கியது. அந்த சுருக்கத்தோடயே எழுந்தார். ஸ்டெனோ பெண், பத்து நிமிடத்தில் பூர்த்தி செய்த ஒரு படிவத்தை, 'பாஸிடம்' நீட்டினாள். அவர், அதை பேராசிரியரிடம் நீட்டி, கையெழுத்து வாங்கிக் கொண்டார். பிறகு, சகாக்களைப் பார்த்து 'யெஸ்...' என்று ஆஸ்த்துமா நோயாளி மாதிரி இழுத்துப் பேசினார். இன்ஸ்பெக்டர்கள், அங்கிருந்து எழுந்து போய் வளைந்து, ஆளுக்கொரு பக்கமாக நுழைந்தார்கள். பேராசிரியர், சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

படுக்கையறையில் இருந்த பீரோவை, மேகலா திறந்தாள். ஒரு இன்ஸ்பெக்டர் அதிலுள்ள துணிகளை வெளியே இழுத்துப் போட்டார். இன்னொரு இன்ஸ்பெக்டர், அவற்றை ஒவ்வொன்றாக உதறினார். பேண்ட் பைகளைத் துழாவினார். மடித்த புடவைகளைப் பிரித்தார். பிறகு, பீரோவுக்கு மேல் கைகளால் துழவினார். கந்தைத் துணிகள் வந்தன. கழிவுப் பேப்பர்கள் விழுந்தன. பீரோ டிராயர்கள் திறக்கப்பட்டன. ஒரே காகிதக் குவியல்... பெரிய பெரிய காகிதங்கள். அவற்றை எடுத்துக் கொண்டு, அறையை நோட்டமிட்டு, கட்டிலுக்குக் கீழே குனிந்தும், மெத்தையை தூக்கிப் பார்த்தும், நிலைக் கண்ணாடிக்குப் பின்னால் பார்த்தும், தேடித் தேடிப் பார்த்துவிட்டு, இரண்டு இன்ஸ்பெக்டர்களும், அஸிஸ்டெண்ட் டைரக்டர் இருந்த முன்னறைக்கு வந்தார்கள். அங்கே, இடுப்பில் கை வைத்தபடி நின்ற இரண்டு சாட்சிக்காரர்களும், தலையின் கைவைத்தபடி சாய்ந்திருந்த பேராசிரியரை வெறித்துப் பார்த்தபடி விஷம முகங்களோடு தோன்றினார்கள். அஸிஸ்டெண்ட் டைரக்டர், இன்ஸ்பெக்டர் நீட்டிய காகிதக் குவியலை' எதிர்பார்ப்போடு வாங்கினார். முதலீட்டுப் பத்திரங்கள் மாதிரி தெரியுதே...

ஒவ்வொரு தாளாக உருவினார்கள். பேராசிரியரின் முன்னாள் மாணவர்கள்-இப்போது பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள், அரசாங்க முத்திரை பதித்த காகிதங்களில், பேராசிரியருக்கு எழுதிய நன்றிக் கடிதங்கள்; பேராசிரியர் டாக்டரேட் பட்டம் வாங்கிய

சான்றிதழ்; மேகலா, கல்லூரியில பேச்சுப் போட்டிகளில் முதலாவதாக வந்ததை எழுத்தில் காட்டும் சான்றிதழ்கள். மலைத்துப்போன உதவி டைரக்டர், நான்காய் மடிக்கப்பட்ட ஒரு சிவப்பு காகிதத்தின் மடிப்புகளைக் கலைத்தார். மார்வாடி ரசீது. நாலு பவுன் தங்கச் செயின், மேகலாவின் கழுத்தில் தங்காமல் வட்டிக் கடைக்காரனிடம் இரண்டாயிரம் ரூபாய்க்கு தங்கியிருப்பதைக் காட்டும் வரலாற்றுக் காவியம்...

அஸிஸ்டெண்ட் டைரக்டர், பேராசிரியருக்கு அனுதாபம் காட்டத் துவங்கினார். ஆனாலும் அவர் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. அதெப்படி? அவ்வளவு பெரிய மனிதர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்காங்க... எப்படிப் பொய்யாகும்? அவர், சின்ன அறைக்குள் போனவர்களுக்காகக் காத்திருந்தார்.

சின்ன அறைக்குள், இரண்டு இன்ஸ்பெக்டர்கள், 'செல்பில்' இருந்த புத்தகங்களைக் கீழே தள்ளி, சாதனை புரிந்து விட்டார்கள். 'நெப்போலியன், செயின்ட்ஹெலினா தீவில் சிறையிலடைக்கப்பட்டதை சின்ன விஷயமாக்கும் வகையில், அவன் படம் போட்ட புத்தகம், குப்புறக் கிடந்தது... கீன்ஸின் 'பணம்-வட்டி-சேமிப்பு' பிணம் போல் கிடந்தது. சத்தியசோதனை, வீட்டுக்குள் இருந்த ஒரு சின்னஞ்சிறு குழிக்குள் கிடந்தது. பென்ஹாம் எகானாமிக்ஸ் அட்டை கிழியத் துடித்தது. கார்ல் மார்க்ஸ் அண்ணாந்து பார்த்தார்.

புத்தகங்கள் பொத்துப் பொத்தென்று போடப் படுவதை சகிக்க முடியாத பேராசிரியர், உள்ளே வந்தார். இன்ஸ்பெக்டர்கள் கீழே எறியப்போன டாஸ் கேபிட்டலை, அவர்களிடமிருந்து கோபமாகப் பறித்தார். அவர், உள்ளே வந்ததால் இன்ஸ்பெக்டர்களுக்கு சந்தேகம் வலுத்தது. ஒவ்வொரு புத்தகத்தின் அட்டையையும் பிரித்தார்கள். தாள் தாளாகப் புரட்டினார்கள். மொத்தத்தில் குரங்குகள்கூட பூமாலைகளைக் கொடுத்தால், இப்படிச் செய்யாது. அவர்கள் விடவில்லை. அட்டைப் பெட்டி ஒன்று வண்ணத்தில் மின்னியது. உள்ளே கைவிட்டார்கள். கள்ளப் பணத்திற்குப் பதிலாக கரப்பான் பூச்சிகள் வந்தன. முதலீட்டுப் பத்திரங்களுக்குப் பதிலாக, மூன்று எலிகள் துள்ளிக் குதித்தன. எதுவுமே இல்லை. இருக்க வேண்டியவைகள் கூட இல்லை.

இன்ஸ்பெக்டரம்மாவும், தன் பங்குப் பணியை ஆற்ற விரும்பினாள். மேகலாவை கூட்டிக் கொண்டு சமையலறைக்குள் போனாள். எப்போதோ வாங்கிய 'கேஸ்' அடுப்பை புரட்டினாள். ஒவ்வொரு பாகங்களும் கீழே விழுந்தன. டப்பா டப்பாவாகத் திறந்து பார்த்தாள். மிளகாய் நெடியை மட்டும் நுகரக்கூடிய டப்பா; பெருங்காய வாசனையை மட்டும் நுகரக்கூடிய டப்பா; சீர்கெட்ட சீரக டப்பா; ரோஷங்கெட்ட உப்பு டப்பா. ஆனாலும் இன்ஸ்பெக்டரம்மா

'டப்பாங்கூத்தில்' திருப்தி அடையாமல், பாத்திரங்களைப் புரட்டிப் பார்த்தாள். திடீரென்று ஒரு சந்தேகம். மேகலாவின் ஆடைகளை களையச் சொல்லலாமா என்று. அவளின் முன்புறத்தையும், பின்புறத்தையும் பார்த்தாள். மேகலாவின் மார்பகத்தின் மேல் பகுதியை, தட்டிக்கூடப் பார்த்தாள். மேலா, அவள் கையைத் தட்டிவிட்டு, அக்கினிப் பார்வையை வீசினாள். இன்ஸ்பெக்டரம்மாவின் பார்வை, அதில் பஸ்பமாகியது.

அஸிஸ்டெண்ட் டைரக்டர், தலையில் கை வைத்தார். ஒரு இன்ஸ்பெக்டர், ஸ்டெனோ பெண்ணோடு கொல்லைப்புறம் போனார். பூச்செடிகளின் அடிவாரங்களை காலால் இடறினார். மண் குவியலை சிதைத்தார். குப்பைக் கூடையைக் கொட்டிப் பார்த்துவிட்டு, குப்பையாகத் திரும்பி விட்டார்.

இரண்டுமணி நேரத்தில், படுக்கையறை பாழறையாகியது. சின்ன அறைக்குள் புத்தகங்கள் வக்கரித்துக் கிடந்தன. முன்னறையில், டி.வி. ஸெட் மல்லாந்து கிடந்தது. ஸ்டெனோ பெண் இரண்டு காகிதப் படிமங்களை, உதவி டைரக்டரிடம் நீட்டினாள். அவரோ, பேராசிரியரை மரியாதையாய் பார்த்தபடியே, படிமங்களை வாங்கினார். அவற்றில், என்னவெல்லாமோ எழுதி முடித்தார். பிறகு, எழுந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்து கிடந்த பேராசிரியர் முன்னால், மாணவத்தனமாக நின்று, எழுதியதை நீட்டப் போனபோது, இன்ஸ்பெக்டரம்மா, வெளியே பச்சை மண் தெரிய நின்ற வாழைக்கன்றைப் பார்த்து 'அதைத் தோண்டிப் பார்க்கலாமா ஸார்' என்றாள். உடனே அவர், 'ஷட் அப்' என்றார்.

உதவி டைரக்டர் நீட்டிய காகிதத்தை வாங்கியபடியே, பேராசிரியர் விபரம் புரியாமல் கேட்டார்:

"என்ன இது?"

"பஞ்ச நமா... ஒங்க வீட்ல சோதனை போட்ட விவரப் பட்டியல். இதைப் பத்திரமாய் வச்சுக்கங்க ஸார். வீ ஆர் வெரி ஸாரி ஸார். ஒங்களுக்கு வேண்டாத பெரிய மனுசங்களோட சின்னத்தனமான வேலையால, நாங்க, எங்கள் கடமையைச் செய்யுறதுக்காக சின்னதாய் போயிட்டோம். மன்னிக்கணும் ஸார்."

பேராசிரியர், வாங்கியதைப் படித்தார். சட்டவிரோதமானது எதுவும் இல்லை என்று அந்தக் காகிதம் அறிவுறுத்தியது.

அசிஸ்டெண்ட் டைரக்டர் குழைந்தார்:

"அப்போ நாங்க வரட்டுமா? ஸார் ஸார்! ஒங்களை மாதிரி எல்லோரும் இருந்தால், நாடு எப்போவோ உருப்பட்டிருக்கும். வாரோம் ஸார்."

மேகலா, புறப்பட்டவர்களை வழிமறிப்பது போல், வசாலில் நின்று கர்ஜித்தாள்.

“அதெப்படி சார் போறது? இந்த நாட்டின் கௌரவமான ஒரு குடிமகனின் பிரவேஸியில் தலையிட்டிங்க. அக்கம் பக்கத்துல எங்களை சமூக விரோதியாய் காட்டிட்டீங்க... அறைகள் முழுதும் அலங்கோலமாய் ஆக்கிட்டிங்க. சிதறின பொருட்களை திருப்பி வைக்கிறதுக்கு கூலிக்கு ஆள் வச்சால்தான் முடியும். எங்ககிட்டே பணம் இல்லை. எதை எதை எங்கெங்கே கெடுத்திங்களோ, அதை அதை அங்கங்கே வச்சுட்டு போங்க”

அஸிஸ்டெண்ட் டைரக்டரும், அவரது சகாக்களும் நிஜமாகவே அதிர்ந்து போனார்கள். கூலிக்கு சாட்சி சொல்ல வந்த அந்த இரண்டு மனிதர்களும், குன்னிப் போனார்கள். ‘ஏ.டி.’ வெட்கப்பட்டுப் பேசினார்.

“நீங்க உண்மையிலேயே கிரேட்மேன் சார். உங்க வீடு, ஒரு கோவில் சார். தெரியாத்தனமாய் வி.ஐ.பி. இன்பர்மேஷன்ல வந்துட்டோம். இப்படித்தான், இந்த பிரமுகர் பசங்க, எதையாவது எழுதி அனுப்பிடுறாங்க. அதன் பேர்ல நாங்க நடவடிக்கை எடுக்காட்டால், எங்க மேலயே நடவடிக்கை எடுக்க வைப்பாங்க. தயவு செய்து பெர்ஸனலாய் எடுக்காதிங்க சார். ஒன்றே ஒன்று சார்; துடுக்கோடு வந்த நாங்க, துயரத்தோட போறோம். படாதி பசங்க... நீங்க பத்து லட்சம் ரூபாய்க்கு ஒரு வீடு வாங்கி இருக்கதாயும், முதலீட்டுப் பத்திரங்கள் லட்சக் கணக்கான ரூபாய்க்கு வச்சிருக்கதாயும் எழுதிக் கொடுத்தாங்க. ஆனால், அவங்க மேல, இதுக்காக ஆக்ஷன் எடுக்க எங்களுக்கு அதிகாரமில்ல.”

பெருமாள்சாமி, சிரித்தபடியே கேட்டார்:

“யார் இன்பர்மேஷன் கொடுத்தது? அப்பாவுவா, இல்ல... வாடிக்கை பத்திரிகையா?”

“அதெல்லாம் கேட்காதீங்க சார், ‘நீ பெண்டாட்டியை அடிக்கிறதை விட்டுட்டியா’ என்கிற மாதிரியான கேள்வி சார் இது.”

மேகலா, மீண்டும் கண்டனக் கணையை ஏவி விட்டாள்.

“என்னப்பா ஒங்களுக்கு சிரிப்பு வேண்டிக் கிடக்கு? எடுத்துப் போட்ட சமான்களை இருந்த இடத்துல இருத்திட்டுப் போகச் சொல்லுங்க. கூலி கொடுக்கக் காசில்ல.”

“என்னம்மா நீ, இன்னைக்குத்தான் நான் கோர்ட்டுக்குப் போகலியே. இருபது ரூபாய்ல, ஐந்து ரூபாய் சாப்பாட்டுக்கு. மீதி இருக்குதே, சாயங்காலம் இரண்டு பேரு நம்மளால பிழைச்சுட்டுப்

போகட்டுமே. நீங்க போங்க சார். என் டாட்டரும் நல்லவள்தான் சார். மேகலா! நீ நல்லவள்னு நிருபிக்கதுக்காக, இப்போ, இவங்க எல்லோருக்கும் டீ போட்டுக் கொடுப்பியாம். பீ எ குட் கேர்ள்."

அஸிஸ்டெண்ட் டைரக்டர் பேராசிரியரைக் கையெடுத்துக் கும்பிட்டார்.

"டீ வேண்டாம். அந்தம்மா எங்களை சும்மா விட்டாலே போதும் சார். ஒங்களை கஷ்டப்படுத்திட்டோம் சார்."

"ஒங்க டூட்டியைத்தான் செய்திங்க. நான் கூடத்தான் பரீட்சை பேப்பர் திருத்தும்போது, மார்க்கை கூட்டுறதுல கோட்டை விட்டிருக்கேன். கூட்டல் சரியில்லன்னா, அந்த கூட்டலதான் திருத்தணும். கூட்டுனதுல எதையும் திருத்தக்கூடாது. இது வாழ்க்கைக்கும் பொருந்தும்."

நீங்க சொன்னது கோட்டபிள் கோட் ஸார். "வாரோம் சார்!"

"ஓ...கே. ஜென்டில்மென் அண்ட் லேடீஸ்"

ரெய்ட் கோஷ்டி போய்விட்டது.

பேராசிரியரும், மேகலாவும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளவில்லை. சாப்பாடு போடப்போன மகளை, அவர் சைகையாலேயே தடுத்து விட்டார். இருவரும், தத்தம் நரகலோகங்களில் சுற்றியடித்தபடி கிடந்தார்கள். நேரம் அவர்களுக்கு இல்லை; நிஜமாகவே, அது இல்லாமல் போய்விட்டது.

மாலை மயங்கிய நேரம்.

முத்தையா, ஆவேசமாக உள்ளே வந்தான். பயங்கரமாய்க் கத்தினான்.

"என்ன சார் நீங்க? ஏன் சார் கோர்ட்டுக்கு வரல? நான் ஒங்களைப் பார்க்கிறதுக்காக அங்கே போனதால தெரிஞ்சுது சார். வேடிக்கைகாரன்மேல், நீங்க போட்ட வழக்கு டிஸ்மிஸ் சார். நீங்க போகாததால் தள்ளுபடி சார். பட்டபாடெல்லாம் வேஸ்ட் சார்."

பேராசிரியர், குனிந்த தலை நிமிராமல் கிடந்தார். மேகலா, தன்பாட்டுக்குப் புலம்பினாள்:

"நான் அப்பவே நினைச்சேன். இந்த ரெய்டுக்கும், கோர்ட் கேசுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்குதுன்னு நினைச்சேன். நினைச்சது நடந்துட்டு. இனிமேல் நினைத்துப் பார்க்க முடியாதது கூட நடக்கலாம்."

# 20

அது, நட்சத்திர ஹோட்டல்களிலேயே, ஐந்து நட்சத்திரம். செயற்கையாக சிருஷ்டிக்கப்பட்ட உயரத்தில், தரையில் இருந்து இருபதடிக்கு மேலே இருந்த அதன் நுழைவாசலுக்கே ஊட்டி, கொடைக்கானலுக்குப் போவதுபோல், வளைந்து வளைந்து போடப்பட்ட 'ஹேர்பின் வளைவுகள்'; பலமாடிக் கட்டிடம். ஏழெட்டுக் கண்ணாடிக் கதவுகள். கட்டிடத்திற்கு முன்னால், நீச்சல் குளம் மாதிரி, செவ்வக வடிவத்தில அமைந்த பள்ளப் பகுதி. பெரிய இடத்துப் பிள்ளைகளை, சின்ன இடத்துச் சிறுவர், சிறுமிகள் சாலைகளில் தள்ளிக் கொண்டு போவார்களே, அந்த வண்டி மாதிரியன அணைப்புச் சுவர் கொண்ட பள்ளம். அதில் முழுஅளவு நீர் இருப்பது போரலவும், ஆழத்தை அறிய முடியாதது போன்ற பிரமை; அந்தக் குளம் கட்டிட அடித்தளமான இருபதடி தொலைவையும் கடந்து, மேலும் கீழ்நோக்கிப் போயிருக்கும் என்பது போன்ற தோரணை. எவராவது உணர்ச்சி வயப்பட்டு, குறிப்பதற்காகக் குதித்தால், முப்பத்திரண்டு பற்களும் கீழே விழும். ஒருவேளை ஹோட்டல் நிர்வாகம், அந்தப் பற்களைப் பொறுக்கி, காட்சிக்கு வைக்கலாம் என்பது வேறு விவகாரம். அந்தக் குளத்தில் நீரும் கிடையாது. மீனும் கிடையாது. அந்தப் பகுதிக்குள்ளே நீல நிற பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்தது. இது, நீர் பொங்கி வழிவதுபோல காட்டும். இதைப் பார்த்து, விபரம் தெரிந்து சிரித்துக் கொள்பவர்கள், ஹோட்டலுக்குள் இருக்கும் நிஜமான நீச்சல் குளத்தையும், பெயிண்ட் தண்ணீராய் நினைப்பதும் உண்டு.

ஏழு கதவுகளில், எதையாவது ஒன்றைத் திறந்து கொண்டு பார்த்தால், கீழ்நோக்கியும், மேல் நோக்கியும் போகும் பல மாடிப்படிகளையும், ஆழப்படிகளையும் பார்க்கலாம். உள்ளே போய் ஆகாயத்தில் தரை போட்டதுபோல் தோன்றும் 'கிரவுண்டில்' கால் வைத்தால், அந்தக் கால்கள், அரையடி உள்ளே போகும். அந்த அளவிற்கான மெத்தை விரிப்பு. மேலே நட்சத்திரக் குவியல்கள் போன்ற மின்மினி விளக்குகள். பார்க்கும் பக்கமெல்லாம் லிப்டுகள். நோக்கும் இடமெல்லாம் நவநாகரிக மனிதர்கள். கேட்கும் காதெல்லாம் 'டிஸ்ஸீம் டிஸ்ஸீம்' பாடல்கள். ஏழெட்டு டெலிபோன்களுடன் மல்லாடும் சிலுக்கு மங்கைகள்.

வரவேற்புப் பகுதிக்கு அருகே, நீண்ட-பெரிய கரும்பலகையில், அம்புக் குறிகளோடு காட்சியளிக்கும் பிளாஸ்டிக் எழுத்துக்கள். அந்த ஹோட்டலில், எந்தெந்த இடங்களில், என்னென்ன நடைபெறுகின்றன

என்பதை எடுத்துக் கூறும் தகவல் களஞ்சியங்களாய் காட்சியளித்தன. 'மண்டபத்தில்' குடிசைவாழ் மக்களுக்கு, தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் வாய்ப்புப் பற்றி 'செமினாராம்'. 'ஓரியண்டலில' என்ஜினியாங் அஸோஸியயேஷன்ஸ் ஆப் இண்டியாவின் சிம்போனியாம். 'ராஜா'வில், ஏதோ ஒரு கிராமத்தை தத்து எடுப்பது பற்றி விவாதிக்கும் 'லயன்ஸ்களின்' கூட்டமாம். 'மினிஸ்டரில்' மாடர்ன் பெயிண்டிங் எக்ஸிபிஷன். 'கல்சுரல் டானில்' திரைப்பட நடிகர் நடிகைகளுக்கு, அமைச்சர் ஒருவர் கையால் வழங்கப்படும் விருதுவிழா. இன்னும் ஒன்றே ஒன்று. 'சரஸ்வதியில்' அப்பாவுக் கல்லூரியின் வரப்போகும் பொன்விழாவை விளக்கப்போகும் செய்தியாளர்கள் கூட்டம்...

இப்பாடியாகப்பட்ட அந்த ஹோட்டலில், 'சரஸ்வதி அறை' வீணையும், கையுமாய் இருந்த தங்கமுலாமிட்ட வெண்கல சரஸ்வதிதேவி, வெண்தாமரையில் சாந்தம் பூக்க, சிரிக்கிறாள். அவள் காலடி முடியும் இடத்தில் மூன்று மேஜைகளோ அல்லது பலகைகளோ, நேர் வரிசையாய்ப் போடப்பட்டு அவற்றைக் கலர்கலரான விரிப்புகள் மறைத்திருந்தன. இந்த வரிசைக்குப் பின்பக்கம் தேக்கால் செய்யப்பட்ட, சிம்மாசன நாற்காலிகள். முன்பக்கம், தொண்ணுற்றொன்பது நாற்காலி கள், மூன்று மூன்றாய், மூன்று வரிசைகளில போடப்பட்டிருந்தன.

டிரஸ்போர்ட் உறுப்பினர்கள், பல்கலைக் கழக செனேட் உறுப்பினர்கள் உட்பட பலப்பல பெரிய மனிதர்கள் குவிந்த வண்ணமாய் இருந்தார்கள். ஒருவரை ஒருவர் எதிரிபோல பார்த்துக் கொண்ட அப்பாவும், அவரது செயலாளர்-மகனும், 'விஐபிகளை' சிரிப்பை வரவழைத்தபடியே சேகரித்தார்கள். அப்பாவு, அவர்களோடு திரும்பும் போது, செயலாளர்-மகனின் மாமனாரும், ஒரு வி.ஐ.பியின் கையை குலுக்கி, அவரை கையோடு கொண்டு வருவதைப் பார்த்தார்.

இந்தச் சமயம் பார்த்து, தாற்காலிக முதல்வரான தமிழாசிரியர் மாணிக்கம் உதறலோடு வந்தார். "என்னய்யா நினைச்சிங்க? யாருக்கோ நடக்கிற கல்யாணம் மாதிரி வாரிங்க" என்று அப்பாவு அவரைப் பார்த்த மெல்லக் கத்தினார். முதல்வரோ அவரிடமிருந்து ஒதுங்கிக் கொண்டார். கத்தினால் மானம் போகுமே என்றல்ல. பெண்டாட்டியும், மகளும் கத்தாத கத்தலா? அதுவல்ல. ஆயிரத்தெட்டுக்கும் அதிகமான வழிகளில் கல்லூரிப் பணத்தையும், அரசுகொடுத்த மானியத்தையும், மனம் போன போக்கில் செலவளித்த அப்பாவு, கைபோன போக்கில் கணக்கெழுதிவிட்டு, இப்போது இந்த முதல்வரை கையெழுத்துப் போடச் சொல்கிறார். 'எல்லாச் செலவும் சரியானதே' என்று முதல்வர் கையொப்பமிட வேண்டியது ஒரு சட்டக் கட்டாயம். எப்படிப் போட முடியும்? அவர் சொன்னபடி போட்டால், போலீஸாரிடம்

தலைவிதியை ஒப்படைத்ததுக்கு ஒப்பாகும். போடாவிட்டாலோ அப்பாவு கிராதகனிடம், தலையையே ஒப்படைத்ததாகும். முதல்வர் என்ன செய்வார்? தலையைப் பிடித்துக் கொண்டார்.

அப்பாவு, முதல்வரை நேரடியாகவும், மகனை மறைமுகமாகவும் முறைத்துக் கொண்டு நின்றபோது, ஒரு ஆணும், பெண்ணும் மிடுக்காய் உள்ளே வந்தார்கள். ஆணுக்கு நாற்பதுக்கு மேலே; பெண்ணிற்கு முப்பதுக்கு மேலே. பிராணச் சிநேகிதர்கள் போல் வந்த இருவரையும் பார்த்து, அப்பாவு கும்பிட்டார். இருவரும், மத்திய அரசாங்கத்தின் பத்திரிகை தொடர்பு அதிகாரிகள். வேடிக்கை ஆசிரியர் டெலிபோன் அறிமுகத்திற்குப் பின்னர், அப்பாவு, கல்லூரி பொன்விழா செய்தியாளர் கூட்டத்திற்கு இவர்களை நாடினார். இவர்களையும் சும்மா சொல்லப்படாது. கல்வி வம்பந்தப்பட்டது என்பதால், தங்களது 'ரேட்டை' கொஞ்சம் குறைத்துக் கொண்டார்கள். இனி, செய்தியாளர்கள் கூடுவதிலிருந்து, பத்திரிகைகளில் செய்திகள் வருவது வரைக்கும், இவர்கள் பொறுப்பு. ஏற்கெனவே, அரசாங்கச் செய்திக் குறிப்புகள் அனுப்பப்படும் ஹேண்ட் அவுட் கவர்களில், அப்பாவுவின் அழைப்பிதழ்களையும் அனுப்பி விட்டார். டெலி போனில், அத்தனை பத்திரிகைகளுக்கும், இருவரும் மாறி மாறித் தகவல் சொல்லி விட்டார்கள்.

'நான்-அபிஷியலாக' வந்த அந்த அபிஷியல்கள் இருவரையும் பார்த்த அப்பாவு, அவர்களிடம் ஓடினார். அவருக்கு, செய்தியாளர் கூட்டம் புதுசு. ஆறு மணிக்கு பிரஸ் கான்பரன்ஸ்; இப்போ ஐந்தரைதான். ஆனாலும் எல்லாப் பயலுவளும்... வருவான்களோ மாட்டாங்களோ...

"ஸார்... பேப்பர்காரனுங்க அதிகமாய் வருவாங்களா.... மாட்டாங்களா..."

"பேப்பர்காரன்னு ஒங்க காலேஜ்ல பேசுறது மாதிரி தடியடியாய்ப் பேசப்படாது. எவன் காதுலயும் தப்பித்தவறி விழுந்துடப் போவுது."

"பயமாய் இருக்குது சார்."

"கவலப்படாதிங்க... ஒங்களுக்காக வராட்டாலும், எங்களுக்காகவாவது வருவாங்க.... அப்புறம் கிப்ட் என்ன வாங்கியிருக்காப் போல...."

"எங்க காலேஜ் ஸிம்பல் போட்ட கேடயம் வாங்கியிருக்கேன்...."

"ஓங்க காலேஜைப் பற்றி எவன் சார் கவலப்படுவான்? கேடயம் எவனுக்கு சார் வேணும்? இதுக்குத்தான் நான் மொதல்ல தயங்குனேன்.

வாடிக்கை ஆசிரியர் சொல்றாரேன்னு சம்மதிச்சேன். என் ரேட்டைத்தான் குறைக்க முடியும். அவங்களோட தேவைகளை குறைச்சால் அப்புறம் என்னைப் பற்றியும் கன்னா பின்னான்னு எழுதிடுவாங்க. தீட்டுன மரத்துலயே கூர் பாக்கிறவங்க. பிரஸ்காரங்கள காலேஜ் டீச்சருங்கன்னு நினைச்சிட்டிங்க. என்ன கரெஸ்பாண்டட் நீங்க. அவனவன்-பெரிய பெரிய தொழிற்சாலை முதலாளிங்க, தலைவருங்க, என் கிட்ட தொங்குறாங்க. நான் இப்போ, நான், என்னடான்னா ஒங்ககிட்ட தொங்குறேன்."

அப்பாவு யோசித்தார். கேவலம், வெளியே தங்கம் போல் மின்னுவதற்காக, இந்தப் பயல்கிட்ட பித்தளை மாதிரி இளிக்க வேண்டியதாப் போச்சே... இவன், என் வீட்டு வாசல் கதவு விலைகூடப் பெறமாட்டான்; இந்த விரட்டு விரட்டுறான். என்ன செய்யுறது? பேய்க்குத் தாலி கட்டினால், பொழப்பு புளியமரத்துலதான்.

அப்பாவு, கெஞ்சுவது போல் கொஞ்சினார். கொஞ்வதுபோல் கெஞ்சினார்.

"இப்போ மட்டும் என்ன ஸார் குடிமுழுகிட்டு? 'தண்ணி' கொடுக்கோமேன்னு கிப்ட் வாங்கல."

"தண்ணின்னு அநாகரீகமாய் சொல்லாதிங்க. காக்டெய்ல்னு கௌரவமாய்ச் சொல்லுங்க பிளீஸ்."

"சரி! என்னதோ ஒண்ணு... நான் இப்போ என்ன செய்யணும்?"

"எழுபத்தஞ்சு தெர்மாஸ் பிளாஸ்க்..."

பேசிய அதிகாரியின் பிராண சிநேகிதியான பெண் அதிகாரி குறுக்கிட்டாள்.

"முந்தா நாள் நடந்த சாதி மாநாட்டுல... பிளாஸ்க் கொடுத்தாச்சே. எழுபத்தஞ்சு பென் ஸெட், எழுபத்தஞ்சு மலேசிய குடை."

அப்பாவு, எழுபத்தைந்து வயதுக்கும் அதிகமான முதுமையில் தள்ளாடுபவர் போல அல்லாடிக் கேட்டார்:

"எழுபத்தஞ்சு வேணுமா? அதோட ரெண்டு வகை பொருள் கொடுக்கணுமா?"

"நீங்க ஒண்ணு! இது சிம்பிள். ஒங்க போட்டோ எல்லா பேப்பர்லயும் வரணுமுன்னால் சும்மாவா? அப்புறம் டிரிங்ஸ் எதுக்கெல்லாம் ஆர்டர் கொடுத்திங்க?"

"அது என் மகனோட டிபார்ட்மென்ட். ஜின், விஸ்கின்னு, பிளடிமேரின்று சொல்லிட்டு இருந்தான்."

"சரி, சீக்கிரமாய் கிப்ட் வாங்கிட்டு வாங்கோ. இன்னும் இரண்டு நாளையில் என்ன நடக்கப் போவுது பாருங்க. ஒங்க பேச்சும், போட்டோவும், டாப் நியூஸ்! பெருமாள்சாமி வாத்தியார் நார் நாராய் கிழிபடுற டபுள் நியூஸ். சரி, சீக்கிரம் சார்."

பெண் அதிகாரியின் மௌனச் சம்மதத்தோடு, அந்த ஆண் அதிகாரி சொல்வதைக் கேட்கக் கேட்க, அப்பாவுவை பப்ளிசிட்டி மோகினி பற்றிக் கொண்டது. என் போட்டோ பேப்பர்ல வருமா? நான் பேசுறது பிரசுரமாகுமா? இவ்வளவு நாளும் இந்த அதிகாரியும், இந்த சூட்சுமமும் தெரியாமப் போனது எவ்வளவு தப்பாப் போச்சு! அமைச்சர்களை கூப்பிட்டு, காலேஜ்ல மீட்டிங் போட்டேன்னு பேரு பன்னாடைப் பத்திரிகைப் பயலுவ, என்னை 'மற்றும் பலர்ல' மறைச்சாங்க. ஆனால், இன்னைக்கு... அடேயப்பா! நான்தான் பழைய படியும் டிரஸ்ட் சேர்மனாய் ஆகப் போறேன். பாருடா... என் மவனே...

அப்பாவு, அரசாங்க மகனான, அந்த பத்திரிகை தகவல் அதிகாரியிடம் கேட்டார்.

"அப்புறம் டி.வி. வருமா சார்? எவ்வளவு பணமுன்னாலும் பரவாயில்ல சார்."

"உம்... பார்க்கலாம்.."

"ஏன் ஸார் இழுக்கிறிங்க?"

"ஒன்றுமில்ல, அங்கேயும் ஒங்க பெருமாள்சாமி மாதிரி ஒரு பயல் கிடக்கான். அவனை ஒழிக்கிறது வரைக்கும் கொஞ்சம் சிரமம்."

"சிரமம்தானே... முடியாதுன்னு இல்லியே... நீங்க நினைச்சால் டி.வி. ஒங்க கதவை வந்து தட்டுமுன்னு கேள்விப்பட்டேன்."

"இப்படி எல்லாரும் சொல்லிச் சொல்லியே கண்ணு பட்டுட்டு. அது ஒரு காலம்... ஒங்க கல்லூரிப் பொன்விழா வரட்டும். டி.வி.க்காரனை 'சிங்கோட'-அதாவது பேச்சோடோ கவர் செய்யச் சொல்றேன். அதுக்குள்ள, ஒங்க பெருமாள்சாமி மாதிரி பயலும் ஒழிஞ்சுடுவான்... ஒழிஞ்சுடவோன்... அதுக்குத்தான் இப்போ எல்லா ஏற்பாடும் செய்துட்டு இருக்கோம்."

"பெருமாள்சாமின்னதும் ஞாபகம் வருது ஸார். அவனைப் பற்றி பேப்பர்கள்ல தருமறா செய்தி வரணுமுன்னு சொன்னேனே, ஞாபகம் இருக்குதா?" பேப்பர்காரங்க... ஸாரி... பிரஸ்காரங்க அவனைப் பற்றி கேள்விக் கேட்க சொல்லிட்டீங்களா.

அவன பற்றித்தான் முதல்லயோ, முடிவாயோ கேட்பாங்க. கவலைப்படாதீங்க.

செய்தியாளர்கள், வரத் துவங்கினார்கள்.

வெற்றிப் பெருமிதத்துடனும் அதே சமயம், செய்தியாளர்கள் ஏடாகோடமாய் கேட்டாலும் கேட்பார்களே என்ற உதறலோடும், அப்பாவு சுற்றியபோது, கோல்டன் கலர் பேண்டும், அதற்கு மேட்சான சட்டையை 'இன்' செய்து, சட்டைக்குமேல் கோட் போட்டு, கழுத்திற்குமேல் டைபோட்ட ஒரு நாசூக்கான 'சாபிஸ்டிக்கேட்டட்' இளைஞர் முன்னால் வர, தூய வெள்ளை யூனிபாரத்துடன், சிவப்புக் கலர் டவாலியைக் யூனிபாரத்தின் 'பூணூல்' மாதிரி போட்ட சர்வர்கள், பல்வேறு விதமான பாத்திரங்களோடு வந்தார்கள். வந்ததும் வராததுமாய், அந்த அறையின் வாய்க்கால் போலிருந்த வெண்துணி விரித்த மேஜைக்கு அப்பால் போனார்கள். மின்சார அடுப்புக்களுக்கு, 'கனெக்ஷன்' கொடுத்தார்கள். அவற்றில், அடி சிறுத்து நுனி விரிந்த எவர்சில்வர் பாத்திரங்களை வைத்தார்கள். பிறகு, துணியால் மூடப்பட்டுக் கொண்டு வந்த அந்தத் தட்டுக்களை ஆங்காங்கே வைத்தார்கள். பல்வேறு விதமான பாத்திரங்கள்... கோழித்துண்டுகள், 'கிரேவியோடு' கொதிக்கும், பாக்குநிற மட்டன் துண்டுகள் பாத்திரம், மீன் துண்டுகள் நீந்திய பாத்திரம், 'டிரை பிஷ்கள்' பாத்திரம் இவற்றைத் தாண்டி, பட்டாணி அரிசி, பிரியாணி ஒயிட் ரைஸ், தந்தூரி, சப்பாத்தி, பிரிஞ்சியை சுமக்கும் தனித்தனிப் பாத்திரங்கள். இவற்றையடுத்து பொட்டட்டோ, பிரிஞ்ஜால், கோஸ், கேரட் முதலியவைகளைக் கொண்ட வெஜிடேரியன் பாத்திரங்கள்.

இவற்றையும் கண்களால் கஷ்டப்பட்டுத் தாண்டினால், அந்தக் கஷ்டத்திற்குப் பிரதியாக, வெள்ளிப்பனிமலை போன்ற குவியல்-ஐஸ்கிரீம். ஆப்பிள் துண்டுகள் குவியல் தட்டு. ஆரஞ்சுச் சுளைகள் குவியல் தட்டு. இவற்றையும் தாண்டினால், அண்டா மாதிரி ஒரு பாத்திரம், வானவில் நிறத்தில் மின்னியது; புருட் சாலட். சாலட்டையடுத்து, கேஷுநட் தட்டு, ஈரம் போகாத வெள்ளைப் பருப்பும், வெங்காயச் சிதறல்களும் கொண்ட தட்டு. விதவிதமான சிகரெட் பாக்கெட்டுகளைக் கொண்ட தாம்பாளத்தட்டு. அப்புறம் காபி பாய்லர். அதனுடன் தோழமை பேசும் டீ பாய்லர்.

முதலில் 'மற்றும் பலர்' வந்தார்கள். அதாவது பிளாக்மெயில் செய்வதையும், கிசுகிசுவை அசிங்கமாய் எழுதும் 'லும்பன்'கள். இந்த சின்னத்தனமான பத்திரிகையாளர்களுக்குப் பிறகு, சின்னச் சின்னப் பத்திரிகையாளர்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு தமிழ்ச் செய்தியாளர்கள். அவர்களில் பலர், வேட்டி, சட்டைகள். அதற்குப் பிறகு, அகில உலகத்தையே ஆட்டிப் படைப்பதாக நினைக்கும் 'ஆங்கிலேய' நிருபர்கள். இவர்கள் வந்த பிறகு வந்தவர்கள் ஏஜென்சி நிருபர்கள்.

சரஸ்வதி அறை நிரம்பி விட்டது. ஆனாலும், ஒன்றை உன்னிப்பாகக் கவனித்தால் காணலாம். ஆங்கிலப் பத்திரிகை நிருபர்களுக்கும், தமிழ்காரர்களுக்கும் இடையே, பூமத்தியரேகை போல், ஒரு வரையப்படாத போடு போடப்பட்டிருந்தது. இருதரப்பாரும் தனித்தே இருந்தார்கள். தனித்தே பார்த்தார்கள். தங்களுக்குள் மட்டுமே பேசிக் கொண்டார்கள். இன்னும் சொல்லப் போனால், 'வெள்ளைக்கார' நிருபர்கள், தமிழ்ச் செய்தியாளர்களை கிராமத்துக்காரர்கள், சேரிக்காரர்களைப் பார்ப்பது போல, பிற ஆசிரியர்கள் தமிழாசிரியர்களைப் பார்ப்பது போல் பார்த்தார்கள்.

இதற்குள் அரசுப் பத்திரிகை தகவல் அதிகாரி வந்து அப்பாவுவின் காதில் கிசுகிசுத்தார். உடனே அப்பாவு எழுந்து, அறைமுனைக்கு ஓடினார். அப்போதுதான் படியேறி வந்ததுபோல், முச்சிளைக்க நின்ற வேடிக்கை நிருபர்கள், அப்பாவுவிடம் முறையிட்டார்கள்.

“மிஸ்டர் அப்பாவு! எங்க எம்.டி. ஒங்ககிட்ட ஒரு தகவல் சொல்லச் சொன்னார். பெருமாள்சாமி, ஹைகோர்ட்டுக்கு அப்பீல் முனுவை தாக்கல் செய்திருக்காராம்.”

“அய்யய்யோ, இதோட ஒழிஞ்சான்னு நினைச்சேன்.”

“அவனாய் ஒழியாட்டி, நாமாய் ஒழிக்கணும்.”

“எப்படி?”

“இந்த பிரஸ்கான்பரன்ஸ்ல பெருமாள்சாமி ரெய்டை பற்றி நீங்க சொல்லணுமாம்.”

பத்திரிகை அதிகாரி குறுக்கிட்டார்.

“டோண்ட் ஒர்ரி. நீங்க சொல்றதுக்கு முன்னாலயே ஏற்பாடு செய்தாச்சே. சரி..... உட்காருங்க.”

செய்தியாளர் கூட்டம் துவங்கியது.

அப்பாவு எழுந்து, தன் கல்லூரியின் ஐம்பதாண்டுகால வரலாற்றை விளக்கப் போனார். செய்தியாளர்கள், அவர் பேச்சைக் கேட்க விரும்பாதது போல், இரைச்சல் போட்டார்கள். அப்பாவு, வாயை நிறுத்தியபோது, பிரஸ் அதிகாரி “நீங்க பேசுங்க. பிரஸ்ல சிகரெட் கேட்கிறாங்க. அவ்வளவுதான்'' என்று ஓடி வந்து கிசுகிசுத்துவிட்டு, பெண் அதிகாரியை, சிகரெட் புஷ்டியாகப் பார்த்தார். உடனே அந்த அம்மாப் பொண்ணு, தானே சிகரெட்டுகளை விநியோகித்தார். அப்பாவு பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் அவரின்

உரை நகல்களும், நிருபர்கள் கூட்டத்தில் விநியோகிக்கப் பட்டன. அவர்கள், ஒரு கையால் அந்த நகலைப் பிடித்து வைத்துக்கொண்டு, அதன் மேலேயே சிகரெட் புகையை ஊதினார்கள். இதற்குள் அப்பாவு பேசிமுடித்து உட்கார்ந்தார். பின்னர் பிரஸ் அதிகாரி, ஏற்கெனவே சொல்லிக் கொடுத்ததுபோல் "எனி கொஸ்டின்" என்றார்.

செய்தியாளர்கள், 'செட்டில்' ஆனார்கள். அப்பாவுவை, அன்போடு பார்த்தார்கள். அப்பாவு, பெருமை பிடிபடாமல் மீண்டும் 'எனி கொஷ்டின்' என்றார். பதிலில்லை. இரண்டாவது தடவையாகவும் கேட்டார். கேட்கப் பட்டவர்களின் பார்வை வேறுபக்கம் விழுந்தது. அதாவது பாட்டில்கள் மீது. பிறகு அப்பாவுவே பேசினார்.

"ஒரு நல்ல செய்தி சொல்லப் போறேன். சென்னைப் பல்கலைக் கழகம் நூற்றாண்டு விழா கொண்டாடுவதை முன்னிட்டு, எங்கள் கல்லூரி நிர்வாகம் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கும்."

செய்தியாளர்களில் சிலர் கை தட்டினார்கள். அவர்களோடு சேர்ந்து கைதட்டிய டிரஸ்ட் போர்ட் உறுப்பினர்கள், தட்டிய கைகளை தடவிக் கொண்டார்கள். போர்ட்ல தீர்மானம் போடல, அப்படி ஒரு எண்ணமே இல்ல. அப்பாவு எப்படி ஐந்து லட்சம் கொடுக்கிறதாய் சொல்லாம்? செயலாளர் மகன், அப்பன்மேல் அங்கேயே எகிறப் போனார். பிறகு நாசூக்காகப் பற்களைக் கடித்தபடி, இதர டிரஸ்ட் உறுப்பினர்களையும், சம்பந்தா சம்பந்தத்தோடு வந்திருந்த மாமனாரையும் பார்த்துக் கொண்டார்.

செய்தியாளர்கள், எழுந்திருக்கப் போனார்கள். அப்பாவு, பிரஸ் அதிகாரியை, ஒரு மாதிரியாகப் பார்த்தார். உடனே, அந்த அதிகாரி ஓரமாக உட்கார்ந்திருந்த ஒரு செய்தியாளரின் காதில் எதையோ போட்டார். உடனே அவர், அதை வாய் வழியாகத் துப்பினார்.

"மிஸ்டர் அப்பாவு! கடைசியாய் ஒரே ஒரு கேள்வி. எல்லாரும் உட்காருங்கப்பா... ஒங்க பழைய பிரின்ஸ்பால் பெருமாள்சாமி பெண் லோலன்னு ஒரு பேச்சு அடிபடுதே? ஊழல் பெருச்சாளியமே... உங்க கருத்து என்ன?

"மன்னிக்கனும். பெர்ஸனல் விவகாரம் எதுக்கு?"

"அப்படிச் சொல்லப்படாது. ஒரு பழைய காலேஜோட பேர் புதுசா கெடுது பாருங்கோ. சும்மா சொல்லுங்க. ஒங்க பெயரை நாங்க வெளியில் சொல்லமாட்டோம். எல்லோர் சார்பிலேயும், இதை நான் தெரிவிக்கிறேன். அவர் காதல் விவகாரத்துல சிக்கினவர்னும் ஒரு ரூமர். இன்கம் டாக்ஸ் ரெய்ட் நடக்கிற அளவுக்கு, அப்படி என்னதான் செய்தார்? சொல்லுங்க சார்!"

அப்பாவு, தயங்கித் தயங்கி எழுந்தார். சுற்றுமுற்றும் சங்கடமாகப் பார்ப்பவர்போல் பார்த்துக் கொண்டார்.

அப்பாவு பௌவியமாகப் பார்த்து பார்த்து, மெள்ள மெள்ளச் சொன்னார். பேராசிரியர் பெருமாள்சாமியின் காதல் லீலைகள், கௌரவத்திற்கு அப்பால் போய்விட்டதையும், அவர் செய்த கையாடல்களைப் பற்றியும், ஒரு ஊழியர் பெயரில் பேங்கில் கணக்கு வைத்திருப்பது பற்றியும், 'அழாக் குறையாகச்' சொன்னார். இன்கம்டாக்ஸ் காரர்களிடம், கல்லூரியின் கௌரவத்தைக் கருதி, தான் பெருமான்சாமியை விட்டுவிடும்படி கெஞ்சி வருவதாகவும், ஆனால் அவர்களோ, பல தஸ்தாவேஜுகளையும் கைப்பற்றியிருப்பதாகச் சொல்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அப்படியும் முடிக்காமல், பேராசிரியரைப் பற்றி சொல்லிக் கொண்டே போனார்.

செய்தியாளர்கள் குறிப்பெடுத்தார்கள். பின்னர்,

அப்பாவு, சொல்லி முடித்ததும், ஒரு செய்தியாளர் 'தேங்க்யூ' என்றார். உடனே எல்லோரும் எழுந்தார்கள். பீர் ஜாடிகளும், விஸ்கி பாட்டில்களும் இருந்த இடத்தை நோக்கி நகர்ந்தார்கள். பெக் பெக்காய் போட்டார்கள். ஏதோ ஒரு நார்குச்சி மாதிரி ஒன்றில் குத்தி வைக்கப்பட்ட மீன் துண்டுகளையும், கறி வறுவல்களையும் அசைத்தபடி பல 'ரவுண்ட்' வந்தார்கள். அப்பாவு, மகனுக்காக ஜூஸ்' குடித்தார். மகன், அப்பனுக்காக 'கூல்டிரிங்' குடித்தார். பிறகு, இருவரும் ஆளுக்கொருவராய் பிரிந்தார்கள். சர்வர்களிடம் 'விஸ்கி லார்ஜர்' என்றார் மகன். 'நிறையா ஊத்தப்பா' என்றார் அப்பாவு.

கண்ணாடிக் கோப்பையை கையில் ஏந்திய ஒருவன் கிசுகிசுத்தான். அப்பாவுவிடம் வந்து "மிஸ்டர் அப்பாவு, ஓர்ரி டோண்ட்... சாமிப் பொருமாளை டக்கர் செய்திடுறோம்" என்றான். உடனே அப்பாவு "அது நீங்கள் செய்யுற சோஷியல் சர்வீஸ்" என்றார்.

செய்தியாளர்கள், தலைகளை ஆட்டியபடியே, கையிலுள்ள கோப்பைகளை உற்றுப் பார்த்தார்கள். அந்தக் கிண்ணங்களில், பேராசிரியர் பெருமாள்சாமியின் ரத்தம் ஊற்றப்பட்டிருப்பதுபோல், அவை சிவந்து காணப்பட்டன. நிருபர்கள், அவற்றை உறிஞ்சும் பணியில் மும்முரமானார்கள்.

# 21

பதினைந்து நாட்கள் தொலைந்தன.

மேகலா வசாற்கதவை பாதிமூடி, அதன்மேல் மோவாயை வைத்தபடி, அந்த 'கிராஸ்' தெருவிற்கும், அப்பாஸ் 'அவென்யூவிற்கும்' இடையே கண் செலுத்தினாள். கண்ணுக்குத் தெரியாத பல்லவ பஸ் சத்தங்களை காதுகள் வாங்கும் போதெல்லாம், கால்கள் முன்னோக்கி நகர்ந்தன. தந்தை ஏதோ ஒரு பஸ்ஸில் இருந்து இறங்கி, பஸ் நிலையத்தில் இருந்து தெருமுனைக்கு வந்து சேர்வதற்காக, ஏழெட்டு நிமிடங்களை ஒதுக்கியபடி, கதவை முன்னாலும் பின்னாலும் நகர்த்துவதும், அப்புறம் வெளியே எட்டிப் பார்ப்பதும், அப்படியும் அவரைக் கண்டு பிடிக்காமல், கதவைத் தாழிட்டுக் கொள்வதும், பிறகு ஐந்து நிமிடம் கழித்துத் திறப்பதுமாக இருந்தாள். இப்படிப் பல தடவைகளில் ஒரு தடவை, அவள் வெளிப்பட்டபோது, எதிர் வீட்டுக்காரி அவளை இளக்காரமாகப் பார்ப்பது போலிருந்தது. முன்பெல்லாம் சகஜமாகப் பேசும் அந்த மாதரசி, இன்கம்டாக்ஸ் ரெய்டிற்குப் பிறகு, மேகலாவிடம் பேசுவதையே விட்டுவிட்டாள். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், தான் வைத்திருக்கும் சொத்துப் பத்துக்களையும், சுகபோகங்களையும் வாயால் அளந்து காட்டுவதற்காக வரும் அவளோ, இப்போது இவளை கண்களால் அளவெடுப்பது போல் கடுகடுத்து ஏற இறங்கப் பார்த்தாள். மேகலா கதவைத் திறந்து, வாசல் முனைக்கு வந்தபோது, காய்கறி வண்டிக்காரரிடம் 'நிறைய வாங்குறதுக்கு நாங்க என்ன கள்ளப்பணமா வச்சிருக்கோம்' என்றாள். இவர்மீது ஓரக்கண் போட்டபடியே...

மேகலா, பொருமினாள். யாராவது 'ஒங்க வீட்டில் என்ன நடந்தது?' என்று கேட்டிருந்தால், எல்லாவற்றையும் சொல்லி இருக்கலாம். அப்போது, அவர்களிடம் எல்லாவற்றையும் சொல்லி முடித்து பாரத்தை இறக்கி வைக்கலாம். அதை விட்டுவிட்டு தங்களுக்கு எல்லாம் தெரியும் என்பது போல், முகங்களை, பலாப்பழம்போல் கரடுமுரடாக்கியபடி அவர்கள் நடப்பதும், கடப்பதும் அசல் அடாவடித்தனமானது...

மேகலா, வீட்டிற்குள்ளேயே தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டாள். சிறிது நேரத்தில், கதவு தட்டப்பட்டது. மேகலா, 'என்னப்பா ஆச்சு' என்று சொன்னபடியே கதவைத் திறந்தாள். அப்புறம் முகத்தை அகலப் பண்ணினாள். முத்தையா, கையில் நான்கைந்து தினசரிப் பத்திரிகைகளோடு நின்றான். அவளைப் பார்த்து, வழக்கம் போல் புன்னகைக்காமல், வீட்டுக்குள் வந்து, ஒரு நாற்காலியில் தொப்பென்று

விழுந்தான். மேகலா, கதவைப் பாதி மூடிவிட்டு, அவனிடம் வினாமுகத்தோடு வந்தாள். முத்தையா, அவளைப் பார்க்காமலும், பதிலளிக்காமலும் கையில் இருந்த பத்திரிகைகளை, தரையில் வீசியடித்தான். அவள், அவனை விநோதமாகப் பார்த்தபடியே, கீழே விழுந்த பத்திரிகைகளை ஒழுங்குப்படுத்தப் போனாள். ஒரு பத்திரிகையின் கொட்டை எழுத்து தலைப்புச் செய்தியை பார்த்துவிட்டு, அவள் குமைந்து உட்கார்ந்தாள். அதனை அகலப் பிரித்து, ஆழமாக கண்வூன்றினாள். படிக்கப் படிக்க, அவள் கண்கள் இருண்டன. காதில் பேயிரைச்சல் கேட்டது. உயிர்க்கொல்லிபோல் உப்பிக் கிடந்த அந்தப் பத்திரிகையை, மேலிருந்து கீழாய், கீழிருந்து மேலாய் பார்த்தாள்.

**முன்னாள் கல்லூரி முதல்வர் வீட்டில்**

**ஐந்து லட்சம் ரூபாய் கள்ளப் பணம்!**

**கள்ளக் காதல் கடிதங்கள்!!**

**வருமானவரி சோதனையில் திடுக்கிடும் தகவல்கள்.**

டிசம்பர், 31-சென்னை. (எமது விஷேச நிருபர்)

வடசென்னை கல்லூரி ஒன்றில், ஏழுமலையானின் இன்னொரு பெயரைக் கொண்ட கல்லூரி முதல்வர், சில மாதங்களுக்கு முன்பு கல்லூரி நிர்வாகத்தால் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். என்றாலும் நிர்வாகம், தன் பாரம்பரியம் மிக்க கல்லூரிப் பெயரைக் கட்டிக் காப்பதற்காக, அவர் செய்த தில்லுமுல்லுகளை இதுவரை பகிரங்கப் படுத்தவில்லை. ஆனாலும், வருமானவரி அதிகாரிகள், அயராத கண்காணிப்பிற்குப் பிறகு, மலை விழுங்கியும், தோலிருக்க சுளை விழுங்கியுமான இந்த ஆசாமியின் வீட்டை, சமீபத்தில் சோதனையிட்டு, பல திடுக்கிடும் ரகசிய தஸ்தாவேஜுகளையும், பத்து லட்சம் ரூபாய் கள்ளப் பணத்தையும், தங்க நகைகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்த ஆசாமி பல்வேறு மோசடிகளுக்காக, போலீஸாரால் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று தெரிகிறது.

**பொம்புளக் கள்ளன்**

"இவை தவிர, இவர் மூன்று லட்சம் ரூபாயில் கட்டியிருக்கும் வீட்டின் பத்திரமும், பல கம்பெனிகளில் பங்குகள் வாங்கியிருப்பதற்கான தஸ்தாவேஜுகளும் கண்டுபிடிக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டன. வீட்டின் மதிப்பு, பத்திரத்தின்படி மூன்று லட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், இதன் மதிப்பு பல லட்சம் பெறுமாம். வருமானவரி இன்சினியரிங் ஸ்கோட் இப்போது இதன் நிஜமான மதிப்பை எடைபோட்டு வருகிறது. லாக்கரில் வைக்கப்பட்ட நகைகள்

ஆய்வு செய்யப்பட்டு, இவை வாங்கப்பட்ட பிரபல நகைக்கடை ஒன்றின் உரிமையாளரையும், அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்."

இன்னொரு திடுக்கிடும் செய்தி. கல்வியுலகமே தலை கவிழ வேண்டிய சங்கதி. சோதனையின்போது, கல்லூரி முதல்வருக்கு வந்த பல காதல் கடிதங்கள் சிக்கினவாம். இவர், எவ்ளோ ஒருத்திக்கு, அரைகுறையாக எழுதி வைத்திருந்த இன்லான்ட் கடிதத்தையும், அதிகாரிகள் இதர கடிதங்களுடன் கைப்பற்றியிருக்கிறார்கள். பொதுவாக வ.அதிகாரிகள் பிறர் காதல் விவகாரங்களில் தலையிடுவது இல்லையென்றாலும், இந்த ஆசாமி, ஒருவேளை சம்பந்தப்பட்ட பெண்களிடம், கள்ளப் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில், இந்தக் கடிதங்கள், அதிகாரிகளின் கைக்கு வந்துள்ளன. இந்த மனிதர் முதல்வராகப் பணியாற்றிய கல்லூரியில் 'கோ-எஜுகேஷன்' (அதாவது பருவப் பெண்களும், வாலிபர்களும் சேர்ந்து படிப்பது) இல்லை. விசாரித்துப் பார்த்ததில், இந்த கதாநாயக-வில்லன், மனைவி இறந்தபின் மறுமணம் செய்யாமல் இருந்ததற்குக் காரணம் இருக்கிறது. மனைவி தட்டிக் கேட்பாளே. கட்டினவனுக்கு ஒரு வீடு. கட்டாதவனுக்குப் பல வீடுகள் என்ற தத்துவத்தில் இந்த ஊழல் மன்னருக்கு கண்மூடித்தனமான நம்பிக்கையாம்.

மேகலா, இதரப் பத்திரிகைகளைப் படிக்காமல், அவற்றின் தலைப்புச் செய்திகளிலேயே தடுமாறினாள்.

**கள்ளப் கணமோ... கள்ளப்பணம்**

**''போதித்தது பொருளாதாரம்-சாதித்தது கள்ளக்காதல்."**

**"வேலியே பயிரை மேய்ந்த கதை."**

மேகலா, கைப்பிடித்த பத்திரிகைகளை வீசியடித்துவிட்டு, சுவரில் நின்றபடியே அதற்கு முட்டுக் கொடுப்பதுபோல் சாய்ந்தாள். விழிகளை உருட்டாத கோலம். ஒரு கண், இன்னொரு கண்ணைப் பார்ப்பது போன்ற ஒடுங்கிய பார்வை; முத்தையாவும் எழுந்து அவளருகே போய் நின்று, "மேகலா! மேகலா!" என்றான். கொஞ்சம் கொஞ்சமாய், குரலைக் கூட்டிக் கொண்டே கேட்டான். அவளோ, அவன் குரல் எட்டாத இடத்திற்கு, அவன் பார்வையில் படமுடியாத தொலைவிற்குத் தொலைந்து போனவள்போல் நின்றாள்.

முத்தையா, முன்னாலும், பின்னாலும் நகர்ந்தபடியே சபதமிட்டான்.

''போராடுறது வரைக்கும் போராடிப் பார்ப்போம். முடியாவிட்டால், இந்தச் செய்தியில் சம்பந்தப்பட்ட ஒருத்தனையாவது,

குத்திக் கொல்லப் போறேன். கழுத்து வேறு தலைவேறாய் ஆக்கப் போறேன். இதனால போலீசில கைதாகி, கோர்ட்ல விசாரணை வரும். அப்போ என் ஆசான் பட்ட பாட்டையும், அவர் மகள் பட்ட பாட்டையும் விளக்கி, கொலைக்கான காரணத்தைச் சொல்லுவேன். அப்போ இரண்டு பத்திரிகையாவது பேராசிரியரைப் பற்றி, நான் கொடுக்கும் விவரங்களை வெளியிடாமலா இருக்கும்? மேகலா! ஏன் அப்படி என்னைப் பார்க்கிறே? நான் சொல்றது சத்தியம். என்னை நம்பும்மா... மேகலா... மேகல்..."

முத்தையாவையே ஏறிட்டுப் பார்த்தபடி நின்ற மேகலாவின் விழிகளில், மெள்ள மெள்ள நீர் சுரந்தது. அவள் விழியாட்டாது பார்த்தபடியால், கண்ணீர் அணை நீராய், விழிகளிலேயே தேங்கி நின்றது. அவ்வளவுதான், மேகலா, அவன் கழுத்தில் கைகளை கோர்த்துக்கொண்டு, அவன் மார்பில் சாய்ந்தாள். அவள், கொலை செய்யப் போய்விடக் கூடாது என்பதுபோல், அவனை ஆரத் தழுவிக் கொண்டு, முதுகை, உடும்புபோல் பற்றியபடி, விம்மினாள். கேவினாள்.

மேகலா, அவளிடமிருந்து விடுபட்டு, ஒரு வாலிபன்மேல், அப்படி சாய்ந்த உணர்வற்று உள்ளங்கைகளில் முகம் ஊன்றினாள். அவ்வப்போது, கூரையையும், பத்திரிகைகளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டாள். முத்தையாவும் மௌனியாகி, மனதிற்குள் பேசிக் கொண்டான். பத்திரிகைகளின் பாதிப்பில், இருவரும் பாதியாட்களாய் உடலாய் சுருங்கி உள்ளத்தால் கசங்கிப் போனார்கள். கால, நேரத்தைக் கடந்தவர்களாய், அவர்கள், அதைக் கடத்திக் கொண்டிருந்தபோது, பாதிக் கதவு வழியாக, வழக்கத்திற்கு விரோதமாய், பேராசிரியர். பெருமாள்சாமி, பூனைமாதிரி வந்து நின்றார். முத்தையாவும், மேகலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்களே தவிர, பேராசிரியரைப் பார்க்கவில்லை. அவரோ, ஆனந்தக் கூச்சலிட்டார்.

"அடடே... முத்தையாவா... ப்ளீஸ் கன்கிராஜுலேட் மீ.... இன்றைக்கு அப்பீல் மனு. ஹைகோர்ட்ல விசாரணைக்கு போஸ்ட் ஆயிட்டு. நெக்ஸ்ட் வீக் விசாரணை இருக்குமாம். அடேயப்பா! இதுக்கு நான் பட்டபாடு." கிளார்க் பசங்க இன்னைக்கும் என்னை டபாய்க்கப் பார்த்தாங்க. மனுவை ஜட்ஜ்கிட்டே காட்டாமலே வச்சுருந்தாங்க. கேட்டால், மெட்ரோ மாஜிஸ்டிரேட் தீர்ப்போட நகலுல, முத்திரை சரியாய் விழலியாம். என் கையெழுத்து இரண்டும் ஒண்ணுக்கு ஒண்ணு வித்தியாசமாய் இருக்குதாம். எனக்கு வந்ததே கோபம். 'யோவ்... நான் காசு கொடுக்கலன்னு பேப்பரை நகர்த்தாமல் ஒரு வாரம் வச்சது நியாயம். அதுக்குமேல் வைக்கிறது அநியாயமய்யா. எனக்குப் பின்னால வந்த மனுக்கள மட்டும் கொடுத்திட்டீங்க.

இன்றைக்கு ரெண்டுல ஒன்று தெரியணும். நானே.... ஜட்ஜ சேம்பர்ல சந்திச்சு... நீங்க 'சம்திங்காய்' என்னைப் பார்க்கிறதைச் சொல்லப் போறேன். அவரோட சேம்பர் எங்கேய்யா இருக்குதுன்னு போட்டேன் ஒரு போடு. பயல்க அரண்டுட்டாங்க. நாற்காலியைக் காட்டி உட்காரச் சொன்னாங்க. ஒன் ஹவர் 'வெயிட் சார். பிளீஸ்.' ஏகப்பட்ட ராஜமரியாதை. அவங்க சொன்னது மாதிரியே, மனுவில அடுத்தவாரம் வென்னஸ்டேய் ஹியரிங்குக்கு எடுத்துக்க ஜட்ஜ்கிட்டே உத்திரவு வாங்கிட்டாங்க. முன்னால... என்னைப் புழுவைப் பார்க்கிற புலி மாதிரி பார்த்தவங்க, இன்னைக்கு புலியைப் பார்க்கிற புழு மாதிரி நெளிஞ்சாங்க. இதுல இருந்து என்ன தெரியுது? சொல்லுங்க பார்க்கலாம்."

பேராசிரியர், மகளையும், மாணவனையும் இறங்கிப் பார்த்தார். அவர்களோ குனிந்த தலை நிமிராமல் இருந்தார்கள். ஆனாலும், அவர் உற்சாகம் குறையாமலே தொடர்ந்தார்.

"இதுல இருந்த என்ன தெரியுதுன்னா, உருட்டி மிரட்டி அதிகாரத்தை தப்பாய் பயன்படுத்தி காசு பறிக்கிற பசங்க. மனசுக்குள்ளே நிசமாவே கோழைப் பயலுங்க. லேசாய் மிரட்டினால் போதும்... தலையைப் பிடித்த கையை எடுத்து, காலைப் பிடிப்பாங்க. வாத்துங்க கூட்டமாய் போகும்போது, வேட்டைக்காரன் சும்மா ஆகாயத்தை நோக்கிச் சுட்டால் போதும். டுமீல்னு சத்தம்கேட்டு எல்லா வாத்துக்களும், "நாம செத்துட்டோம் போலுக்கு"ன்னு சுருண்டு தரையில தானா விழுமாம். இதுமாதிரிதான் ஊழல் பேர்வழிங்க, வாத்துப் பசங்க. ஏதாவது ஒருவனுக்கு ஒண்ணுன்னா, மொத்தமா பொத்துன்னு விழுந்திடுவாங்க. ஆமா, என்ன வந்தது ஒங்களுக்கு? என்னை ஏன் கன்கிராஜுலேட் பண்ணல? வாட் இஸ் திஸ் நான்சென்ஸ்? வாட் ஹேப்பண்ட் டு யூ?"

மேகலாவும், முத்தையாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவள் சொல்லட்டும் என்று இவனும், இவன் சொல்லட்டும் என்று வஅளும் போட்டி போட்டார்கள். அப்பாவைப் பார்த்த மேகலா, அவர் கண்கள், தன்னைச் சந்திக்க போனபோது, தலையைத் தாழ்த்திக் கொண்டாள். இதற்குள் பேராசிரியரே, 'யார் பேப்பர் வாங்கிட்டு வந்தது' என்று சொன்னபடியே ஒரு பத்திரிகையை எடுத்து சாவகாசமாகப் படித்தவர், தலையை குலுக்கினார். பைக்குள் இருந்த கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டார். படித்ததை கீழே போட்டுவிட்டு, இன்னொன்றைப் பிரித்தார். இருபது நிமிடம் கழித்து, எல்லாவற்றையும் கீழே போட்டுவிட்டு, பொத்தென்று நாற்காலியில் விழுந்தார். சத்தம்கேட்டு, மேகலா, கைகளை விலக்கிப் பார்த்தாள். சப்பாணிபோல் தரையில் தவழ்ந்தபடியே, தந்தையை நோக்கி நகர்ந்து, அவர் மடியில் தலைபோட்டு, குலுங்கினாள். பேராசிரியரோ, கண்களை

முடியபடி கிடந்தார். மூச்சு மட்டும் பேரிரைச்சலாய் கேட்டது. முத்தையா, 'ஸார்... ஸார்...' என்று அவர் கைகளைப் பிடித்தான். பெருமாள்சாமியோ, போகக்கூடாத ஊருக்குள் போய், திரும்பக் கூடாத ஊருக்குள் திரும்பியவர்போல், கண்களைத் திறக்காமலே மகளின் தலையில் கைகளைப் போட்டபடி அரற்றினார்.

"அய்யய்யோ... என்னை சதை சதையாய் வெட்டித் தின்னுட்டாங்களே. ஒரு பத்திரிகைக்காரனுக்கு எதிராய் போராடியே படாதபாடு படுறேன். இப்போ இந்தப் பசங்க கண்டபடி எழுதி, வாடிக்கைக்காரன நல்லவனா செய்துட்டாங்களே. நான் எப்படி வெளில தலைகாட்டப் போறேனா? எப்படி உயிராட உலாவப் போறேனோ? நான் நிஜமாவே மானங்கெட்டவன்தான்! இவ்வளவு மானபங்கப்பட்டும், இன்னும் உயிர் இருக்குதுன்னா, நான் மானங்கெட்டவன்தான். அடேய் முத்தையா! நான் ஸ்திரிலோலனாம்; ஊழல் பேர்வழியாம்; அடேய் பாவிப் பசங்களே! ஒங்களுக்கு நான் என்ன கெடுதல்டா செய்தேன்? கரப்பான் பூச்சியைப் பார்த்தாக்கூட, அடிக்காமல் ஆகாரம் போடுறவனை யாடா, ஆகாரம் பண்ணுறிங்க? டாட்டா, பிர்லாவை எழுதத் துப்பில்லாத பசங்களா! ஒங்களுக்கு இந்தப் பெருமாள்சாமிதானாடா கிடைச்சேன்?"

அப்பாவின் புலம்பலில், மேகலா நிமிர்ந்தாள். அவரைப் பார்க்கப் பார்க்க, அவள் உதடுகள் துடித்தன. அவலம், ஆத்திரமாகியது. கண்ணீர், கொதி நீராகியது. கண்களைத் துடைத்து, இடுப்புச் சேலையை இறுக்கிக் கொண்டு, கண்ணுக்குத் தெரியாத எதிரிகளை ஒழித்துக் கட்டப் போகிறவள்போல், வாசலுக்கு வெளியே பார்த்தாள். முத்தையா, பதறிப் போய்க் கேட்டான்.

"ஸார், என்ன ஸார் இது, குழந்தை மாதிரி... ஒருத்தனால உங்களை சமாளிக்க முடியாதுன்னு, பலரை ஏவி விட்டிருக்கான். இதுக்குப் பயப்படக்கூடாது. பயமுறுத்தணும். ரெண்டுல ஒண்ணு பார்த்துடலாம் ஸார்."

"என்னப்பா நீ விஷயம் தெரியாமல் பேசுறே? ரெண்டுல, ஒண்ணு அவமானம். இன்னொன்று ஊமை கண்ட கனவு மாதிரி சும்மா இருக்கது. இதைத் தவிர, வேற என்ன இருக்குது? இந்த வேடிக்கைக்காரன் ஜெயிச்சாலும், அது ஒருவனை உதைச்சுட்டு, பலபேர் கிட்டே உதை வாங்குவது மாதிரி. இந்தப் பத்திரிகைகாரங்களை, நீயோ, நானே என்ன செய்ய முடியும்? போனவாரம், அப்பாவு போட்டோவைப் போட்டு, பத்திரிகைல இந்திரன், சந்திரன்னு செய்தி வந்தப்போ, என்னைப் பற்றி இசகுபிசகாய் செய்தி வருமுன்னு லேசாய் நினைச்சேன்; நினைச்சதுக்கு மேலேயே நடந்துட்டு. மகாமட்டமாய் நடந்துட்டு."

மேகலா, வாசலுக்கு முதுகுகாட்டி, தந்தைக்கு முகம் காட்டி நின்றபடி கர்ஜித்தாள்.

"என் உயிரைக் கொடுத்தாவது உண்மையை நிலை நாட்டுறேன். எந்தப் பத்திரிகை ஆபீஸ் முன்னாலாவது, உண்மையை வெளியிடும்படி, சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போறேன்."

முத்தையா, பேராசிரியருக்கு அருகே வந்தான். எங்கேயோ புறப்பட்டுப் போவதுபோல், ஒரு காலை முன்வைத்தபடி உரத்துக் கூவினான்.

"அப்பாவுவையும், இந்த பத்திரிகைக்கார பயல்களுல ஒருத்தனையாவது நான் கொலை செய்யப் போறேன். இந்தப் பயலுகள விடபோறது இல்ல... பயங்கரவாதிங்க எப்படி உருவாகுறாங்க என்கிறது எனக்கு இப்போதான் நல்லாவே புரியுது. விடமாட்டேன் சார்."

பேராசிரியர், மெள்ள மெள்ளக் கண் விழித்தார். கண்களைத் திறந்து போட்டாலும், அவருக்கு, மகள் எது, மாணவன் எது என்று தெரியவில்லை. ஒருவேளை குருடாகி விட்டோமோ என்று கண்களைக் கசக்கிப் பார்த்தார். எதிரே தோன்றிய இருவரின் உருவங்களு:ம, அப்படியும் மங்கலாய்ததான் தெரிந்தன. சிறிது நிதானப்பட்டு, அந்த இளைய தலைமுறையினரை, கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர் போல் பேசினார்.

"சரி... நடக்கட்டும்... நடத்தட்டும். வாழ்க்கையை பரீட்சை செய்து பாத்துட்டால் போச்சு. பாவிப் பயலுவ பரீட்சைப் பேப்பரை திருத்துறதுக்கு, காசு வாங்குவதாய் கூசாம எழுதிட்டாங்களே! பாரு முத்தையா! நம்ம காலேஜ்ல பரீட்சையில கால் மார்க், அரை மார்க் போடுற கஞ்ச புரபசர்னு எனக்குப் பேரு. என்னைப் போய்..."

"என்னப்பா நீங்க? முத்தையா ஒங்களை சந்தேகம் படுறது மாதிரி பேசுறிக்?"

"இவ்வளவு பத்திரிகைங்க எழுதும்போது, யாருக்கு வேணுமுன்னாலும் சந்தேகம் வரும். ஏன்... இப்போ... எனக்கே, என் மேல சந்தேகம் வருது. இது அச்சடித்த எழுத்தோட பலம்! அடேய் பாவிங்களா! ஒங்க கை அழுகிப் போகுண்டா. நானாடா ஸ்திரிலோலன்? காலேஜில படிக்கும்போது, எனக்கு லவ் லட்டர் எழுதுன பெண்ணுக்கு புத்திமதி சொல்லி, அந்த லட்டரை அவள் அப்பன் கிட்டேயும் காட்டுனவண்டா நான்! நானாடா..."

"ஏம்பா புலம்பணும்? இந்த பத்திரிகையில ஏதாவது ஒரு பத்திரிகை ஆபீஸ் போய் ரெய்டுகாரன் கொடுத்த பஞ்சனாமாவைக்

காட்டி உண்மையை வெளியிடச் சொல்வோம். போடாட்டால் அங்கேயே உயிரை விடுவோம் புறப்படுங்கப்பா."

"வேண்டாம்மா. பத்திரிகை தர்மம் என்கிறது, இரு தரப்பையும் விசாரிச்சு, இரண்டு பேர் வாதங்களையும் தன்னோட கருத்தையும் சேர்த்துப் போடணும். இதுதான் இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிசம். இந்தப் பசங்க, என்கிட்டே ஒரு வார்த்தை கேட்காமல், என் ரத்தத்தையே மையாக்கிட்டாங்க. இவங்க முகத்துல விழிக்கிறதே பாவம், வேண்டாம்."

முத்தையா, ஆற்றுப் படுத்தினான்.

"சார்! எனக்கு ஒரு யோசனை. எல்லாப் பசங்களும், வருமானவரி அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டித்தான் எழுதியிருக்காங்க. நாம் ஏன் வருமானவரி தலைமை அதிகாரியைப் பார்த்து இதுக்கு மறுப்பு அறிக்கை வெளியிடும்படி சொல்லக்கூடாது...? இன்கம்டாக்ஸ் மறுப்பை எல்லா பிரஸ்காரனும் போடுவான்."

"எனக்கு நம்பிக்கையில்ல. என்னோட பெயர் நீத்தார் நினைவுலதான் வருமுன்னு நினைச்சேன். இந்த பேஸ்ட்டர்ட்ஸ், நான் சாகாமலே, என் மகள் விளம்பரம் கொடுக்காமலே, எனக்கு உயிரோட சமாதி சட்டிட்டாங்க பாரு."

பேராசிரியர். பெருமாள்சாமி நிமிர்ந்து உட்கார்ந்தார். "சரி... பஞ்சனாமாவா... பாட்ர்திநாமாவா...அந்த..." என்று பேசியவர், வாசலில் ஒரு காலை வளைத்து நடந்து, தயங்கி நின்ற தாடி முளைத்த ஒருவரைப் பார்த்து "யாரு?" என்றார். எதேச்சையாக திரும்பிய முத்தையா, 'அப்பா' என்றான். மேகலா, வந்தவர் சிரமப் பட்டு நடக்கக் கூடாது என்பதற்காக, ஒரு நாற்காலியை கொண்டுவந்து வாசலருகே போட்டுவிட்டு "இது நம்ம முத்தையாவோட அப்பாப்பா. வாங்க, உட்காருங்க." என்றாள்.

பேராசிரியர் எழுந்து நின்று கரங்குவித்தார். பிறகு, அவரை இருகரம் பிடித்து நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு "பாவம் இந்தக் காலோடு ஏன் கஷ்டப்பட்டு வந்தீங்க?" என்று சொன்னபடியே, முத்தையாவை கண்டிப்போடு பார்த்தார்.

வந்தவர், அமைதியாகச் சொன்னார்.

"நான் அவனை கூப்பிட வர்ல. ஒங்களைப் பார்க்கத்தான் வந்தேன். முத்தையா வாங்குன பேப்பர்ல, ஒண்ணு எங்க வீட்ல கிடந்தது. எழுத்துக் கூட்டிப் படிச்சுப் பார்த்தேன். போக்கிரிப் பயலுவ, ஒங்களை மாதிரி தர்மதுரையை, இப்டி எழுதியிருக்காங்க பாரு. அதனால ஆறுதலாப் பார்த்துட்டுப் போகலாமுன்னு வந்தேன். அய்யா... நான்

படிக்காதவன். ரொம்பச் சின்னவன். ஒங்களுக்குக் கையாலேயோ மூளையாலேயோ உதவ முடியாதவன். ராமபிரான்கிட்ட, அணில் காட்டுன அன்பு மாதிரி காட்டத்தான் தெரியும். இந்தப் புறம்போக்குப் பயலுவ எழுதுனதைப்பற்றி அய்யா பெரிசாய் எடுக்கப்படாது. இவனுவ, பெத்த தாயும், கட்டுன பெண்டாட்டியும் செய்யுற தப்புத்தண்டாக்களை ஒரு அப்பாவிப் பெண்மேல போட்டு எழுதுறவனுவ. ஒங்களுக்கு ஒரு குறையும் வராது."

பேராசிரியர், விம்மிப்புடைத்து அவரைக் கரங்களால் பிடித்துக் கொண்டார். பிறகு 'இந்த நாட்ல எல்லாப் பாடங்களுக்கும் காலேஜ் இருக்கு. ஆனால் மனிதாபிமானத்துக்குத்தான் காலேஜ் இல்ல. அப்படி ஒரு காலேஜ் வந்தால், அதுல பிரின்ஸ்பாலாய் இருக்க ஒங்களுக்குத்தான் தகுதி உண்டு. இதைப் புகழ்ச்சிக்காகச் சொல்லல. அந்த காலேஜ்ல இருபது வருஷமாய் மாரடிச்சேன். எவன் கிட்டேயும் வம்பு தும்புக்குப் போனது கிடையாது. அப்படி இருந்தும் வாத்தியார் பயலுவ ஒருத்தன் கூட எட்டிப் பார்க்கல. ஆனால் முன்னப் பின்ன தெரியாத நீங்க, கஷ்டப்பட்டு வந்து என்னைப் பாக்கறீங்க. நிங்க கால் ஒடிஞ்சு கிடந்தப்போ, நான் வந்து பாத்திருக்கணும்."

"அய்யா கஷ்டத்துல இதை எப்படி எதிர்பார்ககது? ஒடிஞ்ச காலை நிமிர்த்திடலாம். வளைஞ்ச மானத்தை நிமிர்த்துறதுதான் கஷ்டம். இந்தக் கஷ்டத்துல இருந்து எப்படியும் நீங்க மீண்டாகணும். வாத்தியாருங்க வராததுக்கு அய்யா வருத்தப்படக் கூடாது. ஒருவேளை மனசுக்குள்ளேயே அவங்களுக்கு அனுதாபம் இருக்கும். பயத்துல வராமல் இருக்கலாம். இந்தக் காலத்துல வேலை கிடைக்கிறது பெரிசுல்ல; அதைக் கட்டிக் காப்பதுதான் முக்கியமாய் போச்சு. வேலையை விடுறது, உயிரை விடுறது மாதிரி ஆயிட்டு."

"அதுக்காக ஒருத்தனுக்குக் கூடவா தன்மானம் இல்ல?"

"ஒருவேளை, தன்மானம் அதிகமானதும், வராததுக்கு ஒரு காரணமாய் இருக்கலாம். நீங்க, வம்பு தும்புக்குப் போகதவர்னு சொன்னீங்க. அப்படின்னா அவங்க கஷ்ட நஷ்டத்துல நீங்க பங்கெடுக்கலன்னு ஆகுது. அதனால அவங்களை, நீங்களும் நம்ம கஷ்டத்துலர பங்கெடுக்கணுமுன்னு எதிர்பார்க்கக் கூடாது. அய்யா, நான் படியாதவன்; தப்பாய் பேசியிருந்தால் மன்னிக்கணும்."

பேராசிரியர், அவரை, ஆச்சரியமாக பார்த்தார். இவ்வளவு நாளும் நானே சிந்திக்காத ஒரு மெய்யான விஷயத்தை எப்படிச் சொல்லிட்டார்! படிக்கிறவன் மூளை, தண்டவாளத்துல ஓடுற ரயில் மாதிரி. ஒரே தடந்தான், அதுக்குத் தெரியும். ஆனால் படிக்காதவன் மைன்ட், பிரச்சனையை பலவழியில் சிந்திக்குமுன்னு, அந்தக் காலத்துல அப்பா சொன்னது எவ்வளவு பெரிய உண்மை!"

# 22

பேராசிரியரும், முத்தையாவும் 'தம்' பிடித்து ஒரு பஸ்ஸில் ஏறி, உட்கார இடமில்லாமல், நின்று கொண்டிருந்தார்கள். ஒரு பயணி, கையில் இருந்த ஒரு பத்திரிகையை காட்டியும், ஆட்டியும், சத்தம் போட்டு ஒருவரிடம் பேசிச் கெண்டிருந்தார்.

"பார்த்தீங்களா! ஒரு காலஜ் பிரின்ஸ்பாலே, எவ்வளவு அயோக்கியத்தனம் செய்திருக்கான்னு. அட்மிஷனுக்குக் காசு வாங்கினால் கூட தேவல. கிழட்டு வயசுலயும் காதல் லட்டர் எழுதுறானாம். தோ.... இந்த அடையார் பக்கம்தான் இருக்கானாம். இவனை மாதிரி ஆட்களை நடுரோட்ல வச்சு சுடாமல், நாடு எப்படி உருப்படும்...? சும்மா சட்டுன்னு உயிர உடனே எடுத்துடப்படாது; ஒரு கையையாவது காலையாவது எடுக்கணும்.",

கீழே இறங்கப்போன பேராசிரியரை, முத்தையா அவர் முன் பக்கம், கையால் அணை கொடுத்து தடுத்தான். பல பயணிகள், பத்திரிகைகள் காட்டிய ஊழல் மன்னரைப் பற்றியும், நாட்டின் பொதுவான நிலை பற்றியும் கெட்ட கெட்ட வார்த்தைகளில் விமர்சித்தார்கள். பேராசிரியரைவிட, அவருடைய இறந்துபோன அம்மாவுக்கும், இல்லாத அக்காள் தங்கைகளுக்கும் கிடைத்தது அதிகம்.

பஸ், நுங்கம்பாக்கம் வந்ததும், பேராசிரிரும், மாணவனும் கீழே இறங்கினார்கள். ஆசிரியரின் கையை மாணவன் ஆதரவாகப் பிடித்துக் கொண்டே தன்பாட்டுக்குப் பேசினான்:

"இந்த ஆசாமிங்க பேசுனத, ஒரு பிரின்ஸ்பாலை திட்டுனதாய் நினைக்காமல், தங்களுக்கு தெரியப்படுத்திய கொடுமைக்கு எதிராய் பேசுறதாய் நினைக்கணும் ஸார்... ஆக நாட்ல கொடுமைக்கு எதிராய் கோபம் இருக்கது சந்தோஷப்படவேண்டிய ஒன்று."

"என்னப்பா நீ? நான் என்ன கொடுமையை செய்திட்டேன்? இந்தப் பசங்க ·ான் தலையை ஏன் உருட்டணும்?"

"போன மாசம் இதே இந்த சென்னை நகர்ல, பல பெண்கள் சேர்ந்த ஆபாச இலக்கிய ஒழிப்பு மாநாடுன்னு ஊர்வலம் போட்டு நடத்துனாங்க."

"நம்ம விஷயத்தைப் பேசுப்பா."

"நம்ம விஷயத்தோட சம்பந்தப்பட்டதாலதான் சொல்றேன் சார். இந்த பெண்கள் ஆபாசத்துக்கு எதிராய் போராட்டமுன்னு ஒரு

போஸ்டர் அடிச்சு, அதுல பேச்சாளர் லிஸ்ட்ல, இரண்டு எழுத்தாளர்களோட பேரையும் போட்டாங்க. இந்த இரண்டுபேர்தான் இன்றைய வியாபாரப் பத்திரிகள்ல ஆபாச ஆசபாசங்களைச் சித்தரிக்கிறவங்க. இவங்களும் ஆபாசத்தை எதிர்ச்சுப் பேசுறதாய் போட்டிருக்கு. எப்படி இருக்கு பாருங்க! திருடனே, திருடன் திருடன்னு துரத்தி, நல்லவனைப் பிடிக்கிறான். யோக்கியனாய் வாழும் ஒருவன், யோக்கியதை நெறிகள் பேசப்படும் போதும் தாக்கப்படுகிறான். அல்லது புறக்கணிக்கப் படுகிறான். ஒரு நேர்மையாளனின் நியாயமான நடவடிக்கைகளே, அவனுக்கு எதிராய் அநியாயமான சாட்சியங்களாய் ஆக்கப்படுகின்றன. எத்தன நாளைக்கு இப்படின்னு பார்த்துடலாம். எட்டி நடங்க சார்."

பேராசிரியர், எட்டி நடக்காமல், முத்தையாவை நின்று பார்த்தார். அதிசயத்துப் பார்த்தார். பிறகு சந்தேகம் கேட்டார்.

"ஏம்பா, இன்கம்டாக்ஸ்காரன் மறுப்பறிக்கைவிட சம்மதிப்பானா?"

"விட்டுத்தான் ஸார் ஆகணும். அதுதானே முறை."

"இவன் விட்டாமுன்னால் எல்லாப் பயலும் வாயை மூடிக்கிட்டுப் பிரசுரிப்பான். சரி எட்டி நட."

வருமானவரி இலாகாவில் அன்றே மறுப்பறிக்கை போய், மறுநாளே எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வரவேண்டும் என்ற ஆவலில், ஆவேசத்தில், பேராசிரியர் கால்களை எட்டிப் போட்டார். முத்தையாவால், அவரோடு இணையாக செல்வதற்கு ஓட வேண்டியதிருந்தது...

அந்த வருமானவரி அலுவலகம், பிரம்மாண்டமான் பல மாடிக் கட்டிட வளாகங்களாய் தோற்றம் காட்டக்கூடியது. அந்த வளாகத்திற்குள் மனிதக் கும்பலும், கார்க் கும்பலும், ஸ்கூட்டர் குவியலும் காட்சி தந்தன. இந்தத் துறைக்கு, ஒரே ஒரு சீஃப் கமிஷனர்தான் இருப்பார் என்று நினைத்த இருவருக்கும் பல சீஃப் கமிஷனர்கள் இருப்பது அங்கு போனபிறகுதான் தெரிந்தது. எந்த சீப்பை எடுத்து தலைவாருவது என்று தெரியாமல் தத்தளித்தவர்கள், யாரிடமெல்லாமோ விசாரித்து எப்படியோ சொந்த சீப்பை அடையாளம் கண்டார்கள். மூன்றாவது மாடியாம். முத்தையா, லி ப்டிற்காக பட்டனை அழுத்தியபோது, பொறுமை இழந்த பேராசிரியர் அவனை தூக்காத குறையாகப் பிடித்திழுத்து படியேறினார். இப்பவே இவங்க அறிக்கை விட்டால்தான், பேப்பர்காரங்க படிச்சு, எடிட் செய்து, கம்போஸ் பண்ண டயம் இருக்கும். இல்லன்னா, நாளை மறுநாளைக்குத்தான் பத்திரிகைகளில் செய்தியாக வரும். ஒருநாள் வரைக்கும், மானங்கெட்டவனாய் யாரால் இருக்க முடியும்?

கமிஷனரின் 'பி.ஏ.' அறைக்குள் இருவரும் பிரவேசித்தார்கள். அந்த நேர்முக உதவியாளர், 'என்ன' என்று கேட்டபோது, பேராசிரியர், பயங்கரமாய் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தார். அந்த ஆசாமி, அவர் முகத்தைவிட்டு விட்டு, ஒரு பைலை பார்க்கக் குனிந்தபோது பேராசிரியர் பேசினார்.

"சீப் கமிஷனரை நான் பார்க்கணும்."

"அப்பாய்மெண்ட் வாங்குனிங்களா?"

"அதுக்கு டயம் இல்ல."

"இவருக்கும் டயம் இல்ல. ரொம்ப பிஸ்ஸி."

"பெருமாள்சாமி வந்திருக்கான்னு சொல்லுங்க."

"ரெட்லைட் எரியுது, உள்ளே போகக் கூடாது."

"நீங்க போய் பெருமாள்சாமின்னு சொல்லுங்கய்யா... உடனே பச்சை விளக்கு எரியும்."

'பி.ஏ.' யோசித்தார். இவர் ஒருவேளை இன்டெலிஜண்ட் அதிகாரியோ? சி.பி.ஐ. அபிஷியலோ? மாறுவேடம் போட்டு வந்த மத்திய மந்திரியோ? உள்ளே ஓடினார். ஒரு நிமிட நேரத்தில் எள்ளும் கொள்ளுமாய் வெடித்தார்.

"என்ன சார் நீங்க? பெரிய வி.ஐ.பி. மாதிரி சொல்லி அனுப்பிட்டிங்க. அவர் கத்துறார். எதுன்னாலும் எழுதிக் கொடுத்துட்டுப் போகச் சொல்றார்."

பேராசிரியருக்கு, சப்தநாடிகளும் கொதித்தன. பி.ஏ.வை. முறைத்தபடி, கமிஷனரின் கதவைத் தள்ளினார். அதைப்பார்த்த 'பி.ஏ.' கத்துவதற்கு டயம் இல்லாமல் பேராசிரிரையைப் பிடித்திழுப்பதற்காக, மேஜை, நாற்காலி போன்ற வேலிகளைத் தாண்டியபோது, பேராசிரியர் வெளியே காணப்படவில்லை. உள்ளுக்குள் ஓடிய 'பி.ஏ.'வின் பின்னால், ஆச்சரித்து நின்ற முத்தையாவும் ஓடினான். கமிஷனர் தன்னைத் தப்பாக நினைக்கக் கூடாது என்பதற்காக, 'பி.ஏ.' 'எப்படி சார் உள்ளே வரலாம்?' என்று குரலை உயர்த்தியபோது, பேராசிரியர், சீப் கமிஷனர் எதிரே கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்துகொண்டு, முத்தையாவையும் உட்காரும்படி கண்ணடித்தார். அருகே இருந்த ஒருவரைப் பார்த்து 'ஹலோ' என்றார். அவர் வீட்டை 'ரெய்ட்' செய்த அதே அஸிஸ்டென்ட் டைரெக்டர். எதையோ தலைகுனிந்து செய்து கொண்டிருந்த சீப் கமிஷனர், வெளிச்சத்தோடு எரிந்த ரெட் லைட்டையும், கோபத்தோடு எரிந்த 'பி.ஏ' வையும், குரோதமாகப் பார்த்தபோது, பேராசிரியர் பேசினார்.:

என் பேர் பெருமாள்சாமிங்க. வடசென்னைக் கல்லூரியின் சஸ்பென்டட் பிரின்ஸ்பால். இன்னைக்குப் பேப்பர்ல வந்த சமாச்சாரமாய்...

சீப் தலையை நிமிர்த்தினார்.

"ஐ.....ஸி... குயிக்கா சொல்லுங்க. நான் பிஸ்ஸி."

"சார்...பிளீஸ். சார்... நான் சொல்றது வரைக்கும் பைலைப் பார்த்து பிஸ்ஸியாகாமல், ஒரு அஞ்சு நிமிஷம் கேளுங்க சார். இதோ இருக்காரே, ஒங்க அஸிஸ்டெண்ட் டைரக்டர், இவர் தலைமையில் என் பாடாதி வீட்ல ரெய்டு நடந்து, எனக்குக் கொடுத்த பஞ்சாரமா இது. பிளீஸ் பாருங்க சார். எதுவுமே கிடைக்கலன்னு எழுதியிருக்கதை நல்லாப் பாருங்க சார். நிலைமை இப்படி இருக்க, இன்றைக்கு, என்னைப் பற்றி வந்த செய்திகளைப் பார்த்திருப்பீங்க. நானா சார் வீடு வச்சிருக்கேன்? என் வீட்லயா சார் ஒங்க ஆட்கள் பத்து லட்சம் ருபாய் எடுத்தாங்க?

சீப், சமர்த்தரானார்.

"பத்திரிகை செய்தியில் ஒங்க பெயர் இல்லையே! உங்களைத்தான் எழுதியிருக்குன்னு ஏன் எடுத்துக்கிறீங்க?"

"எனக்கு மானம் இருக்கதால எடுக்கேன். என்ன சார், நீங்களும் அந்த பேப்பர்காரங்க எழுதுனது மாதிரியே பேசுறீங்களே, வடசென்னை கல்லூரியில சஸ்பென்டான பிரின்ஸ்பால், அடையார் பக்கம் குடியிருக்கிறவர். ஐ.டி. ரெய்டானவர்-இது என்னைத் தவிர யார் சார்? ஆபீசர்களே மடையங்கன்னு இங்கே இருந்து சொல்றேன்னு வச்சுக்கோங்கோ, அது ஒங்களைத் தவிர வேற யாரை சார் குறிக்கும்?"

"பீ காம் ஜென்டில்மேன். ஐ... ஆம் ஸாரி..."

"ஒங்க அதிகாரி எவனோதான் சார் பத்திரிகைகளுக்கு பொய் நியூஸ் கொடுத்திருக்கான்."

"நோ... நோ.. நானும் செக்கப் பண்ணுனேன்... என் ஆபீஸ் ஸ்டாப் யாரும் அப்படிக் கொடுக்கல. உங்களுக்கு வேண்டாதவங்க யாரோ ரெய்ட் நடந்ததைப் பயன்படுத்தி, விஷமம் பண்ணிட்டாங்க.... நாங்க இப்படி அநாகரீகமாய் பொய்யும் புழுகுமாய் புராம்ட் செய்ய மாட்டோம்."

"தேங்க் யூ ஸார். அப்படின்னா பத்திரிகைகளுக்கு நீங்க ஒரு மறுப்பு செய்தி விடுங்கோ ஸார்?"

"வாட்? டினையல் ஸ்டேட்மென்டா? எங்க வேல இல்ல அது"

"ஒங்களை குவாட் செய்திருக்காங்கேள"

"ஆயிரம் பேர் குவாட் செய்வான். ஒவ்வொரு நியூஸுக்கும் டினையல்னு வந்தால், அப்புறம் நாங்களே ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டியதிருக்கும்".

"நீங்க ரெய்ட் செய்ததால்தானே ஸார் நியூஸே வந்தது. என்ன நடந்ததுன்னு மட்டுமாவது அறிக்கை விடுங்க ஸார்."

"ஸாரி... எங்களால இயலாது.... ரூல்ஸ் இடம் கொடுக்கல."

"அப்படின்னா, எப்படி ஸார் ரெய்ட் செய்யலாம்?"

"இப்பவும் சொல்றேன், ஒங்க மேல சந்தேகம் வந்தால், இன்னும்கூட நாங்க ரெய்ட் செய்யலாம்."

"அப்போதும் பத்திரிகையில, இதே மாதிரி செய்திகள் வரும். நீங்க அப்போவும் இதே பதிலைத்தான் சொல்விங்க, இல்லையா? முத்தையா... நீ பேசப்படாது."

"யூ ஆர் அஜிடேட்டர்ட்... ஐ அம் ஸாரி பார் யூ... பட்..... மறுப்பு ஸ்டேட்மெண்ட் கொடுக்க.... ரூல்ஸ் இடம் கொடுக்கல..."

"இரண்டு மாதத்திற்கு முன்னால... ஹைதராபாத்ல... ஒரு பழைய மகாராஜா வீட்ல... ஐ.டி. ரெய்ட் நடந்ததாய... வந்த பத்திரிகைச் செய்திகளை... ஒங்க டிரபார்ட்மென்டே மறுத்திருந்ததே... ஒருவேளை... இந்த டினையல்... பழைய மகாராஜாக்களுக்குத்தான் பொருந்தும்... பழைய பிரின்ஸபாலுக்குக் கிடையாதா.?"

"அது என்னோட சர்க்கிள் இல்ல. நானா இருந்தால் அப்படி ஒரு மறுப்பறிக்கை வெளியிட மாட்டேன். தேட்ஸ் ஆல்."

"அதாவது நீங்க என் வீட்டை ரெய்ட் செய்வீங்க. இதை வச்சு பிரஸ்காரன் என்னையே ரெய்ட் செய்வான். நீங்க வாயை மூடிட்டு இருப்பீங்க. அப்படின்னா நீங்க பஞ்சாரமா கொடுக்கிறதுல என்ன ஸார் அர்த்தம்? இந்தா பாருங்க, அஸிஸ்டெண்ட் டைரக்டர்! அப்போ ரெய்ட் செய்யும்போது, ஒங்க வாய் எப்படிப் பேசிச்சு? இப்போ ஏன் ஸார் சும்மா இருக்கு?"

"அதுதான் சொல்ல வேண்டியதை எல்லாம், சிசியே சொல்லிட்டாரே."

"சீப் கமிஷனர் ஸார்! நான் இந்த நாட்டின் ஒரு கௌரவமான பிரஜை. சட்டத்தை, விரும்பாட்டாலும் மதிப்பவன், நேர்மையானவன்."

"இதை நான் மறுக்கலியே."

“ஒங்களை அறிந்தோ அறியாமலோ என் பேர் டேமேஜ் ஆயிட்டுது. பிளிஸ் இஷ்யு டினையல்”

“நத்திங் டுயிங். ஸாரி... பட், ஐ ஹேவ் ஸிம்பதி பார் யூ.”

“ஸிம்பதி வித்தவுட் ஆக்ஷன் இஸ் லைக் இம்பொடன்ஸ். அதாவது செயல்படாத இறக்கம் பொட்டைத்தனமானது.”

“யு ஆர் அஜிடேட்டட். பிளீஸ் கெட் அவுட்.”

“ஒங்க சாதனைகளை மட்டும் பேப்பர்கார பேமானிப் பயல்ககிட்டே சொல்லிப் பெரிசாய் போடத் தெரியுது. வீட்டுக்குள்ளே வந்து, என்னோட பொருட்களை தாறுமாறாய் புரட்டத் தெரியுது... எதுவும் இல்லன்னு கண்டு பிடிக்கத் தெரியுது... ஆனால் பத்திரிகையில சொல்லத் தெரியாது. ஏன்னா என் வீட்ல எதுவும் சட்ட விரோதமாய் இல்லாதது ஒங்க சாதனைக்கு ஒரு சோதனை பாருங்க. நீங்க வீட்டை ரெய்ட் செய்திங்க; இதனால பிரஸ்காரங்க என்னையே ரெய்ட் செய்யுறாங்க.”

“டோண்ட் வேஸ்ட் மை டயம். எனக்கு நிறைய வேலை இருக்குது. எங்க டிபார்ட்மென்டோட நிலைமையை சொல்லிட்டேன். நீங்க எத்தனை தடவை சொன்னாலும் இதுதான் பதில்.”

“ஹைதராபாத்ல மட்டும்...”

“அதை ஹைதராபாத்ல போய் கேளுங்க. என் பிராணனை ஏன் வாங்குறீங்க? பிரசன்ட் ஸ்டாண்டர்ட் ஆப் ஜர்னலிசம் இஸ் வெறி பேட். என்ன செய்யுறது. ஓ....கே... மிஸ்டர்...”

“என் பேரு பெருமாள்சாமி!”

“ஓ.கே. மிஸ்டர் பெருமாள்சாமி! ஏ.டி... அப்புறம் அந்த கோடம்பாக்கம் ரெய்ட்ல...”

பெருமாள்சாமி எழுந்தார். ஏதோ கத்தப் போன முத்தையாவின் கையை அழுந்தப் பிடித்தபடியே, சீப்பை பார்த்தார். அவரோ, பெருமாள்சாமியே அங்கே இல்லாததுபோல் அனுமானித்துக் கொண்டு, அஸிஸ்டெண்ட் டைரக்டரிடம் பேசிக் கொண்டிருந்தார். பேராசிரியர், அவரை வாய் துடிக்கப் பார்த்தார். பிறகு, முத்தையாவை ஊன்றுகோல்போல் பிடித்தபடி, வெளியேறினார்.

இருவரும், அத்தனைக் கூட்டத்திலும் தனிமைப்பட்டு நடந்தார்கள். பஸ்நிலையத்தைக் கடப்பது தெரியாமல் கடந்து நடந்தார்கள். பேராசிரியர், ‘சட்’டென்று நின்று ஆகாயத்தைப் பார்த்தார். பிறகு, முத்தையாவுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"இது கண்ணாடி சமூகம் சார். இதனாலதான் எல்லாமே எதிரும் புதிருமாய் தெரியுது. பொய், உண்மை முலாத்தோட உலா வருது! உண்மையோ பொய்பாசி படர்ந்து மூலையில கிடக்குது. இதை நாம் அங்கீகரிக்கலைன்னாலும் ஒப்புக்கொண்டு, மேற்கொண்டு எதையாவது செய்யணும்."

"முத்தையா, என் தலை சுத்துது. என்னைக் கொஞ்சம் பிடிச்சுக்கோ."

## 23

அந்த தொழிற்சாலையின் ஜெனரல்-மானேஜர், தனது, 'ஏஸி' அறைக்குள் ஓசியாக வந்த வாடிக்கைப் பத்திரிகையையே, முறைத்துக் கொண்டிருந்தார். நாளைக்கு வெளியாகும் வாடிக்கைப் பத்திரிகையின் ஒரு பிரதி இன்றைக்கே, அவர் கைக்கு வந்து விட்டது. அதுவும் 'வித் பெஸ்ட் காம்ப்ளிமென்ட்ஸ்' என்று அட்டையிலேயே எழுதப்பட்டு, அதற்குக் கீழே வேடிக்கையின் ஒற்றை முதலாளியின் சொந்த கையெழுத்தோடு, மூன்றாவது பக்கத்துலேயே, அவரது மகள் ஆடிய புகைப்படங்கஙள. "பரத நாட்டியத்திற்குக் கிடைத்திருக்கும் புரதச் சத்து" என்ற தலைப்பில், டாட்டரின் பல்வேறு நாட்டிய போஸ்களைக் கொண்ட ஒரு பக்க கலர் பிச்சர். கட்டுரையை, மேலும் கண்ணால் தடவிப் பார்த்தபோது, 'இந்த நாட்டிய அற்புதத்தைப் பெற்ற அதிசய மனிதர் ஆனந்த்' என்ற வரிகளில் சாவாரி செய்யும், அவருடைய புகைப்படம்.

ஜி.எம்., அந்தப் பத்திரிகையின் அந்தப் பக்கத்தையே பார்த்தபடி சுழல் நாற்காலியை சுற்ற வைத்து, சுழன்றார். இந்த தொழிற்சாலையில் நிர்வாகம், வேண்டுமென்றே கள்ள விவரங்களைக் காட்டி, நட்டக் கணக்கைக் காட்டி, குறைந்தபட்ச போனஸ்தான் கொடுக்க முடியும் என்று சொல்வது கேலிக்கூத்து என்றும் புள்ளி விவரங்களைக் காட்டி, போனஸ் கூட்டப்படவில்லையானால், வேலை நிறுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை என்று தொழிலாளர் சங்கம் கொடுத்திருக்கும் நோட்டீஸ் சம்பந்தப்பட்ட கோப்பை, மேஜையின் ஓதுக்குப்புறமாய் தள்ளிவிட்டு, தன் படத்தையே பார்த்தார். தமிழகத்தில் உள்ள அத்தனை மக்களும், தன் படத்தையே, வைத்த கண் வைத்தபடி பார்ப்பது போன்ற பிரமை. புராண ஈஸ்வரனை மோகினி பிடித்துக் கொண்டதுபோல் இந்த தொழிலீஸ்வரனை, மீண்டும் பப்ளிஸிட்டி மோகினி பிடித்துக்

கொண்டாள். இவரை, டெலிபோனை சுற்ற வைத்து ஆட்டிப் படைத்தாள்.

"வேடிக்கை எம்.டி.ங்களா? ஆமாம். நானே நானேதான் ஸார். ஒங்க பத்திரிகை வந்தது ஸார். தேங்க்ஸ் ஸார். போஸ்ட்லதான் வந்தது. என்ன, ஒங்க நிருபர்களை நேரில் கொடுக்கச் சொன்னீங்களா? பரவாயில்லை ஸார். அவங்களைத் திட்டாதிங்க. அப்புறம் ஸார்... பத்திரிகையைப் பார்த்தேன். ஒங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல. சின்ன விஷயமோ... பெரிய விஷயமோ... முடித்து வைக்கிறதுக்கு, நான் ஜவாப். சொல்லுங்க ஸார்.

ஜி.எம்., டெலிபோனில், எதிர்முனைக்கு சிறிது நேரம் 'உம்.' கொட்டிக் கொண்டே இருந்தார். பிறகு மீண்டும் பேசினார்.

"நான் பார்த்துக்கிறேன் ஸார். இதுல என்ன ஸார் பக்குவமாய் கேட்கிறதுக்கு இருக்குது? நான் ஒரு ஜி.எம். அவன் ஆட்டர்ஆல் ஒரு ஓர்க்கர். அதுவும் யூனியன்ல சேராத கருங்காலி. அப்படிப்பட்டவனை சமாளிக்கிறதா பெரிசு? டோன்ட் ஒர்ரி! நான் சொல்லி அவன் கேட்காட்டால், ஒண்ணு இந்த கம்பெனில நான் இருக்கணும், இல்லன்னா அவன் இருக்கணும். நாளைக்கே அவன் டாட்டர் எழுதிக் கொடுத்திட்டாள்னு ஒங்களுக்கு நானே டெலிபோன்ல சொல்லப்போறேன், போதுமா? நோ... தேங்க்ஸ் ஸார்... அப்புறம் ஸார்... அடுத்த வாரம்... லயன்ஸ் கிளப்ல பேசுறேன்... ஓகே ஸார்... இன்வைட்டேஷன் அனுப்புறேன் ஸார். ஒங்க ஸ்டாப் போட்டோகிராபரே வருவாரா? தேங்க்யூ ஸார்... டோண்ட் ஒர்ரி ஸார்... கன்னையாவை வழிக்குக் கொண்டுவாரது என் பொறுப்பு... பை...பை..."

டெலிபோனை வைத்த ஜி.எம்மிற்கு, ஆத்திரம் ஆத்திரமாக வந்தது இந்தக் கன்னையா, தன்னைப் பற்றியும் தன்னோட டாட்டரைப் பற்றியும் என்னதான் நெனைக்கிறான்? இவன் நான் சொல்லி கேட்காதது மாதிரி, டாட்டர்காரி, டிரஸ்ட் சேர்மன் அப்பாவு சொல்லி கேட்கலியாம். வாட் இஸ் திஸ்? பத்திரிகைகள்ல, இவ்வளவு அசிங்கம் அசிங்கமாய் வந்ததுனால, புரபஸர் பெருமாள்சாமி ஒரேயடியாய் படுத்துருவாருன்னு வேடிக்கை எம்.டி. நெனைச்சாராம். ஆனால் அவன் என்னடான்னா, இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்டும், பொய் செய்தி போட்ட பத்திரிகைகளும்ம மன்னிப்புக் கேட்டு, நஷ்டஈடு தரணுமுன்னு, ஹைகோர்ட்ல போட்ட ரிட் ஆப் மேண்டமஸ் அட்மிட் ஆகியிருக்காம். வாடிக்கை மேல போட்ட வழக்கும் மெட்ரோ பாலிட்டன்ல விழுந்து, ஹைகோர்ட்ல அப்பீலாய், அட்மிஷனாய் எழுந்து நிற்குதாம். இப்படிப்பட்ட இக்கட்டான சமயத்துல, இந்த கன்னையன் பிகு பண்ணட்டும்; அப்புறம் தெரியும் சேதி! கன்னையாவை எப்படி வழிக்குக் கொண்டு வாரது?

சிந்தனை வசப்பட்ட ஜி.எம்., சுழல் நாற்காலியை சுற்றாமல் வைத்தபோது, தொழிலாளர்களின் உத்தேச வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பேசுவதற்காகவும், 'கவுண்டர்' நடவடிக்கைகளை ஆலோசிப்பதற்காகவும், டெப்டி, அஸிஸ்டண்ட, ஜாயிண்ட், அடிஷனல் மானேஜர்கள், செக்யூரிட்டி ஆபீசர், பெர்ஸனல் ஆபீசர் உட்பட பலர் வந்து கூடினார்கள. ஜி.எம்., அவர்கள் கண்படும் படியாக, வாடிக்கைப் பத்திரிகையை பிரித்தார். அப்படியும் அவர்கள் கண்டுக்காதபோது, அவரே, இதைப் பாருங்க...' என்று, வாழைப்பழத்தை உரித்துக் கொடுப்பதுபோல், பத்திரிகையைப் பிரித்துக் கொடுத்தார். அவ்வளவுதான்... சபார்டினேட்டுகளுக்கிடையே, முட்டாள் தனத்திற்கு முழுப்போட்டி ஏற்பட்டது. ஒருவர் படிக்க, மற்றவர்கள் கேட்டார்கள். அப்புறம் ஒரே கசாமுசா பேச்சுக்கள்! அவரோட டாட்டர், நாட்டியம் ஆடுவதால், நாட்டியத்திற்குத்தான் பெருமையாம். ஜி.எம். எப்படி நிர்வாகக் கலையில் ஜீனியஸ்ஸோ, அப்படி அவர் டாட்டரும் நாட்டியக் கலையில் ஜீனியஸ்ஸாம். அவளுக்கு தேசிய பரிசு நிச்சயம் கிடைக்குமாம்.

ஜிஎம்மோ தலையைத் தாழ்த்தி ஒரு கோப்பைப் படிப்பது போல், பிகு செய்தார். அப்புறம் "இந்தப் பத்திரிகை எதுக்காக இப்படி அமர்க்களப்படுத்தணும்? ஐ டோன்ட் லைக் பப்ளிசிட்டி" என்றார். உடனே ஜூனியர் சகாக்கள் தங்கள் பாஸுக்கு, எப்படியெல்லாம் பப்ளிசிட்டி பிடிக்காது என்பதற்கு பப்ளிசிட்டி கொடுப்பது மாதிரி பேசினார்கள்.

ஒரு வழியாய், ஒருமணி நேரத்திற்கு சற்றே கூடுதலாக முகத்துதியை முடித்துக்கொண்டு, தொழிலாளர் பிரச்சனையை ஒப்புக்குப் பேசிவிட்டு, பேக்டரி பெர்ஸனல்கள் போய்விட்டார்கள். அவர்களின் புகழஞ்சலியை மாடு மாதிரி காதுகளில் மீண்டும் அசைபோட்ட ஜி.எம்., பெல்லடித்தார். அதன் சத்தம் ஓயும் முன்னாலேயே, யூனிபார பியூன் ஓடிவந்தார். "கன்னையாவை கூட்டி வாய்யா. ஒரு மினிட் கூட டிலேய் செய்யாமல், கையோட கூட்டி வா" என்றார்.

கால்மணி நேரத்தில், கன்னையா வந்தார். ஜி.எம்.மை, கண் நடுங்கப் பார்த்து, கை நடுங்கக் கும்பிட்டார். காக்கி நிஜாருக்குள்ளும், அதே போன்ற சட்டைக்குள்ளும், அந்த பூஞ்சையான உருவம், எதுவும் புரியாமல் தவித்துக் கொண்டிருந்தது. கையெல்லாம் ஒரே எண்ணெய். ஜி.எம். கத்தினார்:

"ஏன்யா, ஒரு ஜி.எம். அறைக்குள்ளே எப்படி வரணுமுன்னு ஒனக்குத் தெரியாதா?"

கன்னையா, தன்னை உள்ளே விட்டுவிட்டு, வெளியேறிக் கொண்டிருந்த பியூனின் அகலமான முதுகை, ஒடுக்கமாகப் பார்த்தார். அவர்தான் கை கழுவப் போனவரை, வழிமறித்துக் கூட்டி வந்தார். ஜி.எம்., சாவகாசமாகக் கேட்டார்.

"நீ... வர.. வர டிஸ்-ஒபிடியண்டாய் போய்க்கிட்டு இருக்கே."

"வேலைய ஒழுங்காத்தான்... ஷிப்ட் முடிஞ்ச பிறகுகூட செய்யுறேன் ஸார்..."

"ஒரு தொழிலாளியோட கடமையைப் பற்றி ஒனக்குத் தெரியுமா? வேலையில் மட்டும் விசுவாசமாய் இருந்து பிரயோஜனம் இல்லை. ஒன் வீட்டுக்கு சோறு போடுற பேக்டரி நிர்வாகம் சொல்றதை விசுவாசமாய் நடத்திக் காட்டணும். தெரியுமோ?"

"அதனால்தான்.... ஸ்டிரைக் நடந்தப்போகூட, வேலைக்கு வந்தேன் ஸார்...'

"குட்... வெரிகுட். அதனாலதான்... ஒன்கிட்டே நேருக்கு நேராய் பேசுறேனாக்கும். இல்லேன்னா... நீ... என் ரூமுக்கு வெளியே கூட நிற்க முடியுமா? பட்... வர வர... என்னை.... நீ மதிக்க மாட்டேங்க..."

"அப்படில்லாம் சத்தியமாய்.."

"சத்தியமுன்னா... நான் சொன்னதைச் செய்திருப்பே..."

"எதைச் சொல்லி, தைச் செய்யல.... சார்..."

"ஏய்யா நடிக்கிறே? ஒன் டாட்டரை, புரபசர் பெருமாள்சாமி மேல கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுக்கச் சொன்னேன். செய்தியா?"

"அதுல ஒரு சிக்கல்."

"என்னய்யா பொல்லாத சிக்கல்?"

"பெருமாள்சாமி நம்மை மாதிரி இல்ல. பிறர் விவகாரத்தில் தலையிடாதவர். தங்கமான மனுஷன்."

"சரி, நான் சொல்லிட்டேனே..."

"பேக்டரி விவகாரமுன்னால் உயிரைக்கூட கொடுப்பேன். ஆனால் இது குடும்ப விவகாரம் ஸார்."

"என்னய்யா பொல்லாத குடும்பம்? இந்த பேக்டரி இல்லாமல் எப்படிய்யா ஒன் குடும்பம் நிற்கும்? சரி... இப்போதாவது உன் டாட்டரை எழுதிக் கொடுக்கச் சொல்லு."

"அபாண்டமாய் அவளும் எழுதமாட்டாள். நானும் விடமாட்டேன் சார்."

"ஒன் டாட்டர்கிட்டே அந்த ஆள் மோசமாய் நடந்தது உண்மைதானாம். அவள் பூசிமழுப்புறாள். நீதான் அவளை வழிக்குக் கொண்டுவரணும்."

"என் மகளைப் பற்றி எனக்குத் தெரியும் சார். அப்படி ஒன்று நடந்திருந்தால், அங்கேயே செருப்பைக் கழட்டியிருப்பாள்."

"இதுல இருந்து என்ன யூகிக்க வேண்டியதிருக்குதுன்னா, ஒன் டாட்டர், ஆரம்பத்துல வாய்மூலம் கம்ப்ளெயின்ட் கொடுத்திருப்பாள். அப்புறம் பல பெண்களுக்கு இயல்பாய் உள்ள குணம் மாதிரி, பிறகு அவருக்கு சரிப்பட்டிருப்பாள். ஒன் டாட்டர், எழுதிக் கொடுக்காட்டால், இப்படித்தான், யூகிக்க வேண்டியது இருக்கும்."

"அப்படி எந்தத் தேவடியாள் மகனாவது சொன்னாமுன்னால், நான்... என் பழைய செருப்பைக் கழட்ட வேண்டியிருக்கும்."

கன்னையா, கதைக்கு வரையப்படும் ஓவியம்போல், சொன்னதோடு நிற்காமல், தன் பிய்ந்த செருப்பை, காலில் இருந்து உதறி, முன்னால் தூக்கிப் போட்டார். அவர் உதடுகள் துடித்தன. உடம்பு முறுக்கேறியது. விஸ்வரூபம் எடுத்தவர்போல், ஜி.எம்மை நோக்கி, தலையை நிமிர்த்தினார்.

ஜி.எம். அசந்துவிட்டார். கன்னையாவின் நேருக்கு நேரான கண்வீச்சைத் தாங்க முடியாமல், தலையைத் தாழ்த்தினார்.

கன்னையா, இடைவெளிவிட்டு தொடர்ந்தார்.

"உயிருக்கு மிஞ்சுனது எதுவும் இல்ல. என்னை மாதிரி பாட்டாளிங்களுக்கு, இருக்கிற ஒண்ணே ஒண்ணு தன்மானம் இதுதான்... எங்களுக்கு காரு, பங்களா, ஏஸி ரூம்., கார் பங்களாக்காரன் கூட்டிக் கொடுக்கிறது மாதிரி, எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தாலும் வராது."

ஜி.எம்., அசந்துவிட்டார். கன்னையா, அவரை நினைக்காமல், உலக நடப்பைச் சொன்னாலும், ஜி.எம்மோ, அவர் தன்னுடைய சம்சாரக் குப்பையை கிளறுவதாக நினைத்து, வாய்வரை வந்த கோபத்தை, மழுப்பலான சிரிப்பாய் மாற்றியபடி சொன்னார்.

"சரி, நீ போகலாம். ஒன்பாடு, அவங்கபாடு... கோ"

வேலை இடத்திற்கு வந்த கன்னையா, கூர்மையான இரும்பாயுதத்தை பல்லாக்கியபடிசுழன்ற ராட்சத யந்திரத்தையே வெறித்துப் பார்த்தார். செம்பருத்தியாய் கொதித்த இருப்புக் கம்பிகளை அது கக்கிக் கொண்டிருந்தது. அவற்றை எடுத்து, அருகேயுள்ள தண்ணீர் டாங்கில் போடவேண்டும். அதுதான், அன்றைக்கு

அவரோட வேலை. அந்த மனோ நிலையில், வேலை செய்யப் போனால் உழைக்கும் கரங்கள் தான் துண்டுபட்டு விழும் என்பதை உணர்ந்தவர் போல், குத்துக்காலிட்டு உட்கார்ந்தார். கர்ணம் தப்பினால் மரணம் என்று சொல்லும்படியான, பல்வேறு யந்திரங்களுடன் அல்லாடிக் கொண்டிருந்த சகாக்களுக்கு, அவர் மனோ நிலை புரியவில்லை. அப்படியும், ஒருசிலர், யந்திரங்களுடன், படுயந்திரமாய் செயல்படும் கன்னையா, சோம்பியும், கூம்பியும் கிடப்பதைப் பார்த்துவிட்டு, ஆச்சரியப்பட்டார்கள். அவர் யாரிடமும் கலகலப்பாய் பேசாதவர் என்பதால், அவர்களும் அவரை அனுதாபமாகப் பார்த்தார்களே தவிர, விசாரிக்கவில்லை.

கன்னையா, தன் தலைக்குப் பின்னால் இருந்த வந்த விவாதங்களில் கவனத்தைச் செலுத்தினார். தொழிலாளர் பிரதிநிதிகள், உத்தேச வேலைநிறுத்தம் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அவருக்கு, அவர்களிடம் ஓடிப்போய், ஒவென்று அழுது நடந்ததை, நடக்கப் போவதை ஒப்பிக்க வேண்டும் போலிருந்தது. கூடாது... கூடாது.... இந்த நிமிடம் வரை நான் கருங்காலி. இவர்கள் நடத்தப் போகும் போரட்டத்தில் கலந்துவிட்டு, அப்புறந்தான் ஜி.எம்.மின் மிரட்டலைச் சொல்ல வேண்டும். நெடுநாளைக்கு தனி மனிதனால்-என்னால்-தாக்குப் பிடிக்க முடியாது. ஆனாலும் கொஞ்ச நாளைக்குப் பொறுக்க வேண்டியதுதான்.

## 24

கல்லூரி முதல்வரின் சுழல் இருக்கையில், இரண்டு கால்களையும் காதுகளில் படும்படி தூக்கி வைத்துக் கொண்டு, கரங்களால் அவற்றைப் பின்னியபடி, இஞ்சி தின்ற குரங்குபோல் முகம் சுழித்துக் கிடக்க, டிரஸ்ட் சேர்மன் அப்பாவு, பேராசிரியர் பெருமாள்சாமி தன்னந்தனியாய், தனக்கு ‘தண்ணி’ காட்டுவதை எண்ணி எண்ணி, எரிமலையானார். பத்திரிகைகாரங்க, இவ்வளவு கிழி கிழிச்ச பிறகும், அவர் தன்னையும், வாடிக்கை பத்திரிகையையும் சம்பந்தப்படுத்தி, உயர்நீதி மன்றத்தில் ரிட் ஆப் மேண்டமஸ் வாங்கியதை அறிந்து, அடி வயிற்றில் புளியைக் கரைத்து விட்டது போலிருந்தது. அந்தச் சமயம் பார்த்து, எதிர் நாற்காலியை தொட்டபடி நின்ற அக்கௌன்டன்ட் ராமமூர்த்தியை, கோபமாகப் பார்த்தார். எலியைப் பார்க்கும் பூனைமாதிரி, கண்களை சுருக்கிச் சுருக்கிப் பார்த்தார். பிறகு கோபத்தை அடக்கியபடி, தனக்கு நேருக்கு நேராய் கண்களை வீசிய ராமமூர்த்தி மேல் வாயை வீசினார்.

"என்னடா கண்ணா?"

ஆஜானுபாகுவான ராமமூர்த்தி, சட்டியை கவிழ்த்துப் போட்டது மாதிரி தோன்றிய தலையைத் தொங்கப் போட்டபடியே உளறினார்.

"ஒன்றுமில்லை பெரியப்பா."

"சோளியன் குடுமி சும்மா ஆடாது. சொல்ல வந்ததை, சட்டுப்புட்டுன்னு சீக்கிரமாச் சொல்லு. எனக்கு ஆயிரம் வேலை."

"எனக்குத் தலையே வெடிச்சிடும் போலுக்கு பெரியப்பா."

"அப்படின்னா புத்தூருக்குப் போ. இங்கே ஏன் வந்தே? டிரஸ்ட் போர்ட் மீட்டிங் நடக்கப் போகுதுன்னு, நான் உயிரைக் கையில பிடிச்சிட்டு இருக்கேன். நீ பிலாக்கணம் பாடுறியாக்கும். சீக்கிரமா சொல்லுடா."

"வந்து... வந்து... என் பேருக்கு, பேங்கில ஐம்பதாயிரம் ருபாய் போட்டிங்க... நானும் முட்டாள்தனமாய் பெருமாள் சார்தான், என்பேர்ல பணத்தைப் போட்டதாய் எழுதிக் கொடுத்திட்டேன். ஆப்பசைத்த குரங்கு மாதிரி ஆயிட்டேன்."

"அதுக்கு இப்போ என்னடா?"

"பெருமாள்சாமி, கோர்ட்ல கொடுத்த மனுவில, என்பேர்ல பணம் நீங்கதான் போட்டதாய் சொல்லி இருக்கார். கோர்ட்ல ரிட் ஆப் மேண்டமஸ்ஸோ என்னவோ வாங்கியிருக்காராம். கோர்ட்டும், முழு விவரத்தையும் விசாரிக்கும்படி யுனிவர்ஸிட்டிக்கு உத்தரவு போட்டிருக்காம்."

"போடட்டுமே! என் உத்திரவுக்கு முன்னால, எந்த உத்திரவு எடுபடும்?"

"வாஸ்தவந்தான். ஆனால் காலம் மாறிட்டுன்னு காலிப்பசங்க பேசுறாங்களே... உண்மை வெளியாகப் போகுது. ஒனக்கு ஆறு வருஷம் கிடைக்கப் போகுதுன்னு பேசுறாங்களே."

"எந்தப் பயல் சொன்னது?"

"ஒங்க மகன் உட்பட எல்லாப் பயலும் சொல்றாங்க."

"என்னது? என் மகன் கூடவா?"

"அவரு சம்சாரம் கூட, முந்தாநாள், நான் கத்திரிக்காய் வாங்கிக் கொடுக்கும்போது, புருஷன் சொன்னதையே சொல்லிச்சு. ஆம்புடையானாவது மெதுவாச் சொன்னார்."

"இப்போ... நான்... என்ன செய்யணுமுன்னு நினைக்கேடா?"

"நான் பிள்ளக்குட்டிக்காரன் பெரியப்பா. என்னை வாழ விடுங்க. என் பேர்ல போட்ட பணத்தை எடுத்துக் கொடுத்துடுறேன். நீங்களும் நான் எழுதிக் கொடுத்ததை, என் கிட்டேயே கொடுத்திடுங்க பெரியப்பா."

"டேய்... டேய்... காலை தொடாதடா... கால விடுடா... கயிதே. எஸ்.எஸ்.எல்.சி பெயிலாப் போன ஒன்னை, காலேஜ்ல கொண்டு வந்து கிளார்க்கா சேர்த்து, இப்போ இந்த நிலைமைக்குக் கொண்டு வந்த எனக்காடா துரோகம் செய்யப் பார்க்கே? வளர்த்த கிடா மார்பில பாயும் என்கிறது சரியாப் போச்சு."

"நீங்க என்னை கிடாமாதிரி வளர்த்தது நிஜம்தான் பெரியப்பா. அதுக்காக ஒங்க கத்திக்கு நான் தலய நீட்ட முடியுமா? நன்றின்னு ஒரு நாய்ப்புத்தி இருக்கதாலதான் உங்ககிட்டே கேட்கிறேன். இல்லன்னா நேராய் போலீஸ்ல போய், ஒங்க நிலைமையும், என் நிலைமையையும் சொல்லி இருப்பேன். அப்ருவராய் மாறினால் தண்டனை கிடையாதாம்."

அப்பாவுவின் நரைமுடிகூட துடித்தது. குத்திட்ட கால்களை, வெடுக்கென்று கீழே போட்டுவிட்டு, மதர்ப்பாக நின்ற ராமமூர்த்தியை, குதர்க்கமாய் பார்த்தபடி கத்தினார்.

"இந்தா பாருடா ராமமூர்த்தி! சொந்தக்காரனாச்சேன்னு சொல்லி வைக்கேன் கேளு. இந்தப் பேச்சை.... இன்னொரு தடவை எடுத்தே, நீயே பணத்தை கையாடுனதாய், நான் போலீஸ்ல புகார் செய்ய வேண்டியது வரும். பெருமாள்சாமி வழக்குல, எனக்கு ஆறு வருஷம் கிடைக்குதோ, என்னவோ, என்னோட புகாரால மவனே, ஒனக்கு எட்டு வருஷம்கிடைக்கும். அடே கலியபெருமாள்! வாடா, கிரைம் பிராஞ்சுக்கு போன் போடுடா."

"பெரிப்பா... பெரிப்பா... நான் பிள்ளை குட்டிக்காரன் பெரிப்பா. அப்டி எதுவும் செய்திடாதிங்க பெரிப்பா."

"ஒன் பிள்ளிங்க எனக்கு பேரப் பிள்ளிங்க! இல்லையாடா? மடையா. இந்த படாதி அட்மினிஸ்டிரேடிவ் ஆபீஸர் ரிட்டயர்டானதும், அதுல ஒன்னப் போடலாமுன்னு நினைச்சுட்டு இருக்கேன். என்கிட்டேயே எதிர் வழக்காடுறியா?"

"வழக்காடல பெரிப்பா. சந்தேகம் கேட்டேன்."

"சந்தேகம் இப்போ தீர்ந்திருக்குமுன்னு நினைக்கேன். சரி சரி... ஒன் வேலையைப் போய்ப் பாரு. ஒன்மேல ஒரு துரும்புகூட விழாது.

போடா. நீ குழந்தை. ஒன்னை எவனோ எய்திருக்கான். எவனோ என்ன எவனோ... என் மகனேதான்.... போடா!"

ராமமூர்த்தி, 'பெரியப்பாவை' சந்தேகமாய் பார்த்தபடியே, கண்களை நகர்த்தாமல், உடம்பை நகர்த்தப் போனார். இதற்குள், தாற்காலிக முதல்வர், தமிழரசான் மாணிக்கம், ராமமூர்த்தியை அப்புறப் படுத்தியபடியே, உள்ளே வந்தார். தும்பைப் பூ வேட்டியும், துவரம் பருப்பு நிற ஜிப்பாவும் துலங்க, கைகட்டி மெய்புதைத்து நின்ற முதல்வர், எதிர் நாற்காலியில் உட்காராமல், அப்பாவு, மேசைமேல் பரப்பியிருந்த இரண்டு கைகளையும், தனது இரு கரங்களால் தூக்கிப் பிடித்தபடியே, கண்களை மேஜைப்பரப்பில் அலைக்கழிய விட்டார். அப்பாவு அலறினார்.

"என்னய்யா... நீங்க மரியாதை இல்லாமல்... கையை விடுங்கய்யா..."

"தமிழ் பி.ஏ. மாணவர்களுக்கு இரண்டாவது பீரியட் என்னது. கண்ணகி வழக்காடு காதை பற்றி குறிப்பெடுத்து, மேசைமேல் வைத்தேன். உங்களை நினைத்ததில் காகிதக் கத்தையை மறந்துட்டேன்.

"அடக் கஷ்டக்காலமே... நான் ஏதோ வேஸ்ட் பேப்பர்னு, இந்தக் கூடையிலே போட்டுட்டேனே. கையை விடுங்கய்யா."

"கொஞ்சம் காலை எடுக்கிறிங்களா? குப்பையைக் கிளறி..."

"சுக்கல் சுக்கலாய் கிழிச்சுப் போட்டுட்டேன் ஸார்."

"அடக் கடவுளே!"

"நீங்க கூப்பிட்டால் பசங்களே வரமாட்டாங்க, கடவுள் எப்படிய்யா வருவார்? இருபத்தஞ்சு வருஷ சர்வீஸூன்னு பேரு. பாடம் நடத்த இன்னும் பாயிண்ட்ஸ் இல்லாமல் முடியாதுன்னால் என்ன சார் அர்த்தம்? பசங்கதான் எப்படி உருப்படுவாங்க? சரி சரி... போங்க.... நம்ம காலேஜ்ல லூட்டி அடிக்கிறதே தமிழ்ப்பாடப் பசங்கதான். இதனால் அடுத்த வருஷத்துல இருந்து, தமிழ் மெயின் கோர்ஸையே எடுக்கப் போறேன். இதுக்குள்ளே பாயிண்ட்ஸ் வேணுமாக்கும்? வேண்டாம். சும்மாவே பாடம் நடத்துங்க."

பேராசிரியர். மாணிக்கம், பற்களைக் கடித்தார். 'தேரா மன்னா.... செப்புவதுடையேன்' என்ற கண்ணகியின் கோபக்கனல் இந்த கிராதகனுக்கு எப்படிப் புரியும்? எப்படிப் புரிய வைப்பது? அப்பாவுவே, அவருக்குப் புரிய வைத்தார்.

"மாணிக்கம் ஸார்.... கொஞ்சம் உட்காருங்க..."

"இரண்டாவது பீரியட் மணியடித்து...."

"அட பொல்லாத மணி.... உட்காருமய்யா... ஆமா... ஒங்க காது செவிடா?"

"உங்கள் ஆசீர்வாதத்தால் ஆண்டவன் என் காதில் இன்னும் திருவிளையாடல் செய்யல"

"தெரியாமத்தான் கேட்கேன். ஒங்க மனசுல என்ன ஸார் நெனப்பு? காலேஜ் அக்கௌண்ட்ஸ் ஸ்டேட்மெண்ட்ல, ஏன் ஸார் இன்னும் கையெழுத்துப் போடல!"

"அதுக்கு ஒரு இடையூறு."

"என்ன ஊறு..."

"உடற்பயிற்சி ஆசிரியர், விளையாட்டுக் கருவிகள் வாங்கியதாகவும், கட்டிடத்தைப் பழுது பார்த்ததாகவும் 'பில்' தர மறுக்கிறார். வாங்காத சாமான்களுக்கும், பூசாத சுவருக்கும் எப்படி ஸார் பில் கிடைக்கும் என்கிறார். ரசாயனப் பேராசிரியர் சுந்தரமூர்த்தியோ, ஒருபடி ஸோடியம் குளோரைட் அல்லது உப்புகூட வாங்கல... அப்படி இருக்கையில் லேப் சாமான் பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கினதாய்-பில் தர நான் என்ன இளிச்சவாயனா என்கிறார். பிஸிக்ஸ் ஆசான் அடிக்கவே வந்துட்டார். அதோடு அடிஷனல் பில்டிங் கட்டவே இல்லை. அடியேன் எப்படிக் கையெழுத்துப் போடுறதுன்னு புரியல."

"புரிய வைக்கணுமா?"

"என்னை விரட்டுறதுமாதிரி, அவர்களையும் விரட்டுங்க. பில் தரட்டும். எத்தனை கையெழுத்து வேணுமுன்னாலும் விருப்பத்துக்கு விரோதமாய் போடுறேன்."

"அவங்க பிரின்ஸ்பாலா... நீங்களா? ஒங்களுக்குக் கீழே வேலை பார்க்கிற வாத்திப் பசங்ககிட்டே, ஒங்களால வாங்க முடியல. நல்ல டிஸிப்ளின். ஒங்களை பிரின்ஸ்பாலாய் போட்டதுல இருந்து காலேஜே இன்டிஸிப்ளினாய் போயிட்டு."

"நானும் மன்றாடிப் பார்த்துட்டேன். அதுக்கு, அவங்க 'அரக்கன், அயோக்கியன். அப்பாவு முன்னால, நீங்க எத்தன தடவைன்னாலும் தோப்புக் கரணம் போடுங்க. வேண்டாங்கல, அதுக்காக எங்க காதுகளைப் பிடித்தபடி ஏன் குனியுறீங்க'ன்னு திருப்பிக் கேட்கிறாங்க.'

"அவங்கெல்லாம் யூனியன் பசங்க. அப்படித்தான் கேட்பாங்க. கவனிக்கிற விதமாய் கவனிச்சுக்கிறேன். போகட்டும். பில்லுங்களை நான் கொண்டு வர்றேன். நீங்களே ஒரு சின்னக் கையெழுத்துப் போட்டுங்க. லேட்டாகுது. நீங்க கையெழுத்துப் போட்டு, நான் அகடாமிக் கௌன்சிலுல வேற வைத்துத் தொலைக்கணுமே."

"அதெப்டி அய்யா? பில் கொடுத்தால் அவங்கதான் கொடுக்கணும், அதுதான் முறை."

"நீங்க பிரின்ஸ்பாலாய் இருக்கது மட்டும் என்ன முறையாம்?"

"நானாய் கேட்கல.... நீங்களா போட்டிங்க...."

"போட்டவனுக்கு எடுக்கவும் தெரியும்."

"அப்போகூட நான் மகிழ்ச்சியடைவேன் அய்யா. அரசனாகப் போவதில்லை என்பது தெரிந்ததும், பாரா வண்டியில் இருந்த விடுபட்ட மாடு மாதிரி ராமபிரான் மகிழ்ந்ததாய் கம்பன் சொல்வது மாதிரி மகிழ்வேன்... நானுண்டு, என் தமிழுண்டு என்று ஆனந்தப் பள்ளு படுவேன்."

"ஒங்களை ஆனந்தப்படுத்த, நான் என்ன மடையனா? கொட்டையும் போட்டு, பழமும் தின்னவன் இந்த அப்பாவு. நீங்க மட்டும் கையெழுத்துப் போடாட்டால், தமிழ் டிபார்ட்மெண்டுக்கு, நீங்க தலைவராகவும் இருக்க முடியாது. உங்க வகுப்புக்கள்ல, பசங்க கலாட்ட பண்றது எனக்கு பியூன்கள் சாட்சியாய் தெரியும். போன வருஷம் பரீட்சையில் அதிகமாய் கோட்டை விட்டது தமிழ் பசங்கதான். இந்த ரெண்டையும் காரணமாய் காட்டி, ஒங்களை ஹெட் ஆப் தி டிபாட்மெண்ட ஆப் தமிழில் இருந்து டிமோட் செய்ய எனக்கு அதிக நேரம் ஆகாது. எதுக்கும் நல்லா யோசிங்க. ஒரு சின்னப் பயல்கிட்டே நீங்க வேலை பாக்க வேண்டியது வரும். எதுக்கும் யோசித்துப் பாருங்க."

தமிழாசான் யோசித்தார். யோசிக்க யோசிக்க, அவர் மேனி சிலிர்த்தது. குறுகிய தலை நிமிர்ந்தது. திடீரென்று, நிலைமையைப் புரிந்துகொண்டு அப்பாவுவைக் கெஞ்சக்கூடப் போனார். ஏனோ 'தேராமன்னா' கண்ணகி, அவரைத் தடுத்தாள். அவரை அறியாமலே அவர், கண்ணகியின் ஆண் அவதாரமானார். அப்போது அப்பாவு, அடிமேல் அடிவைத்து, அந்த அப்பாவி தமிழ் அம்மியை நகர்த்தப் போனார்.

"விஷயம் அதோடு நிற்காது தமிழ் ஸாரே. ஒங்க பெண்டு பிள்ளிங்க பாதுகாப்புக்கு நான் பொறுபில்லே. போன வருஷம் ஒங்க குடும்பத்தையே ரௌடிப் பயல்கிட்டே இருந்து காப்பாற்றியவன் நான் ஸார்."

தமிழ்த்துறைத் தலைவர் பதவியை அல்லது பொறுப்பை, தொழிற் கற்பாகக் கொண்ட மாணிக்கம், கற்பழிக்கப் படப்போகும் பெண்போல் கத்தினார். அப்பாவுவை இழிவாகப் பார்த்தபடி, கண்களில் அனல் கக்க குரலிட்டார்.

'நீங்க நல்லவன் அல்ல என்று நண்பர்கள் சொல்வது மெய்தான். குடிலனைவிட கொடியவரான ஒங்களிடம் வேலை பார்ப்பது என் ஊழ்வினைப் பயன். ஆனாலும் ஒன்று அய்யா! அண்ணன் குமணன் தலைக்கு விலைவைத்த தம்பி அமணன் போல், பேராசன் பெருமாள்சாமி துடியாய் துடிக்கும்போது, அந்தப் பதவிக்காய் பல்லைக் காட்டிய எனக்கு, இது தேவையே. தமிழ்த்துறைப் பதவியை நீர் பறிக்கும் பட்சத்தில், என் மாணாக்கர்களும், குகநாதன் போன்ற ஆசிரிய இளவல்களும் கொதித்தெழுவார்கள். அப்போது, ஒமக்கு ஓடக்கூட வழி கிடைக்காது. ஒரு வேளை, என் பெண்டிற்கு உன்மத்தர்களால் ஊறு ஏற்படும் நிலைமை ஏற்பட்டால், நான் அவர்களோடு, கூவம் ஆற்றில் விழுவேனே தவிர, அதைவிட அதல பாதாளச் சாக்கடையான உம்மிடம் வரமாட்டேன்; நினைவிருக்கட்டும்."

சாதுவிலும் பரம சாதுவான மாணிக்கம், அப்பாவுவை கண்ணெரியப் பார்த்து, காதெரியப் பேசிவிட்டு, தோள் துண்டை எடுத்து, வாள்போல் வளைத்தபடியே வெளியேறினார். அவர் போட்ட கூச்சலில், சில பியூன்கள் கூட உள்ளே வந்தார்கள்.

நாகப்பாம்பாய் சீறிய அப்பாவு, பெட்டிப் பாம்பாய் சுருண்டு கிடந்தார். இயல்பிலேயே அரைப் பயித்தியமும், மீதி தமிழ்ப் பைத்தியமுமாகி, பிரின்ஸ்பால் பதவிக்கு தகுதியான முழுப் பைத்தியமாய், தான் கணக்கிட்ட மாணிக்கம், இப்படிப் பேசுவார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. யார் பேசியது எப்படிப் பேசியது எங்கே, பேசியது என்ற முப்பரிமாணங்களையும் கண்டறிய முடியாது, அப்பாவு பரிமாணமமின்றிக் கிடந்தார். இவர் பேசிவிட்டால், இனிமேல் எவன் வேண்டுமானாலும் பேசுவானே என்ற அச்சம். என்றாலும், சிறிது நேரத்தில் தலையை ஒரு ஆட்டு ஆட்டி, அவர், மூளையை மனதில் இருந்து விடுவித்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் அப்பாவு கொலுசு சத்தங் கேட்டு கண் விழித்தார். அவர் மனைவி ஆதியம்மாள், எதிர் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள். அம்மாவுக்கு அறுபது வயதிருக்கும். ஆனாலும், பிராக்காரி. உதடுகளில்கூட, பட்டும் படாத சிவப்புச் சாயம்.

ஆதியம்மாள், கணவனை கண்ணோட்டம் விட்டாள். பிறகு இந்த சினிமா இருக்கே "மிருதங்க சக்கரவர்த்தி பியூட்டிபுல் படம்" என்றாள். அப்படியும், அப்பாவு சும்மா இருப்பதைப் பார்த்துவிட்டு, பொய்க் கோபத்தோடு கேட்டாள்:

"டிரஸ்ட் போர்ட் கூட்டம் நடக்கு முன்னால, ஒன் பையனுக்கு புத்தி சொல்லு'ன்னு என்னை இங்கே வரச் சொல்லிட்டு, நீங்க பேசாமல் இருந்தால் எப்படி? இல்லன்னா 'முந்தானை முடிச்சு'க்குப் போயிருப்பேனே."

அப்பாவு, அரைகுறையாய் கண்விழித்து, குறையரையாய் பேசினார்.

"தலைக்கு மேலே தண்ணீர் போகுதுடி ஆதி. நீ பெற்ற மகன், அக்கௌன்டன்ட் ராமமூர்த்திப் பயலை தூண்டி விடுறான். டிரஸ்ட் போர்ட் மெம்பருங்க கிட்டே என்னை ராஜினாமா செய்ய வைக்கணுமுன்னு 'லாபி' பண்றானாம். இரணியன் பெற்ற பிரகலாநாதன் மாதிரி நடக்கிறான். அவன் என்னைக் கேவலப்படுத்து முன்னால, நானே ராஜினாமா செய்யப் போறேன்."

ஆதியம்மாளுக்கு, மிருதங்க சக்கரவர்த்தியில், கே.ஆர்.விஜயா, கணவனுக்கு ஆதரவாய், மகனுக்கு எதிராய் போர்க்கொடி தூக்கியது நினைவுக்கு வந்தது. அந்த கதாப்பாத்திரத்துடன் ஐக்கியமாகி முழக்கமிட்டாள்.

"நீங்க ஏன் கலங்குறிங்க? அந்தப் பயல் எப்படி ஒங்களை மிஞ்சுறான்னு பார்த்துடுறேன்.. ஒங்களுக்கு இந்தப் பதவி போன பிறகு, நானே உயிரோட இருப்பேனா? இருக்கத்தான் முடியுமா? ஒங்களோட சேர்மன் பதவி, என்னோட மாங்கல்யம் மாதிரி. அவன் இப்போ நமக்கு மகன் இல்ல; முழுப்பாய் சுருட்டி மோகனசுந்தரத்தோட மருமகன், ரத்தக்காட்டேரி மல்லிகாவோட புருஷன். இதை நீங்க விட்டாலும், நான் விடப்போறதில்லை. வேணுமுன்னால் பாருங்கடேய் அடைக்கலசாமி! ஒன்னைத் தாண்டா எருமைமாடு! நான் கூப்பிட்டேன்னு, என் மகன் சங்கரைக் கூட்டிவாடா."

அம்மாவைக் கூட்டிவந்து, அறைக்குள் விட்டுவிட்டு, அப்பாவுவிற்கு முகம் காட்டாமலே வெளிவாசலில் போய் நின்று கொண்ட அதே 'எருமைமாடு' அடைக்கல சாமி, இப்போது, உள்ளே வந்து வெளியே போனார். ஆதியம்மாள் கணவனின் ஆதாயக்கரத்தைப் பிடித்துக் கொண்டாள். பிறகு "நீங்க ராஜினாமா செய்யுற நிலைமை வந்தால் பேசாமல் ரெண்டுபேரும் தூக்குப்போட்டு செத்துடலாம்" என்றாள். பத்து நிமிடத்திற்குள், அவர்களின் ஏக புதல்வன் சங்கர் வந்தார். நாற்பது வயது தேறும். சூட்கோட் அமர்க்களம். செல்லமான குறுந்தாடி. அவரைப் பார்த்ததும், அப்பாவு எழுந்து வராண்டாப் பக்கம் போய்விட்டார். சங்கர், குறுஞ்சிரிப்போடு கேட்டார்:

"எதுக்கும்மா கூப்பிட்டீங்க?"

"ஒன்னைப் பெற்று வளர்த்து பெயரிட்ட அப்பாவுக்கு எதிராய் நீ இப்படி செய்யலாமாடா? அவர் ராஜினாமா செய்யணுமுன்னு ஏற்பாடு செய்யுறியாமே? நான் அந்தக் காலத்துப் பொம்புளடா. ஒன் பெண்டாட்டி மாதிரி இந்தக் காலத்து காட்டேரி இல்லடா. என் ராசா

என்னமா கலங்குறார். அவருக்கு மட்டும் ராஜினாமா செய்யுற நிலைமை வந்தால், நான் உயிரோட இருக்க மாட்டேன். இது சத்தியண்டா., பேஷாய், ஒன்னைப் பெற்ற எங்களை, ஒன் கையாலயே கொன்னுட்டு ஒன் மாமனாருக்கு முடிசூட்டு."

"அம்மா"

"ஒன்னை கெஞ்சிக் கேட்கிறேண்டா. எனக்கு மடிப் பிச்சை கொடுடா. என் ராசாவை, பதவிலயும், என் உயிரை இந்த உடம்புலயும் இருக்க விடுடா..."

சங்கர், அம்மாவை சாவகாசமாகப் பார்த்தார். வராண்டாப் பக்கம் நின்ற அப்பனைப் பார்த்தார். நடந்ததை யூகித்துக் கொண்டு, லேசாய் சிரித்தார். பிறகு, அம்மாவின் தோள்களில் கைகளை ஊன்றியபடி, நிதானமாகப் பதிலளித்தார்.

"நீங்க ஆயிரம் திட்டினாலும் என் அம்மா! அவரு... தொள்ளாயிரம் செய்தாலும் என் அப்பா!"

"சும்மா பேசினால் எப்படிடா?"

"சொல்றதைக் கேளுங்கம்மா. நான்... அப்பாவை ராஜினாமா செய்ய வைக்காட்டால், கவர்மென்டே காலேஜை எடுத்துக்கும். அப்படி ஒரு நிலைமை"

"அதுவரைக்கும் ஒன் அப்பாவே பதவியில் இருக்கட்டுமே. அவர் மட்டும் கலங்கினால் இந்த உயிர் இந்த உடம்புல இருக்காதுடா."

"சும்மா பினாத்தாதிங்கம்மா. இது கிட்டத்தட்ட அரசியல் மாதிரி. கண்டுக்காதீங்க. ஒருவேளை... நான் சேர்மனாய் மாறின பிறகு, பெண்டாட்டி பேச்சைக் கேட்டு ஆடுவேன்னு நீங்க நினைச்சால், இப்பவே ஒரு ஏற்பாடு செய்யுறேன். ஒங்க பேருக்கு, பேங்கல ஒரு லட்சம் ரூபாய் போடுறேன்."

"என்னடா உளறுறே. எவ்வளவு ரூபாய்டா?"

"ஒரு லட்சம் ரூபாய். ரொக்க கேஷ். அப்பாவை நீங்களே... ராஜினாமா செய்யச் சொல்லுங்க."

"ஆயிரந்தான் இருந்தாலும்... அவரு... எனக்கு..."

"கணவர்தான். உங்களுக்கு நூறு ரூபாய் தாரதுக்கே நூற்றெட்டுத் தடவை அழுகிறவர். நான் மகன். ஒரு லட்சம் ரூபாய் தரப்போற மகன்."

"....................."

"சரி... அப்பாக்கிட்டே எப்படியும் ராஜினாமா வாங்கிடுங்க."

"என் தலையெழுத்து... சரிடா..."

"தேங்க்ஸ்மா"

"ஏதோ பணம் கிணமுன்னே..."

"ராஜினாமா லட்டரை வலது கையில் வையுங்கோ.... நான், ஒரு லட்சம் ரூபாயை, ஒங்க இடது கையில் வைக்கேன்..."

இதற்குள் பியூன் அடைக்கலசாமி, குறுக்கே வந்தார். டிரஸ்ட் செயலாளர் சங்கரின் காதுகளில் "மல்லிகாம்மா வந்துருக்கு. நீங்களா வாறீங்களா, நானே வரட்டுமான்னு கேட்டுட்டு வரச் சொல்லிச்சுது" என்றார். சங்கர் "சொன்னது ஞாபகம்" என்று அம்மாவிடம் சொல்லிக் கொண்டே ஓடினார்..

மகன் போனதும், அப்பாவு வந்து ஆதியம்மாளை கேள்விக்குறியோடு பார்த்தார். மனைவிக்காரி, எடுத்த எடுப்பிலேயே தாக்குதலைத் தொடுத்தாள்.

"ஆனாலும் ஒங்களுக்கு இந்த வயசுக்குப் பிறகும், இப்படி பதவியாசை வரப்படாது. நம்ம பையன்தானே! சேர்மனாய் இருந்துட்டுப் போறான். அவன் பதவியில் இருக்கதை, கண்ணால் பாக்குறதுக்குப் பதிலாய், இப்படியா பதவிவெறி பிடிச்சு அலையுறது? பேசாமல் ராஜினாமா லட்டர இப்பவே எழுதுங்க. கறிவேப்பில மாதிரி இருக்கது ஒரே பையன். அவன் நம் கண்முன்னால சேர்மனாகணும். சரி... ராஜினாமா செய்யுறிங்களா... நான் இங்கேயே உயிரை விடணுமா? என் பெற்ற வயிறு துடிக்கது ஒங்களுக்கு எப்படித் தெரியும்?"

அப்பாவு, அதிர்ந்து போகவில்லை. தாயும் மகனும் கிசுகிசுவானபோதே, அவர் சந்தேகப்பட்டார். இப்போது அவர் மனதுள் துறவு மனப்பான்மை ஏற்பட்டது. ஆமாம். டிரஸ்ட்போர்ட் சேர்மன் பதவியில் இருப்பதற்காக, அவர் மனைவியையும், மகனையும் துறக்கக் துணிந்தார்.

# 25

கன்னையாவின் உள்ளம் ராட்சத சக்கரங்களாயின. இரண்டு மாதமாக அவருக்கோ அவர் மகள் வசந்திக்கோ எந்தத் தொல்லையும் இல்லை. ஏரியா இன்ஸ்பெக்டர் ஒரு தடவை கூப்பிட்டு மிரட்டியதோடு சரி. சும்மா இருந்த அப்பாவு, நேற்றுதான் வசந்தியைக் கூப்பிட்டு, 'ஒழுங்கா எழுதிக் கொடுத்துடு... பெருமாள்சாமி பேப்பர்ல்தான் கிழிபட்டான். ஒனக்கு உடம்பு முழுசும் கிழியும் என்று வாய் கிழிய மிரட்டியிருக்கார்.

கன்னையாவை ஏதோ ஒன்று குடைகிறது என்பதைப் புரிந்து கொண்ட ஒரு சகதொழிலாளி அவருக்கும் கேட்கும்படி "போர்மென் வாரான். அதோ..." என்றார். உடனே கன்னையா எழுந்து சூழ்ச்சி தெரியாமல் சுற்றிக் கொண்டிருந்த யந்திர உருளையை நெருங்கினார். அதன், அசுரத்தனமான கூச்சல் அவருக்கு ஒப்பாரிபோல் கேட்டது. அதற்குள் துண்டாடப்படும் இரும்புக் கம்பிகள் தான்போலவும். தன் மகள் போலவும் தோன்றின. யந்திர இரைச்சல், அவர் காதுகளுக்குள் புகுந்து ஓலமிட்டது. தலைக்கு மேல் ஆடிய கிரேன்கள் மங்கலாகத் தெரிந்தன. சக தொழிலாளர்கள் தொழில் நிமித்தம் வெளியிட்ட குரல்கள், ஆசரீரியாய் ஒலித்தன. அவருக்கு, தானே அங்கே இல்லாதது போன்ற பாவனை. தான் மட்டுமே தனித்திருப்பது போன்ற சூன்யச்சூடு. வினாடிகள் யுகங்களாயின. மனவாதை உடல்வாதைகியது. எப்படியோ நேரத்தை வேலையாலும் வேலையை நேரத்தாலும் பூர்ததி செய்துவிட்டு குழாயடிக்குப் போய் அவர் கைகால்களைக் கழுவியபோது, ஓர்க்ஸ் மானேஜர் கூப்பிடுவதாக, பியூன் வந்து சேதி சொன்னார். டிபன்பாக்ஸ் இருந்த தூக்குப் பைக்குள் இருந்த துண்டை எடுத்து துடைத்துவிட்டு, அதை தோளிலே போட்டபடி அவர் நடந்தார். ஓர்க்ஸ் மானேஜர் அறைக்குள் பிரவேசித்தார். ஒதுங்கி, ஒதுங்கி நின்றவரை அவர் அருகே வரவழைத்து, ஆணையிட்டார்.

"யோவ்... கன்னையா... இந்த இரண்டும் நம்ம புது யந்திரங்களோட புரோட்டோ டைப். நாளைக்கு ஜப்பான் டெலிகேஷன் இதை வாங்குறது பற்றி பேச்சு நடத்த வருதாம். ஜி.எம். எடுத்துட்டுப் போக மறந்துட்டாராம். நீ இதை எடுத்துட்டுப்போய், அண்ணா சாலையில் இருக்கிற நம்ம ஷோ ரூம்ல கொடுக்கப் போறே. புரியுதா? ஒ.டி.யும், டி.ஏ.வும் போட்டுக்கோ."

"சரி ஸார்."

"இந்த மாதிரி மாடல்கள் சாமான்யமில்ல. பத்திரம். நீ வழக்கம் போல் கொண்டு போற பொருட்கள் மாதிரி இல்லே இவை. காஸ்ட்லி

கஷ்டப்பட்டு செய்த புரோட்டோ டைப். யோவ்! ராமு! இதை பேக் செய்து, கன்னையாகிட்டே குயிக்காய் கொடுப்பா."

கன்னையா, கர்மயோகி மாதிரி நின்றபோது, அந்த மாதிரிகள் பேக் செய்யப்பட்டன. கன்னையாவின் கைப்பைக்குள் வந்துவிட்டன. உடனே ஒர்க்ஸ் மானேஜர் "உம், கிளம்புய்யா" என்றார். கன்னையா கேட்டார்:

"டெலிவரி ஷீட் கொடுங்க ஸார். செக்யூரிட்டி கார்ட் கேட்பானே?"

"டெலிவரி ஷீட்டை எடுப்பா. என்ன? இருந்தது தீர்ந்து போச்சுதா? அப்போ புரடக்ஷன் மானேஜர் கிட்டேயாவது, டெஸ்பாட்ச் ஆபீஸர் கிட்டேயாவது வாங்கிட்டு வாப்பா. என்ன லொள்ளுய்யா... ரெண்டு பேருமே போயிட்டாங்களா. அட கடவுளே! கன்னையா... இதை எடுத்துட்டுப் போ. நான் செக்யூரிட்டி கார்ட் கிட்டே, இன்டர்காம்ல பேசிடுறேன். ஒடுய்யா. ஜி.எம்., ஒனக்காகக் காத்திட்டு இருப்பார்."

"அவ்வளவு அவசமுன்னால் ஒரு கார், இல்ல ஜீப்..."

"பார்த்தியா, மற்றவங்களப் போகச் சொன்னால் குறைந்தபட்சம் காராவது, ஹெலிகாப்டராவது கேட்பாங்கன்னுதானே, ஜி.எம்., ஒன்னை கொண்டுவரச் சொன்னார். பல்லவன் வசதி எதுக்குய்யா வரும்? இன்னுமா நிற்கே? ஒடுய்யா"

கன்னையா பையைத் தூக்கிக் கொண்டு, வெளியே நடந்தார். எல்லோரையும் தடவிப் பார்த்த கார்ட், இவரைப் பார்த்ததும், மற்றவர்களை நிற்க வைத்துவிட்டு, இவரைத் தடவாமலே, புன்சிரிப்போடு அனுப்பினார். அத்தனை கவலையிலும் கன்னையாவுக்கு பெருமிதமாய் இருந்தது. 'நான் பேசினதை ஜி.எம். தப்பாய் எடுக்கல. என் தொழில் விசுவாசத்தை, அவர் நல்லாத்தான் தெரிஞ்சு வச்சிருக்கார். 'இந்த மாதிரி பொறுப்பு, போர்மேனுக்குக்கூட கிடைக்காது.'

ஓட்டமும், நடையுமாய் பாய்ந்த கன்னையா, ஒரு பல்லவனில் ஏறித் தொத்திக் கொண்டார். யந்திர-மாதிரி வடிவங்கள், கீழே விழுந்துவிடக் கூடாது என்பதற்காக கைப்பையை, பல்லவ பஸ்ஸிற்குள் திணித்துக் கொண்டு, உடம்பை மட்டும் புட்போர்டுக்கு வெளியே விட்டார்.

கன்னையா, பஸ்ஸில் இருந்து இறங்கி, பேக்டரியின் ஷோருமைப் பார்த்து நடந்தார். அது பூட்டிக் கிடந்தது. அங்கிருந்த வாட்ச்மேன், அப்போதுதான் வந்திருக்கும் தமிழறியா கூர்க்கா. அவனிடம், இதை ஒப்படைக்கவும் முடியாது. என்ன செய்யலாம்?

தொழிற்சாலைக்கு, பழையபடி போக வேண்டும். இல்லையானால், ஒர்க்ஸ் மானேஜருக்கு டெலிபோன் செய்ய வேண்டும். இரண்டுக்குமே ஒரு ரூபாய் வேண்டும். கையில் பைசா இல்லை. ஷோரும் வருவதற்கே காசு சரியாட்டு என்ன செய்யலாம்?

கன்னையா, வேகவேகமாய், வீட்டைப் பார்த்து நடந்தார். மூன்றே மூன்று கிலோ மீட்டர் தூரந்தான். அரை மணி நேரம் கூட ஆகாது. வீட்டிற்குப்போய் இருக்கிற காசை தேடிப்பிடித்து அம்பத்தூருக்குப் போகலாம். அல்லது ஒ.எம்.முக்கு டெலிபோன் செய்யலாம்.

தமிழகத்தில் எந்த கஷ்டமோ, நஷ்டமோ, கொடுமையோ, கொடுங்கோலோ இல்லை என்பதுபோல் சொல்லாமல் சொன்ன சினிமா பேனர்களையும், கவியரங்க, பட்டிமண்டப, பாராட்டு, சீராட்டுவிழாப் போஸ்டர்களையும், அழகிய இளம்பெண்களின் புகைப்படங்களை தலைகீழாய் தொங்கப் போட்ட பத்திரிகை கடைகளையும் பார்த்தபடியே, கைவீசி, கால்தூக்கி விரைவாய் நடந்து வீட்டிற்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவை அவர் எட்டியபோது -

தீடிரென்று, இரண்டு போலீஸ்காரர்கள், அவரை எட்டிப் பிடித்தார்கள். பிறகு, அவர் கைப்பையைக் கைப்பற்றி, பேக் செய்யப்பட்டதை பிரித்தார்கள். பல்வேறு நெளிவு, சுழிவுகளோடு, விதவிதமான மூலை முடுக்குகளோடு இருந்த இரண்டு பித்தளை உருவங்களை, தூக்கிப் பார்த்து மீண்டும் அவற்றை கன்னையாவின் பைக்குள் போட்டார்கள். பின்னர் அவரின் கைகளை ஆளுக்கொரு வராகப் பிடித்துக் கொண்டார்கள். கன்னையா அதிர்ச்சியுற்று நின்றார். பிறகு வீரியத்தோடு பேசினார்.

"ஸார்... என் பேர் கன்னையா. அம்பத்தூர் பேக்டரியில ஒர்க்கர்."

"அதனாலதான் பிடிச்சோம். நடடா ஸ்டேஷனுக்கு... அயோக்கிய ராஸ்கல்..."

"ஸார்.... அப்புறம் நீங்க தான் விஷயம் தெரிஞ்சு வருத்தப்பட வேண்டியது வரும்."

"விஷயம் தெரிஞ்சுதான் பிடிக்கோம். எது பேசணுமுன்னாலும், ஸ்டேஷன்ல வந்து பேசிக்கோ. நடடா நாயே... கஸ்மாலம்; ராஸ்கல்."

கன்னையா, நகராமல் நின்றபோது, போலீஸ்காரர்கள் அவரை, தரையில் கால் தேயும்படி தறதறவென்று இழுத்தார்கள். அப்படி இழுப்பது அவர்களுக்கு சிரமமாக இருந்ததால், ஒரு போலீஸ்காரர், கையைவிட்டுவிட்டு, பின்னால் வந்து கன்னையாவின் பிடரியை, லத்திக் கம்பால் குத்தினார். "கயிதே, கயிதே, பேக்டரியில விலைமதிக்க

முடியாத விஞ்ஞானப் பொருளை திருடினது மட்டுமில்லாமல் எங்களையே டபாய்கிறியா!" என்று கத்திக் கொண்டே, அவர் முதுகில், லத்திக் கம்பால் விளாசினார். பிறகு, கம்பீரமாக முன்னால் நடந்து கன்னையாவின் ஒரு கையை, தன் இரு கைகளால் பிடித்துக் கொண்டார்.

அதிர்ச்சியில் விழுங்கப்பட்ட கன்னையா, அக்கம் பக்கம் பார்த்தார். ஒரே கூட்டம். ஏளனமான பார்வை. 'ஒன்னை மாதிரி நான் திருடன் இல்ல' என்று திருட்டுத்தனமான பார்வைகள். அவருக்கு அங்கேயே உயிரை விட்டுவிடலாம் போலிருந்தது. பார்த்தவர்களில், தெரிந்தவர்களும் இருக்கலாம் என்று நினைத்து, அவர் கண்களை மூடிக் கொண்டார். போலீஸ்காரர்களின் கரங்களையே கோலாக நினைத்தபடி, அவர் கண்கலங்க நடந்தார். விழியிழந்து நடந்தார். போலீஸ்காரர்கள் அவரை வழியெல்லாம் அடித்தார்கள். சிறிது தூரம் போனபிறகு, அவர் கைகளிரண்டையும், பின்புறமாக வளைத்து, அவர் துண்டாலேயே கையைக் கட்டினார்கள். லத்திக் கம்புகளால், அவ்வப்போது, அவர் முதுகில் குத்தியபடி, மாட்டை விரட்டுவதுபோல் விரட்டினார்கள்.

வேகாத செங்கற்களால் கட்டப்பட்டது போலிருந்த போலீஸ் நிலையத்திற்குள், கன்னையா கொண்டு போகப்பட்டார். போலீஸ் ஜீப்பில் ஒயர்லஸ் ரேடியோ எதையோ உளறிக் கொண்டிருந்தது. 'பாரா' பார்த்த போலீஸ்காரர்கள், எதுவும் நடக்காததுபோல், தங்களுக்குள்கூடப் பேசிக்கொள்ளவில்லை. என்றாலும், ஒரு பூஞ்சையான, மெலிந்த மனிதரை இப்படி அடித்துக் கொண்டு வருவதைப் பார்த்து, போலீஸ் வளாகத்திற்குள் கிடந்த சாராய கேஸ்களும், மாதக் கடைசி என்பதால் வழக்கு வலைக்குள் சிக்கிய 'வாடிக்கை வாசிகளும்', அவரை அனுதாபமாகப் பார்த்தார்கள். ஐந்தாறு படிக்கட்டுகளில் ஏற்றப்பட்ட கன்னையா, அந்த வளாகத்தின் சிம்மாதனம் போலிருந்த தூக்கல் அறைக்குள் கொண்டு போகப்பட்டார். ஒருவரை, ஒரேயடியாய் கொலை செய்யுமளவிற்கு இடவசதி கொண்ட மேஜை பரப்பில் தொப்பியைக் கழற்றி வைத்துவிட்டு, தூங்கிக் கெண்டிருந்த இன்ஸ்பெக்டர் திம்மையா கண்விழித்தார். கன்னையாவை, புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்தார். பிறகு, சுவாரஸ்யமாக "வாய்யா... வாடா..." என்று தலையாட்டி உருமினார்.

கன்னையாவிற்கு, அப்போதுதான் உண்மையின் பொய்மை நிழல் புரிந்தது. டெலிவரிஷீட் கொடுக்காமல் அனுப்பப்பட்டதன் மர்மமும், ஜி.எம்.மின். சூழ்ச்சியும், ஓ.எம்.மின் உடந்தையும், இன்ஸ்பெக்டரின் ஒத்துழைப்பும், வாடிக்கையின் விபரீதமும் புரிந்தது. அது புரியப் புரிய அவருக்கு அண்டர் கிரவுண்ட் உலகம் புரிந்தது.

லேசாக பயம் பிடித்தது. உயிருக்கு மிஞ்சியது எதுவுமே இல்லை என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார். முன்பு, தன்னை உருட்டி மிரட்டிய அதே அந்த இன்ஸ்பெக்டர் திம்மையாவை, ஏற இறங்கப் பார்த்தார். அவரோ, கோரப் சிரிப்போடு, குத்திட்ட மீசையோடு, கொடூரமான பார்வையோடு தரிசனம் தந்தார். அருகே இருந்த லாக்கப் அறைக்குள், இரும்பு கிராதிகளில் முகம் புதைத்து ஒடுங்கிப் போயும், ஓங்கிப் போயும் நின்ற மனிதக் கைதிகளை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டபடியே கன்னையா ஓலமிட்டார்.

"என்னை மன்னிச்சிடுங்கய்யா. ஒங்கள மாதிரி ஆசாமிங்கள முன்னெல்லாம் போலீஸ் அடிக்கும்போதும், பிடிக்கும்போதும், தப்புப் பண்றவங்களை இப்படித்தான் பண்ணணுமுன்னு நானே நினைத்தேங்க. இப்போதான் புரியுது, என்னை மாதிரி உங்கள்ல எத்தன பேரு அப்பாவிங்களோ? எத்தனபேரு ஒங்க பெண்டுபிள்ளிங்க மானத்தை விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு இந்த மானங்கெட்ட பயல்க கிட்டே உதை தின்னிங்களோ?"

திடீரென்று, கன்யையா மல்லாக்க விழுந்தார். தலைதெறித்து தனியாய் விழப்போவது போலிருந்தது. கண்கள் திறந்தபடியே இருட்டாயின. கம்போ, இரும்போ, கைமுஷ்டியோ, தொண்டையிலும், நெஞ்சிலும் பட்டது போலிருந்தது. கண்களைக் கொட்டிப் பார்த்தார். ஒளியில்லை. கால்களை நீட்டப் பார்த்தார். முடியவில்லை. கட்டப்பட்ட கைகளை அசைக்கப் பார்த்தார். இயலவில்லை. வாயெல்லாம் ஒரே ரத்தம். கன்னையா துப்பினார். இதைப் பார்த்த இன்ஸ்பெக்டர், தன் பூட்ஸ் காலாலேயே, அவர் தலையை உருட்டியபடி "இன்னும் ஒனக்கு திமிர் அடங்கல. செட்டு சேக்குறியா செட்டு... ராத்திரி ஆகட்டும், அப்போதான் இருக்கு சேதி... இவனை... பின்னறைக்கு இழுத்துட்டுப் போங்க" என்றார்.

கீழே புரண்ட கன்னையாவை, இரண்டு போலீஸ்காரர்கள், அடிபட்ட நாளைய இழுத்துப் போவது போல் கால்களைப் பிடித்து உள்ளறையான பின்னறைக்குள் இழுத்துக் கொண்டு போனார்கள். போலீஸ் வளாகத்திற்குள் நின்றவர்கள், துப்பாக்கிகள் அப்பிக் கிடந்த சுவரருகே வந்துகூடி, போலீஸ் முதலாளிகளை வெறுப்போடும், பயபக்தியோடும் பார்த்தார்கள். லாக்கப்வாசிகளில் சிலர், இது அநியாயம் என்றுகூட சொல்லப் போனார்கள். பின்னர் இயலாதவர்களாய், வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டார்கள். டெலிபோனையே முறைத்த திம்மையாவிற்கு, கையில் ஒரு ஊறல்.. வேடிக்கை நிருபனுக்கு போன் பேட்டு ஆசாமி சிக்கியிருக்கான். சொன்னதை அவன் செய்யாட்டால், திருட்டு கேஸ்ல 'புக்' பண்ணப் போறேன். அப்படி ஒரு நிலைமை வந்தால் 'பேக்டரி யந்திர

ரகசியத்தை வெளிநாட்டுக்கு விற்கப் போன களவாளியை கண்டுபிடித்த திம்மையா' என்று ஒரு செய்தி போடச் சொல்லலாமா என்று யோசித்தார் ஏனோ, டெலிபோன் செய்யவில்லை.

'திம்மையா', சிந்தித்தார், இப்போ வேண்டாம். அப்புறம். இவன், கன்னையா.... சொன்னதை செய்வானா? புலன் விசாரணையில் அவன் ஐம்புலன்களையும் சேதப்படுத்தி எப்படியோ சம்மதிக்க வைக்கணும். லேசுப்பட்ட சமாச்சாரமா? எவ்வளவு பெரிய மனுஷங்க இதுல இன்ட்ரஸ்ட் காட்டுறாங்க. நாளைக்கு நம்மள தண்ணி இல்லா காட்டுக்கோ, இல்ல உருப்படாத ஆயுத போலீஸ் படைக்கோ மாத்துறதாய் வச்சுக்குவோம்; அப்போ இந்த அப்பாவுவோ, அந்த வாடிக்கை எம்.டியோ. கம்பெனி ஜி.எம்.மோ ஒரு போன் போட்டால் போதுமே... டிரான்ஸ்பராவது கத்திரிக்காயாவது!

மாலை, இரவாகியது.

போலீஸ் நிலைய மரங்களில் பறவைகள் துயில் கொண்ட நேரம். திடீரென்று, ஏதோ ஒரு மைனாக்குருவி, பிரளயத்தை பிரசவிப்பதுபோல் ஓலமிட்டது. ஒரே ஒரு நிமிடம்தான். வெள்ளைப் புள்ளிகள் கொண்ட கரும்பூனை ஒன்று, வாயில் கௌவிய மைனாவுடன் கீழே குதித்தபோது, காகங்களும், மைனாக்களும், தாழப்பறந்து புலம்பின. பூனையின்மேல் கால்கள் படும்படி, சாய்ந்து பறந்தன. பிறகு அந்த கொலைகாரப் பூனையை எதுவும் செய்ய முடியாது என்பதுபோல் ஆகாயத்தில் கும்பலாக, கூக்குரலாக வட்டமடித்தன.

போலீஸ் நிலையத்தின் பின்பகுதியில், அடுக்கி வைத்த பைல்களும், சேதப்பட்ட துப்பாக்கிகளுமாய் இருந்த மலைக்குகை போன்ற அறைக்குள், பின்புற கைக்கட்டு அவிழ்க்கப்படாமலே சோர்ந்த கிடந்த கன்னையா, காலடிச் சத்தம் கேட்டு கண்விழித்தார். நான்கைந்து போலீஸ் மனிதர்களுடன் தோன்றிய இன்ஸ்பெக்டர் திம்மையா, கன்யைாவை பூட்ஸ் காலால் உதைக்க, அவர் சுருண்டு சுருண்டு நெளிந்தார். இன்ஸ்பெக்டர் கர்ஜித்தார்.

"அயோக்கிய நாயே! திருட்டு ஸ்கவுண்ட்ரல்! நான் வாரேன், மரியாதை தெரியாமல் உட்கார்ந்தா இருக்கே? இது என்ன போலீஸ்னு நினைச்சியா, இல்ல ஒன் மச்சான்னு நெனப்பா?"

சுருண்டு கிடந்த கன்யைாவின் தலைமுடியை, இன்ஸ்பெக்டர் குனிந்து பிடித்து, அவரைத் தூக்கி நிறுத்தினார். கன்னையா சில்லிட்டு நின்றார்.. திம்மையா முழங்கினார்.

"இப்போகூட தலைமுழுகிப் போகல, நான் சொன்னதைக் கேட்டால், நீ பேஷாய் வீட்டுக்குப் போகலாம்?"

கன்னையா, கலங்கிய கண்களை நிமிர்த்தி, ரத்த வாயோடு கேட்டார்.

"நீங்க சொன்னதைக் கேட்டால்தான் என் குடியே முழுகிடும்."

"அப்படின்னா ஒன் டாக்டரை எழுதிக்கொடுக்கச் சொல்லமாட்டே?"

"என்னை எதுக்காக இங்கே கொண்டு வந்திங்களோ, அதை மட்டும் விசாரியுங்க."

"விசாரணையைப் பற்றி, எனக்கே சொல்லிக் கொடுக்கிறியா? இரு...இரு!"

இரக்கமுள்ள கான்ஸ்டபிள் ஒருத்தர் கன்யையாவுக்கு, புத்தி சொன்னார்.

"நீ சரியான எட்டன். இன்ஸ்பெக்டர் அய்யா... கையில... காலுல விழுந்த, சொல்றது மாதிரி செய்துட்டுப் போய்யா."

"நீங்க சும்மா இருங்க ஸார். இது ஒரு நாடகம். இதுல நான் மட்டும்தான் நிஜம். இன்ஸ்பெக்டர் ஒரு நடிகர்தான்... என்னை எதுக்காகக் கொண்டு வந்தீங்க?"

"இந்த மெஷின் மாடல்கள் ஒனக்கு எப்படிக் கிடைச்சுது?"

"எங்க ஜி.எம்கிட்டே கொடுப்பதுக்காக, ஒர்க்ஸ் மானேஜர் தந்தார்."

"அப்போ டெலிவரி ஷீட்டை காட்டு."

"தர்ல."

"அப்படின்னா நீ திருடன்."

"ஜி.எம்முக்கு டெலிபோன் செய்யுங்க. இல்லன்னா ஒர்க்ஸ் மானேஜரை இழுத்து வாங்க. நானே... அந்த அயோக்கியங்க கிட்டே பேசுறேன்."

"ஜி.எம்.மே எழுத்து மூலம் கம்ப்ளெயின்ட் கொடுத்திருக்கார். இதுக்கு என்னடா சொல்றே? முட்டாள்... ஒன்னால என்னடா செய்ய முடியும்?"

"பத்திரிகை பொறுக்கி... பேக்டரி கேடி.... காலேஜ் திருடன்.... போலீஸ் ரவுடி இப்படி நாலுபேரு.... நாலுபக்கம் சூழும்போது, ஒரு ஏழையால என்ன செய்ய முடியும்? அறிவாளிகள் கூட, முட்டாள் மாதிரி நடிச்சால்தான் பிழைக்க முடியுமென்கிற காலம் இது."

மீண்டும், கன்னையா மல்லாக்க விழுந்தார். இன்ஸ்பெக்டர் விட்ட குத்தில், தரையில் கைகால்கள் வெட்டிக் கொண்டு கிடந்தார்.

திம்மையா, கீழே கிடந்தவரின் தலைமுடியைப் பற்றி, பழைபடியும் தூக்கி நிறுத்தி "அயோக்கிய ரஸ்கல். நானா ரௌடி?" என்று கத்தினார். பிறகு போலீஸ்காரர்கள், கன்னையாவை நெருங்கினார்கள். ஒருவர், அவர் கையை இழுத்து நீட்டி, புறங்கை தெரிய திருப்பிப் பிடித்தார். இன்னொருவர், சவுக்குக் கம்பால், ஓங்கி ஓங்கி அடித்தார். கன்னையா, பல்லைக் கடித்து, வலியைக் கடித்தார். திம்மையா கூக்குரலிட்டார்:

"மவனே! இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும். ஒண்ணு பேக்டரில இதைத் திருடுனதாய் நீ ஒத்துக்கணும். இல்லன்னா, ஒன் மகளை எழுத வைக்கணும். இல்லை.... ராத்திரியோடு ராத்திரியாய் பெட்ரோல் ஊற்றி கொளுத்தி எரிச்சுடுவேன்."

"சொன்னதைச் செய்டா தெருத் தெருவாய் என்னை அவமானப்படுத்தி கூட்டிவந்த பிறகு, நான் உயிரோடு இருக்கதுல அர்த்தமில்ல. ஆனால் ஒன்று, இதுக்கெல்லாம் வட்டியும் முதலுமாய் நீங்க திருப்பிக் கொடுக்க வேண்டியது வருணுடா."

திம்மையா, 'டா' கேட்டு துள்ளினார். எமகிங்கரர்களான கான்ஸ்டேபிள்களை முறைத்தபடியே, கன்னையாவை காலால் இடறினார். கீழே விழுந்தவரை ஒருத்தர் தூக்கி நிறுத்தினார். இன்னொருத்தர், அவர், டவுசரை களைந்து, ஐட்டியையும், சட்டையையும் கிழித்தெறிந்து அம்மணமாக்கினார். கன்னையா, பிரக்ஞையற்று நின்றார். இன்ஸ்பெட்ரோ "உம்... சீக்கிரம்......" என்றார்.

உடனே ஒரு போலீஸ்காரர், ரூல்தடியை எடுத்து, கன்னையாவின் முட்டிக் கால்களின் பின்னால் வைத்தார். இன்னொருத்தர், கன்னயைாவின் தலையை அமுக்கி, கம்பின்மேல் உட்கார வைத்தார். ஐந்து நிமிடம் அமர்த்தப்பட்ட கன்னையா, வலி தாளாமல் தெளிந்தபோது, நெளிந்த இடமெல்லாம் சவுக்கடி, வளைந்த இடமெல்லாம் லத்திக்குத்து.

இன்ஸ்பெக்டருக்கு, இப்போது பின்னணிப் பெரிய மனிதர்கள் பின்னுக்குப் போனார்கள். அவர்களுக்காக காரியம் ஆற்றாமல், தனக்காகச் செய்யத் துவங்கினார். கேவலம் ஒரு பன்னாடப்பயலை சொன்னபடி ஆட்டி வைக்க முடியாட்டால், நான் என்னய்யா இன்ஸ்பெக்டர்? பெரிய பெரிய ரௌடிகளையே, இஷ்டப்படி பேச வைக்கிற என்கிட்டேயா வாலாட்டுறே? பார்த்துடலாம்.

இன்ஸ்பெக்டர் ஆணையிட்டாா.

"ஊசி என்ன ஆச்சு?"

போலீஸ்காரர்கள் திடுக்கிட்டார்கள். இவ்வளவு பெரிய தண்டனையா? ஆனாலும் ஊழல் குற்றச் சாட்டால் குடும்பமே

தெருவுக்கு வரும நிலையில் இருந்த ஒரு போலீஸ்காரர், ஆபத்து பாண்டவனான அபயத்திலகம் இன்ஸ்பெக்டர் சொல்லி விட்டார் என்பதற்காக, ஒரு டப்பாவுக்குள் இருந்த ஊசியை எடுத்தார். ஒருத்தர் கன்னையாவின் வலது கையைத்தூக்கிப் பிடித்தார். எடுத்தவர் பிடித்தவரிடம் இருந்த கையில், ஆள்காட்டி விரலின் நகத்திற்குள் ஊசியை விட்டார். கன்னையா, வலிதாங்காமல் கத்தியதில், அப்போது மரத்தில் மீண்டும் அமர்ந்த பறவைகள் கூக்குரலோடு வெளியேறின. கன்னையாவின் நகவோர சதைக்குள் ஊசி இறங்க இறங்க, அவர் "சம்மதம்... சம்மதம்..." என்றார். ஊசியை எடுத்தார்கள். இன்ஸ்பெக்டர் திருப்தியோடு சிரித்தார். கன்னையா, தன்னையறியாமலே சொன்னதற்கு வெட்கப்பட்டு, "முடியாதுடா! என்னை என்ன வேணுமுன்னாலும் செய்யுங்கடா" என்றார்.

இன்ஸ்பெக்டர் திம்மையா, கோரமாகச் சிரித்து, குரோதமாகப் பேசினார்.

"இதோட நிற்காதுடா மகனே! நான் சொன்னதை நீ செய்யுமுன்னால், ஒன்னை விடப்போறதில்லே. இந்த திம்மையாவைப் பற்றி பெரிசு பெரிசாய் தெரிஞ்சுக்குவே. ஒன் ஆசனத்துக்குள்ளே ஊசி வைப்போம்; அதையே ஆண்குறிக்குள்ளே சொருகுவோம்; ஒன் தொடையைக் கீறி அதுக்குள்ளே அட்டையை கடிக்கவிட்டுட்டு சதையைத் தைப்போம். ஒன் மகள் மட்டும் எழுதிக் கொடுக்காமல் இருக்கட்டும், அப்படி என்னடா பொல்லாத மகள். அப்பாவுகிட்ட படுக்காமல், அவளுக்கு வேலை கிடைத்திருக்குமா?"

"ஏய், என்னை என்னவேணுமுன்னாலும் படுத்து. என் மகளைப் பற்றி பேசாதடா தேவடியா மகனே! ஒன் பெண்டாட்டி, மகள்களை வச்சு பிறத்தியார் பொண்ணுங்கள எடை போடாதடா, புறம்போக்கு."

போலீஸ்காரர்கள், அசந்து போனார்கள். அப்படியே இருந்தாலும், ஒரு இன்ஸ்பெக்டரைப் பார்த்தா இப்படிக் கேட்பது? திம்மையாவுக்காகக் காத்திருக்காமல் 'விசாரணை' போலீஸ்காரர் கன்னையாவை எட்டி உதைத்தார் இப்போது குப்புற விழுந்தவரை, திம்மையா தூக்கி நிறுத்தினார். அவர் மூளையில் ஒரு கிரிமினல் வெட்டு. சுயமரியாதைக்கு விடப்பட்ட பாதிப்பையும், தொழிலுக்கு விடப்பட்ட சவாலையும் சமாளித்திடலாம். திம்மையா ஆணையிட்டார்.

"இந்தாப்பா, ஒங்களத்தான்! இவன் வீட்டுக்குப் போய் ரெய்ட் செய்து, இந்த பேக்டரி பொருள்ல ஒண்ணு அங்கே இருந்ததாய் எஸ்டாபிளிஷ் செய்யுங்க. இவன் ஒய்பையும், மகளையும் இழுத்துட்டு வாங்க. இந்தப் பயல் முன்னாலேயே, இவன் டாட்டரை படாதபாடு

படுத்தினால்தான், சரிப்படுவான். இல்லைன்னா, இவன் சொன்னது மாதிரி நான் தேவடியா மகன்னு அர்த்தம். மட்டில போங்கப்பா... குயிக்... வெளியாட்களுக்குத் தெரியாம காரியத்த முடிக்கணும். உஷார்!"

பிரக்ஞை இழந்தவர்போல் நிர்வாணப்பட்டுக் கிடந்த கன்னையா, ஏதோ பேசப் போனார். இதற்குள், போலீஸ்காரர்களில் இருவர், மட்டியாகி வெளியே நடந்தார்கள். வசந்தியையும், அவள் அம்மாவையும் இழுத்து வருவதற்காக, யந்திரப் பொருளோடு, சைக்கிள்களில் ஏறினார்கள். அப்போது-

உள்ளே, கன்னையாவின் உயிரே ஓலமிட்டது. போலீஸ் மரத்தில், மைனாவைத் தின்ற அதே பூனை, இப்போது இன்னொரு குருவியைப் பிடிக்க, மெள்ள மெள்ள ஏறிக்கொண்டிருந்தது- இன்னொரு மரத்தில், வேறுவிதமான பார்வையுடன்.

## 26

ஆவேசமாக நுழைந்த அப்பாவுவைப் பார்த்து, முன்பு மாதிரி, போர்ட் உறுப்பினர்கள் எழுந்திருக்க வில்லை. அவரைக் கோபமாய்ப் பார்த்து, குரோதமாய் கேட்கப் போனார்கள். பிறகு ஆசாமி உட்காரட்டும் என்று இளக்காரமாய்ப் பார்த்தபடி இருந்தார்கள். அப்பாவு, நின்றபடியே, உறுப்பினர்களை ஒட்டு மொத்தமாகவும், தனித் தனியாகவும் பார்த்தார். மகன் சங்கர், தன் சட்டைப் பைக்குள் ராஜினாமாக் கடிதம் இருக்கிறதா என்று தேடிக் கொண்டிருப்பதைக் பார்த்தார். ஆசிரியர்கள் சார்பில் உறுப்பினராகியுள்ள 'படிக்காத' தொழிலதிபர் சோமுமையும், நான்-டீச்சிங் ஊழியர் சார்பில் உறுப்பினரான எஸ்டேட் முதலாளி வரதராஜுலுவையும், லோக்கல் அரசியல்வாதியும், பள்ளிக்கூடமே போகாதவருமான பண்புவேந்தன், பழைய கல்லூரி மாணவர்கள் சார்பில் வந்திருப்பதையும், பின்னணியோடு பார்த்தார். மொத்தம் பதினைந்து உறுப்பினர்கள் 'கோரம்' இல்லாமல் ஒத்தி வைக்கப்படும் போர்ட் கூட்டம் பொங்கி வழிவதையும், அந்த வெள்ளத்தில், மகன், தன்னைத் தூக்கியெறிய திட்டமிட்டிருப்பைதயும் புரிந்தவராய், மெல்லச் சிரித்தார். அஜெண்டாவின் முதல் அயிட்டமே அப்பாவுவின் சில தகாத அறிவிப்புகள் பற்றியத்தான்.

அப்பாவு, திடுக்கிட்டு உட்கார்ந்தார். அவருக்கு, வழியனுப்பு விழா நடத்தப் போவதுபோல் உறுப்பினர்கள், அவரை பார்த்தபோது,

அப்பாவு, அஜெண்டா காகிதத்தைப் புரட்டினார். வியப்பை வெளிக்காட்டாமலே, தன் ஆயுதத்தை வீசியெறிந்தார்.

"அஜெண்டா இருக்கட்டும். அதுக்கு முன்னால ஒரு முக்கியமான சமாச்சாரத்தை, போர்ட் பரிசீலனைக்கு வைக்கிறேன். நம்ம டிரஸ்டுக்கு, நூறு கிரவுண்ட் இடம் காலியாய் இருக்குது ஒங்களுக்குத் தெரியும். இதில் அறுபது கிரவுண்டை இருபதாயிரம் ரூபாய் ரேட்டுக்கு கல்சுரல் அகாடமி வைக்கிறதுக்காக ஒரு சேட்டுக்கு கொடுத்திடலாம்."

உறுப்பினர் ஒருவர் வெகுண்டெழுந்தார்.

"அதெப்படி? இந்த ஏரியாவுல கிரவுண்ட் ஒரு லட்சம் ரூபாய் போகுது. இது அக்கிரமம். அநியாயம். அஜெண்டாவுக்கு வருவோம்."

"நான் இன்னும் சொல்லி முடிக்கல. நாமினல் ரேட்டுக்கு ரிக்கார்ட்படி நிலத்தைக் கொடுப்போம், கிரவுண்டுக்கு எழுபதாயிரம் ரூபாய் வீதம் கமிஷன் கொடுப்பாங்க. நாமும்... பொதுவாழ்க்கை, பொதுவாழ்க்கைன்னு எத்தனை நாளைக்குத்தான் மொட்டையாய் நிற்கது? நமக்கும் பிள்ளகுட்டி இருக்கே. நம்மோட நேர்மைக்காக, குழந்தைகளோட எதிர்காலம் பலியாகலாமா?எந்தப் பயலும் யோக்கியனாய் இல்லாத காலத்துல, நாம் மட்டும் ஏன் யோக்கியமாய் இருக்கணும்? இதனால கண்ட பலன் என்ன? இந்த காலேஜ் பசங்களுக்கு உழைச்சு நாம் கண்ட வெகுமதி என்ன? அதனால ஓசைப்படாமல், தீர்மானம் போட்டு, உருப்படியாய் முன்னேறப் பார்ப்போம். அறுபது கிரவுண்ட்; கிரவுண்டுக்கு எழுபதாயிரம் கமிஷன்; நாம் பதினாறு பேர்; என்ன சொல்றிங்க? தப்பாய் பேசியிருந்தால் மன்னிச்சுடுங்க."

அப்பாவுவை விரட்டுவதற்காக, அவர் மகனுடன் பேரம் பேசியிருந்த உறுப்பினர்களிடையே கப்சிப் அமைதி. மகன்காரனின் முகம் வியர்த்துக் கொட்டியது. கை கால்கள் ஆடின. அப்படியும் எதிப்புத் தெரிவிப்பதற்காக, அவர் எழப்போனபோது, இரு உறுப்பினர்கள், அவர் சட்டையையும், பேன்டையும் இழுத்த இழுப்பில், ஆசாமி நிர்வாணமாவது போலிருந்தது. அப்பாவு, வெற்றிகரமாய் சிரித்தபடி, "சரி, மினிட்ஸ்ல எழுதிக்கலாமா" என்றார். பிறகு மகனை ஓரக்கண்ணால் பார்த்தபடியே அஜெண்டாவுல "ஏதோ ஐந்து லட்சம் ரூபாய் தலைவரின் தகாத அறிவிப்பு"ன்னு போட்டிருக்கு என்றார்.

'படிக்காத' சோமையா ஆற்றுப்படுத்தினார்.

"அதைப் பெரிசா எடுத்துக்காதிங்க. நீங்க... பல்கலைக் கழகத்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் வழங்குறதாய் சொன்னது பெரிய தொகை. போர்ட் சீரியஸாய் விசாரிச்சு கொடுத்ததுன்னு ஒரு ரிக்கார்ட்

ஏற்படுத்தத்தான். மற்றபடி உங்களுக்கு எதிர்ப்பாய் இல்ல. யுனிவர்சிஸிட்டிக்கு ஐந்து லட்சம் கொடுத்தால்தான் அறுபது கிரெளண்டை விற்கமுடியுமுன்னும் எங்களுக்கும் தெரியும்."

அப்பாவு, இரண்டாவது அயிட்டமான தற்காலிக முதல்வர் மாணிக்கத்தை நிரந்தரமாக்கல்! என்பதை படித்துவிட்டு பதிலளித்தார். சில்லரைக் கணக்குலேயே கையெழுத்துப் போட மறுக்கிறான். கிரெளண்டை விற்கும்போது, அண்டர் கிரெளண்ட் வேலை செய்வான். பேசாமல் லாஜிக் டிபார்ட்மென்ட் சின்னராசுவைப் பிரின்ஸ்பாலாய் போட்டுடலாம்."

"சின்னப் பையன், ஜுனியர்!"

"அதனாலதான் போடணும் என்கிறேன். அவன் விவரம் தெரியாத அப்பாவி. யூனியன்ல இல்ல. நீட்டுன இடத்துல கையெழுத்துப் போடுவான். இப்படிப்பட்டவன்தான் நமக்கும் தேவை."

"சரிதான், அந்தப் பையன் டாக்டர் பட்டம் கிடக்கட்டும்-ஒரு எம்பில் பட்டம்கூட வாங்கலியே? யுனிவர்ஸிட்டி இணங்குமா."

"என்ன ஸார் நீங்க? அடுத்த தேர்தலுல எம்.எல்.ஏ.வாகப் போறிங்க. நியூஸ் பேப்பர் படிக்கது கிடையாதா?

"அந்தப் பழக்கம் இருந்தால் அவர் எப்படி எம்.எல்.ஏ. ஆவார்?"

"பச்சப்பாஸ் தமிழ் புரபஸர் ராமச்சந்திரன், ஹைகோர்ட்ல பி.ஹெச்.டி.பட்டம் வாங்காதவங்க, பிரின்ஸ்பாலாய் இருக்க தகுதியில்லாதவங்கன்னு 1982-ம் ஆண்டு அரசு ஆணையை சுட்டிக்காட்டி, அதற்கு எதிராய் வழக்குப் போட்டார். இந்தச் சட்டம் அரசாங்க காலேஜ்களுக்குத்தான் பொருந்தும். தனியார் கல்லூரிகளுக்கு சம்பந்தமில்லன்னு ஹைகோர்ட் தீர்ப்பளிச்ச பிறகு, எவன் நம்மை கேட்க முடியும்?"

"சரி, சின்னராசு பிரின்ஸ்பால்... அப்புறம்?"

"டிரஸ்ட் தேர்தல்னு போட்டிருக்கு. எனக்கு ஒரு யோசனை. இந்த செட்டப்பே கன்டினா செய்யலாமுன்னு நினைக்கேன். ஒன்றுபட்டு நின்னால், நாமே வந்துடலாம்."

"அப்பாவு ஸார்.... பழைய மாணவர்கள்ல சிலர், காலேஜ்ல படிக்காதவங்க நின்னால் தோற்கடிக்கணுமுன்னு நினைக்காங்களாம். இதே மாதிரி ஆசிரியர்களும், நான்-டீச்சிங் பேர்வழிகளும் பேசுறாங்களாம்."

"நீங்க வேற... தேர்தல் பொறுப்பை மிஸ்டர் அப்பாவு கிட்டே விட்டுடுவோம்..., அவர் பார்த்துக்குவார்."

"ஆமாம், ஆமாமாம்."

டிரஸ்ட் போர்ட் கூட்டம் முடிந்தது. டீ பார்ட்டி தடபுடலாய் நடந்தது. சங்கர் தவிர, எல்லா உறுப்பினர்களும் தாமரையானார்கள். அல்லிப் பூவான அப்பாவுவின் மகன், போர்டின் முடிவை எதிர்பார்த்து, கல்லூரிக்கு வெளியே, காரில் காத்திருக்கும் மனைவிக்கும், மாமனாருக்கும் என்ன பதிலளிப்பது என்று தெரியாமல் உதடுகள் துடிக்க, அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்று தெரியாமல் கண்கள் எரிய, தவித்தார். இந்த லட்சணத்தில், ஆனானப்பட்ட அப்பாவு, மகனைப் பார்த்து "லட்டை ஏண்டா சாப்பிடலே?" என்றார்.

## 27

ஊரடங்கிய இரவின் உச்சி நேரம்.

குழந்தை பாலுக்கு அழுவது போல் கத்திய ஒரு பூனையின் சப்தத்தை தவிர, எல்லாம நிசப்தம். எல்லாம் ஒடுங்கி எல்லோரும் முடங்கிக் கிடந்த நடுநிசி.

'எம்மோ' என்று கத்தியபடியே, பேராசிரியர் பெருமாள்சாமி, கட்டிலில் இருந்து எழுந்தார். யாரோ நான்கைந்துபேர், அவர் தலையை வளைத்து, கழுத்தோடு சேர்த்து, கட்டிலோடு சேர்த்து அமுக்கிவிட்டு, பிறகு வேட்டியை அவிழ்த்துவிட்டு, அவரை நிர்வாணமாக்கி, ஒரு தெரு வழியாய் துரத்திக் கொண்டிருப்பது போன்ற-ஒருவரிடமும் சொல்ல முடியாத-கனவு. வேட்டியை இருகையாலும் இறுகப் பற்றியபடியே எழுந்தவர், தான் போட்ட சத்தத்தில், அந்தத் தெருவே கலைந்திருக்குமே என்று வெட்கப்பட்டார்.

தரையில், பாயில் வெளியுலகைப் பார்க்க விரும்பாதவள்போல், தரைக்கு முகங்காட்டி, குப்புறப் படுத்துக் கிடந்த மேகலா, குறைந்தபட்சம் புரண்டு படுக்காததில் இருந்து, தான் போட்ட சத்தம், தன் அடிவயிற்றில் உருவெடுத்து, தொண்டைக்குள்ளேயே சமாதியானது புரிந்தது. இஷ்டத்துக்கு விரோதமாய், தானாய் ஆடிய உடம்பை, அப்படியே ஆடவிட்டார். அது என்னவோ தெரியவில்லை. கடந்த ஒரு மாதகாலமாக தூக்கத்தில் இருந்து, அவர் தூக்கியெறியப்படும் போதெல்லாம், அவர் இருதயம் தொட்டில் மாதிரி அங்குமிங்குமாய் ஆடுவது போன்ற உணர்வு.

அடிவயிற்றில் பந்து போன்ற ஏதோ ஒன்று உருண்டு, திரண்டு, வாய்க்குள் கதவாகி தாழிட்டுக் கொள்வது போன்ற தவிப்பு.

பேராசிரியருக்கு, நினைக்க நினைக்க நெஞ்சாடியது. ஏதோ ஒரு அதல பாதாளத்தில், தான் மட்டுமே தனித்திருப்பது போன்ற தவிப்பு. எல்லோரும் தன்னை நிர்வாணப்படுத்திவிட்ட வெறுமை. திடீரென்று 'எப்பா' என்ற உணர்வு. இப்போதெல்லாம், கனவுக்கும் நனவுக்கும் இடையே வித்தியாசம் காண முடியாமல் போனவர், சந்தேகத்தோடு திரும்பினார். மேகலாவேதான் படபடப்பாய் கேட்டாள்.

"எவ்வளவு நேரமாய் இங்கே வந்து இருக்கிங்க?"

"எனக்கே தெரியலம்மா. என் கையை பிடிச்சுக்கோம்மா. கையை விட்டுட்டு தலையை தாங்கும்மா. அது துண்டா விழப்போறது போல துடிக்குது."

"அப்பா, நாம பட்டது போதும்பா. பேசாமல் விஷத்தைக் குடிச்சிட்டு சாவோம்பா."

"அப்போகூட இந்தப் பத்திரிகை பசங்க நம்மள விட மாட்டாங்களே. கொத்தித் தின்னுவாங்களே. மீள முடியாமால் மாட்டிக்கிட்டதாலதான், தற்கொலை பண்ணிக்கிட்டோமுன்னு, பத்து நாளைக்கு எழுதுவாங்களே.ஒன்னைப் பற்றியும் தாறுமாறாய் வதந்தி கிளப்பி, நம்மை சாக்கடையா ஆக்கிடுவாங்களே!"

"எத்தன நாளைக்குத்தான் இப்படியே நாம துடிச்சுட்டு இருக்கது?"

"அதாம்மா புரியல. நாம கள்ளப்பணம் வச்சிருக்கோமாம். அட்மிஷனுக்கு லஞ்சம் வாங்கினேனாம். பரீட்சை பேப்பர்ல உல்டா செய்தேனாம். பொம்புள பொறுக்கியாம். அடேயப்பா! ஒன் பாதர் ஒனக்கு எவ்வளவு பேர் சம்பாதிச்சு வச்சிருக்கான் பார்த்தியா!"

மேகலா, எதுவும் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. நிலைமை, ஆறுதல் கட்டத்திற்கு அப்பால் சென்றதை உணர்ந்து எவ்வளவோ நாளாகிறது. நடந்தது எதுவும் கேட்டு வரவில்லை. நடக்கப் போவதும் அப்படியே வரட்டும் என்று இந்த மனமே அவளுக்குச் சொல்லிக் கொடுத்திட்டு, அப்புறம் அதே மனம் அழும்போது, என்ன செய்யமுடியும்?

மேகலா, அப்பாவை கைத்தாங்கலாய், கட்டிலுக்குக் கொண்டு வந்தாள். வெளியே தலைகாட்ட முடியாமல், வீட்டுக்குள்ளேயே சிறையிருக்கும் தனக்கும் அப்பாவுக்கும் விடிவு காலம் வந்தே தீரும். எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு உண்டு என்று தனக்குள்ளேய

சொல்லிக் கொண்டாள். சொல்லச் சொல்ல, லேசான தெம்பு. அப்பாவை குழந்தைபோல் அணைத்தபடி அவள் தாயானாள். இறுதியில் இருவரும் துக்கச் சுமையே தூக்கச் சுமையாக, இருந்தபடியே தூங்கிப் போனார்கள்.

கலையில் கண் விழித்தாலும், பேராசிரியரும், அவர் மகளும், உயிரோடு சமாதியானவர்கள்போல், தத்தம் உலகில் மணிக்கணக்கில் அந்தி சாயும் மாலை வரை சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கதவு தட்டப்பட்டது. இருவரும், இருந்த இடத்தை விட்டு நகராமலே, ஒருவரை ஒருவர் பார்த்து, அப்புறம் கதவையும் பார்த்துக் கொண்டார்கள். இறுதியில் மேகலா போய், கதவைத் திறந்தாள். ஐம்பது வயது மனிதர் ஒருவர், கையில், நான்கைந்து பத்திரிகைகளோடு எதிர்ப்பட்டார். நல்ல உயரம். ஒடுங்கிய உடம்பு. அணைக்கட்டில் கிடக்கும் ஏரி போன்ற நிறை கண்கள். தீட்சண்யமான பார்வை. நாலு முழ வேட்டி... கசங்கிய சட்டை.

வந்தவர், தன்னைப் புரியாமல் பார்த்த மேகலாவை, அன்போடு பார்த்தபடியே, பேராசிரியரிடம் போனார்.

“என்னைத் தெரியுதா ஸார்?”

“நீங்க என் ஸ்டூடன் ஏகாம்பரம், எடிட்டராய் இருக்கிற ‘கைவை’ பத்திரிகையில் புருப் ரீடர்தானே?”

“ஒரு தடவை பார்த்தாலும் மறக்காமல் இருக்கிங்களே?”

“நானும் ஞாபக மறதிப் பேர்வழிதான். அதையும் மீறி நீங்க நிற்கிங்க. என் ஸ்டூடண்ட், என்னை கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் வெளியே அனுப்புனப்போ, நீங்க... டீக்கடையில் ஆறுதலாய் பேசுனதை, இன்னும் மறக்கல ஸார். ‘இந்தக் காலத்தில் ஏழைகளோட உழைப்பு, அவங்களுக்கு எதிராவே திருப்பி விடப்படுகிறது. எனக்கு எதிராவே நான் செயல்படுகிறேன். இது இந்த சமூகத்தோட நோய்’னு நீங்க அப்ப சொன்னது, இப்பதான் சொன்ன மாதிரி இருக்குது ஸார். மேகலா, இவர்தான் நான் சொன்னேன் பாரு... கைவை பத்திரிகையோட....”

“நான் இப்போ அங்கே இல்லை. என் பேர் கண்ணம்மா...“

“என்ன கண்ணம்மாவா?”

“மன்னிக்கணும். கண்ணன்னு என்னைச் சொல்லி, அம்மான்னு அவங்களை அழைச்சேன்.”

பேராசிரியர், கடகடவென்று, பாலத்தில் ஓடும் ரயில் போல சத்தம் போட்டுச் சிரித்தார். பிறகு பாதிச் சிரிப்பிலேயே, தன் பாதிப்புகள் மனதுள்

ஊடுருவ, சிரிப்பை விட்டு விட்டு, சீரழிந்து போனவர்போல், முகத்தை வைத்துக் கொண்டார். இதற்குள், கண்ணன், தன் கையில் இருந்த பத்திரிகைகளில் ஒன்றை பேராசிரியரிடம் நீட்டினார். அவர் அதிர்ந்துபோய், அதை வாங்க மறுத்தபோது, கண்ணன் சீரியஸாகவே பேசினார்.

"இது எங்கள் இயக்கம் நடத்துற 'போர்க்கதிர்' என்கிற பத்திரிகை. தினப்பத்திரிகை. கடைகளில் தலைகீழாய் தொங்குகிற மேனா மினுக்கி பத்திரிகை மாதிரி, இதுக்கு விற்பனை கிடையாது. மொத்தம் பதினையாயிரம் பிரதிகள்தான் விற்குது. ஆனால் எங்களோட ஒவ்வொரு வாசகனும் ஒரு சிந்தனையாளன். ஒங்களைப் பற்றி ஒரு செய்தி போட்டோம். கொடுத்திட்டுப் போகலாமுன்னு வந்தேன். பதட்டப்படாதீங்க... ஒங்களைப் பற்றி உண்மையான செய்திதான் வந்திருக்கு."

பேராசிரியர், கண்ணனிடமிருந்து அந்தப் பத்திரிகையைப் பறித்துக் கொண்டார். அதைப் புரட்டப் போனவர், முதல் பக்கத்திலேயே, 'பேராசிரியர் பெருமாள்சாமியின் வீரப் போராட்டம்' என்ற தலைப்பில், கிட்டத்தட்ட அரைப்பக்கம் படர்ந்திருந்த செய்தியைப் பார்த்தார். மடமடவென்று படிக்கப் போனபோது, மேகலாவும் தலையை நீட்டினாள். பேராசிரியர், கல்லூரியில் இருந்து சஸ்பென்ட் செய்யப்பட்டதில் இருந்து, வாடிக்கை பத்திரிகையின் உடந்தை, அப்பாவுவின் ஆணவம், இன்கம்டாக்ஸின் ஒத்துழைப்பு, கல்லூரி ஊழியர் ஒருவர் பெயரில் பெருமாள் சாமி பணம் போட்டிருப்பதாக ஜோடிக்கப்பட்ட குற்றம்-ஆகிய அனைத்தும் போடப்பட்டிருந்தன. இறுதியில், 'பேராசிரியர் பெருமாள்சாமி, தனித்து, தனிப்பட்ட கௌரவத்திற்காகப் போராடினாலும், இது ஒரு வர்க்கப் போராட்டத்தின் சாயலே. அஞ்சா நெஞ்சத்துடன் போராடும் இவருக்கு, ஒத்துழைப்பு வழங்கவேண்டியது, அனைவரது, குறிப்பாய் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்களுடைய கடமை' என்று எழுதப்பட்டிருந்தது.

பேராசிரியருக்கு, தன்னை நம்ப முடியவில்லை. மேகலாவைப் பார்க்க முடியவில்லை. அவள் அங்கே இல்லாதது போல், கோடு கோடாய்த் தெரிந்தாள். கண்ணன், கண்ணுக்குத் துப்புறவாய்த் தெரியவில்லை. அந்தப் பத்திரிகை மட்டும், ஆகாயமும் பூமியுமாய் ஆகிவிட்ட வானத்திரை போல் தோன்றியது. கண்கள், உச்சந்தலைக்குள் வந்துவிட்டது போன்ற உணர்வு. ஒரே ஆனந்தப் பரவசம். இடையே ஒரு சந்தேகம். ஒருவேளை தூக்கத்தில், தப்பித் தவறி, ஏதோ ஒரு சுகக்கனவு வந்திருக்கிறதோ என்பதுபோல், கண்களைக் கொட்டினார். இல்லை. இவர் கண்ணன். அவள், என் மகள். இது பத்திரிகை. அடடே! என்னைப் பற்றி நானே கூட இப்படி எழுத முடியாதே!

பேராசிரியர், கண்ணனின் கைகளைப் பற்றிக் கொண்டு, தழுதழுத்த குரலில் மன்றாடுபவர் போல் பேசினார்.

"ஒங்களுக்கு.... ஒங்களுக்கு.... எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே? எல்லாப் பயலுவளும் என்னை கண்களால் வெட்டி வாயால மெல்லுற இந்தச் சமயத்துல, இப்படி ஒரு செய்தியா? எல்லோரும் பார்க்கிற பார்வையில, பேசுற பேச்சுல, 'ஒரு வேள நிசமாவே நாமும் அயோக்கியன்தானோன்னு என்னையே, சிலசமயம் நான் சந்தேகமாய் பார்க்கிற தற்கொலைக் காலத்துல, புத்துயிர் மாதிரி வந்திருக்கு... அடேடே! பத்திரிகைக்காரங்க எல்லாருமே மோசமுன்னு நான் நெனைச்சது எவ்வளவு தப்பாய்ப் போச்சு. என்னைப் பற்றி முன்னப் பின்ன தெரியாத இந்தப் பத்திரிகை, எழுதுன எழுத்துக்கு, நான் காலங்காலமும் நன்றியோட..."

"நிறுத்துங்க ஸார்! பளுவுலேயே பெரிய பளு நன்றிப் பளு. பச்சையாய் சொல்லப்போனால், ஒங்களை ஆதரிக்கணுமுன்னு தனிப்பட்ட முறையில் இந்தச் செய்தியைப் போடலே. பாதிக்கப்பட்ட நல்லவங்களுக்கு குரல் கொடுப்பதும், ஆதரவு காட்டி அணைத்துக் கொள்வதும் எங்கள் பணிகளில் ஒன்று. உங்களுக்கு ஆட்சேபம் இல்லன்னா, ஒங்க வழக்குகளை, எங்கள் வழக்கறிஞர்களே பைசா வாங்காமல் எடுத்து நடத்துவாங்க. என்னடா இந்தக் கந்த வேட்டிக்காரன், இப்படிப் பேசுறான்னு நினைக்காதீங்க. நான் எல்லோரையும் கலந்து பேசிட்டுத்தான் இதை உங்ககிட்டே சொல்றேன்."

பேராசிரியர், கண்ணனை அண்ணாந்து பார்த்தார். சாதாரணப் புருப் ரீடராகத் தோன்றியவர், இப்போது பல்வேறு விவரங்களை 'லீட்' செய்ததற்குப் புருப்பாய் தோன்றினார். வெளிப்படையாகத் தெரியும் வறுமையிலும், அவர் இவ்வளவு அழுத்தமாய் இருப்பதைக் கண்டதும், தனக்குள்ளேயே வெட்கப்பட்டார். இரவுகளில் தான் கண்விழித்திருப்பதையும், சோதனைகளை சாதனைகளாக்க முடியாமல், தோல்வி மனப்பான்மையில் தவிப்பதையும் நினைத்து நாணப்பட்டார். கண்ணனைப் பார்க்கப் பார்க்க, அவரின் அஞ்சாப் பார்வையும், அன்பான தோரணையும், பேராசிரியருக்கு மலைப்பைக் கொடுத்தன. அருவிகளையும், ஆறுகளையும், காடுகளையும்உள்ளடக்கியபடியே 'சிவனே' என்று கிடக்கும் மலைபோல், உலகின் முக்கால் பாகத்தை ஆட்கொண்டாலும் அலட்டிக்காமல் இருக்கும் கடல்போல், அண்ட கோளங்களை உள்ளடக்கி, அசாதாரணத்திலேயே சாதாரணமாய் தோன்றும ஆகாயம் போல், அவருக்கு கண்ணன் தோற்றம் காட்டினார். அவரையே சிறிதுநேரம் பார்த்த பேராசிரியர், மீண்டும் பத்திரிகைக்குள் மூழ்கினார். பிறகு, 'அப்பாவுவையும் வாடிக்கைக்காரர்களையும் இன்னும் நல்லா பிடிபிடின்னு பிடிச்சிருக்கணும்' என்று செல்லமாக அவர்

குறைப்பட்டபோது, மேகலா 'அப்பா' என்றாள் கோபமாக். கண்ணன், அழுத்தம் திருத்தமாய் சொன்னார்.

"நாங்கள் குற்றங்களுக்கு எதிரிகளே தவிர, குற்றவாளிகளுக்கு அல்ல. இந்தச் சமூக அமைப்பை விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதால் இதன்மேல் ஆதிக்கம் செய்வோரை கேரெக்டர்களாகப் பார்க்கிறோம். இந்த ஞானம் இருப்பதால் எங்களுக்கு சமூக அஞ்ஞானம் இல்லை. இப்போ நாட்டில் நடப்பதும் ஒங்களுக்கு நடப்பதும் ஒரு தொற்றுநோயின் அறிகுறிகள். அறிகுறிகளை மட்டும் குறிவைத்தால், நோயை அழிக்க முடியாது."

பெருமாள்சாமி, தன் மகளை 'பார்த்தியா' என்பதுபோல் பார்த்தார். பிறகு, "அடிக்கடி நீங்க வரணும் ஸார்.. உங்க பக்கத்துல இருக்கும்போது, எங்களை எதுவும், யாரும் ஒன்றும் செய்யமுடியாது என்பது மாதிரி தோணுது ஸார்." என்றார். மேகலா, இதற்குள் காபி கொண்டு வந்தாள். கண்ணன், அதைக் குடித்துவிட்டு எழுந்தார். இருவரையும் பார்த்து பொதுநோக்கில் பேசினார்:

"ஒங்களோட கஷ்டமும், நஷ்டமும் எனக்குப் புரியுது. ஆனாலும் இந்தக் காலத்துல, நாம் நியாயத்துக்கு அபராதம் கட்டித்தான் ஆகணும். நீங்க ஒங்களுடைய அனுபவப் பின்னணியில், எதிர்ப்படும் நிகழ்ச்சிகளை சமூக நிலையில் பார்த்தால் - அதைத் தனித்து நோக்காமல் பொது நோக்கில் பார்த்தால், இவ்வளவு தூரம் சுமை வந்திருக்காது. நீங்க தப்பு செய்யல. தப்புச் செய்தவங்க ஒங்களைத் தங்கள் ரூபத்தில் காட்டுறாங்க. இது விநோதமான் நாடகம். இந்த நாடகத்தை நீங்க ரசித்துப் பார்க்கணுமே தவிர, இதன் பசிக்கு ருசியாயிடக் கூடாது. நான் வரட்டுமா"

"நீங்க அடிக்கடி வரணும் ஸார். எத்தனையோ பேருக்கு, நான் டீச்சர். ஆனால் ஒங்களுக்கு நான் ஸ்டூடன்டாயிட்டேன்."

"பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசப்படாது.

"பெரிய வார்த்தை இல்ல சார்... ஒங்க ஞானத்துக்கு முன்னால நான் பேசினது சின்ன வார்த்தைங்க சார்..."

"உடம்பைப் பத்திரமாய் பார்த்துக்கங்க. ஏன்னா, நம்மளை மாதிரி ஆட்களுக்கு ஒடம்புதான் மூலதனம். பணக்காரன் உடம்பைவிட நம் உடம்பு விலை மதிப்பற்றது. அவன் முடங்கினாலோ, போயிட்டாலோ, அவன் குடும்பகள சொத்து காப்பாத்தும்."

மேகலா, கண்ணனின் அருகே வந்து, அவரைப் பெறாமல் பெற்ற தந்தை போல் பார்த்தாள். பேராசிரியர். பெருமாள்சாமி, கண்ணன் எவ்வளவு சொல்லியும் கேளாமல், அவரை பஸ் நிலையத்திற்கு

வழியனுப்பி வைக்க கூடவே போனார். "நான் ஒங்களுக்காக வரல. எனக்காகத்தான் வாறேன்" என்று சொன்னபடியே போனார்.

பேராசிரியர் திரும்பி வந்தபோது, மேகலா 'போர்க்கதிரை' ஆனந்தமாய் படித்துக் கொண்டிருந்தாள். பேராசிரியர் அதைக் கேட்டபோது, அதை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் ஓடினாள். பேராசிரியரோ, மகளைப் பின்தொடர்ந்து, "ஒரே ஒரு தடவை படிச்சுட்டு தாறேம்மா, தாறேம்மா" என்று கெஞ்சினார். மேகலா, அதைக் கொடுக்காமலே உபதேசித்தாள்.

"இந்தப் பத்திரிகை எழுதியிருக்கிற எதிர்பார்ப்புக்கு தக்கபடி நாம் நடந்துக்கணும். அதுதான் நாம் செய்ற கைமாறு. ஒன்னால கெட்டேன், முத்தையாவால கெட்டேன்னு சௌகரியமாய் பேசப்படாது..."

பேராசிரியர், மகளை மாணவத்தனமாய் பார்த்து, அசட்டுச் சிரிப்பை உதிர்த்தார். அவளுக்கோ, முத்தையாவும் இந்த பத்திரிகையை படிப்பதற்கு வரவேண்டுமே என்ற விருப்பம். வரவில்லையே என்ற ஏமாற்றம். தந்தையிடம் தற்செயலாய் கேட்பது போல் கேட்டாள்.

"முத்தையாவை இந்தப் பக்கம் காணல"

"அவன் தங்கை கமலசுந்தரிக்கும், டூப்ளிகேட் முத்தையாவுக்கும் லவ் மாதிரியாம். பையன் வேற சாதியாச்சேன்னு, முத்தையா அம்மா யோசிக்குதாம். அவள் அப்பா 'நான் நொண்டிக்கிட்டு கிடந்தப்போ நம்ம சாதில எவண்டி வந்து பார்த்தான்னு கேட்கிறாராம். இதனால சில்லறைத் தகராறாம். இரண்டு பேரையும் சமாதானம் செய்யவும், கல்யாண ஏற்பாடு செய்றதுலயும், முத்தையா மும்முரமாய் இருக்கான். என்னைக் கூட வீட்டுக்குப்போய், அவன் அம்மாவுக்கு அட்வைஸ் செய்யச் சொன்னான். ஒன்கிட்ட இதை சொல்லலியா? ஆமாம் ஒன்கிட்ட எப்படிச் சொல்ல முடியும்?

மேகலா, தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். முத்தையா, இந்த விவரத்தையும், இதற்கு மேலான விவரத்தையும் தன்னிடம் சொன்னது, அப்பாவுக்கு எப்படித் தெரியும்? 'ஒங்க தங்கை மனசாவது உங்களுக்குப் புரியுதே' என்று நான் சொன்னதும், 'எல்லார் மனசும் என்க்குத் தெரியும். பேராசிரியர் ஜெயிச்சதும், 'இதுவும்' ஜெயிக்கும்' என்று அவர் பதிலளித்ததும் அப்பாவுக்கு எப்படித் தெரியும்? சொல்லத்தான் முடியுமா?

இரவு ஏழு மணிவரை, பேராசிரியரும், மேகலாவும் அந்தப் பத்திரிகையில் 'அந்த' செய்தியை சுமார் முப்பது தடவை படித்திருப்பார்கள். மேகலாவுக்கு அடிமனதுள் புதைந்திருந்த

முத்தையாவின் நினைவு, வெளி மனதில் புதுமலராய்ப் பூத்துக் கொண்டிருந்தது. பேராசிரியர் 'மொதல்ல சொல்லியிருந்தால், என் போட்டோவை கொடுத்திருப்பேனே'ன்னு சொன்னபோது மட்டும் மேகலா, தன் வயமாகி, 'ஆசையிலேயே மோசமானது பப்ளிஸிட்டி ஆசை. போதையிலேயே மோசமானது போட்டா போதை. இதனாலதான் வெட்னரி காலேஜ் எலெக்ஷன் போஸ்டர் குயின் மேரிஸ் காலேஜ் சுவர்ல இருக்கு' என்றாள்.

பேராசிரியர், மகளின் பேச்சை ரசனையோடு கேட்டுக் கொண்டிருந்தபோது-

ஏழெட்டுப்பேர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தலைவர் குருநாதன், தா.முதல்வர் மாணிக்கம், ரசாயனப் பேராசிரியர் சுந்தரமூர்த்தி, வரலாற்றுப் பேராசிரியர் ராமானுஜம், உடற்பயிற்சி ஆசிரியர், அக்கௌன்டன்ட் ராமமூர்த்தி, இன்னும் இரண்டு மூன்று பேர், அவர்கள் வருகையை ஆச்சரியப்பட்டுப் பார்த்த பேராசிரியர் நிமிர்ந்து உட்கார்ந்தார். பேசப் போனார். ஏனோ பேச்சு வரவில்லை. மேகலா சமையல் அறைப்பக்கம் நின்று, தந்தையை பேசும்படி கைகளால் 'கீ' கொடுத்தாள். அவரும பேசினார்:

"வீட்ட எப்படிக் கண்டு பிடித்தீங்க?..."

"ஈஸியா முடிஞ்சுது..."

"ஆமாம். இன்கம்டாக்ஸ் ரெய்ட் நடந்த ஊழல் பெருச்சாளிப் பிரின்ஸ்பால் வீடு எதுன்னு கேட்டிருந்தால்-எவன் வேணுமுன்னாலும் சொல்வானே?"

எல்லோருக்கும் சுருக்கென்றது. மேகலா அப்பாவை கோபமாக முறைத்தாள். அவரோ, அவள் பக்கம் பார்க்கவில்லை. சிறிதுநேரம் கொடூர மௌனம் கோலோச்சியது. குருநாதன், தன்னை பார்த்தபடியே பேசினார்.

"இதுவரைக்கும் உங்களிடம் நாங்க பாராமுகமாய் இருந்தது உண்மைதான். தப்புத்தான். இதனாலயே ஒங்க மேல அனுதாபம் இல்லன்னு அர்த்தமில்ல. ஒருவேளை நீங்களும் எங்க பிரச்சனையில் ஈடுபடாமல் இருந்ததும் ஒரு காரணமாய் இருக்கலாம். கொஞ்சம் வெளிப்படையாய் சொல்லப்போனால், பத்திரிகைச் செய்திகளை நாங்களும் கொஞ்சம் நம்பிட்டோம். இது அச்சடிச்ச எழுத்தோட ஆதிக்க காலம் பாருங்க. ஆனாலும், இன்னைக்கு அக்கௌன்டன்ட் ராமமூர்த்தி சொன்ன பிறகுதான் முழுவிவரமும் புரிஞ்சது. இன்னும் நாம் சிதறிக் கிடக்கக் கூடாது. காலேஜ் பிரச்சனையை, இன்கிரிமென்ட், எபிஷியன்ஸி பார் பிரச்சனையாய்ப் பார்க்காமல் கல்விப் பிரச்சனையாயப் பார்க்கணும்...

தாற்காலிக முதல்வர் மாணிக்கம், குறுக்கே பேசினார்:

"அய்யா இடத்துல நான் இருந்திருக்கவே படாது. ஆனாலும் ராமனை நெனச்சு பரதன் ஆண்டது மாதிரிதான் நானும்.."

"நீங்க ஆண்ட லட்சணம் எல்லாருக்கும் புரியும் ஸார். கொஞ்ச நேரம் சும்மா இருங்க ஸார். குரு... நீ... பெருமாள்சாமி ஸார் கிட்டே வந்த காரியத்தைப் பேசுப்பா..."

"ஒங்களை நாங்க திராட்ல விட்டுட்டதால, காலேஜ் நிர்வாகம் எங்களையும் திராட்ல விட்டுட்டாங்க. புது பிரின்ஸ்பாலாய் சின்னராசுவை போடப் போறாங்க. நமக்கு இதைவிட பெரிய அவமானம் இருக்க முடியாது. அதனால, ஒங்களையே மீண்டும் பிரின்ஸ்பாலாய் போடும்படி போராடப் போறோம். இதுக்கு ஒங்க சம்மதம் வேணும்..."

"ஸோ... ஐ. சைன் பை கான்ட்ராஸ்ட்... சின்னராசால... நான் பெரியவாராசாவா ஆயிட்டேன் அப்படித்தானே?

"இப்போ ஆர்க்யூ பண்ண டயம் இல்ல. ஒங்களை சஸ்பென்ட் செய்துப்போ போராடப் போனோம். நீங்கதான் தடுத்திட்டிங்க. அப்பாவு, ஒங்களுக்கு எதிராய் காலேஜ் கவுன்சிலில் தீர்மானம் போடச் சொன்னபோது, அதை ஒட்டு மொத்தமாய் எதிர்த்தோம். அதனால தீர்மானமே வரல. இனிமேல் பிரின்ஸ்பாலாய் ஆகிறது ஒங்களுக்குப் பிடிக்குதோ, இல்லியோ, எங்களுக்குப் பிடிக்குது. மாணவர் சங்கமும், நீங்கன்னா, எங்க பேராட்டத்துக்கு ஆதரவு கொடுப்பாங்களாம். யுனிவர்ஸிட்டி ஆசிரியர் சங்கமும்,தனியார் கல்லூரி ஆசிரியர்கள் சங்கமும், நம் போரட்டத்துக்கு ஆதவு கொடுக்கப் போறதாய் தெரிவிச்சிருக்காங்க. ஒரே வார்த்தை சம்மதமுன்னு மட்டும் சொல்லுங்க ஸார்... ஒங்க கிட்ட கேட்காமலே போராடலாமேன்னு நீங்க கேட்கலாம். அப்படிப் போராடுனா நீங்களே எங்க போராட்டத்திற்கும், உங்களுக்கும் சம்பந்தமில்லைன்னு சொல்லிடப்படாதே. உங்களுக்காக போராட முன்வந்த மாணவர்களையும் அப்படித்தானே செய்தீங்க. இப்போவாவது இணக்கம் தெரிவிங்க சார்... வாய் திறந்து சொல்லுங்க சார்...

பெருமாள்சாமி சொல்லவில்லை. யோசித்தார். தன்னைப் பற்றியும், தான் பட்டபாட்டை பற்றியும் கண்டுக்காத இந்தப் பயல்கள், ஜூனியர் பயலிடம் மாட்டிக்கிட்டு, வாங்கிக் கட்டிக்கட்டும் என்றுகூட நினைத்தார். அப்போது முத்தையாவின் தந்தை தனக்கு விளக்கிய யதார்த்த உபதேசம் காதில் ஒலித்தது. தற்செயலாய் மகளைப் பார்த்தால் அவளோ சம்மதம் சொல்லும்படி அபிநயம்

பிடித்தாள். பேராசிரியா பிகு செய்யாமல் ஆனால், நிஜமாகவே நினைத்ததைத்தான் சொன்னார்:

"என்னோட சொந்தப் பிரச்சனையை இதுல கொண்டு வந்தால்..."

வரலாற்றுப் பேராசிரியர் ராமானுஜம் விளக்கினார்.

"சொந்தப் பிரச்சனையை ஊர்ப் பிரச்சனையாக்கப்படாது. பட், ஊர்ப் பிரச்சனையை சொந்தப் பிரச்சனையாக்கலாம். ஸோ, சொந்த பிராப்ளமும், ஸோஷியல் பிராப்ளமும் இந்த விஷயத்தில் ஒரே காய்ன். எந்த விஷயத்தையும் சப்ஜெக்டிவ்வாய் பார்க்கப்படாது. பட், அப்ஜெக்டிவ் அனாலிஸிஸ் என்கிறதுலகூட சப்ஜெக்டிவ் எலிமெண்ட் உண்டு. அதுவும்..."

"ஸார் நீங்க என்னதான் சொல்ல வாறீங்க...."

"கிளாஸ் எடுக்கிறதும் இப்படித்தான். அப்புறம் பசங்க கலாட்டா பண்றாங்கன்னு புகார் வேறே.."

குருநாதன், பொறுமையில்லாமல் பேசினான்.

"இப்போ தமாஷ் பேச டயம் இல்ல. இரவு ஒன்பது மணி அளவில் ஆசிரியர் கூட்டம் நடக்கப் போகுது. அவங்க கிட்டே சொல்லணும்."

பேராசிரியர் துள்ளிக் குதித்தார். அப்பாவு படுத்திய பாட்டையும், வாடிக்கையும் இதர பத்திரிகைகள் எழுதிய பாட்டையும், இன்கம்டாக்ஸ்காரன் நடத்திய பாட்டையும் ஆசிரிய சகாக்களிடம் 'ஒரு பாடு' அழவேண்டும்போல் ஒரு ஆசை. ஆசிரியர் கூட்டத்துல கேட்டார்:

"ஏம்பா நான் பேசலாமா..."

"ஏன் கூடாது?"

"பேசி முடிக்க ஒரு மணிநேரம் ஆகும். பரவாயில்லையா?"

"இன்னைக்கு மட்டும் பொறுத்துக்கிறோம். ஆனால் இப்பவே புறப்படணும்...."

"மேகலா நீயும் புறப்படும்மா..."

"நான் எதுக்கு..."

"வாங்கம்மா!"

"வாம்மா.... அப்படியே முத்தையா வீட்டுக்கும் போயிட்டு வரலாம்..."

"சரிப்பா."

"அப்புறம் காபி, டீ..."

"இப்போ நேரமில்ல. நீங்க புறப்படுங்க மேடம்..."

"மேகலா, இந்தப் பத்திரிகையை எல்லாருக்கும் சத்தம் போட்டுப் படி..."

"நடந்துகிட்டே படிக்கலாம்."

"அதுவும் சரிதான். புறப்படு..."

எல்லோரும் எழுந்தார்கள். மேகலா, அதோ அந்த எதிர் வீட்டுக்காரியை, கம்பீரமாய்ப் பார்த்தபடியே கதவைப் பூட்டியபோது, முத்தையாவும் அங்கே வந்து விட்டான். எல்லோரும் அணிவகுத்து நடப்பதுபோல் நடந்தார்கள், கால்மணி நேர நடையும், ஒருமணி நேர பல்லவப் பிரயாணமுமாய், அவர்கள் வடசென்னைக்கு வந்து, ஒரு குறுக்குச் சாலையில் நடந்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் எதிரில் தென்பட்டவளைப் பார்த்து மலைத்தார்கள். வசந்தி!

மார்பாடை சரிந்திருப்பதை மனதில் கொள்ளாமல் கன்னத்தில் வழிந்தோடும் நீரைத் துடைக்காமல், அரைக்கண் பார்வையோடு, ஓடிக் கொண்டிருந்த வசந்தி, அவர்கள் எதிரில் நின்றாள். குருநாதன், பதட்டமாகக் கேட்டாள்:

"எங்கேம்மா போற? ஏன் இப்படி வேளகெட்ட வேளையில..."

வசந்தி, எல்லோரையும், ஒட்டு மொத்தமாகப் பார்த்துவிட்டு, பேராசிரியர் பெருமாள்சாமியை தனித்துப் பார்த்தாள். பிறகு, திடீரென்று கீழே குனிந்து அவர் காலைப் பிடித்தபடி கேவினாள். பதறிப்போன பேராசிரியர், அவளைத் தூக்கி நிறுத்தி, "என்னம்மா? என்ன விஷயம்" என்றார். அவள், கண்ணீரும் கம்பலையுமாய் சொல்லப் போனாள்.

"அய்யோ கடவுளே! என் வாயால எப்படிங்கய்யா சொல்வேன்?"

"சும்மா சொல்லும்மா. நான் ஒனக்கு அப்பா மாதிரின்னு எத்தன தடவ சொல்லி இருக்கேன்!"

"புண்ணியவானான ஒங்க மேல அப்பாவு பழி போட்டு எழுதிக் கொடுக்கச் சொன்னாரு. நான் முடியாதுன்னேன். வாடிக்கை பத்திரிகைக்காரன், எங்க அப்பாவுக்கு ஆசை வார்த்தை காட்டினான். அப்பா முடியாதுன்னதும் போலீஸ வச்சு மிரட்டினான். அப்பா மசியல. இன்னைக்கும் அப்பாவு என்னைக் கூப்பிட்டு மிரட்டினாரு.

நீங்க என்கிட்டே தப்பாய் நடந்ததாய், எழுதிக் கொடுக்கக்காட்டால் என் குடும்பத்தையே பூண்டோடு ஒழிக்கப் போறதாய் மிரட்டினாரு. வழக்கம்போல மிரட்டுறார்னுதான் நெனச்சேன். ஆனால் வீட்டுக்கு வந்தால், அப்பாவை கையைக் கட்டி, போலீஸ்காரங்க கூட்டிட்டுப் போனதாய் ஒருத்தர் சொன்னார். வழக்கமாய் சாயங்காலமே வார அப்பா, இப்போ என்ன ஆனாரோ? போலீஸ் ஸ்டேஷன்ல என்ன பாடு படுறாரோ? ஏற்கெனவே இன்ஸ்பெக்டர்-வாடிக்கைக்காரங்க வீட்டுக்கு வந்து மிரட்டுனாங்க. எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணுமிய்யா. ஒங்களைப் பற்றி தப்பாய் எழுதிக் கொடுக்கும்படி எப்போ அப்பாவு சொன்னாரே அப்பவே, நான் பாவி, ஒங்ககிட்டே சொல்லியிருக்கணும். பாவிப் பயல்க எங்க அப்பாவை, என்ன பாடுபடுத்துறாங்களோ? மானத்தை விட்டுக் கொடுக்கலன்னு, அவரை எப்படியெல்லாம் அவமானப்படுத்துறாங்களோ? அம்மா... என் அம்மா... இன்னைக்குப் பார்த்தா நீ காஞ்சீபுரம் போகணும்?"

பேராசிரியர். பெருமாள்சாமியும், மற்றவர்களும் ஸ்தம்பித்து நின்றபோது, மேகலா சிறிது நடந்து, வசந்தியை தோளோடு தோளாய் அணைத்துக் கொண்டாள். அந்த ஆறுதல் பிடியில், வசந்தி அவள் தோளில் தலைபுரட்டி அழுதாள். லேசாய் கூட்டம் வேறு கூடப் போனது. குருநாதன் தாபத்தோடு கேட்டாள்:

"இவ்வளவு நடந்திருக்கே. எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லி இருக்கப்படாதா? அப்பாவுவை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகர விட்டிருக்க மாட்டோமே."

பெருமாள்சாமி, அமைதிகலந்த அர்த்தத்தோடு பதிலளித்தார்.

"ஒருத்தர் கிட்டே ஒரு விஷயத்தைச் சொல்லணு முன்னால், அந்த ஒருத்தர், குறைந்தபட்சம் சொல்லப் பட்டதை, தனக்கு எதிராய் திசை திருப்ப மாட்டார்னு, சொல்றவருக்கு ஒரு நம்பிக்கை வரணும். வசந்திக்கு இந்த நம்பிக்கை வரும்படியாய் நாம் நடந்திருக்க மாட்டோம். சரி... போலீஸ் ஸ்டேஷனுக்கு நடங்க. என்னதான் நடத்துறாங்கன்னு பார்த்துடலாம்."

எல்லோரும், திசை மாறி நடந்தார்கள். ஓரிருவர் மட்டும், சிறிது தொலைவில் தங்களுக்காக காத்திருக்கும் கல்லூரி ஆசிரிய - மாணவக் கூட்டத்திடம் சேதி சொல்ல சென்றார்கள்.

திசை மாறி, அதே சமயம், திசை அறிந்து நடப்பதுபோல் சென்றவர்கள் ஒவ்வொருவர் முகத்திலும் ஒரு வேகம். ஒவ்வொரு நடையிலும் ஒரு பாய்ச்சல். ஒவ்வொரு மனதிலும் ஒரு ஆவேசம். வசந்தி கூட, கண்களைத் துடைத்துக் கொண்டு, முந்தானையை இறுக்கிச் சுற்றினாள்.

# 28

கன்னையா, வீறாப்பாக இருப்பதுபோல் விறைத்துக் கிடந்தார்.

உயிரோடு இருந்ததை விட உயிரற்ற இப்போதுதான், அவரைவிட, அவர் பிணம் வலிமை மிக்கதாகி விட்டதை உணர்ந்ததுபோல், இன்ஸ்பெக்டர் திம்மையா, பிணக்களையோடு நின்றார். அந்தச் சடலத்தைப் பார்க்க முடியாமல் பார்த்தார். பொய்மையை எரிக்கப் பறுப்பட்டதுபோல், சூரியக் கட்டிகளாய், கீழே விழப்போவது போல், உருண்டு நின்ற கண்களைப் பார்த்ததும், தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டார். ரத்தப் பிரவாக வாய்க்கு வெளியே, வேல்போல் வெளிப்பட்ட கன்னையாவின் செஞ்சிவப்பு நாக்கைப் பார்த்ததும், தன் நாக்கை உள்ளே இழுத்தார். உடம்பை, விறைத்துப் பிடிப்பது போல் கூர்மைப்பட்டு நின்ற அந்த முன்னாள் மனிதரின் கால்களைப் பார்த்ததும், எப்போதுமே மனிதராக அல்லாமல் போன திம்மையாவின் கால்கள், இடுப்பிற்குக் கீழே தொங்குவது போல் தோன்றின. வாய் வழியாய் பொங்கிய ரத்தம், மோவாயில் உறைந்து கிடக்க, காதுகள் ரத்த சாட்சியாய் பிய்ந்து கிடக்க, வயிற்றுக்குக் கீழே உடுப்பையும் நனைத்து வெளிப்பட்ட ரத்தக் கோடுகள், கால் முட்டிகளை பாளம் பாளமாய் சூழ, 'என்ன ஆனாலும் சரி, ஒன்னை விடப்போவதில்லை' என்பதுபோல் கன்னையா முறைப்பது மாதிரி இன்ஸ்பெக்டருக்குப் பட்டது. சுற்று முற்றும், கைகளை நெறித்தபடி, பூட்ஸ் கால்களைத் தேய்த்தபடி, கண்களே இல்லாததுபோல் அவர்களை சொருகிக் கொண்ட ஐந்தாறு போலீஸ்காரர்களையும், சப்-இன்ஸ்பெக்டர் டேவிட்டையும் பார்த்துவிட்டு, அவர்கள் மௌனித்து சுமத்திய கொலைக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாமல், மீண்டும் அந்தப் பிணத்தையே பார்த்தார்.

"எப்படி செத்திருப்பான்? சாவடியாய் அடிக்கலியே. ஒருவேளை பூட்ஸ் கால் படாத இடத்தில் பட்டிருக்குமோ? ஒருவேள... தான் பெற்ற பெண்... தன் முன்னாலேயே கற்பழிக்கப் படலாமுன்னு பயந்து, இருதயம் தானாய் நின்னுருக்குமோ?"

இன்ஸ்பெக்டருக்கு, கன்னையாவின் மீதே கோபம் வந்தது.

"யூஸ்லெஸ் பெல்லோ! பேக்டரி ஒர்க்கராம் பேக்டரி ஒர்க்கர். உடம்பை இப்படியா பூஞ்சையாவா வைக்கிறது? ரவுடிகளுக்குக் கொடுக்கிறதுல, பாதிதான் கொடுத்தேன். இதைக்கூட தாங்கிக் காட்டா, என்னய்யா மனுஷன்? ஸ்கவுண்ட்ரல்... எந்தப்

பெரியமனுஷன் கிட்ட இதைச் சொல்லலாம்? அப்பாவுவா? வாடிக்கை ஆசிரியரா? எவனும் உதவிக்கு வரமாட்டானே..?"

இன்ஸ்பெக்டர் குழம்பிப்போய் நின்றபோது, கான்ஸ்டேபிள் தங்கராஜ், தன்னை இன்ஸ்பெக்டர் இடத்தில நியமித்துக் கொண்டு, இன்ஸ்பெக்டரை தன்இடத்திற்கு தள்ளி விட்டுவிட்டு, ஆத்திரமாகக் கேட்டார்:

"அடிக்கலாம். அடிக்கதுக்குத்தான் நாம் இருக்கோம். அதுக்காக இப்படியா? ஒங்களுக்காக நாங்க தாலியறுக்க முடியுமா?"

இன்ஸ்பெக்டர், அவரை யாசகமாகப் பார்த்தார். இதர போலீஸ் சகாக்களையும் பரிதாபமாக நோக்கினார். இனிமேல், உத்திரவிட வேண்டியவர்கள் அவர்கள்தான் என்பதுபோல் கிட்டத்தட்ட சலூட் அடிக்கக் கூடப் போனார். இதற்குள் இன்னும் ஏதோ பேசப்போன தங்கராஜை கண்டித்து வயதான சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் அதட்டலாகப் பேசினார்.

"என்ன தங்கராசு அய்யாவை எதிர்த்துப் பேசுற அளவுக்கு வந்துட்டியா? அவர் செய்தது சரியில்லதான். அதுக்காக காட்டிக் கொடுக்க முடியுமா? ரெவின்யூ டிபார்ட்மெண்ட்காரனைப் பார்; பத்திரிகைக்காரங்களைப் பார்; சேல்ஸ்டாக்ஸ்காரனைப் பார்; எவனாவது தன் டிபார்ட்மெண்ட் ஆட்களைக் காட்டிக் கொடுக்கானா? காட்டிக் கொடுக்கிற ஒரே டிபார்ட்மெண்ட் நம்ம டிபார்ட்மெண்ட் தான்! மனுஷன்னா நன்றி விசுவாசம் வேணுமிய்யா. நீ கூட ஒரு தடவை, மப்டில இருக்கும்போது, சினிமா தியேட்டர்ல பிக்பாக்கெட் அடிச்சே, ஜனங்க உன்னைப் பிடிச்சு, இப்போ இளக்காரமாய் நினைக்கிறியே இந்த இன்ஸ்பெக்டர்கிட்டே ஒப்படைச்சாங்க. அய்யா ஒன்னை உள்ளே தள்ளினாரா? ஆக்ஷன் எடுத்தாரா? கன்னையாவை, எல்லாரும் அடிச்சோம். நீதான் பலமாய் அடிச்சே. அடிக்காத ஒரே ஆள் நான்தான். எதுக்குச் சொல்றேன்னா, விவகாரமுன்னு வந்தால் எல்லாரும் மாட்டிக்கணும்..?"

கான்ஸ்டபிள்கள் வாயடைத்தார்கள். தலைகுனிந்து நின்ற இன்ஸ்பெக்டரின் மார்பில் முதுகுபட நின்ற சப்இன்ஸ்பெக்டர் டேவிட் ஆணையிட்டார்:

"திரிநாட் ஒன்! இவர் மகள் வசந்தியை இட்டுனு வரப்போன நம்ம ஆட்களை, போய் திருப்பிக் கூட்டிவா. கவலப்படாதீங்க ஸார். மொதல்ல, 'பாடியை' எப்படி டிஸ்போஸ் செய்யுறதுன்னு யோசிப்போம். எனக்கு ஒரு ஐடியா... கன்னையாவை பேக்டரிகாரன் கொடுத்த புகார்மேல அரெஸ்ட் செய்தோம். அவன், முன்பு எந்தக் குற்றமும்

செய்யதவனாயும் இருந்ததால், அவனுக்கு விலங்கு போடல. நாற்காலி யில் உட்கார வச்சோம். ஒண்ணுக்கு வருதுன்னு போனவன் திரும்பி வர்ல. எப்படியோ தப்பிச்சிட்டான். நாம் கன்னையா வீட்டுக்குப் போகப் போறோம். 'கன்னையாவை எங்கே மறைச்சு வச்சிருக்கிங்க'ன்னு அதட்டப் போறோம். அவங்களை ஸ்டேஷன்ல கூட்டி வந்து விசாரிக்கப் போறோம். அத்தனை ஸ்டேஷன்களையும் 'அலர்ட்' செய்யப் போறோம். இதுக்குள்ளே 'எப்போதும் யோக்கியமாய் நடந்துட்டு, ஒரே ஒரு நாள்ல திருடனாய் போயிட்டோமே'ன்னு கன்னையா, மானத்துக்குப் பயந்து, கூவம் ஆற்றுல விழுந்து, தற்கொலை பண்ணிக்கிறான். இவ்வளவுதான் விஷயம். இதுக்குப் போய் நீங்க... டேய்... பிணத்தோட கண் மேல துணியைப் போடுடா..."

"கூவத்துல பிணம் மிதந்தால் அது போலீஸ்காரன் வேலையாய்த்தான் இருக்குமின்னு ஜனங்களுக்குத் தெரிஞ்சிடும். அதனால, போனமாசம் ஒருத்தன் மேல, நாமே திராவகத்தை ஊற்றிட்டு கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் கேஷுவால்டி வார்ட்ல சேர்க்காமல், ஓ.பி.வார்ட் வாட்ச்மேனை மிரட்டி, அதுல போட்டுட்டு வந்தோமே, அப்படிப் போட்டுடலாம்."

"ஒனக்கு மூளை இருக்குதா தங்கராசு? அவன் பிழைச்சுக்குவான் என்கிற தைரியத்துல, ராத்திரியோட ராத்திரியாய் ஓ.பி.வார்ட்ல போட்டோம். ஆசாமி பிழைச்சுக்கிட்டதால, டாக்டர்களும் மூச்சு விடல. ஆனால் இது மூச்சுப்போன கேஸ்."

"சரி, ஏதாவது கிணத்துல எறியலாம். அப்போதுதான் கீழே விழும்போது உடம்புல அடிபட்டிருக்குமுன்னு, காயங்களுக்குச் சாக்கு சொல்ல வழி."

திடீரென்று, கன்னையாவின் மனைவியையும் மகளையும் அழைக்கப்போன இரண்டு போலீஸ்காரர்கள் சலூட் அடித்தார்கள். சப்-இன்ஸ்பெக்டர், ஆத்திரமாய் கேட்டார்:

"நீங்க மனுஷங்களாய்யா? பிணத்தைப் பார்த்துட்டு பேசாமல் போயிருக்கிங்க?"

"லாக்கப்புல இருக்கவங்க சொன்னாங்க ஸார். நாங்க போனபிறகு, இன்ஸ்பெக்டர் அய்யாவும்... நீங்களுமாய்.."

"இந்தாபாரு... ஒனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்ல என்கிறது மாதிரி பேசாதே. அது போகட்டும், இதுக்குள்ள லாக்கப் பசங்களுக்கு, இந்த இழவு விசயம் எப்படிய்யா போச்சு? சரி... எப்படி போச்சுதோ..... லாக்கப் பசங்ககிட்டே நல்லாவே சொல்லிடுங்க. வாயை வெளியில் விற்காமல் இருந்தாங்கன்னா, அவங்க மேல் புக்கான கேஸ் எல்லாம்

ஒண்ணுமில்லாமல் ஆயிடுமுன்னு சொல்லு. இல்லன்னா, அவங்களும் குடும்பத்தோட ஒண்ணுமில்லாம ஆயிடுவாங்கன்னு நல்லாவே சொல்லிடு. "சரி... கன்னையா வீட்டுக்கு நீங்க போனீங்களா..."

"தேவை இல்ல ஸார். கன்னையா மகள், ஒரு கும்பலோடு, நம்ம ஸ்டேஷனைப் பார்த்து வந்துட்டு இருக்காள் ஸார்."

"அட மூதேவி! இதை மொதல்ல சொல்றதுக்கு என்ன?"

இதற்குள், வெளியே கசாமுசா சத்தம் கேட்டது. 'இன்ஸ்பெக்டர் இருக்காரா?' என்ற அதட்டல் ஒலி. திம்மையா, டேவிட்டை தன்னோடு வரும்படி சைகை செய்தார். அந்தப் பழுத்த சப்போ, அவரைப் போகும்படி பதிலுக்கு சமிக்ஞை செய்தார். அதே சமயம் "நான் இருக்கேன் பயப்படாதீங்க" என்று தன் கரங்களை எடுத்து மார்பில் பூட்டி கைப் பெருவிரலை உயர்த்திக் காட்டினார் இன்ஸ்பெக்டர். காலமான கன்னையாவை காலன்போல் பார்த்தபடி, அடிமேலடி வைத்து வெளியே வந்தார்.

காவல் நிலைய முகப்பறையில், பேராசிரியர். பெருமாள்சாமி, கல்லூரி ஆசிரியர்கள் அணிவகுத்து நிற்பதுபோல் நின்றார்கள். இவர்களுக்கு, இடது பக்கம் முத்தையா, தனித்து நின்றான். வலதுபக்கம், வசந்தி, மேகலாவின் தோளில், தலையை புரட்டியபடியே, "எப்பா.... எப்பா" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் கண்ணெல்லாம் நீரோட்டம். கழுத்தெல்லாம் அதன் தடயங்கள். மேகலா அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தாள். அவள் முகத்தை நிமிர்த்தி, கண்ணீரை துடைத்துவிட்டு, தன்னோடு சாத்திக் கொண்டாள்.

இன்ஸ்பெக்டர் திம்மையா, நகங்களை உள்ளே இழுத்துக் கொண்டு நடக்கும் பூனைபோல், பூட்ஸ் கால்கள் ஒலி எழுப்பாதபடி நடந்து வந்தார். பயந்தாங்கொள்ளிதான் அதிகமாகக் கத்துவான் என்பதற்கு எடுத்துக்காட்டாய்க் கத்தினார்.

"யார் நீங்க? என்ன வேணும்....?"

வசந்தி, திடீரென்று, மேகலாவின் தோளில் கிடந்த தன் முகத்தை வீறிட்டுத் தூக்கினாள். திம்மையாவை, சுட்டெரித்துப் பார்த்தாள். அழுகை ஆவேசமாகி, வார்த்தைகளாயின.

"இவங்களை தெரியாமல் இருக்கலாம், என்னையுமா தெரியல? எங்கே, என்னைப் பார்த்துச் சொல்லுங்க. எங்கப்பாவை; எங்கே...? நான்.... இப்பவே பார்க்கணும்... எப்பா.... எப்பா... நாங்க வந்துட்டோம்பா..."

போலீஸ் நிலையத்திற்குள் முண்டியடித்த வசந்தியை, மேகலா பிடித்துக் கொண்டாள். முத்தையா, முன்னால் போய் நின்று கையால் வழிமறித்தான். இன்ஸ்பெக்டர் திம்மையாவால் எல்லோரையும் பார்க்க முடிந்தது. வசந்தியைத்தான் பார்க்கவே முடியவில்லை. தலையைத் தாழ்த்தியபடியே, எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு உட்கார்ந்தார். பேராசிரியர் பேசினார்:

"நீங்க அரெஸ்ட் செய்த கன்னையாவைப் பார்க்க வந்தோம். பார்க்க மட்டுமில்ல, மீட்க வந்தோம்..."

"கன்னையாவா? எந்த கன்.."

வசந்தி கத்தினாள்:

"யோவ்! இனிமேலும் ஒன் ஜம்பம் பலிக்காது. எங்கப்பாவை ஒனக்குத் தெரியாதா? எங்கே என்னைப் பார்த்துச் சொல்லு...."

"இந்தாம்மா! நீ நான்னு மரியாதை இல்லாமல் பேசுனே உள்ளே தூக்கிப் போட்டுடுவேன். பொண்ணாச்சேன்னு பார்க்கேன்...!

குருநாதன் கத்தினான்

"சும்மா மிரட்டாதிங்க நீங்க. மிஸ்டர் கன்னையாவை வாடிக்கைக்காரன் பேச்சைக் கேட்டு மிரட்டுனதும், இந்த அப்பாவிப் பெண்ணை பயமுறுத்துனதும் எங்களுக்குத் தெரியும். இவங்க மட்டும், எங்ககிட்டே முன்னாலயே சொல்லிஇருந்தால்..."

"நடக்கிற கதையே வேற" என்று முடித்தான் முத்தையா.

அவர்களை மேற்கொண்டு பேசாதபடி, பேராசிரியர் இடைமறித்துவிட்டு, தானே பேசினார்:

"இந்தா பாருங்க இன்ஸ்பெக்டர்! கன்னையாவை நீங்க உடனே ஒப்படைச்சிட்டால் ஒங்களுக்கு நல்லது."

"பிடிச்சாத்தானே ஸார் விடுறதுக்கு."

"ஓவர் பிரிட்ஜ் பக்கத்துல கன்னையாவை போலீஸ்காரங்க கையைக் கட்டி கூட்டி வந்திருக்காங்க. இதுக்கு 'ஐ' விட்னஸ் இருக்குது."

"நீங்க சொல்றது நிசமாவே இருக்கலாம். பட், அது நாங்கள் இல்ல. வேற ஏரியா போலீஸ் பிடிச்சிருக்கலாம். சென்ட்ரல் கவர்மென்டோட சி.பி.ஐ பிடித்திருக்கலாம். கமிஷனர் ஆபீஸ் கிரைம் பிராஞ்ச் பிடித்துப் போயிருக்கலாம். நாங்க அரெஸ்ட் செய்திருந்தால் ஒங்ககிட்டே சொல்றதுக்கு என்ன சார்? ஒரு போலீஸ்காரன் கிட்டேபேசுறது மாதிரி பேச மாட்டேங்கிறீங்களே...."

"நீங்களும் போலீஸ்காரன் மாதிரி நடந்துக்கல. வாடிக்கைக்காரனுக்கு எப்பவோ விலையாயிட்டீங்க..."

இன்ஸ்பெக்டர், தலைகவிழ்ந்தபடியே யோசித்தார். எல்லோரையும் தூக்கி உள்ளே போடலாமா? கன்னையா சாகவில்லையானால், கைதியை பலவந்தமாய் மீட்க வந்தார்கள் என்று உள்ளே போடலாம். இப்போதோ முடியாத காரியம்... அவர் குழைந்தார்:

'எதுக்கும் கமிஷனர் ஆபீஸ் கிரைம் பிராஞ்சில் விசாரிங்க.'

"சரி... இன்ஸ்பெக்டர் நாங்க இப்பவே கிரைம் பிராஞ்சுக்குப் போறோம். வாங்கப்பா போகலாம். லெட் அஸ் கிவ் பெனிபிட் ஆப் டப்ட் டு ஹிம். வசந்தி, ஏம்மா அழுவுறே? ஒன்கிட்டே சொன்னவர் கூட உன் அப்பா மாதிரின்னுதான் சொன்னாரே தவிர, ஒன் அப்பான்னு சொல்லலியே. ஒன் பாதர், மதரைத்தேடி காஞ்சிபுரம் போயிருக்கலாம் அல்லது பேக்டரியில் ஏதாவது நைட் ஷிப்ட்ல மாட்டி இருக்கலாம். யார் மேலயும் விசாரிக்காமல் பழி போடப்படாது. என் சமீபகால அனுபவத்தில் நான் தெரிஞ்சிக் கிட்டது இதுதான். தேர்போர், போகலாம். தேங்க் யூ இன்ஸ்பெக்டர்.

"தேங்க் யூ ஸார்! நீங்க கிரேட் மேன் ஸார்...."

சகாக்கள், இருக்கையில் இருந்து எழுவதற்கு முன்பாகவே, பேராசிரியர் பெருமாள்சாமி, கேட்டிற்குப் போய்விட்டார். வேறு வழியின்றி எல்லோரும் அவரைப் பின்பற்றினார்கள்.

காவல் நிலைய கேட்டுக்கு அப்பால் நீதி தேடும் தலைகள் மறைந்ததும், இன்ஸ்பெக்டர், டெலிபோன் டயலை சுழலவிட்டார். எடுத்த வேகத்திலயே வைத்து வைத்து மீண்டும் மீண்டும் பேசினார். பின்னர், ஆயாசமாக நடந்து கன்னையா சடலம் உள்ள பின்பக்கம் போனார். சப்-இன்ஸ்பெக்டர் டேவிட், பயங்கரமாய்க் கத்தினார்:

"ஒங்களுக்கு கொஞ்சமாவது பிரசன்ஸ் ஆப் மைன்ட் இருக்குதா ஸார்? 'கன்னையாவை, பேக்டரிக்காரன் கம்ப்ளெயின்ட் பேர்ல அரெஸ்ட் செய்தோம். ஆசாமி தப்பிச்சுட்டான். நீங்கதான் அவனை மறைத்து வச்சுட்டு நடிக்கிறீங்கன்னு' வந்த பசங்களை மிரட்டாமல், கிரைம் பிராஞ்சுக்குப் போகச் சொல்லிட்டீங்களே ஸார். இனிமேல் ஒங்கபாடு... அவங்கபாடு... என்னை விடுங்க ஸார்..."

"பிளீஸ் டேவிட்... பிளீஸ்... தெரியாமல் உளறிட்டேன்... என்னை நீதான் காப்பாற்றணும். என்ன பேசணுமுன்னே புரியாமல் போச்சு. வாடிக்கை ஆசிரியர்கிட்டே டெலிபோன்ல சொன்னால், 'யார் கிட்டே ஸார் காது குத்துறிங்க? இன்னும் டெலிபோன் செய்தால், என் ரிப்போர்டரை அனுப்பி 'சென்ஸேஷனல் ஸ்டோரி பண்ணிடுவேன்'

என்கிறான். அப்பாவு 'நான் உங்களை கொல்லவா சொன்னேன்'னு கூலாய் கேட்கிறான். நீயும் என்னைக் கைவிட்டால்... வேணுமின்னால், இந்த கன்னையாவை நான் அடித்துக் கொன்றது மாதிரி, நீயும்... என்னை... ஒரேயடியாய்..."

"ஸார்... ஸார்... ஒங்களை கோபிக்க எனக்கு உரிமை இல்லையா ஸார்? யார் கைவிட்டாலும், ஒங்களை நான் விடமாட்டேன் ஸார்! கவலைப்படாதீங்க ஸார். ஒங்களை கைவிட்ட ரெண்டு தேவடியா பசங்களையும் விடப் படாது ஸார். அது அப்புறம்... இப்போ... பிணத்தை மொதல்ல திருவொற்றியூர் சவுக்குத் தோப்புல இருக்கிற ஒரு கிணத்துக்குள்ளே போடுவோம். பப்ளிக் கம்ப்ளெயின்ட் வந்ததும், அப்பாவுவையும், வாடிக்கை ஆசிரியரையும் சந்தேகத்தின் பேர்ல கைது செய்து, கம்பி எண்ண வச்சுடலாம் ஸார். இதுக்கா கண்ணீர் விடுறீங்க? இந்தாய்யா... வேனை எடுத்துவா..."

போலீஸ்வேன், பின்பக்கம் வந்து நின்றது. கம்பீரப்பட்டுக் கிடந்த கன்னையாவின் சடலத்தை, போலீஸ்காரர்கள் தூக்க முடியாமல் தூக்கி, வேனுக்குள் கிடத்தினார்கள். பின்னால், பஞ்சபாண்டவ போலீஸ்காரர்கள் ஏறிக் கொண்டார்கள். முன்னிருக்கையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் ஏறினார்கள்.

லாக்கப் வாசிகள் நிசப்தத்தில் கரைந்து கொண்டிருந்தார்கள். பறவைகள் பம்பிக் கிடந்தன. போக்குவரத்து முடங்கிக் கிடந்தது. அப்போது-

போலீஸ் வேன் ராஜகம்பீர தோற்றத்துடன், சவுக்குத் தோப்பை நோக்கி, ரதம் போல் நகரத் துவங்கியது.

## 29

முதலாவது 'ஆட்டத்தில்' இருந்து பலர் திரும்பிக் கொண்டும், இரண்டாவது ஆட்டத்திற்குப் போய்க் கொண்டும், சினிமாத்தனமான நடமாட்டம் கொண்ட இரவு வேளை.

கோடம்பாக்கத்தில், குறுகலான ஒரு 'முட்டுச்' சந்தின் மூன்றாவது வீட்டில் நான்காவது போர்ஷன் 'வீட்டுக்காரி' மின்சார மெயினை 'ஆப்' செய்து விட்டதால், லாந்தர் விளக்கு லாட்டரி அடித்துக் கொண்டிருந்த அந்த அறையில் மூலைச்சுவரில் 'மூளி' போல் உட்கார்ந்திருந்த அவள், கார் சத்தம் கேட்டு ஓடி வந்தாள்.

மாலை ஆறு மணியில் இருந்து, இப்படித்தான் அவள் அல்லாடிக் கொண்டிருக்கிறாள். சரியாக மாலை நாலு மணிக்கு, சினிமா

அஸிஸ்டெண்ட் டைரக்டர் என்றும் புரடெக்ஷன் நிர்வாகி என்றும் கூறப்படும் ஒரு கிருதாத் தலையன், அவளிடம் வந்தான். "எங்க யூனிட் குற்றாலத்துக்கு, அவுட்டோர் ஷூட்டிங் போகுது, நீயும் வாரே. பத்துநாள் படப்பிடிப்பு. நீ கதாநாயகியின் காய்யச்சல்கார அம்மா செத்த பிறகு, வண்டியில இருக்கிற பிணமாய் வாரே. கதாநாயகிக்கு அம்மாவா நடிக்கிற காந்தா, பிணமாய் நடிக்க சம்மதிக்கல. அதனாலே.... அவளுக்கு டூப் நீ. கட்டையில வச்ச பிறகு, கதாநாயகனின் 'புதுமையான, புரட்சிகரமான' வைத்தியத்தாலே, பிணம்.... உயிரோடு எழும்போது காந்தா நடிப்பாள்." என்றான். அவள் அட்வான்ஸ் என்று வாய்க்கு வெளியே வரப்போன வார்த்தையை வெற்றிலையாக்கினாள். அவள் தன்னை அன்போடு பார்த்ததைக் கண்ட புரடக்ஷன் நிர்வாகி, "கரெக்டா ஆறு மணிக்கு வேன் வரும். என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ஆனால் இப்போதோ, மணி கிட்டத்தட்ட இரவு பத்து. வேனைக் காணவில்லை. இது சினிமா உலகில் சகஜம் என்பதும் அவளுக்குத் தெரியும். இவளைப்போல், பல எக்ஸ்டிரா நடிகைகளிடம் இப்படிச் சொல்லிவிட்டு பிறகு எவளையாவது ஒருத்தியை, பிக்கப் செய்து கொள்வார்கள் என்பதும் அவளுக்கு அனுபவப் பாடம். ஆனாலும், மனம் கேட்கவில்லை.

ஓட்டைப் பல் தெரிய, கார் சத்தம் கேட்கும் போதெல்லாம், கதவோடு கதவாக முன்னுக்கு வந்து பார்த்த அந்தப் பெண், இனிமேலும் நின்றால், வீட்டுக்காரம்மா காட்டுக்காரம்மாகி விடுவாள் என்று பயந்து, வீட்டுக்குள் வந்து, கிழிந்த பாயையும், பிய்ந்த தலையணையையும் எடுத்துப்போட்டு, காலை நீட்டிப் போட்டு, கரங்களை விரித்துப் போட்டு, உட்கார்ந்தாள். கார் சத்தம் கேட்கும் போதெல்லாம் காதுகளை கூர்மையாக்கி, யாரும் தன்னை நோக்கி வருவதன் அடையாளமாய் செருப்புச் சத்தம் கேட்கிறதா என்று உன்னிப்பாய் பார்த்தாள். இறுதியில், மன உளைச்சல் வயிற்றுப் பசியை தின்ன, அப்படியே தூங்கிப் போனாள். பிணம் போலவே கிடந்தாள். அதே கருவாட்டு உடம்பு, அதே வட்ட முகம், சுருட்டைத்தலை. நெஞ்சு நிறையாத மார்பகம். அவள், வேறு யாருமல்ல, அப்போது மரிக்காமல் இருந்த கன்னையா, வாடிக்கை அலுவலகத்தில் இருந்து திரும்பும்போது, அவரை மறிக்காமல் மறித்தவள்.

மல்லிகா, தூங்கிப்போய் விட்டாள். இரவு இரண்டு மணியளவில், அவள் கனவில் சினிமா வேன் வந்தது. திடுக்கிட்டு கண் விழித்தாள். சுற்றுப்புறத்தை வெறுமையாகப் பார்த்தாள். அதே சமயம் ஒரு வேன் சத்தமும் வெளியே கேட்டது. துள்ளியெழுந்து, முகத்தை துடைத்தபடியே, வெளியே வந்து, மாடியில் உள்ள வீட்டுக்காரிக்குக் கேட்க முடியாதபடி, தெருக் கதவை மெல்லத்

திறந்து வாசல் கதவாய் நின்றாள். வேன் ஒன்று மெயின் வீதியில் காச்சு மூச்சென்று கத்தியது. சந்தோஷ மனத்தோடு, அங்கே அவள் ஓடியபோது, அதுவும் ஓடியது. கண்களைக் கசக்கியபடியே அவள் உள்ளேப் போகப் போனபோது, ஒருவர் நடந்து வந்தார். ஒரு வேளை 'அது' வருதா?

வந்தவர்களில் 'அது' இல்லையென்றாலும், அவள் இன்பப்பட்டாள். பிடித்தமான ஒருத்தரை அடையாளம் கண்டுவிட்ட ஆனந்தம். இந்த தெருவே, அவளை சதை சதையாய் கூறிட்டுப் பார்க்கும்போது இந்த ஒருத்தர் மட்டும் அவளைப் பரிவோடு பார்த்து, ஆறுதலாகப் பேசுபவர். அவரோடு முப்பது நாட்கள்தான் பரிச்சயம் என்றாலும், முப்பது ஆண்டு காலமாய் பழகியது போன்ற அனுபவப் பெருக்கு. தந்தையை அவரிடம் கண்டது போன்ற உணர்வு. ஆனந்தமயமாய் கூவினாள்

"கண்ணன் ஸாரா? இந்நேரத்திற்கு எங்கே போயிட்டு வாரிங்கோ?"

கண்ணன், துல்லியமாய் சிரித்துச் சொன்னார்.

"செகண்ட் ஷோ சினிமா..."

"நீங்ககூட படம் பார்ப்பீங்களா? என்ன படம்?"

"ஊருக்கு நல்லவன்." விமர்சனம் எழுதுறதுக்காக பார்க்கபோனேன் வழியில்... ஒன் தலையைப் பார்த்திட்டு திரும்புறேன்."

"ஒங்களுக்கு விஷயம் தெரியுமா ஸாரே! இதுல கதாநாயகனாய் நடிக்கிற சிங்கராஜா ஒரு காலத்துல, என்னோட இருந்தவன். ஒரு டீயை பாதிப் பாதியாய் சாப்பிட்டவங்க. சூட்டிங்ல கிடைக்கிற காசுல, நான் பட்டினி கிடந்தே அவனுக்கு வாரிப் போட்டேன். அப்புறம் எப்படியோ முன்னேறிட்டான். ஒரு தடவை அவனைப் பார்க்க பங்காவுக்குள்ளே போனேன். கூர்க்காவை வச்சே துரத்திட்டான். அதுவும் வீட்டுக்குள்ளே வச்சு சோறு போட்டவளை! எப்படியோ நன்றியில்லாம போயிட்டாலும் நல்லா இருக்கட்டும்: ஒரு வேளை நன்றிக் குணம் இருந்திருந்தால், அவனால் கதாநாயகனாய் - கதைவசன கர்த்தாவாய் ஆகியிருக்க முடியாதோ என்னவோ! நீங்க... ஏன் ஸாரே கண் கலங்குறீங்க? இதெல்லாம் சினிமா உலகத்துல சகஜம். நான் பைத்தியம் மாதிரி பினாத்துறேன். போவட்டும்."

கண்ணன், அவளை ஆற்றுப்படுத்தினார்.

'நீ போய் தூங்கும்மா. எங்க கலைக்குழுவுல, ஒன்னை சேர்க்க முயற்சி செய்யுறேன். அதுல பணம் கிடைக்காட்டாலும் பண்பாடு கிடைக்கும்.

கண்ணன், சொன்ன வேகத்திலயே போய்விட்டார்.

இதற்குள் போலீஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. கண்ணன் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற மல்லிகா, முதலில் ஜீப்பைக் கவனிக்கவில்லை. ஜீப்பில் இருந்து இறங்கிய கான்ஸ்டேபிள் தங்கராசு, அவளை குரூரமாய் பார்த்தபடியே, அறைக்குள் வந்தான். வழக்கம் போல் 'சாப்பிட்டியாம்மே...' என்று கேட்கிறவன், அவளை, உஷ்ணத்தோடும், சாராயக் கோபத்தோடும் பார்த்தான். மல்லிகா திகைத்தபோது, தங்கராஜ் கத்தினான்:

"நாயைக் குளிப்பாட்டி நடுவீட்ல வச்சாலும் அது காள் காளுன்னு கத்துறதை விடாதாம்..."

"வீடு என்னது! நீ யாரய்யா.... சொல்றே..?"

"என்னமே... சவுக்குத் தோப்பு கிணத்துல ஒன்னை வீசணுமா?"

"வாயில வசைச் சொல் வராமே பார்த்துக்கய்யா. ஏதுக்குய்யா என்னை நாயின்னே? இப்பவே எனக்குத் தெரியணும்."

"ஏன்மே, நடிக்கிறே? அந்த வேட்டி, இந்த போலீஸ் யூனிபாரனத்தோட ஒனக்கு ஒசத்தியா போயிட்டு இல்லயா... தத்தேறி முண்ட! சந்தேகக் கேஸ்ல புக்கான ஒன்னை பராமரிக்கேன் பாரு; இதுவும் செய்வே, இன்னமும் செய்வே. ஒன்னை சவுக்குத் தோப்புல..."

"யோவ்... இந்த மாதிரி இன்னொரு தடவ சொன்னே, அப்புறம் நீயுமாச்சு... நானுமாச்சு... சொல்றதை நல்லா கேளுய்யா. நான் கண்ணகின்னு ஒன்கிட்டே எப்பவும் சொல்லல. அதே சமயம்... யார் யார்.... என்னை... என்ன கோலமெல்லாம் செய்தாங்கன்னு சொல்லி இருக்கேன்... ஒருத்தன்... ஒன்னை மாதிரி ஒரு அல்பம்... என் பல்லை உடைச்சதைக்கூட சொல்லிட்டேன்... தோ... பாருய்யா... நான், நளாயினி இல்லே... அதே சமயம்... ஒருத்தனுக்கு சின்ன வீடாய் இருக்கப்போ... அந்த ஒருத்தனுக்கே விசுவாசமாய் இருக்கிறவள், தெரிஞ்சுக்கோ..."

"அப்படின்னா, அந்தப் வேட்டிக்காரன் ஒன்கிட்டே வாலாட்டுனானா? பட்டுன்னு சொல்லுமே. மகளை எழுதிக் கொடுக்காமல் செய்த அவன் கன்னையாவை, எங்க திம்மையா கொன்னது மாதிரி கொன்னு, அப்புறம் நாங்க சவுக்குத் தோப்பு கிணத்துலு வீசுனது மாதிரி வீசிப்புடுவனே். டேய்... டாய்... டேய்... டாய் பசங்களா!"

மல்லிகா, அசைவற்றாள். கன்னையாவா... எந்தக் கன்னையா?"

"யோவ்... பூஞ்சை உடம்பா இருப்பாரே, அந்த கன்னையாவா?"

"ஆமாம்மே ஆமாம். வாடிக்கை பத்திரிகைக்காரன் எவ்வளவு பெரிய மன்ஷன்? பேக்டரி மானேஜர்னா கிள்ளுக்கீரையா? அப்பாவுன்னா லேசா? பேசாமல் மகள்காரியை எழுதிக் கொடுக்கச் சொல்லாட்டி, என்ன நடக்குமோ அது நடந்ததுட்டு... ஆள் குளோஸ்.

"என்னய்யா நீ... நீயும் ஒரு ஏழைக்குப் பொறந்தவன்; இன்னொரு ஏழையை சாகடிக்கலாமாய்யா? இப்போ அவன் குடும்பம் என்ன பாடுபடும்? நெனச்சுப் பார்த்தியா?"

"அதாம்மே மன்சு கேக்கல..."

"யோவ்! நடந்ததை அப்படியே சொல்லுய்யா. ஒனக்கும் பாரம் குறைஞ்சாப்புல இருக்கும். சொல்லு மாமா."

தங்கராசு, தலையில் கை வைத்தபடி, பொத்தென்று கீழே உட்கார்ந்தான். அவன் தலையை சாராயம் சுழற்றிக் கொண்டிருந்தது. திடீரென்று, ஏங்கி ஏங்கி அழுதான். "நானு கொல்லலம்மே.... கொல்லவே இல்லமே..." என்று கேவினான். "வேலையை விட்டுடப் போறேம்மே..." என்று விடாப்பிடியாய் கத்தினான்.

மல்லிகா, அவன் கண்ணீரைத் துடைத்தாள். தங்கராசு, அவளை சுழன்று பார்த்தான். சுற்றிப் பார்த்தான். பிறகு, "நீ ஆதிபராசக்தி... ஒன்கிட்டே சொல்லாட்டி... என்னோட... நாவு அழுகிடும்மே" என்று அரற்றினான். பின்னர், அவன், இன்ஸ்பெக்டர் திம்மையாவின் வாடிக்கை நட்பையும், பேக்டரி தொடர்பையும், அப்பாவு என்பவனுடனான அந்தரங்க உறவையும் பின்னணியாய் சொன்னான். அப்புறம். "எனக்கு சோறு வாண்டாமே.... கன்னையாவோட ரத்தவாடை குமட்டுது என்றான்."

மல்லிகா, நிலை குலைந்து எழுந்தாள். உடம்பெல்லாம் வேர்த்தது. கண்ணெல்லாம் எரிந்தது. அந்தச் சின்ன அறைக்குள், அங்குமிங்குமாய் நடமாடினாள். இந்தக் கொலைக்கு நானும் ஒரு காரணமாச்சே! நான் மட்டும் பெருமாள்சாமி கிட்டே அப்பவே நடந்ததைச் சொல்லி இருந்தால், அவரு, ஒரு வேளை காப்பாற்றியிருப்பாரே. ஆனா, நான் பொண்ணு... அதுவும் பாவப்பட்ட பொண்ணு. என்னால என்ன செய்யமுடியும். ஏன் முடியாது... முடியனும்...

மல்லிகா, மேற்கொண்டு யோசிக்கவில்லை. தூங்கிப் போன தங்கராசுவைத் தட்டிப் பார்த்தாள். விழிக்கவில்லை. வெளியே வந்து, தெருக்கதவை வீட்டுக்காரி காதில் விழாதபடி மெல்லத் திறந்து, மெல்லச் சாத்தினாள். வீதிக்கு வந்தவளை, ஒரு வேன் மறித்தது.

அவள், அப்போது எதிர்பார்ககாத சினிமா வேன். வேனே பேசுவதுபோல், புரெடெக்ஷன் நிர்வாகி, உள்ளிருந்தபடியே குரலிட்டாள்.

“ஏறு மல்லி, ஏற்கெனவே லேட்டு. நி எப்படியும் ரெடியாய் இருப்பேன்னு டைரக்டர்கிட்டே சொன்னேன்...”

மல்லிகாவிற்கு, ஒரு சபலம். இந்த விஷயத்தை வெளியே சொன்னால், இது எதில் கொண்டுபோய் விடுமோ? அதோட ‘அதுக்கு’ துரோகம் பண்றது மாதிரி நடக்கப்படாது. நமக்கு ஏன் வம்பு? பத்து நாளைக்கு வயிறு நிரம்பும். குருவியை வச்சு குருவியை பிடிச்சது மாதிரி, இந்த சூட்டிங் ஷெடுலை வச்சு இன்னொரு ஷெடுல பிடிக்கலாம். அதெப்படி? ஒரு குடும்பம் நடுத்தெருக்கு வந்துட்டு. ஒரு உத்தம மன்ஷன் உயிரு, துள்ளத் துடிக்கப் போயிட்டு. என் வயிற்றைப் பார்த்தால், கன்யைா மகளோட உயிரு என்னாகும்?

“ஏன் மல்லி யோசிக்கிறே?“

“நான் வர்லிங்கோ.”

“ஏய் சாவுக்கிராக்கி! சாயங்காலம் நான் சொன்னப்போ, வாய்ல என்னத்த வச்சுட்டு இருந்தே?”

“ரெஸ்பெக்ட் கொடுத்து, ரெஸ்பெக்ட் வாங்குங்கோ.”

“பொல்லாத ரெஸ்பெக்டு. புறம்போக்கு. அய்யோ பாவமுன்னு பார்த்தால், அவ்வளவு திமுரா? இனிமேல்... நீ... எந்தப் படத்துல நடிக்கப் போறேன்னு பார்த்துடலாம்?”

“அட சாத்தான் போய்யா! இப்போ, நீ கதாநாயகி வேடம் கொடுத்தாக்கூட நான் வரமாட்டேன்.”

“நீ கெட்ட கேட்டுக்கு.... இந்தாப்பா.... வண்டிய எடு....”

வேன், கோபப்பட்டது போல், உருமியபடி, நேராய் ஓடியபோது, மல்லிகா குறுக்காய் ஓடினாள். பிணமாக நடித்து காசு வாங்குவதைவிட, பிணமாகி, நியாயத்தை வாங்கலாம் என்ற ஆவேசத்தோடு, சவுக்குத் தோப்பு இருக்கும் இடத்தையும், அதற்குள் இருக்கும் பாழ் கிணற்றின் அடையாளத்தையும் தங்கராசு, விளக்கமாக சொன்னபோது மனதுக்குள்ளேயே குறித்துக்கொண்டாள்.

அவள் பாதை புரிந்தவள் போல் ஓடிக் கொண்டிருந்தாள். கண்ணனின் வீடு அவளுக்குத் தெரியும்.

# 30

கன்னையா வீணடிக்கப்பட்ட, அந்தத் தொழிற்சாலையில் முதல் 'ஷிப்ட்' துவங்கபோன காலை நேரம்.

தொழிற்சாலை வளாகத்திற்குள்ளேயே இருந்த சங்கக் கட்டிடத்திற்குள், தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் காரசாரமாய் விவாதித்துக் கொண்டிருந்தனர். வேறு வேறான அரசியல் தத்துவங்களைக் கொண்ட சங்கப் பிரதிநிதிகள் கூடி இருந்ததால், சில சமயம் அசலுக்கே ஆபத்து வருவது போலவும் இருந்தது. கம்பெனி நிர்வாக அதிகாரிகள் கூட, தத்தம் அறைக் கதவுகளில் கர்ப்பிணிப் பெண்கள் போல், மல்லாந்து சாய்ந்தபடியே, வெளியே எட்டிப் பார்த்தார்கள். காவல்துறைக்கு டெலிபோன் செய்வதற்கு, ஒரு 'ஹாட்லைன்' தயாராக வைப்பப் பட்டிருந்து.

தொழிலாளர் சங்கங்கள் கொடுத்த வேலை நிறுத்த நோட்டீஸ் நேற்றே காலாவாதியானது. மொத்தம் பதினைந்து பிரதிநிதிகள். அவர்களுக்கு தலைவர்போல் விளங்கிய மெஜாரிட்டி யூனியன் தலைவர் கந்தனுக்கு, ஐம்பது வயதிருக்கலாம். அவர் கலந்து கொண்ட தொழிலாளர் போராட்டங்களை கணக்கெடுக்க முடியாததுபோல், கிரீடமாய் படர்ந்த தலைமுடிக்காரார்.

அப்பப்போ ஆள்காட்டித்தனம் செய்தும், தொழிலாளர் ஆற்றில் ஒரு காலும், நிர்வாக யந்திரச் சேற்றில் இன்னொரு காலையும்வைத்திருக்கும் ஒரு பிரதிநிதி, தன் கருத்தைச் சொன்னார்:

"நேற்றைய பேச்சுல, நிர்வாகம்,குறைந்த பட்ச போனஸும் எக்ஸ்கிராஷியா தொகையும் கொடுக்க சம்மதிச்சுட்டு, இதுக்கு மேல என்ன வேணும்? இரண்டையும் சேர்த்தால், நாம் கேட்கிற தொகை வரும்!"

கந்தன் குறுக்கிட்டார்:

"அப்போ, போனஸ் என்கிற பேரால் மொத்தமாய் கொடுக்காமல் ஏன் பிரித்துக் கொடுக்கணும்? ஏன்னா, குறைந்தபட்ச போனஸுக்கு மேல கொடுக்கப்படுவது கருணைத்தொகைன்னு ஒரு முன் மாதிரியை உருவாக்க நினைக்காங்க. நாம் உழைப்புக்கு மரியாதை கேட்கிறோம். கருணையல்ல."

"அவங்கதான் இறங்கி வாறாங்களே...."

"இறங்கி வர்ல; இறங்குறது மாதிரி ஏறி வாராங்க. அப்படியே அவங்க இறங்கி வந்தாலும், அது, மலைப்பாம்பு கீழே தெரியுற

மானைப் பிடிக்க, மரத்துல இருந்து இறங்குறது மாதிரி. அடுத்த வருஷம் நம்மை அடிக்கிறதுக்கு, இந்த வருஷம் ஒத்திகை பார்க்காங்க."

எதிர் வழக்காடியவர், கந்தனுக்கு எப்படிப் பதிலளிக்காலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, அவர் வாய் அனிச்சையாக "யாரது கால நேரம் தெரியாமல்" என்று கத்தியது. "யோவ் யோவ்' என்று நான்கைந்துபேர் பிடித்திழுக்க, முண்டியடித்துக் கொண்டிருந்தவரைப் பார்த்த கந்தன் "அவரை விடுங்க, உள்ளே வரட்டும்.." என்றார். முண்டியடித்தவர், தமது சொந்த வீட்டுக்குள் வருவதுபோல் வந்தபோது அவர் பின்னால் நின்ற கோஷ்டி, தயங்கித் தயங்கி, வெளியே நிற்க முடியாமலும், உள்ளே நுழைய முடியாமலும் அல்லாடிக் கொண்டிருந்தது. கந்தன், அருகே நெருங்கியவரிடம், அன்புடன் கேட்டார்.

"என்ன விஷயங்க? நீங்க யாருங்க?"

"என் பேர் பெருமாள்சாமிங்க. வடசென்னையில் இருக்குதே அதோட பழைய காலேஜ் பிரின்ஸ்பாலுங்க. ஏன் அங்கேயே நிற்கிறீங்க? இவங்கெல்லாம் நம்ம ஆளுங்கதானே. சும்மா உள்ளே வாங்க. இது வசந்திங்க. ஒங்க தொழிற்சாலையில் வேலை பார்க்கிற கன்னையாவோட டாட்டருங்க. அவங்க மிஸ்ஸஸ். கன்னையாங்க. இது என் டாட்டர் மேகலா. அது என் ஸ்டூடண்ட் முத்தையா. இது டீச்சர்ஸ் லீடர் குருநாதன்."

"என்னங்க விஷயம்? ஒரு முக்கியமான விஷயமாய் பேசிட்டு இருக்கோம்."

"எனக்கு தெரியுங்க. வெளில சொன்னாங்க. பட், கன்னையா பிரச்சயையில, நாங்க லேட் செய்யுற ஒவ்வொரு நிமிடமும், எம நிமிஷங்க. அதனாலதான் ஆபத்துக்குத் தோசமில்லன்னு வந்துட்டோம். கன்னையாவை ஒங்களுக்குத் தெரியுமா?"

"நல்லா கேட்டீங்க? இந்த பாக்டரில அவர் சேரும்போது, அவருக்கு எல்லா உதவியும் செய்து கொடுத்ததே நான்தாங்க. கன்னையாவை இந்தத் தடவையாவது எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கச் சொல்லுங்க. ஆமா... கன்னையாவ எங்கே?"

"அதைக் கேட்கத்தாங்க வந்தோம். என் சம்பந்தப்பட்ட வழக்குல, இந்த வசந்தியை, கோர்ட்ல பொய் சாட்சி சொல்லும்படி, காலேஜ் நிர்வாகமும், வாடிக்கை பத்திரிகையும், இவங்க ஏஜெண்டாய் போலீஸும் வற்புறுத்தி இருக்காங்க. ஒங்க ஜி.எம்.மும்., அவரை பலதடவை மிரட்டியிருக்காரு. நேற்றையிலிருந்து, ஆளைக் காணல. போலீஸ் பிடிச்சுட்டுப் போனதாய் ஒரு ரூமர். போய்க் கேட்டால்,

இல்லங்கறான். போலீஸ் கன்ட்ரோல் ரூம் போனோம். கடைசியாய் ஒரு டாக்சியை எடுத்துட்டு காஞ்சிபுரம் போயிட்டு வாறோம். ஒருவேளை பேக்டரியில இருப்பாரோன்னு பார்க்க வந்தோம். நேற்று ஈவினிங்லேயே போனவர், வீட்டுக்குத் திரும்பல."

ஒரு பிரதிநிதி பதிலளித்தார்.

"நேற்று... கன்னையா... பேக்டரியை விட்டுப் போகும்போது நான் பார்த்தேங்க. ஒர்க்ஸ் மானேஜர் எதையோ கொடுத்ததை வாங்கிக்கிட்டாரு. ஒரு மாதத்திற்கு முன்னால ஜி.எம். ரூமுக்குப் போனத பார்த்தேன். அதுக்கு பிறகு, டல்லாத்தான் இருக்கார்."

வசந்தி, கந்தனை, நோக்கி கையெடுத்துக் கும்பிட்டாள். சாயப்போனவளுக்கு, மேகலா முட்டுக் கொடுத்தபோது, வசந்தி, கேவிக் கேவி அழுதபடியே சொன்னாள்:

"எங்கப்பாவை நீங்கதான் கண்டுபிடிச்சுக் கொடுக்கணுங்கய்யா. எல்லோருமாய் சேர்ந்து சதிசெய்து எங்கப்பாவை தீர்த்துக் கட்டி இருப்பாங்களோன்னு பயமாய் இருக்குதுங்க அய்யா. ஒங்க ஜி.எம்.கூட அப்பாவை அடிக்கடி மிரட்டியிருக்கார். நீங்கதாய்யா எப்படியும் எங்கப்பாவை மீட்டிக் கொடுக்கணும்."

"என்ன இது? அநியாயமாய் இருக்கே. கன்னையாவை ஜி.எம். மிரட்டியிருக்கார்... இந்த கன்னையா ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லி இருக்கப்படாதா? என்கிட்டே கூட வேண்டாம், தொழிலாளர்கள்ல ஒருத்தர்கிட்டே சொன்னாக்கூடப் போதுமே! விஷயம்... என் கிட்டே வந்திருக்குமாம்... இப்போ...தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்கிறது மாதிரி ஆகிட்டு பாரு."

ஒரு இராப்பொழுதுக்குள் யுகக்கணக்கில் தீர்ந்து போனவள்போல் காணப்பட்ட கன்னையாவில் மனைவி. கோவிந்தம்மா, தள்ளாடித் தள்ளாடி, முன்னால் வந்தாள். மேகலா, வசந்தியை விட்டு விட்டு அவளை, அரவணைப்பாய் பிடித்தபடியே பேசவிட்டாள். மேகலாவிடம், உடம்மை கிடத்தியபடியே, வாயில் மட்டுமே உயிர் வைத்திருப்பவள் போல் துடிதுடித்துப் பேசினாள்:

"நான் பாவி, சொன்னேங்கய்யா! ஆயிரம் நடந்திருந்தாலும், தொழிலாளிங்க தொழிலாளிங்கதான். தோழங்க தோழங்கதான். போலீஸ் மிரட்டுறதையும், ஜி.எம். மிரட்டுறதையும், ஒங்க ஆட்கள் கிட்டே சொல்லுங்க, சொல்லுங்கன்னு படிச்சுப் படிச்சு, பல தடவை சொல்லியிருக்கேன். ஆனால்.. என் மவராசா..."

"அழாதிங்கம்மா... ஒங்களைப் பார்த்துட்டு எல்லாரும் அழறாங்க பாருங்க. இப்போதான் தைரியமாய் இருக்கணும். உம்... சொல்லுங்க... கன்னையா... அதுக்கு என்ன சொன்னார்?"

"அதுக்கு என் மவராசா... 'நான்... தொழிலாளர் தோழர்களைக் காட்டிக் கொடுக்கிற துரோகியாய் இதுவரை நடந்து கிட்டேன். எந்த முகத்தோட அவங்ககிட்டே சொல்லுவேன்? கொஞ்ச நாளைக்கு பொறுத்துக்க வேண்டியதுதான். ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வரும். அப்போ என் தோழர்களோடு தோளுக்குத் தோளாய் நின்னு... புதுக் கன்னையாவான பிறகுதான், அவங்ககிட்டே முறையிடப் போறேன்'னு சொன்னாரே... இப்போ முறையிட முடியாத இடத்துக்குப் போயிட்டாரோ... என்னவோ... தெரியலியே... ஒரே மாயமாய் இருக்கே... மர்மமாய் போயிட்டே..."

"அடப் பாவி! அவரு... ஆயிரந்தான்... எங்களை விட்டு தனியாய் செயல்பட்டாலும்... நாங்க அவரை விடுவோமோ?"

பேராசிரியர். பெருமாள்சாமி "அவரு கருங்காலியாய்...' என்று இழுத்தபோது, கந்தன், அவரை மேற்கொண்டு பேச விடாது, வெட்டொன்று துண்டிரண்டாய் பேசினார்:

"பழைய கணக்கைப் பார்த்து, பழி வாங்குற வர்க்கம் வேற வர்க்கம். தொழிலாளர் வர்க்கம் இல்ல ஸார். ஆயிரம் நடந்தாலும், செய்தாலும், கன்னையா ஒரு தொழிலாளி. எங்க தோழன். அவரை யார் மிரட்டினாலும், அது எங்களை மிரட்டுறது மாதிரி. ஏம்பா, அருணாசலம்! ஜி.எம்.மைப் பார்த்துட்டு வரும்போதெல்லாம், கன்னையா டல்லாய் இருந்ததாய் இப்போ சொல்றீயே, நீயாவது அப்போ என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமே. சரி... சரி, எல்லோரும் எழுந்திருங்க. இந்த ஜி.எம்.மையே போய் நேராய் கேட்போம். உம். சீக்கிரம். அவங்க சொன்னது மாதிரி, கன்னையாவை கண்டுபிடிக்கத் தாமதமாகிற ஒவ்வொரு நிமிடமும், ஒரு எம நிமிடம். ஏய்யா, நாற்காலியில இருந்து துண்டை எடுக்க இவ்வளவு நேரமா?"

கந்தன் முன் நடக்க, எல்லோரும் அவர் பின்னால் நடந்தார்கள். கட்டிடத்திற்கு வெளியே வந்தவர்களை, தொழிலாளர்கள் மொய்த்துக் கொண்டார்கள். கந்தன், அவர்களிடம் கன்னையாவைப் பற்றிப் பேசப் போனார். இதற்குள் ஒரு ஆட்டோ ரிக்ஷா உள்ளே வந்தது. கண்ணனும், மல்லிகாவும் இறங்கினார்கள். கந்தன், கண்ணனைப் பார்த்து, வணக்கம் போடக்கூட மறந்தவராய் "வாங்க தோழரே.... என்ன திடீர்னு?" என்றார்.

கண்ணன், கந்தனை அர்த்த புஷ்டியாகப் பார்த்தபோது, தன் கையை பிடித்தவரைப் பார்த்து, ஆச்சரியப்பட்டார். கண்ணாவின்

கையை விடாமலே, பேராசிரியர் பெருமாள்சாமி "நல்ல வேளையாய் நீங்களும் வந்துட்டிங்க. ஒரு முக்கியமான விஷயமாய் வந்தோம்" என்றார். கண்ணன், அவர் முதுகைத் தட்டிக் கொடுத்தாரே தவிர, பதிலளிக்கவில்லை. மேகலாவுடன் நின்ற இரண்டு பெண்களையும், ஊமைச் சோகத்தோடு பார்த்தார். நடிகை மல்லிகா, அந்தப் பெண்களருகே நின்று கொண்டாள்.

கண்ணனும், கந்தனும், கூட்டத்திலிருந்து சிறிது விலகி நடந்து, ஒரு செட்டுக்குள் போய் நின்றார்கள். கண்ணன், பேராசிரியர் பெருமாள்சாமியையும், அந்தப் பெண்களையும், திரும்பித் திரும்பிப் பார்த்தபடி கால்மணி நேரம்வரை பேசிக் கொண்டிருந்தார், பிறகு, இருவரும் திரும்பி வந்தார்கள், கந்தன், தொழிலாளர்களிடம் இடி முழுக்கமாய் பேசினார் :

'தோழர்களே ! இப்போ நான் போனஸ் பற்றிப் பேசல... அதை எப்பவும் பார்த்துக் கொள்ளலாம். நாம் இதுவரை பார்க்காத ஒரு விபரீத விஷயம் நடந்திருக்கு. நமது தோழர் கன்னையாவை போலீஸ்காரங்க, காவல் நிலைத்துல கொன்னு, கடலோர சவுக்குத் தோப்புல வீசி எறிஞ்சுட்டாங்களாம். நமது தோழர். கண்ணன், அங்குள்ள நம் யூனிட்டிடம் சொல்லி, பிணத்தை எடுக்கவும், ஆர்ப்பாட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்துட்டு வந்திருக்கார். இந்தக் கொலையில, பல பின்னணி இருக்குது. நம் பேக்டரி ஜெனரல் மானேஜருக்கும், ஒர்க்ஸ் மானேஜருக்கும் பங்கிருக்கு... புறப்படுங்கள் தோழர்களே! போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் புறப்படுங்கள். போகிறவழியில் ஜி. எம். மையும் என்னென்று கேட்போம்.

கந்தன் பேசுவதை உற்றும், பின்னர் உணர்ச்சியற்றும் கேட்டுக் கொண்டிருந்த கன்னையாவின் மனைவியும், மகளும், ஒருவரை ஒருவர் விம்மிப் பார்த்தார்கள். பம்மிப் பார்த்தார்கள். பார்கக முடியாமல் பார்த்து, ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடியே, தரையில் விழுந்தார்கள். கொம்பு கிடைக்காத அந்தக் கொடிகள், ஒன்று இன்னொன்றைக் கொம்பாக நினைத்ததுபோல், தழுவியபடியே தரையில் உருண்டார்கள். நடிகை மல்லிகா, வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். கீழே புரண்ட வசந்தி, மெல்ல எழுந்தாள். இன்னும் தரையிலேயே கிடந்த அம்மாவின் ஒரு கையைத் தூக்கிப் பிடித்தபடியே புலம்பினாள்.

'எழுந்திருங்கம்மா. பாவிங்க அப்பாவை கொன்ன பிறகு, நாம எதுக்காகம்மா உயிரோட இருக்கணும்? புறப்படுங்கம்மா. கிணத்துலயாவது, இல்லன்னா கடலுலயாவது விழுந்து சாகலாம். எழுந்திருங்கம்மா...'

அம்மா, மயக்கமுற்றுக் கிடப்பதையும் அறியாமல் வசந்தி, அவளைத் தரையில் உடம்பு முழுவதும் உராயும் படி இழுத்தாள். இதுவரை சோகத்தை சுமக்க முடியாமல் முகம் புதைத்து நின்ற மேகலா, அம்மாவையும் மகளையும் பிரித்துவிட்டாள். பிறகு, கீழே உட்கார்ந்து, கன்னையாவின் மனைவியை தன் மடியில் போட்டுக் கொண்டாள். மல்லிகா. வசந்தியை வந்து பிடித்தாள். பிடித்தவள் யாரென்று தெரியாமலே, பிடிபட்டவள், மல்லிகாவின் தோளில் புரண்டாள். 'அப்பா அப்பா...' என்று அழுது புரண்டாள். இதற்குள் மேகலாவின் மடியில் கையூன்றி எழுந்த தாய்க்காரி, புலம்பச் சக்தியின்றி, சிந்திக்கத் திராணியில்லாமல், நடந்ததை நம்ப மறுத்து, நடப்பதை அறிய முடியாத மரத்துப்போன உணர்வோடு, அங்கு மிங்குமாய் ஆடி, பேராசிரியர் தோளில் விழுந்தாள். முத்தையாவின் மார்பில் சாந்து, குருநாதனின் தலையில் தலை போட்டு, கந்தனின் தோளில் கைபோட்டு சடலம்போல் கிடந்தாள். பேராசிரியர் கண்களைத் துடைத்தபோது, வசந்தி, அந்த பேக்டரியே அலறுவது போல் வீரிட்டாள்.

'எப்பா.... என் அப்பா.... ஒங்களை போலீஸ் பாவிங்க எப்படில்லாம் அடிச்சுக் கொன்னாங்களோ? நீங்க எப்படில்லாம் தவிச்சிங்களோ? எப்படில்லாம் துடிச்சிங்களோ? பாவிங்க, நம்ம குடும்பத்தையே சிதைச்சுட்டாங்களே. அய்யாமாரே! எங்கப்பா இருக்கிற இடத்துக்கு எங்களை கூட்டிட்டுப் போங்கய்யா. ஒரு தடவை அவரைப் பார்த்துட்டு, நாங்க உடனே சாகணும்... கூட்டிட்டுப் போங்க சாமி, கூட்டிட்டுப் போங்க.... '

சுற்றி நின்ற தொழிலாளர்கள், கண்ணீர் விட்டார்கள். பிறகு ஆவேசக்காரர்களாய், சிதறிய விரல்களை முஷ்டிகளாக்கினார்கள். இதற்குள் ஒரு செக்யூரிட்டி கார்ட் ஓடி வந்து, கந்தனின் கால்களில் தலைவிழும்படி நெடுஞ்சாண் கிடையாக விழுந்து புலம்பினார்,

'கன்னையாவின் மரணத்துக்கு நானும் ஒரு காரணமா ஆயிட்டேங்க! கன்னையா ரகசியமான ஒரு பொருளை, நிர்வாகத்தின் சம்மதத்தோடு கொண்டு போனார். அவரை சோதனை போட்டு, அந்தப் பொருளை விளம்பரப்படுத்திடாதேன்னு ஒர்க்ஸ் மானேஜர் சொன்னதை நம்பிட்டேன். நானும், கம்பெனிச் சதிக்கும், கன்னையா கொலைக்கும் ஒரு காரணமா ஆயிட்டேங்கய்யா. ஒங்க கையாலேயே என்னை வெட்டிப் போடுங்கய்யா......'

தொழிலாளர்கள் கொதித்தார்கள்.

"புறப்படுங்க தோழர்களே! நம் தோழர் கன்னையாவின் சாவுக்குக் காரணமான ஜெனரல் மானேஜரையும். ஒர்கிங் மானேஜரையும்......"

கந்தனும், கண்ணனும், தொழிலாளர்களை கையாமார்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது, மானேஜிங் டைரக்டர் ஓடிவந்தார். பிறகு, படபடப்பாகப் பேசினார் :

"ஐ அம் ஸாரி, மிஸ்டர் கந்தன்! நடந்ததைக் கேள்விப்பட்டேன். நிர்வாகத்துக்கும், இதுக்கும் சம்பந்தமில்ல. ஜி. எம்மையும், ஒர்கஸ் மானேஜரையும் இதோ சஸ்பெண்ட் செய்யப் போறேன். அது மட்டுமல்ல, பேக்டரி தொழிலாளியை படாதபாடு படுத்துனதுக்காக....."

"படாத பாடல்ல..... கொலை......"

"ஆல்ரைட்... கொலை செய்யுறதுல உடந்தையாய் இருந்ததுக்கு, இவங்க ரெண்டு பேருக்கும் எதிராய் கம்பெனி சார்பிலேயே போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுக்கப் போறேன்."

இதற்குள் ஒரு தொழிலாளி எங்கிருந்தோ ஓடி வந்தார். கந்தனிடம், குய்யோ முறையோ எனக் கத்தினார்.

"ஜி. எம்மும், ஒர்க்ஸ் மானேஜரும், அஞ்சு நிமிடத்துக்கு முன்னாடி, கார்ல ஏறி தப்பிட்டாங்க. தோழரே ! எம்.டி., இங்கே வந்து பசப்புறார். இதுல நாம் ஏமாந்துடப்படாது. வாருங்க தோழர்களே ! நம் கன்னையா தரை மட்டமாகத் காரணமான இந்த பேக்டரியை இடித்து நொறுக்குவோம்...."

தொழிலாளர்கள் தினவெடுத்து நின்றபோது, கந்தன், அவர்களிடம் கெஞ்சாக் குறையாய்ப் பேசினார்:

"இந்த இருபதாம் நூற்றாண்டில், இவங்ககிட்டே இருக்கிற இந்த பேக்டரி, இருபத்தொன்றாம் நூற்றாண்டுல நம் கைக்கு வரப்போகுது. நம் பேக்டரியை, நாம் உடைக்கிறதுல அர்த்தமில்ல. அதோடு, நம் மீது நமக்கு நம்பிக்கை இருக்கும் வரை, நம்மை யாரும் ஏமாற்ற முடியாது,"

எம்.டி.. அம்மையப்பன் கெஞ்சினார். மல்டி. நேஷனல்களோடு லிங்க் வரும் இந்தச் சமாயத்தில் எதுவும் குறுக்குப் பூனையாகி விடக்கூடாதே என்று அஞ்சினார். மிஞ்ச முடியாத தொழிலாளர் தலைவர்களிடம் மன்றாடினார் :

"ஒங்களுக்கு என்மேல் நம்பிக்கை இல்லன்னா, என்ருமுக்கு வாங்க. ஒங்க முன்னாடியே, சஸ்பெண்ட் ஆர்டரை இஷ்ஷு செய்யுறேன். டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸிற்கு போன் செய்யுறேன். நடந்தது மன்னிக்க முடியாத குற்றம். ஜி.எம்., ஒரு பேஸ்டர்டாய் நடந்துட்டான்."

ஒரு சில தொழிலாளர்கள், எம்.டி.யைப் பயமுறுத்துவதுபோல் அவரருகே போனார்கள். கந்தன் அவர்களை கண்டிப்பாய் பார்த்துவிட்டு, தழுதழுத்த குரலில் பேசினார் :

"தோழர்களே! சந்தேகத்தின் பலனை இப்போதைக்கு எம்.டிக்குக் கொடுப்போம். நிர்வாகம், ஜி.எம்.மை விட்டாலும், நாம் விடப்போவதில்லை. குற்றவாளிக் கூண்டில் ஏற்றாமல் இருக்கப்போவதில்லை. கன்னையாவைக் கொன்றது, நம்மைக் கொன்றது மாதிரி, கன்னையா மகளுக்குக் கிடைத்த அநீதி, நம் மகள்களுக்குக் கிடைத்தது மாதிரி, இது நம் வர்க்கத்திற்கு எதிராக விடப்பட்ட போர்ப் பிரகடனம். இந்தக் கொலையில், பெரிய மனிதப் பின்னணியும் உள்ளது அவர்கள் முகத்திரையைக் கிழிக்காமல் விட மாட்டோம். புறப்படுங்கள் தோழர்களே! கன்னையா எந்த நிலையத்தில் சாகடிக்கப்பட்டாரோ, அந்த நிலையத்தை முற்றுகையிடுவோம். எந்தக் கல்லூரி கொலைக் கல்லூரியானதோ, அந்தக் கல்லூரியைச் சுற்றி வளைப்போம். எந்தப் பத்திரிகை, ஒரு அப்பாவித் தொழிலாளியின் உயிர்போகக் காரணமோ, அதை மடக்குவோம். புறப்படுங்கள் தோழர்களே! நாட்டில் இப்படி நாள்தோறும் எத்தனையோ கன்னையாக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து, கன்னையாவை ஒரு சின்னமாக்கிப் போராடுவோம். கன்னையாவின் குடும்பத்தையும் காப்போம். என்ன சொல்கிறீர்கள்?"

தொழிலாளர்கள் சொல்லவில்லை, முழங்கினார்கள் :

"காப்போம்.... காப்போம்,,,

'கன்னையாவின் குடும்பத்தைக் காப்போம் !'

'நம் சோதரனைக் கொன்றவர்களை'

"தகர்ப்போம்! தகர்ப்போம்! "

உயிரற்றுக் கிடந்த வசந்தி, விம்மினாள். அவள் அன்னையின் செருகிய கண்கள் அகலமாயின. தொழிலாளர் தோழர்களின் சோக வெள்ளத்தில், துக்கத்தைக் கரைத்தபடி, கூட்டத்தை நோக்கி, கையெடுத்துக் கும்பிட்டாள். வசந்தியின் கரங்களையும் தூக்கிப்பிடித்து, கும்பிடவைத்தாள். தொழிலாளர் கூட்டம், அவர்கள் இருவரையும் 'யாமிருக்கப் பயமேன்' என்பதுபோல் ஒட்டு மொத்தமாய் பார்த்தது. பின்னர் -----

பல தொழிலாளர்கள், தங்களின் சைக்கிள்களை எடுத்துக் கொண்டார்கள். சிலர், ஸ்கூட்டர்களை ஸ்டார்ட் செய்தார்கள். டாக்ஸியில். பழைய பயணிகளான முத்தையாவிற்கும், மேகலாவிற்கும்

பதிலாக, பேராசிரியர் பெருமாள்சாமி, கந்தனையும் கண்ணனையும் ஏற்றிக்கொண்டார்.

எப்படிப் போவது என்பதுபோல் யோசித்தபடி நின்ற மேகலாவையும், முத்தையாவையும், மல்லிகா, தான் வந்த ஆட்டோ ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டாள். கூடவே, குருநாதன்...

எஞ்சிய தொழிலாளர் பெருங்கூட்டம், கண்கள் இரும்புக் கட்டிகளாக, கரங்கள், எதையோ பற்றப் போகும் கிரேன்கள் போல் துடிக்க, கால்கள் ராட்சத உருளைகளாகச் சுழல, வாய்கள், போலீஸ் தான்தோன்றித் தனம்'— 'ஒழிக! ஒழிக!' என்று முழக்கமாக, கோபக் குறியுமாய், குத்தீட்டி வீச்சுமாய், பஸ் நிலையத்தை நோக்கிப் பாய்ந்தார்கள்.

## 31

அந்தக் காவல் நிலையத்தின் மீது மக்கள் வெள்ளம், அலை அலையாய்ப் பாய்ந்து கொண்டிருந்தது. அது காவல் நிலையல்ல, கொலை நிலையம் என்று நம்ப வைத்ததை நிரூபிக்கப் போவதுபோல், போலீஸ் லத்திக் கம்புகள் சிலம்பாடிக் கொண்டிருந்தன. மக்களில் சிலர், ஆங்காங்கே அடிபட்டு விழுந்து, சிவப்புத் தலையோடு எழுந்து கொண்டிருந்தார்கள், போலீஸ் தடிகளுக்கு, கற்கள் பதிலளித்துக் கொண்டிருந்தன. கடுமையாகக் காயம் பட்டவர்களைச் சுற்றி கூட்டம் கூட்டமாக நின்ற மக்கள். அவர்களின் தலையிலும், முகத்திலும், தோளிலும் ஊற்றுப் போல் கிளம்பிய ரத்தவாடையில் ஆவேசமாகி, கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு, ஆவேசிகளானார்கள். போலீஸ்காரர்கள் துப்பாக்கிகளைக் குறியாக்கிய போதெல்லாம், கடலலை பின்வாங்குவது போல், லேசாய் பின்வாங்கிய மக்கள் கூட்டம், அடுத்த கணத்திலேயே, புயல் காற்று கடலலை போல் முன்னே முன்னே, முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

எழுந்தவர்கள் விழுவதும், விழுந்தவர்கள் எழுவதுமாய், சிதறிச் சிதறி பெரிதாகிக் கொண்டிருந்த பெருங் கூட்டம், அடிக்க வந்த லத்திக் கம்புகளை தட்டிப் பறித்து, அவற்றையே தங்களின் ஆயுதங்களாக்கி! வசமாக மாட்டிக் கெண்ட போலீஸ்காரர் தலையில் விழப்போகும் தடியடியை, கைகளால் தாங்கி, அடிக்கப் போனவர்களை அடக்கி, அடிபடப் போனவரை உயிர் பிழைக்க வைத்தவர்கள்... தலை கக்கும் ரத்தத்தை, எண்ணெய் தேய்ப்பது போல் தேய்த்தபடி, கண்களில் சினம் கக்க, துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டிருந்தவர்களை நோக்கி

மார்புகளைத் திறந்து காட்டியபடி அமைதியாகவும், அழுத்தமாகவும் நடந்தவர்கள்! 'கொலைகார நிலையம் ஒழிக...ஒழிக' என்று கோஷமிடுபவர்கள் ! சுட்டிக் குவிக்க நினைத்தாலும் துப்பாக்கிகளை நீட்டிப் பிடிப்பதற்குப் கூட இடைவெளி இல்லாத அளவில் கூடிய கூட்டம்... சாதாரண மனிதர்களின் அசாதாரண கூட்டம் ! மொதத்தில் —

இதுவரை கும்பிட்டுப் பழக்கப்பட்ட கரங்கள்கூட, ஐந்து முனை சூலங்களாயின. குழைந்த முகங்கள் கூட, கோபாவேச ஒரு முகமாயின. குனிந்து நடந்த தலைகள், குண்டுகளாயின. வேலைக் கருவிகளோ, ஆயுதங்களாயின். பெருமூச்சு சூறாவளியானது. வெறும் மனிதர், உருமும் வேங்கைகளானார்கள்.

அந்தப் பிரதான சாலை நெடுகிலும், கண்தாவ முடியாத கூட்டம்... முப்பரிமாண மனிதக் கோடுகளாயின. பல்லவ பஸ்கள், பிரேக்டவுன் இல்லாமலே ஆங்காங்கே கையறு நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. கடைகள் மூடப்பட்டன. அருகே இருந்த சினிமா தியேட்டரில், பகல் இரண்டுமணி நேர ஆட்டத்திற்காக, பதினொரு மனிக்கே வரிசையில் நின்ற சோதாக் கூட்டம் கூட, சாலைக் கூட்டத்தில் வயப்பட்டு, அதனுடன் சங்கமித்தது. அந்தப் பகுதியில் மாமூல் கொடுத்துக் கொடுத்து கை சிவந்தும், கொடுக்காத சமயத்தில் தலைசிவந்தும் பழக்கப்பட்ட பூக்கார சோதரிகள், பழக்கார சோதரர்கள், சொந்த தேசத்தில் கப்பம் கட்டும் கேவலத்தை, அப்போது தான் முழுப் பரிமாணத்துடன் உணர்ந்தவர்களாய், விற்பனைப் பொருட்களைப் பொருட்படுத்தாமல் போரிட்ட கூட்டத்தில், முன்னணிப் படையானார்கள். சற்றுத் தொலையில், கட்டி முடிக்கப்படாத ஒரு மும்மாடிக் கட்டிடத்தில் மண் சுமந்த பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் அத்தனை பேரும் நியாயம் சுமப்பதற்காக, மண் வெட்டிகளே ஆயுதமாக, 'பாண்ட்' பாத்திரங்களே கவசமாகப் புறப்பட்டார்கள். தெருவோர சில்லறை வியாபாரிகள், தராசுத் தட்டுக்களோடும், எடைக் கற்களோடும், கூடிவிட்டார்கள்.

கூட்டத்தில் ஒரு பகுதி, காவல் நிலையத்தை முன்னாலும், பின்னாலும், பக்கவாட்டிலும் சூழ்ந்து கொண்டு, கரையேறப் போகும் கடலாய் கொந்தளித்து, அதன் அலைபோல் சத்திய ஆர்ப்பரிப்பாய் குரலிட்டது! தூக்கலான இடத்தில் கட்டப்பட்ட காவல் நிலையப் படிகளிலும், சுவர்களிலும் கால் வைக்க இடமில்லாமல் ஏறி நின்ற மனிதக் கூட்டத்தை ஒட்டு மொத்தமாய் பார்த்தால், ஒரே மனிதன் போல தோன்றியது : அனுமார் உள்ளங்கையில், சஞ்சீவி மலையைத் தூக்கி வைத்திருப்பது மாதிரி. உள்ளே பதுங்கிக் கிடந்த ஒரு சில

போலீஸ்காரர்களை ஜன்னல் வழியாகக் காறி உமிழ்ந்தார்கள். பெண்கள், மண்வாரி இறைத்தார்கள். கூட்டத்தைக் கலைப்பதற்கு ஆரம்பத்தில் சூரத்தனம் காட்டிய காலவர்கள், தங்களின் லத்தி வீச்சுக்களையும், துப்பாக்கிப் பயமுறுத்தல்களையும் பொருட்படுத்தாமல், மக்கள் காவல் நிலையத்தை மொய்த்துக் கொண்டதும், தளர்ந்து போனார்கள்.

காவல் நிலையத்திற்குள் பதுங்கிக் கிடந்த திம்மையா 'ஒயர்லஸ்ஸில்' மேலிடத்திற்கு எதையோ உளறிக் கொட்டிக் கொண்டிருந்தார். துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பெர்மிஷன் கேட்டுக் கொண்டிருந்தார். சட்டசபைக் கூட்டம் நடப்பதால், ஒன்றும் செய்வதற்கில்லை என்றும், கூட்டத்தை விட்டுப் பிடிக்கும்படியும், அதே சமயத்தில், ஆயுதத்தில் நம்பிக்கை இழக்க வேண்டாம் என்றும் அவருக்கு அறிவுரை வந்ததோ என்னவோ, ஆசாமி மேஜையில் குப்புறப் படுத்துக் கொண்டார்.

இதற்குள், கூட்டம் காவல் நிலையக் கதவை உடைக்கப் போனது. 'அவங்களை வெளியே தூக்கிட்டு வாங்கய்யா....' என்ற ஆலோசனைக் குரலை, ஆணைக் குரலாக்க நினைத்து, செயல்படப் போனபோது, கண்ணனும், கந்தனும் ஓடி வந்தார்கள். கூட்டத்தை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டார்கள். கீழே இறங்கும்படி சைகை செய்தார்கள். கூட்டத்துள் அவர்களை அடையாளம் கண்ட ஒரு சிலர், தத்தம்மைச் சுற்றி நின்றவர்களை உரிமையோடு, பின்னுக்குத் தள்ளினார்கள். வெளியேயும் கண்ணனின் 'யூனிட்' ஆட்கள் கேந்திரமான இடங்களில் நின்றபடி, கொதித்த கூட்டத்தை, ஓரளவு கட்டுக்குள் வைத்துக் கொண்டிருந்தார்கள், மக்கள் விட்டு விட்டு வெடிக்கும் வெடி மருந்தாய், ஆற்றுச் சுழிபோல, கும்பல் கும்பலாய், திட்டுத் திட்டாய் முண்டியடித்தார்கள்.

கீழே நின்ற கூட்ட மத்தியில், பேராசிரியர். பெருமாள்சாமி, ஒரு மரத்தோடு மரமாக சாய்ந்தபடி நின்றார். முத்தையா உட்பட பலத்த மாணவர் கூட்டம் அவரைச் சூழ்ந்துகொண்டிருந்தது. தமிழாசிரியர் மாணிக்கம், போராசிரியர் பெயரில் கள்ளக் கணக்கு திறந்த அக்கௌன்டன்ட் ராமமூர்த்தி, நடிகை மல்லிகா ஆகியவர்கள் அவர், தங்களை மன்னித்துவிட்டதாய், கண்கள் மூலமாவது குறிப்புணர்த்த வேண்டும் என்பதுபோல், பேராசிரியரின் பார்வை தரிசனத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தார்கள். மேகலா, முத்தையாவின் குடும்பத்தினருடன் கோபக்குறியோடு, அங்குமிங்குமாய்ச் சுற்றிக்கொண்டிருந்தாள். இதற்குள் பின்பக்கமாய் பெருகிய கூட்டம், முன் பக்கமாய் நின்றவர்களை நெருக்கி, மேலும் முன்புறமாய் தள்ளியது. இதைக் கண்டதும், கூட்டம் வன்முறையில் ஈடுபடப் போகிறதோ என்று அச்சப்பட்ட கண்ணன், கந்தனிடம் ஏதோ சொல்ல, அவர், மெகாபோனில் பேசினார் :

"தோழர்களே! தோழியர்களே! நாம் எப்போது தப்புச் செய்வோம், உடனே நம்மை வீழ்த்தலாம் என்று எதிரிகள் காத்துக்கொண்டிருக்கும் நேரம் இது. இந்தச் சமயத்தில் அமைதி காக்க வேண்டியது நமது கடமை. இந்த விவகாரம் குறித்து சட்டமன்றத்தில், நம்மவர்கள் அவசரப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறார்கள். விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசு பதிலளித்துத்தான் ஆகவேண்டும். அரசிடம் நமக்கு நீதி கிடைக்காமல் போனால், நமக்கு, நாமே நீதி வழங்கத் தெரியும். அரசு அதிகாரிகள் எங்களை அங்கே வரும்படி கூப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள், அவர்களை இங்கே வரும்படி சொல்லி இருக்கிறோம். அதுவரைக்கும் தயவு செய்து பொறுமை காக்கவும்."

கந்தன் பேசி முடித்ததும், ஒருவர் உரத்து முழங்க மழங்க கூட்டம் கோஷங்களை, பீரங்கிக் குண்டுகளாய் முழங்கின :

"கைது செய்! கைது செய்!"

கொலையாளிகளை கைது செய்!!"

"டிஸ்மிஸ் செய்! "டிஸ்மிஸ் செய்!

"கல்லூரி நிர்வாகத்தை டிஸ்மிஸ் செய்!!"

அடுக்கடுக்காய் நின்ற மக்கள் போட்ட கோஷங்கள், விண் முழங்க, மண்முழங்க, வீதியெங்கும் எதிரொலித்தன. வானத்தில் பயந்துபோய் வட்டமடித்த பறவைகள் கூட, அந்த கோஷங்களைக் கேட்பதற்காக, கீழே இறங்கிப் பறப்பதுபோலிருந்தது.

ஒரு மணி நேரத்திற்குள் ஒயர்லஸ் பொருத்தப்பட்ட ஜீப்புகள். ஏகப்பட்ட கறுப்புப் பண்ணாடிக் கார்கள், ஆயுதப் போலீஸ் படைகளைக் கொண்ட பெரிய பெரிய வேன்கள் குவிந்தன. அவை, வந்த போதும், நின்ற போதும் கூட்டத்தின் முழக்கங்கள் உஷ்ணப்பட்டன. போலீஸ் காவலுடன் வந்த அமைச்சர் ஒருவர், கந்தன் போன்றவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, ஆயுதப் போலீஸார், துப்பாக்கி சகிதமாய் ஆங்காங்கே நிற்கப் போனார்கள். இதனால் ஆவேசப்பட்டு கூட்டம் பலப்பரீட்சைக்கு தன்னை ஆயத்தம் செய்யப் போனபோது, அமைச்சர், போலீஸ் மைக்கில் பேசப் போனார். கூட்டத்தினர், அவர் சொல்லப் போவதை, கேட்கப் போவதாகத் தெரியவில்லை. ஆட்கள் அங்குமிங்குமாக அலைமோதினார்கள். அமைச்சர் தர்ம சங்கடமாக விழித்துவிட்டு, கந்தனை தனியாய்க் கூப்பிட்டுப் பேசினார். பிறகு மைக்கை அவரிடம் நீட்டினார். கந்தனும் வெற்றி தோல்வி உணர்வில்லாத குரலில், அழுத்தமாகவும் அமைதியாகவும் பேசினார்.

"கன்னையாவைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில், இன்ஸ்பெக்டர் திம்மையாவும், அவரது போலிஸ் சகாக்களும் கைது செய்யப்படுவார்கள். இந்தக் கொலைக்கு உடன்பட்டவர்கள், எவ்வளவு பெரிய பிரமுகர்களாக இருந்தாலும், அவர்களும் கைதாவார்கள். கல்லூரி நிர்வாகம் கலைக்கப்பட்டு, அரசே கல்லூரியை 'கேர் டேக்கராக' எடுத்துக் கொள்கிறது. இந்தக் தகவல்,, சட்டசபையில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருப்பதாக, உள்துறை அமைச்சர் அவர்கள், உங்களிடம் தெரிவிக்கச் சொல்கிறார். எனவே இனி, அதிகாரிகள் தங்கள் கடமையச் செய்வதற்கும் நாம் அனுமதிக்க வேண்டும். படுகொலை செய்யப்பட்ட கன்னையாவின் பிணம் கல்லூரிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதாம். நாம் அனைவரும் அமைதியாக அங்கே சென்று, நம் தோழருக்கு இறுதி அஞ்சலி செலுத்தப் போவோம். தயவுசெய்து, அமைதியாக, நிதானம் தவறாமல், இங்கே கலைந்து அங்கே கூடுங்கள்."

கூட்டத்தினர், விழிகளை இமைப்பதுபோல், கை கால்களை ஆட்டினார்கள். கந்தன் சொன்ன தகவலை சிலர், பலருக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கூட்டம், மெள்ள மெள்ளப் பிரிந்து, பிறகு விழுந்தடித்து ஓடியது. அதே சாலையில் கண்ணுக்குத் தெரியும் தொலைவில் இருந்த கல்லூரியை நோக்கி வேக வேகமாய் ஓடியது.

மரத்தில் சாய்ந்திருந்த பேராசிரியர், எழுந்திருக்கப் போனார். அவரால் முடியவில்லை. முத்தையாவின் தந்தை, அவரைத் தூக்கிவிடுவதற்காக, நொண்டியடித்து ஓடிவந்தார். அதற்குள், பல மாணவர்கள் போட்டி போட்டபடியே, அவரைத் தூக்கிவிட்டார்கள். அப்போது, "பேராசிரியர் பெருமாள்சாமி" என்று ஒருத்தன் சொல்ல, மற்றவர்கள் "வாழ்க... வாழ்க...." என்றார்கள். உடனே, பேராசிரியர் முகத்தைச் சுழித்தபடியே, "வாழ்க போடுறதுக்கு இதுவாப்பா சமயம்? ஒழிக ஒழிகன்னு எல்லாத்தையும் ஒழிச்சால், அப்புறம் வாழ்க சொல்றதுக்கு அவசியமே இருக்காது'' என்று சொன்னார். சொன்னதாக நினைத்தார். மாணவர்கள், வாழ்க கோஷத்தை விடாத போது, பேராசிரியர், சக்தி முழுவதையும் வாய்க்குக் கொண்டுவந்தபடி "இப்போது நான் வாழ்றது முக்கிய மில்ல... கன்னையா ஏன் செத்தார் என்கிறதுதான் முக்கியம்'' என்று கத்தினார். மாணவர்கள், வாயடைத்து நின்ற போது, அவர்களின் தோள்களில் கைகளைப் போட்டபடியே, பேராசரியர் தள்ளாடி நடந்தார்.

கல்லூரி வளாகத்திற்குள், தேசியக் கொடிக்கம்பத்தை ஒட்டி, நான்கு பெஞ்சுகள் சேர்த்துப் போடப்பட்டு, அதற்கு மேலே போடப்பட்டிருந்த நாற்காலியில், கன்னையாவின் பிணம் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அவரது கால்மாட்டில் வசந்தி, அவள் அம்மா,

ஒரு சில உறவினர்கள், குற்றுயிரும் கொலையுயிருமாய் ஆனவர்கள் போல், தாறுமாறாய் கிடந்தார்கள்.

திடீரென்று, காட்டாற்று வெள்ளம் போல், மக்கள், திபுதிபுவென்று ஓடி வந்தார்கள். கன்னையாவின் பிணத்தை பிணம் போலவே விறைத்துப் பார்த்தார்கள். காவல் நிலையத்தில் ஆவேசப்பட்டு, கண்களில் நெருப்பேந்திய பெண்கள், இப்போது வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டார்கள். நடிகை மல்லிகா கீழே விழுந்து புரண்டாள். தொழிலாளர் தோழர்களும், கல்லூரி மாணவர்களும், மற்றவர்களும் மலைத்து நின்றார்கள்.

கன்னையாவின் உடல் முழுவதும் அறுக்கப்பட்டதற்கும், உதைக்கப்பட்டதற்கும் அத்தாட்சியாக, வெள்ளை வெள்ளையான கட்டுக்கள்... தலையில் வெள்ளைக் கிரீடம், அதன்மேல், ரத்தப்பனிக்கட்டிகள். ஒல்லியான கன்னையா, உடம்பு முழுவதும் உப்பிக் கிடந்தார். எளிமையாய் உடையணியும் கன்னையாவின் உடம்பில், விதவிதமான துணிகள். அதுமட்டுமா? அவரைச் சாகடித்த போலீஸ் வர்க்கப் பிரதிநிதிகளே.... இப்போது அவருக்குக் காவல்.... அதுவும் துப்பாக்கி சகிதமாய்.... உயிரோடு இருக்கும் பெரிய மனிதர்களுக்குக் கொடுப்பது போன்ற பாதுகாப்பு...

வசந்தியின் அன்னை கோவிந்தம்மா, கூட்டத்தைப் பார்த்ததும் உயிர்தெழுந்தவள் போல், அங்குமிங்குமாய் கண்களை உருட்டினாள். பிறகு, மகளைக் கட்டிப் பிடித்தபடியே 'என் ராசா.... என்... ராசா...' என்று கத்தினாள். வசந்தி, அழவில்லை. அம்மாவின் இழுத்த இழுப்பிற்கேற்ப, அவள் உடலாடியது. உயிராடாதவள்போல், கால்களை சப்பாணியாக்கி, கரங்களை மார்பில் குறுக்கும் நெடுக்குமாய் போட்டபடி, எதையோ வாய்க்குள்ளேயே முனங்கினாள். அப்பா–பிணத்தை, ஏறிட்டு நோக்கிய வேகத்திலேயே, தலையைத் தொங்கப் போட்டபடி, அவ்ள் முனங்கிக் கொண்டே இருந்தாள். முகம் நிர்மலமாய் கிடக்க, உதடுகள் மட்டும், உள்முகமாய் எதையோ சொல்லிக் கொண்டிருந்தன.

பேராசிரியர் பெருமாள்சாமி, கூட்ட மத்தியில், கன்னையாவின் சடலத்தை நோக்கி நகர்ந்து, நகர்ந்து, ஊர்ந்து ஊர்ந்து வந்தார். முன்பின் பார்த்தறியாத கன்னையாவை, அப்போது, பிணக் கோலத்தில் பார்த்தபடியே நின்றார். உயிரை விலையாகக் கொடுத்து, குடும்பத்தின் மானத்தைக் காப்பாற்றியதுடன், கல்லூரிப் போராட்ட வெற்றிக்குக் காரணமான அந்த சடலத்தை உற்றுப் பார்த்தார். அதன்மேல் போடப்பட்ட கட்டுக்கள், அவருக்கு, சத்திய வெட்டுக்காளாகத் தோன்றின. சத்தியம் சாகாது என்பது போல், கன்னையாவின் கண்கள் மட்டும் தீபக் களையோடு மின்னியது. யாரையோ, எதையோ தீர்த்துக் கட்ட வேண்டும் என்பதுபோல், அந்தக் கண்கள் சொல்லாமல்

சொல்லிக் கொண்டிருந்தன. பேராசிரியர் விம்மிப் புடைத்தார். கொடிக் கம்பத்திலேயே தன் தலையை மோதிக் கொண்டபடி—

“கன்னையா... நான்... நின்னு காட்டுனது பெரிசில்ல கன்னையா! உண்மைக்காக உயிரை கொடுத்தீங்களே. அதுதான் பெரிசு கன்னையா, இப்படி நடக்குமுன்னு தெரிஞ்சிருந்தால், நான் எதையுமே நடத்தி இருக்கமாட்டேன் கன்னையா. உங்களை விலையாய் கொடுத்து, நான் எந்தப் பதவியையும் ஏத்துக்க மாட்டேன் கன்னையா,”

மயங்கியதுபோல் காணப்பட்டு, கீழே விழப்போன பெருமாள்சாமியை மாணவர் கூட்டம் தாங்கிக் கொண்டது. கன்னையாவுடன் நெருங்கிப் பழகிய தொழிலாளி ஒருவர், கன்னையாவின் குடும்பத்தைப் பார்த்தார். பிறகு, சத்தியம்போல் ஒலித்தார் :

“காப்போம் ! காப்போம் ! எங்கள் தோழனின் குடும்பத்தைக் காப்போம்!”

கண்களால் நீர் இறங்கி, அந்த நீராலேயே முகங்களை அலம்பிக் கொள்வது போல் அவ்வப்போது துடைத்துக் கொண்ட கூட்டம், குறிப்பாக தொழிலாளர் கூட்டம் முழக்கமிட்டது :

“அயோக்கியன் அப்பாவுவை

கைது செய்! கைது செய் ! ”

“தொழிற்சாலை அதிகாரிகளை —

கைது செய் ! கைது செய்! ”

“வாடிக்கை வீணர்களை

கைது செய்! கைது செய்!”

வசந்தி அந்தக் கூட்டத்தைப் பார்த்தாள். பிறகு தந்தையை நோக்கினாள். தானாகப் புலம்பினாள் :

‘‘ஒங்க வர்க்கம், ஒங்களுக்காக எப்படித் துடிக்கிறது என்கிறதைப் பாருங்கப்பா ! ஒரு தடவையாவது, உயிர் திரும்பிப் பார்த்துட்டு, அப்புறம் வேணுமுன்னால் போங்கப்பா! அப்பா அப்பா... ஒரு தடவையாவது.... ஒரே தடவையாவது... ”

கன்னையா, ரதத்தில் நகர்ந்தார் ரதத்திற்கு முன்னாலும் பின்னாலும் கண்கொள்ளாக் கூட்டத்துடன், காது கொள்ளா ஓலத்துடன் பிரதான சாலையில் ஊர்வலம் போனது. மேகலா வசந்தியை அணைத்தபடியே, முத்தையாவின் காலுக்குக்கால்,

கரத்திற்குக் கரம் இணைய நடந்தாள். கன்னையாவின் மனைவியை மல்லிகா தாங்கியபடியே நடந்தாள், பின்னால், கண்ணன், கந்தன், தொழிலாளர் கூட்டம் நடைபோட்டது. பேராசிரியர் பெருமாள்சாமி, முத்தையாவின் அப்பாவையும், அம்மாவையும், சகோதரிகளையும் சோகமாய் பார்த்தபடியே, தள்ளாடித் தள்ளாடி நடந்தார். அப்போது, ஆசிரியர் சங்கத் தலைவர் குருநாதன், அவர் கையைப் பற்றி ஒரு ஓரமாக நடந்து, அவரையும் நடத்தியபடியே, காரில் கிசுகிசுத்தார்.

"காலேஜ் விவகாரத்தைப் பேசுறதுக்கு, பேச்சு நடத்த வரும்படி எஜுகேஷன் டிபார்ட்மெண்டும், அமைச்சரும் அழைப்பு அனுப்பி இருக்காங்க. நீங்களும் எங்களோட வரணும்,"

"இதைப் பேசுறதுக்கு இதுவாப்பா சமயம்?"

"மன்னிக்கணும். நீங்க கன்னையா சடலத்துக்கு முன்னால பேசுன வார்த்தை என்னை கேட்க வச்சுட்டு... ஒங்களுக்குப் பிரின்ஸ்பால் பதவி வேண்டாமுன்னால், இந்த காலேஜ் இருக்கிறதுல அர்த்தமல்ல."

"என்னை விடுப்பா. நான் பட்டது போதும். சாகும் போது, சங்கரா சங்கரா என்கிறது மாதிரி, நான்... ஒரு பிரின்ஸ்பிளுக்குத்தான் போராடினேன். பிரின்ஸ்பால் போஸ்ட்டுக்கு இல்ல."

"ஸார்... நீங்க அப்படிச் சொல்லப்படாது. வெண்ணெய் திரளும் போது..."

"கன்னையா என்கிற பானையை உடைச்சிட்டாங்களடா... பாவிப் பயலுவ..."

"ஸார்... ஒங்களைவிட அதிகமுன்னு சொல்ல முடியாது போனாலும்... ஒங்க அளவுக்கு, வசந்தியோட அப்பாவின் மரணத்தால், நானும் பாதிக்கப்பட்டிருக்கேன். ஆனால் நான் பிராக்டிக்கலா பார்க்கேன். நடந்ததை நம்மால மாற்ற முடியாது. இனிமேல் நடக்கப் போறதைப் பற்றித்தான் யோசிக்கணும். நீங்க பிரின்ஸ்பாலாய் இருக்க சம்மதிக்காட்டால், நாங்க, பேச்சு நடத்தவே போகமாட்டோம்."

பேராசிரியர், குருநாதனின் கையை பிடித்தபடி, நின்றார். பிறகு அவர் முகத்தையே சிறிதுநேரம் பார்த்துவிட்டு, பற்றற்றுப் பேசினார்:

"நான்... நான்... அதிக நாளைக்கு உயிரோட இருக்க மாட்டேம்பா-!"

"ஸார்... ஸார்..."

"ஆமாம்பா... பத்திரிகைக்காரனும்... வருமான வரி ரெய்டுகாரனும்... கோர்ட்காரனும் எனக்கு கால, தூத, எமனாய் வந்து...

என்னை எப்பவோ கொன்னுட்டாங்க. ஒரு வாரத்துக்கு முன்னாடி, தலை சுத்துதேன்னு டாக்டர்கிட்டே போனேன். எனக்கு... ஹைபர் டென்சனாம்... வயிற்றுல அல்சராம்... கிட்னில கோளாறாம்... எந்தச் சமயத்துல இந்த கட்டை போகுமோ... இன்னும் மேகலாவுக்குக்கூட இது தெரியாது..."

'ஏன் ஸார்... அபசகுனமாய் பேசுறீங்க. வேளா வேளைக்கு மருந்து சாப்பிட்டால் உடம்புக்கு ஒன்றும் ஆகாது..."

"ஆனால் மனதுக்கு? இந்தப் பதவிக்கு நான் வந்தால்... ஒரு வாரத்துல எனக்கு... எமலோகப் பதவி நிச்சயம் கிடைக்கும். நல்லதோ... கெட்டதோ... கன்னையாவை விலையாய்க் கொடுத்து, பதவியை வாங்கிக்க விரும்பல. பிரின்ஸ்பால் பதவியில் உட்காருறது, கன்னையா பிணத்து மேலே உட்காருறதுக்கு சமமுன்னு உள்ளுணர்வு சொல்லுது. இந்த ஒரு வருஷமாய் நான் பட்டபாடு, ஒரு தலைமுறைக்குப் போதும். அப்புறம் ஒன் இஷ்டம். பாவிப் பசங்க... என்னை கொன்னுட்டு, இந்த கன்னையாவை விட்டிருக்கப்படாதா? என் மகளுக்காவது முத்தையா இருக்கான். அவன் மகளுக்கு யாருமே இல்லையப்பா..."

"அப்படின்னா, ஒரு மாதமாவது... நீங்க இருந்தாகணும்."

"சரிப்பா! ஒனக்காக... ஒரு மாத கூத்துக்கு மீசை எடுக்கத் தயார். ஆனாலும் ஒன்று. அரசாங்கம் காலேஜை... கேர்டேக்கராத்தான் எடுக்கான். எல்லாம் ஆறி அடங்குனதும்... பழையபடியும் அப்பாவு கிட்டேயே காலேஜை கொடுக்க நினைக்கலாம். அதனால... கிடைத்த வெற்றி பெரிசில்ல. அதைக் கட்டிக் காக்கதுதான் பெரிசு. அதனால... நாம் விழிப்பாய் இருக்கணும்..."

பேராசிரியர். பெருமாள்சாமி, குருநாதனை விட்டுவிட்டு, கன்னையாவின் ரதத்திற்குப் பின்னால் சென்ற மக்கள் சாகரத்தில் ஒரு துளியானார்.

ரதம், சற்று வேகமாக நகரத் துவங்கியது. அப்போது அருகே உள்ள ஒரு கடைமுன்னால தொங்கிய பத்திரிகை போஸ்டரில் -

**"காவல் நிலையத்தில் தொழிலாளி சாவு!**

**போலீஸ் இன்ஸ்பெக்டர் கைது! பல பிரமுகர்கள் கைதாகலாம்!!**

**நீதி விசாரணைக்கு, அரசு உத்திரவு"**

**அப்பாவி கல்லூரி முதல்வர் பெருமாள்சாமியை நீக்கி, அப்பாவி தொழிலாளியையும் கொன்றவர்கள் மீது**

அரசு நடவடிக்கை. கல்லூரி மூடல்.

என்று கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஒருவர் ஓடிப்போய், ஒரு பத்திரிகைப் பிரதியை வாங்கி, நடந்தபடியே படித்தார். பிறகு, கண்ணனிடம் அதைத் நீட்டினார். கண்ணனும், கந்தனும் படிக்கும் வகையில், அதை விசாலமாக்கினார். இருவரின் தோள்களுக்கு அப்பால் தலையை விட்டுப் படித்த ஒருவர், அந்தச் செய்தியை விமர்சித்தார்:

“இதெல்லாம் நாடகம். அந்தப் பசங்க கைதானாலும், அடுத்த நிமிஷத்துல ஜாமீன்ல வந்துடப் போறாங்க. அப்புறம் ஆறுன சோறு, பழைய சோறு கதைதான். நீதி விசாரணை என்கிறது, கஞ்சிலயும் பழைய கஞ்சி.”

சொன்னவரைப் பார்க்காமலே, சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்ட கண்ணன், முன்னாலும் பின்னாலும் வியாபித்த மக்களைப் பார்த்தார். பக்கவாட்டில், கோபாவேசமாக நின்றவர்களைப் பார்த்தார். அத்தனை பேரும், சத்தியத் துண்டுகளாய், துடித்துக் கொண்டிருப் பதையும், கொதித்துப் போனதையும் கண்டார். பிறகு, எல்லோருக்கும் பொதுவாகச் சொல்லுவதுபோல், ரதத்தின் வேகத்திற்கு ஏற்ப முன்னெட்டு போட்டபடியே, சொன்னார் :

“நீங்க சொல்றது இப்போதைக்குத்தான் சரி... இந்த சமூக அமைப்புல நீதிமன்றங்கள் தர்மசபைகளாக முடியாது. அவங்க... ஜாமீன்ல வந்தால் வரட்டுமே! இத்தனை... போக்கிரித்தனங்களுக்கும் காரணமான, இந்த சமூக அமைப்பே இப்போ ஜாமீன்லதானே இருக்குது”

கங்கை

Printed by : **BALAJI OFFSET PRINTERS**
CHENNAI - 106. Ph : 4759094 , 4751794